


திருஞான சம்பந்தர்

ஓர் ஆய்வு

இரண்டாம் பகுதி

வை. இரத்தினசபாபதி

CENTENARY SILVER JUBILEE CELEBRATIONS
125th YEAR
1857-1982
POST-PUBLICATIONS
UNIVERSITY OF MADRAS

டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன்
மேய்யுணர்வு மேல்நிலைக் கல்வி நிறுவனம்
சென்னைப் பல்கலைக் கழகம்

சென்னைப் பல்கலைக் கழகத் தத்துவத்துறை வெளியீடு-36

பொதுப் பதிப்பாசிரியர் :
டாக்டர் இரா. பாலசுப்பிரமணியன்

திருஞானசம்பந்தர் – ஓர் ஆய்வு

இரண்டாம் பகுதி

எம்வெளியீடுகளில் இவருடையன

1. **வீரசைவம்** (1977)

2. **திருமுறைத் தெளிவே சிவஞானபோதம்** (1979)

3. **திருஞானசம்பந்தர் - ஓர் ஆய்வு** (1981)
(முதற் பகுதி)

திருஞானசம்பந்தர்

— ஓர் ஆய்வு

இரண்டாம் பகுதி

டாக்டர் வை. இரத்தினசபாபதி
வித்துவான், பி.ஓ.எல்., எம்.ஏ., பிஎச்.டி.
துணைப் பேராசிரியர்
டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன்
மெய்யுணர்வு மேல்நிலைக் கல்வி நிறுவனம்.
சென்னைப் பல்கலைக் கழகம்



டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன்
மெய்யுணர்வு மேல்நிலைக் கல்வி நிறுவனம்
சென்னைப் பல்கலைக் கழகம்

1982

© சென்னைப் பல்கலைக் கழகம், 1982

விலை ரூ. 16/-

அச்சிட்டோர்:
அவ்வை அச்சுக்கூடம்,
சென்னை, 600 013.

பதிப்புரை

திருஞானசம்பந்தர் — ஓர் ஆய்வு என்ற நூலின் முதற்பகுதி யானது டாக்டர் வை. இரத்தினசபாபதி அவர்களால் எழுதப் பெற்று இந்நிறுவனத்தின் வெளியீடாகச் சென்ற ஆண்டு வெளிவந்தது. இரண்டாம் பகுதியானது இவ்வாண்டில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஒருநூற்று இருபத்தைந்தாவது நினைவு ஆண்டில் — ஒரு நூற்றின் மேற்பட விரிந்த வெள்ளிவிழா நினைவு ஆண்டில் வெளிவருவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

நூலின் முன்னுரையை ஆசிரியர் முதற்பகுதியிலேயே எழுதி யுள்ளார். அது இதற்கும் பொருந்துவதே. இரண்டாம் பகுதியின் முன்னுரையைத் தனித்தலைப்பில் எழுதியுள்ளார்.

இந்நிறுவனத்தின் ஆக்கவழிச் செயல்களை அவ்வப்போது உடனிருந்து அமைதியுடன் கேட்டும் அரவணைத்தும், ஆக்கவழிக் கருத்துகளை வழங்கியும் நெறிப்படுத்தி வருகிற சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர், முதறிஞர் டாக்டர். எம். சாந்தப்பா அவர் களுக்கும், தனிப்பரிவுடன் எங்கள் திட்டங்களுக்குச் செயல்வழி ஆக்கம் புரிந்து வரும் பதிவாளர் அவர்களுக்கும், பல்கலைக் கழக ஆட்சிக்குழு / அலுவலக உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலைச் செம்மையும் அழகும் செறிய அச்சிட்டுத் தந்த சென்னை, அவ்வை அச்சுக்கூடத்தாருக்கு என் நன்றி.

சென்னை—5
மாசி மக நன்னாள்
9—3—1982

இரா. பாலசுப்பிரமணியன்

உள்ளுறை

பதிப்புரை

உள்ளுறை

1. இரண்டாம் பகுதியின் முன்னுரை 1

2. பூசுரர் சேர் பூந்தராயவன் பொன்னடி 3

3. செருக்கு வாய்ப்புடையான் சிரபுரம் என்னில் 67

4. பொன்னடி மாதவர் சேர் புறவத்தவன் 119

5. தசமுக னெரிதர வூன்று சண்பையான் 213

6. இருமையின் ஒருமை 235

7. காழியா னயன் உள்ளவா காண்பரே 237

8. செந்தமிழ் பரப்புறு நோக்கு 245

9. முடிப்புரை 247

திருஞானசம்பந்தர் – ஓர் ஆய்வு

இரண்டாம் பகுதி

1. இரண்டாம் பகுதியின் முன்னுரை

'திருஞானசம்பந்தர் - ஓர் ஆய்வு' என்ற நூலின் முதற்பகுதியில் திருஞானசம்பந்தரின் வரலாற்றில் ஐந்து பிரிவுகள் இடம்பெற்றன. சீகாழிப் பதிக்குரிய பன்னிரண்டு பெயர்களில் பத்தாவது பெயர் சீகாழி. திருஞானசம்பந்தர் தம்மை அப்பத்தாவது பெயருடன் இணைத்துக் கொண்டவர். சீகாழியின் பெயர்களாகிய பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம் ஆகிய பெயர்களுடன் இணைந்துநிற்கும் திருஞானசம்பந்தரின் வரலாற்றுப் பகுதியும், அவ் வைந்து பெயர்ப் பதிகங்களில் அமைந்துள்ள திருக்கடைக் காப்பின் மூலமாகச் சுவாமிகள் அருளிய கொள்கை விளக்கங்களும் முதற் பகுதியில் இடம் பெற்றன. அவ்வாறே சீகாழிப் பெயர்களுடனும், திருஞானசம்பந்தரின் வரலாற்றுப் பகுதிகளுடனும் இணைந்து வளர்ந்த சிவநெறிக் கொள்கைகளும் விளக்கப் பெற்றன. இனி, பூந்தராய் முதலிய பெயர்களின் அடிப்படையில் திருஞான சம்பந்தரின் வரலாற்று நுட்பங்களையும், அவற்றுடன் இணைந்து வளர்ந்த சிவநெறிக் கொள்கைகளையும் முறையே காண வேண்டும். அவற்றுடன், திருஞானசம்பந்தர் தம்முடைய வாழ்வாலும் வாக் காலும் உலகிற் குணர்த்திய கொள்கைகளையும் விளக்கியமைத்தல் இரண்டாம் பகுதியின் செய்திகளாக அமைகின்றன.

திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையாரின் திருவருள் பெற்ற நம்பியாண்டார் நம்பிகளின் திருவாக்கின் அடிப்படையில், திருஞான சம்பந்தரின் வரலாற்று நுட்பங்கள் விளக்கப் பெற்றன.

திருஞானசம்பந்தர் அருளிய முதற்பதிகத்தின் திருக்கடைக் காப்பில் வரும் அருநெறி, பெருநெறி, ஒருநெறி, திருநெறி என்ற தொடர்களின் பொருள்களின் அடிப்படையில் அருநெறி என்பது மறைநெறி என்றும், அருநெறியாம் மறைநெறி உணர்தற் கரியது ஆகையால் இவ்வுலகில் அவை பெருமைபெறப் பேசுதற்கு மட்டுமே உரியன என்ற வகையில் பெருநெறி என்றும், இவ்விரு நெறிகளும் ஒன்றன் இருபக்கங்கள் போல அமைவன ஆதலின் அருநெறியும் பெருநெறியும் இணைந்தநிலையில் தோற்றம் பெற்றதே ஒருநெறி என்றும், அவற்றின் அடிப்படையில் அனுபவத்திற்கு உரிய நிலையில் அமைந்த இன்ப அனுபவ நெறியே — தமிழ்நெறி என்ற விளக்கத் தின் அடிப்படையில் வெளிவந்த தொடரே "திருநெறிய தமிழ்"

என்றும் அமைந்த கருத்து விளக்கங்கள் முதற்பகுதியில் அமைந்தன. ஆறதேறுஞ் சடையான் அருள்மேவ, வீறதேறும் தமிழால் வழி கண்டவரும் திருப்பதிகப் பெருவழி கண்டவரும் திருஞான சம்பந்தரே என்பதும் விளக்கப் பெற்றன.

திருஞானசம்பந்தப் பெருமானின் இறையருளனுபவ விளக்கங் களே தேவாரப் பதிகங்கள். அத்தேவாரப் பதிகங்களைச் சற்றெப்ப ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்குப் பின் ஒருவர் முறையுடன் ஓதினால், அன்று ஞானசம்பந்தப் பெருமான் பெற்ற இறையருள னுபவத்தை இன்றும் அவர் பெறமுடியும் — பெற வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் எழுந்ததே பதிகப் பெருவழி. இத் தகைய அடிப்படைக் கொள்கையானது முற்றுக வெற்றிபெறுதற்குத் திருஞானசம்பந்தருடன் இணைந்து தொண்டாற்றிய அருளாளர்கள் இருவர். அவர்களே திருநாவுக்கரசரும், திருநீலகண்ட யாழ்ப் பாணரும். மூவரும் இணைந்து நின்று ஆற்றிய தொண்டுக்குத் தலைமை தாங்கிய அருளாளரே ஞானசம்பந்தப் பெருந்தகை என்பதும் முதற் பகுதியில் விளக்கப் பெற்றன.

முதற் பகுதியைப் போலவே, இப்பகுதியிலும் திருஞானசம்பந் தரின் வரலாற்று நுட்ப விளக்கத் தலைப்புகள் சீகாழிப் பதியின் பெயருடன் அமைந்த தொடரினூலேயே அமைக்கப் பெற்றுள்ளன. திருஞானசம்பந்தரின் எஞ்சிய வரலாற்றுப் பகுதிகள் முதல்நின்ற ஐந்து தலைப்புகளில் விளக்கம் பெற்றுள்ளன. ஏனைய தலைப்புகள் திருஞானசம்பந்தப் பெருமானின் வாழ்விலும் வாக்கிலும் விளங்கும் கொள்கை விளக்கங்களை எடுத்து விளக்கும் முறையில் அமைந்த வைகளாம்.

2. பூசுரர் சேர் பூந்தராயவன் பொன்னடி

ஞானமும் அருளும்

"திங்கட் கொழுந்தணியுஞ் சடையாரை எங்கள் பதியினில் கும்பிட்டருள அங்கே எழுந்தருள வேண்டும்" எனத் திருஞான சம்பந்தரை அழைப்பதும் வரவேற்பதும் மரபாக அமைய, திருஞான சம்பந்தரும் பிறபதியும் தொழுதல் வேண்டும் என்ற எண்ணத் தினராய்ச் செல்ல முற்பட, இவ்வாறுக ஞானசம்பந்தரின் தலயாத் திரை தொடங்குகிறது. முதல் தலயாத்திரையில் முதலில் விளங்கிய பதி நனிபள்ளியே அந்த யாத்திரை முடிந்த நிலையில் திருநீலகண்ட யாழ்ப்பாணரை வரவேற்றுத் தம் திருத் தொண்டில் இணைக்கும் பணி நடைபெறுகிறது.

ஞானசம்பந்தப் பெருமானின் தலவழிபாட்டுச் செலவு இரண்டாம் முறையாகத் தொடங்கித் தில்லையைச் சென்று வணங்கு வதாக அமைகிறது. இரண்டாம் முறைத் தலவழிபாட்டுச் செலவு முடிந்தபின் அப்பரடிகளே வரவேற்றுத் தம் திருத்தொண்டில் இணைக் கும் பணி அமைகிறது.

மூன்றும் முறையாகத் திருஞானசம்பந்தப் பெருமான் தொடங்கிய திருத்தல வழிபாட்டுச் செலவே அவர் தம் வரலாற்றில் அமைந்த பெரியதும் சிறப்புடையதும் ஆகும். சற்றெறப்ப ஒருநூற்று அறுபத் தேழு திருத்தலங்களுக்குச் சென்று வழிபாடு செய்து திருப் பதிகம் அருளியிருக்கிறார்கள். பல அருளியல் நிகழ்வுகளையும் நிகழ்த்தி யருளியுள்ளார்கள்.

நாலாவது முறை அவர்தம் வழிபாடு வடநாட்டுத் தலங்களை நோக்கி அமைகிறது. தெய்வச் சேக்கிழார் பெருமானின் திருவாக் கினை வழிகாட்டியாகக் கொண்டு திருஞானசம்பந்தப் பெருமானின் வரலாற்று நுட்பங்களை அறிய முற்படும் நிலையில், மூன்றும் சுற்றுத் திருத்தல வழிபாட்டுச் செலவில், முதலிடம் பெறுகின்ற திருப்பதி யாகத் திகழ்வது திருவையாறே. இம்முறை ஞானசம்பந்தப் பெரு மானுடன் தலவழிபாட்டுச் செலவை மேற்கொண்டவர்கள் திருநீல கண்ட யாழ்ப்பாணரும் அவர்தம் துணைவியாரும். புகலிகாவலனரின் தந்தை சிவபாதவிருதயரும் உடன் செல்கிறார்.

திருநெறியெனப் பெறும் சைவநன்னெறியின் இருகண்களெனத் திகழ்பவை திருவருளும் குருவருளும். திருவருளின் மரபு வழியில்

அமைந்த ஆட்சிப் பீடத்தில் முதற்குருவாக நின்று, இவ்வுலகில் திருவருளையும் குருவருளையும் இணைத்துநிறுத்தி, அவ்விணைப்பின் பெருமையையும் பயனையும் இவ்வுலகத்துயிர்கள் உணர்ந்தும் துய்த்தும் வாழ வழி வகுத்தவர் திருஞானசம்பந்தரே.

திருஞானசம்பந்தப் பெருமான் தொடங்கிய இரண்டாம் திருத்தல வழிபாட்டுச் செலவில் தில்லைப்பதியானது வரலாற்றுச் சிறப்பு டையது. அதன் விளைவாக அறமும் அருளும் இணைந்தன. திரு நெல்வாயில் அறத்துறை அடிகள் முத்துப்பல்லக்கு, சின்னம், முத்துக்குடை முதலியவைகளை அருளித் திருஞானசம்பந்தரைக் குருவாக அமைத்துக் கொடுத்தருளவே, அறத்தின் வழியில் அருள் செயற்படும் என்ற கருத்தும் அங்கே விளக்கப் பெற்றது. மூன்றும் சுற்றுக அமைந்த தலவழிபாட்டுச் செலவு முழுவதிலும் குருவருளின் மேன்மை வெளிப்பட்டுத் தோன்றுவதைக் காண முடிகிறது. அறத்தின் வழியில் திருவருள் இயங்கும். அறத்தையும் அருளையும் இணைத்து ஒருவகை இயக்க வடிவை ஆக்கித் தருபவரே குருவாக அமைகிறார். எனவே, அறமும் அருளும் குருவைப் பின் தொடர்வன ஆயின. இவைகளுக்கு மேலாக, அறமும் திருவருளும் குருவருளும் திருத்தொண்டு நெறியின் பின் செல்வனவே என்ற கொள்கையை விளக்கிக் காட்டிய வரலாற்றுப் பகுதியைத் தன்னகத்தே கொண்ட பெருமையுடையது திருஞானசம்பந்தப் பெருமானின் மூன்றாவது திருத்தல வழிபாட்டுச் செலவு.

ஞானவாரமுதுண்ட பிள்ளையாராகிய திருஞானசம்பந்தப் பெருமான் இறைவனை நேரிற் கண்டார்; இதோ இவன் எனச் சுட்டிக் காட்டிப் பதிகம் அருளிய ஞானப்பெருந்தகை; இறைவனைக் காணவும் காட்டவும் செய்தவராதலின் குருவென நின்றார்.

இறை திருக்கோலத்தை ஞானப்பால் அருந்திய காரணத்தால் ஞானத்தாற் கண்டும், வாகீசருக்குக் காட்டியும் ஞானசம்பந்தராகவும் ஞானகுருவாகவும் நின்ற திருஞானசம்பந்தர் இறைவனை அருட் கோலத்தில் காணும் வாய்ப்பினைப் பெறுகிறார். இத்தகு நல்லருட் செயல் நடைபெற்ற தலம் எது என்பது பற்றிய கருத்து வேறுபாடு அறிஞர்களிடையே உண்டு. இந்நிகழ்ச்சியை அமைத்துக் காட்டிய தெய்வச் சேக்கிழாரை — இந்நிகழ்ச்சியைச் சொல்ல முற்பட்டபோது எழுந்த தடைகள், தடைகளை நீக்கிச் சொல்லியருளிய திறம் ஆகிய வைகளை நினைக்கும் போதெல்லாம் நெஞ்சம் நெக்குருகிக் கண்ணீர் வடித்து, அஞ்சலி கூப்பி, சேக்கிழார் சேவடிகளை வணங்கி நின்று நன்றிக் கடன் ஆற்றுவதைத் தவிர வேறு செயலில்லை.

மூன்றுவதாகிய திருக்கோயிற் செலவை மேற்கொண்டு, பல தலங்களுக்கும் சென்று பதிகம் பாடிய திருஞானசம்பந்தர் திருமங்கலக் குடியை வணங்கித் தமிழ்மாலை சாத்தியபின் திருவியலூர் சென்றடைகின்றார். திருவியலூர் இன்று திருவிசலூர் என வழங்கப் பெறுகின்றது. திருவியலூருக்கு வடக்கே ஒரு கல் தொலைவில்

இருப்பது திருந்துதேவன்குடி. திருந்துதேவன்குடி இன்று நண்டாங் கோயில் எனவழங்கப் பெறுகிறது. நண்டு பூசித்த தலம். திருந்து தேவன் குடி என்ற ஊரே இன்று இல்லை. கோயில் மட்டுமே உள்ளது. கோவிலைச் சுற்றி மூன்றுபக்கங்களிலும் அகழி இருக்கிறது. முன்பு ஊர் இருந்த இடம் இப்போது நன்செய் நிலங்களாக மாறியுள்ளது. இறைவன் பெயர் கற்கடேசுரர். அம்மையின் பெயர் அருமருந்தம்மை.

திருவியலூர்ப் பதிகத்தையும் திருந்து தேவன் குடிப் பதிகத்தையும் முதலில் சேக்கிழார் இணைத்துக் கண்டிருக்க வேண்டும்.

இரண்டு பதிகங்களுக்கும் இடையில் வெளிப்படையாகத் தெரியக் கூடிய ஒரு வேறுபாட்டினை உளங்கொள்கிறார். இன்ன இன்ன வடிவ முடையவன் இன்ன இன்ன செயல்களை இவ்வுலகில் செய்தவன் என்பவைகளை எடுத்துக் கூறி, அத்தகையவன் உறையும் இடம் இது என்று கூறுவது ஞானசம்பந்தர் தேவாரத்தில் காணப் பெறும் பொது அமைப்பு. ஆனால் திருந்து தேவன் குடிப்பதிகத்தில், இத்திருந்து தேவன்குடியில் விளங்கும் பெருமான் எய்திய வேடங்கள் இன்ன இன்ன பயனை அளிப்பன என்று குறிப்பிடுகிறார். நடைபெற்ற வரலாறுகளையும், அவற்றின் நினைவுகளாக அமைந்த அடையாளங்களையும் கூறி, அவ்வாருன செயல்களைச் செய்தும், அடையாளங்களைக் கொண்டும் விளங்கிய பெருமானே இவ்விடத்தில் கோயில் கொண்டிருக்கிறான் என்பதாக அமைப்பது பொதுநிலை. திருந்து தேவன் குடித் திருப்பதிகத்தில், இவ்வூர்ப் பெருமான் எய்திய வேடம் இன்னின்ன பயன்களை அளிக்கவல்லது என்று குறிப்பிடுகின்றார். ஒரே கல் தூர இடைவெளியில் அமைந்த இரண்டு ஊர்களில் இத்தகைய வேறுபாட்டுடன் கூடிய பதிகம் அமையக் காரணம் இருக்க வேண்டும் என நினைக்கிறார் சேக்கிழார் பெருந்தகை.

தோடுடைய செவி, தூவெண் மதியணிந்தமுடி என்பதாக வேடம் விளக்கம் கூறுமல், வேடங்கள் இன்னின்ன பயன்களை விளக்கும் தன்மையின என்று ஞானசம்பந்தர் குறிப்பிடுகின்றார். திருந்து தேவன் குடிக் கோயிலுக்கு வந்த பின் பெருமான் வேடங்காட்டியிருப்பானைனல், தாம் காணும் வேட விளக்கங்களாகவே தேவாரம் அமைந்திருக்கும். அவ்வாறில்லாமையால், வேடத்தைக் கண்டதற்கும் பதிகம் பாடியதற்கும் இடையில் கால இடைவெளி அமைந்திருக்க வேண்டும் எனநினைக்க இடமேற்படுகிறது. திருவியலூரை விட்டுப் புறப்பட்டபின் திருந்து தேவன் குடிக்கு வந்து சேருவதற்கு முன் வழியிலேயே காட்டப்பெற்றிருக்கும் என்றாலும், கண்ட அவ்விடத்திலேயே பாடத் தொடங்கிப் பாடிக் கொண்டேவந்து திருந்து தேவன் குடியில் முடித்திருப்பார். அவ்வாறு கொண்டாலும் அப் பதிகம் தான் கண்ட வடிவ விளக்கமாகத்தான் அமைந்திருக்கும். ஆனால், திருந்து தேவன் குடித் திருப்பதிகம் வேடம் கண்டு, வேடத்தைத் துய்த்து, அத்துய்ப்பின் விளைவாக எழுந்த பயன்களைக் கூறு

வதாக அமைந்திருப்பதால் வேடங் கண்டதற்கும், வேடம் விலக்கும் பயன்பற்றிய செய்தியைக் கூறுதற்கும் இடை அமைந்த காலம் வேடம் பற்றிய அனுபவக் காலமாக அமைந்திருக்கும் என்று கொள்ளலாம். அவ்வாரூயின் திருவியலூருக்கும் திருந்து தேவன் குடிக்கும் இடைப்பட்ட ஒரு கல் தொலைவில் வந்த நேரம் ஞானசம் பந்தரின் அனுபவ நிகழ்வுக் காலமாக அமையலாம். அவ்வாரூயின் இவ்வடிவம் திருவியலூரிலேயே காட்டப் பெற்றிருக்க வேண்டும். திருவியலூர்ப் பதிகம் பாடத் தொடங்குவதற்குமுன் வேடம் காட்டப் பெற்றிருந்தால், திருவியலூர்த் திருப்பதிகம் இவ்வேட வடிவ விளக்கமாகவே அமைந்திருக்க வேண்டும். திருப்பதிகம் பாடிக் கொண்டிருக்கும் போதே இடையில் காட்டப் பெற்றிருந்தாலும், அப்பதிகத்திலேயே அவ்வடிவ விளக்கத்தை அமைத்திருப்பார். எனவே, திருவியலூர் வழிபாடு முடிந்து, பதிகம் பாடும் பணி முடிந்த பின், வேடங் காட்டும் நிகழ்ச்சி அமைந்திருக்க வேண்டும். உடனே பதிகம் பாட வாய்ப்பு இல்லை. திருந்து தேவன் குடிக்குப் போவ தற்குள் கண்ட வேடமும் அதன் அனுபவப் பயனும் அவருக்கு அமைந்திருக்க வேண்டும். அவ்வகையில், வேடத்தை அனு பவித்து, அவ்வனுபவப் பயனை எடுத்துக் கூறுவதாகத் திருந்து தேவன் குடிப் பதிகம் அமைகிறது. அடுத்து, நண்டு பூசித்துப் பேறு பெற்ற தலம் என்ற வரலாற்றைத் திருஞானசம்பந்தப் பெருமான் அப்பதிகத்தில் எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை. இன்று வழங்கும் "நண் டாங் கோயில்" என்ற பெயர்வழக்கும் ஞானசம்பந்தர் பதி கத்தில் காணப்பெற வில்லை. மாருக, "திருந்து தேவன் குடி" என்ற பெயரையே சுட்டுகின்றார். குடி என்பது கோயிலாக மருவியிருக் கலாம். திருந்து தேவன் என்பது ஒருவகை மாற்ற நிலையை உடன் கொண்டதே. இயல்பாக இன்னின்ன நிலையுடை யவன் இவ்வாறு மாற்றம் பெற்றான் என்ற கருத்தில் திரு-இயலூர் என்றும் அந்த இயல்பிலிருந்து திருந்திய — நந்திய தேவன் என அமைத்துக் காட்டியிருக்கலாம். நந்துதல் - பெருகுதல் = மாற்றம்பெறுதல். இந்நிலையில் இயல்பு நிலையை ஓர் இடத்தில் காட்டி, திருந்திய நிலையை வேறு இடத்தில் காட்டினால் இரண்டு நிலைகளும் அவனுக்கு இயல்பு நிலைகளே என்ற கருத்து உண்டாகிவிடும் எனக்கருதி, இந்த வடிவத் திருத்தம் பற்றிய வேடம் காட்டுதலும் காணுதலும் திரு இயலூரிலே நடைபெற்றிருக்க வேண்டும் எனக் கருதியிருக்கிறார். [திருந்து தேவன் - நந்தாந்தேவன் என அமைய, நந்தாங் கோயில் என மருவிப் பின்னர் நண்டாங் கோயில் என மருவியிருக்கலாம். அல்லது நண்டு பூசித்த வரலாறு ஞானசம்பந்தர் காலத்துக்குப் பிற்பட்டிருக்க வேண்டும்.] திருந்திய வேடம் எங்கே காட்டப் பெற்றிருக்கும் என்ற ஆய்வில், சேக்கிழாரடிகள் ஒரு புதிய அணுகுமுறையை அமைத்துக் காட்டு கிறார்கள். திருவியலூரில் பதிகம் பாடி முடித்துக் கருவறையிலிருந்து வெளிவந்து, அக்கோயிலிலேயே ஓரிடத்தில் திருஞானசம்பந்தர் அமர்கிறாராம். பதிகம் பாடிய பின் வெளியே வந்து திருநீலகண்ட யாழ்ப்பாணரிடம் தாம் கருவறையில் கண்டு, துய்த்துப் பாடிய

பதிகத்தைக் கொடுத்து, யாழிலிட்டுப் பாடச் செய்தலே மரபு. இடை யிலேயே திருக்கோயிலில் ஒருபக்கம் அமர்ந்தார் என்பது ஒரு வகைப் புதுமை. சேக்கிழார் வாக்கினை உன்னுக.

''வெங்கண் விடைமேல் வருவார் வியலூர் அடிகளைப் போற்றித்
தங்கிய இன்னிசை கூடும் தமிழ்ப் பதிகத் தொடை சாத்தி
அங்கண் அமர்வார் தம்முன்னே அருள் வேடங் காட்டத் தொழுது
செங்கண் மாலுக்கரியார் தந் திருந்து தேவன் குடி சேர்ந்தார்

என்பது பெரியபுராணம் 2197-ஆம் செய்யுள்.

'வெங்கண் விடைமேல் வருவார் வியலூர்' என்று குறிப் பிடுவதன் மூலம் இயல்பினையே அமைக்கிறார். காட்டப் பெற்ற அருள் வேடமும் அவனுடைய இயல்பு வேடம்தான் என்று கொள்ளாமல், அது மாறுபட்ட — வேறுபட்ட — திருந்திய வடிவம் என்னும் குறிப் பமைய எடுத்துக் காட்டினார்.

இனி, திருவியலூர்ப் பதிகத்தில் ஐந்தாம் தேவாரத்தில் ''கண்ணுர் தரும் உருவாகிய கடவுள்'' எனவரும் வரியை எடுத்துக் காட்டி, வேடங்காட்டப் பெற்ற செய்தியை இவ்வரி குறிப்பிடும் என்று பொருள் கொள்ளும் மரபு உண்டு. பயனுய், அயனுய், அலையாய், மறையாய், உயர்பொருளாய், இறையவனுய் என இவ் வாறுக, கண்களை நிறைவிக்கும் உருவாகிய கடவுள் என்றே பொருள் படுவதால் திருவியலூர்ப் பதிகம் பாடுதற்கு முன்னமோ அல்லது பாடத் தொடங்கிய போதோ, பெருமான் அருள் வேடங் காட்டியதாகக் கொள்ள இயலாது. மேலும், சேக்கிழார் தெளி வாகவே திருவியலூர்ப் பெருமான் திருவடிகளேவணங்கி, தமிழ்ப் பதிகத் தொடை சாத்தி, பின்னர் வந்து (ஓரிடத்தில்) அமர்ந்தார் ஞானசம்பந்தர் என்றும் அமர்ந்திருந்த ஞானசம்பந்தருக்கு முன்னே அருள்வேடம் காட்டப் பெற்றது என்றும் கூறுவதால், சேக்கிழார் திரு வாக்கினுக்கு மாறுக, திருவியலூர்த் திருப்பதிகம் பாடுவதற்கு முன்பே அருள்வடிவம் காட்டப்பெற்றது என்று அமைக்க வேண்டியது தேவையற்றது என்பதைவிட, தவறுபட்டது என்பதும் ஆகும்.

ஞானத்தாற் கண்ட இறைவனே அருளாகக் காணும் பேற்றினை ஞானசம்பந்தர் பெறுகிறார். இத்தகு நல்லருட் செயல் திருவியலூர் என்னும் திருப்பதியில் அமைகிறது.

திருவியலூர்த் தல வழிபாட்டை முடித்துத் திருப்பதிகம் அருளிய பின்னர் அத்திருக் கோயிலிலே அமர்கிறார் ஞானசம்பந்தர். அப் போது அவர் முன்னே தமது அருள் வேடத்தைக் காட்டுகிறான் பெருமான். இறைவனின் அருள் வேடப் பெருமைகளையெல்லாம் திருவியலூருக்கு | அடுத்து நின்ற திருப்பதியாகிய திருந்து தேவன் குடித்திருப்பதிகத்தில் அமைத்துக் காட்டியருளுகிறார் ஞானசம்பந்தர்.

ஞானவாரமுதமுண்ட பின், ஞானத்தால் இறைவனைக் கண்ட பின் ஞானவடிவாய் நின்ற இறைதிருக்கோலத்தை, பிரமபுரத்து

முதல் திருப்பதிகத்தில் விளக்கிய முறை முன்னே காட்டப்பெற்றது. இறைவன் பெம்மானுக, பெருமையுடையவனுக, மறை தேடும் அருமையுடையவனுக, ஆற்றலுடையவனுக அமைத்துக் காட்டும் முறையில் அப்பதிகம் அமைந்தது.

திருந்து தேவன் குடித் திருப்பதிகத்தின் மூலம் இறைவன் அருள் மயமானவன் என அறியும் அதே நேரத்தில், அவன் நம்முடைய வாழ்வுப் பொருளாக, நம் துய்ப்புப் பொருளாக அமையும் முறையை விளக்கமாக அறிய முடிகிறது.

ஐம்புல அளவிலும் நின்று இன்பந் தரும் பொருளாக அது அமைகிறது. அருள் எனநின்ற அவன் வேடங்கள் செவிகளை ஆர்விப்பன; சிந்தையுட் சேர்வன; கவிகள் பாடுவன; கண்குளிர் விப்பன; மக்களால் துய்க்கப் பெறுவன; பங்கம் எனப்படா; பழிகள் எனப்படா; புங்கம் எனவும் புகழ்கள் எனவும் அறிந்து துய்க்கப் பெறுவன; அவ்வாறு துய்த்தலால், மக்களால் துய்க்கப் பெறும் பொருள் அழியும் எனக் கொள்ளும் விதி இங்கே பொருந்தாது. கரைதல் இல்லை; துய்த்தோம் என்று சொல்வதால் குற்றம் இல்லை; உலகில் நிலைத்து நிறுத்த வல்ல ஆற்றலுடையது அத்துய்ப்பு என்று விளக்கப் பெறுகிறது. மருந்தாகவும் மந்திரமாகவும், அருமருந்தாக வும் அமையும்; விதியை அழிக்கும்; வினையைப் போக்கும்; ஓதிஓதி யும் அகப்படாது நின்ற அது இப்போது உணர்வில் நின்று அனுப விக்கப் பெறுவதாகிறது.

அருள் வேடமே நம் வாழ்வினுடைய வழியாகவும் பயனுகவும் அமைகிறது. விண்ணுலாவும் நெறி, வீடு காட்டும் நெறி, மண்ணு லாவும் நெறி, மயக்கம் தீர்க்கும் நெறி என நிற்பது இறையருள் வேடமே.

அருமைக்கும் பெருமைக்கும் உரியவனுக — ஒருவனுக நின்ற இறைவன் என அறிதல் ஞான நெறி; ஒருமைநெறி. ஆனால் அவன் திருநெறியாய் நின்று, தமிழாகத் துய்க்கப் பெறுபவன் என்பதைத் துய்ப்பின் மூலம் நாம் அறிவது அருள் நெறி எனப்பெறும் திருநெறிய தமிழ்நெறியே என்ற கருத்தை ஞானசம்பந்தப் பெருமான் திருந்து தேவன்குடித் திருப்பதிகத்தில் விளக்கியருளுகிறார். எனவே, தோடுடை செவியன் முதலிய அடையாளமமைந்த திருவுருவம் நம்மால் அறிவின் துணை கொண்டு அறிதற்குரியது, பெருமை பேசு தற்குரியது. இன்பத் துய்ப்பு என்பதன் அடிப்படையில் அமையும் திருநெறிக்கெனத் தோடுடைய செவியனே, திருந்தி வந்து நம் துய்ப் புக்குரிய தேவனுகி, அருள் வடிவம் அமைய நிற்கிறான் என இயல் பையும் மாற்றத்தையும் அமைத்தருளுகிறார் ஞானசம்பந்தர்.

சைவசமயத்தின் உட்பொருளாய் நின்ற சிவமெனும் பரம் பொருட் பெம்மான் ஞானத்தால் அறிந்து அடைவதற்குரியவன் என் பதைவிட அவன் அருளாய் நிற்க, அவனை மக்கள் தம் வரம்பின்

மூலப்பொருளாய்த் துய்த்து இன்புறுதற் குரியவன் என்ற கொள்கையை அமைத்துக் கொள்ளத் தம்மையே இணைத்துக் கொடுத்த வரலாற்றுப் பெருமையுடையது பூந்தராய்.

பூந்தராய்

திருஞானசம்பந்தர் அருளிய சீகாழிப் பதிகங்களில் 'பூந்தராய்' என்ற பெயரில் அமைந்த பதிகங்கள் நான்கு. ''பந்துசேர் விரலாள்'' எனத் தொடங்கும் இரண்டாவது பதிகத்தில், இரண்டாம் தேவாரத்தில் சீகாழிப் பெயர்கள் பன்னிரண்டில் ஆறுவதாக நின்ற பதியே பூந்தராய் என்று குறிப்பிட்டருளுகின்றார்.

''தேவியுந்திரு மேனியோர் பாகமாய்
ஒன்று இரண்டு ஒரு மூன்றேடு சேர்பதி
பூவிலந்தணன் ஒப்பவர் பூந்தராய் போற்றுதுமே''

என்பது அத்தேவார வரிகள். ஒன்று இரண்டு ஒருமூன்றேடு சேர்ந்தால் ஆறு என்பது அமையும். மேலும், இப்பதிகத்தின் ஏழாந் தேவாரத்தில்

''நீருலாவிய சென்னியன் மன்னி
நிகழு நாமம் முந்நான்கு நிகழ்பதி''

என்று கூறுவதால் சீகாழிக்குரிய பன்னிரு பெயர்களை நாம் ஏற்கலாம். மேலும், இப்பதிகத்தின் ஒன்பதாந் தேவாரத்தில்

''..... ... . வான்மிசை வந்தெழு
பொங்கு நீரின் மிதந்த நற் பூந்தராய் போற்றுதுமே''

என்று கூறப் பெறுவதால், ஊழிக்காலத்தில் உலகம் அழியினும், அழியாது தண்ணீரில் மிதந்த காரணத்தால் உண்டாகிய பெயர் அப்பன்னிரண்டும் என்பதையும் உணரலாம்.

பூந்தராய் என்ற பெயர் ஆறுவது பெயர். பூந்தராய் ஆறுவது பதி என்பதை விளக்க முற்பட்ட ஞானசம்பந்தர் ஒன்றும் இரண்டும் மூன்றெடு சேர்பதி என அமைத்துக் காட்டினர். ஒன்று, இரண்டு, மூன்று என்பவைகளைக் கூட்டினால் ஆறு என்ற எண் வரும். ஆறு என நேராகக் குறிக்காமல் இவ்வாறு கூறக் காரணம் ஆறுவதாக நின்ற பூந்தராய் முதலாவதாக (1) நின்ற பிரமபுரம், இரண்டாவதாக (2) நின்ற வேணுபுரம், மூன்றுவதாக (3) நின்ற புகலி என்ற மூன்றன் கொள்கைகளையும் இணைத்து நிற்பது என்று கருதுவதற்கே.

பிரமபுரம் என்பது பெரு நெறியைக் குறிப்பது; வேணுபுரம் என்பது மறைநெறியைக் குறிப்பது. மறைநெறியாகிய அருநெறியும், பிரமாபுரமாகிய பெருநெறியும் இணைந்த நெறியே ஒருநெறி. இந்த இரண்டும் நம்மால் அருமையென உணர்வதற்கும் பெருமையொடு பேசுவதற்கும் உரியவைகளே. மூன்றுவதாக நின்றதே திருநெறிய தமிழ்நெறி. நம்மால் துய்க்கப் பெறுதற்குரிய இன்ப நன்னெறி. அது

புகலியே. இறைவனே என்னை வந்து அடைக்கலமாகக் கொண்டு தங்கி, என் இதயத்தே இடையருத ஆனந்தத்தைப் பொழிந்து, என்னை மலத்திலிருந்து மேலேற்றி, என் வாழ்வுப் பொருளாக அவனே தன்னை அமைத்துக் கொண்டான் என்ற கருத்தை விளக்குவதே புகலி. எனவே, முதற்பதிகத்தில் ஞானசம்பந்தப் பெருமான் இனம் பிரித்துக் காட்டிய திருநெறிய தமிழ்நெறி என்பது இறைவன் அருளாக நிற்க, நாம் அவனைத் துய்த்து இன்புறும் நெறியே ஆருவது என்பதை விளக்க வந்த பெயரே பூந்தராய் என்பது.

இனி, பூந்தராய்த் திருப்பதிகங்கள் நான்கனுள், இரண்டு மூன்று ஆகிய இரண்டு பதிகங்களின் திருக்கடைக் காப்பினுள் ஞான சம்பந்தப் பெருமான் நல்கும் அருளுரைகளையும் உணர்தல் முக்கியமான ஒன்றாகும்.

"பந்து சேர் விரலாள்" என்று தொடங்கும் இரண்டாம் பதிகத் திருக் கடைக் காப்பினுள், பூந்தராய் போற்றுதும் என்று ஓம்பு தன்மையன் என்று தம்மைக் கூறிக் கொள்கிறார் ஞானசம்பந்தர். போற்றுதும் என்று உலகத்தாருக்கு அறிவிப்பதோடு, தாமும் அதையே பின்பற்றி அவ்வுரையை வாழ்வியல் நெறியாக அமைத்து ஓம்புவதாகக் கூறிக் கொள்வதைச் சிந்தித்து உணர்தல் வேண்டும். மேலும், அத்தேவாரத்தில், "முத்தமிழ் நான்மறை ஞானசம்பந்தன் ஒண் தமிழ்மாலை கொண்டு ஆம்படி இவை ஏத்தவல்லார்" என்று குறிப்பிடுவதில் "ஆம்படி" என்பது செயற்பாட்டுக்கு உரியதாகும் வண்ணம் செயற்படுத்துதல் என்ற வகையில் அதனை ஏத்துதல் வேண்டும் என்பதை உட்பொருளாகக் கொண்டது.

இனி, "தக்கன் வேள்வி" என்று தொடங்கும் பூந்தராய்த் தலத்து மூன்றாம் திருப்பதிகத்துத் திருக்கடைக் காப்பினில், ஞானசம்பந்தன் மாலை கொண்டு "ஏத்தி வாழும்" என்றே குறிப்பிட்டருளுகின்றார். பூந்தராய் பற்றிக் கூறிய கருத்துக்களை உணர வேண்டும் என்பதைக் கூறுமல் அவைகளை வாழ்வியற் பொருளாகவே அமைத்து வாழ வேண்டும் என்றும் குறிப்பிட்டருளுகின்றார். இனி, பூந்தராய் என்ற பெயர் மூலம் விளக்கப் பெறும் நெறியை

"ஞாலத்தில் உயர்வார் உள்ளும் நன்னெறி"

என்று குறிப்பிட்டு, அந்நெறிக்கு மேலாய் நின்றவன் என்றார். மேலும்,

வேந்தராய் உலகாள விரும்புறிற்
பூந்தராய் நகர் மேயவன் பொற்கழல்
நீதியால் நினைந்து ஏத்தி உள்கிட

வேண்டும் என்று குறிப்பிடுகின்றார். பூந்தராய் இறைவன் "நாடொறும் இன்பம் நல்கும்" என்றும் அருள் பெருக்கி நின்ற நிலையே பூந்தராய் இறைவன் பொருந்தி நின்ற நிலை என்றும் குறிப்பிட்டருளுகின்றார்.

மேலே கூறப் பெற்ற கருத்துகளின் அடிப்படையிலேயே திரு ஞானசம்பந்தர் பன்னிருபெயர்ப் பதிகத்தில் பூந்தராய் பற்றிய வரியை அமைத்திருத்தல் வேண்டும். பூசுரர் சேர் பூந்தராயவன் பொன்னடி என்ற வரியே நான்கு முறை வருமாறு அத்தேவாரம் அமைந்துள்ளது. அத்தேவாரத்தில் அமைந்துள்ள நான்கு வகையான விளக்கங்களையும் தெளிவாக நாம் காணுதல் வேண்டும்.

சீகாழிக்குப் பூந்தராய் என்ற பெயர் அமைந்தமைக்கு வரலாற்று முறையில் இரண்டு விளக்கங்கள் கூறப் பெறுகின்றன.

(1). சங்கநிதி, பதுமநிதி என்ற இரு தெய்வங்களும் வரையாது வழங்குவதற்குரிய வரம் பெறுதற்காகப் பூமாலைகளாக இருந்து இறைவனைப் பூசித்தமையால் பூந்தராய் என்ற பெயர் வந்தது பூந்தாராய் (பொலிவு பெற்ற மாலையாய் (தார் - மாலை)) என்பது பூந்தராய் எனநின்றது.

(2). திருமால் வெள்ளைப் பன்றி வடிவங் கொண்டு தம் கொம்பில் பூமியை ஏற்று வருத்திய பழி நீங்குவதற்காக இறைவனைப் பூசித்தமையால் பூந்தாராய் என்ற பெயர் உண்டாயிற்று.

திருஞானசம்பந்தப் பெருமான் அருளிய ஏகபாதத் திருப்பதிகத்தில் அமைந்த பூந்தராய் என்னும் பெயருக்கு விளக்கமாம் வகையில் அமைந்த தேவாரமானது "பூசுரர் சேர் பூந்தராயவன் பொன்னடி" என்ற வரியை நான்காகக் கொண்டது. நான்கு வரிகளுக்கு வேறு வேறு பொருள்கள் உண்டு.

மும்மலங்களும் நீங்கப் பெற்ற சிவஞானியர்களின் கூட்டம் பொலிவுற்று வனப்புற்று விளங்குமாறு ஆனந்தக் கூத்து இயற்றுபவன்.

உடல் முழுவதும் திருநீற்றினை உத்தூளனமாகப் பூசிய சிவஞானிகளும் புண்ணிய பாவக் கட்டுகளை அறுத்துத் தள்ளிய சிவஞானிகளும் ஆகியோர்க்கு மூலப்பொருளாக உள்ளவன்.

மறுவிலா மறையோர் வாழும் பூந்தராயில் வாழும் சிவனுடைய திருவடிகள் என்னை ஆட்கொள்வதாகுக.

பூமியிலுள்ளவர்களையும் தேவர்களையும் தன் கொப்பூழில் தோற்றுவித்த பிரம விட்டுணுக்களின் அறிவில் கண்ணுடியும் பிம்பமும் போலத் தோன்றுபவன்.

மலம் நீக்கிய சிவஞானிகள் அருளின்பம் துய்க்கிறார்கள். அவர்கள் அருளானந்தத் துய்ப்புக்குரிய ஆனந்தக் கூத்து ஆடப் பெறுகிறது; திருவருட்பொலிவே திருநீற்றுப் பொலிவு என விளக்கப் பெறுகிறது. வேத வேதியர்நெஞ்சில் திருவடிப் பொலிவு அமைகிறது. பிரம விட்டுணுக்கள் தம் உள்ளத்தே இறைவனை ஞானமாகக்

காண்கிறார்கள். முன்னிரண்டு விளக்கங்கள் அருளனுபவ விளக்கங்கள்; பின்னிரண்டும் ஞானத்தால் உணரும் முறை.

பரம் பொருளைத் துய்க்கும் முறையும் அறியும் முறையும் இணைத்துக் காட்டப் பெறுகின்றன. இவ்விருவகை முறைகளையும் இணைத்து நிற்பதே பூந்தராய் எனக் கொள்ளுதல் வேண்டும்.

அருளனுபவப் பேற்றினை உயிர்களுக்கு வழங்கும் குருவாக நின்ற காரணத்தால் திருஞானசம்பந்தர் அருளின் வழி நின்று பல அருட் கொடைகளை வழங்குவாராயினர். அதற்குத் தோற்றுவாயாக அமைந்தது பெருமான் திருவியலூரிற் காட்டிய அருள் வேடம். இறைவனை ஞானத்தாற் கண்ட ஞானசம்பந்தர் இப்போது அருளாற் கண்ட அருட்சம்பந்தராகிறார். அந்நிலையில் திருவையாற்றினை அணுகுகிறார்.

சீகாழிக்குரிய பெயர்கள் பன்னிரண்டு. பிரமபுரம் தொடங்கிக் கழுமலம் வரை உள்ள பெயர்கள் பன்னிரண்டனுள் காழி என்பது பத்தாவது பெயர். திருஞானசம்பந்தர் தம்மைப் பத்தாம் படிநிலை வளர்ச்சியை உட்கொண்ட சீகாழி என்னும் பெயருடன் இணைத்துக் கொள்கிறார். முடிநிலை பன்னிரண்டே யாயினும் இறுதியில் நின்ற கொச்சைவயம், கழுமலம் என்ற இரண்டையும் முன்னுள்ள பத்தினுள்ளேயே அடக்கி, பத்து என்ற படிநிலையையே இறுதிப் படிநிலையாகக் கொள்கிறார். தம்முடைய வரலாறு மட்டுமேயன்றி, சைவ நன்னெறியின் கொள்கை வளர்ச்சியும் கூட அப்பத்துப் படிநிலைகளிலேயே அமைந்துவிடும் என்று உடனுணர வைக்கிறார். அதற்கு மேல், பத்துப்படிநிலைகளையும் ஐந்து ஐந்து ஆகப் பிரித்து முதல் நின்ற ஐந்தும் ஒருவகை மூல அமைப்பின் வளர்ச்சி என்றும் பின்னின்ற ஐந்தும் முன்னதனை ஒட்டியே வரும் வேறுவகை வளர்ச்சி என்றும் அமைக்கிறார். எனவே, ஆரும் படியானது முறையாக வளர்ந்து வரும் வளர்ச்சிப் படிமுறையில் ஒருவகைத் திருப்புமுனையாக அமைகிறது. அத்தகைய திருப்பு முனையைத் தோற்றுவித்த முதற்படியாகவும் பொதுமை வளர்ச்சியில் ஆரும் படியாகவும் நின்ற பெருமையுடையது பூந்தராய். முதல் ஐந்து படிநிலைகளும் சிவஞானப் பேற்றுக்குரிய வளர்ச்சிப் படிநிலைகள். பின்னுள்ள ஐந்தும் அருளானந்த அனுபவப் பேற்றுக்குரிய வளர்ச்சிப் படிகள். ஞான சம்பந்தராக நின்றது முன்னுறுநிலை வளர்ச்சி. அருளின்ப அனுபவப் பேறாளராகத் தம்மை நிறுத்துவது பின்னுறுநிலை வளர்ச்சி.

சிவஞானப் பேற்றின் முழுமை யெய்தியபின், அதன் வளர்ச்சியாக அருளின்ப அனுபவப் படியானது தொடங்குகிறது. பூந்தராய் என்பது, அருளின்ப அனுபவ வளர்ச்சிநிலையில் முதலாம்படி. அம் முதற்படியில் ஞானசம்பந்தப் பெருமான் பெற்ற பேறு இறைவனின் அருள் வேடம் காணல்.

தொடர்நிலை வளர்ச்சியில் ஆரும் படியாகவும் அருளின்ப அனுபவ வளர்ச்சியில் முதலாம் படியாகவும் நின்ற பூந்தராய்

போலவே திருவையாறும் ஐந்தும் அதற்குமேல் நின்ற ஒன்றுகிய ஆறுமாக இணைந்து நிற்கிறது.

திருக்கயிலைக் காட்சியை இவ்வுலகில் அப்படியே விளக்கிக் காட்டவல்ல பெருமையுடையது திருவையாறு. அப்பர் பெருமானுக்கு அத்தகைய கயிலைக் காட்சியை வழங்கிய வரலாற்றுப் பெருமையுடையது திருஐயாறு.

செம்பொருள் எனப் பெறும் பரம்பொருள் ஆறுபிரிவு கொண்ட ஒன்று என அமைத்துக் கொள்ளல் வேண்டும். ஆறுபிரிவுகளும் இரண்டாக வகுக்கப் பெறுகின்றன. முதல் நின்ற ஐந்து பிரிவுகள் உயிர்ப் பொருள்கள், உயிரல் பொருள்களிற் கலந்துள்ளன. இறுதிப் பிரிவாகிய ஒன்று பதியாக, கூத்தப் பெருமானுக நின்று பணியாற்றுகிறது. செம் பொருளின் இறுதிப் பிரிவு ஐந்தெழுத்தாகப் பிரிந்து, ஒரு நிலையில் சதாசிவமாக, மற்றொரு நிலையில் கூத்தப் பெருமானுக நின்று ஐந்தொழிலைப் புரிகிறது.

முதல் நின்ற ஐந்து பிரிவும் ஐந்து பிரிவாய் நின்ற ஓம் எனப் பெறும். பின்னுள்ள இறுதி ஒரு பிரிவு ஐந்தாய் விரிந்த ஐந்தெழுத்து. முன்னது ஐந்துபிரிவுகளாக நின்ற செம்பொருளின் கூட்டாகி ஒன்றாய் நின்றது. ஓம் எனப் பெற்றது. ஓரெழுத்தாயிற்று. இறுதிப் பிரிவு ஒன்றுதான். அது ஐந்தாய் நின்றது. அதுவே ஐந்தெழுத்து. முன்னின்ற மூலமே அதோமுகம் எனப் பெறும். அது சதாசிவத்தின் ஐம்முகங்களிலும் இணைந்து நின்று ஆற்றலை உண்டாக்கும்.

அதோமுகம் செய்த வீரச் செயல் இரண்டே. ஒன்று ஆலகால நஞ்சினை ஏற்று விழுங்கியது; இரண்டு முருகன் என நின்று சூரபதுமனை அழித்தது. இது அதோமுக தரிசனம் என்ற பகுதியில் திருமூலர் கூறுவது. அதோமுகமே, திருநீலகண்ட முகம். அதுவே பேராற்றல் வாய்ந்தது. எல்லாவற்றிலும் கலந்திருப்பது அதுவே. அதுவேதான் ஐந்தொழில் புரியும் ஐம்முகங்களிலும், ஐந்து சபைகளில் கூத்தியற்றும் ஐந்து கூத்தப் பெருமானிடத்திலும் நின்று விளங்கும் மூலப்பொருள்.

அதோமுகம், திருநீலகண்டம் ஐந்து பிரிவுகளாக இருந்தாலும் அது ஒன்றே. ஓம் என்ற ஓரெழுத்தைப் போல. இறுதிநின்ற பிரிவு ஒன்றுக இருந்தாலும் அது ஐந்தே; திருவைந்தெழுத்தைப் போல. இரண்டும் முறையே ஒன்றும் ஐந்தும் என நின்று ஆறு என்பதாகும். சதாசிவம் என்பதை முதலாகக் கொண்டு எண்ணினால் ஐந்தும் ஒன்றும் என ஆறுகும். எண்ணிக்கையில் அதோமுகம் அல்லது திருநீலகண்டம் ஆறுவது எனப்பெறும். இவ்வகையில் திருவையாறு என்னும் தலம் ஐந்தும் (மேல் நின்ற ஒன்று என்பதாகிய) ஆறும் எனப்பொருள்படும். முன்னுள்ள ஐந்தும் என்பது சதாசிவம், பஞ்ச சபைத் திருக்கூத்து நாயகர்கள், ஐந்தெழுத்து ஆகியவைகளைக் குறித்து நின்றது. இனி, [ஐந்தன்மேல் நின்ற ஒன்று என்பதாகிய]

ஆறும் என்பது திருநீலகண்டத்தைக் குறித்தது. எனவே, ஐந்தும் (சதாசிவமும்) ஆருவதாக நின்றதுவும் (திருநீலகண்டமும்) என ஐயாறு என்பதற்குப் பொருள் கொள்ள வேண்டும். இப் பொருளடிப்படையில் சதாசிவமும் ஐவகைப் பதிக் கூத்து நாயகர்களும் வெளிப்பட்டு நின்ற திருநீலகண்டமும் இணைந்து பணியாற்றும் திருத்தலமே திருவையாறு. திருநீலகண்டம் முதன்மைத்தாதலின் நீடும் திருக் கூத்தியற்றும் கூத்தப் பெருமானுக்கே முதலில் பூசை நடத்திப் பின்னர்க் கருவறை இலிங்கபூசை நடத்துவதை மரபாகக் கொண்டது திருவையாறு.

உயிர்களுக்குத் தொண்டாற்றுதல் என்ற வகையில் நீலகண்டத்தின் பணி ஒருவகை. ஐந்தென ப் பிரிந்து நின்ற ஒரு கூறு பதியென நின்று தொண்டாற்றுதலும், கூத்தன் என நின்றுதொண்டாற்றுதலும் என்ற இரு நிலைகளைக் கொண்டது. இரண்டும் ஒரே குறிக்கோளைக் கொண்ட இரு நிலைகள். முன்னது அனுபவத்துக்குரிய அடிப்படைகளை அமைப்பது; அனுபவத்துக்குப்பின் உள்ள உணர்ச்சி நிலைகளுக்குரிய அனைத்தையும் ஆற்றுவது. பின்னதாகிய கூத்தன் என்ற நிலை உயிர்களுக்கு அனுபவத்தை உடனிருந்து அமைப்பது. இவை இரண்டும் ஐந்தெழுத்தை மூலமாகக் கொண்டு பணியாற்றுவன.

பதியென நின்ற காலத்து, சதாசிவம் எனப் பெயர் பெற்று ஐந்தென அனைத்தையும் பகுத்தும் விரித்தும் இணைத்தும் தொண்டாற்றுகிறது. ஐங்கலைகள், ஐம்பூதம், ஐந்தொழில், ஐம்முகம் என அனைத்தையும் ஒடுக்கியும் தோற்றியும் தொண்டாற்றுகிறது. எல்லாவற்றையும் ஐந்தென வகுத்தும் தொகுத்தும் கொடுத்து விடுதல் என்பதே பதிப் பொருள் மேற்கொள்ளும் பணி. இவ்வாறு பிரிந்து நின்ற ஐந்தையும் அனுபவநிலையில் தனித்தும் இணைத்தும் துய்த்துப் பயன்பெற வேண்டுவது உயிர். ஐவகை நிலையில் நின்றவைகளை ஐந்தாக நின்று துய்த்து, அறிவுபெற வேண்டிய நிலையில் உயிர் நிற்கிறது. இந்நிலையில், ஐந்தெழுத்தை மூலமாகக் கொண்டு, ஐவகைத் திருக் கூத்து இயற்றுகின்றனன் கூத்தப் பெருமான். அவன் ஆடும் திருக்கூத்தினுள்தான் உயிர் ஐவகை நிலையில் நின்றவைகளைத் துய்க்கவும், துய்ப்பின் அடிப்படையில் ஞானம் பெறவும் முடிகிறது. திருக் கூத்துத் தொழில் இல்லையானால் உயிர்கள் மாட்டு அனுபவம் நிகழ்தல் இயலாது. அதனாலேயே சதாசிவத் திரு மேனியாகிய இலிங்கத் திருமேனியையும் கூத்தப் பெருமானையும் இணைத்தே நிறுத்தியுள்ளார்கள். ஐவகைச் சபைகளில் கூத்தப் பெருமான் ஐவகைப் பொருளனுபவத்தையும் ஐவகை நிலைகளில் அமையும் அனுபவ அறிவையும் உயிர்களுக்கு அமைத்தற்காக ஐவகைத் திருக் கூத்தியற்றுகிறான்.

எனவே, உயிர்கள் ஐவகை நிலையில் நின்று, துய்த்து அனுபவம் பெறவும் அனுபவத்தின், அடிப்படையில் ஐவகை அறிவைப் பெறவும் பதிப்பொருளின் தொண்டும் கூத்தப் பெருமான் தொண்டும் இன்றியமையாத் தேவையாகின்றன. இதுவே உயிரனுபவம் எனப் பெறும்.

உயிரின் அடுத்த நிலை வளர்ச்சி அருளனுபவம். இது முன் சொன்ன ஐந்து நிலைகளின் முடிவில் தோற்றப் பெற்று வெளிப்பட்ட ஆரும் நிலை எனப் பெறும். இங்கே ஐம்முகச் சதாசிவம் எனப் பெறும் பதிப் பொருளினுள் மறைந்து நின்ற அதோமுகம் - திருநீல கண்டம் - நேரே நின்ற ஐம்முகங்களில் தன்னை இணைத்துக் கொண்டு அவைகளுக்குத் துணைபுரிந்த அதோமுகம் இப்போது தனித்தே நின்று தரிசனப்படும் முகமாகத் தனித்து வெளிப்பட்டு நிற்கிறது. முன்னே சதாசிவம் ஐந்தொழில் இயற்றுங்கால் அவை, படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என நின்றன. ஆனால், அதோமுகம் வெளிப்பட்டுத் திருநீலகண்டமாய் நின்ற போது தொழில் ஒன்றே. அது அருளல் என்ற ஒரு தொழிலே. அருளில் படைத்தல், அருளில் காத்தல், அருளில் அழித்தல், அருளில் மறைத்தல், அருளில் அருளல் என அந்த ஒன்றே ஐந்தாக நிற்கிறது. இங்கே 'ஓம்' என்ற ஓரேழுத்தே மூலமாக அமைகிறது. ஓரேழுத்தே ஐந்தாக விரிய, அவன் ஆடும் கூத்தும் ஐந்து பிரிவுடன் நின்ற ஓரேழுத்துத் திருக் கூத்தாகவே அமைகிறது.

முன்னே அமைந்த ஐந்து திருக்கூத்துகளும் பதிக்கூத்து அல்லது சபைக் கூத்து. ஐந்து சபைகளும் ஐந்து கூத்துகளும் ஐந் தெழுத்தை அடிப்படையாகக் கொண்டு அமைவன. பதிக் கூத்தினும் மேற்பட்டது அம்பலக் கூத்து, அது ஓம் என்ற ஓரெழுத்துத் திருக் கூத்து எனப் பெறும் அருட்கூத்து. உயிர்கள் அருளனுபவம் பெற்று, ஆராத பேரின்பத்தில் திளைத்து வாழ்வதற்கு என அமைந்த கூத்தே அருட்கூத்து.

தத்துவ நிலைகள் கடந்த பின் அமையும் மேல் நிலையில் திரு வெழுத்தைந்தாலே ஞான நடம் எனப் பெறும் நாதாந்த நடனம் அமைக்கப் பெறும். இதனால், உயிரனுபவம் எனப் பெறும் ஞான அனுபவம் அமையும்.

இனி, நாதாந்தத் தலத்துக்கும் அப்பால் அமைந்த பரவெளியில் ஓம் என்னும் ஓரெழுத்தால் ஆனந்தத் திருக் கூத்தியற்றுவன். பரை இடமா நின்று வரைமகள் காண ஆடுவன். இக்கூத்தே அருளா னந்தத் திருக்கூத்து. இதனால், உயிர் அருளனுபவம் பெறும். இந் நிலையையே திருஞானசம்பந்தப் பெருமான், ஐயாறுடைய ஐயன் ஆடுமாறும் வல்லான் என ஐந்தையும் ஆரும் நிலையையும் இணைத் துக் காட்டுகிறார்.

> ''கோடல் கோங்கம் குளிர் கூவிள மாலை குலாய சீர்
> ஓடு கங்கை ஒளி வெண் பிறை சூடும் ஒருவனூர்
> பாடல் வீணை முழவங் குழல் மொந்தை பண்ணுகவே
> ஆடுமாறு வல்லானும் ஐயாறுடை ஐயனே''

என்பது திருவையாற்றுத் திருப்பதிகத்து முதல் தேவாரம்.

இந் நிலையைத் தம் அருள்வாக்கினுல் அருள முற்படும் சேக்கிழார் பெருமான்,

"நீடுபெருந் திருக்கூத்து நிறைந்த திரு உள்ளத்து
நிலைமை தோன்ற
ஆடுமாறது வல்லான் ஐயாற்றெம் ஐயனே"

என்று போற்றிப் பரவுகின்றார். எனவே, திருவையாறு சதாசிவம் என நின்ற ஐந்தும், திருநீலகண்டம் என நின்ற ஆருவதாகிய ஒன்றும் இணைந்து தொழிற்படும் திருத்தலம் எனக் கொள்ள வேண்டும். ஐவகை நிலையில் அமைந்த நாதாந்த ஞானக்கூத்தும், பின்னர் அப் பால் நின்ற ஆருவதாகிய ஒன்றன் தொழில்களாகிய அருளில் படைத்தல் முதலாகிய ஐவகை அருளியற்றொழிலும், நாதாந்தத்துக்கு அப்பாற்பட்ட ஒரெழுத்து மூலமாயமைந்த அருளானந்தத் திருக்கூத் தும் ஒக்க நிகழும் இடம் என ஞானசம்பந்தப் பெருமானுல் விளக்கப் பெறுவதாயிற்று.

ஐயாற்றிற் பெற வேண்டிய அருளனுபவ நிலைக்கு ஒத்த முன் னுறு செயலாக, அருள் வேடம் காட்டுதல் இடம் பெற்றது என்பதை யும் இணைத்துக் காண வேண்டும்.

சிவஞானப் பேற்றின் வளர்ச்சியானது முன்னுள்ள ஐந்து படிக ளில் நிறைவுற, அருளானந்த அனுபவப் பேற்றின் முதற் படியானது திருவையாற்றில் தொடங்குகிறது எனக் கொள்ள வேண்டும். சிவ ஞான சம்பந்தர் இப்போது திருவருளானந்தத் துய்ப்பாளராக அமை கிறார். அருளாட்சியின் முதற்குருவாக அமையும் ஞானசம்பந்தர் இறைவனே அருளாகக் காண்கிறார்; அருளானந்தம் துய்த்து நிற்கிறார் என அவர் தம் வரலாற்றைத் திருவையாற்றுடன் இணைத்துக் காண வேண்டும்.

இக்கருத்தைக் காழியின் ஆரும் படியாகிய பூந்தராய் என்ற பெயரின் விளக்கமாக, சிவஞானிகளாக விளங்குபவர்கள் பொலிவு பெற்றுச் சிறக்க ஆனந்தக் கூத்து இயற்றுகின்ற இடம் என்று அதனை ஞானசம்பந்தப் பெருமான் விளக்கி அமைக்கின்றார். எனவே, பூந்தராய் சிவஞானம் பெற்றுச் சிறந்த சிவஞானிகளுக்கு மேலும் பொலிவமையும் வண்ணம் ஆனந்தத் திருக்கூத்து இயற்றப் பெறுதற் குரிய இடம் என அமைவதால், பூந்தராயில் சிவஞானிகள் அருளா னந்த அனுபவம் பெற்றுப் பொலிகிறார்கள் என்று அமைத்துக் கொள்ள வேண்டும்.

முயலக நோய்

ஞானவாரமுதமுண்ட காழிப் பிள்ளையார் சிவஞானம் எனப் பெறும் பெரும் பேற்றில் உயிர்களைத் தினைக்க வைத்துத் தொண்டாற் றியது முதல்நிலை. இப்போது அருளானந்தப் பெரும்பேற்றில் உயிர் களைத் தினைக்க வைக்கும் தொண்டினைத் திருவையாற்றிலிருந்து தொடங்குகிறார்.

சிவஞானப் பெரும் பேற்றில் திளைத்து முதிர்ந்த நிலையில் தோன்றும் அருளனுபவமாகிய ஆனந்தப் பெரும் பேற்றில் அடி வைத்து, அதிலும் பல படிகளைக் கடக்க வேண்டிய அருளியல் வரலாறு படைத்த ஞானசம்பந்தர் அடுத்து மேற் கொள்ளும் அருளியல் வெளிப்பாட்டு நிகழ்வுகளை நுட்பமாகச் சிந்தித்தால் மேலே கூறிய கருத்தின் உண்மை புலனாகும்.

திருவையாற்றிலிருந்து, திருவருட் பெருங்கூத்தின் பெருமையை விளக்கிப் பாடிய, 'கோடல் கோங்கம்' என்று தொடங்கும் திருப்பதிகத்தின் திருக்கடைக் காப்பினுள் திருஞானசம்பந்தர் அமைத்துள்ள ஒரு நுட்பத்தைச் சிந்தித்தல் பயன் தருவதாகும்.

> "பலி திரிந்துழல் பண்டங்கள் மேய ஐயாற்றினைக்
> கலி கடிந்த கையான் கடற் காழியர் காவலன்
> ஒலி கொள் சம்பந்தன் ஒண்டமிழ் பத்தும் வல்லார்கள்
> போய்
> மலிகொள் விண்ணிடை மன்னிய சீர் பெறுவார்களே"

என்பது அத் திருக்கடைக் காப்பு. இங்கே, ஞானசம்பந்தர் தம்மைக் கலி கடிந்த கையான் என அறிமுகப் படுத்திக் கொள்கிறார். சிவஞானப் பெரும் பேற்றில் திளைத்திருந்த காலத்தும் தம்மை விடாது பற்றியிருந்த வறுமை, துன்பம், கலி ஒன்று இருந்தது. சிவஞானத் திளைப்பில் முற்றுகத் தீர்க்கப் பெற இயலாத அத் துன்பம் அருளனுபவ ஆனந்தத் துய்ப்பில் இல்லாது போய் விடுகிறது. சிவஞானம் உயிரனுபவமாக இருந்த காலத்தில் நீக்கப் பெற முடியாமலிருந்த மூலமலப் பிணியானது அருளனுபவம் ஒன்றுலே தான் முற்றுக நீக்கப் பெறும் என்ற கொள்கையை மனத்துட் கொண்டே, ஞான சம்பந்தர் தம்மை - அருளனுபவத்தில் திளைக்கும் தம்மைக்

> "கலி கடந்த கையான்"

என்று கூறிக் கொள்ளுகின்றார். இதனைப்

> "பொத்திய மூல மலப் பிணி தவிர்க்கும்
> பொருள் அருள் அனுபவம்"

என எடுத்து வழங்கும் வள்ளற் பெருமான் திருவாக்கினைக் கொண்டு தெளியலாம். இங்கே குறிக்கப் பெற்ற "ஒலிகொள் சம்பந்தன் ஒண்டமிழ்" என்பதனுள் கொள்ளப் பெறும் ஒலியானது பரநாத வெளியில் விளங்குவதும் அருளனுபவத்துக்கு விளக்கம் அமைப்பதுமாக அமைந்துள பரநாத ஒலியாகும் இதுவே யாழ் முரி ஒலி.

திருவையாற்றிலிருந்து புறப்பட்டுப் பல தலங்களை வணங்கிக் கொண்டு செல்லும் திருஞானசம்பந்தர் திருப்பாச்சிலாச்சிராமம் என்னும் தலத்தை அடைந்தார். பாச்சில் ஆச்சிராமம் என்ருல் பதியின் கோயில் என்பது பொருள். அப்பகுதியில் வாழும் குறுநில மன்னனுகிய கொல்லி மழவனுக்கு ஒரு பெண் இருந்தாள். அவளை

முயலகன் என்ற நோய் பற்றி வருத்தியது. மருத்துவங்கள் பயன் தரவில்லை. இறைவன் திருவடியைச் சார்தலே இனிச் செய்ய வேண்டுவது என்று கருதி, அவனைத் திருப்பாச்சிலாச்சிராமத் திருக் கோயில் திருமுன் கிடத்தி வைத்தான். திருஞானசம்பந்தப் பெருமான் திருபாச்சிலாச்சிராமத்து இறைவனை வணங்கச் செல்லும் போது இறைவன் திருமுன் இளம்பெண் ஒருத்தி உணர்வற்றுக் கிடத் தலைக் கண்டு, இது என்ன? என்று கேட்டார். பெண்ணின் தந்தை யாகிய கொல்லி மழவன் தன்மகளின் நோய் பற்றி, ஞானசம்பந் தருக்கு எடுத்துக் கூறினான்.

இளங்கொடி போல அழகுடன் விளங்கும் அப்பெண் உணர் வற்று நிலத்திற் கிடக்கிறாள். அந்நிலையிலும் அன்பின் வலிமையால் அர்ச்சுனற்கு அருள் செய்தும், இராவணனுக்குரிய பெருமையை அழித்தும், முவரிலும் முதலாய் நடுவாய் நின்ற முதன்மைக் கடவுளை யன்றி வேறு எதையும் சொல்லாதவளாக இருந்த அவள் அன்பின் திறத்தையும் காண்கிறார். திருநீலகண்டமுடைய அருளாகிய பெரு மான் தன்னை வழிபடும் இளநங்கையாகிய இவளை நோயால் மெலிய விடுதல் மாண்புடையதாகுமோ என நினைக்கிறார். அருளரசாட்சியில் முதன்மைக் குருவாய் நின்ற ஞானசம்பந்தர் பெருமான் சந்நிதியில் நிகழும் ஒருவகைப் பொருத்தமின்மையைக் காணுகிறார்.

மழவன் மகள் வன்பெருநோய் காரணமாக வருந்துகிறாள். பெருமான் சந்நிதியில் பாடுகிடக்கிறாள். அவள் வாயிலிருந்து வெளி வரும் பேச்செல்லாம் மூவர்க்கும் முதலாய் நின்ற முதல்வனைப் பற்றி யதாகவே உள்ளது. தீர்க்கும் ஆற்றல் வாய்ந்த திருநீலகண்டனை இருந்தும் இவள் வாடுமாறு அவன் வாளா இருப்பதன் காரணம் என்ன? இங்கே நாம் சில கருத்துகளை இணைத்துச் சிந்திக்க வேண்டும்.

முயலகன் என்பது நோயின் பெயர். உயர்திணை ஆண்பால் என உணரும் வகையில் விகுதி புணர்த்து உணர்த்தக் கூடிய அளவில் அந் நோயானது செயல் படுகிறது. எல்லா வகையான சிறப்புகளையும் பெற்ற ஒருவரை ஒரு செயலும் செய்ய விடாது அமுக்கிப் பிடித்துக் கொண்டிருப்பது போல நின்று செயற்படும் தன்மையுடையது இந்நோய். வளமான முறையில் செயல்படும் ஒன்றைச் செயல்பட முடியாதவாறு இழுத்துப் பிடித்துக் கொண்டி ருப்பது போன்ற ஒரு கட்டுநிலை. வளமைகளிருந்தும் செயல்பட இயலவில்லை. விரைந்தோடும் முயல் ஓடாமல் அப்படியே நிற் கிறது. எல்லா வகைப் பரிசோதனைகளாலும் அம்முயல் ஓடுவதற் குரிய வளமையும் வாய்ப்பும் கொண்டதாகத் தெரிகிறதேயன்றி, ஓடாமைக்குரிய காரணம் இது எனத் தெரிந்து கொள்ள இயல வில்லை. முயலகன் என இங்கே எடுத்துக் காட்டப் பெறுவது ஆணவ மலக் கட்டு என்பதைத் தான். வளமை வாய்ந்த உயிரைச் செயல் பட முடியாதவாறு அமுக்கிப் பிடித்துக் கொண்டிருக்கிற கட்டு. அது எந்த வகையாலும் தன்னை காட்டிக் கொள்ளாது. செயலின் அடிப் படையில்தான் அதன் இருப்பதைத் தெரிந்து கொள்ள முடியும்.

மூயலகநோய் - உட்பொருள்

பாச்சிலாச்சிராமம் என்பது பதியின் கோயில் எனப் பொருள் படும். சிவமெனும் மங்கலச் செம்பொருளாம் பரம்பொருள் ஐந் தொழில் புரிய முற்பட்டுப் பதியென வந்து நின்றதே உயிர்களை அமுக்கிக் கட்டியிருக்கிற ஆணவ மலப் பிடிப்பை அகற்றுவதற்குத் தான். இந்நிலையில் பதியாய் நின்ற பரம் பொருள் அளித்த உதவி களைக் கொண்டு மெல்ல மெல்ல முயற்சி செய்து, அதன் பிடி யிலிருந்து உயிர் விடுதலை பெற வேண்டும். இதற்கு உதவி செய்வது பதியின் பணி. முயற்சி செய்து, அறிவு முதிர்ச்சி பெற்று, பிடியி லிருந்து வெளிப்பட்டு விடுதலை பெற வேண்டியது உயிர்களின் கடமை.

இங்கே அறம், அருள் என்ற இரண்டன் வழியமைந்த கொள் கைகளை இணைத்துச் சிந்திக்க வைப்பதாக அமைந்த நிகழ்ச்சியே மழவன் மகளின் மூயலக நோய் நிகழ்ச்சி.

தமிழகத்துச் சிந்தனையில் உயிர் கடவுளால் படைக்கப் பெற்ற தன்று. உயிர் அறிவுடைப் பொருள். விளக்கின் அடியில் இருள் இருப்பதைப் போன்று, அறிவுடைய உயிரிடத்திலேயே தன்னை வெளிக் காட்டிக் கொள்ளாமல் அறியாமையும் இருக்கிறது. விரிந்து பரந்து சென்று அறிய வேண்டிய உயிரின் அறிவு அறியாமையால் பற்றப் பெறும் போது விரிந்து செயற்பட முடியாத தாகிறது. அத் தகைய நிலையில் அறிவுடைப் பொருளாகிய உயிரில் கலந்து அதனைக் கட்டுப்படுத்தி யிருக்கிற அறியாமையையே 'ஆணவம்' என்ற தத்துவக் கலைச்சொல் சுட்டுகிறது. கூத்தப் பெருமான் திரு வடியின் கீழ் இருப்பது முயலகன். அவன் ஆணவத்தைக் குறிக்கும் அடையாளம் ஆகிறான். அறிவுடைப் பொருளாயிருந்தும் அறியா மையால் பற்றப்பட்டுச் செயலற்றுக் கிடக்கும் உயிர்களின் மேல் அருளுள்ளம் கொண்ட பரம் பொருள், உயிர்கள் விடுதலை பெறுதற் குரிய கருவிப் பொருள்களை அமைத்துக் கொடுத்துத் தொண்டாற்று கிறது. அவனுல் படைக்கப் பெற்ற உலகில், உயிர்கள் அவன் கொடுத்த கருவிகளாகிய உடல் முதலியவற்றைக் கொண்டு, அனு பவத்தின் மூலம் அறிவைப் பெற்று, அறிவை நிறைவுடையதாகச் செய்து கொள்ள வேண்டும். அறிவு நிறைவுடையதாக அமையும் போது, அறியாமை அதனைப் பற்றித் தன்னுள் அடக்க முடியாது. எனவே, உயிரானது கருவிகளைக் கொண்டு, தாமே அறிவு முதிர்ச்சி பெற்று, ஆணவத்தின் கட்டிலிருந்து விடுதலை பெற வேண்டும். இறைவன் உயிர்களை ஒரே மணித்துளியில் விடுதலை பெற வைக்க முடியும். ஆனுல், அறிவுடைப் பொருளாகிய உயிர் தானே அறிந்து தெளிந்து, பயிற்சிமூலம் விடுதலை பெறுவதும், விடுதலைக்குப் பிறகு இன்பந்துய்ப்பதும் என அமைப்பது தான் அறிவொடுபட்ட செயல். உயிர் என்றென்றும் அறிவில் நிறைபெற்று, நிறை இன்பம் பெற்று, நிறை வாழ்வு பெற்று வாழ வைப்பதே முறையாகும். இல்லை யானுல் பேரின்பத் துய்ப்பினை நிறை அறிவுடன் பெற்று என்றென்

றும் இடரின்றி வாழ்தல் இயலாது. இவ்வகையில் செய்வினை, செய்பவன், சேர்பயன், சேர்ப்பவன் என்ற பிரிவுகளை முறையுற அறவழியில் அமைத்துக் கொடுக்கப் பெற்ற கொள்கையே வினைக் கொள்கை.

முயலகனுகிய ஆணவத்தை முழுமையாக அழிப்பது இறைவன் கொள்கையன்று. மலத்தின் பிடிப்பு நிலையிலிருந்து ஆன்மாவை அருளால் எடுத்துப் பேரின்பத்தில் ஆழ்த்துவதே கூத்தப் பெருமான் திருக் கூத்தின் உட்பொருள். அவ்வகையில் ஐந்தொழில் புரியும் பதியென இலிங்கத் திரு மேனி அமைந்து உயிர்களின் வாழ்வு நிலைகளுக்குரிய ஆணத்தையும் அமைத்துக் கொடுக்க, கூத்தப் பெருமான் தம் திருக் கூத்தினுல் உயிர்களையும் வினைகளையும் பொருளனுபவங்களையும் இணைத்து வைத்து; அறிவைப் பெருக்கவும், ஆணவப் பிடியிலிருந்து வெளிவரவும், பேரின்பத்தைத் துய்க்கவும் ஆக இவ்வாறு இணைத்துச் செயற்படுத்துகிறான். இந்நிலையே தமிழகத்துச் சைவம் பேணும் அறந்திறம்பா அருட் கொள்கை. இவ்வகையில் அருள் அறத்தின் அடிப்படையிலேயே செயலாற்றும். இவ்வகையில் ஐந்தொழில்களில் ஒன்றுக அருளல் அமைகிறது.

திருஞானசம்பந்தர் திருப்பாச்சிலாச்சிராமத்தில் சந்தித்த நிகழ்ச்சியின் உட் பொருள் இதுவே. அறத்தின் வழியில் தான் அருள் செயற்படும் என்ற கொள்கையின் அடிப்படையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டு, திருநெல்வாயில் அறத் துறையில் அருள் வெளிப்பாடு என்ற முத்துச்சிவிகையில் அமர்ந்து அறநெறியில் அருளாட்சியை அமைக்கும் முதற்குருவாக அமைந்தார், திருஞானசம்பந்தர்.

திருப்பாச்சிலாச்சிராமம் பதியின் கோயில் என்ற பொருளுடையது. குறுநிலமன்னன் மகள் முயலகநோயால் பற்றப் பட்டாள். நோயின் பிடிப்பினுல் துன்பத்தை அனுபவிக்க முடிகிறதேயன்றி, நோயினைப் பற்றி அறியவோ, அதன் தன்மையை வெல்லும் வகையை நாடவோ, செயற்படுத்தவோ இயலவில்லை. நோயானது ஆளுந்தன்மை பெற்று ஆளும் உரிமையுடைய உயிரை அடக்கி விட்டது. எனவே, நோய் முயலகன் என்ற ஆளும் தன்மையுடையவனுகக் காட்டப் பெற்றது. உயிர் அடங்கிய நிலையில் பெண்மையாக அமைத்துக் காட்டப் பெற்றது. இளமையும் செல்வமும் பிறவும் ஆகிய கருவிகள் அனைத்தும் வளமாக வழங்கப் பெற்றுள்ளன. ஆனல், செயற்படுத்த இயலாத நிலை ஆண்மையின் வன்மைப் பிடியில் அகப்பட்ட பெண்மையின் செயலற்ற நிலையாக அமைந்து விட்டது. பரம்பொருளை நோக்கிய சொல்லைக் கூறுகின்ற அந்த அளவுக்குத்தான் அவ்வுயிர் செயலாற்ற முடிகிறது.

இதுவே, கொல்லிமழவன் மகளை முயலக நோய் பற்றியிருப்பது என்பதன் உள்ளுறை.

பதிகக் கருத்து

இந்நிலையில், ஞானசம்பந்தப் பெருமான் பதிகம் பாடுகிறார். பெருமானே! இத்துணைப் பெருமையுடையவன் என உம்மைப் பற்றி அறிந்திருக்கிறோம்; பெருமை பெறப்பேசியும் இருக்கிறோம்; உண்மை. இங்கே இந்த இளம்பெண் இன்னது என்று அறியவோ, மாற்றுக் காணவோ, சற்றும் இடம் கொடுக்காத முயலக நோயினால் பற்றப் பட்டுச் செயலின்றி வாடுகிறாள். இதை நான் காணுகிறேன். இதுவும் உண்மை. வரலாற்றுப் பெருமையுடைய நின் சந்நிதியில் ஏழை இளம்பெண் செயலற்ற நிலையில் கிடக்கிறாளே; உம் பெயர் கூறி ஓலமிடுகிற செயலை மட்டுமே அவளால் செய்ய முடிகிறது. இந்நிலையில் இவள் நோய் தீராமல் இருக்க, நீவிரும் இருப்பதானால், நின பெருமையும் ஆற்றலும் அருளும் எவ்வாறு கருதப் பெறும் என்பதே திருப்பதிகத்தின் உட்பொருள்.

பெருமான் முயலகனிடமிருந்து விடுதலை பெறுதற்குரிய அனேகதையும் படைத்துக் கொடுத்து விட்டான். கொடுக்கப் பெற்றவைகளைப் பயன்படுத்தி, வலிமை பெற்று, வலிய பிடியிலிருந்து விடுதலை பெற வேண்டியது உயிர்களின் கடமை. இவ்வகையில் இறைவன் அறநிலையில் நின்று அருட் செயல் புரிந்தவனே. இப்போது ஞானசம்பந்தப் பெருமான் பாடியதும் பெருமான் நோய் நீக்கினான் என்றால், வினைக் கொள்கையை அமைக்கும் போது முன்னே என்ன என்ன தகுதிகள் பெற்று உயிரானது தன் வலிமையாலேயே அறியாமையின் பிடியிலிருந்து விடுதலை பெற்று வர வேண்டும் என்பதற்குரிய அறக் கொள்கையை அமைத்தானே அவனே, கொள்கையிலிருந்து மாறி ஞானசம்பந்தரின், பரிந்துரையில் அறம் திறம்பினான் என்பதே பொருளாக அமையும். ஆனால், பதிகம் பாடி முடிந்ததும், கொல்லிமழவன் மகள் நோய் நீங்கப் பெற்று, தன் தந்தையைச் சேர்ந்தாள் என்பது வரலாறு.

மேலே குறிப்பிடப் பெற்றவாறு அமையும் அருளியல் நிகழ்வுகளில் இத்தகைய அறிவியல் ஆய்வு முறைகளைப் புகுத்தி ஆராய்தல் கூடாது என்பது மரபுவழியில் நிற்கும் சான்றோர்களில் ஒரு பிரிவினரின் கொள்கை. அருளியல் நிகழ்வுகளை ஆராய்தல் வேண்டாம் என்றதன் உட்பொருள் அவை அறிவாய்வு முறைக்குப் பொருந்தாதவை என்பதனாலன்று. அவை, அனைத்துமே அறிவாய்வு முறைக்கு இம்மியளவும் மாறுத வகையில் நிகழ்ந்தவைகளே. நீண்ட காலம் அவ்வாறு துன்பமுற்று, நெடிது ஆராய்ந்த பின்னர் இம் முடிவுக்குத் தான் வர வேண்டியிருக்கும். முயற்சியும் துன்பமும் காலத்தை வீணுக்கலும் என்பனவே. முடிவு முன்பே அறிந்தது என்பது தான் எனக்கூறி, அறிவாய்வுக்குப் பொருந்தியதே அருளியல் நிகழ்வுகளின் அடிப்படை என்று கூறுவது மரபு வழிப்பட்ட மற்றொரு சாராரின் விளக்கம்.

திருப்பாச்சிலாச்சிராம நிகழ்ச்சியின் அடிப்படையில் எழும் வினாக்களுக்கும், இவ்வியல்பான வேறு நிகழ்ச்சிகளை உள்ளிட்டெ

மும் வினுக்களுக்கும் விடைகளாக அமையும் விளக்கங்கள் திருவிய லூர், திருந்து தேவன் குடி என்ற இரண்டு தலத் திருப்பதிகங்களிலும் அமைந்துள்ளன.

திருவியலூர், திருந்து தேவன் குடி நிகழ்ச்சிகள், விளக்கம் முன்னே அமைக்கப் பெற்றுள்ளன. இங்கேயும் அவை பற்றிய விளக்கம் அமைக்கப் பெறவுள்ளது. முன்னே கூறப் பெற்றவை நிகழ்வுகளை முறைப்படுத்தி அமைத்துக் கொள்ள வேண்டிய வரலாற் றுப் பின்னணி விளக்கம். இங்கே அமைப்பது நிகழ்வுகளின் உண் மைத் தன்மை பற்றிய தத்துவப் பின்னணி விளக்கம். முன்னது எப் படி நிகழ்ந்தன என்பதன் விளக்கம்; இது ஏன் அவை நிகழ்ந்தன என்பதன விளக்கம். கூறியது கூறல் எனக் கொள்ளாது பின்னணி யாலும் நோக்கத்தாலும் நிகழ்வுகளில் அமைகின்ற விளக்க வேறு பாடுகள் எனக் கொள்க.

திருவியலூரில் பெருமான் இயல்பாக இருந்த நிலை கூறப் பெறு கிறது. அறத்தின் அடிப்படையில் அருளியல் வழிபட்ட செயல்களை அமைத்தவன் என்பதே அவன் இயல்பாக இருந்தநிலை. அவன் இயல்பு நிலையைக் சுட்டிக் காட்டவே சேக்கிழார்

"வெங்கண் விடைமேல் வருவார்"

எனக்கூறி, அவர் அறத்தின் அடிப்படையில் நிகழ்வுகளை ஆற்றிய அருளாளர் என நிறுத்தி, பின்னர் அப்பெருமானைத் திருந்திய தேவனுக அமைக்கிறார். இயல்பு நிலையில், அதனை வெளிப்படுத்தும் இயல்பு உரு வத்தில் வேறுபட்டுத் திருந்திய நிலையில் அவன் அமைந்த முறையை யும் அதை வெளிப்படுத்தும் திருந்திய உருவத்தையும் திருவிய லூரிலே அவன் காட்ட, ஞானசம்பந்தர் காண்கிறார். இயல்பு நிலையில் அவனைக் கண்டதும் அதனால் பெற்ற அனுபவமும் ஞானசம்பந்த ருக்கு உண்டு. திருவியலூரிற் பெற்ற திருந்திய காட்சி நிலை. அதன் அனுபவ நிலை இரண்டையும் திருந்து தேவன் குடிப்பதிகத்தில் வெளிப்படுத்துகின்றார்.

அறத்தின் வழியில் அருளைச் செயற்படுத்துதல் இயற்கைநிலை. அந்நிலையில் அவன் கொண்ட கோலம் தோடுடைய செவியன் போல் வன. அதிலிருந்து திருந்திய கோலம் ஒன்றும் உண்டு. அதனை அருள் வேடம் என்றார் சேக்கிழார்.

திருவியலூர், திருந்து தேவன் குடி நிகழ்ச்சி ஞானசம்பந்தப்பெரு மான் வரலாற்றில் ஒரு திருப்பு முனையை அமைக்கிறது. இந்நிலையில் திருவையாற்றினை அடைகின்றார் ஞானசம்பந்தர். திருவையாற்றில் இயல்பு நிலைக்கும் திருந்திய நிலைக்கும் உள்ள எல்லா வகையான விளக்கங்களையும் தருவனவாக ஞானசம்பந்தரின் திருப்பதிகங்கள் அமைகின்றன.

திருவையாற்றுப் பதிகங்களில் விளக்கும் கருத்துக்களையே பூந் தராய்ப் பதிகங்களிலும் அமைத்துக் காட்டுகிறார். ஞாலத்தில் உயர்

வார் உள்ளும் நன்னெறியே பூந்தராய், உலகாள விருப்புறில் பூந்த ராய் மேயவன் பொற்கழல் நீதியால் நினைந்து ஏத்திடுக என்றும் கூறு கிறார். சங்கநிதி பதுமநிதி என்ற இரண்டும் வேண்டுவார்க்கு அற வழியில் நின்று கொடைகளை நல்குவன. அவைகள் தாம் கொடுக் கும் நிலையில் சிறந்து விளங்கினாலும் எல்லையில்லாமல் கொடுக்க இயலவில்லை. இத்தகைய குறை இருப்பதை உணர்ந்து, அவைகள் தம்மை மாலைகளாக ஆக்கி இறைவனின் திருமேனியைச் சார்ந்து தவம் செய்கின்றன. அவைகள் வேண்டிய வாழ்வைப் பூந்தராய் மேய புனிதன் அளித்தான். ஏன் அவைகள் மாலையாக மாற வேண் டும்? மாலையானது தனித்திருப்பின் தன்னுடைய மணம் வீசும், இறை வன் மேல் சார்ந்த போது சிவமணத்தைத் தம்மணமாக மாற்றிக் கொடுக்கும் நிலைபெற்றது. தம்மணத்தில் நின்று கொடுத்த போது அமைந்த குறையானது சிவமணத்தைத் தம்மணமாக ஏற்றுக் கொடுத்த போது இல்லாமற் போயிற்று. இத்தகைய பூந்தராய் வர லாற்றை ஞானசம்பந்தப் பெருமான் தம்மோடு இணைத்துத் திருவை யாற்றுத் திருக்கடைக் காப்பில் 'கலி கடிந்த கையான்' என்று கூறிக் கொள்ளுகிறார். முன்னுள்ள குறைகள் நீங்கப் பெற்ற நிலையில் தாம் அமைந்ததாக ஞானசம்பந்தர் கூறுகிறார்.

எனவே, திருவையாறு, பூந்தராய் என்ற இரண்டையும் இணைத் துக் கண்டால் ஒருவகைத் திருந்தியநிலை, கலிகடிந்தநிலை, இயல்பிலி ருந்து மாறியநிலை தோன்றியிருப்பதை அறியலாம்.

தொண்டும் திருத்தொண்டும்

இயல்புநிலை திருந்தியநிலை ஆகியவைகளை மேலும் தெளிவாக விளங்கிக் கொள்வதற்கு மீண்டும் நாம் சேக்கிழார் பெருமான் திரு வடிகளைத் தான் சார வேண்டும். ஞானசம்பந்தப் பெருமான் இவ் வுலகுற்கு வருகின்றமைக்கு உரிய காரணத்தைக் கூறுகின்ற சேக் கிழார் அவர் தம் தாய் தந்தையரையும் அவர் தம் பணிகளையும் எடுத்து விளக்கிய நிலையில்

"தொண்டின் நிலைதர வருவார்"

என்று குறிப்பிடுகிறார். தொண்டு என்பது வழிபாடு. அது இருமை கலந்த ஒருமை நெறி. திருவடியை மறவாது நினைத்தல் முதல்நிலை. புகழை வாயால் ஏத்துதல் இரண்டாம் நிலை. இவை இரண்டையும் இணைத்த நிலையில் அமைவதே வழிபாட்டு நிலை. இவ்வழிபாட்டு நிலையே தொண்டுநிலை.

திருஞானசம்பந்தர் திருப்பதிக வாக்கால் அமைக்க வேண்டு மானால் திருவடியை மறவாது நினைத்தல் என்பதே அருநெறி எனப் பெறும் மறைநெறி; புகழை ஏத்துதல் என்பதே பெருமை பேசும் நெறி; இரண்டும் இணைந்த ஒரு நெறியே தொண்டு நெறி.

தொண்டு நெறியிலிருந்து மலர்ந்தது திருத்தொண்டு நெறி. தொண்டு நெறியிலிருந்து வளர்ந்ததே திருத்தொண்டு நெறியாயினும்

முன்னதில் உள்ள இருமை, இருமையை இணைத்த ஒருமை எனத் திருத் தொண்டுநெறி அமைவதின்று. தொண்டு நெறியில் அமையும் எல்லைக் கோடு திருத் தொண்டு நெறியில் இல்லை. திருத் தொண்டு நெறியில் இதுவரையில் அமைந்துவந்த குறை இல்லை என்பது சேக்கிழார் தரும் விளக்கம்

> ''ஒருமையால் உலகை வெல்வார் ஊனம் மேல் ஒன்றும் இல்லார்
> அருமையாம் நெறியில் நின்றார்''

என்று கூறுவதோடமையாது, ''இருமையும் கடந்து நின்ற நிலையே'' அந்நிலை என்றும் விளக்கியருளுவாராயினர். (பெரியபுராணம் 342) தொண்டு நெறியில் நின்ற அறம் அருள் என்பவற்றின் எல்லை, அணுகுமுறை முதலியன தம்முள் மிக முயங்கிக் கலந்து விடுகின்றன. இதனையே, பூந்தராய் வரலாற்றில் சங்கநிதி, பதுமநிதி என்ற இரண்டும் பெற்ற வளமையான நிலை எனக் கொள்ள வேண்டும். இறைவன் மேல் தம்மை மாலையாக அமைத்து வழிபடுதற்கு முன் அமைந்த குறையும் வழிபட்ட பின் குறைநீங்கி, பெற்ற நிறையும் எனக் கொள்ள வேண்டும்.

திருவியலூரில் அருள் வேடங் காட்டக் கண்டது தொடர்பாகத் திருவையாற்றில் தொண்டு நெறியிலிருந்து திருத் தொண்டு நெறிக்குத் தாம் ஆட்படும் முறையினை அனுபவமாகப் பெறுகிறார். இந் நிலையில் தம்மைத் திருவையாற்றுத் திருப்பதிகத் திருக்கடைக் காப்பினுள்

> ''கூலி கடிந்த கையான் கடற் காழியர் காவலன்
> ஒலிகொள் சம்பந்தன் ஒண்தமிழ்''

என்று குறிப்பிடுவதனுள், கூலி -- வறுமை — குறை நீங்கிய கையான் என்று சுட்டிக் காட்டுவதைக் காணலாம். மேலும், 'திருத்திகழ்' எனத் தொடங்கும் திருவையாற்றுத் திருப்பதிகக் கடைக் காப்பினுள் தம்மை மெய்ஞ்ஞானப் பூசுரன் எனக் குறிப்பிட்டுக் காட்டுகிறார்.

திருவடியை மறவாது நினைப்பதற்குரிய ஞானம் ஒருவகை; இறை பெருமையை மறவாது ஏத்துவதற்குரிய ஞானம் ஒருவகை. இவ் விரண்டையும் இணைத்த ஒருமை நெறியாகிய தொண்டு நெறியை இடையறவு படாமல் செய்வதற்குரிய ஞானம் மூன்றாவது வகை. இவையெல்லாவற்றுக்கும் மேலான நிலையாம் திருத் தொண்டின் நெறிக்குரிய மெய்ஞ்ஞானம் ஒருவகை என நால்வகை ஞானங்களையும் திருஞானசம்பந்தர் ஞானப்பாலருந்திய நிலையிலேயே பெற்றார். ஆனால், திருவையாற்றில் இறுதியாக நின்ற மெய்ஞ்ஞானத்தை அனுபவநிலையில் பெற்றார். ஞானப்பால் அருந்தியவுடன் பெற்ற ஞானத்தை

> ''சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
> பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்
> உவமையிலாக் கலைஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானம்
> தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்''

என்று குறிப்பிட்டருளினர் சேக்கிழார் சுவாமிகள் (பெரியபுராணம் 1973)

திருத்தொண்டு நெறிக்குரியது மெய்ஞ்ஞானம் என அறிய முடிகிறது. திருவடியை இடையறவுபடாமல் நினைப்பதற்குரிய சிவ ஞானம், அவன் பெருமையை விரிவாக எண்ணிப் பேசிப்பரவி ஏத்துவதற்குரிய ஓங்கிய ஞானம், இவ்விரண்டும் இணைய நிற்கும் கலைஞானம் ஒருமை ஞானமே; அது உவமையில்லாதது. ஆனால், முன்சொன்ன இரண்டற்கும் நடுநின்று, இரண்டையும் ஒப்ப நிகழ்த் தும் ஒருமை ஞானமே உவமையில்லாத கலைஞானம். இம்மூன்றன் அடிப்படையில் ஆனால் இம்மூன்றற்கும் அப்பாற்பட்டு அமையும் ஞானமே மெய்ஞ்ஞானம்; அதுவே திருத் தொண்டு நெறிக்குரிய ஞானம்.

திருஞானசம்பந்தர் இத்தகைய ஞானத்துக்குரிய — மெய்ஞ் ஞானத்துக்குரிய — திருத்தொண்டு நெறிக்குரிய அனுபவம் முழு மையையும் திருவியலூர், திருந்து தேவன் குடி முதலாகக் கொண்டு திருவையாறு வரையில் பெற்றுச் சிறக்கிறார்.

திருவையாற்றுத் திருப்பதிகத் திருக்கடைக் காப்புகளுள் கலி கடிந்த கையான் என்றும், மெய்ஞ்ஞானப் பூசுரன் என்றும் தம்மை அமைத்துக் கூறிக் கொள்வதால் மேற்கண்ட உண்மைகளை உணர லாம்.

திருத்தொண்டு நெறிக்குரியது மெய்ஞ்ஞானம் எனக் கூறுவதி லிருந்து அந்நெறி ஏனைய மூன்று நெறிகளுக்குரிய மூன்று ஞானங் களால் உணர்வதற்கு அருமையுடையது என்பது உண்மையே யாயி னும், அது அறிவொடு தொடர்புபடாதது என்று எண்ணுதல் கூடாது. மெய்ஞ்ஞானத்தால் அறிதற்கும் ஆராய்தற்கும் உரியது என்று கருது தல் வேண்டும். அவ்வாறே அத்திருத் தொண்டு நெறியில் அறமும், அருளும் இணைந்துள்ளன என்ற கருத்தையும் நாம் உணர்ந்து கொள்ள இயலும்.

திருக்குறளில் நீத்தார் பெருமை என்ற தலைப்பினுள் உள்ள செய்திகளை இங்கே இணைத்து விளக்கம் அமைக்கலாம். நீத்தார் என்பாரை ஒழுக்கத்து நீத்தார் என்று குறிப்பிட்டார். நீத்தார் என்பது அறவொழுக்கமே இல்லாதவர் என்ற பொருளைத் தராது என்ற வகையில் "இருமை வகை தெரிந்து ஈண்டு அறம் பூண்டார்" என்று அவர் அறம் மேற்கொண்ட நிலையை எடுத்து விளக்கினர். அவர்களை நிறைமொழி மாந்தர் என்றார். குறை வில்லாத மொழி யுடையாராதலின் எல்லாவற்றிலும் நிறைவு பெற்றவர் என்பதாக அமைத்தார். அவர்களிடம் எந்த ஒன்றிலும் ஊனம் இல்லை; குறை இல்லை. அவர்களைப் பெரியவர் என்றும் அந்தணர் என்றும் குறிப்பிட்டார்.

"பணிந்தவர்" எனத் தொடங்கும் திருவையாற்றுப் பதிகம் முழு வதிலும் "அந்தண்" என்ற அடைமொழியை அமைத்து "அந்தண் ஐயாறே" என்று குறிப்பிடுகிறார். அந்தணர் எனப் பெறுபவர் அருள் வடிவாகவே விளங்குபவர்கள் என்று கொண்டு அறத்துக்கு அங்கே இடமில்லை என்று கொள்ளலாகாது என்பதற் காகவே

அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்

என்ற நீத்தார் பெருமை இறுதிக் குறளை நோக்கித் தெளிக. இவற் றோடு ஒத்த அமைப்பிலேயே பூந்தராய் நகரைச் சொல்ல முற்படும் சேக்கிழார்,

"அந்தணர் பூந்தராய்"

எனச் சிறப்பித்தமையை "அப்பராம் பேறு" (முதற்பகுதி) என்ற தலைப்பிற் காண்க.

எனவே, திருத்தொண்டு நெறியில் நின்றார் எனப் பெறுபவர் அருளின் முழுமைக் கோலம் உடையவர்; அவர்களுடைய அறக் கொள்கை என்ன? அறத்தின் முழுமை. எல்லைகள் எல்லாவற்றை யும் கடந்த நிலையில் உலகத்து அனைத்து உயிர்களையும் தழுவிய அறம் உடையவர். அறிவு நிலையில் முழுமை ஞானம், மெய்ஞ் ஞானம். நிறைமொழி அருளி மற்றவர்களையும் வாழவைக்கும் தன் மையர். செயல் வகையில் செயற்கரிய செய்வர் எனக் கொள்ள லாம். பெருமையுடையவர், ஈனம் இல்லாதவர், நிறைமொழியுடை யவர், நிறை அருள் உடையவர், நிறைநிலை அறத்தினர். அத்தகை யினர்க்குத் திருவள்ளுவர் அமைத்த ஒப்பற்ற பெயர் - நீத்தார்.

இவ்வாறு, திருவையாற்றில் தொண்டு நெறியும் திருத்தொண்டு நெறியும் இணைகின்ற நிலையில் திருத்தொண்டு நெறிக்குரிய அருள் வடிவம் கொண்ட இறைவனை மணிவாசகப் பெருந்தகை

ஐயாறதனிற் சைவன் ஆகியும்

என்று குறிப்பிட்டுக் காட்டியருளினர்.

எனவே, திருநெறி எனப்பெறும் திருத்தொண்டு நெறியுடன் இணைந்த ஒருநெறி எனப்பெறும் தொண்டு நெறியின் படிகள் ஐந்து முடிந்தபின் திருநெறி—திருத்தொண்டு நெறி ஆரும் படியை முதற் படியாகக் கொண்டு வரலாறு படைத்தது. இத்தகைய நுட்பங்களை யெல்லாம் விளக்கி நின்றது பூந்தராய்.

தொண்டு நெறியில் நின்றவன் 'சிவன்' எனவும் திருத்தொண்டு நெறியில் நின்றவன் 'சைவன்' எனவும் கொள்ளலாம். இவ்வகையில் திருத்தொண்டுநெறி எனப்பெறும் திருநெறியின் காவலர் என நின்ற நெறியில் அந்தணராய், கலிகடிந்த கையினராய் அருள்வேட அணு

பவம் பெற்ற அருட் சைவராய் வரும் திருஞானசம்பந்தர் திருப்பாச் சிலாச்சிராம நிகழ்ச்சியைச் சந்திக்கிறார்.

முயலக நோயால் பற்றப்பெற்ற கொல்லிமழவன் மகள் நோய் தீர்க்கப்பெறுகிறது. பாச்சிலாச் சிராமத்துப் பதி என்ற சிவன் திரு முன்பில் இச்செயல் நடைபெறுகிறது. இவன் இவ்வாறு துன்புறுவதைப் பார்த்தும் வாளாவிருப்பது பெருமையோ என வினவுகிறார். முயலக நோய் தீர்த்த செயல் விஞைக் கொள்கையின் அடிப்படையில் எத்தகைய விடையை அளிக்கிறது என்பதையும் இங்கே விளக்கம் அமைத்துக் காண வேண்டும்.

பரம்பொருளின் பணி

இனி, அருள்நீலம் பற்றிய வேறொரு விளக்கத்தையும் நாம் இணைக்க வேண்டும்.

செம்பொருள் எனப்பெறும் பரம்பொருள் உயிர்கள்மேல் இரக்கங்கொண்டு செயல்படத் தொடங்கியபோது ஆறுபிரிவுபெற நின்றது. அவ்வாறனுள் ஒரு பிரிவு ஐந்தாக விரிந்து, ஐம்முகம் ஐந்தொழில், ஐங்கலை என நின்றது. ஏனைய ஐந்தும் இவ்வைந்து முகங்களின் உள்நின்று ஆற்றல் விளைவித்தும், ஏனைய உயிர்ப் பொருள்களிலும் உயிரல் பொருள்களிலும் கலந்தும் நின்றது. உயிர்ப் பொருளாயினும் உயிரல் பொருளாயினும் அவற்றின் உள்நின்று அவ்வப் பொருள்களுக்குரிய ஆற்றலை அவ்வப்பொருள்களின் தகுதிகளுக்கேற்பச் செயல்படுத்துவதாகவும் நின்றது. அவ்வகையில் ஆணவம் எனப்பெறும் அழுக்கினுக்கும் உள்நின்று அதன் செயற்பாட்டை அதன் தகுதிக்கேற்பச் செயற்படுத்துவது அப்பொருளே. இவ்வாறு உள்நின்று இயக்கும் மூலப்பொருளே அதோமுகப் பரம்பொருளாகும். அது அருளேமயமானது. ஐந்து கூருக நின்ற அதோமுகத்தின் அமைப்புக்கு அப்பால் நின்ற ஒருகூறுதான் நின்று ஐந்தொழில் மேற்கொண்டது. செம்பொருளின் ஒரு பிரிவு இவ்வாருக, ஏனை ஐந்து பிரிவுகளே — அதே பிரிவுகளே அருளிற் படைத்தல், அருளில் காத்தல், அருளில் அழித்தல், அருளில் மறைத்தல், அருளில் அருளல் என அருளாட்டினை நிகழ்த்துகிறது. ஆலகால நஞ்சு உலகை அழிக்க முற்பட்டபோது அதனை ஏற்றது அதோமுகப் பரம்பொருளே. அதுவே திருநீலகண்டம். இதுவே உலகில் அனைத்துப் பொருள்களிலும் கலந்திருக்கிறது. ஒவ்வோர் உயிரிலும் கலந்திருக்கும் அத்திருநீலகண்டப் பரம்பொருள், அதோமுகப் பரம்பொருள் தான்கலந்திருக்கும் ஒவ்வோர் உயிரையும் அதனதன் தகுதிக்கேற்பச் செயற்படுத்துவது என்பதுமட்டுமன்று; அவ்வுயிரை முன்னேற்றவும் வல்லது. முன்னேற்றுவதற்காகவே அது இங்கே இருக்கிறது. அதுவே அருளின் முழுமையாக நின்று, அருள்வயப்பட்ட ஐந்தொழிலை ஒவ்வோர் உயிரிலும் நிகழ்த்துகிறது. அதுவே, அம்பலக்கூத்து எனப்பெறும் அருளாட்டு.

மேலே அமைத்த விளக்கத்தின் அடிப்படையில் ஓர் உயிரில் அருள்மயமாகிய திருநீலகண்டப் பரம்பொருளின் ஒரு கூறும் உயிரும்

உயிரைச் செயல்புரிய விடாமல் அமுக்கிப் பிடிக்கும் ஆணவமும் என்ற மூன்றும் இருக்கின்றன எனக் கொள்ள வேண்டும். உயிரின் இயல்பாய நிலையில் ஆணவம் என்ற அழுக்கின் பகுதி உயர்ந்து உயிரை அழுத்துகிறது. இந்நிலையில், உயிரானது தன்னுடைய ஆற்றலை மிகுத்து வலிமைப்படுத்துவதன் மூலம் ஆணவத்தின் பிடியி லிருந்து விடுதலை பெறுகிறது. இதற்குரிய அணைத்துப் பணிகளையும் மேற்கொள்வது பதிப்பொருள். பதிப்பொருளின் பணிகளையெல்லாம் உடன்கொண்டு மெல்ல மெல்லத் தெளிவு பெற்று, அவ்வாறே அறி வாலும் அறச்செயலாலும் வலிமை பெற்று, ஆணவத்தின் பிடியி லிருந்து விடுதலை பெறுதல் காலநீட்டிப்பும் முயற்சிப் பெருக்கமும் பற்பலவாறு பிறவிகளிற் புக்குழன்றும் பாடுபட வேண்டியுள்ளது.

திருஞானசம்பந்தர் 'திருநெறித் தமிழ்' என்றநெறியின் தலைமை தாங்க வருகின்றார். ஏனைய மனிதக் குழந்தையைப்போல் அழுதா லும், வாழ்ந்தாலும், மூன்று வயது முற்றிய நிலையில் ஒரு நாள் காலம் பெற அழுத அக்குழந்தையின் அன்றையநிலை புனிதநிலை. புனித வாய் மலர்ந்தழுதது. புனிதர் யாரெனில் அவரே திருத்தொண்டு நெறிநின்றுயர்ந்தவர் எனப்பின்னர் நாம் உணர முடிகிறது. புல்+ நீர்த்தம்=புனிதம். புல்லின் நுனியில் உள்ள மழைநீரில் அமைந்தது போன்ற தூய்மைத்தன்மை. இனச்சார்பால் நலந்தீரியாது நீர் தூய் மையாக இருப்பதற்கு இந்த எடுத்துக்காட்டு. மலரின் பிற குணங் களைவிட, அதன் மென்மையே எடுத்துக்காட்டாக அமைந்தமை போன்று, நீரின் பிற குணங்களினும் அதன் தூய்மையே எடுத்துக் காட்டாக அமைந்த பெருமையுடையது புனிதம்—தூய்மை; புல்லின் நுனியில் அமைந்த நீர்த்துளியின் தூய்மை போன்றது என்ற பொருள் தருவது. 'புனிதர் பேரவை' என்ற பெரிய புராண வழக்கை நோக்குக. 'பூசும் நீறுபோல் உள்ளமும் புனிதர்'' என்ற சேக்கிழார் வாக்கையும் உன்னுக.

தொண்டுநெறியில் முதிர்ந்து, திருத்தொண்டு நெறியின் முதன்மை யும் தலைமையும் தாங்கி வரும் ஞானசம்பந்தப் பெருமானின் பணி ஒருவகைப் புதிய தொடக்கத்தைக் கொண்டது. பழைய நெறியின் பரிணாம வளர்ச்சியேயாயினும், இது புதிய தொடக்கத்தை உடையது.

திருஞானசம்பந்தரின் திருத்தொண்டு அனைத்துயிர்களிலும் உயிரற்ற பொருள்களிலும் கலந்திருக்கிற மூலப்பொருளாகிய திரு நீலகண்டப் பரம்பொருளை நோக்கியது. உயிர்களின் ஆற்றல் உயர்வும் செம்மையும் வலிவும் கொள்ளுமாறு பாடுபடுவது தொண்டு நெறி. ஆனால், உள்ளிருக்கும் பரம்பொருளை, சிவத்தை வளர்த்துப் பிறவற்றையும் தன்னுள் அடக்குமாறு செய்துவிட்டால், உயிரானது இயல்பாகவே, பரம்பொருளின் வழி நின்று விடுகிறது; உயிரற்ற பொருள்களிலும் (உடற்பகுதிகள்) சிவம்பெருகி வெளிப்படத் தொடங்குகிறது. உயிரின் ஆற்றல் சிவத்தின் ஆற்றலுடன் இணைந்து விடுகிறது. கை கால் முதலிய உயிரற்ற பொருள்களும் தம்முடைய

பருப்பொருள் தன்மையிழந்து சிவத்தன்மையை வெளிப்படுப்பனவா கின்றன. இந்நிலையில் ஆணவத்தின்பிடியையிட, உயிரின் ஆற்றல் வலிமை பெற்றுவிடும். இவ்வகையில் திருத்தொண்டு நெறி நேரடி யாகவே சிவவிளக்கத் தொண்டாக அமைகிறது. அவ்வாறு வளர்வது தொண்டு நெறிக்கு மாருனது அன்று. அதனே இணைத்த நிலையில் தோன்றுவதே. இவ்வடிப்படையிலேயே

"தாவில் சரா சரங்களெல்லாம்
சிவம் பெருக்கும் பிள்ளேயார்"

எனப் பெற்றூர் திருஞானசம்பந்தர்.

"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க
பூத பரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுத"

திருஞானசம்பந்தர் என்றூர் சேக்கிழார்.

அசையும் தன்மையுடைய உயிர்ப்பொருள்கள், அசையாப் பொருள்கள் எனப்பெறும் உயிரல் பொருள்கள் ஆகிய எல்லாவற்றி லும் உள்நின்று இயக்கும் சிவமாம் பரம்பொருள் பெருகி வளர்வதற் குரியது. சிவம்பெருகி, உயிர்ப் பொருளுக்கு அனுபவப் பொருளாக அமையும்போது, அவ்வனுபவம் ஐம்புலன்களிலும் வந்து நின்று அவ்வனுபவநிலையின் பயன் அமைத்து விளங்கும்நிலே உண்டா கிறது. ஆகையால், உயிர் சிவானுபவம் பெறும்போது அவ்வனுபவ வெளிப்பாடு ஐம்புலன் அளவினும் வந்து நின்று அதனே மாற்று கிறது.

திருப்பாச்சிலாச் சிராமத்துத் திருக்கடைக் காப்பு நமக்குச் சில நுட்பங்களே வழங்குகின்றது.

"அகமலி அன்பொடு தொண்டர் வணங்க
ஆச்சிரா மத்துறைகின்ற
புகைமலி மாலே புனேந் தழகாய
புனிதர் கொலாம் இவரென்ன
நகைமலி தண்பொழில் சூழ்தருகாழி
நற்றமிழ் ஞான சம்பந்தன்
தகைமலி தண்டமிழ் கொண்டிவை யேத்தச்
சாரகிலா வினே தானே"

என்பது அத்திருக்கடைக்காப்பு. இதனுள் தம்பதிகத்தைத் "தகைமலி தண்டமிழ்" என்று குறிப்பிட்டார். உயிர்ப் பொருளில் மேலும் இரண்டு பொருள்கள் உள்ளன. ஒன்று அழுக்கு, மற்றொன்று பெருமைக்குரியது; பெருகுவதற்குரியது; தகைவது; பெருகுவது. அழுக்கு ஒன்று; பெருகுவதற்குரியது ஒன்று; அது மூன்றுவது. பெருகு வதற்குரியதை விளங்கவும் விரியவும் வைப்பதாகிய இத்தமிழ் என்று பதிகத்தைக் குறிப்பிடுகின்றூர். எனவே, மழவன் மகளுடைய உயிரில் அமைந்துள்ள அருட்பிழம்பாகிய திருநீலகண்டத்துப் பரம்

பொருள் ஞானசம்பந்தர் பதிகத்தால் பெருகி வளர்ந்தது. மழவன் மகளும் தொண்டு நெறியில் நின்றவள். எவ்வாறெனில், இறைவனே யன்றி வேறு எம் மொழியையும் சொல்லாதவளாக இருக்கிறாள். மனம், வாக்கு, காயம் என்ற மூன்றினுள் மனமும், வாக்கும் ஈடுபட்ட தொண்டினையுடையவள், செயற்பாடு கை கூடவில்லை. இந்நிலையில் தொண்டு நெறியில் நின்ற மழவன் மகளுடைய உயிரில் அமைந்த திருநீலகண்டத்துச் சிவ பரம் பொருள் திருஞானசம்பந்தர் திருவாக்கால் பெருகி மலர்ந்தது. எனவே, தொண்டு நெறியில் சிறந்திருந்த மழவன் மகள், திருத்தொண்டு நெறியின் காவலரின் தகைமவி தமிழால் அருளனுபவம் பெற்றாள். முயலகன் பிடியிலிருந்து விடுதலை பெற்றாள் என்பதாம்.

திருஞானசம்பந்தர் வரலாற்றில் முதன்முதலாக நடைபெற்ற அருளியற் செயல் இதுவே. திருவியலூர், திருந்துதேவன்குடி என்ற தலங்களில் பெற்ற அருள் வேடக் காட்சியும், திருவையாற்றில் பெற்ற அருளனுபவமும் திருஞானசம்பந்தரை அருட்பேற்றில் முழுமையுடையவராக அமைக்கின்றன. வரலாற்று முறையில் அருளியல் அனுபவப் பேறு செயலாற்றத் தொடங்கிய இடம் திருவையாறே. திருப்பதிக ஆய்வின் மூலம் இவ்வுண்மையைக் கண்டமையாலேயே, திருநனி பள்ளியானது பாலையாக இருந்து, பின் நெய்தலாக மாறிய செயலை ஞானசம்பந்தப் பெருமான் நிகழ்த்திய அருளியல் நிகழ்ச்சியாகச் சேக்கிழார் கூறுராயினர் எனக் கொள்க.

அவ்வாறுயின், திருப்பாச்சிலாச் சிராமத்துப் பரமர், தீர்க்க இயலாதவராளர் என்பதாகவோ ஞானசம்பந்தரே தீர்க்கும் தகுதியுள்ளவராளர் என்பதாகவோ வேறுபட அமைத்தல் ஒல்லுமோ? வினைக் கொள்கைபற்றி எழும் வினாக்களுக்கு என்ன விளக்கம் காண்பது?

ஆணவப் பிடியிலிருந்து உயிரானது விடுதலை பெறுதற்கு அது தன்னுடைய ஆற்றலை வலிமைப் படுத்திக் கொள்ள வேண்டும். உயிரானது வலிமை பெறுவதற்கு உரிய வழியாக ஞானசம்பந்தப் பெருமான் நமக்கு அருளுவது சிவனது திருவடியை என்றும் மறவாமையும், அவன் பெருமையை ஏத்துவதும், பூவும் புனலுங் கொண்டு அவனுக்கு முழுக் காட்டுவதும் சேர்ந்த வழிபாடு - தொண்டு தேவை தொண்டு நெறி அமைதல் வேண்டும். நான் உமக்கு வழிவழியடிமை என்ற எண்ணம் இடையறாது அனுபவப்பட வேண்டும். அதை உண்டாக்குவது மனம், மொழி, செயல் என்ற மூன்றும் இணைந்த வழிபாடே. தாமே திருவடியை நினைத்தல், தாமே துதிகள்பாடி ஏத்துதல், தாமே பூவும் புனலும் சொரிந்து பூசை செய்தல். இம் மூன்றாலும் நம்மை அவன் வழியில் அடிமைப்படுத்திவிட வேண்டும். இந்நிலையானது முதிர்ச்சி பெறுங் காலத்தில் உயிரின் அகத்தேயுள்ள திருநீலகண்டப் பெருமைப் பொருள் தாமே வெளிப்பட்டுத் தன் ஞொளி வீசுமாறு பெருகி விடும். திருத்தொண்டின் நெறிநின்ற புனிதர்களும் இவ்வாறு உள்நின்ற சிவத்தை மலரவைத்தவர்களே.

இடையருது நீணத்தல், இடையருது ஏத்துதல், இரண்டு வேளையாயி னும் பூவும்புனலும் சொரிந்து வழிபடுதல் என்பன அமைந்தாலே போதுமானது. இது பொதுநிலை.

திருஞானசம்பந்தர் கருத்தின்படித் திருக் கோயில்களில் தொண்டு நெறி மலர்தல் வேண்டும். தொண்டு நெறி மலர்தலுக்குத் தொண் டர்கள் நாளும் அடிபரவுதல் வேண்டும். தொண்டு நெறியாளர்கள் தொண்டாற்றும் போது திருக் கோயிலில் உள்ள பதிப்பொருளும் தொண்டின் நெறியை முற்றுவிக்கவும் திருத் தொண்டின் நெறியைத் தோற்றுவிக்கவும் ஆகிய பணியினை மேற்கொள்கிறது. தொண்டு நெறி மலராத வகையில் ஆறு காலப்பூசையை அழகுற நடத்தி னாலும் அருள் விளக்கம் அமைய வாய்ப்பில்லை.

> "கேட்ட வரமளிக்கும் கீர்த்தியுள்ள தெய்வங்காள்
> கூட்டோடு எங்கே குடிப் போனீர் — பாட்டாய்கேள்
> செல்காலம் எல்லாம் செலுத்தினேம் அல்காலம்
> கல்லானேம் செம்பானேம் காண்"

என்பது ஒரு பழம்பாடல். திருஞானசம்பந்தர் கருத்துப்படி, திருக் கோயில்களில் பதிப்பொருளார் இன்றும் இருக்கிறார், பேசுகிறார். யாரிடத்தில்? தொண்டு நெறி பேணுபவர்கள் சென்று நின்றால் என்று வந்தாய்? என்று கேட்கத்தான் செய்கிறார். திருத் தொண்டு நெறி நின்றார் வந்து நின்றால் விளக்கமாக விஞவுக்கு விடையளிக்கவும் தயாராகத் தான் இருக்கிறார். வழிப் பட்டநிலையில் நீணவாலும், சொல் லாலும், செயலாலும் அடிமையென நின்றவர்களுக்கே அவர் முன் னின்று பேசுகிறார். தமக்கு அடிமை ஆகாமல், தொண்டுநெறி நில்லா மையால் வேறுயாருக்கோ அடிமையானவர்கள் திருக் கோயிலுக்கு வரும்போது அவர் பேசுவதற்கு வாய்ப்பில்லை. எனவே, தொண்டு நெறி சிறக்க வேண்டும்.

அவ்வாறுயின், முயலக நோய் தீர்த்தல் என்பது தொண்டு நெறி முற்றினால் பாச்சிலாச்சிராமத் திறைவரே திருத் தொண்டு நெறியை மலர்விக்கலாமே! அதுவே அறத்திற்கு ஒத்ததாக அமையுமெனில், திருஞானசம்பந்தர் அந்நெறியில் குறுக்கிட்டதாகத் தானே முடியும்! என வினவலாம்.

திருஞானசம்பந்தர் போன்று திருத்தொண்டின் நெறி நின்றார் வந்தணையும் போதில், அவர்களும் திருக்கோயிலுள்ளிருக்கும் பதிப் பொருளோடு இணைந்துநிற்க, திருக்கோயிலுள்ளிருக்கும் பதிப் பொருளும் தாமே திருநீலகண்டப் பொருளாக மலர்ந்து செயல்படு கிறது. தொண்டு நெறியில் மலர்தல் என்ற ஒன்றைப் பதிப்பொருள் முழுமையாக ஆக்க, திருத் தொண்டு நெறி நின்றார் சிவம் பிரகாசிக்கச் செய்யும் நிலையினை மேற்கொள்ளுகிறார்கள். விரைந்து செயற் படுதல் என்ற ஒன்றைத் தவிர அறக் கொள்கையில் மாறு இல்லை.

தொண்டு நெறி நின்ரூர் அதிகமாகும் போது, பரிணாம வளர்ச்சி முறையில் திருத்தொண்டு நெறி நின்ரூர் யாண்டும் நிறைந்திருப்பர். தொண்டு நெறி நின்ரூர் அருகிய காலத்தில் முறையாகத் தொண்டு நெறியாளர்களைத் தோற்றுவிக்கும் நிலையை அங்கங்கே உள்ள திருக் கோயிலில் உள்ள பதிப்பொருள் மேற்கொள்ளுதல் இயலாது. அங்கேயெல்லாம், திருத்தொண்டு நெறிநின்ரூர் வந்து அவ்வூர்ப் பதிப் பொருளார் திருமுன்பில் நின்று, அவரால் தொண்டு நெறியின் மலர்ச்சியையும் தம்மால் திருத்தொண்டின் மலர்ச்சியையும் ஒரே காலத்தில் விரைவில் செய்தருளுகின்ரூர்கள்.

நம்முடைய அருளாசிரியர்கள் அருளியல் நிகழ்வுகளைத் திருக் கோயில் எல்லையிலேயே, பதிப்பொருளை முன்னிட்டுக் கொண்டே நடத்தியருளியுள்ளார்கள். சிற்சில இடங்களில் இடைவழியில் அமையும் நிலை ஏற்பட்டாலும், அந்நிலத்துக்குரிய பதிப்பொருளை நினைவாற் கொணர்ந்து நிறுத்தியே நடைபெறுத்தியுள்ளார்கள்.

பதிப்பொருள் அருளும் நிலையில் அறம் அருள் என்பனவற்றின் எல்லைக் கோடு உண்டு. ஏனெனில், அது தொண்டு நெறியில் மலர்வது. திருஞானசம்பந்தர் போன்ரூர் திருத்தொண்டு நெறியில் நின்ற வர்கள் ஆதலின் அந்நெறிக்குரிய அறம் - அருள் - அறிவு என்ற மூன்றும் வழுவாதவாறு செயற்படுகிரூர்கள். தொண்டு நெறி முதற் படி; திருத் தொண்டு நெறி இரண்டாம்படி. முன்னதற்குப் பின்னது முரணன்று; முன்னதை இணைத்தது. மேற்படியாதலின் ஆற்றலும் மேற்பட்டு விளங்குகிறது. ஏனெனில், அது எவ்வுயிரையும் நோக்கிய செந்தண்மை பூண்டு ஒழுகவும், அருளனுபவத்தை வெளிப்படுத்தவும் உரிய நெறி. அதுவும் அறநெறியே.

இனி, வினைக்கொள்கை பற்றிய வினைக்களுக்குக்கெல்லாம் விடையளிக்கும் நிலையில், முயலக நோய் தீர்த்தருளுதல் என்ற அருளியல் நிகழ்வுக்கு அடுத்த நிகழ்வாகிய பணி நோய் தீர்த்தல் என்பது இடம் பெறுகின்றது.

கொல்லி மழவன் மகளுக்கு முயலகன் என்ற நோய் தீர்த்த அருள் வெளிப்பாட்டு நிகழ்வினை நம்பியாண்டார் நம்பிகள்

> "மழவன் சிறுமதலை வான்பெரு நோய் தீர்த்த
> குழகன் குல மறையோர் கோமான்"
>
> (

என்று உளமுருகப் பாடிப் பரவி வணங்குகின்ரூர்.

இவ்வாறு முயலக நோய் தீர்த்தல் முதலிய அருளியல் நிகழ்வுகளை நிகழ்த்தும் அருளாளர்களின் கை கால் முதலிய கருவிகள், உடம்பு முதலியன நம்முடைய கை, கால், உடம்பைப் போல இருந்தாலும் தன்மையால் வேறுபட்டவை. அவர் தம் கருவிகரணங்கள் அருளாகவே விளங்கிக் கொண்டிருக்கும்.

காழிப்பதியில் ஞானப்பால் அருந்தியவுடன், ஞானம் பெற்று விளங்கிய ஞானசம்பந்தரைப் "பேருணர்விற் பொலிகின்ற பிள்ளையார்" எனச் சேக்கிழார் கூறி, ஞானசம்பந்தர் ஞானமாகவே தம் உயிராலும் உடலாலும் விளங்கிக் கொண்டிருக்கிறார் என்று குறிப்பிட்டார். அவ்வாறே, திருவையாற்று நிகழ்விற்குப்பின், திருஞான சம்பந்தர் "பேரருளிற் பொலிகின்ற பிள்ளையார்" எனப் பொலிந்து, அப் பொலிவின் மூலம் அனேத்துயிர்களிடத்திலும் உள் நின்ற சிவம் மேன் மேல் ஓங்கிப் பெருகி வளருமாறு — சிவம் பெருகிச் சிவமாகவே அனேத்துயிர்களுக்கும் விளங்கி அருளின்பம் துய்க்குமாறு சிவம் பெருக்கும் பிள்ளையாராகப் பொலிய நின்றார் எனக் கொள்க.

பனி நோய் தீர்த்தல்

திருப்பாச்சிலாச் சிராமம் வழிபாடு முடிந்தபின், சிவம் பெருக்கும் பிள்ளையார் பல தலங்களே வணங்கிக் கொண்டு, கொங்கு நாட்டிலுள்ள திருக்கொடிமாடச் செங்குன்றூரை அடைந்து, அங்குள்ள இறைவனேப் பணிந்து, பதிகம் பாடித் தங்கியிருந்தார். அப்போது பனிக் காலம் வந்தது. பனிக் காலத்தில் அந்நாட்டின் இயல்புப்படி ஒரு வகை நச்சு வெப்பு நோய் பெருகி மக்களே அல்லற்படுத்தும். ஞானசம்பந்தர் இருக்கும் போது முறைப்படி அவ்வெப்பு நோய் வந்தது. அடியவர்களே வருத்தத் தொடங்கியது. அப்போது திருஞானசம்பந்தர் திருநீலகண்டப் பதிகம் பாடியருளினர்கள். பதிகம் முடிக்கப் பெற்றதும், அப்பனி நோய் அந்த ஊரில் மட்டுமேயன்றி, கொங்கு நாடு முழுவதிலிருந்தும் மறைந்து விட்டது. திருஞானசம்பந்தர் அருளிய திருநீலகண்டப் பதிகத்தாலேயே அவ்வகை வெப்பு நோய் கொங்கு நாட்டை விட்டே ஓடிவிட்டது என்பதை நம்பியாண்டார் நம்பிகள் காலத்தில் கொங்கு நாட்டு மக்கள் வெளிப்படையாகப் பேசுவார்கள். இவ்வாறு மக்களே மகிழ்ந்து பேசி வியப்பதற்கு ஒத்த வரலாறுகளே அது அந்நாட்டு மக்கள் மனத்தில் இருந்தது என்று கூறுகிறார் திருநாரையூர் நம்பியாண்டார் நம்பிகள்.

"மின்னுர் குடுமி நெடுவெற் பகங் கொங்கில்
வீழ்பனி நோய்
தன்னுர் வழி கெட்டழிந்தமை சொல்லுவர்
காண் இறையே
மன்னுர் பரிசனத்தோர் மேற்புகலும்
எவர்க்கு மிக்க
நன்னுவலர் பெருமான் அருகாசனி
நல்கிடவே"

என்றும்,

"கொங்கிற் பனிநோய் பரிசனத்தைத் தீர்ப்பித்தும்"

என்றும் குறிப்பிட்டருளியுள்ளார்.

பனி நோய் தீர்க்க ஞானசம்பந்தர் பாடிய திருப்பதிகம் திரு நீல கண்டப் பதிகம் என்றே வழங்கப் பெறுகிறது. பதிகத்திலுள்ள ஒவ்

வொரு தேவாரத்தினிறுதியிலும் "திருநீலகண்டம்" என்ற சொல் வருகிறது. தேவார அமைப்பைக் காணும் போது இச் சொல் ஆணை கூறுவது போல அமைந்திருக்கிறது என்பதை வெளிப்படையாக அறியலாம்.

விணைக் கொள்கை

பொது வாழ்க்கை என்பது பலராலும் நுணுகி நோக்கி ஆய்வதற்குரியது. தண்டியலங்காரம் என்ற நூலில் எடுத்தாளப் பெறும் எடுத்துக் காட்டுச் செய்யுள் ஒன்றைக் கீழே காணலாம்.

> அங்கண் விசும்பில் அகல்நிலாப் பாரிக்கும்
> திங்களும் சான்றோரும் ஒப்பர்மன் — திங்கள்
> மறு வாற்றும் சான்றோர் அஃதாற்றார் தெருமந்து
> தேய்வர் ஒருமாசு உறின்

என்பது. பொது வாழ்வில் ஈடுபட்டவர்களின் வாழ்க்கையின் மேல் எல்லாருடைய கண்களும் வீழ்தலும், விளக்கங் காண முற்படுதலும் இயல்பே. சமய வாழ்வு ஒருவகையில் அகநிலை வளர்ச்சியேயாயினும் அதுவும் பொதுமையின் கூறுகளைக் கொண்டதே. இந்நிலையில் திருஞானசம்பந்தர் போன்றோரின் வாழ்க்கையானது உடன் வரும் அடியவர் பெருமக்களாலும், ஏனையோர்களாலும் உற்றுக் கவனிக்கப் பெறவும், வன்மை மென்மை பேசி ஆராயப் பெறவும் உரியதாக இருந்தது என்பதை நாம் உய்த்துணர முடிகின்றது. இந்நிலைமையில் எழுந்த விளக்கமாகவே நாம் திருநீலகண்டப் பதிகத்தைக் கொள்ளுதல் தகும்.

திருஞானசம்பந்தர் கொங்கு நாட்டைச் சென்றணுகும் போது அந்நாட்டின் கால, இட அமைப்புகளை ஒட்டி ஒருவகைக் குளிர்ச்சுரம் அனைவரையும் தாக்குகிறது. நோயின் தாக்கம் அனைவரையும் சிந்திக்க வைக்கும்; பல வினுக்களை எழுப்பத் தூண்டும். சிவனடியவர்களும் குளிர்ச் சுரத்துக்குப் புறம் அல்லர் என்ற பேச்சு உண்டாகியிருக்கலாம். முயலக நோய் தீர்க்கப் பெற்றதை அறிந்தவர்கள் இதையும் சுவாமிகள் உளங்கொண்டால் தீர்க்கலாம் என்ற முறையில் பேசியிருக்கலாம். திருநீலகண்டப் பதிக அமைப்பினைப் பார்க்கும் போது திருக்கோயில் வழிபாடு, பதிகம் பாடுதல் போன்ற பணிகளுக்குப் பின் எஞ்சிய நேரத்தில் திருஞானசம்பந்தர் அடியவர்களுடன் அமர்ந்து வாழ்வியற் சிக்கல்கள் பற்றிப் பேசுவதும், மேற்கொள்வதற்குரிய சில கொள்கைகளை வகுப்பதும் போன்ற செயல்களில் ஈடுபட்டிருந்தார் என்பதை உணர முடிகிறது.

மேலும், விணைக் கொள்கைகளைச் சமணம், பௌத்தம் போன்ற பிற சமயங்களும் ஏற்றுக் கொண்டு விளக்கம் செய்கின்றன. எனவே, சமணம் பௌத்தம் முதலியன கொள்ளும் விணைக் கொள்கைக்கும் சைவ சித்தாந்தம் கொள்ளும் விணைக்கொள்கைக்கும் உள்ள வேறுபாட்டினையும் தெளிய உணர்த்த வேண்டிய கடமை ஞானசம்பந்தப்

பெருமானுக்கு உண்டு என்பதையும் நாம் இணைத்துக் காண வேண்டும்.

வினைக் கொள்கையைப் பொது நிலையில் சுருக்க அமைத்துக் கொள்ளுதல் இங்கே வேண்டப்படுவதொன்று.

இவ்வுலகில் இன்று ஒருவன் ஒரு வினையைச் செய்கிறான் என்றால் அந்த வினையே காரியம் காரணம் என்ற இரண்டையும் கொண்டதாக அமையும். முற்பிறவியில் செய்த வினை காரணமாக இப்பிறவியில் இன்று ஒரு வினை வந்து நிற்கிறது. அது முன்னதை நோக்கக் காரிய மாக அமைகிறது. அவ்வாறே இன்று செய்யும் வினை காரணமாக நின்று, அடுத்த பிறப்பில் இதன் காரியமாகிய வேறு வினையை உண் டாக்கும்.

செயல் ஒன்றைச் செய்யும் ஒருவன் அதன் பயனைத் துய்க்கவே வேண்டும். செயலின் பயனைத் துய்த்து முடிக்கும் வரையில் அவன் இவ்வுலகில் வாழ வேண்டும். ஒருவன் செய்யும் எல்லாச் செயல் களின் பயனையும் ஒரு பிறப்பில் துய்த்தல் என்பது இயலாது. பயனைத் துய்க்க வேண்டிய நிலை இருக்குமானால், அவன் வேறு உடம்பு எடுத்து, அப்பயனைத் துய்த்துத்தான் ஆக வேண்டும். ஒரு வினையின் பயன் எவ்வாறு உறுதி செய்யப் பெறுகின்றதென்றால், வினை செய்கின்ற காலத்து, செய்பவனின் மனநிலையை அடிப்படையாகக் கொண்டே பயன் பற்றிய மதிப்பீடு அமைகிறது. செயல் செய்யுங்காலத்துச் செய்பவனின் மனநிலையைக் கணக் கெடுப்பதும் பயனை இன்னதென வரையறுப்பதும் இறைவனே என அறுதியிட்டுக் கூறுகிறார் அப்பரடிகள்.

> "தொழுது தூமலர் தூவித் துதித்துநின்று
> அழுது காமுற்று அரற்றுகின் ருரையும்
> பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
> எழுதுங் கீழ்க்கணக்கு இன்னம்பர் ஈசனே"

என்பது திரு இன்னம்பர்த் தேவாரம்.

ஒருவன் வினை செய்வதற்கு வேண்டிய எல்லாவகையான கருவி களையும் அமைத்துக் கொடுத்து, அறிவு விளக்கத்தையும் கொடுத்து, வினைபுரிய வைக்கிறான். இந்நிலையில், வினையின் தன்மை, விளைவு முதலியவைகளை அறிந்து கொள்ள இயலாமையால் தவறு செய்தான் என்று கூறுவதற்கே வாய்ப்பு இல்லை. அவ்வாறே, சென்ற பிறவியில் செய்த வினையானது காரணமாக நிற்க, இப்பிறவியில் ஒருவினை வந்து நிற்குமேயானால், அதை மாற்றும் ஆற்றல் - கட்டற்ற தன்மை (சுதந்திரம்) எனக்கு இல்லையே என்றும் கூறலாம். ஒருவன் செய்ய வேண்டுவதாக எதிர்நிற்கும் வினைபற்றிய அறிவு அவனுக்குக் கொடுக்கப் பெற்றுள்ளது. அடுத்து, அவ்வினையை எவ்வாறு மாற்றி அமைக்கலாம் என்பதற்குரிய கட்டற்ற தன்மையும் - சுதந்தரமும் அவனுக்கு அளிக்கப் பெற்றுள்ளது. இவ்விரண்டையும் பயன்

படுத்தி அவன் வினைசெய்தல் வேண்டும். இந்நிலையில் சைவசித்தாந்தம் ஏற்று விளக்கம் அமைக்கும் வினைக் கொள்கையானது செய்வினை, செய்பவன், சேர்பயன், சேர்ப்பவன் என்ற நான்கு பகுதிகளை உள்ளடக்கிய ஒன்று. சமணம், பௌத்தம் அமைக்கும் வினைக் கொள்கையானது முதல் நின்ற மூன்றையும் ஏற்பது, இறுதியாக நின்ற சேர்ப்பவன் என்ற ஒருவன் தேவையில்லை என்றும், வினையானது தன்னுடைய பயனை உரியவனுக்குத் தானே சென்று அடைந்து கொடுக்கும் ஆற்றல் உள்ளது என்றும், சமணம் பௌத்தம் ஆகிய சமயங்கள் கொள்ளும். வினைக்கு அறிவு இல்லை ஆகையால் செய்தவனைச் சென்று சேர்ந்து தன்பயனைக் கொடுக்க இயலாது என்றும், செய்தவனும் முழுமையான அறிவைப் பெறுதவனுகையால் பயனைத் தானே தெரிந்து எடுத்துக் கொள்ள இயலாது என்றும் இவைகளை இணைப்பதற்குப் பேரறிவுப் பொருள் ஒன்று தேவை என்றும் கொள்வது சைவசித்தாந்தம்.

இனி, சென்ற பிறவியில் அல்லது முற்பிறவிகளில் ஒருவன் செய்தவினை இப்பிறவிக்குக் காரணமாகிறது. அவ்வாறே, இப்பிறவியில் செய்யும் வினை மேலைப் பிறவிக்குக் காரணமாக அமைகிறது. இவ்வாறே சங்கிலித் தொடர் போல் செல்லுமேயானால், இவ்வினையிலிருந்து செய்பவன் விடுதலை பெறுதல் எப்போது? என்ற வினா எழுகின்றது.

'ஆணவம்' என்ற வலிய அழுக்கை நீக்குவதற்கு உரிய படிநிலை வளர்ச்சியை உயிரானது தன்னுடைய கூறுகள் எல்லாவற்றிலும் பெற வேண்டியுள்ளது. அதற்குத் துணையாக நிற்கும் வினைக் கொள்கை பற்றி எல்லாச் சமயங்களும் ஆய்ந்து தத்தம் கருத்துகளைத் தெரிவித்துள்ளன.

திருஞானசம்பந்தரின் வினைக்கொள்கை விளக்கம்

திருஞானசம்பந்தர் திருநீலகண்டப் பதிகம், திருநெடுங்களப் பதிகம், இரண்டு திருநாகேச்சுரப் பதிகங்கள், கோளறு பதிகம் ஆகிய ஐந்துபதிகங்களில் வினைக் கொள்கை பற்றிய விளக்கங்களை அமைத்துக் காட்டியுள்ளார்.

ஆணவம் என்ற அழுக்கின் செயல் இரண்டாக அமைவதால் ஆணவம் என்ற அழுக்கை நீக்குவதற்குரிய வழிகளை அருளும் பதிகமும் இரண்டாக அமைகின்றன. ஆணவம் என்ற அழுக்கை முழுமையாக வலியிழக்கச் செய்யும் ஆற்றல் திருவருள் ஒன்றற்கே உரியது.

அருளானது தனித்தும், பதியென நின்றும் உயிர்களுக்கு உதவி செய்கிறது. பதியெனநின்றபோது ஆற்றப் பெறும் ஐந்தொழில்களுள் அருளலும் ஒன்று. (படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்) ஆனால், அருள் தனித்து நின்றபோது ஆற்றப் பெறும் ஐந் தொழில்களும் அருளே. அருளில் படைத்தல், அருளில் காத்தல்,

அருளில் அழித்தல், அருளில் மறைத்தல், அருளில் அருளல் என அவை அமைக்கப்பெறும். அருளெனத் தனித்து நின்ற ஒன்றே 'திருநீலகண்டம்' எனப்பெறுகிறது. இவை முன்பே விளக்கப் பெற்றன.

திருநீலகண்டம் என்ற பெயரில் அமைந்த பதிகம் ஒன்று. அடுத்து, 'திருநெடுங்களம்' என்பதும் நீண்ட கருமை என்ற பெயரில் திருநீலகண்டத்தையே குறித்தது. 'நெடுங்களம்' என்பது தலப் பெயர். அப்பெயர் இரண்டையும் (தலப்பெயரையும் திருநீல கண்டத்தையும்) குறிப்பதாக அமைந்தது. திருநீலகண்டப் பெருமானே திருந்திய தேவன் என்ற குறிப்பமையும் படியும், அதுவே அருளின் முழுமை வடிவம் என முன்னே திருந்து தேவன் குடிப் பதிகத்தில் அமைத்ததையும் இணைத்துக் காண வேண்டும். அருள் வேடத்தைத் திருவியலூரிற் காட்டிய திருந்திய தேவன் என்ற வடிவம் திருநீலகண்ட வடிவமே என்பதையும் அதுவே திருநெடுங் களம் என்ற தலத்துக்கும் உரிய இறைவனுக அமைகிறன் என்பதை யும் இணைத்துக் காட்டுகிறர் திருஞானசம்பந்தர்.

"கணைத்தெழுந்த வெண்டிரைசூழ்
கடலிடை நஞ்சுதன்னைத்
தினைத்தனையா மிடற்றில் வைத்த
திருந்திய தேவ நின்னை"

என்பது திருநெடுங்களப் பதிகத்தின் இரண்டாந் தேவாரம்.

எனவே, திருநீலகண்டப் பதிகம் திருநெடுங்களப் பதிகம் என்ற இரண்டும் அருளே வடிவாகி நின்ற திருநீலகண்டத்தை மூலமாகக் கொண்ட பதிகங்கள் எனவும் இரண்டும் ஆணவம் என்ற அழுக்கின் இருவேறு செயல்களை நீக்க வேண்டி அருளப் பெற்ற இரண்டு திருப்பதிகங்கள் எனவும் இணைத்து உணர்தல் வேண்டும்.

ஆணவத்தின் இரு செயல்கள்

யான் என்ற எண்ணத்தையும் எனது என்ற எண்ணத்தையும் உண்டாக்குவது ஆணவம். இவைகளின் விளக்கங்களைச் செயற் பாட்டு அமைப்பில் நிறுத்தி விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். உயிர்களிடத்தில் கலந்திருக்கும் பரம்பொருள் திருநீலகண்டத்துச் செம்பொருளே. அது உயிரை வாழ்விக்க வந்த அருட் பெருஞ் சோதிப் பொருள். உயிரானது தம் செயல் என்பதை அறுத்து, தான் என்ற எண்ணத்தையும் நீக்கியபின், தன்னுள் இருந்த சோதிப் பொருளில் ஒடுங்கும். உயிரானது தன்னை ஒடுக்கிய போது, அது வரை ஒடுங்கியிருந்த சிவ பரம்பொருள் சோதியாய்ப் பெருகி எழும். தானே மேற்பட்டுத் தோன்றுவதை, தானே பெருகி வெளிப்படு வதாகிய ஒளிப் பொருளை உயிரானது தன்னுடைய செயலின் மூலம் வெளிப்படுவது என மாற்றி நினைக்க வைத்துவிடும். இவ்வாறு மாற்றி உணர வைப்பது ஆணவம்.

தாமே வெளிப்படும் திருவருட் சோதியைத் தன் செயலால் வெளிப் படுகிறது என நீீனப்பது உயிர்க்குற்றம். தலைவன் செயலைத் தன் செயலாக மாற்றி எண்ணுதல். செயலுக்குரிய கருத் தாவாக, வினைமுதலாக நிற்கும் ஆற்றல் இல்லாத தன்னைக் கருத் தாவாக, வினைமுதலாக எண்ணி மயங்க வைப்பது மருள். ''பொருள் அல்லவற்றைப் பொருள் என்று உணரும் மருள்'' என்றார் திருவள்ளுவர். இதுவே மும்மலகாரணம். இதனை நீக்குவது திருநீல கண்டத் திருவருள் முகமே. அதனைத் திருநீலகண்டப் பதிகத்தின் மூலம் அமைத்துக் காட்டுகின்றார்.

இதனை வேறு ஒருவகையாலும் நாம் விளங்கிக் கொள்ளலாம். மனித உடம்பை ஒரு கருவியென அமைத்துக் கொள்ளலாம். உயிர் அதன் துணைக் கொண்டு பல நன்மைகளைப் பெறுகிறது என்பதாக வும் அமைத்துக் கொள்வோம். உயிரானது உடம்பிலுள்ள கண் ணின் துணைக் கொண்டு ஒரு பொருளைப் பார்த்து அறிகிறது. உயி ரானது கண்ணின் மூலம் பார்க்கிற செயலை ''நான் பார்க்கிறேன்'' என்று சொல்கிறது. இங்கே கண்ணின் செயலை முழுமையாக மறுத்து விட்டுத் தன் செயலாகவே பார்க்கும் செயலை அமைக்கிறது. அவ் வாறே உயிர் ஒரு செயலில் ஈடுபட்டுச் செயலாற்றுவதற்கு உயிரி னுள் இருக்கும் சிவபரம் பொருள் துணை செய்கிறது. அது உயிரின் உள்ளேயே தோன்றித் துணையாக இருந்து செயல்படுகிறது. அது செயல்படுத்தினாலன்றி உயிர் தானே செயற்படாது. உயிரானது உள் இருந்து ஒரு பொருளால் இயக்கப் பெற, கண் முதலிய கருவிகள் பார்த்தல் என்ற செயலைத் துணையிருந்து செயற் படுத்திக் கொடுக்க, இவ்வாறு உள்ளும் வெளியும் ஆகிய இருநிலைகளிலும் துணைபுரிந்த துணைகளை முழுமையாக நீக்கிவிட்டு, ''நான் பார்க் கிறேன்'' என்று கூறிவிடுகிறது. இதுவே 'நான்' என உயிர் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளும் அழுக்கு நிலை. எந்த ஒரு செயலுக்குத் தான் வினைமுதல் இல்லையோ, கருத்தா இல்லையோ, அந்த செயலுக் குத்தானே கருத்தா தானே வினைமுதல், அதனைச் செய்தவன் தானே என்று பொய்யுரை கூற முற்பட்டு விடுகிறது. இத்தகைய பழக்கத் தின் அடிப்படையில், தன்னுள் இருக்கும் சிவ பரம்பொருள், உயி ராகிய தன்னுள் கொண்டு வந்து அமைக்கப் பெற்றதன்று. தன்னுள் அவனே வந்து கலந்தான். அப்படியிருந்தும் தான் சென்று அவனை அறிந்து அவனுள் கலந்தது என்று பேசிவிடுகிறது. இங்கேயும் தலைவன் செயலைத் தன் செயலாக அமைத்து விடுகிறது. தன்னுள் கலந்திருப்பவனை உணர்ந்து, தெளிந்து, தம்மைத் 'தாம்' என்று சொல்லாமல் அடங்கிவிடுவதே உயிரின் தொழில். 'தாம்' என்பது அடங்கவே, தம்முள் இருந்த சிவம் வெளிப்படுகிறது. தாம் (உயிர்) அடங்கியபோது வெளிப்படுவது சிவத்தின் தொழில், தலைவனுகிய சிவத்தின் தொழிலையும் தன் தொழிலெனக் கருதிவிடும். இவ்வாறு, தன் செயல் அல்லாதவைகளைத் தன் செயலாக உணரவும் பேசவும் செயற்படவும் வைத்தது ஆணவத்தின் முதன்மைச் செயல்.

ஆணவத்தின் இரண்டாவது செயலையும் அதனைத் தீர்க்கும் பதி கச்சிறப்பினையும் திருநெடுங்களப் பதிக விளக்கத்தில் காணலாம்.

திருச்செங்கோடு இன்று நாகமலை யெனவும் வழங்கப் பெறும். நாகம் கொடிய நஞ்சுடையது. நஞ்சு ஒருவகைத் திரவப் பொருளாக இருந்து செயற்படுவது என்பது அனுபவம் தந்த அறிவு. அது செயற் படாமல் கட்டித் தன்மையை அடையும் என்பதும் அப்போது அது மாணிக்கம் என நின்று ஒளிவீசும் என்பதும் நாகம் தன் கண் இழந்த பின் மாணிக்கத்தைக் கக்கி வைத்துவிட்டு, அவ்வொளியில் இரை தேடச் செல்லும் என்பதும் நம்பிக்கை. சமய அடிப்படையிலான பற்பல அனுபவங்களை உணர்த்துவதற்கு நாகம் பயன்படுத்தப் பெற்றுள்ளது. தமிழர் வாழ்வில் 'நாகம்' என்பதை மையமாக அமைத்து எடுத்துக் காட்டப் பெற்ற வாழ்வியல் நுட்பங்கள் பல உண்டு.

ஆலகால நஞ்சினை அருந்தியது சிவன் வரலாறுகளுள் ஒன்று. இங்கே நஞ்சு வெளியிலிருந்து வந்து சிவன் கண்டத்தில் நிலைத்து நின்று விடுகிறது. அப்படி நின்ற போது, அது நின்ற இடம் 'திருநீல கண்டம்' என்ற பெயரைப் பெற்றுவிடுகிறது.

உலகமெலாம் அஞ்சியோடுமாறு பரந்தெழுந்து வந்த நஞ்சினை எதிரேற்று, அதனை ஒன்றுகத் திரட்டி, ஓர்உருண்டையாக ஆக்கிய பெருமை ஆலாலசுந்தரருக்கு உண்டு. திருக்கயிலையில் நாள் தோறும் மலர்பறித்து மாலை தொடுத்து இறைவனுக்கு அணிவிக்கும் மலர்த் தொண்டும், திருநீறு (விபூதி) அமைத்துக் கொடுக்கும் திருநீற் றுத் தொண்டும் செய்பவர், அவர் ஒருவர்தான் அச்சமின்றி இருந்தார். அவரைக் கூப்பிட்டு, பரந்துபட்டு வரும் நஞ்சினைத் திரட்டிக் கொண்டுவர ஏவினன் சிவன். அவர் சென்று நஞ்சின் எதிரில் நின்று பன்முகப் பட்டுப் பரந்து வரும் நஞ்சினை ஒருமுகப்படுத்தி ஒன்று திரட்டி ஒரு சிறு உருண்டையாக்கிக் கொண்டு வந்தார். அதனை ஏற்று இறைவன் — சிவன் விழுங்கவே, அருகில் நின்ற அறமூதாட்டியாகிய அம்மை, அந்நஞ்சு உள் செல்லாதவாறு, சிவனுடைய கழுத்தைப் பற்றி அமுக்கவே, நஞ்சு அங்கேயே நின்று விட்டது. பின்னர், அது நின்ற இடம் ஒளி பொருந்திய நீலகண்டம் எனப் பெற்றது என்பது வரலாறு.

ஆலகாலநஞ்சினை அஞ்சாதுநின்று எதிரேற்று, திரட்டி உருட்டி அதனை ஒரு சிற்றுருண்டைபோல ஆக்கக் கூடிய ஆற்றல் தொண்டர் ஒருவருக்கே அமைந்தது. தொண்டு நெறிதான் அதனை ஏற்கும் ஆற்றலைத் தந்தது. நஞ்சு என்பதை ஆணவம் என்று கொள்வது சாத்திர வழக்கு. அப்படியானால், தொண்டு நெறி ஒன்றே ஆணவத்தை எதிர்த்து நிற்கவும் ஒழுங்கு செய்யவும் ஆகிய ஆற்றலை விளைவிப்பது என உணரலாம்.

பின்னர், உமையம்மையின் செயல் அமைகிறது. அறத்தின் வடி வினளே உமை. அறம் வளர்த்த கையால் அந்நஞ்சினைக் கண்டத்தில் நிறுத்துகிறாள். எனவே, அறமானது நஞ்சினை மேலே செல்லாதவாறு தடுத்து ஓரிடத்தில் நிறுத்தி விடுகிறது. எனவே

தொண்டு நெறியும் அறநெறியும் ஆணவத்தை ஒருநிலைப்படுத்தவும் ஓரிடத்தே நிற்கவும் செய்யவல்லன எனக் கொள்ளலாம். அடக்கி, அழிக்க வந்த ஆணவம் அடங்கி ஒரு நிலைப்பட்டுத் தங்கியது என்னலாம். அடங்கிய நிலையில், ஒரே இடத்தில் நின்ற நிலையில் ஆணவம் ஒடுக்கப் பெற்றது என்று சொல்லலாமேயன்றி, ஒழிக்கப் பெற்றது என்று சொல்ல முடியாது. அதன் செயல் இருந்தது. அறநெறி, தொண்டு நெறி என்பவைகளின் அடிப்படையில் அதன் மேலே அமைவது திருத்தொண்டுநெறி. ஆணவத்தை மேலெழுந்து தாக்காத நிலையில் முற்றடிமையாக ஆக்கிய நிலை திருத் தொண்டு நெறியால் விளைவது. அதுவே திருவருள் நெறி எனப் பெறுவது.

எனவே, திருச் செங்கோடு நாகமலை எனப்பெறுவது என்பதையும், நாகத்தின் நஞ்சும் ஆணவத்தின் செயலும் ஒத்தவை என்பதையும், நஞ்சின் தொடர்புடையது திருநீலகண்டம் என்பதையும், திருச் செங்கோட்டில் நளிர்ச் சுரம் நீங்கத் திருநீலகண்டப் பதிகம் பாடப் பெற்றது என்பதையும் இணைத்துச் சிந்தித்த வகையில் எழுந்த இணைப்புக் கருத்துகளே மேலே குறிப்பிடப் பெற்றவைகள்.

அறநெறியும் தொண்டு நெறியும் முழுமையாக இணைதல் வேண்டும். அவ்விரண்டன் காரணமாக, நாம் நம்மால் வழிடப் பெறும் பரம்பொருளுக்கு அடிமை என்ற எண்ணம் ஒன்று உண்டாதல் வேண்டும். மலர்தூவி, புனல் சொரிந்து நிற்பதும், ஏத்தித் துதிப்பதும் ஆகிய இரண்டும் மனம், மொழி, மெய் என்ற முன்றையும் முற்றுக இணைத்து நிற்கவைத்து, அவைகளை இறைவன் திருவடியில் நிலைத்து நிற்கச் செய்வன. அதுவே தொண்டு நெறி. தொண்டு நெறியில் வளர்ச்சி அல்லது முதிர்ச்சி என்பது இறைவனுக்கு யான் அடிமை என்ற எண்ணம் எழுதல் என்பதே. அடிமை என்ற எண்ணம் எழுவதும், அடிமை என்ற நிலையில் தன்னை இறைவன் திருவடிக்கு அடிமையாக்கவேண்டும் என்ற முதிர்ச்சி உண்டாவதும் "அற்புதத் திரு" என்று காரைக்காலம்மையாரால் போற்றிப் புகழ்ந்து பேசப் பெறுகிறது. சிவம் என்னும் பரம் பொருளுக்கு அடிமை என நிற்றலாகிய அத்தகு "அற்புதத் திருவை" வியந்து அம்மையார் அருளிய நூறு செய்யுட்களே அற்புதத் திருவந்தாதி. அடிமையாம் இதனையே "குணிய வலமாம்" அடிமை என்றும் சிறப்பித்தருளினார் காரைக்காலம்மையார். 'திருநீலகண்டம்' என்பது அவன் ஒருவனே பிரான் என்பதையும் மற்றைய எல்லாம் அவன் அடிமையும் உடைமையுமே என்பதையும் அறிவிக்கும் ஆவணம்; சான்று ஓலை.

> "அவர்க்கே எழுபிறப்பும் ஆளாவோம் என்றும்
> அவர்க்கே நாம் அன்பாவ தல்லால் — பவர்ச்சடைமேல்
> பாகாப் போழ் சூடும் அவர்க்கல்லால் மற்றொருவர்க்கு
> ஆகாப் போம் எஞ்ஞான்றும் ஆள்"

எனத் தம் அற்புதத் திருவந்தாதி முன்றுஞ் செய்யுளில் முழங்கிய பேயார் 'அவனுக்கு ஆள்' என்ற ஒன்றை மட்டும் நினைத்தாலே போதும் என வரையறை செய்தார்.

பூவும் நீரும் சொரிந்து வழிபடுதலும், பெருமையை ஏத்திப் பாடுதலும் என்ற இரண்டாய் இணைந்து நின்ற தொண்டு நெறியுடன், அவனுக்கு அடிமை என்ற அடிப்படையில் நிற்றலே ஆணவத்தின் ஒரு பகுதியை வெல்வதற்கு உரிய வழி. மன் செயலைத் தன் செயலாக மதித்தலே ஆணவத்தால் வந்த குற்றம். அடிமை என நின்று நம்மை அவனுக்குள் அடக்கி விடுதல் வேண்டும். அப்போது ஆணவத்தின் இரு செயல்களுள் ஒன்று நம்மைத்தாக்காது. இச்செயலே குளிர்ச் சுரம் எனப்பெற்றது. இது சேர்ந்திருக்கும் ஆணவத்தால் விளைவது என்பதை எடுத்துக் காட்டவே, நிலத்தியல்பால் வருவதாகிய நளிர்ச்சுர நிகழ்ச்சி அமைகிறது. நீருக்குக் குளிர்ச்சியைத் தந்து, அது சுவையாற்றலை விளக்குமாறும், தாகமெனும் வெம்மையைத் தணிக்குமாறும் செய்வது தண்ணீரை வாழவைக்கும் ஒருவகை நெருப்பாற்றலே. அது வளர்வதால் தண்ணீருக்கு வாழ்வு உண்டு. நெருப்பாற்றலேயாயினும் தண்ணீரை வாழ வைப்பது. ஆனால் அதே நீரில் அமைந்துள்ள பருப் பொருளியலான நெருப்பு ஒன்று உண்டு. அது தண்ணீரை அழிப்பது. எனவே, நீரானது ஆக்கும் வெப்பத்தோடும் அழிக்கும் வெப்பத் தோடும் தொடர்புடையது. ஆக்கும் வெப்பத்துக்கு அடிமை ஆதல் வேண்டும். இன்றேல் அழிக்கும் வெப்பத்தால் தான் அவதியுற நேரும். அழிக்கும் வெப்பத்தால் நீர்படும் அவதியே 'நளிர்ச் சுரம்' எனப் பெற்றது. இது காரண நிலையில் நின்ற ஆணவத்தின் செயல். இதனால் விளைவது தலைமை மாற்றம். ஆட் கொண்டான் வன்மை யையும் அடிமையின் தன்மையையும் மாற்றம் பெறச் செய்வது. முதன் முதலில் தலைவனை அறியாது உயிர் நடுக்குறுகின்றது. நடுக்கத்தின் முதிர்ச்சியால் தாம் எதனை அடக்கித் தம் தலைமையை நிலை நாட்ட வேண்டுமோ அத்தலைமையை மறந்து, வேறொன்றற்குத் தம்மை ஆளாக்கி விடுகிறது. இது நடுக்கத்தால் பிடி தளரும் நிலை.

சிவனடியவர்கள் சிவனுக்கு ஆளெனத் தம்மை அமைத்தவர்கள். அவர்கள் தம்மைச் சிவன் அடியவர் என்ற நிலையில் எப்போதும் நிலை நிறுத்த வல்லராதல் வேண்டும். அடிமை என நிறுத்திய நிலையைக் கலக்குதல் என்பதே ஆணவத்தின் முதற் பணி. அதுவே நடுங்கும் வெம்மை. பாம்பு ஆணவத்தின் அடையாளமாகக் கருதப் பெறுவது. ஆதலின் அதனோடு பனி மதி முரண்பட்டு நிற்பதை அமைத்துக் காட்டினர். ஆண்டான் என நின்று, பனிமதியை ஏற்று அமைத்ததன் நோக்கம், திருநீலகண்டத்தின் நோக்கம் ஆகிய எல்லாம், அவன் தலைவன்; நாம் ஆள் என்பதை விளக்கவே.

> "வந்து இதனைக் கொள்வதே ஒக்கும் இவ் வாளரவின்
> சிந்தை யதுதெரிந்து காண்மினே — வந்தோர்
> இராநீர் இருண்டனைய கண்டத்தீர் எங்கள்
> பிராணீர் உம் சென்னிப் பிறை"

என்ற அற்புதத் திருவந்தாதி (22) ப் பாட்டினுள் பனிமதி எனப்பெறும் திங்களின் நடுக்கம் பற்றி அறியலாம். அதுவே உயிரின் நடுக்கம் எனப்பெறும் நளிர்ச்சுரம்.

ஞானசம்பந்தர் இத்தகு நளிர்ச்சுரத்தால் துன்புறவில்லை என்பதும் சிவனடியவர்கள் நளிர்ச் சுரத்தால் துன்புறுகின்றனர் என்பதும் திருச்செங்கோட்டுத் தலத்தில் நடைபெற்ற வரலாற்று நிகழ்வினை அடிப்படையாக வைத்து எழுகின்ற வினைக் கொள்கை விளக்கங்கள். குறிக்கோள் விளக்கமே திருநீலகண்டப் பதிகம்.

திருஞானசம்பந்தர் நளிர்ச் சுரத்தால் வருந்தாமை காரணமாகப் பேச்சு எழுதல் இயல்பு. இறைவனின் அருள் வயப்பட்டவர். ஞானப்பால் அருந்திய ஞானி. நம் போன்ற அடியவர்களுக்கு நோயானது துன்பம் செய்யும். முயலகன் என்ற நோயையே மாற்றும் அருளாளர் ஞானசம்பந்தர். ஆயினும், அடியவர்கள் படும் நளிர்ச் சுரத்தை நீக்கவில்லை என்பன போன்ற பேச்சுகள் எழுதல் இயற்கை. இறைவனும் சார்பு பற்றியே அருள் செய்கின்றான் போலும் என்ற அடிப்படையில் எழும் பேச்சுகள். இவைகளை அறிவு நிலையிலும் அற நிலையிலும் நின்று விளக்கிக் காட்டிய ஞானசம்பந்தர் அருள் நிறைமொழியெனப் பெறும் நிறைமொழி அமைத்துத் திருவருள் நலத்தினை அனைத்துயிர்க்கும் வழங்கும் அந்தணராக, நீத்தாராக அமைகிறார். அவர் தம்முடைய குறிக்கோள் தொண்டு எனப்பெறும் சிவம் பெருக்கும் தொண்டின் மூலம் நளிர்ச் சுரத்தை நீக்கியருள்கிறார்.

வினைக் கொள்கையை அறிவியல் அடிப்படையில் ஆராய முற்படும் ஞானசம்பந்தர்,

"அவ்வினைக்கு இவ்வினை ஆம் என்று சொல்லும் அ∴தறிவீர்" என்று தொடங்கி, "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று தொடங்கும் புறநானூறு காட்டும் வினைக் கொள்கையை விளக்குகின்றார். நீர்வழிப்படூஉம் புணைபோல், ஆருயிர் முறை வழிப்படூஉம்" என்பதை விளக்கமாகக் கொண்டால் இவ்வுயிர் வினைச் சுற்றுச் சங்கிலித் தொடரிலிருந்து மீளவே முடியாது என்பதாகும். அறிவுடைய நாம் வினைக் கொள்கையைச் சிந்தித்தால், இச் சங்கிலித் தொடரிலேயே நாம் உய்வதற்கு உரிய வினையும் இருக்கிறது என்பதை அறியலாம். அதை அறியாதிருப்பதற்குக் காரணம் ஒரு வலிய வினை. அது நம்மை அவ்வாறு செய்து விட்டது என விளக்கி, தாம் இது வரை நின்ற தொண்டு நெறியின் சிறப்பினால் இத் தீவினை எம்மைத் தீண்டவில்லை என்று எடுத்துக் காட்டி விளக்கம் அளித்தருளுகிறார் திருஞானசம்பந்தர்.

வினைக் கொள்கையின் விளக்கமே அவ்வினைக்கு இவ்வினை என்ற தொடர். அவ்வினைக்கு இவ்வினை என்பது சென்ற பிறவியில் நான் செய்த வினைக்கு உரிய காரியமாக அமைந்தது இப் பிறவியில் உள்ள இவ்வினை. ஆனால், இன்று இப்பிறவியில் என்முன் நின்ற வினையின் காரணத்தை நான் அவ்வாறு விளங்கிக் கொள்ள வேண்டும். ஆனால், இவ்வினையே நானே வினையாக அமையும் என்று கருதிவிடக் கூடாது. இவ் வினையானது — இன்றைய வினையானது சென்ற பிறவியின் வினையின் விளைவு என்பதே உண்மை. ஆனால்,

இவ்வினையிலேயே என் உய்வினை இருக்கிறது என்று சிந்திக்கும் அறிவுடைமை வேண்டும். இன்று என் முன் வந்து நிற்கும் வினையை நான் "கைவினை" எனச் செய்தல் அமையுமானால், அதுவே எனக்கு உய்வினை ஆகும். இல்லையேல், பின் வந்து என்னைத் தாக்கும் மேல் வினையாக அமையும் என்று கூறி வினைக் கொள்கையிலிருந்து மீட்பு வழியை விளக்குவாராயினர்.

கைவினை என்பது யான் கருவி என நின்று செய்யும் வினை. யான் அவனுக்கு மீளா அடிமை. நான் அடிமை என்று நின்று, இறைவன் இயக்க இயங்குவதாகத் தன்னை அமைத்துக் கொண்டு செய்யும் போது, அது இறைவன் வினை ஆகிறது. யான் அடிமையே. நேற்று வரை நான் செய்த செயல்களை என் செயல்களாகச் செய்தேன். இன்று நான் என்னை அவன் திருவடிகளில் அடிமை என நிறுத்திய நிலையில் ஒரு கருவியானது செய்யும் செயலெனச் செய்யும் நிலை பெற்றேன். இன்று செய்யப் பெறும் வினை என் வினையாக அமைய வில்லை. என் வினை செய்யப் பெருமையின், இதுவரை வந்த சங்கிலித் தொடர் அறுபட்டுப் போயிற்று. அதனால், இது உய்வினை. தம்மைக் கருவியென அமைத்துச் செய்தல் மிக எளிமை என எண்ணிவிடுதல் ஆகாது. திருவடியை என்றும் மறவாது நினைத்தலும், பூவும் புனலும் சொரிந்து வழிபடுதலும், அவனுக்கு நாம் அடிமை என்ற கருத்தை ஆழ நினைத்து ஆட்படுதலும் ஆகிய மூன்றும் இடையறாது நடை பெறுதல் வேண்டும். மனம், வாக்கு, செயல் ஆகிய மூன்றும் ஒருமை நெறியில் நின்று தம்மை அடிமையாக்கி விட வேண்டும். அப்படி அடிமை என நின்ற அந்நிலையில், இப்போது செய்யப் பெறுவன என் செயல்கள் அல்ல, நான் கருவி என நின்ற அவ்வளவில் செய்யப் பெறுவன. நான் செய்தேன் என்ற எண்ணத்துடன் செய்யும் போது தான் அச்செயல் என் செயலாக அமைகிறது. இதனை 'இறைபணி நிற்றல்' என்னூர் மெய்கண்டார். 'செம்மையுள் நிற்றல்' என்னூர் வாகீசப் பெருந்தகை. "நம் செயலற்று, இந்த 'நாம்' அற்றபின் நாதன் தன் செயல் தானே என்று உந்தீபற, தன்னையே தந்தா னென்றுந் தீபற" என்பது சாத்திரம்.

இக் கொள்கைகளை விளக்கும் வகையில் அமைவது திருஞான சம்பந்தரின் திருநீலகண்டப் பதிகத்தின் முதல் தேவாரமாகிய

> "அவ்வினைக்கு இவ்வினை ஆம் என்று சொல்லும் அஃதறிவீர்
> உய்வினை நாடாது இருப்பதும் உந்தமக்கு ஊனமன்றே
> கைவினை செய்து எம்பிரான் கழல் போற்றுதும் நாமடியோம்
> செய்வினை வந்து எமைத் தீண்டப்பெரு திருநீலகண்டம்"

என்பது. இத்தேவாரத்தினுள் 'கைவினை' என்பதற்குச் சிறுவினை சிறுசெயல் எனப் பொருள் உண்டு. கையினால் செய்யும் தொண்டு எனப் பொருள் கொண்டு சரியை முதலிய தொண்டு எனப் பொருள் கொள்வர். சரியை முதலிய தொண்டுகளையும் 'நான்' என்ற தன் முனைப்போடு செய்யுங்காலத்தில் அவை தொண்டு எனப்பெறு.

இங்கே ஞானசம்பந்தப் பெருமான் வினைக் கொள்கையில் புதைந்து கிடக்கும் நுட்பத்தைத் தெளிவுற விளக்கும் முறையில் உய்வினை, கைவினை, செய்வினை ஆகியவைகளை அமைத்துக் காட்டுகிறார். கைவினை செய்தல் என்பதை வினைக் கொள்கையின் மூலம் எனக் கொள்ள வேண்டும். அப்பரடிகள் கூறும் ''என்கடன் பணிசெய்து கிடப்பதே'' என்பதன் உள்நோக்கத்தையும் சிந்திக்க வேண்டும். இதனை 'நீத்தார்' என்ற சொல்லாற் குறிப்பிடப் பெறுபவரின் செயல் என்றும் சுட்டுவர். 'செத்தாரைப் போலே திரி' என்பது அருள் வழக்கு.

''செய்யாமை செய்து செயலறுக்க லாயிருக்கச்
செய்யாமை செய்யாத வாறு''

எனத் திருக்களிற்றுப்படியார் என்ற சாத்திர நூல் பேசும். 'செய்யாமை செய்தல்' எவ்வாறு? இங்கே செயல் உண்டு. தொடர்ந்து வரும் வினைத் தொடரை அறுக்கும் செயல் இங்கே உண்டு. செய்யும் முறையில் ஒரு வேறுபாடு. நான் கருத்தாவாக நின்று செயல் செய்கிறேன் என்பது இல்லாமல் அடிமை என நின்று, அவன் பணியை நான் கருவியாக நின்று செய்கிறேன் எனச் செய்தல் வேண்டும். நான் பெற்ற தற்போதத்தால் செயலுக்குத் தன்னை வினை முதலாக ஆக்கிக் கொள்ளும் போது வினை தொடர்கிறது. தன்னைக் கருவியாக்கி, அடிமையாக்கி, இறைவனை ஆண்டானாக அமைத்துச் செயலாற்றினால், வினைக்கு அவன் கருத்தாவாகிறான். இதனை ஞானசம்பந்தர் திருநீலகண்டப் பதிகம் ஐந்தாம் தேவாரத்தில்,

''செற்றெமைத் தீவினை தீண்டப்பெரு திருநீலகண்டம்''

என்ற வரியில் அமைத்துக் காட்டுகிறார். செறுதல் — அழித்தல்; செற்றார் = அழித்தார். செற்றார் என்பதன் திரிபாகச் செத்தார் என்பதைக் கொள்ளலாகாது. செற்றவர்கள் செத்தவர்களைப் போல இருப்பார் ஆயினும் செயலாற்றுவர். செத்தவர்கள் தம்முடைய உடல், கருவி முதலியவைகளைக் கெடுத்துக் கொண்டு விட்டவர்கள். செற்றவர்கள் 'நாம்' என்ற தம்மையும், தம்முடைய கருவி கரணங்கள் எல்லாவற்றையும் அடிமை என்ற ஒரு அடிப்படையில் இறைவன் திருவடியில் சேர்த்து விட்டார்கள். தமக்குக் கருவியாக, அடிமையாக இருந்த எல்லாவற்றையும் தம்மோடு சேர்த்து இறைவனுக்கு அடிமை என ஆக்கிவிட்டார்கள். அப்படி அடிமை என நின்று செயலாற்றுபவர்களைச் செற்றார் என்றார். அவ்வாறு அடிமை என நின்று செயலாற்றும் தம்மைச் 'செற்ற எமை' (செற்ற + எமை=செற்றெமை) என்று குறிப்பிட்டருளுகிறார். மேலும், இப் பதிகத்துத் திருக்கடைக் காப்பினுள்

''பிறந்த பிறவியில் பேணி எம் செல்வன் கழலடைவான்
இறந்த பிறவி உண்டாகில் இமையவர் கோன் அடிக்கண்
திறம்பயில் ஞானசம்பந்தன் செந்தமிழ்''

என்று குறிப்பிடுகிறார். பிறந்த பிறவி என்பது ஞானசம்பந்தரின் முன்னைப் பிறவிகள். அவற்றில் அவர் செய்த தவம் என்பது

பேணுதல். பேணுதல் என்பது பூவும் புனலும் சொரிந்து வழிபடுதலும், அவன் புகழை ஏத்திப் பாடி வழிபடுதலும் என்ற இரண்டும் இணைந்த தொண்டு நெறி. தொண்டு பேணியதன் கொள்கை என்ன? அடிமை எனத் தன்னை நிறுத்தி ஆண்டான் என நின்ற பெருமானின் இணையடி சேர்தல் என்பதே. தொண்டு நெறி பேணிய தவத்தால் இப்போது பெற்றிருக்கும் பிறவி — இறந்த பிறவி, ஞானசம்பந்தர் சீகாழிப் பதியுடன் இணைத்து அமைந்ததம் பிறவியை — காழிப் பிறவியை இறந்த பிறவி என்றார். கழிய நின்ற பிறவியே காழிப் பிறவி. நான் என்னும் அகந்தை கழிய நின்ற பிறவியே இறந்த பிறவி. முன்பிறவிச் செயல்களுக்கும் இப்பிறவிச் செயல்களுக்கும் வேறுபாடு ஒன்று உண்டு. நான் எனத் தன்னை வினைமுதலாக நிறுத்திச் செய்த செயல்கள் முற்பிறவிகளில் உண்டு. இப் பிறவியில் 'நான்' என நின்ற தன்னை அழித்த — செற்ற — இறக்கச் செய்த — இறை திருவடியில் இணைந்து விட்ட நிலையில், தன்னை இழந்த நிலையில் செய்த செயலே இப் பிறவியில் உண்டு. அதனாலேயே இது இறந்த பிறவி எனப் பெற்றது. இறந்த பிறவியாற் பயன் இறைவன் திருவடிக் கீழ்த் தங்கி, இறைவன் திறம் எனப் பெறும் அருளை அறியவும் துய்க்கவும் இயலும். இத்தகைய துய்ப்பினால் உண்டாகும் இன்பமே 'தமிழ்' எனப் பெறும். இதனை,

> மோனம் அந்தமா முனிவர் மும்மலத்தை மோசித்துத்
> தான் அந்தமான இடத்தே தங்கியிடும் — ஆனந்தம்

என்று விளக்கினார் உண்மை விளக்க ஆசிரியர். இந்நிலைக்குரியது திரு அம்பலக் கூத்து.

பதிப்பொருள் அமைத்துக் கொடுத்தவைகளை உயிர்கள் துய்ப்பதற்காகக் கூத்தப் பெருமான் ஆடும் கூத்து ஐவகைப் பதிக் கூத்து. இங்கே பதிப்பொருளாய் நின்ற பரசிவத்தின் ஐந்தொழில் முன்னுக, அவற்றின் பயனை உயிர்களுக்கு எய்து விக்கும் நிலையில் கூத்தப் பெருமான் திருக் கூத்து நிகழும். இதுவே, திருக் கோயில்களில் கருவறைத் திருமேனிக்குப் பூசை முடிந்தபின் கூத்தப் பெருமான் பூசை நிகழ்வதன் குறிக்கோள். திருவம்பலக் கூத்து முறையில் கூத்து முன்னுக, அவ்வானந்தம் அருளானந்தமாக, அதன் துய்ப்பு ஐவகையில் நிகழும். இங்கே கூத்து முன்னது; ஐவகைத் துய்ப்பு அதன்பின் அமைவது. இவ்வகையில் கூத்தப் பெருமான் பூசை முன்னுக, திருக் கோயில் கருவறை இலிங்கத் திருமேனிப் பூசை அதன் பின்னுக நடைபெறும். இதுவே, திருவையாற்றுப் பூசை அமைப்புமுறை. திருவம்பலக் கூத்து நிகழும் போது 'தான்' என்பதை அந்தமாக்கிய உயிர்கள் 'இருக்கும்' என்று அமைத்துக் காட்டினார் காரைக்காலம் மையார். இறைபரம் பொருளின் செயலானது மேற்பட, தான் என்பதை நீக்கிய நிலையில், அவனோடு தன்னை இணைவித்துக் கொண்ட நிலையில் தற்செயலற்று இருத்தல் என்பது அதன் பொருள்.

> "இறவாத இன்ப அன்பு வேண்டிடப்பின் வேண்டுகின்றார்
> பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்

மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா! நீ ஆடும் போது உன் அடியின் கீழ் இருக்க என்றார்.''

என்பது சேக்கிழார் பெரியபுராண (1781) வாக்கு. இங்கே அமையப் பெறும் பண்ணே ''வாய்மூரி'' என்று திருஞானசம்பந்தர் திருப்பாச் சிலாச்சிராமத் திருப்பதிகத்தில் அமைத்துக் காட்டுகின்றார். இப் பண்ணே திருநீலகண்டத்துக்கு உரியது. ஆண்டான் அடிமை என்ற நிலையில் அமைக்கப் பெற்ற உறவுமுறைக் கட்டானது மேலும் மேலும் வலிமை பெறுவதற்குத் துணைசெய்யும் பண்ணுக அமைவது. அதுவே தமிழ் ஒலியும் இன்ப நுகர்வும் என அமைந்த ''செந்தமிழ்'' எனப்பெறும். இது இறைவனுக்கும் உயிருக்கும் உள்ள கட்டினை வலிவாக்கி, அவ்வுயிரினோடு இணைந்து நின்ற பிற கட்டுகளின் வலிமையைக் குன்ற வைப்பது. இதுவே திருநீலகண்டப் பதிகத்துப் பயன்.

''நிறைந்த உலகினில் வானவர் கோனெடுங் கூடுவர்''

வானவர் கோன் திருநீலகண்டப் பெரும் பொருள். ஏனைய வானவர்கள் ஆலகால நஞ்சு வெளிப்பட்ட போது தம்மைக் காத்துக் கொள்ளும் வழியற்றவர்களாக அமைய நஞ்சினை ஏற்று வானவர்களுக்கும் வாழ்வளித்தமையின் வானவர் கோன் எனப் பெற்றவன் திருநீலகண்டனே. திருநீலகண்டன் திருவடியே நிறைந்த உலகு எனப் பெற்றது. அங்கே உயிர் அருளானந்தம் துய்க்கும் என்பது பதிகப் பயன்.

திருநீலகண்டப் பதிகம் முழுவதிலும் ''தான்'' என்ற ஆணவத்துடன் செய்யப் பெறும் செயல்கள் அடுத்த பிறவியில் தீவினையாக, திண்ணிய தீவினையாக, சிறப்பு இலி எனப்பெறும் தீவினையாக, திரு இலி எனப்பெறும் தீவினையாக, சிற்றமதாம் வினையாக, தீக்குமித் தீவினையாக ஆறு நிலைகளில் வந்து தாக்கும் என்று குறிப்பிடுகின்றார். தொண்டு நெறியைப் பேணிய காரணத்தால் இறந்த பிறவி பெற்ற தம்மை - தம்போன்ற சிவனடியவர்களைச் ''சிலைத்த எம்மை'' என்றும் ''செற்ற எம்மை'' என்றும் இனம்பிரித்துக் காட்டியுள்ளார்.

இனி, கைவினை செய்தல் இரண்டு வகை. தன்னுடைய வினைகளைச் செய்ய முற்படுங்காலத்தில் தன்னை ஒரு கருவியாக அமைத்துக் கொண்டு செயலாற்றுதல் ஒருவகை. இது முற்பிறவியில் செய்த அவ்வினைக்கு உரிய வினைவாக இப்பிறவியில் வந்து நின்ற இவ் வினையைச் செய்யும் முறை. இரண்டாவதாக, நாம் பொதுநலப் பணிகள் பலவற்றைச் செய்தல் வேண்டும். பொதுநலச் செயல்களையும் தம்மை ஒரு கருவி என அமைத்த நிலையிலேயே செய்தல் வேண்டும் என வரையறை செய்கிறார். எனவே, தொண்டு நெறியில் தம்மை ஒரு கருவியென அமைத்துப் பூவும் புனலும் சொரிந்து வழிபடுதல், அவன் புகழை ஏத்தித் துதித்தல் என்ற இரண்டும் இணையும். இக்கால வழிபாட்டு முறையில் இது ஆன்மார்த்தம் எனப் பெறும். இவ்வாறு ஆன்மார்த்த வழிபாடு செய்பவர் சோலைகள் உண்டாக்

குதல், குளம்வெட்டுதல் போன்ற பொது நலப்பணிகளையும் மேற் கொண்டு செய்தல் வேண்டும். இவைகளைச் செய்யும் போது 'தான்' என்ற நிலை அற்றவர்களாக, தம்மை ஒரு கருவியென அமைத்துக் கொண்டவர்களாக நின்றே செயல்பட வேண்டும். இதுவே, சுவாமிகள் கருத்தில் 'பரார்த்தம்' என்று கருதப் பெறுகிறது. எனவே, பிறருக்காக ஒருவர் தாமே பூவும் புனலும் சொரிந்து அவருக்காகத் தாமே இறைவனை ஏத்தியும் துதித்தும் வழிபடுதல் என்பது 'பரார்த்தம்' என இக்காலத்தே கொள்ளும் விளக்கம் திருஞானசம்பந்தரின் திரு வாக்கில் அமையவில்லை எனக் கொள்ளலாம். பூவும் புனலும் சொரிதலும், ஏத்தித் துதித்தலும் ஆகிய அனைத்துச் செயலாலும் விளைந்து நிற்க வேண்டியது என வரையறுக்கப் பெறும் கருத்து ஒன்றே. அது அவன் ஆண்டான்; அவனுக்கு என அமைந்த அடிமையே யான் என்று கருதிய கருத்தில் ஒருவன் இடையருது நிற்றல் வேண்டும். இக்காலத்தே அமையும் பரார்த்த முறைப் பூசை யாருக்காகச் செய்யப் பெறுகிறதோ, அவருக்கு இத்தகைய மனநிலை அமையுமா என்பதை ஆய்தல் தேவை.

இனி, இருவகை வினைகளைக் குறிப்பிடுகின்றார். அன்பின் அடிப் படையில் உயிர் உடலுடன் கொண்ட உறவு வலுப்பெறும் அளவில் செய்யப் பெறும் வினைகள் விலைத்தன்மையுடையவை. வினை, பயன், பின்விளைவு என நின்று செயல்படுபவை; மதிப்பீட்டுத் தன்மையுடையவை. 'விலை' என நிற்கும் உட்பொருளைக் கொண்டது. அதனின் வேறுபட்ட வினை ஒன்று உண்டு. அருளின் அடிப்படையில் உயிர் தன்னுடைய ஆண்டானுடன் இணைய வேண்டிய உறவை வலுப் பெறுத்தும் அளவில் செய்யப் பெறும் வினைகள் வேறுவகை. முன்வகையைச் சார்ந்த வினைகள் இறைவன் அடிமை என்ற கருத்தை அலைக்கும் வழியில் - மாறுபடுத்தும் வகையில் வேறுபக்கம் இழுத்து வருத்தும் நிலையுடையவை. இரண்டாம் வகையைச் சார்ந்த வினைகள் - விலையாந்தன்மையில் மதிப்பீடு செய்ய இயலாதவை. பயன் தூக்கார் செய்த உதவி, காலத்தினாற் செய்த நன்றி, செய்யாமற் செய்த உதவி என இவ்வாறு அமைத்து மதிப்பீடு செய்தற்குரிய வைகள் முற்பகுதி வகையைச் சார்ந்தவை. இதனை

> "முலைத்தடம் பற்றிய போகங்களும் மற்று எவையும் எல்லாம் விலைத்து, அலையாவணம் கொண்டு எமையாண்ட விரிசடையீர்"

என்று திருநீலகண்டப் பதிகத்து மூன்றாந் தேவாரத்தில் குறிப்பிடு கின்றார். இங்கே, முல் என்பது அன்பைக் குறிக்கும். அன்பின் அடிப்படையில் உயிர் உடலுடன் இணைந்து துய்க்கும் இன்பம், அதை ஒட்டிய பிறவும் எல்லாம் விலையாந் தன்மைத்து செயல், பயன் பின்விளைவு என்ற மதிப்பீட்டு முறையிலானது. இவ்வகை வினைகள் நல்வினைகளே ஆயினும் பயனைத் துய்க்க வேண்டிய நிலையில் சுவர்க்கம், போகம் என உயிர்களை அலைக்கழிக்கும். அருளை உள் ளிட்ட வினைகள் ஆண்டான் திருவடியில் மீளா அடிமையாம் உறவை உண்டாக்கி அருளின்பம் துய்க்கச் செய்வன என்றும் குறிப்பிட்டார்.

எனவே, அருளின் அடிப்படையில் ஆற்றும் வினைகளே உயர்ந் தவை. இறைவன் நிகழ்த்திய எண்வகை வீரச் செயல்களும் அருளின் அடிப்படையில் நிகழ்த்தப் பெற்றவை.

எனவே, தொண்டு நெறியில் நின்று சமூக நலங்களும் இணையப் பேணும் திறம் பெற்றவர்கள் அருளின் அடிப்படையில் வினைகளை ஆற்ற முற்படுவார்கள். அருளின் அடிப்படையில் செயலாற்ற முற் படுதலே திருத்தொண்டு நெறி. அது தம்மை அழித்து - நான் என்ற ஆணவத்தை அழித்த நிலையில், உயிர் என்ற அடிமை தன்னுடைய ஆண்டானுடன் இணையும் வகையில் ஆற்றப் பெறுவது; பயன் அருளானந்தப் பேறு.

திருநீலகண்டப் பதிகத்தின் இருவகை உட்கோள்

வினைக் கொள்கையின் விளக்கமாகத் திருநீலகண்டப் பதிகத் தைத் திருஞானசம்பந்தர் அமைத்தருளினர் என்ற கருத்து விளக்கப் பெற்றது.

தீவினை வந்து எமைத் தீண்டப் பெரு என்று கூறி, தம்மையும் தம்போன்ற அடியவர்களையும் தீவினை தீண்டாது எனத் தம்மைப் பற்றிய விளக்கமாக நான்கு தேவாரங்களில் (1, 2, 3, 5) எடுத்துக் கூறியுள்ளார். இப்பதிகத்து முதல் தேவாரத்தில் மட்டும் முன் னின்ருரை விளித்துக் கூறுவதாக அமைத்துள்ளார். முதலில் உள்ள இரண்டு தேவாரங்களிலும் தீவினை தீண்டப் பெருதிருக்க மேற் கொள்ள வேண்டிய நெறி முறைகளை விளக்கிக் கூறியதாகக் கொள் ளலாம். நான்கு, ஐந்து என்ற இரண்டு தேவாரங்களிலும் நாமும் தம்மைப் போன்ற அடியவர்களும் செய்ததாக உள்ள நிகழ்ச்சியை அமைத்தருளுகின்ருர். உம் கழலடைந்தோம், திருவடியே யடைந் தோம் என இறந்த காலத்தாற் குறிப்பிட்டருளியிருக்கின்ருர். ஆறு, எட்டு, ஒன்பது, பத்து என்ற நான்கு தேவாரங்களிலும் நிகழ் காலத்தால், வந்து உமை ஏத்தும் நாமடியோம், தொழுது வணங்கு தும் நாமடியோம், அடிபோற்றுகின்றேம் என அமைத்துக் கூறி யருளியுள்ளார்.

இவ்வாறு செய்க என எடுத்துக் காட்டியும், இவ்வாறு செய் தோம் என இறந்த காலத்தாற் செப்பியும், இப்போது இவ்வாறு செய் கின்றேம் என எடுத்து மொழிந்தும் கூறியருளியதன் உட்பொருள் நெறியும் பயனும் வரலாற்று முறையால் உண்மையானவை. அடிமை என நின்றேம் தீவினை தீண்டாமை பெற்றேம். அடிமை என இப்போது நிற்கின்றேம் தீவினை எம்மைத் தீண்டவில்லை. இவ், விரண்டன் அடிப்படையில் நீங்களும் தொண்டு நெறி பேணி அடிமை என அமையுங்கள். அதுவே உய்வினை என வழிவகுக் கிறேன். இவ்வுரையை யான் கூறுவது வரலாற்றின் அடிப்படையில். எனவே, நீலநாட்டப் பெற வேண்டும். திருநீலகண்டத்தின்மேல் ஆணை என அமைத்துக் காட்டியருளுகின்ருர்.

இனி, பெருமானிடம் முறையிடும் முலமாக, தம்முடைய திருத் தொண்டு நெறியை நிறைவுபெறுத்துகின்ருர் ஞானசம்பந்தர். இறைவனிடம் உயிர்களை அடிமையாக்குவது, இறைவன் உயிர்களை அடிமை கொண்டது என்ற இரண்டில் முன்னையது எது? வலியவந்து எம்மை ஆளாகக் கொண்டது பெருமானே. வலிந்து ஆட்கொண்ட பின்னர், ஆட்கொள்ளப் பெற்றவர்களை ஆளாக ஆக்கிக் கொள்ளாமை பெருமான் தவறே. அவ்வாறின்றி, உயிர்களாக அவனிடம் அடிமையாதல் வேண்டுமெனில், மறக்கு மனத்தினை மாற்றி மறவாதிருக்கச் செய்ய வேண்டும்; ஆவியை வலிந்து கொண்டு போய் அவன் திருவடியில் இணைத்து அடிமையாக்க வேண்டும். ஆகையால், வலிந்து வந்து ஆட்கொண்ட பெருமானே வெளிப்பட்டு நின்று, உயிர்களை ஆளாக அமைக்க வேண்டும் எனக் கூறித் திருநீல கண்டம் என ஆணையிடுகிறர். இந்நிலையில் உயிர்களை நோக்கி வந்து, ஆட் கொண்டு நின்ற திருநீலகண்டம் பெருகி வெளிப்பட வேண்டும் என்பது ஞானசம்பந்தப் பெருமான் ஆணை. மேலும், யானும் என்போன்றேரும் அடிமையென நின்றமையும், அதனல் தீவினை தீண்டப் பெருமையும், இப்போது யானும் பிறரும் உமக்கு அடிமையெனநிற்பதும் உண்மையெனில் ஆணவத்தின் இத்தகைய கொடிய செயல் எம்மைத் தீண்டப் பெருததாகுக. இது திருநீல கண்டத்தின் மேல் ஆணை எனக் கூறியருளியதாகக் கொள்ளல் வேண்டும். அவ்வாணையின் வழி, திருநீலகண்டமே வெளிப்பட்டு நின்று, செயல்படுவதாயிற்று. அதனல் நளிர்ச்சுரம் நீங்கப் பெற்றது எனக் கொள்ளல் வேண்டும். திருநீலகண்டப் பதிகம் செவிவழிப் பட்டதும் உயிரிடத்தும் பிறவிடதும் உட்கலந்திருக்கும் திருநீல கண்டசிவம் வெளிப்பட்டுப் பெருகித் தானே, இதுவரையில் தான் சார்ந்திருந்த பொருளைத் தனக்கு அடிமையாகக் கொண்டு அருள் புரியும் என்பது இப்பதிகப் பெரும்பயன்.

திருநெடுங்களப் பதிகம்

ஆணவம் என்ற மூல அழுக்கின் இரு கூற்றுச் செயல்களை வலியிழக்கச் செய்தற்காக ஞானசம்பந்தப் பெருமான் அருளிய பதிகங்கள் இரண்டு. திருநீலகண்டப் பதிகம் ஒன்று; மற்றது திருநெடுங்களப் பதிகம். ஆணவத்தின் முதன்மைச் செயலும், அது தீர்க்கும் வழியும், அதற்கென அமைந்த திருநீலகண்டப் பதிக விளக்கமும் அமைக்கப் பெற்றன. அடுத்து, ஆணவத்தின் இரண்டாவது செயலும் அது தீர்க்கும் வழியும் ஆகிய இவைகளை உட்பொருளாகக் கொண்டது திருநெடுங்களப் பதிகம். திருவியலூருக்கு அடுத்த நீலியில் அருள் வேடங் காட்டிய திருந்திய தேவனுக அமைந்தவன் திருநீலகண்டனே என்ற குறிப்பைத் திருநெடுங்களப் பதிகத்தில்தான் ஞானசம்பந்தர் இணைத்துக் காட்டியுள்ளார். அதன் விளக்கம் முன்பே அமைக்கப் பெற்றுள்ளது.

'எனது' என்ற அடிப்படையில் எழுப்பும் ஒருவகைத் தவருன எண்ணமும், அதன் அடிப்படையில் அமையும் செருக்கும் ஆணவத்

தின் கொடைகள். யான் என்பதும், எனது என்பதும் செருக்கை உண்டாக்குவன. ஆயினும், எனது என்பதே செருக்குக்கு மூலமுதற் காரணம். எனது என்பதே 'யான்' என்ற எண்ணத்தை வலுப்படுத்துவது. எனது என்னும் உடைமை எண்ணத்தால் எழும் குற்ற மறுக்கும் பதிகமே திருநெடுங்களப் பதிகம் எனக்கொள்ள வேண்டும் என்ற நுட்பமமையை, இப்பதிகத்தின் முதல் தேவாரத்தை "மறையுடையாய், தோலுடையாய்" என உடையாய் என்ற சொல்லே அடுக்கி வைத்துக் காட்டும் நிலையிலேயே அருளியிருக்கின்றார்.

திருநெடுங்களப் பதிகத் திருக்கடைக்காப்பில் ஞானசம்பந்தர் தம்மைச் சிரபுரக் கோன் என இணைத்துக் கொள்கிறார். ஏனைத் தலங்களுக் கெல்லாம் தலையாய பெருமையுடையது ஆதலின் சிரபுரம் எனப் பெற்றது. ஞானசம்பந்தப் பெருமானுல் "வாழி மாநகர்ச் சிரபுரம்" என வாழ்த்தப் பெற்ற பெருமையுடையது. தன்னை வணங்கினர்க்கு எல்லாச் செல்வங்களையும் வரையாது வழங்குவதில் தலையாயது என்பதால் சிரபுரம் எனப் பெற்றது.

மாயையினுல் அமைக்கப் பெற்ற உடம்பினுள் தங்கி வாழ்பவர்களாகிய அடியவர்கள் இறைவனை வழிபாடாற்றுகிறார்கள். ஆயினும், தம்மை முற்றுக இறைவன் திருவடிகளுக்கு அடிமையாக ஆக்க முற்படவில்லை. தமக்குள்ள உடைமைகளை எண்ணி, தம்மை இறைவன் திருவடிக்கு உடைமையாக்க ஒருப்படவில்லை. தம் முடைய உடைமைகளாக அமைந்த உடல், பிராணவாயு, மனம் ஆகியவைகள் வறட்டுப் பசுக்கள் என்பதை அறியாமல் அவைகளை வற்றுத பசுக்கள் என எண்ணுவதால் தம்மை உடைமையாக அடிமைப்படுத்த இயலவில்லை. வாயுவை அடக்கி, மனத்தை நிறுத்தி, தம்முடம்பிலேயே ஊறும் அமுதம் மாந்தி வாழலாம் என்ற எண்ணம், உடைமையாக நின்ற உடம்பின் பெருமை ஆகியவை அவர்களை அடிமையாக ஆகவிடாமல் தடை செய்கின்றன. காயத்துள் நின்ற ஞானப்பெரும் பிழம்பினனுகிய சிவபரம் பொருள் அளிக்கும் சிவானந்தத் தேறலைத் துய்க்கும் நிலைக்கு ஆளாகாமல், காயத்துள் மாயக் கள்ளை உண்ண முற்பட்டனர். அற்ப சுகந்தரும் அமுதத்தைத் தவறுன முறையில் சென்று துய்க்க முற்பட்டபோது பெற்ற தண்டனையினுல் இராகு என்பவன் தலையுடன் நின்றுன். பின்னர், அவன் சிவபரம் பொருளைப் பூசித்துப் பேறு பெற்றுன் என்பது சிவபுரத் தலவரலாறு. அதனை நினைவு கூரச் செய்கிறார் ஞானசம்பந்தர். யோகம், தவம் என வேறு வேறு வழிகளை நாடி. மயக்கந்தரும் கள்ளினை உண்ண முற்படாமல் மெய்ஞ்ஞானத் தேறலை எளிதில் அடையலாம் என அறிவுறுத்துகிறார். திருநெடுங்களப் பதிகம் நலத்தால் நாடவல்லபனுவல் மாலை எனப் பெற்றது.

திருநெடுங்களப் பதிகத்தில் குறிப்பிடப் பெறும் அடியவர்கள் இறைவன் பெருமையைப் பேசுகிறார்கள். கொள்கையால் உயர்ந்த நிறையுடையவர்கள், திருந்திய தேவனை இரவும் பகலும் நினைந்து எழுபவர்கள், கூற்றுதைத்தான் பொன்னடியைப் பரவி நாளும்

பூவொடு நீர் சுமக்கும் அடியவர்கள், இறைவன் தாள்நிழற்கீழ் நிலை புரிந்தார்கள் நீங்கி நில்லாதவர்கள், அடியிணை பரவும் நிருத்தர், கீதர், நீறுபூசியவர்கள், நல்ல வாய்மொழியால் இராப்பகலாய் இறைவனை ஏத்தி நைபவர்கள், பொன்னடியின் நிழல் வாழ்பவர்கள், இறைவன் அடியையே நெஞ்சில் வைப்பவர்கள் என்று ஞானசம்பந்தப் பெருமானுல் எடுத்துக் காட்டப் பெறுபவர்களே. இத்துணையளவுக்கு இறைவன் பால் அன்பு கொண்டவர்களுக்கு வரப்பெறும் இடையூறு என்ன? தம்மை முழுமையாக இறைவன்பால் அடிமையாக்கிவிட முடியாமல் அவர்களை ஏதோ ஒன்று தடுக்கிறது. அவர்கள் இறைவன் அடியின்கீழ் முற்றுக அடிமையாதற்கு இயலாதவாறு அவர்களைத் தடுப்பது அவர்கள் அறிவின் பகுதிதான். இறைவன் பெருமையை ஏத்தித் துதிக்கவும், பூவும் புனலும் சுமந்து சென்று பொழிந்து வழிபடவும் இசைவளித்த அவர்தம் அறிவு முற்றுக அடிமையாதற்கு இசைவளிக்கவில்லே. ஏன்? யோகம், தவம், உடல் வளத்தை ஒடுக்குதல் என இவ்வாறெல்லாம் பலவகை முயற்சி செய்து, உடம்பை நிறுத்துதல், மூச்சுக் காற்றை நிறுத்துதல் போன்ற அரிய சாதனைகளில் ஈடுபட்டு, அச்சாதனைகளின் இயல்பையும் பயனையும் விரிவாகக் கூறக் கேட்டகாரணத்தால், படிக்கத் தெரிந்த காரணத்தால் இவைகளையெல்லாம் நாம் பழகுவது எப்போது? பயன் பெறுவது எப்போது? என்ற வினுக்களை எழுப்பிக் கொண்டு, விடைகாணத்துடித்து, ஏங்கி நிற்கும் முறையினுல் இதுவரை இறைவனை நினைத்துக் கொண்டேயிருந்த மனம் மறக்கும் மனமாக அமைந்துவிட்டது. இறைவன் திருவடியை மறவாது நினைத்தல் என்ற ஒன்றை மாற்றி, நெறியல்லா நெறி தன்னை நினைக்குமாறு செய்தது ஆணவத்தின் இரண்டாவது செயல்.

இங்கே, 'பூந்தராய்' என்ற பெயரின் விளக்கமாகத் திருஞான சம்பந்தர் அருளிய இரண்டாவது கருத்தை நினைவு கூர்தல் வேண்டும். சங்கநிதி, பதுமநிதி என்ற இரண்டும் எல்லையில்லாமல் கொடுக்கும் வளமையைப் பெறுவதற்காகத் தம்மை மாலையாக ஆக்கி இறைவனைச் சார்ந்து, அந்நிலை பெற்றது. இது முதலாவதாக அமைந்த கருத்து. அருளனுபவ நிலையை அடிப் படையாகக் கொண்டது. இரண்டாவது உயிரனுபவம் எனப்பெறும் அறிவுநிலை அனுபவம். இங்கே உடல் முழுவதிலும் திருநீறு பூசிய சிவஞானிகளையும், புண்ணியம் பாவம் என்ற வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட நிலையில் செயலாற்றுவதற்கு வேண்டிய இருவினை யொப்பு நிலையில் நின்று உலக எல்லையைக் கடந்த சிவஞானிகளையும் நினைவு கொள்கிறார் திருஞானசம்பந்தர். ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களையும் காரியநிலை, காரணநிலை என்ற இருநிலைகளாலும் அழித்து நின்ற அவர்தம் பெருமைகளை வியக்கிறார். மும்மலம் என்பன மும்புரம். மும்புரத்தின் தலைவர்கள் ஒருசேர எதிர்த்தார்கள். கூறுபட அமைந்த மும்மலம், கூறுபட அமைந்த மூவகைவினை, கூறுபட அமைந்த மூவகைப் பயன், இவைகளை இணைத்துச் செயலாற்றுகிற மூவகை இயல்புடைய மனம், அதனைத் தன்வழியில் இயக்கும் ஆண்மை கொண்ட அறிவு என்பவை மும்புரமும், மும்புராதிகளும்

ஆயின. முப்புரமும் முப்புராதிகளும் தம்முள் எதிர்நிலைத் தன்மை யுடையவை. எனினும், முப்புரங்களைத் தம்வயப்படுத்திய பெருமை முப்புராதிகளுக்கு உண்டு. முப்புரங்களைத் தம்வயப் படுத்திய நிலையில் ஒருவகை ஆணவம் தோன்றுகிறது. அதை ஒட்டிய கன்மம்-செயற்பாடு அடைகிறது. செயற்படுத்த வேண்டிய நிலையில் கருவிகள் தேவையாகின்றன. அவற்றை அமைப்பது மாயை. முப் புரமாகிய மனத்தைத் தம்வயப்படுத்திய அறிவு எனப்பெறும் முப் புராதிகளிடத்தில் தோன்றும் ஆணவம் போன்ற ஒன்று அமைகிறது. இதனை அழிக்கவே, இறைவன் எண்வகை வீரச் செயல்களைச் செய்துள்ளான்.

இங்கே சொல்லப் பெறும் ஆணவம் முன்னதைப் போன்றது அன்று. தலைவன் தொழிலைத் தன் தொழிலாக மாற்றிக் காண வைத்த குற்றம் முன்னது. இது தலைவனை - பரம் பொருளைத் தன்னறிவிற் காண முற்படுவது. தன்னைத் தலைவன் திருவடிக்கீழ் நிறுத்தி, அடிமை யாக்கிய போது நாதன் வெளிப்படுகிறான். பெருகி வெளிப்படும் அவன்கீழ், தன்னை இருக்க வைப்பது என்பதே சிறந்தது. இதுவே, அவனருளே கண்ணாகக் காணல். அவனுள் தன்னை ஒடுக்குதல். அதற்குமாறாக, தன்னுள் அவனை அடக்குதல் அல்லது காணல் என்பதே இரண்டாம் நிலையிலமைந்த ஆணவம்.

முப்புராதிகளை மூன்று கூறுகளாக்கி, அவைகளை ஒன்றென வரிசைப்பட நிறுத்தி அழிப்பதாகிய முறையில், ஒன்றுக்கச் சேரச் செய்து ஒரு கணையால் எரித்தான். அழித்த அப்பெருமான் அறவழி யில் நின்ற, உலகைநிறுத்திய அந்தணனான என்று குறிக்கும் முறை யில் நந்திக் கொடியை உயர்த்தினான். எரிசெய்த ஆற்றல் அறவழிப் பட்டது எனக் காட்டி, அத்தகைய அறமும் அருள் வழிப்பட்டது என்பதைக் காட்ட, ஆனந்தப் பேறு எனப் பெறும் சாந்தம் இதுவே எனக் கருதும் வகையில் அருள் என்னும் நீறிற் குழைத்த திருநீற் றினைத் திரிபுண்டரமாக அமைக்கிறான். திருநீற்றினைத் தூளாக (உத்தூளனமாகப்) பூசுகிறவர்கள் இறைவனின் ஆற்றலையும், அறத் தையும் ஏற்கிறார்கள். அவனை அருளாளனாக நினைத்தால், அருளே உலகை ஆள்விப்பது என எண்ணினால் திரிபுண்டரமாகத் (மூப் படைக் கோடுகளாக) திருநீற்றை அணிவார்கள். திருநீற்றைத் திரிபுண்டரமாக அணிபவர்கள் இறைவனின் அருளை உணர்ந்து அவனுக்குத் தம்மை அடிமையாக்கிக் கொண்டவர்கள் என்பது கருத்து.

அருளானந்தப் பேறு என்பதே சாந்தம். அருளானந்தப் பேறு என்று திருநீற்றினை ஏற்றவர்கள் அதனைத் திரிபுண்டரமாகத் தரிப்பர். அவ்வாறு தரிப்பவர் தம்மை அவனுக்கு முற்றாக அடிமையாக்கிய வர்கள் என்பது கருத்து. திருநீற்றினை உத்தூளனமாக உடல் முழுவ தும் அணிபவர்கள் இறைவனின் தலைமையை, ஆற்றலை, அறவழியில் அவன் நடத்தும் செயல்களை ஏற்றவர்களே, இறைவனைத் தலைவனாக ஏற்றலும், தம்மை அவன் அடிமையாக ஆக்காமையே இங்குள்ள

குறை. 'பூந்தராய்' என்ற சீகாழியில் திருநீற்றினை உத்தூளனமாகப் பூசுகிறவர்கள், இறைவனைப்பற்றிய ஞானமுடைய சிவஞானிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இறைவன் மூலப்பொருளாக இருக்கிறானே யொழிய, அடைந்து துய்க்கும் அருளானந்தத் துய்ப்புப்பொருளாக அமையவில்லை. அவ்வாறே, இருவினை ஒப்பு என்ற மனநிலை பெற்றவர்கள் அறத்தின் வழியில் நின்றவர்களே சிவபரம் பொருளை அறத்தின் நாயகனைக் கண்டார்கள், சிவஞானிகளே. ஆனால், ஞான அனுபவம் என்ற உயிரனுபவம் மட்டுமே இங்குண்டு. இந்த உயிரை மாற்றி அமைத்து, இறைவன் திருவடிக்கீழ் அடிமையாக்குதல் வேண்டும். அடிமை எனத் தம்மை ஆக்காத ஒரே ஒரு குறையினால் அவர்கள் இடர்களை அடைகிறார்கள். அவர்தம்மேல் இரக்கங் கொண்டு, அவர்தம் இடர்களைய வேண்டும் எனத் திருநெடுங்களப் பதிகத்தால் வேண்டுகின்றார். அடிமைப்படுத்தி அமைதியுற இருத்தல் என்ற ஒரே ஒரு செயலைச் செய்யாமையால், அருளானந்த இன்பத் துய்ப்பை இழக்கிறார்கள். அவர்கள் இன்பம் பெற வேண்டும் என அருள் நிலையில் நின்று பாடிய காரணத்தால் இப்பதிகத்தை "நலத்தால் நாடவல்ல பனுவல்" என்று குறிப்பிட்டார்.

திருஞானசம்பந்தர் திருநாகேச்சுரப் பதிகம் அருளும் நிகழ்ச்சி பின்னர் நிகழ்வதேயாயினும், வினைக் கொள்கை பற்றிய விளக்கமும், வினைக்கொள்கையினை முற்றுக அழித்தற்கு உரிய அருள் நலம் அருளுதல் என்ற பயனும் அமைய நின்ற பதிகங்களாதலின் இயைபு பற்றி இங்கேயே இணைக்கப் பெற்றது.

திருநாகேச்சுரத் திருப்பதிகம் இரண்டு. திருநாகேச்சுர நிகழ்ச்சியானது சீகாழியின் ஏழாவது பெயராகிய சிரபுரத்துடன் இணைந்ததே. ஆயினும், இறைவனைச் சேர்ந்த மாலையானது சிவமணத்துடன் புதுமைப் பொலிவும் பெற நின்ற காரணத்தால் பூந்தராய் என நின்றது போல ஒருவகைப் பொலிவினை வினைசெய்தானுக்கு அமைத்துக்காட்டுவது திருநாகேச்சுரப் பதிகமாதலின் அது பூந்தராய்ப் பகுதியுடனும் இணைவதாயிற்று.

திருஞானசம்பந்தரேயன்றி, சேக்கிழாரும் மிகப் பெரும் ஈடுபாடு கொண்டு வழிபட்டும் திருப்பணி செய்தும் போற்றிய தலம் திருநாகேச்சுரம்.

தேயமெல்லாம் நின்றேத்தும் திருப்பாதிரிப்புலியூர் என்று திருப்பாதிரிப்புலியூரைப் பாடுவது போன்று, திருஞானசம்பந்தர் திருநாகேச்சுரத்தைத் "தேசமாக்கும் திருக்கோயில்" என்று சிறப்பித் தருளுகின்றார். உலக ஒருமைப் பாட்டினை "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற தொடராற் கூறுவது ஒருவகை நோக்கு. அரசுப் பணியாளர் ஒருவர் இடமாற்ற ஆணை காரணமாகப் பல்வேறு இடங்களுக்குச் சென்று பணியாற்றுவார். அவர் அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெறும் போது, தம் பணியை ஒருமையுணர்வுடன் எண்ணினால் அவர் அரசுக்கு உரிய நாட்டின் எல்லாப் பகுதிகளிலும்

பணியாற்றியிருப்பாராதலின், யாதும் அவர் பழகிய ஊரே, எல்லாரும் அவர் தம் உறவினரே எனக் கருதும் நிலை உண்டாகும். அவ்வாறே, ஊழின் வழியில் செல்லும் உயிர் எடுத்த எல்லாப் பிறவிகளையும் இணைத்தால், அவ்வுயிருக்கு எல்லாம் அறிமுகமான ஊரே, எல்லாரும் முன்பழகிய உறவினர்களே. இது ஊழ்வினைக் கொள்கையின் அடிப் படையில் எழுந்த நோக்கு. ஆனால், இங்கே, திருஞானசம்பந்தர் கூறுவது உலக ஒருமையை நோக்கிய சமுக ஒருமைப் பாட்டு உயர்வுக்குரிய பணியை அடிப்படையாகக் கொண்டது.

வினைக் கொள்கையின் வேறு ஒரு பகுதி இங்கே திருஞான சம்பந்தரால் ஆராயப் பெறுகிறது.

உலகில் உள்ள அசையும் பொருள் அசையாப் பொருள் ஆகிய எல்லாவற்றிலும் சிவம் விளங்கிப் பெருகி, சிவமணமும் சிவஒளியும் பரவி நிற்கும் திருத்தொண்டினை முற்றுகச் செய்து முடிப்பதற்காக இவ்வுலகுக்கு வந்தவரே திருஞானசம்பந்தர் என்பது முன்பேயே விளக்கப் பெற்றுள்ளது. "தாவில் சரா சரங்களெல்லாம் சிவம் பெருக்கும் பிள்ளையார்" என்று அவர் இவ்வுலகிற்கு வந்ததன் காரணத்தை அமைத்துக் காட்டுகிறார் சேக்கிழார்

தொண்டு நெறி முன்னுக, திருத் தொண்டு நெறி பின்னுக வரும் நிலை முன்னே விளக்கப் பெற்றது. கருவி கரணங்கள் உடல் முதலியன உயிரில் ஒடுங்க, உயிர் இறையடியில் ஒடுங்குவது தொண்டு நெறியில் தொடங்கி, திருத் தொண்டு நெறியில் சென்று முடியும் நிலை. வேறு ஒரு முறையும் உண்டு.

திருத்தொண்டு நெறி பெருகவே, தொண்டு நெறியும் அதற் கேற்பத் தன்னை இணைத்துக் கொள்ளும் முறை. இவ்வகையில் எல்லாப் பொருளிலும் உட்கலந்து ஒடுங்கியிருக்கும் சிவம் மேற்பட்டு விளங்கவே, உயிரும் உடலும் தாமே அதனுள் ஒடுங்கி விடும் நிலை. திருத் தொண்டு நெறியால் சிவம் மேலிட்டுப் பெருகிய நிலையில் தொண்டு நெறிக்குரிய பயனுகிய உடல் உயிரிலும், உயிர் இறையடி யிலும் ஒடுங்கி நிற்கும் முறை அமையவில்லையானால், உட்கலந்து இணையும் ஒற்றுமையின்மையால் இடர்ப்பாடுகள் உண்டாகும்.

திருஞானசம்பந்தர் தம் அருளனுபவத்தால், அருளுரைகளால் திருத் தொண்டு நெறியைச் செயற்படுத்தவே, அனைத்திலும் உள்ள சிவம் பெருகி வளர்ச்சியுறுகிறது. ஆனால், உடலும் உயிரும் அடிமையாகும் தொண்டு நிலை வளர்ச்சியுறவில்லை. தொண்டு நெறி வளர்ச்சியை நிறைவுறுத்தும் பணியை அடிப்படையாகக் கொண்டதே திருநாகேச்சுரப் பதிகங்களின் பயன்.

வினைக் கொள்கையைத் தமிழகம் சிறப்பாக ஆய்வு செய் திருக்கிறது. இணைத்துக் காணுத இழிநிலை இன்னும் தமிழக மக்களின் அறிவை அலைக்கழிக்கிறது. எந்த ஒரு வினையும் செயற்படுத்தப்பட வேண்டுமானால் அதற்கு அடிப்படைக் காரணங்கள் எட்டு. வினையும்

ஒரு காரணம். எழுதுதல் என்ற வினையைத் தெரிந்து செயற்படுத்த வல்லஞக இருப்பதனுலேயே ஒருவன் அவ்வினையைச் செய்ய முற்படுகிருன். எனவே, வினை நிகழ்ச்சிக்கு வினையும் ஒரு காரணம்.

நடத்தல், படித்தல் என்பன போல வேறுபட்டு நிற்கும் வினைகளைக் கணக்கெடுத்து இத்துணை என அறுதியிட்டுச் சொல்ல முடியுமா? முடியும் என்று அறை கூவுகிறது தமிழகத்துச் சிந்தனை. உயிரும் உடம்பும் இணைந்து வினைகளைச் செய்யும் போது, உயிர் தன்னுடைய பொறுப்பில் நின்று, உடம்பைக் கருவியாக அமைத்துக் கொண்டு செய்யும் வினைகள் பதினென்று. அவ்வாறே உடம்பு தன்னுடைய பொறுப்பில் முற்பட நின்று, உயிரின் துணை கொண்டு செய்யும் வினைகள் பதினென்று. மொத்தமே இருபத்திரண்டு தாமா? என வினவெழுப்ப வேண்டுவதின்று. பலவாகப் பெருகி நிற்கும் எல்லா வினைகளும் இங்குள்ள இருபத்திரண்டனுக்குள் இணைந்து விடும். மேலும் ஒரு வினை உண்டு. உயிரும் உடம்பும் தன்னிலையிற் குறுகி, மானமிழந்து செய்யப் பெறுவது. அதுவும் வினையே யாயினும் இழிவுடையது.

உயிர் முன்னின்று இயக்கும் வினை அறிவு சார்ந்த வினை. மெய் முன்னின்று இயக்கும் வினை உணர்ச்சி சார்ந்த வினை. இங்கே கூறப் பெறும் இருபத்திரண்டு வினைகளையும் நலம் பெறுத்தவே திருஞான சம்பந்தர் அவதாரம் செய்தார் என்று குறிக்க வரும் சேக்கிழார் இருபத்திரண்டு காரணங்களை எடுத்துக் காட்டி, இவைகளைச் செயற் படுத்த இவ்வுலகுக்கு வந்தவரே திருஞானசம்பந்தர் என்று குறிப்பிடு கின்ருர். பெரியபுராணம், திருஞானசம்பந்தர் புராணத்தில் 22, 23, 24, 25, 26 என்ற ஐந்து செய்யுட்களிலும் இவ்விருபத்திரண்டு காரணங்களைக் குறிப்பிட்டுக் காட்டுகின்ருர்.

இனி, உலக ஒருமைப்பாட்டை உள்ளிட்ட பொது நலப் பணியை மேற்கொள்ள விரும்பும் ஒருவன் இங்கே கூறப் பெறும் வினைகளில் எவைகளை மேற்கொள்வது? இங்கே குறிப்பிடப் பெறும் எல்லா வினைகளையும் எல்லா உயிர்களும் மேற்கொண்டு செய்யும் ஆற்றல் பெற்றிருக்க மாட்டா. ஒவ்வோர் உயிரிலும் தனித்தன்மை வாய்ந்த சில வினைகளே பதியப் பெற்றிருக்கும். பொதுத் தொண்டினை மேற்கொள்ள முற்படும் ஒருவன் இங்கே கூறப் பெறும் இருபத் திரண்டு வினைகளிலும் வல்லனுதல் என்பது இயலாது. அப்படியானுல் எந்த வினையின் மூலம் உலக ஒருமைப்பாட்டு முன்னேற்றம் கருதித் தொண்டாற்றுவது? உலக ஒருமைப்பாட்டு நிலையில் பொதுமைத் தொண்டினை அமைக்கும் கொள்கையை வகுத்து, அதற்கு இயக்க வடிவு கொடுத்த அருளாளர்கள் இருவர்; அவருள் ஒருவரே திருஞானசம்பந்தர்.

பூதபரம்பரை பொலிதல், தாவில் சராசரங்களெல்லாம் சிவம் பெருக்குதல் எனக் கொள்கை விளக்கம் கூறி, அதனைத் திருத் தொண்டு நெறி என நெறிப்படுத்திக் காட்டி, திருநெறிய தமிழ் எனப்

பெறும் பதிகப் பெருவழி என்று இயக்க வடிவம் அமைத்துக் காட்டினர்.

இனி, உயிரின் உள் நின்ற சிவம் பெருகும் போது உயிரும் உடலும் தத்தம் வினைகளைச் செய்தல் எனப் பெறும் தனித் தன்மைகளை இழக்க வேண்டும். ஒவ்வோருயிரும் தத்தம் பங்காக அமைந்த பதிஞெரு வினைகளில் எவ்வெவ் வினைகளைப் பெற்றிருக் கின்றனவோ அவைகளை இழந்தால் தான் அவ்வுயிர் சிவத்தின் திருவடியில் அடிமையென நிற்க முடியும். இவ்வாறே உடம்பும். உயிரும் உடம்பும் தத்தம் தனித் தன்மைகளை இழப்பதற்காக அமைந்ததே தொண்டு நெறி.

உயிரானது தன்னுடைய தனித் தன்மையை உறுதிப்படுத்தும் வினைகளைத் தம்மிடமிருந்து நீக்க வேண்டும். அவ்வாறே உடலும் நீக்க வேண்டும். தனித் தன்மை நீங்கிய நிலையில் அவை இரண்டும் இறை திருவடியில் அடிமையமைத்துவிடும். சிவம் பிரகாசிக்கத் தொடங்கிய போது, அச் சிவவொளியை உயிரும் உடலும் வெளிப் படுத்தும் நிலை பெற்று விடும். சிவமணம் கமழ, சிவபரஞ்சோதி பொலிய ஒவ்வொருவரும் சிவமாகவே விளங்குவர். தனிச் சொத்தாக, தன்னுடைய பரமனுக்குரிய கோயிலாக இருந்த உடம்பு இப்போது பொதுச் சொத்தாக அமைகிறது. தனியுடைமை இப்போது 'தேயம்' என்னும் பொதுவுடைமையாகிறது. அனைத்துயிரிலும் பொருளிலும் கலந்திருக்கும் சிவத்துடன் இணைந்து தொடர்பு கொள்ள முடிகிறது. இதனாலேயே, உலக ஒருமைப்பாட்டுரிமை உண்டாகிறது. சிவ மானது பெருக நின்ற ஒருவர் தம்மூடம்பு சிவமாகவே திகழ்வதால் சிவமணத்தையும் சிவ ஒளியையும் பிற உயிர்களுக்கும் பொருளுக்கும் செலுத்த வல்லவராகிறார் ஒருவர் உடம்பிலிருந்து வெளிப்படும் அருட்சிவமணமும் ஒளியும் பிற உயிர்களையும் பொருள்களையும் அம்மயமாகவே ஆக்குகின்றன. இவ்வகையில், தனியாக நின்ற அவர் பொதுமையில் நிற்கும் தேயம் ஆகிறார். தன்னையே "நாகேச் சுரம் தேசமாக்கும் திருக்கோயிலாக் கொண்ட செல்வன்" என்று ஞானசம்பந்தர் திருநாகேச்சுரப் பதிகத்தில் எடுத்துக் கூறுகிறார்.

இனி, உயிர்கள் தம் வினைகளை நீக்குவதற்குத் துணை செய்வது இறைவனை ஏத்துதலே. உயிர் அறிவுடன் தொடர்புடையதாதலின், ஒலியால் ஏத்துதல் வேண்டும். அப்போதுதான் அது தனக்குரிய பதிஞெரு வினைகளில் எவை எவைகளைத் தம் சிறப்பு வினைகளாகக் கொண்டிருந்ததோ அதனை அழிக்க முடியும். அவ்வாறே, உடம்பும் தான் முன்னிட்டுச் செய்யும் வினைகளை அழிக்க வேண்டுமெனின் அது தன்னை (உடல்) உழைப்பில் ஈடுபடுத்த வேண்டும். இந் நிலையில் உழைப்பு என்பது இறைவனுக்குப் பூவும் புனலும் சொரிந்து வழிபடுதலே.

உயிரானது தன்னுடைய வினைகளை நீக்கி, தன்னைச் சிவபரம் பொருளின் திருவடியில் அடிமையாக்குவதற்கு உரிய நெறியினை அருளும் முறையில் "பொன் நேர் தரு" என்று தொடங்கும்

திருநாகேச்சுரப் பதிகம் அமைகிறது. இப்பதிகம் முழுவதிலும் மன்னே என, அறவா என, செல்வா என, பகவா என, தலைவா என, அரைசே என, சடையா என, தாயே என, உறைவாய் என, சிலம்பா என என்று ஏத்திப் பாடும் முறை அமையுமாறே அருளியிருக்கிறார். அப்பதிகத் திருக்கடைக் காப்பினுள், நாகேச்சுரத்து அரனைச் சொல மாலைகள் சொல்ல, நிலா வினையே என்று அமைக்கிறார்.

அவ்வாறே, 'தழைகொள் சந்தும்' என்று தொடங்கும் திருநாகேச்சுரத்து இரண்டாம் பதிகம் முழுவதிலும் தொழுது வணங்குதலே பேசப் பெறுகிறது. இப்பதிகத் திருக்கடைக் காப்பினுள், பனுவல் இவை பத்தும் வல்லார்கள் என்று குறிப்பிடப் பெற்றுள்ளது. சொலல் வல்லவராதல் அன்றி, செயல் வல்லவராதல் வேண்டும் என்பது அதன் கருத்து.

உள் நின்ற சிவம் விளங்க, உயிரும் உடலும் ஏத்தியும் வழிபட்டும் தம்மை அடிமையாக ஆக்கிய போது, அவற்றின் மேல் சிவம் பிரகாசிக்கும். அதுவே திருவருட் பொலிவு. அத்திருவருட் பொலிவே தேசமாக்கும் ஆற்றலுடையது. திருவருட் பொலிவு உண்டாகும் போது பகைப் பொருளும் பகையியழந்து ஒன்றுபடும். அவ்வகையில் அவர்களுக்கு உயிரனுபவச் செயலோ, உடலனுபவச் செயலோ இல்லை. ஆகையால்

> ''நாளும் நாதன் அமர்கின்ற நாகேச் சுரம் நண்ணுவார்
> கோளும் நாளும் தீயவேனும் நன்றும் குறிக் கொள்மினே''

என்று கூறியருளினார். நாகேச்சுரத்து அழகர் பாதம் தொழுது ஏத்த வல்லார்க்கு அழகு ஆகுமே என்றார். திருவருட் பொலிவாகிய அத் திருவருளழகை, இந்நெறி நின்ற எவரும் தத்தம் கண்ணினால் காண வல்லர் ஆவர் என்றார். சிவமணமும் சிவப் பொலிவும் அமைந்த சிவனடியார் திருவுருவமே திருவருளழகை வெளிப்படுத்த வல்லது. திருவருளழகை நம் கண்ணாலேயே பார்க்க முடியும் என்று அறுதியிட்டுரைத்தார் ஞானசம்பந்தர்.

சிவம் பெருக, அருளனுபவம் நிறைவுற, திருவருட் பொலிவு வெளிப்பட, திருவருளழகு பொழியும் நீலத் தோன்றிய சிவனடியவரிடத்தில் நாளும் கோளும் வந்து பணி கேட்கும் என்று கூறியது கோளறு பதிகக் கருத்து எனக் கொள்ளல் வேண்டும்.

முத்துப் பந்தர் முன்னி வந்துறல்

திரு நெடுங்களம் முதலாய பதிகளை வணங்கிக் காவிரித் தென் கரைத் திருப்பதிகளை முறையுற வணங்கி வரும் ஞானசம்பந்தர் திருவலஞ்சுழிவாணரை வந்து வழிபட்டுப் பதிகம் பாடுகின்றார். திருவலஞ்சுழித் தலத்துப் பெருமையை எண்ணி எண்ணி வியக்கிறார் ஞானசம்பந்தர்.

'பள்ளம் தாழுறு புனல்' என்ற மணிவாசகத்துக்கு ஏற்ப, பள்ளம் கண்ட வழி விரைந்தோடுவது தண்ணீரின் இயல்பு. தீயின் இயல்பு சுழித்து மேல் எழுவது. ஆனால், பிலம் (மடு) ஒன்றினுள் நுழைந்து மறைந்து விட்ட காவிரி நீர், வலமாகச் சுழித்து மேலோங்கி வெளிப்பட்ட இடம் திருவலஞ்சுழி. திருவலஞ்சுழிக் காவிரித் தண்ணீர் திருவருள் நன்னீர் எனச் சுட்டுகிறார். ஞான நன்னீர்; ஞானமும் வீடும் நல்கும் திருவருள் நன்னீர். அதைக்கண்டதும் சுவாமிகள்

> "என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து
> முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
> மன்னு காவிரி சூழ் திரு வலஞ்சுழி வாணனே வாயாரப்
> பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும் வழிபடும் அதனலே"

என்று வியந்து பதிகம் அருளுகிறார். பின்னர், பழையாறை மேற்றளியை வணங்கி, திருச்சத்தி முற்றத்துறையும் பெருமானை வணங்கி, திருப்பட்டீச்சுரப் பெருமானை வணங்கும் விருப்புடன் விரைகிறார். அப்பொழுது முதுவேனிற் பருவ நண்பகல் ஆதலின் வெப்பம் அதிகமாக இருந்தது. அப்போது, இறைவன் திருவருள் இது எனக் கூறிக்கொண்டே சில பூதங்கள் முத்துப் பந்தர் ஒன்றை எடுத்துக் கொண்டு வந்து, ஞானசம்பந்தர் அவர் தம் அடியவர்கள் மேல் வெய்யில் படாதவாறு பிடித்தன. "எம்மை விடுத்து அருள் புரிந்தார் பட்டீசர்" என்று கூறின.

வெண் கொற்றக் குடை நீழலில் அரசன் உலகத்துயிர்களை அற வழியிற் காப்பது போல, ஞானசம்பந்தர் அருளின் தண்ணிழலில் உலகத்துயிர்களைக் காத்து, அவ்வுயிர்களிடத்திலிருந்து சிவம் பெருக்கும் தொண்டினை மேற்கொண்டவர் என்றும், கடவுளை யேயன்றித் திருவருளின் அழகை இவ்வுலகில் கண்ணுரக் காணவும் காட்டவும் வேண்டி வந்து நின்ற அருட் குரு என்றும் விளக்கும் வகையில் வந்து நின்ற அருளியல் நிகழ்வே முத்துப் பந்தர் அருளிய வரலாறு.

இத்தலப்பின் தொகைப் பொருள்

சிவஞானப் பாலமுதம் அருந்தி, சிவஞான அனுபவம் பெற்றுத் தினைத்து நின்று, சிவஞானசம்பந்தராய் உயிரனுபவம் பெற்றுச் சிறந்த ஞானசம்பந்தர், திருவருளனுபவம் பெறுதல் என்ற வளர்ச்சிப்படியில், முதற்படியில் நின்று, முன் ஐந்துபடிகளில் பெற்ற சிவஞான அனுப வமும் இரண்டாம் வகைப்படியாகிய அருளியற்படியின் முதற்படியில் நின்று அருளனுபவமும் இணையப்பெற்ற நிலையை உட்பொருளாகக் கொண்டது இத்தலப்பு. இறைவனைக் கண்டதும் காட்டியதும் சிவ ஞானப் பேற்றின் விளைவு. திருவருளழகைக் காண்பதும் காட்டுவதும் அருளனுபவத் தொண்டு, தொண்டு நெறியிலிருந்து திருத் தொண்டு நெறிக்குச் சென்று வளர்த்தல் என்பது பொது முறை. மாறுக, அனைத் திலும் கலந்துள்ள சிவபரம் பொருளைப் பெருக வைப்பதை முன்னர்ச்

செய்து, அப்பொருள் பெருகி வீசும் சிவபரஞ்சோதியில் உயிரையும் உடலையும் விளைகெட்டு அடிமை பேணவைத்து, அதன் மூலம் சிவ பரஞ்சோதி உடலிலும் பரந்து விளங்க, அதுவே திருவருட் பொலி வாக அமையவைப்பது. அப்போது தனியொருவன் தேசமாகிருன் — உலகமாகிருன். அவ்வாறு ஒவ்வொருவனும் தம்மை உலகமாக்கி, உலக ஒருமையை உள்ளிட்ட சமுதாயத் தொண்டினை மேற் கொள்வது திருத் தொண்டு நெறி என உலக ஒருமைப் பாட்டுரிமைச் சமுதாயத் தொண்டினைக் கொள்கையாக, நெறியாக, இயக்க வடி வமைந்த செயல் முறைத் திட்டமாக அமைத்துக் காட்டிய பெருமை திருஞானசம்பந்தர்க்கே உரியது.

திருத்தொண்டர்களின் பொலிவே திருவருட் பொலிவெனும் நிறை பேரழகு என்றும், அவ்வழகினைக் கண்ணுள்ள அனைவரும் காணும் நிலை பெறுவர் எனவும் கூறித் திருவருள் நிழலில் உலகத் துயிர் — உலகத்தை வாழவைக்க வந்த அருட்குரு என்பது விளக்கப் பெற்றது.

மும்மலம், ஆணவம், கன்மம், மாயை, விளைக்கொள்கை ஆகியவை பற்றிய விளக்கம் அமைக்கப் பெற்றது. தொண்டு நெறி யில் உயிர் ஞான அனுபவம் பெறும். அதில் ஒரு குறை உண்டு. திருத்தொண்டு நெறியில் நின்ற காலத்து அத்தகைய குறை முற்றுக நீக்கப் பெறுகிறது என்ற உண்மையும், திருநீலகண்டமே திருவருள் நிலை என்ற நுட்பமும் அமைக்கப் பெற்றன. திருவருள் நிலையை விளக்கவந்ததே பூந்தராய்.

இத்தலைப்பின் சிறப்பு

சேக்கிழார் பெருமான் கருத்தின் வண்ணம் திருஞானசம்பந்தர் நிகழ்த்தியருளிய திருவருட் செயல்களுள் முதலாவது முயலக நோய் தீர்த்தருளினமையே. திருவியலூரில் அருள் வேடங் கண்டது முத லாகப் பல அருளியல் அனுபவங்கள், ஐயாற்றுத் தலத்தில் ஐந்தும் ஆறும் இணைதல் - என்பன போன்ற சிறப்பியல்புகளைக் கொண்டது இப்பகுதி.

திருப்பட்டீச்சுரத்து முத்துப்பந்தர் முன்னுற்று நிற்றல் என்பது அருளின் நீழலில் அடியவர் இருத்தல் என்பதைக் குறிக்கோளாக வைத்து ஏனைய நிகழ்வுகள் அமைகின்றன. முத்துப்பந்தரின் கீழிருத்தல் என்பது ஒரு பொருள் பொதிந்த வரலாற்றுச் செய்தி. திருவருளும் குருவருளும் இணைய நிறுத்தியே விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

ஐவகைநிலையில் நிற்கும் சதாசிவப்பொருளும் ஆரும் நிலையில் நின்ற திருநீலகண்டப் பரம்பொருளும் இணைந்து நின்ற நிலையை விளக்குவதே திருவையாறு. ஐந்தொழில் நிலையும், ஆரும்நிலையில் அமையும் அருளாட்டு ஐந்தன் நிலையும் இணைய நிறுத்திய நிலையில் உயிரானது சிவஞான அனுபவம் பெறுகிறது. இதுவே சீவன் முத்த

நிலைக் காட்சி. இதுவே தொண்டு நெறியும் திருத்தொண்டு நெறியும் இணைந்து நிற்கும்நிலை. தொண்டு நெறியில் கடந்த படிகள் ஒருவகை. அவையெல்லாம் இவ்வாய்வு நூலின் முற்பகுதி. அவைகளையும் உள்ளிட்ட ஆருவது படியே பூந்தராய் என்னும் திருத்தொண்டு நெறியின் முதற்படி. இருநிலைகளையும் இணைத்து, மக்களாற்ற வேண்டிய கடமைகளை அருளிச் செய்யத் தொடங்குவது இப்பகுதியில்தான்.

திருத்தொண்டு நெறியும், அருளியல் நிகழ்வுகளும் இங்கேதான் தொடங்குகின்றன என்ற காரணத்தாலேயே, திருஞானசம்பந்தர் அருளிய பாலை நெய்தல் பாடியது என்ற திருநனிபள்ளி நிகழ்ச்சியைச் சேக்கிழார் கூறமுற்படவில்லை. ஆயினும், திருப்பாச்சிலாச்சிராமம் தொடங்கிப் பட்டீச்சுரம் வரையில் அமைகின்ற செய்திகளை இணைத்துக் காண வேண்டும்.

சீகாழிப் பதிக்குரிய பெயர்கள் பன்னிரண்டில் பத்தாவதாகிய காழியுடன் இணைத்து, இறுதிநின்ற பெயர்களாகிய கொச்சைவயம் கழுமலம் என்ற இரண்டையும் கழியநின்ற காரணத்தால் காழி என்று பத்தாவதாகிய பெயர் அமைந்தது எனக் கொண்டு, அவ்விரண்டையும் முன்னுள்ள படிகளிலேயே அமைக்கிறார். அவ்வகையில் பதினொன்று பன்னிரண்டு எனக் கழிய நின்ற இரண்டு படிகளைப் பற்றிய விளக்கம் மலநீக்கம் எனக் கொண்டு, அவைகளைப் பாச்சிலாச்சிராமம் முதலாகத் தெளிவுறுத்துகிறார். மலநீக்கம் அமைந்த பிறகு, உயிரானது முத்திநிலையில் இருக்கும் அனுபவநிலையை உணர்த்தும் நிலையே முத்துப் பந்தர் முன்னுற்று நிற்கும் நிலை.

திருவலஞ்சுழிக்குப் பின் திருஞானசம்பந்தர் பழையாறை, திருச்சத்திமுற்றம் ஆகியவைகளை வணங்கிக் கொண்டு பட்டீச்சுரம் நோக்கிச்செல்கிறார். இங்கே, திருஞானசம்பந்தர் முத்துப் பல்லக்கில் ஏறிச் செல்லாமல் நடந்தே சென்றிருக்க வேண்டும். அடியவர்களும் தாமுமாக இணைந்து செல்லும் நிலையில் முத்துப்பந்தர் வந்தமைகின்றது.

முதுவேனில் வெப்பம் தீர, நிழலில் அனைவரும் இணைந்து செல்கின்றனர், இதுவே, முத்திநிலையில் இறை இணையடி நிழலில் அனைத்துயிர்களும் நின்று இன்புறும் நிலை. திருஞானசம்பந்தர் பல்லக்கில் சென்றிருந்தால் வேறுபாடு தெரிந்திருக்கும். முத்திநிலையில் அனைத்துயிர்களும் ஒக்கநின்று இறையடி நிழலில் இன்புறுகின்றது. முதுவேனில் வெப்பம் என்பது ஆணவத்தாக்குதல். வெப்பமோ வெப்பத்துக்குக் காரணமாகிய காலமோ என்ற எதுவுமின்றி அருளின் நிழலில் உயிர்கள் தங்கி இன்புறும். முத்துப் பந்தர் திருஞானசம்பந்தருக்காக மட்டும் அருளப் பெறவில்லை. அவர் ஒருவருக்கு மட்டும் நிழல் தருவதாக - தருவதற்காக அமைக்கப் பெற்ற ஒன்றன்று. முன்னமேயே, குடை பல்லக்கு முதலியன கொடுக்கப் பெற்றுள்ளன. இது திருவடி நிழல் எனப் பெறும் திருவருள்நிலை. அருளானந்த இன்பத் துய்ப்பினை அமைக்கும் முத்தி நிலையை உணர்த்தும் நிலையே

முத்துப் பந்தர் நிலை. எனவே, முத்தியின்பத்தையும், திருவடி நிழலில் இன்புறு தன்மையையும் இது என உணரவும், ஏனையோருக்கு உணர்த்தவும் அமைந்த வாய்ப்பினைத் திருஞானசம்பந்தர் பெறுகிறார். எனவே, உயிர்களின் முடிந்தநிலைக் குறிக்கோளின்பமாகிய முத்தியின்பத்தையும் உணர்ந்தும் உணர்த்தியும் நின்ற வகையில் தோடுடைய செவியனைக் கண்டது முதலாக முத்தியின்பத்தையும் கண்டு காட்டியது ஈறாக, அனைத்து அருளியல் வாழ்வு விளக்கங்களையும் அமைத்துக் காட்டிய வகையில் முழுமைபெற்ற நிறைநிலை சார்ந்த அருட்குருவாக அமைகிறார் திருஞானசம்பந்தர். இத்தகைய அரிய விளக்கத்தைத் தன்னுள் அமைத்துக் கொண்ட வரலாற்றுப் பகுதியே இது. இப்பகுதிநிகழ்வுகளை அருளியல் அடிப்படையில் இணைத்துக் காண வேண்டும். அதற்கு முயலகநோய் முதலாக அனைத்தையும் இணைக்க வேண்டும்.

அறிவியல், அறவியல், அருளியல் என்ற மூவகைத் துறைகள் இன்று மக்கள் வாழ்வில் அமையும் பல்வகை நிகழ்வுகளுக்கு உரிய விளக்கங்களை எழுப்பவும் விடை சொல்லவும் செய்கின்றன. திருஞான சம்பந்தர் வரலாற்றைச் சிந்திப்பவர் பலர் முயலகநோயே இக்காலத்தில் இல்லாதபோது அச்செயல் பற்றிய செய்தியும் தேவையற்றதே என்பர்.

முயலகநோய் பற்றிய குறிப்பு முன்னையும் அமைக்கப் பெற்றது. முயலகநோய் என்பது ஆணவமே. இன்மை என்பதைப் பாவி என்ற மனிதவுருக் கொடுத்துக் காட்டியது போல் ஆணவம் என்பது முயலகன் என்ற மக்கள் உருவிலும், பெரிய பாம்பு உருவிலும் காட்டப் பெற்ற பெருமையுடையது. திருப்பாச்சிலாச்சிராமத்தில் திருஞானசம்பந்தர் முயலக நோயைத் தீர்த்தமையால் அவ்வூர்க் கோயிலில் நடராசர் திருவடியின் கீழ் முயலகன் இல்லை. அதற்குப் பதில் பாம்பு அமைக்கப் பெற்றுள்ளது. முயலகனும் பாம்பும் ஆணவத்தைக் குறிப்பிடுவதற்காக எடுத்துக் காட்டப் பெறும் அடையாளங்கள். முயலக நோய் முற்றுக நீக்கப் பெற்ற நிலையில் பாம்பும் இருக்க வேண்டியதில்லையே என்ற வினா எழும். எனவே, ஆணவத்தை முயலகனுக அமைத்துக் காட்டும் நிலை வேறு, பாம்பாக அமைத்துக் காட்டும் நிலை வேறு, பாம்பைக் காலினால் மிதிப்பதாக அமைக்காமல், இறைவன் திருமேனியில் தவழ்ந்து செயற்படுவதாகக் காட்டும் நிலை வேறு என்றும் கொள்ளல் வேண்டும்.

ஆணவமானது உயிரை முழுமையாகப் பற்றியிருந்த காலம் ஒன்று உண்டு. அப்போது உயிருக்குச் செயலே இல்லை. இறைவன் அருளால் மேற்கொண்ட உதவியின் துணையினால் மெல்லத் தம் கருவிகரணங்களைச் செயற்படுத்தி, இவ்வாறே பல பிறவிகளில் அறிவு முதலிய எல்லாவற்றாலும் வளர்ச்சி பெற்று, ஆணவத்தின் பிடியிலிருந்து விலகி உயிர் விடுதலை பெறுகிறது. மழவன் மகளும் பலபிறவிகள் எடுத்து, ஆணவத்தின் பிடியிருந்தாலும் செயல்படும் அளவுக்கு ஒருவகை விடுதலை பெற்றிருந்தவளே. அந்நிலையில்,

முயலக நோய் பற்றவே செயலிழந்து விட்டாள் என்பதே பொருளாகும். மூலஆணவப் பிடியிலிருந்து சிறிதே சிறிதே செயல்படத் தொடங்கிச் செயல்பட்டு வந்த மழவன் மகள் செயலற்றவளாகிருள். முயலகநோய் இப் பெண்ணைப் பிறப்பிலேயே பற்றியதா இடை நிலையிற் பற்றியதா எனக் காணல் வேண்டும். பிறப்பிலேயே இருந்ததாயின் இதனை ஒரு நோய் எனக் கொள்ளலாகாது. அவ்வாறு பிறப்பு அமையாது. இடையிற் பற்றியதாயின் உடல்பற்றிய ஏனைய அழகு நிலை போன்றவற்றில் சிறப்பாக இருக்கும் நிலை ஏற்பட்டிருக்க முடியாது.

நோய்கள் உடம்பைப் பற்றி வருவன, மனத்தைப் பற்றி வருவன, உயிரைப் பற்றி வருவன என மூன்றும். மூன்றாகப் பிரிந்தாலும் உயிரைப் பற்றியே ஏனைய இரண்டும் அமையும். உடல் பற்றிய, மனம் பற்றிய நோய்களுக்குரிய மருந்து பயன்படாதாயின் இது உயிரைப் பற்றி அதன் அடிப்படையில் தொழிற்படும் நோய் எனக் கொள்ள வேண்டும். நோய் மூன்றாக அமைவதால் மந்திரமும் தந்திரமும் மருந்துமாக அப்பரம்பொருளே மூன்றாக அமைகிறது என்று விளக்கினார் திருநாவுக்கரசர். இவை மூன்றும் முறையே உயிரை, மனத்தை, உடலைப் பற்றிய நோயைத் தீர்ப்பவை.

முயலக நோய் உயிரைப் பற்றிய ஒன்று ஆதலின் மருத்துவம் பயன் தரவில்லை. உடல் வளர்ச்சியிருக்கிறது, மனம் செயல்படுகிறது. எவ்வாறெனில், அவள் இறைவனைப் பற்றிய பெருமையை யல்லாது வேறு எதையும் சொல்லாதவளாக இருக்கிறாள். அதைத் தவிர வேறு எச் செயலையும் செய்யவில்லை. இதை ஒருவாறு முடிவு செய்வதற்குத் திருவள்ளுவர் துணை செய்கிறார்.

இன்மை என்பது வறுமை. அதன் கொடுமையை நோக்கி, அதனை மனித இனமாக்கி, 'பாவி' என்று திருவள்ளுவர் இழித்துரைக்கிறார். நோய்கள் பலவற்றுள்ளும் மக்கள் நிலையில் வைத்து மதிக்கப் பெறும் உயர்வு பெற்று, உயர்தினைச் சொல்லாலேயே அழைக்கப் பெறும் தகுதி பெற்ற நோய் முயலகன் என்ற நோய்.

உயிரின் தகுதிப் பாட்டினை நிச்சயிப்பதில் பெரிதும் பங்கேற்பது அறிவுப் பகுதியே. அறிவுப் பகுதியின் பல்வேறு கூறுகளைச் சொல்வதும், அறியாமையின் பல்வேறு நிலைகளை விளக்குவதும் ஆகிய இரண்டும் உயிரைப் பற்றியனவே. பல்வேறு நிலைகளில் அறிவை விளக்குதல் போலவே அறியாமையும் பல்வேறு நிலைகளிலும் பெயர்களிலும் விளக்கப் பெறும். திருவள்ளுவர் புல்லறிவாண்மை, பேதைமை, கயமை என மூன்று தலைப்புகளில் அறியாமை பற்றிப் பேசுகிறார். இவற்றுள் இறுதியில் நின்ற கயமை என்பது தனித் தன்மை உடையது. கயமையைத் தனித்து அறியவோ விளக்கவோ இயலாது. கயவர் முலமே கயமையை ஓரளவு அறிய இயலும். கயவருக்கு ஒப்பாக இருப்பார் எவரும் இலர். மக்களே போல்வர், தேவர் அனையர், அறை பறை அன்னர் என்று இவ்வாறெல்லாம்

விளக்க முற்பட்டார். அறிவும் ஆற்றலும் செயல் திறனும் நன்கு அமைந்திருக்கும் ஒருவனை அவனிடத்துள்ள நல்லவை அனைத்தையும் முரண்பட்ட வழியிலேயே செலுத்தச் செய்து, அவனைக் கீழ் மகனாக ஆக்குவதே கயமை. சமுதாய அமைப்பிலும் தனிமனித வாழ்விலும் நல்லவை என மேற்கொள்ளப் பெறுபவைகளைத் தன் அறிவாலும், தன் ஆற்றலாலும், செயல் திறனாலும் தடுத்து நிறுத்தி விடும் ஆற்றலுடையவனாக ஆக்குதல் மூலம் அவனைக் கீழ்மகனாக ஆக்கி விடுவதே கயமை. பெற்றிருக்கும் அனைத்து வகை நல்லாற்றல்களாலும் தன்னையும் பிறரையும் நன்மையில் ஈடுபடாதவாறு செய்து விடுவதே கயமை. கயமையை அறிவின்மை என்று சொல்ல இயலாது. நல்லறிவையும் கீழ்மைப்படுத்தும் வலிய அறிவு, நன்மையைச் செய்யவொட்டாது தடுப்பவர்களை அரக்கர் என்ற வடிவத்திற் காட்டுவர். கயவர்கள் அரக்கவடிவத்தில் இல்லாமல் மக்களே போலவும் இருப்பார்கள். தனி மனித வாழ்விலும் சமூகப் பொது அமைப்பிலும் நன்மை நிகழாதவாறு அமைதற்கு மறைமுகமாகவோ நேர்முகமாகவோ அறிவொடும் பிற ஆற்றல்களோடும் கூடிய துணையைச் செய்து கொண்டேயிருப்பார்கள். இத்தகைய அறிவாண்மையே கயமை. பிற இடத்திலிருந்து நன்மை தருவதாக ஒன்று தமக்கு வரும் எனத் தெரிந்தால் தம்மையே விற்பர், தம் குடியையே விற்பர், தம் நாட்டையே விற்று அடிமைப்படுத்துவர். சென்ற இடத்தால் செலவிடாது, தீது நீக்கி, நன்றின்பால் உய்ப்பதாகிய அறிவை, அப்படியே நிறுத்திவைத்து விடும் ஆற்றல் வாய்ந்த அறிவே கயமை. இது அறிவை அழிப்பதன்று, அறிவை இருப்பதாகக் காட்டி அதன் ஆற்றலை முடக்கி விடுவது. இக் கயமையே முயலகன். தேர்ந்த கல்வி சேர் மாந்தர் தலை சாய்த்து நிற்றல் போலன்றி, பேராற்றல் வாய்ந்த அறிவையும் தடுக்கும் தலைநிமிர்வு இதற்கு உண்டு. சமூக நன்மைகளுக்கு, நல்லறிவின் ஆற்றல்களுக்கு இடையூறு விளைக்கும் அறிவே முயலகன். இது சமூகத்துக்கு — நன்மைக்கு அமைந்த ஒரு வகை நோய். புல்லறிவாளனும் ஒரு நோய் தான். அவன் தானே தனக்கு நோயாக அமைந்தவன். கயவன் பிறருக்கு — அவர் தம் நற்செயல்களுக்கு நோயாக அமைந்தவன். புல்லறிவாளன் இறக்கும் வரை அந்நோய் இருக்கும். அவன் சமூகத்துக்கு — நன்மைக்கு நோயாளன் அல்லன். தனக்குத் தானே அமைந்த நோயாளன். அவனுல் அவனுக்குத் தீங்கு என்பதைத் தவிர வேறன்று. கயவனின் கயமை சமூகத்துக்கு நோய்; அவனுக்கு நோய் அன்று. சமூகத்தை அழிய வைப்பான்; தான் வாழ்வான். கயமையும் ஆணவத்தின் ஒருவகை அமைப்பே. அதை அழிப்பதற்கு அதையே கருவியாகக் கொள்ள வேண்டும். முள்ளை முள்ளால் எடுத்தல் போல. சமூகத்துக்குரிய நோயை அவனுக்கே நோயாக ஆக்குதல் என்பது அருட்செயல். மதுரையில் திருஞான சம்பந்தர் தங்கியிருந்த திருமடத்துக்குத் தீவைத்தபோது, "பையவே சென்று பாண்டியற்கு ஆக" என்று அமைத்ததுபோல, முயலகனுக நின்றவனுக்கு முயலகனுகிய நோயை அமைத்தல். உயிர்போனுல் இந் நோய் போய்விடும் என்பது போன்றதன்று. உயிர் எத்தனைப் பிறவி

எடுத்தாலும் உயிரைப் பற்றியிருந்து கொண்டே இருக்கும். அந்த நோயை அழித்தல் தவிர வேறுவழியில்லை. உடம்பில் தோன்றும் கட்டியைப் போல, நல்ல பயிரின் இடையில் தோன்றும் களைபோல அமைந்த ஒன்று. அதையே அழித்தாலன்றி வேறு மாற்று இல்லை. இங்கே, இறைவனின் அருள்நிலையானது உயிருக்கு நன்மை செய்ய முற்படும் நிலையில் ஆணவத்தை அழித்துவிட முற்படுவது இல்லை. உயிருக்கு அறிவும் பிற ஆற்றலும் வளரும் போது ஆணவத்தின் வன்மையை உயிர் பெற்று விடுகிறது. அந்நிலையில் அவ்வுயிரை ஆணவம் தன்னுள் அடிமைப்படுத்த முடியவில்லை என்பதே உயிரின் விடுதலை. ஆணவத்தை அழிப்பதோ, அதனைச் செயலிழக்கச் செய்வதோ அருளின் செயலன்று. ஆணவம் உயிருக்கு அயலாக இருந்து அடக்குவது. கயமை உயிரின் உள்ளிருந்தே உயிரின் அனைத்து ஆற்றலையும் இழுத்துப் பிடித்துவிடுவது. அதனால் அது அழிக்கப் பெற வேண்டுவதே.

மழவன் மகள் இப்பிறவியின் முற்பகுதியில் அமைத்த கயமைச் செயல்கள் சமூகத்துக்கு முயலக நோயாக நின்ற நிலையை நீக்க முயலக நோய் பற்றுகிறது. இந்நோய் பற்றும். செயல் செய்ய வொட்டாது தடுக்கும். உடல்பற்றிய ஏனைய வளர்ச்சிகளைத் தடை செய்யாது. அனைத்து நலங்களும் வளங்களும் அமைய, அனுபவிக்க வேண்டும் என்ற ஆர்வமும் அமைய, ஆற்றலும் அமைய, ஆனால், செயல்பட முடியாத நிலையில் ஏதோ ஒருவகைத் தடுப்பு. இத்தகைய தடுப்பானது அறிவைச் செயற்படுத்தும். தம்செயல்கள் எத்துணைத் தவறுடையன என்பதைத் தாமே சிந்தித்துச் சிந்தித்துத் துன்புறும் நிலையை உண்டாக்கும். இந்நிலை இக் காலத்தும் உண்டு. பக்கவாதம் என்ற நோயால் செயலின்றிச் சாய்ந்துவிடுவர். அனைத்துச் செய்திகளும் தெரியும், செயல்பட முடியாது. முன்செய்த தீமைகளுக்குக் கழுவாயாகக் கூட ஏதும் செய்ய முடியாது. செயலை முடக்கித் தவற்றை ஆய்ந்து துன்புறுதற்கு ஒரு வாய்ப்பைத் தருவதே முயலக நோய். இதற்குப் பிறவி வினை காரணமன்று. இப்பிறவியிலேயே முன்னை நாள் செய்த வினையே காரணம்.

மழவன் மகள் நோயைப் பாச்சிலாச்சிராமத்துப் பதிப் பொருளே தீர்த்து விடும். அவள் வாய்விட்டு இறைவன் புகழை ஏத்தத் தொடங்கி விட்டாள். வாக்கும் மனமும் செயல்படத் தொடங்கி விட்டன. அறிவின் முதிர்ச்சியை எய்தும் நிலை வந்துவிட்டது. அதன் உச்சநிலை இன்னும் எய்தப்பெறவில்லை. அவ்வுயிர் கயமைப் பிடிப்பை முற்றுக நீக்குவதற்கு அருளனுபவம் தேவை. அருளனுபவமே முற்றுக அழிக்க வல்லது. திருஞானசம்பந்தரின் தேவார ஒலியானது திருநீலகண்டத்தை உள்ளடக்கிய அருளொலி. அதையேற்ற மழவன் மகள் அருளனுபவத்தை மிகஎளிதில் பெற்று விட்டாள். முறையான வளர்ச்சி முன்பே அமைந்ததுதான். அருளொலி சற்றே விரைந்து செயற்படுதற்குரிய அருளனுபவம் தந்ததாதலின் உடனே நோய் நீங்கியது எனக்கொள்க.

அவ்வாறே, கசடறக் கற்றும், கேட்டுத் தெளிந்தும் பெற்ற அறிவிலும் இளகிக் கொடுக்கும் நிலை அமைந்தது என்பதே பணிநோய். அழுத்தமான அறிவு வலியகொள்கைப் பிடிப்புடைய வாழ்வை அமைக்க வேண்டும். கொள்கைப் பிடிப்பில் வலிமை இன்மைக்குக் காரணம் அறிவில் ஒருபக்கம் அமைந்த ஒருவகை நடுக்கம்; நெகிழ்ச்சி. அதுவே பணிநோய்; அதைநீக்க எழுந்ததே திருநீல கண்டப் பதிகம்.

கொள்கைப் பிடிப்பும், வன்மையாக ஆழங்கால்பட்ட அறிவும் அமையப் பெறினும் சிலவகைப் புறநாகரிகங்களுக்கும் ஏதோ ஒரு வகையில் இடங் கொடுத்துவிடும் எளிமை. இது அத்தகையோரை உயர் கொள்கைப் பிடிப்பிலும் அதற்கொத்த செயலிலும் ஈடுபடாத வாறு — தம்மை அடிமையாக்காதவாறு தடை செய்யும் இடர் என நின்றது. அதனை நீக்க அமைந்ததே திருநெடுங்களப் பதிகம்.

மேலும், அற இயலான அருளியலான நிறைமொழிகள் நம் வாழ்வின் வழிகாட்டியாக அமையும் போக்கில் இன்றுவரை நிலவுவன. அவைகளுக்குத் தவறான விளக்கங்களை அமைத்துக் கொள்ளுதல்; சொல்லுதல்; வாய்ப்பு ஏற்படும்போது செய்தல்.

> பொய்மையும் வாய்மை யிடத்த புரை தீர்ந்த
> நன்மை பயக்கும் எனின்.

குற்றமற்ற நன்மையைத் தருமானால் பொய்யும் வாய்மையின் இடத்தைப்பெறும் என்பது, பொய் பொய்யே, வாய்மை வாய்மையே, பொய்யானது ஒருசிறு நன்மையையும் தராது என்ற கருத்தை விளக்க வந்ததே. அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பா என்ற தொடருக்கு. அத்தைக்கு மீசை முளைக்கும் என்று கருதிப் பொருள் கொள்ளுதல் இல்லை. "ஆயிடம் பொய் சொல்லியா கல்யாணம்" (ஆயிடம்-தாயிடம்) என்பது ஆயிரம் பொய் சொல்லியும் கல்யாணம் என்று மாற்றம் பெற்று விட்டது. வாய்ப்பு அமையும் போது பொய் சொல்லுதல் மேற்கொள்ளப் பெறுகிறது. இவ்வாறு நாம் பலவற்றுக்கு மாற்றுப் பொருள் கண்டு, தமிழகப் பண்பாட்டுக்கே மாறுபட நின்றோம். இவையெல்லாம் அறிவாலும் செயலாலும் செய்த குற்றங்கள், பிறரையும் அவ்வாறே சொல்லிச் செயற்படுத்தினோம். இவ்விரண்டாலும் செய்த தீமைகளை நீக்குவதற்குத் திருநாகேச்சுரப் பதிகங்கள் இரண்டு அமைகின்றன.

'தழைகொள்' என்று தொடங்கும் திருநாகேச்சுரப் பதிகத்தில் நாலாந் தேவாரத்தில் திருஞானசம்பந்தர்,

> "கூச நோக்காது முன் சொன்ன பொய் கொடுவினை குற்றமும்
> நாசமாக்கும் மனத்தார்கள் வந்தாடு நாகேச்சுரம்
> தேசமாக்கும் திருக்கோயி லாக்கொண்ட செல்வன் கழல்
> நேசமாக்கும் நிறத்தார் அறத்தார் நெறிப்பாலரே"

என்று கூறுவதால், மேலே அமைக்கப்பெற்ற கருத்தின் உண்மை உணரலாம். மேலே கூறப்பெற்ற குற்றம் தீர்ப்பதற்குத் திருநாகேச்சுரம் நண்ணி வழிபட வேண்டும் என்பதையே வலியுறுத்துகிறார்.

கூச நோக்காது, பொய் கொடுவினை குற்றமும் இழைத்தமையின் கோளும் நாளும் தீய வாயின என்று குறிப்பிட்டு, அதற்காகக் கோள் களையும் நாள்களையும் வணங்கினால் நன்மை வராது. நாளும் நாளும் நாதன் அமர்கின்ற நாகேச்சுரம் நண்ணித் தொண்டாற்ற வேண்டும் என்று அப்பதிகத்து ஆருந் தேவாரத்தில்

"நாளும் நாதன் அமர்கின்ற நாகேச்சுரம் நண்ணுவார்
கோளும் நாளும் தீயவேனும் நன்காம் குறிக் கொண்மினே"

என்று குறிப்பிட்டார். இவ்வகையில், ஒவ்வொரு தலத்திலும் அமையும் திருக்கோயிற் பதிப்பொருள் அக்கோயிலை உள்ளிட்ட குடிகளுக்கு வேண்டிய அனைத்து நலங்களையும் வழங்கும் திருவருள் நிலைகளே. அவ்வத்தலத்துப் பெருமானே அருள் வழக்கம் முழு வதையும் ஆற்ற வல்லவன். எனவே, இவ்வுலகிற் பிறந்தார் ஒருவர் அவர் பிறந்த இடத்தில் அமைந்த திருக் கோயிற் பதிப்பொருளின் வழியில் நின்று தொண்டாற்றி அருள் நலம் பெறுதற்குரியர். பிற தலங்களின் பெருமைகளை உணரலாம்; சென்று வழிபடலாம்; அவ் வத்தலத்தில் அருள் நலம் பெற்றுச் சிறக்கும் அடியவர்களுடன் கூடி மகிழ்ந்து இறைவனின் அருள் நலத்தின் பெருமையைப் பேசலாம், அறியலாம். அருள் நலத்தைத் துய்ப்பதற்கு அவையெல்லாம் வழிகளே. ஆனால், அந்த ஒருவர் தம்மைத் தாம் பிறந்த தலத்தில் உள்ள இறைவனோடு, அந்தத் தலத்தோடுதான் தம்மை இணைத்துக் கொண்டு, இக்கோயிலைச் சேர்ந்த குடிமகன் என அமைத்துக் கொள்ள வேண்டும். அவ்வடிப்படையிலேயே, திருஞானசம்பந்தர் தம்மைக் காழிப் பெயருடனேயே இணைத்துக் கொள்ளும் மரபை அமைத்துக் காட்டினர். அவ்வத்தலத்துப் பெருமானே, அவ்வக் கோயிலைச் சார்ந்த குடிகளுக்கு அருள்வழங்கக் காத்திருக்கிறான். அவன் மூலமாகத்தான் திருவருள் வழக்கம் நடைபெறும் என்பதை

"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாது மோர் குறைவிலை
கண்ணில் நல்லஃது உறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே"

என்றுகூறி, தமக்குக் காழிப் பெருமான் இருந்தமை போலவே, ஒவ் வொருவர்க்கும் அவரவர்தம் பிறந்த பதியில் பெருமான் அவ்வாறே உள்ளான் என்று கூறி, அவ்வவர் பிறந்த தலத்துப் பெருமானுக்கு அவ்வவர் ஆட்படுதல் வேண்டும், என ஆற்றுப் படுத்துகிறார். அருளியலனுபவமும் அவ்வத்தலத்துப் பதிப் பொருள் முலமே நடை பெறும் என்பதை வற்புறுத்துவதால், திருப்பாச்சிலாச்சிராமத்து இறைவர்க்கு மழவன் மகள் முயலகன் நோய் தீர்க்கும் ஆற்றலில்லை; ஞானசம்பந்தரை வரவழைத்து அது தீர்க்கப் பெற்றது என்று கருது தல் திருஞானசம்பந்தர் காட்டிய கொள்கைக்குப் புறம்பாகும். இக் கருத்து மதுரை நிகழ்ச்சியில் மேலும் விளக்கப் பெறும்.

மேலே கூறப்பெற்ற பலவகை வாழ்வியல் நுட்பங்கள், அறி வியல் விளக்கங்கள், அருளியல் வழக்காற்று முறைகள் ஆகிய வற்றைத் தெளிவுற விளங்கிக் கொள்வதற்குரிய வாய்ப்பினை வகுத் துக்கொடுத்த நிலையில் இத்தலைப்பு ஒரு தனித்தன்மைத் தலைப்பாக அமைகிறது.

3. செருக்கு வாய்ப்புடையான் சிரபுரம் என்னில்

முன்னுரை

தொண்டு நெறியின் வளர்ச்சி ஐந்துபடிநிலைகளில் அமைய ஆறாவது படியாகிய பூந்தராய்ப் படியானது திருத்தொண்டுநெறி எனும் அருள் நெறியில் முதற்படியாக அமைந்த பெருமையுடையது. திருவியலூரில் அருள் வேடங் காட்டியது முதலாக, திருவடி நீழல் எனப்பெறும் திருவருள் நிழலில் வாழ்வதாகிய வாழ்வு எனப் போற்றப் பெறும் முத்தி வாழ்வின் அடையாளமாக நின்ற முத்துப் பந்தர் மூன்னுறு நிகழ்ச்சி வரையில் திருவருளாட்சியின் பல படி நிலைகள் விளக்கப் பெற்றன. முத்திநிலை வாழ்வு என்பது இதுதான் என உணரவும் உணர்த்தவும் உள்ள அருட்சுருவாம் நிலையில் அமர்த்தப் பெறுகிறார் திருஞானசம்பந்தர். இவ்வளவும் பூந்தராய்ப் பெருமையே.

முயலகநோய் தீர்த்ததும் பனிநோய் தீர்த்ததும் பெருமான் வெளிப்பட நிகழ்த்திய அருளியல் நிகழ்வுகள். இவற்றோடு தொடர் புடைய அருளியல் நிகழ்வுகள், பதிகத்தின் மூலம் அருளப்பெற்ற நிகழ்வுகள் ஆகியவற்றுள் அருளியல் வாழ்வின் மணிமுடியென நின்ற நிகழ்வே முத்துப் பந்தர் நிகழ்வு. இந்நிலையில் திருக்கோயில் செலவு தொடர்கிறது.

சிரபுரம்

சீகாழிக்கு அமைந்த பெயர்களில் ஏழாவது எண்ணல் சுட்டப் பெறுவது சிரபுரம். தொடர் வரிசையில் ஏழாவதாகவும் திருத்தொண்டு நெறி என்னும் அருள்நிலை வளர்ச்சிப் படியில் இரண்டாவதாகவும் நின்ற பெருமையுடையது சிரபுரம். பாம்பின் வடிவமைந்த இராகு என்பான் தேவர்களுடன் இணைந்து அமுதம் உட்கொள்ள, அவனைத் தண்டிக்கும் நிலையில் அமுதம் எடுக்கப் பயன்படுத்தும் கரண்டியால் இராகுவை அடிக்க, அவன் தலைவேறு, உடல் வேறுகத் துண்டிக்கப் பெற்று வீழ்ந்தான். அமுதம் உண்டமையால் அவன் தலை உயிரு டனேயே இருந்தது. பிறகு மனித உருவில் அது இணைக்கப் பெற, பாம்புத் தலையும் மனித உடலும் கொண்டு வாழும் நிலை பெற்றான். (இராகுவோடு கேதுவின் வரலாற்றையும் இவ்வாறே இணைக்க வேண்டும்) பாம்புத் தலைமட்டுமே இராகுவுக்குரியது. இராகு பூசித்த

தலமாதலின் சிரபுரம் எனப் பெற்றது. சிரபுரப் பதிகங்களாகத் திரு ஞானசம்பந்தர் மூன்று பதிகங்கள் பாடியுள்ளார்.

பன்னிரு பெயர்களைப் பெற்ற பெருமையானது காழிக்கு உண்டு என்பது உண்மையே யாயினும், சிரபுரம் என்ற பெயரை அப்பதி பெற்ற காலமே அது புகழில் தீளைத்திருந்த காலம் என்று பாராட்டும் திருஞானசம்பந்தர் ''வாழி மாநகர்ச் சிரபுரம்'' என்று அதனை வாழ்த்துகின்றார். சிரபுரத்தின் பெருமையைப் பேச முற்படும் போது தான், ஊழிக் காலத்தே அனைத்துலகமும் சரண்புகுமாறு உயர்ந்து நின்ற காரணத்தால் சிரபுரம் ஆக நின்றது என்ற வரலாற்றையுங் கூறி வாழ்த்துகின்றார்.

''ஊழி அந்தத்தில் ஒலிகடல் ஓட்டந்து இவ்
வுலகங்கள் அவைமூட
ஆழியெந்தை என்று அமரர்கள் சரண்புக
அந்தரத்து, உயர்ந்தார் தாம்
யாழின் நேர்மொழி யேழையோ டினிதுறை
இன்பன் எம் பெருமானூர்
வாழி மாநகர்ச் சிரபுரம் தொழுதெழ
வல்வினை அடையாவே''

என்பது 'அன்ன மென்னடை' என்று தொடங்கும் சிரபுரத் திருப் பதிகத்தின் ஆருந் தேவாரம்.

ஏகபாதத்தில் சிரபுரப் பெருமை

பன்னிரண்டு தேவாரங்களைக் கொண்ட ஏகபாதத் திருப் பதிகத்தில் ஏழாவது தேவாரம் சிரபுரத்தைப் பற்றியது. ''செருக்கு வாய்ப் புடையான் சிரபுரம் என்னில்'' என்பதே அந்த ஒற்றை வரி.

திருவருளாட்சியின் உயர் நலம் ஒன்றை இங்கே விளக்கியருளு கின்றார். யார் யார் எந்த எந்த வழியைப் பின் பற்றி இறைவனை அடைய முயற்சிக்கிறார்களோ அவரவர்களுக்கு அவ்வந் நெறிகளில் நின்று, அவ்வந் நிகழ்ச்சிகளுக்குரிய பயனைத் தருதலே அருளாட்சி யின் தனிச் சிறப்பு. ஊழிக் காலத்தில் எல்லாக் கலைகளும் சரண் புகுந்த காலத்தில் அனைத்தையும் காப்பாற்றிய நிலையில் அவ்வவர் தம் விருப்புறு கலைகளும் பயனும் வாழ்விக்கப் பெற்றன. எனவே, உயிர்கள் தத்தம் அறிவு, அனுபவ வளர்ச்சிப் படி நிலையில் அமையும் ஏற்ற இறக்கம் காரணமாக அவற்றின் விருப்பு நிகழும். அவைகள் விரும்பியாங்கு விரும்பியவற்றை அமைத்துக் கொடுத்தல் அந்நெறி நின்றார்க்கு அமைத்துக் கொடுக்கும் பயன் என அவைகளை ஆக்குவது அவன் அருளுடைமை. இந்நிரலோக வாழ்வை விரும்பி அதற்கென முயல்வோர்க்கு அம் முயற்சியை முற்றுவிக்கவும், முற்றிய பின் அவ்வாழ்வை அமைத்துக் கொடுக்கவும் செய்கிறான். வெவ்வேறு நெறிகளில் நிற்பவர்களுக்கு அருள் செய்யும் அருளாளன் நீலகண்டனே யாயினும், அவ்வந் நெறியில் எந்த எந்தத் தெய்வம்

பேசப் பெறுகிறதோ அந்த அந்தத் தெய்வத்தின் மூலமாகவே நன்மைகளை வழங்குவான். இவ்வகையில் இரண்டு கருத்துகளை விளக்கி யருளுகிறார்.

திருவருள் என்ற ஒன்றே உலகை வாழ்விப்பது. அருளாய் நின்றது திருநீலகண்டச் செம்பொருளே. எல்லாம் அழிந்த நிலையில் அது ஒன்றே தனித்து நின்றது; தனிப் பரம் பொருளே. ஆனல், அது செயல் மேற்கொண்டு பயன் தர முற்படுங்கால், யார் எதைத் தெய்வ மாகக் கொண்டாரோ, அதன் மூலமாகவே அருளுவது. தெய்வம் என்று கொள்ளாமல் அறம் உயர்ந்தது என்றே தாயே உயர்ந்த தெய்வம் என்றே என்றிவ்வாறு எந்த ஒரு நிலையில் உயர் பொருளாக எந்த ஒன்றைக் கொண்டாலும், அதன் மூலமாக அவர்களுக்குரிய பயனை வழங்குவது என்பது ஒரு கருத்து.

குறிக்கோளில்லாத நிலையில் உயிர் தன்வாழ்வை அமைத்துக் கொள்ளுமேல், எங்கும் பரந்திருக்கும் நிறை தன்மையுடைய திரு வருளைத் தன் பால் ஈர்த்துப் பயன் துய்க்க முடியாது. திருவருளும் ஒன்றைப் பற்றியே பயன் தர இயலும். ஏதேனும் ஒரு குறிக் கோளைப் பற்றும் போது தான் திருவருள் நன்மையைப் பெற முடியும், துய்க்க முடியும், வாழ முடியும் என்பது இரண்டாவது கருத்து.

அருளாட்சி என்பது பொதுமையில் நிற்பது. உயர்வு தாழ்வு கருதாதது; இன்னர் இனியார் என்ற வேறுபாட்டைக் கடந்தது; அறவழிக்கு மாறுத பொதுமையில், நடுவில் நிற்பது; சார்பு நிலையில் அறிய முற்படுபவர்களுக்கு அப்பாற்பட்டு நிற்பது. பொதுமையில் நிற்கும் அது ஏதேனும் ஒன்றைப் பற்றி நிற்பவர்களுக்கு அப்பற்றுக் கோட்டின் மூலமாகவே பயன்தர வல்லது. இங்கேயும் ஞானசம் பந்தர் தாம் பிறந்த தலத்துத் திருக்கோயிலைப் பற்றிநின்று, அக் கோயிலில் தம்மைக் குடியாகப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்ற கருத்தை வற்புறுத்துகின்றார் எனக் கொள்ள வேண்டும்.

உலவாக் கிழி பெறுதல்

முத்துப் பந்தர் முன்னுற்றநிலை பட்டீச்சுரத்தில் நிகழ்ந்தது. பின்னர்த் தம் திருக்கோயிற் செலவைத் தொடர்ந்த சிரபுரத்து அண்ணல் திருவாவடு துறையை அடைகிறார்.

திருவாவடு துறையை அடைந்த காலத்து, உடன் வந்த சிவபாத விருதயர் தாம் வேள்வி செய்வதற்குரிய காலம் அணுகியதென்று எண்ணி, தாமும் போவதற்கு அரும் பொருள் பெற வேண்டும் என்ற கருத்தில், திருஞானசம்பந்தரின் எதிர் நின்று கூறலாயினர். (என்ன கூறினர் என்று சேக்கிழார் கூறவில்லை).

மூன்றாவது தலயாத்திரை தொடங்கப் பெற்ற காலத்திலேயே திருஞானசம்பந்தரின் தந்தையார் சிவபாத விருதயர் யாகம் செய்ய வேண்டும் என்ற தன் குறிப்பையும், யாகத்திற்குரிய காலம் அமையும்

வரையில் தலயாத்திரையில் தாமும் பங்கு கொள்வது என்ற கருத்தையும் வெளிப்படுத்தி விட்டார். ஆகையால், இப்போது சிவபாதஇருதயர் தம்எதிர் நின்று கூறியவுடனே ஞானசம்பந்தர் முன்னமேயே அவர் கூறியுள்ளமையை நினைத்தார். முடிவற்ற, அழியாத பொருள் என்பது ஆவடுதுறைப் பெம்மான் திருவடிகள் தாமே! அவற்றைத் தவிர வேறு ஏது பொருள் என்ற எண்ணத்தில் எழுந்து திருக் கோயிலை அடைந்தார். நீள் நிதி வேண்டினுக்கு ஈவது ஒன்றும் இலேன், உன்னடி அல்லது மற்று ஒன்றறியேன் என்று கூறி, இச்சையுடன் இன்தமிழ்ப் பதிகம் பாடினார். இறையருளால் பூதம் ஒன்று தோன்றி, சந்நிதியில் உள்ள பீடத்தின் மேல், ஆயிரம் பொன் அடங்கிய துணி முடிச்சு ஒன்றை வைத்தது. வைத்த தோடன்றி, "இங்கே வைக்கப் பெற்ற இத்துணி முடிச்சு, பொன்னை உள்ளே கொண்டது. இது உலவாக்கிழி (எடுக்க எடுக்கக் குறையாத பொன் முடிப்பு) உமக்கு என்றும் அழியாத் தன்மையினாகிய நித்தனார் அருளிச் செய்தது" என்று சொல்லிவிட்டு மறைந்தது. பீடத்திலிருந்த பொன் முடிப்பைத் தொழுது எடுத்து, தம் தந்தை யாரிடம் கொடுத்து, முழு முதற் கடவுளாகிய கங்கைச் சடையான் ஆய சிவபெருமானை முன்னிட அமைத்துக் கொண்டு செய்யப் பெறுகின்ற நல்ல வேள்வியைத் தீமையெல்லாம் ஒழியுமாறு நீவிர் செய்யவும் மட்டுமன்றி, திருக்கழுமலத்திலுள்ள வேதியர் அனைவரும் செய்தற்கும் வேண்டும் பொன்னை மிகுத்துக் கொடுத்துக் கொண்டேயிருக்கும். அத்தகைய வளர்ச்சியுடையது இது என்று அதன் பெருமையையும் குறிப்பிட்டுக் கூறினர். அவர் பாடிய பதிகத்தின் முதல் தேவாரம்

> 'இடரினும் தளரினும் எனதுறு நோய்
> தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
> கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
> மிடறினில் அடக்கிய வேதியனே
> இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கில்லையேல்
> அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை யரனே"

என்பது. இது நாலடிமேல் வைப்பு என்னும் அமைப்புப் பாட்டு. நாலடிக்கு மேல் இரண்டு வரிகள். இப்பதிகப் பாட்டுகள் எல்லா வற்றிலும் பின்னுள்ள இரண்டு அடிகள் இணைந்தே இருக்கும்.

இப்பதிகத் திருக்கடைக் காப்பினுள் "நலம் மிகு ஞானசம்பந்தன் சொன்ன, விலையுடை அருந்தமிழ் மாலை வல்லார்" என்று குறிப்பிடுவ தால் இப்பதிகம் பொன் வேண்டிப் பாடப் பெற்றது எனக் கொள்வர்.

உலவாக்கிழி பற்றிய கருத்து

திருவாவடுதுறையில் திருஞானசம்பந்தருக்கு இறைவன் பொன் அளித்தான் என்ற செய்தியைத் திருநாவுக்கரசர் எடுத்துக் கூறிச் சிறப்பித்தருளுகின்றார்.



"மாயிரு ஞாலமெல்லாம் மலரடி வணங்கும் போலும்
பாயிருங் கங்கையாளைப் படர்சடை வைப்பர் போலும்
காயிரும் பொழில்கள் தழ்ந்த கழுமலவூரர்க்கு அம்பொன்
ஆயிரம் கொடுப்பர் போலும் ஆவடுதுறைய ஞரே"

என்பது திருநாவுக்கரசரின் திருநேரிசைத் தேவாரம்.

'அம்பொன் ஆயிரம்' என்ற எண்ணிக்கையை முதன் முதல் அப்பர் பெருமானே அமைத்துக் காட்டியிருத்தல் வேண்டும். ஆயினும், அப்பர் பெருமான் திருவாக்கில் உலவாக்கிழி, பொற்கிழி என்பன காணப் பெறவில்லை.

அப்பரடிகளுக்குப் பின் வந்த நம்பியாண்டார் நம்பிகள் தாம் பாடிய ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியில்,

"எழிலாவடு துறையுள் சீர்
நன்பொன் அரனளித்த"

என்றும்,

"சிந்தையைத் தேனைத் திருவாவடு துறையுள் திகழும்
எந்தையைப் பாடல் இசைத்துத் தொலையா நிதியம் எய்தி
தந்தையைத் தீத்தொழில் மூட்டிய கோன்"

என்றும், திருமும்மணிக் கோவையில்,

"பூவிடு மதுவிற் பொறிவண் டுழலும்
ஆவடு துறையிற் பொன்னுயிரமே கண்டது"

என்றும், திருவுலா மாலையில்,

"மாயிரு ஞாலத்து மன்ஆவடு துறை புக்கு
ஆயிரஞ் செம்பொன் அது கொண்டும்"

என்றும், திருத்தொகையில்,

"திருவாவடு துறையிற் செம்பொற் கிழியொன்று
அருளாலே பெற்றருளும் ஐயன்"

என்றும், குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்கள். நம்பியாண்டார் நம்பிகள் திருவாக்கில், தொலையாநிதியம், பொன்னுயிரம், ஆயிரம் செம்பொன், செம்பொற் கிழி என்ற தொடர்கள் வருகின்றமையின், நம்பிகளுக்குப் பின்னர் வரலாறு படைத்த சேக்கிழார் உலவாக் கிழி, ஆயிரம் பொன், ஆகியவைகளை இணைத்து அமைத்துக் காட்டினர். திருஞானசம்பந்தரின் பதிகத்தில் "இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கு இல்லையே" என்றும், 'விலையுடை அருந்தமிழ்' என்றும் வருவன கொண்டு முழுமையாக முடிவு செய்ய முடியாது. பொன் கொடுத்த நிகழ்ச்சியை அப்பரடிகள் வாக்கால் உறுதி செய்கின்றோம். ஆயினும், "தொலையா நிதியம் எய்தி, தந்தையைத் தீத்தொழில் மூட்டிய கோன்" என்ற நம்பியாண்டார் நம்பிகளின் திருவாக்கே பொன் பெற்றமைக்குரிய காரணத்தை நமக்குப் புலப்படுத்துவதாகிறது. நம்பியாண்டார் நம்பிகளின், திருவாக்கினைக்

கொண்டே உலவாக்கிழி என்ற கருத்தைச் சேக்கிழார் அமைக்கிறார். தந்தையாருக்கு அவர் சொல்லியனுப்பும் கருத்து திருவாலவாய்த் திருப்பதிகக் கருத்திலிருந்து எடுத்துக் கொள்கிறார் சேக்கிழார். பூதம் ஒன்று பொற்கிழியைக் கொண்டு வந்து வைத்தது என்ற நிகழ்ச்சி சேக்கிழார் கால வழக்கை ஒட்டி அமைத்த ஒன்றாகும். மேலும், இந்நிகழ்ச்சிக்குப் பின் பலிபீடத்தருகே அமைத்துக் காட்டப் பெற்ற சிற்பங்களோக் கொண்டும் சேக்கிழார் அமைத்திருக்கலாம்.

ஆவடுதுறை அருளிப்பாட்டு நுட்பம்

திருத்தொண்டு நெறியே திருவருள் நெறி என்பது முன்பே விளக்கப் பெற்றது. தொண்டு நெறியிலிருந்து மலர்ந்ததே திருத் தொண்டு நெறியாயினும் அருளனுபவம் பெற்றுச் சிறக்கும் நெறியே திருத்தொண்டு நெறி.

பூவும் புனலும் சொரிந்து வழிபட்டும், பெருமைகளை ஏத்தித் துதித்தும் தொண்டு நெறியை நிறைவுறச் செய்யும் போது, அவன் அடிக்கீழ் அடிமையென முழுமையாகத் தம்மை ஒப்படைத்து விடும் நிலைமை அந்நெறி நின்றார்க்கு உண்டாகும். திருத்தொண்டு நெறி யில் நின்ற காலத்து அவர்களுக்கு இவ்வுலகப் பணி என்ன? என்ற வினு எழும்.

அடிமை எனத் தம்மை நிறுத்தி, ஆண்டவன் திருவடியில் தம்மை அடிமையாக்கி, தம் செயலற்ற நிலையில், 'தாம்' என்ற ஆணவ நிலையையும் அகற்றி, ஒடுங்கியிருக்கும் நிலை எவ்வாறு என்பதைத் திருவாவடுதுறைப் பதிகம் முழுவதிலும் முதலுள்ள நான்கு வரிகளில் அமைத்தருளியுள்ளார்.

இடரினும் தளரினும் எனதுறுநோய் தொடரினும உன கழல் தொழு தெழுவேன்; வாழினும் சாவினும் வருந்தினும் போய் வீழினும் உன கழல் விடுவேனலேன்; நனவினும் கனவினும் உன்னை வழி படல் மறவேன்; தும்மலோடு அருந்துயர் தோன்றினும் அம்மலர் அடியலால் என் நா வேறு ஒன்றைக் கூறுது என இவ்வாறு முழுமை யாக இறையடிக்கு ஒப்படைத்த நிலையில் ஈவது என எனக்கு ஒன்றும் இல்லை என்று கூறுகிறார். அதன் கருத்து, இவ்வுலகத்துக்காக நான் அமைத்துக் கொடுக்க வேண்டுவதாக ஏதும் இல்லை. எனவே, என்னை ஆட்கொண்டது என்பதன் பொருள் இது தானே? நான் உன் திருவடியில் அனைத்தையும் செலுத்தி, அடிமையுற்றுக் கிடப்பது மட்டுந்தான் அருளில் இருத்தல் என்பதன் பொருளா? நான் உலகுக்கு ஏதும் நன்மை, பணி செய்ய வேண்டுவது இல்லை என்பது தான் நீ என்னை ஆண்டு கொண்டது என்பதன் பொருளா? உன்னுடைய அருள் என்பதற்கும் அதுதான் விளக்கமா? இவ்வாறு வினுக்களை அமைக்கும் நிலையில், ஆவடுதுறைப் பதிகத்தேவாரங்கள் அமைகின்றன.

முற்றுகத் தமலை அடிமைபடுத்தவிட்ட நிலையில் திருவருளில் நின்று, அருளானந்தப் பேரின்பம் துய்த்துக் கொண்டிருத்தல் என்பது

தான் நீ என்னை ஆட்கொண்டமைக்கும் நான் உம்மிடம் அடிமை யானதற்கும் உரிய பொருளா? உலக உயிர்களுக்காக யான் பணி செய்தல், உலகத்துயிர்களுக்கு நன்மை தரும் முறையில் எதையாவது அமைத்துக் கொடுத்தல் என்பன எனக்கு இல்லையென்றால், அவனடி யின்கீழ் இன்பந் துய்த்து மகிழ்தல் என்ற ஒன்று தான் திருவருள் ஆட்சி என்பதன் பொருளா? என்பதே இப்பதிகத்தின் பொதுமை அமைப்பு.

இந்நிலையில் தம்முடைய பதிகத்தை "விலையுடை அருந்தமிழ்" என்று குறிப்பிடுகிறார். விலையுடைமை என்றால் என்ன பொருள் என்பதற்கு முன்னமேயே திருநீலகண்டப் பதிகத்துள் விளக்கம் அமைத்துள்ளார். அன்பை அடிப்படையாகக் கொண்டு செய்யப் பெறும் செயல்களெல்லாம் கொடுத்துக் கொள்ளல் அல்லது கொண்டு கொடுத்தல் என்ற அடிப்படையிலேயே அமைவன; ஆகையால் அவை விலைத்தன்மையன. அருளை அடிப்படையாகக் கொண்டவை விலைவரம்பைக் கடந்தவை.

திருவருள் நிலையில் நின்ற போது தம்மை அடிமை என நிறுத்தி, தம்முடைய செயலை அறுத்து விடுதல் அமையும். ஆனால், நான் இப்போது பாடுவது, உம்மை இப்பாடலில் அமைத்து, அதனைப் பெருகும் இறையின்ப அனுபவத்தை நிறைவித்து, நான் உலகத் தழைக்கக் கொடுக்க வேண்டும். இன்ன பயன் விளைவிக்க வேண்டும் என்று கருதி என்னால் பாடப் பெற்று, இதைப் படிப்போர் இன்ன பயன் பெறுவர் என்று அறுதியிட்டு, ஆணையிட்டுக் கூறுவ தால் இப்போதும், முன்னும் என்னுடைய பதிகம் விலையுடை அருந் தமிழ் உம்மைப் பாடுவதன் மூலம் அருளனுபவத்தைப் பின்வரும் உயிர்கள் துய்க்க வேண்டும் என்ற கருத்தில் அமைத்துக் கொடுக் கிறேன். ஆதலின் இது பயன் கருதியது; எனவே, விலையுடை அருந் தமிழ்.

திருவருள் நிலையில் இவ்வாறு அமைத்து உலக நலங்களுக்கு கொடுக்கும் பணி எனக்கு இல்லையானால், என்னை ஆட் கொண்டது என்பதன் பொருள் தான் என்ன? அருள் நெறியில் நிற்றல் என்பதன் பொருள் தான் என்ன? அருள் நெறியில் நிற்றல் என்பதன் பொருளே இது தான் என்றால், பிறருக்கு எந்த வகையான நன்மையும் செய்யாமல் யான் மட்டுமே பேரின்பம் துய்த்தல் என்ற செயலுக்கு அருள்நெறிநிற்றல் என்பது எப்படிப் பொருளாக அமையும் என்பதாக விளக்கங்காணும் முறையில் திருஞானசம்பந்தர் திருவாவடுதுறைப் பதிகத்தை அமைத்தருளுகிறார்.

அருள் மயமாக அருளில் ஒன்றி நிற்றல் என்பதே அவர்தம் நிலை. அவர் மூலமாகத் திருவருள் நேர் நின்று பணியாற்றத் தொடங்குகிறது. அருள் மயமாக நிற்பவர் தாமே எண்ணி, மக்களுக்குத் தேவையாக இன்னின்ன தேவை என்று கேட்பதாலும், அவனடியில் உறைத்து நிற்றலும், அடிமை என தம்மை ஒப்படைத்து,

'தாம்' என்பதை இழந்து நிற்றலும் ஆகியவை இல்லாமற் போய்விடும். ஆகையால், திருவருள் நெறியில் நிற்றல் என்பதை அடியவர்கள் அமைத்து விட்டால், அவர்கள் மூலமாகத் திருவருளே முன் நின்று யார் யாருக்கு என்னென்ன அமைத்துக் கொடுக்க வேண்டுமோ அதனைக் கொடுத்து விடுகிறது. அருளாளர்கள் மூலமாகவே கொடுக்கப் பெற்றாலும் கொடுத்தவருக்கு நாம் கொடுத்தோம் என்ற எண்ணம் தோன்ற முடியாத நிலையிலேயே கொடுத்தல் நடை பெற்று விடுகிறது. தான் என்ற நிலை அற்றுப் போக, தன்னை இழந்த நிலையில் அவர்களால் வழங்கப் பெறும் அருட்கொடையானது என்றும் வற்றாது பெருகும் இயல்பினதாக அமைகிறது. அதுவே திருவருளின் பேராற்றல். எனவே, சிவபாதவிருதயர் வேள்விக்குப் பொருள் கேட்டிருக்கலாம். ஆனால், திருப்பதிகக் கருத்து, என் தந்தைக்குப் பணம் கொடுக்க வேண்டுமே என்பதை உள்ளுறை யாகக் கொண்டதன்று. விலையுடை அருந்தமிழ் என்பது அருள் நெறியாகிய திருத்தொண்டு நெறியில் நின்றாலும் உலகத்தவர்களுக்கு உறு பயன் விளைய வேண்டும் என இப்பதிகத்துக்கு ஒரு பயனை விலையாக அமைத்து இதனைப் பாடுகிறேன் என்று குறிப்பிடுகிறார். தந்தைக்கு வேண்டிய பொன்னைக் கொடுப்பதே கருத்தாக இப்பதிகம் அமைந்ததாயின், இப்பதிகத்தின் திருக்கடைக் காப்பினுள்

> "... ... ... அருந்தமிழ் மாலை வல்லார்
> வினையாயின நீங்கிப் போய் விண்ணவர் வியனுலகம்
> நிலையாக மூன்றேறுவர் நிலமிசை நிலையிலரே"

என வேறொரு பயனை அமைத்துக் கூற வேண்டிய அவசியம் நேரா தென்பதாம். "வாசி தீரவே காசு நல்குவீர்" என்ற வீழிமிழலைப் பதிகம் வாசி தீர்த்தலைப் பயனாகக் கொண்டு பாடிய பதிகம் ஆதலின், அதன் திருக்கடைக்காப்பினுள் வேறுபயன் அமைத்துக் கூறுமையையும் இணைத்துக் காணவேண்டும். பொன் வந்ததும் திரு வருளுணர்வினால் இன்னதற்கு இது என்ற உணர்வு தோன்ற, அதன் பெருமை கூறித் தந்தையிடம் கொடுக்கும் அவ்வளவில் அமைந்து விட்டார் எனக் கொள்ள வேண்டும்.

நிகழ்வுகள், வரலாற்று அடிப்படைகள் உண்மையே. திருஞான சம்பந்தர் அருள் நெறியில் தம்மை அடிமையாக்கி நிற்கின்ற நிலையில் அவர் மூலமாகத் திருவருளானது வழங்க வேண்டுபவர்களுக்கு உரிய வைகளை வழங்குகிறது. அருளியலில் நிற்பவர்கள் கேட்டு, இறை யருள் கொடுப்பதில்லை. இவர்களைக் கருவியாக வைத்துத் திருவருள் இவர்கள் மூலமாக வழங்கி விடுகிறது அவ்வளவே. அருளாளர்கள் மூலமாக வரப் பெறுதலின், தாம் என்ற ஆணவம், தம்மைப் பற்றிய நினைவு இன்றி, திருவருளில் ஒன்றிநின்று கொடுக்கிறார்களாதலின் கேடில்லாமல் மேலும் மேலும் பெருகும் இயல்புடைய தாகின்றது.

இந்நிலையில், திருத்தொண்டுநெறியில் - தம்மை முற்றுக அடிமைப்படுத்தியநிலையில் - திருவருள் நிலையில் ஒன்றி நிற்கும்

அருளாளர்கள் தேவை. அவர்களே உள்ளிட்டுத் தான் திருவருள் தம்முடைய அருட் கொடையை வழங்க முடியும். அவர்கள் இல்லையானால், திருவருட் கொடை நிகழ்வதற்குரிய வாயில் இல்லாமற்போய் விடும். இந்நிலையில், திருவாவடுதுறையில் திருவருள் நெறியில் ஞான சம்பந்தர் நிற்க, பொற்கிழி தருதலாகிய அருட் கொடை அவரை முன்னிட்டுச் செயலாற்றுகிறது எனக் கொள்க.

இனி, சிவபாதவிருதயர் திருஞானசம்பந்தரிடம் யாகத்துக்குப் பொன் வேண்டும் எனக் கேட்டது நீதியாகுமா? திருஞானசம்பந்தர் எவ்வாறு பொருளை அமைத்துக் கொடுப்பார் என்று எண்ண வேண்டாமா? என்ற வினாக்களை எழுப்புவது உண்டு.

திருவருள் நெறியில் நிற்பவர்கள் இவ்வுலகுக்குத் தேவையற்றவர்கள். இவ்வுலகில் தாம் ஆற்றவேண்டிய கடமைகளைக் கூட ஒழுங்குபெறச் செய்ய மாட்டார்கள். ஒருவகையில், அவர்கள் தன்னலக் கொள்கையாளர்களேயன்றி, கடமையைக் கூட ஒழுங்குடன் செய்ய வேண்டும் என்ற எண்ணமில்லாதவர்கள் என அவர்களைப் பற்றிக் கூறுவது பிழையானது என்பதை உறுதிப்படுத்தவே அந்நிகழ்ச்சி அமைகிறது.

திருஞானசம்பந்தப் பெருமான் பிறந்து, மூன்றாண்டுகள் வரை வளர்ந்து, ஞானப்பால் அருந்திய வரையில் வளர்த்து நிறுத்திய பெருமை சிவபாத விருதயர்க்கும் பகவதியம்மைக்குமே உண்டு. இப்போது, திருஞானசம்பந்தர் தம்மை அருளில் இணைத்து, அடிமைப் படுத்தி நிற்கும் போது, அவர் செயலற்றுப் போக, ஆண்டான் செயலாக அனைத்தும் நடைபெறுகிற அந்நிலையில், மகனாக நின்ற ஞான சம்பந்தர் தந்தையென நின்ற சிவபாத விருதயருக்குச் செய்ய வேண்டிய கடமைகளைத் திருவருளே செய்கிறது. மேலும், சிவபாத விருதயர் வேள்வி செய்ய வேண்டும் என்றுதான் முன்பும் சொல்லியிருக்கிறாரே யொழிய, வேள்வி செய்யப் பொருள் தேவை என்று கேட்டதற்குச் சான்று இல்லை. பொற்கிழி வருதல், சிவபாத விருதயர்க்குக் கொடுக்கப் பெறுதல், ஆகிய நிகழ்வுகளைக் கொண்டு, அவர் பொருள் கேட்டிருக்க வேண்டும் என்ற கருத்தில் வரலாறு அமைக்கப் பெற்று விட்டது அவ்வளவே.

திருஞானசம்பந்தர் மூன்றாஞ் சுற்றுத் தலயாத்திரை தொடங்கும் போது

> "திங்கள் சடை அண்ணலார் தம்திருப்பதியாவையும் கும்பிட்டு
> எங்குந் தமிழ்மாலை பாடி ஏத்தி இங்கெய்துவன்" என்று
> தங்குலத் தாதையா ரோடும் தவமுனிவர்க் கருள் செய்தார்"

அப்போது, திருஞானசம்பந்தரின் தாதையாராகிய சிவபாத விருதயர்

"அருமையால் உம்மைப் பயந்த அதனால் பிரிந்து உறைவு ஆற்றேன் இருமைக்கும் இன்பம் அளிக்கும் யாகமும் யான் செய்ய வேண்டும் ஒருமையால் இன்னும் சிலநாள் உடன் எய்துவன்"

என்று, தவம் முற்றுமாறு அருமைச் செல்வம் தமக்குப் பிறந் திருப்பதை எண்ணிப் பிரிய முடியாமையும், ஆயினும், இருமைக்கும் நன்மை தரும் யாகம் செய்ய வேண்டிய கடமை இருக்கிறது என்ப தையும் எண்ணி, பிரிந்திருக்கவும் முடியாது, உடன் சென்று கொண்டே யிருக்கவும் முடியாது என்ற தம் இடர்ப்பாட்டைக் கூறி வருந்தி, ஏதோ ஒருவழியில் சிலநாள் உம்முடன் வருவேன் என்றுரே யொழிய, நீ இறைவனிடம் பொருள் வாங்கிக்கொடுக்கும் நாள் வரை யிலும் உடன் வருவேன் என்று யாண்டும் குறிப்பிட்டாரில்லை.

அடுத்து, ஞானசம்பந்தரே தமக்குப் புதல்வராக அமைந்து விட்ட பிறகு யாகம் செய்ய வேண்டும் என அவர் தந்தை நினைக் கலாமா? அதன் விடைதான் சிரபுரப் பெருமை. யார் யாருக்கு எந்த எந்த அளவில் பரிபக்குவ முதிர்வு அமைந்து, எது சரியான வழி என்று அமைகிறதோ அந்த அந்த வழியினை மேற்கொள்ள வேண்டும் என்பதே கடமை. அவ்வாறு செயற்பட வைப்பதே திரு வருள் ஆட்சிமுறை. அவ்வகையில், அவர்தம் மனநிலை அவ்வாறு அமைந்தது. அவ்வாறே, இனி வரும் திருநீலநக்க நாயனாரும் வேதிகை அமைத்து வேள்வி செய் முறையை மேற்கொண்டவராக இருக்கிறார். அது குறை என்பதாக யாரும் அமைத்துக் காட்ட இயலாது, வேள்விக் குண்டத்தில் எழும் தீயைச் சிவமெனக் கருதி, அதனை வழிபட்டு, உலகத் துயர்தீர அருள வேண்டும் என்று பிரார்த் தித்து, அவி சொரிந்து வழிபடல் உலக நன்மையை உட்கொண்டதே எனச் சேக்கிழார் அதனை விளக்கியமைத்ததையும் இணைத்துக் காண வேண்டும்.

பதிக இசைப் பாணர் திருநீலகண்ட யாழ்ப்பாணராதல்

திருஆவடுதுறையிலிருந்து தம் திருக்கோயில் செலவைத் தொடங்கிய திருஞானசம்பந்தர் திருக் கோழம்பம், வைகல் மாடக் கோயில் என்ற இரண்டு பதிகளை வணங்கித் திருப்பதிகம் அருளிச் செய்கின்றார்.

திருக் கோழம்பப் பெருமானை அருள் நெறியில் நின்று காணும் அருளாளராகிய திருஞானசம்பந்தர் மெய்ப் பொருள் விளக்கத் தத்துவம் ஒன்றை விளக்கி அமைத்தருளுகின்றார். காரைக் காலம்மையார் தம் அற்புதத் திருவந்தாதி ஒன்பதாம் அருட் பாடலாகிய

> "அருளே உலகெலாம் ஆள்விப்பது ஈசன்
> அருளே பிறப்பறுப்பது ஆனால் — அருளாலே
> மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன் எஞ்ஞான்றும்
> எப்பொருளும் ஆவ தெனக்கு"

என்பது ஒரு வகைப் புதிய திருப்பத்தைத் தத்துவ ஞானிகளுக்கு வழங்குகிறது. நூலறிவு பேசி நுழைவு இலாதார் தத்துவ ஆய்வுக்கு உரியவராகார். மேலும், மெய்ப் பொருள் காணும் அறிவு அறிவு என வற்புறுத்துபவர்கள் மெய்ப்பொருளியல் நோக்கில் எல்லா

வற்றையும் பார்த்து அறிதல் வேண்டும் என்பர். அம்மையார் மெய்ப் பொருளையும் அருள் நெறியில் நின்று பார்க்க வேண்டும். மெய்ப் பொருளறிவு எனப் பெறும் ஞானத்தால் காண்பவர்களும் உண்டு. ஆனால், அருளியல் வழி நின்று மெய்ப் பொருளைக் காண வேண்டும் என்று குறிப்பிடுகின்றார்.

சிவஞானசம்பந்தம் பெற்றுச் சிவஞானியாக நின்று பொருள் விளக்கத்தைக் கண்டும் காட்டியும் வந்த திருஞானசம்பந்தர் இப்போது அருள் நெறியில் நிற்கின்றார். திருத்தொண்டு நெறியில் நின்று திருவருளில் தோய்ந்து நிற்கும் அருளாளர் ஆகிய அவர் இப்போது அம்மையார் கூறியவாறு அருளால் மெய்ப் பொருளை நோக்குகிறார். அருள் நோக்கில் திருக் கோழம்ப நன்னகர் இறைவன், "வேதமும் வேள்வியும் ஆனான்" என்று குறிப்பிட்டுக் காட்டுகின்றார்.

வேதம் என்பதற்கு அறிதற்குரியது என்பது பொருள். வேள்வி என்பது அறிந்த ஒன்றை, அதன் பயன் துய்ப்பான் வேண்டிச் செயற்படுத்துவது. அறிதல் செய்தல் என்ற இரண்டால் இறைவனை அறியவும் செயலால் அடையவும் முடியும். இவ்விரண்டையும் ஞானம் கர்மம் என இணைப்பது மெய்ப் பொருளியல் வழக்கு. பரம் பொருளை அறியவும் வேண்டும் அடையவும் வேண்டும், என இயைபு படுத்திக் கூறுவர். அறிவு இவ்வாறு பயனளிப்பதாகையால் நன்மைப் பொருள்; செயல் இறைவனை அடைந்து அனுபவிக்கப் பயன்படுவதால் அதுவும் நன்மைப் பொருள். எனவே நன்மைப் பொருள்களாகிய அறிவும் செயலும் தேவை என்பது விளக்கம். திருவருட்பரர்வையில் ஞானசம்பந்தர் அருளுவது வேறு. அறிவு கருவியாக இறைவனை அடைதல், செயல் கருவியாக இறைவனை அடைதல் என்பது ஒரு புறம் இருக்கட்டும் அறிவு என்ற நன்மையாக இருப்பதும் அவனே. அறிவைத் துய்க்கும் போது இறைவனையே துய்க்கிறீர்கள், எந்த ஒரு செயலையும் எடுத்து ஆராய்ந்தால் இச் செயல் இப்படி இருப்பது என்பதன் உண்மையே கடவுளைத் துய்க்கும் முறைதான். எனவே அறிவும் செயலும் கருவிகளல்ல. அறிவாகவும் செயலாகவும் நான் துய்க்கின்றவை அப்பரம் பொருளே. இவ்விரண்டையும் இணைத்து, கோள் + அண் + பயம் என்ற மூன்று சொற்களை 'கோழம்பம்' என மருவி இக் காலத்தே அமைந்துளது.

திருஞானசம்பந்தருக்கு அருளால் மெய்ப் பொருளை நோக்கும் விதி அமைந்த நிலையில், அருளிப்பாடுகளை, விளக்கங்களை, அருள் வெளியீடுகளை அவர் காட்டிய நெறியில் நின்று உணர்தல் வேண்டும்.

அடுத்தது, வைகன் மாடக் கோயில். சோழன்செங்கணான் எண்டோள் ஈசற்கு எழுபது மாடம் அமைத்தான் என்பது வரலாறு. சைவ சமயத்தை அரண் என நின்று காத்த வதிகள் மூவர். புனிதவதி (காரைக் காலம்மையார்), திலகவதி அப்பரடிகளின் தமக்கையார்

பதுமவதி கோச்செங்கணான் தாயார். இன்னும் இரண்டரை, நாழிகைப் போது கடந்து இக் குழந்தை பிறப்பானாலும் நாட்டாட்சி மட்டுமன்றி, சைவ சமய அருளாட்சியையும் நீலி நாட்ட வல்ல னுவான் என்பதைக் கேட்டவுடன், குழந்தை காலங்கழித்துப் பிறக்க வேண்டும் என்பதற்காகத் தம்மைத் தலைகீழாகக் கட்டித் தொங்க விடுமாறு செய்து, பிள்ளைப் பேற்றுத் துன்பத்தை இயல்புக்கும் அதிகமாக, சைவ சமயம் தழைப்பதற்காகத் தாங்கிய அரச மாதேவியே கோச் செங்கணான் தாய். காலங் கடந்து பிறந்த குழந்தையின் கண்கள் இரத்தச் சிவப்பேறியிருப்பதைப் பார்த்து என்கோ — செங்கண்ணனே என்று கூறி விட்டு உயிர் பிரிந்தாள்.

கோச் செங்கணான் கோயில் கட்டிய திருத்தொண்டு நெறியைப் பாராட்டுகிறார் சம்பந்தர். இம்மையிலே மனிதியின் பிறந்தகம், அதனை அவன் விரும்பித் தங்குமாறு செய்தது உமையம்மை மேல் வைத்த காதல். செங்கண்ணன் வடமலையனைய நன்மாடக் கோயில் அமைத்தான். அதன் பெயர் 'வைகல்'. வெளியில் சென்றிருக்கிறார் இன்று அவர் இல்லை என்று சொல்லாதவாறு என்றும் அங்கேயே இருப்பவராக அமைத்து விட்டான். வெளியில் செல்ல இயலாதவாறு பிணித்துப் போட்டு விட்டான். எல்லாப் பொருள்களுக்கும் நித்தியத் தன்மை வழங்கும் பரம் பொருளுக்கு, இடத்தையும் காலத் தையும் இணைத்து நித்தியப் பொருளாக ஆக்கி விட்ட பெருமை செங்கண்ணனுக்கு உண்டு. மனையின் பிறந்தகம் என்றூர் போல மற்றவர்களின் இடத்தில் ஒண்டிக் குடியிருந்தவனுக்கு, உரிமைக் குடில் என்ற திருக்கோயிலை அமைத்து அவனை உடைமையாளனாக ஆக்கி விட்டான்.

> "மைந்தனது இடம் வைகல் மாடக் கோயிலை,
> ஞானசம்பந்தன் தமிழ் கெழு பாடல்"

என்று திருக்கடைக் காப்பினுள் திருக்கோயில் திருப்பணிப் பெருமையை வியந்துரைக்கிறார்.

அடுத்து, திருநல்லம் அடைகிறார். நல்லம் நகர் மேயவனை 'நல்லான்' என்றருளுகிறார். திருவருள் நெறியில் நின்று ஒரு பேருண்மையை விளக்குகின்றார். திருத்துருத்தி இதன் பின் வருகிறது. திருத்துருத்திப் பதிக விளக்கம் முதற்பகுதியிலேயே அமைக்கப் பெற்றுள்ளது.

துறவு இறைவன் கொள்கை அன்று. அவன் துணைவியோடிருந் தாலும் இல்லறத்தானல்லன். இரண்டற்கும் இடை நின்ற ஒரு உறவு முறையை அருள்நிலைத் துணையால் விளக்குகின்றார்.

போகம், யோகம் என்பன இரு சொற்கள். திருமாலும் பிரமனும் தத்தந் துணைவியர்களுடன் போகத்தில் ஈடுபடுகிறார்கள். அவர்கள் பெறுவது பொலிவு மட்டுமே. போகத்தில் துய்ப்பு உண்டு. துய்ப்பு நிலைக்குரிய பொலிவு மட்டுமே உண்டு. சிவன் உமையம்மையுடன்

இணைய அமர்தல் யோகம். (யோகம்-கூடுதல்) இங்கே துய்ப்பு இல்லை. அழகே உருவாகிய அவளை எந்நாளும் பிரியாமல் உடம்பில் ஒரு பாதியாக இணைத்து அமர்ந்தான். இணைந்திருத்தல், அமர்தல்-விரும்பி இணைந்திருத்தல். அழகே உருவாகிய அம்மையுடன் அமர்ந்தபோது பொலிவுக்குப் பதிலாக அழகாகவே — பெருகும் அழகாகவே இருவரும் அமைகிறார்கள். இதுவே அருள் நெறி நின்ற அழகு. நல்லம் — நன்மையில் நின்ற அழகு. நன்மை என்பது அருளைக் குறிக்கும். இறைவன் மேற்கொண்டது இல்லறமா, துறவறமா என்ற ஐயத்தை மிகத் தெளிவாக நீக்கிக் காட்டும் விளக்கம்.

> "நாகத்து அணையானும் நளிர்மா மலரானும்
> போகத்து இயல்பினுற் பொலிய, அழகாகும்
> ஆகத்து அவளொடும் அமர்ந்து அங்கு அழகாகும்
> நாகம் அரையார்த்தான் நல்லம் நகராளே"

என்பது திருநல்லம்பதிகத்து ஒன்பதாந் தேவாரம். இப்பகிகத்தின் முதல் தேவாரத்தில்,

> "கல்லால் நிழல் மேய கறைசேர் கண்டா என்று
> எல்லா மொழியாலும் இமையோர் தொழுதேத்த"

என்று அருளுகிறார். எல்லா மொழியாலும் என்பதற்கு ஆரியம் தமிழ் என்ற எல்லா மொழியாலும் என்று உரை கண்டுள்ளார்கள். வேண்டுதல், அவன் இயல்பு கூறுதல், வாழ்த்துதல் முதலியவாக உள்ள எல்லா வகையான பொருளடக்கமும் அமைந்த மொழிகளாற் கூறித் துதித்தார்கள். எல்லாம் நீயே என்று பொருள் கொள்ளும் நிலையில் அமைந்த மொழிகளையே கூறித் துதித்தார்கள். ஏனெனின், முப்புராதிகளை அழிக்கப் போகுமுன் அவனே மகாதேவன் என்பதை ஏற்றுக்கொள்ளும் நிலையில் அவர்கள் துதித்தார்கள் என்பதாம்.

அடுத்து, 'தருமபுரம்' என்ற திருத்தலத்தை அடைகிறார். அது திருநீலகண்ட யாழ்ப்பாணரின் தாயார் பிறந்த பதி. திருநீலகண்ட யாழ்ப்பாணரைத் தம் வயிற்றில் ஏற்று வெளிப்படுத்தும் ஆற்றல் வாய்ந்த களம் அமைந்த திருத்தலமே திருத்தருமபுரம் என்னும் பதி. திருநீலகண்ட யாழ்ப்பாணரின் வாழ்வில் ஒரு திருப்பு முனையை இத்தலத்து நிகழ்ச்சி அமைத்துக் கொடுக்கிறது.

திருநீலகண்ட யாழ்ப்பாணர் தருமபுரத்தை அடைந்ததும் அவ்வூரில் உள்ள பாணரின் உறவினர்கள் திருநீலகண்ட யாழ்ப் பாணரை எதிர் கொண்டழைத்து, அவர் தம் திருவடிகளை வணங்கி வாழ்த்தினார்கள். சுற்றத்தார்கள் வணங்குதல் என்ற நிலையைச் சிந்தித்தார் பாணர். தம்மைத் தம் சுற்றத்தார் வணங்கத் தகும் பேறு எதனால் என்பதைப் பாணர் சிந்தித்தார். தொடர்ந்து இறைபணி யொன்றே செய்து வரும் காரணத்தால் தமக்கு இப்பேறு கிடைத்தது என எண்ணலாம். தாம் தனித்து நின்று இறைவன் புகழைப் பாடும்

ஆற்றலுடையவர். மேலும், மதங்க சூளாமணியாருடன் இணைந்து பாடவும், பாடிக் கொண்டே யாழ் மீட்டவும் வல்லவராக அமைந்தவர் திருநீலகண்ட யாழ்ப்பாணர்.

திருநீலகண்ட யாழ்ப்பாணர் திருஞானசம்பந்தருடன் இணைந்து இசைத்தொண்டு செய்யத் தொடங்குதற்கு முன்னமேயே யாழிசையில் வல்லமையும், அதனால் அக்காலத்தே அவர் மக்கள் மத்தியில் பெரும் புகழ் பெற்றிருந்தமையும் வரலாற்று முறையால் நாம் உணர முடிகிறது. திருஞானசம்பந்தர் ஞானப்பாலருந்தியதும், திருப்பதிகம் அருளுவதும் ஆகிய நிகழ்ச்சிகளை அறிந்த திருநீலகண்ட யாழ்ப்பாணர், திருஞானசம்பந்தரை வணங்குவதற்கு வருகிறார். திருநீலகண்ட யாழ்ப்பாணர் திருஞானசம்பந்தரைக் காண வரும் செய்தி, திருஞானசம்பந்தருக்குத் தெரிவிக்கப் பெறுகிறது. தாமே சென்று அவரை வரவேற்று அழைத்துவரச் செல்கிறார் திருஞான சம்பந்தர். திருஞானசம்பந்தர் ஞானப்பால் நிகழ்வும் பிறவும் கேட்டு, அவர் தம் ஊருக்கு வந்து அவரை வணங்கிச் சென்றவர் பல்லாயிரவரிருப்பர். இன்று இன்னர் வருகிறார் என்று குறிப்பிட்டுச் சொல்லப் பெற வேண்டிய நிலை தோன்றுமானால், அவர் மக்களால் அறிந்த பொதுமைநிலையிலன்றி, தகுதி வாய்ந்த சிறப்பு நிலையினால் அறியப் பெற்றவராக இருத்தல் வேண்டும். திருஞானசம்பந்தர் சென்று வரவேற்கத் துணிந்த போது, அதை அனைவரும் ஏற்கும் நிலை இருந்திருக்கிறதென்றால், அந்த அளவுக்கு அவர் மக்கள் மத்தியில் புகழ் பெற்றவராக இருந்திருக்க வேண்டும். திருஞானசம்பந்தர் சென்று வரவேற்க வேண்டும் என எண்ணியமைக்கு அவர் தம் சிவஞானம் துணை செய்திருக்கலாம். ஆனால், பொது மக்களால் புகழ் மீக்கூறப் பெற்றமையாலேயே, இன்னர் இன்று வர இருக்கிறார் என்ற செய்தி ஞானசம்பந்தருக்குத் தெரிவிக்கப் பெறுகிறது. எனவே, திருநீலகண்ட யாழ்ப்பாணர் திருஞானசம்பந்தருடன் இணைந்து தொண்டாற்றுவதற்கு முன்னமேயே இசைத் துறையில் புகழ் பெற்று விளங்கியிருந்தவர் என்பது உணர்தற்குரியது.

இந்நிலையில், திருத்தருமபுரத்தை அடைந்த பாணரை அவர் தம் உறவினர்கள் பணிந்து வணங்கவே, அவர்களுக்கு மறுமொழி தரும் வகையில், தாம் திருஞானசம்பந்தரின் திருப்பதிகங்களை யாழிலிட்டு வாசிக்கும் பேற்றினால் விளைந்தது இப்பெருமை என்று கூறுகிறார். அதனைக் கேட்ட உறவினர்கள், 'நீங்கள் திருப்பதிகத்தை யாழிலிட்டுத் தக்க முறையில் வாசிக்கின்ற காரணத்தினால்தான் திருப்பதிகத்தின் பெருமை, இசை எங்கும் பரவுவதாயிற்று' என்று கூறினர்கள். சுற்றத்தார் கூறியவை முகமனுரையேயாயினும், திருநீலகண்ட யாழ்ப்பாணர் திடுக்குற்றார். பின்னர், பாணனார், திருஞானசம்பந்தரைப் பணிந்து, திருப்பதிக இசை அளவுபடாத் தன்மையதென்பதை இவர்களேயன்றியும், உலகிலுள்ளோரும் தெரிந்து கொள்ள வேண்டும். ஆகையால், அப்படிக்கொத்த பண்புடைய இசைப்பதிகம் ஒன்றைப் பாடியருள வேண்டும் என்றும் அவ்வாறு பாடினால், விளங்கும் அந்த இசையானது யாழில்

என்றும் அடங்காத முறையை யான் காட்டுவேன் என்றும் வேண்டு கின்றார்.

திருநீலகண்ட யாழ்ப்பாணர் கேட்டுக் கொண்டவாறு, திருஞான சம்பந்தர் இறைவனை வணங்கி, பூமியிலுள்ளோர் கண்டத்திலும், கருவிகளிலும், இப்புவிவாழ் இசை நூல்கள் அமைத்துக்காட்டிய இசை வேறுபாடுகளுள் எந்த ஒன்றிலும் முயற்சி செய்து அடக்க முடியாதவாறு ஒருவகை இசையமைத்து, 'மாதர் மடப்பிடி' என்று எடுத்துப் பதிகம் பாட முற்பட்டார்.

'மாதர் மடப்பிடி' எனத் தொடங்கி, பதிகம் பாடி, திருக்கடைக் காப்பும் அமைத்து முடித்து, பின்னர்ப் பெரும்பாணனுரிடம் கொடுத்து, யாழில் வைத்து இசை மீட்டுமாறு கேட்டுக் கொண்டார். மாதர் மடப்பிடி எனத் தொடங்கும் அப்பதிகத்து இசை நரம்பில் இட, அது யாழின் ஆற்றலுக்குள் அடங்கி நில்லாமல் மேலோங்கி நின்றது. திருப்பதிகத்து இசையானது யாழில் அமைத்து இசைக்க முடியாமையால் பதறியெழுந்து, பாணனுர் திருஞான்சம்பந்தர் தம் திருவடி வணங்கி, "இப்பெரியோர் அருளிச் செய்த திருப்பதிகத்து இசையை யாழில் ஏற்பேன்" என்று நான் தருக்கிச் சொன்னமைக்குக் காரணம் இக்கருவியை யான் தொடுதலினுல் தான்; "இத்தலவு இந்த யாழினுல் வீணாந்தது" என்று சொல்லி, அந்த யாழை உடைப்பதற்காக ஓங்கினுர். அந்நிலையில் ஞானசம்பந்தர் அதனைத் தடுத்து, "என்ன இது! இக்கருவியை உடைப்பதால் பயன் என்ன? நம்மால் அறியப் பெற முடியாத இறைவன் திருவருளின் பெருமையெல்லாம், நம்மால் தெரிந்து அமைப்பதற்காக எய்திய இக்கருவியில் அமைக்க முடியுமா? நம் இயல்புக்கேற்ப, உலகத்தவர் அறிவுக்கு உட்படும் வகையில், இக் கருவியானது ஏற்கும் இயல்புக்கொத்த வகையில் திருவருட் பெருமையை அமைத்து இசையாக்கிக் கொடுத்தல் தான் வழக்கு" என்று கூறி, யாழை அவர் கையிலிருந்து வாங்கிக்கொண்டு பாணரைப் பார்த்து "ஐயரே! சிந்தையால் அளவுபடாத தன்மையது திருவருளின் இசைப் பெருமை. சிந்தையிலேயே அளவுபடாததைச் செயலில் அளவுபடுத்தமுடியுமா! இந்த யாழைக் கொண்டே இறைவர் திருப்பதிக இசையானது எய்துவிக்க, வந்தவாறே பாடி வாசிப்பீர்" என்று கூறி அந்த யாழினைப் பாணர்தம் திருக்கரத்தில் கொடுத்தருளினுர். அவரும் புகலி மன்னர் தந்த யாழினைத் தொழுது கைக் கொண்டு பணியினைத் தலைமேற் கொண்டார்.

சேக்கிழார் தம் திருவாக்கினை யொட்டி, மேலே உள்ள வரலாறு அமைக்கப் பெற்றுள்ளது. இவ்வரலாற்றினை அடிப்படையாகக் கொண்டு எழுந்த அறிஞரின் ஆய்வுரைகள் பல்வேறு நிலையுடையன வாயின. திருஞானசம்பந்தர் காலத்துக்கும் சேக்கிழார் காலத்துக் கும் நீண்ட இடைவெளி. இவ்விருவர்க்கும் இடையே நம்பி யாண்டார் நம்பிகள் அமைகிறார்கள். அவர்கள் வரலாறு சொல்ல வேண்டும் என்ற கொள்கையின் அமைப்பில் நாயன்மார்களுடைய

எல்லா நிகழ்ச்சிகளையும் அமைக்க வில்லை. எனினும் அவர் அமைத்த நிகழ்ச்சிகள் வரலாற்று நிகழ்வுகளே. நம்பியாண்டார் நம்பிகளுக்கும் சேக்கிழாருக்கும் உள்ள இடைவெளியையும் கருத்திற் கொள்ள வேண்டும். வரலாற்றை அமைக்க வேண்டும் என்ற கொள்கை யுடையவர் சேக்கிழார். ஆனால், மக்கள் வழக்கு முறையில் மிகவும் ஆழமாக வேருன்றியுள்ள கருத்துகளை மாற்றியமைப்பதும் சிந்திக்க வேண்டிய ஒன்று. இவ்வகையில் இயலுகின்ற வரையில்தான் மாற்றி அமைக்கப்பெற இயலும். மக்களால் வழங்கப் பெறுபவை எல்லாமே வரலாறு எனக் கொள்ளவும் முடியாது, கற்பனையே என்று முற்றுக ஒதுக்கவும் முடியாது. இத்தகு இடர்ப்பாட்டு முறை சேக்கிழாருக்கு உண்டு. சேக்கிழார் காலத்துக்கும் இற்றைக்கும் இடை அமைந்த இடைவெளி பெரிது. வேறுபாடு மிக்க வரலாற்றைத் தன்னுள் அடக்கிய காலப் பகுதி.

நம்முடைய பணியும் நிகழ்வுகளின் இணைப்புகளை உண்மைப் படுத்த வேண்டும் என்பது மட்டுமேயன்று. ஞானசம்பந்தரின் வாழ்வும் வாக்கும் நமக்கு அமைத்துக் கொடுத்த பணிகள், அருளியல் அமைப்புகள் ஆகியவைகளை ஞானசம்பந்தரின் வழி நின்று அறிதல் வேண்டும். இவ்வகையில் தருமபுர நிகழ்ச்சியை அமைத்தல் வேண்டும்.

திருஞானசம்பந்தப் பெருமான் ஒரேயொரு திருப்பதிகம் தான் இத்தலத்தில் பாடியுள்ளார். பதிகம் பாடப் பெற்ற சூழல், உள்ளுறை ஆகியவைகளைக் குறித்துச் செய்வதே அவர் மேற் கொண்ட நெறி. இந்நிலையில் திருக்கடைக் காப்பு அளிக்கும் விளக்கத்தினடியில் இதை நாம் கொள்ளலாம்.

தருமபுரம் பதியைச் சுட்டிக் கூறும் ஞானசம்பந்தர் யாழ் மூரி நாதர் என்ற பெயரைச் சுட்ட வில்லை. அம்மையின் பெயர் மதுர மின்னம்மை. இனி, இங்கே 'தருமபுரம்' என்ற பெயர் பாண்டவர் களில் ஒருவனாகிய தருமன் பூசித்தான் என்ற வரலாற்றையுட் கொண்டது என்பது வழக்கு. ஞானசம்பந்தர் பதிகத்தில் அக் குறிப்பும் இல்லை. இயமனுக்குத் தருமன் என்ற பெயர் உண்டு. அவனைக் காலால் உதைத்து மார்க்கண்டேயனைக் காத்த நிகழ்வு திருக்கடவூரை அடிப்படையாகக் கொண்டது. இப்பதிகத்தில் சிறப்பாகக் கூறப் பெறுவது ஏற்றின் இரண்டு நிலை. வெள்ளேற்றினை ஊர்தியாகவும் கொடியாகவும் பேசப் பெறும் சிறப்பு இப் பதிகத்தில் ஆறு முறை பேசப் பெறுகிறது.

பொங்கு நடைப் புகலில் விடை, விண்ணுறு மால் வரை போல் விடை, கடு விடை கொடி, ஊர்வது போர் விடை, வலம் மலி படை விடைக் கொடி, என்று கூறிய ஞானசம்பந்தர் இறுதியாக, சாம வேதம் பாடி அலறிப் போற்ற, தாண்டிச் செல்வதாகிய ஏற்றினை யுடையான் என்று பொருள்படும், "பாவணமா அலற, தாவண ஏறுடையெம் அடிகள்" என்று குறிப்பிடுகிறார். இப்பதிகம் இத்தலம்

ஆகிய எல்லாம் அறத்தின் இருவகை நிலைகளே அடிப்படையாகக் கொண்டவை என்று கருத வேண்டும் என்று அருளுகிறார் ஞான சம்பந்தர். அறத்தின் பொது நிலையைக் குறித்து இயல்பாகக் கூறும் விடையேறி என்பது போன்ற வழக்கினை இணைக்காமல், விடையின் பேர் நிலை குறிக்கப் பெறுதலும், உமை மகிழ்ந் திருத்தலோடு, அடிகளாம் திருவேடம் பேசப் பெறுதலும், பதிகத்தில் காணப்பெறும் கூத்து முதலிய அமைப்பும் உளம்கொளும் போது அறத்தின் இருநிலைகளில் அமைந்த நிகழ்ச்சி அருளப்பெறுகிறது எனக்கொள்ளலாம்.

இங்கே ஞானசம்பந்தப் பெருமான் தம்மைப் புகலியுடன் இணைத்துக் கொண்டு, தன்பதிகத்தைச் செந்தமிழ் என்று குறித்து, அதனை வல்லவர் பாடுவர் எனக் கூறுது, பேணுதல் உரியார் என்று குறிப்பிடுகின்றார். எனவே, தொண்டுநெறியின் மேல் அமைந்த திருத்தொண்டு நெறியில் நிற்க வேண்டும் என்பதாயிற்று. ''பேணலால் எம்மைப் பெற்றார்'' என்ற சேக்கிழார் திருவாக்கை உன்னுக. பயன் யாது? இன்னெடு நன்னுலகெய்துவர் எய்திய போகமும் உறுவர், ''(கள்) இடர் பணி துயர் அணைவ் விலர்'' என்று குறிப்பிடுகின்றார்.

சீகாழியின் மூன்றாவது பெயராகிய புகலியோடு தம்மை இணைத்துக் கொள்ளும் சம்பந்தர் திருத்தருமபுரத்தில் எல்லோரும் வந்தெய்துவர் என்று குறிப்பிட்டு, அவர்கள் இடர், பிணி முதலிய வைகளை அணையார் என்றமையின் தருமபுரம் பதிப்புரம் ஆம் பேறு பெறுகின்றது என்று கொள்ளலாம்.

இதை வலியுறுத்தும் வகையில் பண்ணின் அமைப்பு விளக்கம் பெறுகிறது. நம் சிந்தையாலேயே அளவு படுத்தப் பெற முடியாத ஒன்றைச் செயலால் அளவு படுத்த முடியாது என ஞானசம்பந்தர் அருளுகிறார் என்பது சேக்கிழார் வாக்கு. திருப்பாச்சிலாச் சிராமத்துத் திருப்பதிகத்து நான்காந் தேவாரத்தில் திருஞான சம்பந்தர்

''மாந்தர் தம் பால்நறு நெய்மகிழ்ந் தாடி
வளர்சடை மேற்புனல் வைத்து
மோந்தை முழாக்குழல் தாளமோர் வீணை
முதிரவோர் வாய்மூரி பாடி
ஆந்தை விழிச்சிறு பூதத்தார் பாச்சி
லாச்சிரா மத்துறை கின்ற
சாந்தணி மார்பரோ தையலோ டாடச்
சதுர் செய்வதோ இவர் சார்வே''

என்று கூறியதன் கருத்தை நோக்குதல் பயனுடைத்தாம். இவர் சார்வு என்பதன் பொருள் இரண்டு வகைப்படும். பதியெனும் பொருள் தங்கியிருக்கும் இடம், சார்ந்திருக்கும் இடம் எனப் பொருள் படும் பாச்சிலாச்சிராமத்தினில் உள்ள திருக்கோயிலில் சார்ந்திருக்கும்

இவர் என்பது ஒருபொருள். அவ்வாறே, மழவன் மகள் உயிரின் உள்ளேயும் சென்று சார்ந்திருக்கும் இவர் என்பது இரண்டாவது பொருள்.

உலகமெலாம் வாழ, உயிர்களெலாம் நன்னிலை யெய்த ஒரு பரம்பொருள் நள்ளிருளில் அம்பலக் கூத்து ஆடுகின்றது. அப்போது உமைகாண, பூதங்கள் வாழ்த்தொலி செய்ய, இவ்வாறு பலவகைக் கணங்களும் சுற்றங்களும் சூழ நின்று ஆடுகின்றது. அப்போது ஆடுவதுதவிர மற்றைப் பணிகளை உடன் அமையும் கணத்தினர் செய்கின்றனர். அப்பெருமானர் நிலவுலகில் ஒரு தலத்தைத் தம் முடைய பதியாக அமைக்கும்போது அவரே எல்லாச் செயல்களையும் செய்கிறார். அவ்வகையில் பாச்சிலாச்சிராமத்து உறைகின்றவர், அத்தலத்தைப் பதியாகக் கொண்டவர், பதியின் இடமாக அமைத்துக் கொண்டவர், சாந்தணி மார்பர், மாந்தர் தம்பால் நறு நெய் மகிழ்ந்தாடி, புனல் வைத்த அவர், மோந்தை, முழா, குழல், தாளம், வீணை ஆகியவை முதிருமாறு ஒரு வாய்மூரியைப் பாடுகிறார். அவரே பூதத்தராகி, பாச்சிலாச்சிராமத்துறைகின்றார் என்பது அத் தேவாரம் காட்டும் பொருள்.

பதியின் இடம் என்ற பொருள்தரும் பாச்சிலாச்சிராமம் போலவே தருமபுரமும் பதியின் இடம் என்று பொருள் தரும் முறையிலேயே, அப்பதிகம் முழுவதிலும் 'தருமபுரம் பதியே' என்று முடித்துக் காட்டுகின்றார். பதியின் இடம் என்றால் என்ன? சார்ந்து நிற்பதற்கென வந்த பொருள் மெல்ல மெல்ல, தான் எதனைச் சார்ந்து நின்றதோ அதனைத் தன் வயப்படுத்தி, தானே உரிமைப் பொருளாக அமைந்து விட்டது. சாரவந்த பொருள் பதிப் பொருள் ஆயிற்று. சாரவந்து நின்ற காலத்தில் அவன் தனித்தே வருகிறான்; சார்கிறான். சார்பிடத்தைத் தன்னிடமாகக் கொண்டபோது, தானே செயற்படு கிறான்; சார்ந்த பொருள் நன்மை பெற வேண்டும் என ஆடுகிறான். அப்போது, அவனே பால் நறு நெய் மகிழ்ந்தாடி, வளர்சடை மேற் புனல் வைத்துக் கொள்கிறான். பல்வகைப் பூத கணங்கள் செய்யும் பணிகளைத் தாமே செய்து கொள்கிறான். அத்தகைய பணி களில் ஒன்று மோந்தை, முழா, குழல், தாளம், வீணை ஆகிய இசைக் கருவிகள் எல்லாம் முதிர்ச்சியடைய வேண்டும் என்று 'வாய்மூரி' பாடுவது. இச்செயல் திருப்பாச்சிலாச்சிராமத்தில் நடைபெறுகிறது. இசைக் கருவிகள் முதிர்ச்சியடைவதற்காக, வலிமை பெறுதற்காக அவன் பாடுவது 'வாய்மூரி'. அவ்வாரூயின், யாழானது அத்தகைய வலிமை பெறவேண்டும் எனப் பாடப் பெறுமாயின் அது 'யாழ்மூரி' எனப் பெறும் எனத் தெரிகிறது. எனவே, மூரி என்பதற்கு முதிர்தல், வலிமை பெறுதல் என்பதே பொருள் என்பதைத் திருப்பாச்சிலாச் சிராமத்துத் திருப்பதிகத்து ஐந்தாந் தேவாரத்தால் உணரலாம்.

மேலும், திருநீலகண்டக் கூத்து எனப் பெறும், திருவம்பலக் கூத்தினை ஆடும் முறையினைத் திருவையாற்றுப் பதிகத்தில் குறிப்பிடு கின்றார். கோடல்கோங்கம் என்று தொடங்கும் திருவையாற்றுப் பதிகத்தில்

"பாடல் வீணை முழவம் குழல் மொந்தை பண்ணுகவே
ஆடுமாறு வல்லானும் ஐயாறுடை ஐயனே"

என்றும்,

"வண்ணம் பாடி வலிபாடித் தம் வாய்மொழி பாட"

என்றும் குறிப்பிட்டுள்ளன நோக்குக. இங்கே அவன் அமைப்பதே அருளொலி. அது பிற ஒலிகளோடு கலந்து நிற்கும்போது, அருளைத் தாங்கி வெளிப்படுத்தும் நிலையை ஏனைய ஒலிகளும் பெறுகின்றன. இங்கேதான் கலிகடிந்தகையானுக மாறுதற்குரிய ஒலியை — அருளொலியை — திருநீலகண்டத் திருவருளொலியைத் தம்முடையதாக ஆக்குகிறார் திருஞானசம்பந்தர். அவ்வொலி கலந்த பதிகத்தைக் "கலிகடிந்தகையான் கடற் காழியர் காவலன் ஒலிகொள் சம்பந்தன் ஒண்டமிழ்ப் பதிகம்" என்று குறிப்பிடுவதை ஓர்ந்துணர்க.

இவ்வடிப்படையில் திருத்தருமபுரம் பதியின் இடமாக அமைகிறது. அங்குள்ளவைகளைத் தம்பால் — தம்முடையனவாக அமைக்கிறான். அவைகளைத் தம்முடைய இடமாகக் கொள்ளும் போது அவன் செய்யும் செயல் பேசப் பெறுகிறது. இதனை வேறோர் எடுத்துக் காட்டினால் அறியலாம்.

திருநீலகண்டத்துப் பாணர் என்பது பெரும் பாணரின் பெயர். திருநீலகண்டம் என்பது பெயர். இது அவருடைய உயிரின் உள்ளே கலந்துள்ள பரம்பொருளின் பெயர். உயிர் அதனின் வேறுயது. உயிரின் வேறுயது அவர் உடம்பு. திருநீலகண்டம் என்பது உடம்புக்கு இட்ட பெயரா உயிருக்கு இட்ட பெயரா உள்நின்ற பரம் பொருளுக்கு இட்ட பெயரா என்றால், உள்நின்ற பரம் பொருளின் பெயர்; அதற்கு அது இயற் பெயர். பின்னர், அதைச் சார்ந்திருக்கும் உயிருக்கும், பின்னர் அதைச் சார்ந்திருக்கும் உடலுக்கும் ஆகுபெயராக அமைகிறது. பதியென நிற்பது மூலப் பொருள்; பசு என நிற்பது உயிர். உயிரானது உடம்பைச் செயற் படுத்தும். உயிரின் அளவுக்கு ஏற்பவே செயல்படுவது உடம்பின் பணி. இனி, உடம்புக்கென அமைந்த ஆற்றல் தான் என்ன; என்ற வினாவை எழுப்பினால், அதன் விடையைத் தமிழ் இலக்கணம் வழங்குகிறது.

உயிர்மெய் என்பது உயிரும் மெய்யும் என்ற பொருள் தரும். மெய் எழுத்துக்கு அரை மாத்திரை; உயிரெழுத்துக்கு, குற்றெழுத்தாயின் ஒரு மாத்திரை, நெட்டெழுத்தாயின் இரண்டு மாத்திரை. இனி, 'அ' என்பது உயிர்க்குறில்; ஒருமாத்திரை. 'க்' என்பது உயிர் மெய்க் குறில். இங்கே க்+அ எனப் பிரித்து நிறுத்தி, மெய்யெழுத்தாகிய 'க்' என்பதற்கு அரைமாத்திரை; 'அ'என்ற உயிரெழுத்துக்கு ஒரு மாத்திரை. எனவே 'க' என்ற உயிர்மெய்க்கு ஒன்றரை மாத்திரை ஒலித்தல் வேண்டும். அது கணக்கு முறை. எழுத்து முறையில், உயிருடன் மெய் இணையும் போது, செயற்பாடு இருந்தாலும், மெய்யானது தன்னை உயிருக்குள் அடிமையாக்கி, தன் உரிமையை

இழந்து விடுகிறது. ஏறிய உயிரின் அளவே, உயிர்மெய்க்கு அளவு அல்லது மாத்திரை. இவ்வகையில் ஒன்றரை மாத்திரை பெற வேண்டிய 'க' என்ற உயிர்மெய்யெழுத்தானது, ஒரு மாத்திரைதான் பெறும். இனி, உயிரின் உள்ளே அமைந்த வேறொரு பொருள் உண்டு. அதற்கு மாத்திரை உண்டா எனில், அது வெளிப்பட்டு ஒலிப்பதில்லையே எனில், அதை உணர்த்தும் போக்கிலேயே, மெய்யுயிர் எனக் கிடக்கை முறையிற் கூறுமல், 'உயிர்மெய்' என அமைத்துக்கூறியது என அதன் நுட்பம் அறிந்துணர்தல் வேண்டும். க், ங் என்ற எழுத்துகள் மெய்யெழுத்துகளே; 'அ' என்பது ஒன்றே உயிர். ஆ, இ என்பனவும் உயிரெழுத்துக்களேயாயினும் 'அ' என்பது உயிரென நின்று இயக்குவதால், 'அ' என்பதை நோக்க ஆ, இ, ஈ; ஆகியவை உடம்பு எனப்பெறும் மெய்யெழுத்துகளே. க், ங், என்பவைகளே நோக்க ஆ, இ,ஈ என்பவை உயிரெழுத்துகளே. எனவே, ஆ, இ, ஈ ஆகியவைகளுக்கு உயிரும் மெய்யும் என்ற இருதன்மையும் உண்டு. 'கி' என்பதை உயிர்மெய் என்றது 'க்' என்பதை இயக்கும் முலஉயிரும், மெய்யும் இணைந்த எழுத்து என்பதனுலேயே.

இனி, உள்ளிருக்கும் — உயிர்க்குயிராயிருக்கும் பதிப் பொருள் வெளிப்படுமேயானுல் அப்பொழுது ஏனை இரண்டும் எவ்வாறு செயலாற்றும்? மெய்யானது உயிர்மெய்யான காலத்தில் தன்னை உயிரினுள் அடக்கித் தன் மாத்திரை முதலியவைகளை நீக்கிவிட்டு உயிரின் மாத்திரையையே தன்னுடைய மாத்திரையாகக் கொண்டு ஒலிப்பது போல, உயிரும் தன்னைப் பதிப்பொருளில் ஒடுக்க, அப்பதிப்பொருள் உயிரில் கலந்து உயிரிலும் தன்னையே விளங்கச் செய்து, அவ்வாறே உடலில் கலந்து உடலிலும் தன்னையே விளங்கச் செய்யும். பதியெனச் சார்ந்துநின்ற பொருள் வெளிப்படும்போது, உயிரும் உடம்பும் அதன் பெருமைகளையே தம் பெருமைகளாகக் கொண்டு செயற்படும். அவ்வகையில் தத்தம் தனித்தன்மைகள் பதிப்பொருளிற் கலந்து விடும். அவ்வாறே, யாழ் என்பது மெய்யெழுத்தைப் போல. அதற்கென்ற ஒருவகைச் சிறுஒலி இருக்கும். அதில் உயிரின் ஆற்றலால், மொழிச் சொற்களை - இசையாக அமைக்கும் போது, இசைப்பவரின் ஆற்றலுக்கேற்ப அது ஒலிக்க வல்லதாகிறது. அதுவே, வலிமை பொருந்திய திருவருளிசையை வெளிப்படுத்த வேண்டுமெனில், இயல்பாக அந்த யாழுக்கு ஆற்றல் இல்லையாயினும், வந்து கலக்கும் பேராற்றலே ஏற்று வெளிப்படுத்தும் ஆற்றல் யாழுக்கு உண்டு. யாழினை வலிமையுடையதாக அமைக்கும் ஆற்றல் வாய்ந்த அருளிசையானது யாழில் வந்து அமையுமேல், யாழுக்கு இயல்பாக அதனை இசைக்கும் ஆற்றல் இல்லையென்றாலும், அதனை வலிமையுடையதாக ஆக்கி, பின்னர் அதன் மூலம் தன்னை அது வெளிப்படுத்தி விடுகிறது. அவ்வாறு, திருவருளிசை வெளிப்பட வேண்டுமாயின், யாழை வலிமையுடையதாக ஆக்கும் பண்ணே யாழ்மூரி எனப் பெற்றது. இது நள்ளிருளில் நடத்தும் அம்பலக் கூத்தில் இத்தகைய பண் அமைக்கப் பெறுகிறது. இவ்வாறு வீணை முதலியவைகளை அமைக்கும் பண் 'வாய்மூரி' எனப்பெறும். இதனை அமைக்கும் முறையையும் காணலாம்.

பொன்னெடு நன்மணி மாளிகை சூழ் விழவம் மலி
பொருபுனல் திருஅமர் புகலியென் றுலகில்

என்பது முதல் வரி. இதனைப் பாடும் போது முதல் வரியின் முதற் பகுதியை இயல்பாகப் பாடி, அவ்வாறே பொருபுனல், திரு அமர் என்பதனையும் சொல்லி, புகலியென்றுலகில் எனச் சொல்லிவிட்டுப் பின்னர், பதிகப் பதிப்பில் காணும் வண்ணம்,

பொருஉ புனல், திருஉ அமர் புகல்லி யென்றுலகில் என அளபெடை அமைப்பில் நீட்டிப் பாட வேண்டும். இது முதல் வரியின் இரண்டாம் பகுதிக்கு மட்டுமே. முதன் முறைக்கும் இரண்டாம் முறைக்கும் வேறுபாடு இயல் பொலியும், அளபெடை யொலியுமே. மூன்றாவது, பொருபுனல், திரு அமர், புகலி என் பவைகளை முன்னிரண்டு முறை கூறியவைகளுக்கு மாறுக வீரை வாகச் சொல்லி முடிக்க வேண்டும்.

முதன் முறை சொல்வது கருவியின் இயல்பொலி. இரண்டாம் முறை சொல்வது உயிரானது தன் ஆற்றலால் அமைக்கும் ஒலி. மூன்றாவது உள் நின்ற அருள் வெளிப்பட்ட போது விளங்கும் மூரி ஒலி. அவ்வாறு அமைத்துப் பாடுவதே 'யாழ் மூரி' எனப் பெற்றது.

திருஞானசம்பந்தருக்குத் திருவியலூரில் அருள் வடிவம் அமைந்த காலத்திலிருந்து அருளனுபவ நிலையில் நின்று பதிகம் பாடும் அமைப்பு உண்டாகிறது. உயிரனுபவம் எனப் பெறும் சிவஞான அனுபவம் பெற்று நின்று பாடுகின்ற பதிகத்தை யாழில் அமைக்கும் போது தாமும் அத்தகைய ஞான அனுபவம் பெற்று, விளங்கும் பரி பக்குவ அமைப்பினால், சிவஞான அனுபவ வெளிப்பாடாகிய திருப் பதிக இசையை யாழில் அமைக்க இயலுவதாயிற்று. திருவையாற்றி லிருந்து அருளனுபவம் முதிர்ந்து வரும் நிலையில் திருவருள் நிழல் எனப் பெரும் முத்துப் பந்தரின் கீழ்வரும் அருளனுபவம் கிடைத்து விடுகிறது. திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அத்தகைய அருளனுபவ முதிர்ச்சியை வளர்த்து வருகிறாரெனினும், ஞானசம்பந்தப் பெருமான் தம் பதிகத்தில் அமைக்கும் அவ்வனுபவத்தை முற்றுக நுகரவும், முற்றுக யாழிசையில் வெளிப்படுத்தவும் முடியாத நிலை உண்டாகிறது. திருநீலகண்ட யாழ்ப்பாணரால் அவ்வாறு அமைக்கப் பெற வில்லை யானால், இன்றைக்கு ஒருவன் தேவாரம் ஓதினால், திருஞானசம்பந்தர் அன்று துய்த்துப் பாடிய அவ்வனுபவம் இன்று ஓதுபவரிடம் அமையாது என்பது முதற் பகுதிலேயே விளக்கப் பெற்ற ஒன்று.

திருத் தருமபுரப் பதிப் பெருமான் முன்னிலையில் இவ்வருட் செயல் நடைபெறுகிறது. இங்கே தான பாணருடைய உடலுக்குத் திருநீல கண்டம் என்ற பெயர் அமைந்தது. அது மெய்க்கு அமைந்த பெயர். அடுத்துத் தில்லைக் காட்சியாகிய அருளனுபவத்தால் திருவெருக் கத்தம் புலியூரில், அவருடைய உயிர் திருநீலகண்டம் என்ற பெயரைப் பெற்றது. உயிரால் திருநீலகண்டரானார். அதனால், பாணர் பெரும் பாணரானார். இங்கே உயிர் தனக்குத் திருநீலகண்டம் என்ற

பெயரை ஆகு பெயராக அமைத்துக் கொண்டு பணியாற்றியது. மூன்றாவதாக அவர் பிறந்த பதியில், அவர் உடம்பையும், உயிரையும் உள்நின்ற பதிப் பொருளாகிய திருநீலகண்டம் மேலெழுந்து ஆட்கொள்கிறது. இப்போது தான் பாணர், பெரும் பாணரான நிலையிலிருந்து திருநீலகண்டப் பெரும் பாணர் ஆகிறார். திருநீலகண்டத்தில் அவர் தம் உயிரானது ஒடுங்க, உயிரினுள் அவர் தம் உடம்பு ஒடுங்கியது. உயிரினுள்ளிருந்த திருநீலகண்டம் வெளிப்பட்டு, உயிரையும் உடம்பையும் வலிமையுடையனவாக்கித் தம்மை வெளிப்படுத்தியது போல, யாழும் இப்போது திருவருளிசையை வெளிப்படுத்தும் ஆற்றல் உடையதாக ஆயிற்று. இதனை விளக்கவே அப்பண் பாடப் பெறும் போது, ஒவ்வொரு வரிலும் ஒரு பகுதியை மூன்று முறை திருப்பித் திருப்பிச் சொல்லுதல் அமையும். முன்னது இயல்பு; இரண்டாவது அளபெடையென அமைய நீட்டுதல்; மூன்றாவது என்பது இயல்பை விட மிக வேகமாகச் சொல்லி முடித்தல். ஒரு வரியில் மூன்றன் ஆட்சியும் அமைதல் போல ஒருகருவியில் மூன்றன் ஆட்சியும் அமைகிறது. இதைத் திருநீலகண்ட யாழ்ப்பாணர் திருத்தருமபுரம்பதியில் பெறுகிறார். அதை அவர் பெறுதற்கு இரண்டு முதிர்வுகள் தேவை. ஒன்று பாணர் அருளனுபவம் பெற வேண்டும். அதைத் திருஞானசம்பந்தரின் பதிகங்களே ஒதும்போதே பெற்று விடலாம். ஆனால், யாழும் அதை வெளிப்படுத்தக் கூடிய வன்மை பெற வேண்டுமே; அதற்காகத் தான், திருஞானசம்பந்தர் அந்த யாழைத் தம் கையால் வாங்கி, மீளவும் அவருக்கே அளிக்கிறார்.

"தாவில் சராசரங்களெல்லாம் சிவம் பெருக்கும் பிள்ளையார்" ஆனமையின், அவர்தம் திருக்கரம் பட்டவுடனேயே, யாழில் அமைந்தசிவம் பெருகி நின்றதென்று கொள்ளுதல் வேண்டும். இதனாலேயே சேக்கிழார் பெருந்தகை,

"ஐயரே, உற்ற இசை அளவினால், நீர் ஆக்கிய இக்கருவியைத் தாரும்" என வாங்கிக் கொண்ட திருஞானசம்பந்தரை,

"அவனி செய்த பாக்கியத்தின் மெய்வடிவாம் பாலருவாயர்"

என்று பாராட்டுவதன் காரணம், யாழிசையில் இதுவரையில் பெரும் பாணர் விளங்கினர். இனி, அந்தயாழில் உள்நின்ற சிவம் வெளிப்படப் போகிறது என்பதனாலேயே. திரும்பவும் கொடுக்கும் போது திருஞானசம்பந்தர், இதுவரையில் யாழில் இசையை நீவிர் அமைத்து ஆக்குவது உண்டு. இனிமேல், நீவிர் இந்த யாழினைக் கொண்டே, இசையை அளவினால் நீர் ஆக்காமல், இறைவர் திருப்பதிக இசை இதனில் எய்த, வந்தவாறே பாடி வாசிப்பீர்" எனக் கூறியருளி, அவரிடமே கொடுத்தார்.

திருஞானசம்பந்தரைக் காணுமுன் பாணர் இசைப்புலமையிற் சிறந்து விளங்கியவரே. கண்டபின், சிவபரம் பொருளே இசையாக நிற்க, அவர் இசையாம் சிவஞான அனுபவத்தை உயிரனுபவமாகத் துய்த்த நிலையில் சிவஞான இசைவள்ளலாக, பெரும்பாணர் எனப் பெற்றார். இவ்வனுபவம் திருஎருக்கத்தம்புலியூரில் அமைந்தது.

திருத்தருமபுரப் பதியில் திருவருளிசை வள்ளலாக அமைகிறார். இங்கேதான் இவர் அருளாம் சிவத்தில் தோய்ந்து, உயிராகிய தானும் தன் கலையும் உடம்பும் ஆகிய அனைத்தும் திருவருள் என்னும் திருநீலகண்டத்தில் ஒடுங்க, திருநீலகண்டமே வெளிப்பட்டுச் செயலாற்றுகிறது. திருநீலகண்ட யாழ்ப்பாணர் உருவத்தில் அவர் உடம்பும், அவர்தம் உயிரும் தாமாகத் தம்மிச்சையில் இசையெழுப் பும் நிலையில்லை. திருநீலகண்டத்தின் அடிமையாகவே, அது இசையை அமைக்கிறது. தானே வரும் இசையை — வந்தவாறே பாடி வாசிக்கிறார் எனக் கொள்க.

மேலே கூறப் பெற்ற அருளியல் நிகழ்வை வரலாறாக அமைக்க முற்படும்போது பல சிக்கல்கள் எழுகின்றன. நிகழ்வை இணைத்து, இங்கே கூறப் பெற்ற அடிப்படை அமைப்புக் கேற்பப் பொருத்த முற அமைத்துக் கொள்ளவேண்டும். யாழ்முரி என்ற பண் தனியாக உருப் பெறுதல் இல்லை. அது வியாழக் குறிஞ்சியாக, மேகராகக் குறிஞ்சியாக இருக்கலாம். அருள் வலிமையை ஏற்று வெளிப்படுகிறது ஆதலின் 'முரி' என்பது பெயராகின்றது. திருத்தருமபுரப்பதி என்றதன் கருத்தும் இதனையே குறிக்கும். திருவின் தருமமே, திருவின் பண்பே, அது சார்ந்திருக்கும் வீட்டுக்கும், அது சார்ந்த புரத்துக்கும் உரிய பண்பாக அமைந்து விட்ட இடம் என்பதே அதன் பொருள். அவ் வாறு உள்ளிருக்கும் பரம் பொருள் வெளிப்பட்ட நிலையில், நிகழ்வு களை ஒட்டி, அப்பெருமானுக்கு "யாழ்முரிநாதர்" என்ற பெயர் வந்தது. இந்நிகழ்வில் அமைந்த நுட்பங்களைத் தம் அருளாற்றலால் நம்பியாண்டார் நம்பிகள் வெளிப்படுத்தருளியுள்ளார்கள்.

> "ஏழிசை யாழை எண்டிசை யறியத்
> துண்டப் படுத்த தண்டமிழ் விரகன்"

எனவும்,

> பாமாலை யாழ் முரிய, பாண் அழிய, பண்டு அருள்செய்
> மாமான சுந்தரன் வண் சம்பந்த மாமுனி

எனவும் எடுத்துக் காட்டிப் போற்றியுள்ளார்கள். முன்னுள்ள பகுதி யில் வரும் துண்டப்படுத்த என்னும் தொடருக்குத் தூண்டப்படுத்த என அமைத்து உரை காண வேண்டும். உள்ளிருப்பது வெளிப்பட வும், இதுவரை வெளிப்பட இருந்தவை அடிமைப் படவும் ஆகிய இரு நிகழ்வுகளை அமைத்தவராகக் கொள்ளும் முறையில் தண்டமிழ் விரகன் என அமைத்துக் காட்டினார்.

இதனை மேலும் தெளிவாக அமைத்த பகுதியே இரண்டாம்பகுதி. பாமாலையை இசையில் வெளிப்படுத்திய யாழானது வலிமையைப் பெற, முன்னமேயே பாண் அழியுமாறு அருள் செய்த "மா", 'ம' ஆன சுந்தரன் என்றருளினர்; அவனே வண் சம்பந்த மாமுனி என்றார்.

திருப்பிரமபுரப் பதிகங்களுள் ஒன்று 'நல்லானை' என்று தொடங்குவது. அதில் இரண்டாம் தேவாரம் "நம்மான மாற்றி

நமக்கு அருளாய் நின்ற பெம்மான்'' என்னும் தொடருக்கு ந, ம, ஆன மாற்றி, நமக்கு அருளாய் நின்றவன் என்ற பொருள் முன்பே அமைக்கப் பெற்றுள்ளது. ந, ம என்ற இரண்டனுள் 'ந' திரோத மலம். இதுவே அருளாக அமைவது. இக்குறிப்பை மா ம ஆன சுந்தரன்'' எனப் பிரித்து அமைக்க வேண்டும். 'மா' ம என்பது 'ந' என்ற எழுத்தையே. நம என்ற இரண்டனுள் முன்னதை 'மா ம = பெரிய ம'' என்று குறிப்பிட்டு, இதுவரையில் தடையாக — மலமாக நின்ற அதனை இப்போது அருளாக மாற்றி நிறுத்திய அழகன் யாரெனில் அவனே முன் ஒருமுறை பாண் அழியுமாறு அருள் செய்தவன் என்று குறிப்பிட்டார். பாண் அழித்தது முதல்படி, இப்போது 'ந' என்ற எழுத்தால் குறிக்கப் பெறும் திரோதான மலத்தை அருளாக மாற்றிய பெருமையே பெரும்பாணரை அழித்துத் திருநீல கண்ட யாழ்ப்பாணராக மாற்றியருளிய செயல் எனக் குறிப்பிட்டருளினார்.

இதனை மேலும், ஆக்கிய யாழ்மூரி என்றார். உயிரின் முயற்சி கொண்டு, உயிரனுபவம் என்ற ஞான இசையை உயிர் முயற்சியால் அளவு படுத்தாமல், திருவருளிசை பெருகி வரும்போது, அதனைத் தம்முயற்சியால் தடுத்து அளவுபடுத்தாமல் வந்தவாறே பாடி வாசிப்பது என்ற பொருளிற் கூறியதே ''ஆக்கிய யாழ்மூரி'' என்பது.

இவ்வாறு நம்பியாண்டார் சேக்கிழார் ஆகியோர்களின் திருவார்த்தைகளுக்கு அவர்தம் அடிகளை வணங்கி, அருள் வழியில் நின்று பார்க்க வேண்டுமேயன்றி, சொல்லளவிற் பொருள் கொள்ளுங்கால் சிக்கல்கள் பெருகும் என்பதை உணர்தல் வேண்டும்.

திருநள்ளாறு

மேலே குறிப்பிடப் பெற்ற நிகழ்வை ஒட்டியதாகவே அமைகின்றது திருநள்ளாற்று நிகழ்வு. திருநள்ளாற்றில் பாட இருக்கும் இப்பதிகமே பின்னர்ப் 'பச்சைப் பதிகம்' என்ற பெயர் பெற இருக்கிறது. மதுரையில் அனல் வாதமே முதலில் நடந்த போட்டி. (சுர நோய் தீர்ந்தது வேறு.) அப்போட்டிக்கு எனப் புதியதாக எதையும் திருஞானசம்பந்தர் அமைக்கவில்லை. முன்பே பாடிய பதிகங்களுள் பிரித்தபோது வந்த பதிகம் 'போகமார்த்த பூண் முலையாள்' எனத் தொடங்கும் நள்ளாற்றுப் பதிகமே. அதுவே எளியால் அழிக்கப் பெறுதிருந்த காரணத்தால் பச்சைப் பதிகம் எனப் பெற்றது. அதைப் பாடுவதற்கு முன் 'யாழ்மூரி' அமைகிறது. சேக்கிழார் நம்மை வரலாற்றுக்குத் தயார் செய்கிறார்.

''உருகிய அன்புறு காதல் உள்ளுருகி
நனை ஈரம் பெற்றுற் போல
மருவுதிரு மேனியெலாம் முகிழ்ந்தெழுந்த
மயிர்ப்புளகம் வளர்க்கும் நீராய்

அருவிசொரி திருநயனத்து ஆனந்த
வெள்ளம் இழிந்து அலைய நின்று
பொருவில் பதிகம் போக மார்த்த
பூண்முலையாள் என்றெடுத்துப் போற்றி"

என்பது சேக்கிழாரின் (பெரியபுராணம் 2359) திருவாக்கு. இதனைத் திருவருளனுபவம் எனக் கொள்ளலாம். இனி, இப்பதிகம் பாடும் போது, யாழ் நரம்பில் ஆர, இயல், இசை கூடப் பாடியே அப்பதிகத்தை முடித்து, எண்ணில் கற்பச் சேணளவு பட ஓங்குந் திருக்கடைக் காப்புச் சாத்தினர். பின்னர், அப்பதிகத்தைக் கொண்டு வந்து பாணனரிடம் கொடுத்து யாழிலிடப் பணிக்கின்றார். பாணனர் அப்பதிகத்தை யாழிலிடும் போது, திருஞானசம்பந்தரும் தாம் தாளங் கொண்டு அத்திருப் பதிகத்தை மீண்டும் பாடியமைக்க, தொடர்ந்து பாணனர் யாழிசையிலிட, எல்லாம் ஒத்திருப்பது கண்டு திருஞானசம்பந்தர் மகிழ்ந்தார்.

எனவே, திருவருளனுபவம் அமையும் முறையில் உள் நின்ற நீலகண்டப் பெருமான் எழுந்து யாழ் வரையில் வந்து நின்று, அதை வலிமையாக்கி, அவ்வகையில் உலகத்துயிர்களையும் அருளமுத வாரியில் அழுத்தினன்.

இதுவரையில் சிவானந்த ஞான இன்பமாகிய உயிரனுபவம் உயிர்களை அடையுமாறு செய்து வந்த ஞானசம்பந்தரும் யாழ்ப் பாணரும் ஒவ்வோர் உயிர்களிலும் பொருள்களிலும் பதிந்துள்ள சிவத்தை-பதியை வெளிப்பட நிற்கவைத்து அதனால் அருளனுபவம் பெருக வைக்கும் பணியை மேற்கொண்டார்கள் எனக் கொள்ளுதல் வேண்டும்.

இங்கே வாய்மூரி என்றும் யாழ்மூரி என்றும் பேசப்பெறும் பண்கள் இல்லையெனினும் அவ்விருவகைகளில் எழுப்பும் ஒலி உண்டு எனக் கொள்ளலாம். கருவிகளின் துணைக் கொண்டு எழுப்பும் ஒலிகளுக்கு வன்மை தரும் வகையில் அமைந்தது வாய்மூரி எனத் தெரிந்தது. எனவே, ஒலிக்கருவிகளில் உள்நின்ற பரம்பொருளானது வெளிப்பட்டு, தன்னை ஒலிமூலம் வெளிப்படுத்தும் போது, அப்பரம்பொருளொலியை வெளிப்படுத்தும் வலிமையை அக்கருவிகளுக்கு வழங்கும் பண்ணே வாய்மூரி எனவும், உயிர்ப்பொருள்களிடத்தில் அவ்வாறே அமையும்பொழுது 'ய' என்ற எழுத்தால் குறிக்கப் பெறும் உயிரானது பரம்பொருளுக்குள் ஆழ்ந்து நிற்க வெளிப்படும் திருவருளொலியை வெளிப்படுத்தும் நிலையில் உயிர்ப்பொருள்களுக்கு — உயிரல் பொருள்களையும் உடனிணைத்த நிலையில் வலிமை வழங்குவதற்குரிய ஒலியே — யாழ் மூரிப் பண் எனவும் அமைக்கலாம். ய — என்பது உயிரைக் குறிக்கும் எழுத்து. அது ஆழ்வதற்குரிய ஒலி திருவருளொலி. அதை வந்தவாறே வெளிப்படுத்த வேண்டிய வன்மை உயிருக்கும் உடலுக்கும் அமையும் நிலையில் அமைக்கப் பெறும் பண்ணே 'யாழ்மூரி' எனக் கொள்ளலாம்.

எனவே, 'யாழ்' என்ற சொல்லின் தோற்றமும் இவ்வடிப்படையில் அமையும் எனத் தோன்றுகிறது. உள்ளிருந்து வரும் அருள்நிலை ஒலியை எழுப்புதற்கு உரிய முறையானது, 'உறழ்ச்சி வாரத்து' எழும் என்ற தொல்காப்பியக் குறிப்பை நோக்குக. உறழ்தல் என்பது மடக்கி மீண்டும் ஒலித்தல் என்ற வகையில், அகத்து எழும் வளி இசை, அரில் தப நாடி அளபிற் கோடல் அந்தணர் மறைத்து என்பது தொல்காப்பியம். அந்தணர் மறைத்து என்பது அருளாளர் கூறும் கொள்கையை அடிப்படையாகக் கொண்டது. மற்றைய ஒலியானது எழுந்து புறத்து இசைக்கும் மெய் தெரிவளி இசை என்று குறிப்பிடப் பெறுகிறது. தொல்காப்பியம் பிறப்பியல் இறுதி நூற்பாவுடன் இணைத்துக் காணல் ஆய்வாளர் கடமை.

நீலநக்கர், நீலகண்ட யாழ்ப்பாணர்

திருநீலநக்க நாயனார் அந்தணர். அவர் வாழும் பதி சாத்த மங்கை. அவர் நாளும் வழிபடும் பதி அயவந்தி. நாள் தோறும் தம் இல்லத்தே வேத முறைப்படி வேள்வி செய்யும் விரத ஒழுக்கினர். வேதிகை என்னும் வேள்விக் குண்டத்தில் எப்போதும் தீயானது எரிந்து கொண்டேயிருக்கும். திருஞானசம்பந்தரின் வருகையை யுணர்ந்து எதிர் கொண்டார். பகலுணவு முடிந்தது, இரவும் அங்கே தங்குவது என்ற நிலை வந்த போது, திருஞானசம்பந்தர் நீலநக்கனரை அழைத்து, ''நீலகண்டப் பெரும்பாணருக்கு இன்று தங்க ஓர் இடங் கொடுத் தருளுவீர்'' என்று கூற, அவரும் இன்புற்று, நாள் தோறும் வேள்வி செய்வதற்கென வீட்டின் நடுவில் அமைக்கப் பெற்ற வேதிகையின் பக்கத்தே தங்க இடமளித்தார். அப்போது வேதிகை எனப் பெறும் வேள்விக் குண்டத்தின் இடையில் என்றும் அருகிருக் கும் செந்தீ வலஞ் சுழித்தெழுந்து, முன்னைப் போல, மென்மையாக இருந்த அந்நிலை நீங்கி, ஓங்கி ஒளி செய்து விளங்கிற்று. அதன் பக்கலில் பாணினியாருடன் பள்ளி கொள்ளும் பாணரை அருளாற் பள்ளி கொண்டார் என்றார் சேக்கிழார்.

திருநீலகண்டத்தழகே திருவருளழகு

திருநீலநக்கனர் இல்லத்தே பகல் உணவு முடிந்த பின் அடுத்த பதியினை நோக்கிய புறப்பாடு நிகழவில்லை. திருநீலநக்கர் அன்று இரவும் அங்கேயே தங்க வேண்டும் என விரும்பினர், வேண்டுவ சமைத்தார். பகலில் திருநீலகண்ட யாழ்ப்பாணரும் பிற அடியவர் க்களும் அமுது செய்த நிலையில் திருநீலகண்ட யாழ்ப்பாணரின் சாதி பற்றிய வேறுபாடு கருதப் பெறவில்லை என்பதைச் சேக்கிழார் நுட்பமாக உணர்த்துகிறார். பிள்ளையார் எழுந்தருளிய பெருமைக்குத் தக்க நிலையில் அவர்க்கும் அடியவர்க்கும் தம் மனையிடை அமுது செய்வித்தார் என்பதனால் திருஞானசம்பந்தர் திருநீலகண்ட யாழ்ப் பாணரையும் மற்றை அடியவர்களையும் எவ்வாறு பெருமையுடன் கருதினரோ அப்பெருமையையே தாமும் கருதித் தொண்டு செய்தார். இரவு தங்குதல் நேர்ந்த காலத்து ஞானசம்பந்தர் ஓர் இடம் அவர் களுக்கு வேண்டும் என்று கேட்டது சாதியை நோக்கியதன்று;

ஞானசம்பந்தரின் அடியவர் கூட்டத்தில் இல்லறத்தாராக இருப்பவர் பாணரும் பாடினியாருமே. பாடினியாரும் உடன் இருப்பதால் தனி இடம் தேவை என்றார். ஆனால், திருநீலநக்கனரின் குறிப்பு வேறாக அமைந்தது. அதனால், வேதிகையின் பக்கல் இடமமைத்தார். திரு நீலகண்ட யாழ்ப்பாணர் திருத் தருமபுரம் பகுதியில் திருவருளனுபவம் பெற்று, அவ்வருளிலேயே தினைத்துக் கொண்டு வருகின்றாராதலின்; அவர் அணுகியதும் நெருப்பினுள் அதற்கு வலிமை தந்து அதனை வாழ்வித்துக் கொண்டிருக்கும் திருநீலகண்டம் என்னும் திருவருள், பாணரின் உடலளவும் அழகுறுத்தும் திருவருள் தன்மையால் மேலெழுந்து ஓங்கவே, நெருப்பும் மேலெழுந்து விளங்கியது. இதனால், திருவருளின் நின்றவர் முன்னிலையில் உயிர்ப் பொருள்; உயிரில் பொருள் ஆகிய எல்லாம் தம்முள் இருக்கும் அருள் நிலையாகிய சிவம் பெருகி வெளிப்பட்டுப் பூரித்து நிற்கும் என அறியலாம். திருஞானசம்பந்தர் கேட்டதன் குறிப்பொன்று; திருநீலநக்க நாயனார் நினைத்த குறிப்பு வேறொன்று. எங்கும் நிறை பரம் பொருள் இந் நிகழ்வின் மூலம் எடுத்துக் காட்டிய ஒன்று பாணனரின் திருவருளனுபவமே. அவருயிரில் இருந்த திருநீலகண்டம் அவரைத் தன் வயமாக்கி, தன்னழகாகிய திருவருளழகைப் பொலிய வைத்தது என்று அமைத்துக்காண வேண்டும்.

பொடிநுகருஞ் சிறுத்தொண்டர்

அடுத்து, திருச்செங்காட்டங்குடியை அணுகிய ஞான சம்பந்தர். சிறுத்தொண்டரின் வரவேற்பு. திருச்செங்காட்டங்குடிப் பதிகத்தில் சிறுத்தொண்டரின் திருத்தொண்டு நெறியைப் பாராட்டிப் பதிகம் அமைக்கின்றார். தொண்டு நெறியானது முற்றி, திருத் தொண்டு நெறியானது மலர்ந்து செழித்து விளங்கும் நிலையில் திருவருள் விளங்கிப் பொலிவதைக் காண்கிறார். திருத்தொண்டு நெறியில் நின்று உயர்த்தும் சிறுத்தொண்டரின் தொண்டினைப் பாராட்டுகின்றார்.

தனிமனிதன் ஒருவன் துன்பம் இன்றியும், நரை திரை மூப்பு இன்றியும் வாழ்தற்கு அவ்வூரில் சான்றோர் இருப்பது காரணம் என அறநெறிக் கொள்கையை ஆக்கிய சங்கப் புலவர் பிசிராந்தையார் போன்றே திருத்தொண்டு நெறி வல்ல சான்றோர்கள்-அருளாளர்கள் இருப்பின் அருள் வயப்பட்ட நிகழ்வுகள் நடைபெறும். அருளில் அடங்கியிருப்பவர் ஒருவகை; அருளில் அடங்கியும், இணைத்தும் அதனைச் செலுத்தியும் உலகில் அருளை உயிர்களின் வாழ்வுப் பொருளாக ஆக்குபவர்கள் வேறு வகை. முன்னவர் அருளின் நீழலில் இருப்பவர். பின்னவர் அருளில் ஒன்றியவர்கள். ஆயினும் ஏனைய உயிர்களிடத்தும் அருளைப் பரவச் செய்து அருளைத் துய்ப்புப் பொருளாக அமைப்பவர்கள். முன்னைய நிலையைத் தொண்டு நெறியாற் பெறலாம். பின்னைய நிலையானது திருத்தொண்டில் நிற்றலால் விளைவது. பின்னதே திருநெறிய தமிழ்நெறி எனப்பெறும் திருவருளின்பத் துய்ப்பமை இன்பநெறி.

திருத்தொண்டு நெறியினர் ஒருதலத்தில் அமையும்போது அத் தலம் திருநீலகண்டத் தலம் ஆகும். அருளாட்சியின் நேர்முகத் தலம். அங்கே 'ஓம்' என்ற ஓரெழுத்தில் அருள் நீலை ஐந்தொழில் உண்டு. அதனாலேயே 'ஓம்' என்ற ஓரெழுத்தை உணர்த்தும் பருவடிவ நீலையாகிய கணபதி பூசித்த தலம் எனப் பெற்றது. தொண்டு நெறி மலர்ந்த தலங்கள் ஐந்தெழுத்து ஆட்சித் தலங்கள். திருச்செங் காட்டங் குடித் திருப்பதிகத்தின் ஆறாவது தேவாரத்தில் "நுண்ணி யான் மிகப் பெரியான் ஓவுளார் வாயுளான்" என்று கூறுகிறார். இங்கே 'ஓ' என்பது பிரணவத்தைக் குறித்தது. ஓரெழுத்தின் மூலப் பொருளாய திருநீலகண்டத் திருமுகம் நின்ற இடம் என உணர்த்தினர். இதனை ஒட்டிய மருகல் ஐந்தெழுத்துத் தலம். அதன் விரிவை விடந் தீர்த்த வரலாற்றிற் காணலாம்.

அடுத்து, திருச்செங்காட்டங்குடியில் பரஞ்சோதியார் கொண்டு வந்து தாபித்த வாதாபிக் கணபதியும் உண்டு என்று கூறுவர். சிறுத் தொண்டர் பரஞ்சோதியாராக மன்னன் அவையில் அமைச்சராக இருந்த காலத்தே வடக்கே போருக்குச் சென்றார். அப்போது வாதாபிக்குச் சென்று பகைவரை அழித்தார். அங்கிருந்து அவர் கொண்டு வந்த பொருள் அட்டவணையில் 'வாதாபிக் கணபதி' இல்லை. பின்னர் அவரே அரசனும் திருத்தொண்டு நெறியில் நிற்க எனக் கேட்டுக் கொண்ட போது அவர் மன்னனிடம் விடை பெற்று வந்து, தன்னூரில் உள்ள கணபதீச்சுரத்தை வணங்கி, திருத்தொண்டின் நெறி நிற்கின்றார். அவர் தாம் கொண்டு வந்த வாதாபிக் கணபதியையும் கோயிலில் வைத்து வழிபாட்டுக்குரிய தாக்கினர் என்பதற்குப் பரஞ்சோதியார் வாதாபிவரை சென்று வந்தவர் என்ற ஒன்றைத் தவிர வேறு சான்று இல்லை. பரஞ்சோதியார் சிறுத்தொண்டராக நின்று, வாதாபிக் கணபதியை அமைத்துத் திருக்கோயில் கட்டினார் என்பதாக வரலாறு இருப்பின் திருஞான சம்பந்தர் அச்செய்தியைச் சொல்லியே பாராட்டியிருப்பர்.

வாதாபிக்கணபதி என்பது வில்வலன் வாதாபி என்ற இரண்டு அசுரர்களின் செயலை அடிப்படையாகக் கொண்டது. உடன் பிறந்தவர்களாகிய இவர்கள் முனிவர்களை விருந்து கொடுத்து உபசரிக்கும் முறை ஒன்று உண்டு. வில்வலன் வாதாபி என்ற இருவருள் வாதாபி ஆட்டின் வடிவெடுத்து நிற்பன். அவனை அறுத்துக்கறி சமைத்து முனிவர்களுக்கு விருந்து பேணுவான் வில்வலன். முனிவர் சாப்பிட்ட பிறகு 'வாதாபி' என்று கூவுவான் வில்வலன். உடனே, முனிவர் வயிற்றினுள் இருக்கும் வாதாபி ஆடு வடிவம் எடுத்து, முனிவர் வயிற்றைக் கிழித்துக் கொண்டு வெளி வருவான். முனிவர் இறந்து விடுவார். இதுதான் அவர்கள் விருந்து பேணும் முறை. பிறகு அவரைக் கறிசமைத்துத் தாங்களே சாப்பிட்டு மகிழ்வர். அகத்தியர் வந்தபோது இதே முறையைப் பின்பற்றவே, அவர், 'வாதாபி சீரணமாகுக' என்று கூறி, தம் இடது கையால் வயிற்றைத் தடவவே, அவன் ஆட்டுருவம் கொண்டு வெளிவராமலேயே இறந்தொழிந்தான்.

பின்னர்ப் போருக்கு வந்த வில்வலனையும் அவர் அழித்தார் என்பது வரலாறு. இவ்வாறு அழிப்பதற்கு அகத்தியர் மேற்கொண்டது மூலாதாரத்து முகூர்த்தமும் சோதிப் பரம்பொருளை எழுப்பும் நிலை. மூலாதாரத்துச் சோதியைக் கணபதி எனக் கொண்டு வாதாபி கணபதி என்று கூறுவது மரபு. திருமுதுகுன்றம், திருக்காளத்தி போன்ற தலங்களில் பெருகும் ஆழத்துப் பிள்ளையார் இருப்பார். அவரே மூலாதாரத்துக் கணபதி. அவரே வாதாபிக் கணபதி. அறுபத்து மூன்று அடியவர் வரிசையில் அமர்ந்திருக்கும் கணபதியும் மூலாதாரக் கணபதியே. கள்ள வாரணப் பிள்ளையார் என்ற மூர்த்தமாகவும் இவரை அமைப்பர்.

அறியாமையை ஆடாகக் குறியிட்டுக் காட்டும் மரபு சாத்திர நிலையில் அமைத்து, முருகப்பெருமான் ஆட்டினை அடக்கிய நிகழ்வு ஒன்று உண்டு. அது நாரதர் செய்த யாகத்தில், நாரதர் செய்த தவற்றினால் உருவானது. அறியாமையையே ஆடாக்கி, இறைவனுக்குப் படைத்தல் வேண்டும் என்ற விளக்க முறை வெற்றுச் சடங்காக அமைந்து தவறுபட்ட நாகரிகத்தை விளைவித்தது.

ஆணவம் என்ற அறியாமை யான் என, எனது என இரண்டாக நிற்கும். இவ்விரண்டன் அடையாளமாக நின்றவர்களே வாதாபியும் வில்வலனும். வாதாபியே நான் என்ற பகுதி; வில்வலன் எனது என்ற பகுதி.

வாதாபியை அழித்த கணபதியோடு தொடர்புடையவர் சிறுத்தொண்டர். கணபதியீச்சுரத்துக் கணபதி கயமுகாசுரனை அழித்த கணபதி. அதனால் வரும் தீமை நீங்க இறைவனைப் போற்றிப் பூசித்தார். திருச்செங்காட்டங்குடியில் இறைவனைப் பூசித்த கணபதி கயமுகனைக் கொன்ற கணபதி. அங்கேயே வாதாபிக் கணபதியும் உண்டு என்றது சிறுத்தொண்டரின் மூலமாக அமைத்த கொள்கை விளக்கம். அதனாலேயே, சிறுத்தொண்டரால் அமைக்கப் பெற்றது என்ற கதையும் எழுந்தது.

சிறுத்தொண்டர் சிவனடியவர்களுக்கு உணவளிப்பதை வழக்கமாகக் கொண்டவர். அது ஒன்றே அவர் செய்த தொண்டு. இளையான் குடிமாற நாயனாரும் செய்தார். இன்னும் பல அடியவரும் செய்துள்ளார்கள். சிவனடியவர்களைக் கண்டு அவரை விருந்து பேணும் நிலை எல்லாவற்றையும் சேக்கிழார் இளையான்குடி மாற நாயனார் வரலாற்றில் அமைக்கிறார். ஆனால், சிறுத்தொண்டரின் பணியும் அதுதான். சிவனடியவர்களைக் கண்டால் தன்னை ஒரு சிறுபிள்ளையாக அமைத்துக் கொள்வார். எதிர்த்துப் பேசாமல் சொன்னதைச் சொன்னபடியே செய்கின்ற சிறுபிள்ளையைப்போல விருந்து பேணுந் தொண்டினைச் செய்வார். சிவன் அடியவர் கூறுவது அறிவுக்கு ஒத்ததா இல்லையா என ஆராய்தல் அவரிடம் கிடையாது. சிவனடியவர் என்ன சொன்னாலும் செய்து விடுதல் என்ற ஒன்றே குறிக்கோள்.

"நாதன் அடியார்தம்மை நயப்பாட்டு வழிபாட்டால்
மேதகையா ரவர்முன்பு மிகச்சிறியராய் அடைந்தார்
ஆதலினுற் சிறுத்தொண்டர் எனநிகழ்ந்தார் அவனியின்மேல்"

இந்நிலையில் 'நான்' எனநின்ற வாதாபியை முற்றுக அழித்தார். அவரிடம் இருந்த ஒன்று வெறுமையான புறப்பற்றுகிய 'எனது' என்பதே. அதை ஏற்க வந்தார் இறைவனார்; எனது என்பதில் முன் நிற்கும் மகனை அறுத்துக் கொடுத்தல் என்பதாக நிகழ்வு அமைக்கப் பெறுகிறது. இது சாத்திர அடிப்படையில் அவர்தம் வாழ்வை மதிப் பிடும் முறை.

சிவனடியவராக வந்த உத்திராபதியார் முன்பின் முரணுகச் சொல் வது செய்வது ஆகியவைகளை அமைத்தபோதும், சொன்னபடி செயல்பட்டாரே ஒழிய, இவ்வாறு செய்யச் சொல்லும் இவர் சிவனடியவரா என அவர் எள்ளளவும் ஐயுறவில்லை. இதனை அடியவர் பணியில் மடமை பேணுதல் எனக் கொள்ளலாம். இந் நிலையில் முடிமணியாய இடம் ஒன்று. சிவனடியவர் உடனிராமல் தனித்து உண்ணமாட்டோம், வெளியில் சென்று அழைத்துவாரும் என்றவுடன் போய்த் தேடுகிறார், காணுது திரும்புகிறார். வந்தவர் "இகத்தும் பரத்தும் இனியாரைக் காணேன்" என்கிறார். அடியாரைக் காணேன் என்று கூறினாரில்லை. 'இனிமையுடையவர்' அடியவர் மட்டுமே. மக்கள், மனைவி என்ற எவருமே அவருக்கு இனிமை யுடையவர் அல்லர். தேடிக்காணும்போது இனியவரை எப்படித் தேடமுடியும்? திருநீறு பூசும் அடையாளம். திருநீறு பூசுவது அடையாளமாயின் தமக்கும் அதுபொருந்துமே என நினைக்கிறார். தன்னையே அடியவன் எனக்கூறி அமைத்துவிட்டாலும், விரைந்து காலந்தாழ்த்து அவர் உணவருந்துவாரே என நினைத்து, திருநீறிட் டார் எல்லாம் இறையடியவர்; அவரெல்லாம் இகத்தும் பரத்தும் இன்புடையார் என்ற தம் கொள்கையைக் காட்டி, ஆனால், தான் திரு நீறு பூசுவது சிறு குழந்தைச் செயல் பிறர் செய்வதைப் பார்த்து அறிவாராய்ச்சி இல்லாமல் அப்படியே செய்வது சிறுவர் செயல். நானும் திருநீறு பூசுவேன்; ஆனால், சகத்தில் இடுவார் தம்மைக் கண்டே இடுவேன் என்கிறார். தம்மைச் சிறுவன் என நிறுத்திய தனி நிலை.

ஆணவத்தை—நான் என்ற ஒன்றை முற்றுக அழித்தாருக்கல் லாமல் இந்நிலை அமையாது. அவர் ஒருவர்தான் சிறுவர் என நின்றார். அவர் குடும்பமே வேலைக்காரியையும் உள்ளிட்டு, சிவனடியார் குடும்பமாக ஆயிற்று. அவரை எதிர்கொள்ள, அப்பரமனும் குடும்பத்தோடு வந்து எதிர் கொண்டு காட்சியளித்தான். அவர் வரலாற்றைத் தமிழகத்துப் பட்டி தொட்டிகளிலும் கொண்டாடும் முறையில் விழா அமைக்கப் பெறுகிறது. தம்மை மறந்து உலகத் தொண்டு புரிந்த ஞானிகளின் தொண்டுகளெல்லாம் கிராமத்து மக்களின்—சமூகத்தின் இறுதிக்கட்டத்தில் நின்ற தகுமகன் உள்ளத்தில் சென்று தைக்கவில்லை. ஆனால், சிறுத்தொண்டர்,

வரலாறு தமிழகத்து மூலை முச்சந்திகளிலும் நின்று அனைத்துமக்களையும் ஆட்கொண்டிருக்கும் விழா. அத்தகைய சிறுத்தொண்டரைத் திருஞானசம்பந்தர் தம் பதிகத்தில் பாராட்டும்போது

"பொடிநுகருஞ் சிறுத்தொண்டர்க்கு அருள்செய்யும் பொருட்டாகக்
கடிநகராய் வீற்றிருந்தான் கணபதீச் சரத்தானே"

என்றார். ஒன்றற்கும் பற்றுத சுடுகாட்டுப் புழுதிக்கும் வாழ்வளித்தவர் சிவனடியார். அவர்கள் இதை எடுத்துத் தம் உடம்பில் பூசிக் கொண்டமையால் வெற்றுப் புழுதிக்கும் வாழ்வு கிடைத்தது. எனவே, புழுதிபோன்ற என்னை வாழ்விக்கும் ஆற்றல் சிவனடியார்க்கே உண்டு என்று கருதுவார்; இதை எண்ணியே திருநீறிடுவார். இதனாலேயே, உத்தராபதியார்

"உம்மைப் போல நீறிட்டார் உளரோ"

என்று பாராட்டுகின்றார்.

இங்கே, திருச்செங்காட்டங் குடியையும் திருமருகலையும் இணைத்துப் பாடியருளுகின்றார்கள். திருவையாற்றில் பதிப்பொருளும் திருநீலகண்டப் பரம்பொருளும் இணைந்துள்ளன. இரண்டும் வெளிப்படநின்று பணிபுரியும் நீலத் திருவையாற்றில் உண்டு. பெரும் பாலான சிவத் திருத்தலங்களில் பதிப்பொருள் வெளிப்பட்டும் திருநீலகண்டம் அதனுள் அதோமுகமாக மறையநின்றும் செயல்படும். திருச்செங்காட்டங்குடியில் திருநீலகண்டத்துப் பரம்பொருளே வெளிப்படநின்று செயலாற்றுகின்றது. காரைக்காலம்மையார் பாடும் அந்திநட்டம் முழுவதும் இங்கே நடைபெறுகிறது. காரைக் காலம்மையார் திருக்கயிலை சென்று, பின்னர் ஆலங்காட்டில்தான் அத்தகு திருநீலகண்ட நடனம் நடைபெறுகிறது அதலின், அதன்கீழ் இருக்க வேண்டும் என்று வருகிறார். அனால், சிறுத்தொண்டருக்காகவே திருச்செங்காட்டாங் குடியைத் திருநீலகண்டத் தலமாக மாற்றி அமைத்து எக்காலத்தும் அந்தி நிருத்தம் அனலேந்தி ஆடிக் கொண்டே இருக்கின்றான்.

"பொடிநுகருஞ் சிறுத்தொண்டர்க்கு அருள்செய்யும் பொருட்டாகக்
கடிநகராய் வீற்றிருந்தான்"

என்று குறிப்பிட்டுக்காட்டி, திருச்செங்காட்டங்குடியானது முற்றுகத் திருநீலகண்டர் திருக்கூத்துப் பதியே என்பதையும் அதனோடிணைந்த பதிப்பொருள் பணியாற்றும் திருப்பதியே திருமருகல் என்பதையும் திருச்செங்காட்டங்குடியை மருவியமைந்த பதியே மருகற்பதி என் பதையும் பதிப்பொருள் நின்றநிலையைத் திருமருகலும், அதற்கு உள்ளிருந்து ஆற்றலமைக்க வேண்டிய திருநீலகண்டம் திருச்செங் காட்டங் குடியில் இருக்கிறது என்பதையும் விளக்குமுகத்தால் இரண்டும் இணைய ஒருபதிகம் அருளுகின்றார். அப்பதிகத்தின் தேவாரம் முழுவதிலும், முதலிரண்டு வரிகளில் பதிப்பொருள் நின்ற திருமருகலின் இயற்கைவளமும், பின்னிரண்டு வரிகளில் திருநீல கண்டத்துக் கூத்தாகிய நள்ளிருள் நட்டம் கனையெரியேந்தி ஆடும்

நிலையும் இணைய விளக்கிக் காட்டினர். சிறுத்தொண்டர் ஒருவரே திருநீலகண்டத்தையும் இயக்கி உலகத்துக்குத் திருவருளியக்கத்தை மலரவைக்கும் பெரும்பேறு பெற்ற திருத்தொண்டு நெறி நின்ற பேருளர் எனக் கொள்ள வேண்டும்.

திருமருகலில் விடந்தீர்த்தது

திருச்செங்காட்டங்குடியும் திருமருகலும் இணைந்து நிற்கும் பெருமையுடையன. அதன் இணைப்பைத் திருவருள்நிலையில் உணர்ந்த திருஞானசம்பந்தர் திருமருகலுக்குப் போவதும் பின் திருச் செங்காட்டங்குடிக்கு வருவதும் ஆய இரண்டையும் கொண்டவரா கிறார். சிறுத்தொண்டரின் பெருமையைத் திருவருளால் உணர்ந்த மையின் தேவாரந்தோறும் பாராட்டுகின்றார். பிள்ளைக்கறியமைந்த செயல் திருஞானசம்பந்தர் காலத்துக்குச் சற்றுப் பிற்பட்டிருக்கலாம். ஆயினும், ''சீராளன் சிறுத்தொண்டன்'' என இணைத்துப் பாராட்டி யிருக்கின்றார்.

இந்நிலையில் திருமருகல் செல்கிறார் திருஞானசம்பந்தர். வைகறைப் பொழுதிலே திருமருகற் பெருமானை வழிபடச் செல்லும் திருஞானசம்பந்தர் செவியில் ஒரு பெண்ணின் அழுகுரல் விழுகிறது. அழுகின்ற அப்பெண் இருக்கும் இடம் அடைந்து அழுகைக்குரிய காரணத்தை வினவுகிறார்.

வைப்பூரில் உள்ள தாமன் என்ற வணிகனின் மகள் அப்பெண். அவளுடன் பிறந்த பெண்கள் அறுவர். இவளே இளையவள். அவளுடைய தந்தையின் உடன் பிறந்தவளுக்கு ஒருமகன். அவனுக்குத் தன் பெண்ணைத் தருவதாக வாக்களித்த தாமன், தன் வாக்கினைக் காப்பாற்றாமல், தன்னுடைய ஆறு பெண்களையும் வெவ் வேறிடங்களில் மணம்செய்து கொடுத்துவிட்டான். காத்திருத்த அவனுக்கு ஏமாற்றமே அமைந்தது. இந்நிலையில் இறுதிப் பெண் ணாகிய இவளையும் வேறு ஒருவருக்கு மணம் முடிக்க எண்ணினான். காத்திருந்த அத்தை மகன்மேல் இரக்கங்கொண்ட இவள் உறவின ருக்குத் தெரியாதவாறு, இவளை அழைத்துக் கொண்டு வீட்டை விட்டுப் புறப்பட்டு விட்டாள். இருவரும் வந்து திருமருகலில் ஒரு மடத்தில் தங்குகிறார்கள். அன்றிரவு அச் செட்டி மகன் அரவு தீண்ட இறந்து விடுகிறான். இன்னும் திருமணம் ஆகவில்லை. ஆகையால் அவனைத் தொட்டுக்கூட அழ முடியவில்லை.

தந்தை சொல்லைக் காப்பாற்ற வேண்டும் என வந்தவள், இப் போது ஆதரவின்றிக் கலங்கும் நிலை பெற்றாள். இந்நிலையில் அவள் திருமருகல் பெருமானைப் பாடி அழுகிறாள். ''சடையாய்'' நீயே சரண் என்றெல்லாம் சொல்லி அழுகிறாள். இந்தகைய துயரச் செய்தியைக் கேட்டு நெஞ்சங் கலங்கிய திருஞானசம்பந்தர் ''சடையாய் எனு மால்'' என்று தொடங்கும் திருப்பதிகத்தை அருளுகின்றார். அந் நிலையில் வணிகன் விடந்தீர்ந்து உயிர்பெற்றான். திருஞானசம்பந்தர் இருவர்க்கும் திருமணத்தை நடத்தி வைக்கின்றார். திருஞானசம்பந்த

ரின் இத்தகைய அருளியல் நிகழ்வை, அவருக்குப் பின்வந்த அனைவரும் பாடிப் புகழ்ந்துள்ளார்கள்.

"வயலார் மருகற் பதிதன்னில் வாளர வாற் கடியுண்டு
அயலர விழுந்த அவனுக் கிரங்கி அறிவழிந்த
கயலார் கருங்கண்ணி தன்துயர் தீர்த்த கருணைவெள்ளப்
புயலார் தருகையினுன் என்னத் தோன்றிடும் புண்ணியமே"

என்று நம்பியாண்டார் நம்பிகள் பாராட்டியுள்ளார்கள். திருக்க ளிற்றுப்படியார் என்ற சாத்திரநூலும் பாம்பொழியப் பாடியது என இச்செயலை எடுத்தோதியிருக்கிறது. இதனைச் சிவப்பிரகாச அடிகள்,

பயனுகும் நல்லாண் பனைக்கு விடத்திற்கு
மயிலாகும் நோய்க்கு மருந்தாம்—உயிராகும்
சிந்தும் எலும்பிற்குச் சிரபுரத்து நாவலன்சம்
பந்தன் இயம்புதிருப் பாட்டு

என அமைக்கும் வெண்பாவில் விடத்திற்கு மயிலாகும் சம்பந்தர் திருப்பாட்டு என்பதால் விடந் தீர்த்த வரலாற்றை ஒப்புக் கொண் டுள்ளார்.

எனினும், மரபுவழிச் சான்றோர்கள் இச்செயலை ஞானசம்பந்தர் செயலாக அமைத்துக் கூற உடன்படுதல் இல்லை. காரணம் அவர் பாடிய பதிகத்தில் அக்குறிப்பு இல்லை என்பதே.

திருஞானசம்பந்தர் திருமருகல் தொடர்பாகப் பாடும்பதிகங் களில் ஒன்றுதான் திருமருகல் தலத்தோடு நேர்த் தொடர்பு உடையது. அடுத்து உள்ள ஒரு பதிகம், திருமருகலையும் திருச்செங் காட்டங் குடியையும் இணைத்துப் பாடிய பதிகம். இருதலங்களையும் இணைத்த பதிகம் பாடுவதற்குரிய சூழ்நிலையும் தெரிகிறது. திருமரு கலில் திருஞானசம்பந்தர் தங்கியிருக்கும்போது, சிறுத் தொண்டர் திருச்செங்காட்டங் குடியிலிருந்து வந்து அழைக்கிறார். முன்னமேயே திருச்செங்காட்டங் குடியிலிருந்துதான் வந்தார். மீளவந்து அழைக் கும்போது, திருஞானசம்பந்தர் திருமருகல் இறைவனை வணங்கி விடை பெறப் போகிறார். அப்போது, மருகற்பெருமான் திருச்செங் காட்டங்குடிக் கணபதீச்சுரத்தில் அமர்ந்திருக்குங் கோலத்தை இங்கே காட்டுகிறார். அவ்வகையில் இணைப்பதிகம் வருகிறது. இப் பதிகம் முழுவதிலும் பெருமானை 'மைந்த' என்ற சொல்லாலேயே விளிக்கிறார். மேலும், நம்பியாண்டார் நம்பிகள் திருமருகல் திருப்பதி கத்தை விடந்தீர்த்த திருப்பதிகம் என்றே கூறுகிறார். அவ்வாறே சிவப்பிரகாச அடிகளும் விடந்தீர்த்தது அவன் திருப்பாட்டே என்று கூறுகிறார். இதனை விளக்கும் நம்பியாண்டார் நம்பிகள்

"குவளைக் கருங்கண் கொடியிடை துன்பந் தவிர அன்று
துவளத் தொடுவிடம் தீர்த்த தமிழின் தொகை செய்தவனை"

என்று தாம் பாடிய திருச்சண்பை விருத்தத்தால் குறிப்பிடுகின்றார்.

அடுத்து, இப்பதிகம் மருகற் பெருமானைக் காதலித்த பெண் ஒருத்தியின் ஆற்றுமையை எடுத்துக் கூறி, ஒரு செவிலித்தாய் வருந்துவது என்ற முறையில் அமைந்துள்ளதேயன்றி, தன்னுடன் போந்தவன் பாம்பாற் கடியுண்டிறக்க, அதனால் துன்புறும் பெண்ணின் துன்பநிலையைப் புலப்படுப்பதாக இல்லை என்று விளக்கங் காட்டி, இப்பதிகம் விடந் தீர்த்த பதிகம் அன்று என வரையறுப்பர்.

திருமருகல் வாழையைத் தலமரமாகக் கொண்டது. பாம்பிருக்கப் பெரிதும் இடந்தருவது; பலருக்கும் தன்னை முழுமையாகத் தந்து விடும் வள்ளன்மையுடையது.

இங்கே அறவொழுக்கத்துக்கும் சமய ஒழுக்கத்துக்கும் உள்ள வேறுபாட்டினை அமைத்துக் காட்டுகின்றார் திருஞானசம்பந்தர். இக்காலத்தே சமயம் என்பதை வெறுத்து, அறவொழுக்கம் பற்றி வாழ்ந்தாலே போதும் என்ற கொள்கையினர் வாழ்வதைப் பார்க்கலாம். சமய வாழ்க்கையையும் அறவாழ்க்கையையும் அவ்வவ்வடிப்படைகளுடன் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். சமய வாழ்க்கை என்ற அடையாளத்தில் நடைபெறும் தவறுகளை நாம் சமயத்தில் உள்ள தவறுகளாகவே எண்ணி விடுதல் தவருன கொள்கையாகும்.

சமயம் என்பதற்கு இக்காலத்தே அமையும் எல்லாப் பொருளையும் ஒரே ஒரு விளக்க அடிப்படையில் அமைக்க வேண்டும். சத்தின் மயமாதல் சமயம். உலகில் உள்ள எல்லாப் பொருள்களும் அவைகளை உள்ள பொருளாக — பலரும் காணும் நிலையில் உள்ள பொருளாக ஆக்குவதற்காக அவ்வப் பொருள்களிலும் ஓர் உயர் பொருள் இருக்கிறது. அதுவே, அப்பொருளை நிலைநிறுத்தவும் செயற்படவும் செய்கிறது. தண்ணீர், நெருப்பு என்பனவாகிய பொருள்கள் அவ்வப் பொருள்களாக நிற்கவும் செயல்படவும் செய்வதற்காக அமையும் பொருள் அங்கேயே இருக்கிறது. ஆனால், அவைகள் தம்மை உயர்த்திக் கொள்ளவோ தமக்குரிய ஒரு குறிக்கோளை வகுத்துக் கொண்டு அதன்படி நடக்க வேண்டும் என்ற படிமுறையில் கொள்கையை அடைய வேண்டும் என்ற குறிக்கோளோ கொண்டவை அல்ல. உயிர்களே தமக்கெனத் தனித்த அறிவை உடையவை; தம்மை வளர்த்துக் கொள்ள வேண்டியவை. உயிர்ப் பொருள் ஒவ்வொன்றிலும் முற் கூறிய உயர் பொருள் — சத்துப் பொருள் இருக்கிறது. உயிரையோ, வேறுபொருளையோ அந்த உயர்பொருள் படைக்கவில்லை. அவற்றுள் தமக்கு ஓர் இடத்தைப் பெற்று அதில் தங்கிச் செயற்படுகிறது அவ்வளவே. அப்படி அது வந்து இருப்பது எதற்கு? அது இருப்பதால் செயற்பட முடிகிறது; செயற்படுவதால் தன் இருப்பை உணர்த்த முடிகிறது. ஆனால், அறிவுள்ள உயிர்ப் பொருள்களைப் பொறுத்த வரையில், அந்த உயிரின் அறிவு குறையுடையதாக இருப்பதால், அதனை நிறைவுடையதாக ஆக்கி, நிறைந்த இன்பத்தைத் துய்க்க வைக்க வேண்டும். அதற்குரிய துணையை அவ்வுயர் பொருள் செய்தமைக்கிறது அவ்வளவே.

அறம் என்பது வாழ்வியல் முறை. அறவினையே செய்தல் வேண்டும். பிறருக்காக நன்மைதரும் அறங்களையே செய்ய வேண்டும். அறத்தைப் பயன் நோக்கிச் செய்தாலும் பயன் கருதாமலேயே செய்தாலும் செய்த அறத்துக்கு — நற் செயலுக்குப் பயன் உண்டு. அதன் பயனை அறஞ்செய்தான் துய்க்கவே வேண்டும். இது அறம் அமைத்த வழி. இதனால் பயன் அறம் செய்தல் அதன் பயனைத் துய்க்கப் பிறத்தல் என்று இவ்வாறு அற இயற் சங்கிலியானது சுழன்று கொண்டேயிருக்கும்.

அறமே தனிமுதல் எனக் கருதலாம். அறமே தன்னை வாழ்வியற் கோடுகளாக வகுத்துக் கொண்டது என எண்ணலாம். அறத்துக்குரிய ஆற்றலை அல்லது செயற்படுதற்குரிய உயிர்ப்புத் தன்மையை அதுவே தன்னுட் கொண்டதாய்ச் செயற்படுத்துகிறதா அல்லது அறத்துக்கு அந்த ஆற்றலை அமைக்கும் வேறு ஏதேனும் ஒரு பொருள் உண்டா? என ஆய்தல் வேண்டும். அறத்தையே முழு முதலாக அமைத்து விடலாம்; குறையில்லை.

அறமானது செயல் முலம் தன்னைப் புலப்படுத்திக் கொள்கிறது. உலகில் ஒரு சிலர் செயல் விளைதற்குரிய கருவி கரணங்களை நிறுத்தி, தம்மைச் செயலின்றியே நிறுத்தி விடுகிறார்கள். பல ஆண்டுகள் அப்படியே நிற்கிறார்கள். இவர்களுக்கும் அறத்துக்கும் என்ன உறவு? இதுவும் அறத்தின் ஒரு பகுதியே என்றால் இவ்வாறு இருப்பதால் என்ன பயன்? செயலால் வெளிப்படும் அறம் செயலின்மையையும் தன்னுடைய வெளிப்பாடே என வகுத்துக் கொள்ளுமா? அதையும் ஏற்கலாம். உயர்ந்தது எது? உயர்ந்தது தாழ்ந்தது என்பது இல்லை. இரண்டும் ஒத்தவைகளே என்றால், செயற்படுதலும் செயற்படாமையும் என இரண்டையும் இணைக்க வேண்டும். ஒரே பொருள் செயற்படவும் வேண்டும்; செயற்படாதிருக்கவும் வேண்டும். உயிரானது தன்னுடைய கருவி கரணங்களாகிய உடல் முதலியவைகளைச் செயற்படுத்தவும் வேண்டும், செயற்படாதிருத்தவும் வேண்டும். செயற்படுத்தும் உயிர் செயற்படுத்தலில்லையானால் கருவி கரணங்கள் செயற்படா. இதை நாம் மிகு தூக்கத்தில் காணலாம். இரண்டும் தேவையானால், ஒரு கொள்கையை உருவாக்கலாம், செய்ய வேண்டிய உயிர் அறம் என்ற உயர் பொருளுக்குத் தம்மை அடிமையாக்க வேண்டும். உயிர் தனக்கு அடிமை என நிற்கும் வகையில் அறம் தாமே முன்னின்று, உயிரின் செயலைத் தன்னுடைய செயலாக ஏற்றுச் செயற்படுத்த வேண்டும். இந்நிலையில், எல்லா உயிர்களும் உயர் நிலைக்கு வந்து விடுமேயானால், செயல் தேவையில்லை. ஏனெனில், செயலை ஏற்றுக் கொள்ள யாரும் இல்லை. உலகத்தில் ஏனைய உயிர்கள் இல்லை. முடிந்த நிலையில், செயற்படாதிருத்தல் செயற்படுதல் என்ற இரண்டும் ஒன்றாகும். அறமும் அறவழியில் தம்மை அடிமையாகக் கொண்ட அறவாளர்களுமே, உள்ளவர்கள். இத்தகைய வாழ்வைப் பெற்றவர்கள் — குறிக்கோள் வாழ்வை

அடைந்தவர்கள் அந்நிலைக்கு மேல் பெறுகின்ற பயன் என்ன? இவ்வாறு வந்து நின்றவர்களுக்கு அறம் தரும் பயன் என்ன?

உயிரானது அறத்தொடு, அறிவோடு, இன்பத்துய்ப்போடு வாழும் ஒன்று. அறத்தின் நிறைவு போலவே, அறிவு நிறைவும் பெற வேண்டும். அறத்துக்கு உயிர் அடிமையாக வேண்டும் என்றால் அது வெறும் அறப்பயிற்சியால் மட்டுமன்று; அறமானது அறிவைப் பண்படுத்தி உயர்த்த வேண்டும், இவ்விரு நிலைகளில் உயரும் போதே, உயர் இன்பமே நாம் துய்க்கப் பெற வேண்டும் இன்பம் எனவும் கருதினால்தான் தன் செயலைப் பிறருக்காக அமைத்துவிட்டுத் தான் அறத்துக்கு அடிமையாக இயலும். எனவே, அறம் என்ற ஒன்றை மூன்றாக நாம் கருத வேண்டும். அறத்தைப் போலவே அறிவும் அடிமையாதல் வேண்டும் என அறிவுப்பகுதி விரும்பு கிறது. அவ்வாறே தான் இன்பப் பகுதியும்.

இங்கே தான் சிக்கல். அறவியலாளர்கள் அறத்தில் ஏனைய இரண்டை இணைக்கிறார்கள். அறிவியலாளர்கள் அறத்தையும் இன்பத்தையும் அறிவில் இணைக்கிறார்கள். இன்பியலாளர்கள் இன்பத்துக்கு ஏனைய இரண்டும் அடிமையாக வேண்டும் எனச் சிந்தித்து அவைகளை அடிமை ஆக்குகிறார்கள். அவ்வாறே மூன்று நிலையில் அமைக்கலாம். முழுமையான அறம், முழுமையான அறிவு முழுமையான இன்பம், இம்மூன்றிலும் உயிர் தம்மை அடிமையாக்கிக் கொள்ள வேண்டும். இவ்வாறு நிற்றலே முடிந்த நிலை என அமைக்கலாம். ஆனால், உயிரில் இந்த மூன்று நிலைகளுக்கும் அப்பால் ஒன்று இருக்கிறது என்பதை அனுபவத்தில் பார்க்கலாம். இந்த மூன்றையுமே உயிர் விரும்பவில்லையானால், அவைகளை உயர் வாகக் கருதவில்லையானால் அவ்வுயிரின் நிலை என்ன? தன்னுடைய இப்போதைய நிலையானது துன்பநிலை என்றும், உயர்ந்த நிலைக்குப் போக வேண்டும் என்றும் எண்ணி, எண்ணியதைச் செயற்படுத்த வேண்டும் என்றும் அது நினைக்க வேண்டும்; செயற்பட வேண்டும். அதற்குத் தேவை மூன்றைப் பற்றல். அது இல்லையேல், ஏனைய மூன்றும் எப்படி இருந்தால்தான் என்ன என்ற நிலையே உண்டாகும். அது தான் உயிர்; ஏனைய மூன்றிலும் அது உணரப் பெறும். ஆயினும், இவைகளாக உயிர்த்தலே உயிர். அத்தகைய மூன்றைப்பற்றல் ஏனைய மூன்றோடு தொடர்பு கொள்வது தான் அன்பு நிலை. அதனை இயக்குவது அருள்நிலை. அன்பானது தானே மூன்றைத்துச் செயல் படும். ஆனால், அன்பு அருளில் ஆழ்ந்து விட்டால், அருள் செயல் படும்போது அன்பு இணைந்து நின்று விடும். ஏனைய மூன்றையும் (அறிவு, அறம், இன்பம் இணைத்து) வலிமையுடையதாக்கும் அன்பே உயிராற்றல். அவ்வாறு இணைக்கும் வலிமையுடைய அருளே இறை யாற்றல்.

அறிவு, செயல், இன்பம் என்ற மூன்றுக்கும் இருப்பாற்றலைத் தருவது அன்பு நிலையாம் உயிர். அறிவில் நிறைவு பெற, செயலில் நிறைவு பெற, முழுமை இன்பம் பெறச் செய்வது அன்பு நிலை.

அன்பு அவைகளில் தம்மை ஈடுபடுத்தி வளர்க்க வேண்டும் எனத் தம்மை அவ்வளர்ச்சியில் ஈடுபடுத்திக் கொள்ள வில்லையானால் அறிவு, செயல், இன்பம் ஆகியவைகள் இருந்தும் செயற்பாடு இல்லாதவைகளே. அறிவையோ, செயலையோ இன்பத்தையோ அன்பு உண்டாக்குவதன்று. அவற்றோடு இணைந்து வலிமை பெற வைப்பது. அவை தனித்த உள்பொருள்களேயாயினும் அவை களுக்குச் செயற்பாட்டுவகையில் இருப்புநிலையுடையதாக ஆக்கியது அன்பாம் நிலை எனப் பெறும் உயிரிணைப்பு. உலகியலில் வழங்கும் தொடரில் அமைக்க வேண்டுமானால் அறிவின் மேல் வைத்த அன்பு. உயிர் செயற்படும் நிலையே அன்பு நிலை. செயற்படு கருவி உடம்பு. அதனாலேயே திருவள்ளுவர்

அன்போடியமைந்த வழக்கு என்ப ஆருயிர்க்கு
என்போடியைந்த தொடர்பு.

என்றார். இங்கே அன்பும் தனித்த நிலையுடைய உண்மைப்பொருளே. அதனை உள்நின்று இயக்குவது அருள் என்பதாயிற்று. எனவே, அன்புக்கு எழுச்சியூட்டிச் செயற்படுத்துவது 'அருள்' என்பதாயிற்று. அருள் முதலில் அன்புக்கு மூலமாக இருந்து உந்தாற்றலைத் தூண்டியது. அது பிறவற்றோடு செயற்பட்டது. போகப் போக, மெல்ல மெல்லத் தனக்கும் ஓர் மூல ஊன்றுகோல், உயிர்ப்பாற்றல் உண்டு என்று தெரிந்து கொண்டது. அறிவு, செயலாற்றல், இன்பம் ஆகியவைகளை அன்பால் நாமே செயற்படுத்தினோம் என்ற எண்ணம் வந்தது. பிறகு நம்மையும் செயற்படுத்தும் ஓர் உந்தாற்றல் இருக்கிறது என அறிந்த போது, அதனுள் அன்பு நிலையாய் நின்ற உயிர் தன்னை அடிமையாக்கியது. அறிவு, அறம், இன்பம் என மூன்றாய் நின்ற அன்பு நிலை — உயிர்நிலையானது தன்னை அருள் நிலையில் அடிமைப்படுத்தியபோது அன்பு, அறிவு, செயல், இன்பம் ஆகிய எல்லாம் அழிந்து போகவில்லை; இருக்கின்றன. முன்னே அன்பு நிலையில் செயல்பட்ட அறிவு, செயல், இன்பம் என்பவை இப்போது அருளில் ஒடுங்கிச் செயல்படும் போது எவையும் அழிவனவல்ல. அருட்செயலில் ஏனையவை ஒடுங்கி நிற்பதே பேரானந்தத் துய்ப்பு. உயிரானது தன்னை அன்பு நிலையாகவும், அறிவையும், அறத்தையும் செயற்படுத்தி நிறை இன்பம் பெறுகிறது. அருள் நிலையில் தொழிற்படும் போது அன்பு நிலையானது அருள் தன்மையைத் தன்னிடத்தும் அறிவுத் தன்மையிடத்தும், செயல் தன்மையிடத்தும், இன்ப நுகர்வுத் தன்மையிடத்தும் செலுத்துகிறது. அருள் உயிரின் மூலமே செயற்படுகிறது. முன்பே அன்பால் செயற் பட்டது. இப்போது அருளால் உயிரின் தொடர்பு வழியாம் அன்பு நிலையில் செயல்படுகிறது. அருள் நிலையாம் இறைவன் உயர்நிலைக் குரிய அறிவு, செயல், இன்புறு நிலைகளைத் தன்னுடைய நேர் அடிமை களாக அமைப்பதில்லை. அவைகளுக்கெல்லாம் இருப்பைத் தருவது உயிர்நிலையே. அருள் முன்னே அன்பு நிலைக்குள் அடங்கித் தொழிற்படுத்தியது. இப்போது அருளானது பெருகி நின்று தொழிற் படும் போது, அதனுள் அடங்கியிருக்கும் உயிரின் ஆற்றல் பெருகு

கிறது; அவ்வளவே. உயிரின் ஆற்றல் பெருகுவதால் அதன் பகையின் ஆற்றல் பயனில்லாமற் போய்விடுகிறது. இவ்வகை அனுபவ அடிப்படையின் மூலமாகவே, அன்பு நிலையாம் உயிர் நிலைக்கு மேல் அருள் நிலையாம் 'இறை' என்ற பொருளை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலை உண்டாயிற்று. அறவாணர்கள் அவ்வாறு ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் வேறெரு வினுவை விடுக்கலாம். அருளையும் இயக்கும் மூலம் ஒன்றை ஏன் கொள்ளக் கூடாது? என்ன உண்மை. நல்ல வினு? இங்கே நாம் ஆய்வது உயிரில் இருப்பவைகளை வைத்துத்தான். அறிவு, செயல், இன்பத்துய்ப்பு என்பவை அனுபவம். அனுபவத்துக்குரிய உயிர் அன்பை உந்தாற்றலாகக் கொள்கிறது. அன்பையும் உள்நின்று உணர்த்துவதற்கு ஒன்று அதனுள்ளேயே அமைந்திருக்கிறது என்று நாம் கொள்ளுவதற்குக் காரணம் உயிரானது தன் அன்பை-உந்தாற்றலைச் சிற்சில சமயம் அறவழிக் கல்லாமல் மறவழிக்கும் ஈடுபடுத்துகிறதே யென்பதை அனுபவத்தில் கண்டமையால், இதை ஒழுங்குபடுத்த ஒன்று தேவை என்பதை அனுபவத்தில் உணர்கிறோம். இதனைத் திருவள்ளுவர்,

> "அறத்துக்கே அன்பு சார்பு என்ப; அறியார்
> மறத்துக்கும் அஃதே துணை"

என்றார். எனவே, தீமைப்படும் நிலையில் செல்வதால், அதனை நன்னிலைப் படுத்த வேண்டிய உந்தாற்றல் ஒன்று இருக்க வேண்டும் என நினைத்து ஏற்க வேண்டியுள்ளது. அதனால் தான் சேக்கிழார்,

> "நன்மை பெருகு அருள்நெறி" என்றார்.

அது என்றும் மாறுபடாது நன்மையிலேயே இருப்பது என்று நம் அனுபவத்தில் விளங்குவதால் அதற்கு மேல் ஒன்று உண்டு என்ற எண்ணத்தை நாம் கொள்ள இயலாமற் போயிற்று.

எனவே, அறநிலைக்கு மேற்பட்ட ஒன்றை நாம் அமைத்துக் கொள்ள வேண்டிய நிலை அனுபவ அமைப்பில் உள்ளதாகிறது. அறநிலையில் சில சிக்கல்கள் வரும்போது, அதன் மேல் நிலையில் நாம் முறையிடுவதைத் தவிர வேறுவழியில்லை. இவைகளுக்குள் மோதல் இல்லை — பகை இல்லை என்பதை நிலைநிறுத்த வேண்டிய சமயத்தில் தம்மை வெளிப்படுத்திக் கொண்டு, நடுவு நிலையில் நிற்கச் செய்வதே அருள்நிலை. அதனால், அது என்றுமே பொது ஆட்டிற்கு வல்லது எனவும் நடுநிற்பது எனவும் கொள்ள வேண்டியுள்ளது.

இவ்வடிப்படையில் சமயம் என்பது சத் எனப்பெறும் அருள் நிலை ஆற்றலில், அன்பாற்றலை இணைத்து, அவ்வருளின் வழியில் செயலாற்றுதல் என்பதே — சத்தின் மயமாக நின்று செயற்படுவதே சமயம் என்பதாகக் கொள்ள வேண்டும். அறத்தின் எல்லையைத் திருமருகல் நிகழ்வு மூலம் விளக்குகிறார், திருஞானசம்பந்தர்.

வைப்பூர்த் தாமன் என்ற வணிக்னின் மகள், அவளுடைய் மணமுறைக்கு ஒத்தவன் என்ற இருவர் மேற்கொண்ட அறச் செயல் களே மூலம்.

தாமன் பெண் கொடுப்பதாக வாக்களித்தான்; மாறினன். அதற் காகப் பெண் வருந்துகிருள். அவளே தன் மாமனிடம் கூறி, அவனை யும் அழைத்துக் கொண்டு புறப்பட்டு விடுகிருள். அவள் கூப் பிடவே மணமகனுக அமைய வேண்டியவனும் வந்துவிட்டான்.

முதலில் வாக்குக் கொடுத்து, அதனைத் தவறிய போது தாமனை இம்மணமகனே கேட்டிருக்கலாம். ஏமாவதாக நின்ற அப் பெண்ணே கேட்டிருக்கலாம். இரண்டாவது முறையும் அவன் வாக்குத் தவறினன். அப்போது ஊராரிடமோ பிற அறங் காவலரிடமோ இம்மணமகன் கூறியிருக்கலாம். ஏமாவது பெண் திருமணம் நடைபெறும் வரையிலும் இருவரும் பேசாமலேயே இருந்து விடுகிறார்கள். இதுவரையிற் செயல் படாதவர்கள் இப்போது செயற்படுகிறார்கள். அப்போதும் மாப்பிள்ளை செயற்படவில்லை. மணமகளே செயற்படுகிருள். இதே கருத்தை அங்கேயே தெரிவித்துப் போராடினுல் தாமனும் திருந்த முடியும். பெண்ணுக்குத் தந்தையின் சொற்காத்தல் என்பதே கொள்கையாயின் வீட்டிலேயே செயற்பட்டிருக்க வேண்டும். எப்பொழுதுமே செயற்படாமை, இனி மணக்கப் பெண்ணில்லை என்ற காலத்தும் செயற்படாமை என இவ் வாறு குறைந்தது ஆறு ஆண்டுகள் மணமகன் செயற்படாதிருந்தான். இனி, வெளிப்பட வந்தவர்கள் ஒருவரை யொருவர் தொடாமல் இருந்தமைக்குக் காரணம் என்ன? யாரேனும் ஒருவர் கொடுக்க மற்றவர் ஏற்க அமைவது திருமணம். இனிமேல், யார் இவனைத் தம் முடைமையாக்கி, அவனிடம் கொடுக்கப் போகிறார்கள்! எனவே, அவள் பின்னினைவைச் சிந்திக்கவில்லை. தன் மாமனுக்காகக் கொண்ட இரக்கம் ஒன்றே காரணம். இரக்கம் யாரிடத்தில் அமைத் தாள்? செயல் படாதவனிடம் இரக்கம் காட்டினுள். தந்தை சொல் தவறுகிருரே என்று அவர்மேல் இரக்கங் கொண்டு செயற்பட் டிருந்தால் யாவும் நன்மையே. இரக்கம் காரணமாக அவள் மேற் கொண்ட செயல் அனைத்தும் அறத்துக்கு முரண். இரக்கம் காரண மாகச் செயல்பட்டாள். ஆகையினுல், நாமும் அவளுக்காக இரங்கி வருந்தும் நிலை உண்டாகிறது.

இரக்கம் காரணமாயினும், அறிவுடைமையால் தன் செயலை அறச் செயல் என நிறுத்துகிருள். இங்கே அவளுக்கு அமையும் சிக்கல், அறத்தின் வழியில் இரக்கங் கொண்டு செயலாற்றினுமே அறம் காப் பாற்றவில்லையே என்பதுதான். எனவே, அவள்—அறம் கைவிட்ட தாகக் கருதியபோது ஆண்டவனை நினைக்கிருள்; அழுகிருள். இவளை இப்போது காப்பாற்றவில்லையானுல், ஆண்டவனும் தவறுபடுவான். அனைவரையும் தவறு என அமைத்துச் செயலாற்றினுலும் செயல் புரிபவள் அவள் ஒருத்தியே. மாமனை முன்னே உயிரிருந்தும் செயல் படாதிருந்தான், இப்போது உயிரில்லை செயல்படவில்லை. எனவே

செயல் படாமை என்பது மணமகனின் நிலை. நாம் நினைப்பது போல ஞானசம்பந்தரும் நீணெத்துச் செயல் புரிவார் என எண்ணலாகாது.

கடவுளை நோக்கி அழுது முறையிட்ட பெண்ணுக்குரிய குறை நீக்கப் பெறவில்லையாஞல், இந்நிகழ்வில் 'தாமன்' மேலும் பல தீவினைகளைச் செய்வான். அவன் சொல்தவறியமை அல்லது மணம் புரிந்து வைக்காமை நேர்மைச்செயல் என்பதாகவே விளக்கம் பெறும்.

தந்தை குற்றம் செய்தார் என்பதற்காக எல்லாருமே இப்படி வெளியில் சென்று தமக்கேற்ற வாழ்வை அமைத்துக் கொள்வது என்ருல் அவ்வளவில் அறவிதியே பயனற்றது என்பதாகும்.

இன்ன முறைப்படி இப்பொருளை அடைய வேண்டும் என்ற விதியிருப்பின்; அவ்விதியை மீறி, அப்பொருளை அடைய முயலுதல் கூடாது. பொருள் இசைவு தந்துவிட்டது என்ற காரணத்தால் விதியை மீறலாம் என்பதாகாது.

செயற்படாதவர்களைச் சேரும் செயற்படுபவர்களும் செயற்படா மலேயே நின்றுவிடுவார்கள், அவ்வளவே.

மணமகளைப் பாம்பின் நஞ்சிலிருந்து நீக்கலாம். அவளை இவளுக்கேற்பச் செயல்பட வைக்க முடியுமா? செயற்பட வைக்க வில்லையாஞல் பாம்பு கடித்து இறந்ததே நல்லது என அப்பெண் நினைக்கும் நிலையை உருவாக்கி விடுவான் இவன். இவளோ மணத்தின் மூலம்தான் அவளை அடைய வேண்டும் என நினைக்கிருள். எனவே, அவளை மண முறையில் அவனுக்கு உரிமையாக்க வேண்டும். இவ் வளவு பணிகளும் ஞானசம்பந்தருக்கு உண்டு. நாம் செயல்படும் போது அறவழியில் இவ்வளவையும் எப்படி இணைப்பது என நினைப் போம், நம்மால் எல்லாவற்றையும் இணைத்துச் செயலாற்ற முடியுமா? இந்நிகழ்ச்சியைத் தான் முன்பே பூந்தராய் நிகழ்ச்சியில் கண்டோம்.

சங்கநிதியும் பதுமநிதியும் வழங்கும்தன்மையையுடையன. ஆஞல், எல்லையில்லாது வழங்க வேண்டும் என்ற எண்ணம் வரும் போது அவைகளுக்கும் இயலாமை வந்தது. அவ்வாறு, கொடுக்க முடியாமல் ஒருவகைத் தடை இருந்தது. அவைகள் இறைவனை மாலைகளாக அடைந்து வழிபட்டு அத்தன்மையைப் பெற்றன. அப் போதே ஞானசம்பந்தர் அருளியது "கலிகடிந்தகையான்" என்பதே. அறம் பயன் தருவதே. ஆஞல், அருளில் நிற்கும் போதே வரையாது வழங்க முடியும். ஆயினும், ஏதேனும் ஓர் அறத்தை அடிப்படையாகக் கொண்டுதான் வரையாது வழங்க முடியுமேயன்றி, எந்த ஓர் அறமும் இல்லாத நிலையில் வரையாது வழங்க இயலாது. எனவே, திருவருள் நிலையில் நிற்கிறர் ஞானசம்பந்தர்.

என் தந்தையும் தாயும் என்னை இன்னருக்கு என உரிமை யாக்கியமையால் நான் அவருக்கன்றி வேறு ஒருவருக்கும் உரிமை யாகேன் என்ற திலகவதியாரை நோக்குக. அத்தகைய அறமே வணி

கமகள் கொண்ட அறம். திலகவதிக்கென உரிமையாக்கப் பெற்றவர் இறந்து விட்டமையின் திலகவதியாருக்கு வேறுபணி அமைய வில்லை. இங்கே மணமகன் இருக்கிறான். தன்னை உரிமை என முன்னே தந்தை கூறிய வார்த்தையை ஏற்றவள். வேறு ஒருவருக்கு உரிமையாக்கத் தந்தை முதலானோர் முற்படும்போது அதைஏற்கும் நிலையில் எதிர்த்துச் செயலாற்ற இயலாத நிலையில் மறைமுகச் செயலை மேற்கொள்கிறாள். அப்படி வந்தபோதும் அவனுக்கு உரிமையாக ஆக்கிய வார்த்தையை ஏற்றாலும், அமைத்துக் கொடுக்கும் வரை காத்திருக்க வேண்டும் என்ற அறத்தையும் மேற் கொண்டாள். அவனைத் தொடும் உரிமையை அறமானதுவிதிப்படிக் கொடுக்க வேண்டும் என எண்ணினாள். ஆகையால் இறந்த பிறகும் கூட அவனைத் தொடவில்லை. அவள் எண்ணுவது அறநெறியில் நின்ற தன்னை அறம் காப்பாற்றவில்லை; அறத்தின் நாயகன் எனப் பெறும் ஆண்டவனும் பல சமயங்களில் அறத்தில் நிற்பவரைக் காப் பாற்றியவன் தானே என்ற வரலாற்றின் அடிப்படையில் ஆண்ட வனை அழைக்கிறாள். அறத்தைப் பற்றி நின்ற பற்றுள்ளத்தில் குறை இல்லை. செயற்படுத்துதற்குரிய அறிவாற்றல் இல்லை. மேற் கொள்ளும் வழிமுறைகள் எப்படி அமைய வேண்டும் என்று கருத வேண்டியதில்லை ; எப்படியேனும் குறிக்கோளை அடைந்தால் சரி என்ற கருத்துடைமையால், அறத்தை நிலை நாட்டத் தவறுன வழியை மேற் கொண்டு விட்டாள்.

அறத்தில் பற்று இருந்தால் மட்டும் போதாது.. அறத்தை உண்மையாக விளங்கிக் கொள்ள வேண்டும். நாம் அறத்தைச் செயற்படுத்தும்போது, அது உலகப் பொது அறத்தொடு தொடர் புடையது என்று கருதி, தன்னுடைய தனிமைச் செயல் பொது அற முறையை எப்படி மாறுபடுத்தும் என்பதையும் எண்ணிச் செயற்பட வேண்டும். ஆனால், அறத்தின்மீது பற்றுக் கொண்டு வாழவேண்டும்; அதிற் குறை வரும் போது நம்மைக் காத்து அவ்வழியில் நிறுத்தும் ஆற்றல் உடையவன் இருக்கிறான் என்ற இந்த இரண்டன் அடிப் படையிலேயே அவள் செயற்பட்டு விட்டாள்.

அடுத்து, அவளுடைய குறை தீர்ப்பதாயின் இறந்தவன் எழ வேண்டும். அவனிடத்தில் உள்ள நன்மை தீமை ஆகியவைகளைச் சிந்தித்தால் நம்பிக்கை வயப்பட்டவன். சொல்லுபவர்கள் சொல் வனவற்றை நம்புபவன். நம்பியவாறு செயற்படுபவனும் அல்லன். இந்நிலையில் திருமருகற் பெருமான் இயல்புகள், தலத்தின் அமைப்பு நிலை ஆகியவைகளை எடுத்துக் காட்டித் தன் செயற்பாடு எவ்வாறு அமைகிறது என்பதையும் சுட்டிக் காட்டுகின்றார். திருஞானசம்பந்தர் தாம் செயல்மேற்கொள்ளும் முறையை ஒழுங்குறக் காண வேண்டுமாயின் அப்பதிகத் திருக்கடைக் காப்பினில் சென்று அவரருள் துணைக்கொண்டு படித்தல் வேண்டும்.

விடந் தீர்த்த பதிகம் நேரே திருமருகற் பெருமானைப் பற்றியதே. "சடையாயெனுமால்" என்ற தொடக்கத்தையுடையது. அத்திருப் பதிகத்தின் திருக்கடைக் காப்பினைக் கீழே காணலாம்.

"வய ஞானம் வல்லார் மருகற் பெருமான்
உயர் ஞானம் உணர்ந்து அடியுள் குதலால்
இயல் ஞான சம்பந்தன பாடல் வல்லார்
வியன் ஞாலமெல்லாம் விளங்கும் புகழே."

இத்திருக்கடைக் காப்பினுள் 'வயஞானம்' என்பதும் 'உயர் ஞானம்' என்பதும் எவைகளைக் குறித்தன?

வயஞானம் என்பதற்குச் சிவன் வயமாகிய ஞானம் எனவும் வெற்றியை உள்ளிட்ட ஞானம் எனவும் தன் வயமாக்கிய திருவருள் ஞானம் எனவும் உரை கூறப் பெற்றுள்ளன. வய ஞானம் என்பது சிவஞானம், திருவருள் ஞானம் எனப்பெறுமாயின், உயர் ஞானம் என்பது எதனைக் குறிக்கும்?

வ, ய ஞானம் வயஞானம் எனப் பெற்றது. அருளின் அடியில் 'ய' என்பதன் ஞானம். அறவழியில் நின்ற உயிர் பெற்றிருக்கும் ஞானம். திருவருளாகவே நிற்கும் உயிர் தன்னைத் தோற்றிக் கொள்ளாது ஆதலின் அருளின் துணையுண்டு என்ற வகையில் உயிரானது பெறும் ஞானம். அறவழியில் நின்ற உயிர் அருளை இன்னும் புகல் அடையாது, அருளைப்பற்றி அறிந்துள்ள உயிர் எனக் கொள்க. அறத்தில் நின்ற காலத்தில் வரும் இன்னலில் தடைகளை நீக்குவது இரண்டையும் இணைத்துக் காப்பது ஒன்று உண்டு என்பது உயர்ஞானம். ஒருபக்கம் அரவு இன்னொரு பக்கம் சிறுமதி. இரண்டும் மாறுன பொருள். மாறுபட்டவைகளின் மாறு பாடு நீக்கி, அவைகளை இணைய நிறுத்தும் ஆற்றல் 'அருளேயாக நின்ற உன்நிலை அதனை நினைவு படுத்துவது 'சடை' இவ்வடிப் படையிலேயே, ஞானசம்பந்தர் பதிகந் தொடங்கும் போது 'சடையாய்' எனுமால், சரண் நீ எனுமால்" என்று தொடங்கிக் கூறினர் என்றார்.

அறநெறியில் மலர்வது அருள் நெறி. அறநெறியில் செயலாற்றும் போது இடர்ப்பாடு வந்து விட்டது. செயற்பட முடியாத நிலை தோன்றி விட்டது. இந்நிலை வரும் போதெல்லாம் இரண்டின் குறை நீக்கிக் காப்பது அறத்தை உணர்ந்த ஞானத்தை விட மேற்பட்டு நிற்கும் அருள் ஞானம். அதை விளக்கும் அடையாளம் உம்முடைய சடை. அருள் ஞானம் பெறுவதற்குத் தகுதி அடிமையாதல் ஒன்றே. இவ்விரண்டையும் முறையாகச் செய்து விட்டார். அவர் உணர்ந்து செயற்படுகின்ற நிலையில், அவரிடம் அமைந்த ஞானம், செயல் ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்டு யான் இயங்குகிறேன் என்று சுட்டிக் காட்டும் முறையில் மருகற் பெருமானே! வயஞானம் வல்லார், உயர் ஞானம் உணர்ந்து அடி உள்குதலால், இயலுகின்ற— செயற்படுகின்ற ஞானசம்பந்தன் என்று கூறுகிறார். திருஞான சம்பந்தர் செயற்படுதற்குக் காரணமாக இருந்தவை.

"சடையாய் எனுமால் சரண் நீ எனுமால்"

என்று கூறிய அப்பெண்ணின் வாய்மொழிகளே.

தில்லைப்பதியில் ஆடும் கூத்தப்பிரானின் அருளாட்டு எனப் பெறும் திருநீலகண்டத்தில் அருளின் வயப்பட்ட ஐந்தொழிலையும் விளக்குவதே அவன் சடை. திருநீலகண்டக் கூத்தில் சடையின் ஆட்டம் விரிவாகப் பேசப் பெறும். அக்கூத்தானது சடையின் மூலம் வெளிப்படுத்தும் ஐந்து ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. அதனால் "சடையார் சீலத்தார்" என்றார். சடையின் மூலம் இணைத்துக் காட்டப் பெறும் ஒழுக்கம் உடையவர்.

பல்சடை, நீள்சடை, பொன்சடை (புன்சடை எனத் திரிந்தது), விரி சடை, நிமிர்சடை எனச் சடைவகை ஐந்து. நஞ்சை அமுதமாக்கி, அம்மையின் கைகளாம் அறத்தை வலிமையாக்கி, இவ்வாறு ஒன்றே பன்முகங்களாகப் பிரிந்து தொண்டாற்றிய நிலை பல்சடை. அருட்கண் என்ற ஓம் விழிக்கப்பெற அது ஐந்தாய் விரிந்து, ஐம்புலக் காமத்தை அழித்து, அங்கெல்லாம் அருளை அமைத்தநிலை; இதுவே மூப்புரம் எரித்த சடை; அதுவே நீள்சடை. உயிரானது ஞானமயமாய் நிற்க அருள் செய்ததாம் சூலத்தராம் நிலை. இந்நிலைக்குரியது பொன்சடை. பரந்து சென்று சராசரங்களுக்கெல்லாம் சிவம் எனத் தங்கியும் பெருக்கியும் தொண்டாற்றுவதே விரிசடை. செயற்கரிய செயலை ஆற்றுவதற்கென, எதையும் ஏற்கும் போக்கில் நிமிர்ந்து உயர்ந்த ஞானநிலை, தலைமை நிலை, பெருமைநிலை உடையவன் என்பதை விளக்குவதே நிமிர்சடை. அதுவே உயர்ந்தார் எனப்பெறும். இவ்வாறு, சடையை — சடையில் அமைந்த சீலத்தை எண்ணும் தன்மையே "உயர்ஞானம்" என்று பாராட்டப் பெற்றது. செட்டிப் பெண் இந்த உயர் ஞானத்தால், சடையின் சீலத்தைக் குறிப்பிட்டுக் கூறி, பின்னர், அடி வணங்குகிறாள்.

இனி, இப்பதிகப் பயன் என்ன எனில், பாடல் வல்லவரின் புகழ் விளங்கும் என்பது. வல்லவர்கள் இன்ன இன்ன பெறுவார்கள் என்று சொல்லாமை ஒருபுறமிருக்க, ஞாலமெல்லாம் விளங்கும் புகழ் பெறுவார்கள் என்றும் சொல்லாமல், வல்லவர்களுடைய புகழ் ஞால மெல்லாம் விளங்கும் என்று மாற்றிக் கூறினர். புகழ் விளங்கும் என்பதன் நோக்கம், சடையாய் என்றும் சரண் நீ என்றும் உனக்கு அடிமையானாலே போதும் என்பதை உணர்ந்து செயற்பட்ட இவர்களைக் காப்பாற்றினால், பின்வரும் உலகியலில் இவ்வாறு திருமருகலில் துன்பம் நேர்ந்த போது அப்பெருமானைச் சரண் என்று அடைந்த செட்டிப் பெண் துயர் நீங்குமாறு அருளப் பெற்றாள் என அவர்களை அனைவரும் எடுத்துக் காட்டவே, அவர் தம் வரலாறும் நின் அருளும் உறுதிப்படும். இல்லையானால் பழிவந்தெய்தும் என்று சுட்டிக் காட்டினர். எனவே, அறநெறியில் நின்றவர்கள், சிக்கல் தோன்றிய போது அருளில் நிலைந்து அடிமை எனத் தம்மை நிறுத்திய போது அவர்கள் காப்பாற்றப் பெறவில்லையானால் அறநெறி நிற்றல் என்ற கொள்கை பழுதுபடும். நின் அருள் தன்மையும் அடிமை என நிறுத்திய தன்மையும் ஆகிய இரண்டையும் இணைத்த திருவருள் நெறிக் கொள்கையானது பழுதுபட்டது என்ப தாகும்.

இனி, அறத்தில் நின்ற அவள் தன்னிலையை இன்னதென உணர்த்தும் வகையில் "விடையாய் எனுமால்" என்றுள். அறத்தை எருதாக ஏறி அமர்ந்தவனே என்று குறிப்பிட்டாள். இவற்றுக்கு மேலாக யான் இச் செயலை எவ்வாறு அறவழியில் நின்று சிந்தித்தேன் என்பதை என் சிந்தையுள்ளேயே நீ இருப்பதால் நீ அவைகளெல் லாம் உண்மை என அறிவாய் என்று எடுத்துக் காட்டினாள். நான் முதல்வனுக உன்னை வைத்து, உன் முன்னிலையில் சிந்தித்த படிநிலைகளை நீ அறிவாய். நீ ஏன் அப்பொழுதே முந்தி வந்து என் தவருன சிந்தனையைச் சுட்டிக் காட்டவில்லை என்ற பொருளில் "முந்தாய் எனுமால் முதல்வா எனுமால்" என்று கேட்கிருள் ஆனமையின், இவள் உயர் ஞானம் உணர்ந்து உன்னடியை நினைந்து உருகுகிறவளே ஆகையால் யான் செயல்படுகிறேன் என்று அருளு கிருர். இந்நிலையில்—அருள்நிலையில் இவர் துயர் நீக்கிச் செயற்பட வில்லையானுல் அவள் உன்னை முன்னிலையாக்கிச் செயல்பட்ட அவ்வளவு அறமுறைகளும் பாழ்பட்டுப் போகும் என ஆணையிடு கிருள். அவள் கூற்றின் உண்மையே யான் செயற்படற்குக் காரணம்.

இனி, அவள் மேற்கொண்ட அறம் மேலும் இருவரை உளங் கொண்டது. ஒன்று அவள் பின் பற்றி வந்த மாமன், இன்னொன்று செயலாக்கம் பேணும் தந்தை. இந்நிலையில் ஒப்பற்ற அறக் கொள்கை ஒன்றைத் திருமருகலை அடிப்படையாக வைத்துத் திருஞானசம்பந்தர் விளக்குகின்றார். அறத்தில் தவறுகிறவர்கள் அல்லது அறவழியில் செல்லாமல் மாறுபடச் செல்பவர்கள் செயல் வல்லவர்களாக இருக்கிறார்கள். அறத்தைப் பின்பற்றுபவர்கள் செயற்படுவதே இல்லை. முயற்சியின் காரணமாக, அவர்கள் மேற் கொண்ட உழைப்பின் காரணமாக ஒரு வகையில் பயன் பெறவே செய்கிறார்கள். என் தந்தை செயல் மேற்கொள்ளத் தவறவில்லை. விரைந்து ஆறு பெண்களை மணம் செய்து கொடுத்தார். இவன் ஒருவனுக்கு மணம் செய்து கொடுத்தால் இவன் ஒருவன் உதவி அல்லது இசைவுதான் அவருக்கு அமையும். ஆனால் வருபவர்களுக் கெல்லாம் முறை மாப்பிள்ளையை விட நீங்களே உயர்ந்தவர் என்று சொல்லிச் சொல்லி அவர்கள் அனைவரின் ஒத்துழைப்பு என்பதோடு, தான் ஏற்க இருக்கும் இவரைப் பற்றிய இழிவு, இவ்வாறு இரண்டு வகைகளாலும் வெற்றி யெய்துகிறார். இவரோ தன்பக்கம் இருக்கும் நியாயத்தையும் எடுத்து நீதியாளர் முன் கூறுவதில்லை. பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் கூறுவது போல்

> "உரிமை மேல் ஆண்மை பாராட்டார் சாந்தம்
> பெருமையில் பிணத்தில் பிறந்ததோர் சீதம்"

என்பதாகவே இருக்கிறது. எனவே, அறக்கொள்கையுடையவன் செயல் மேற்கொள்ளாமையால் அவன் அறக் கொள்கையே தவறு என விமரிசனம் செய்யப் பெறுகிறது. அறத்துக்கு மாருன கொள்கையாளர்கள் செயற்படும் ஆற்றலால் அவர்கள் கொள்கையே அறம் என்ற நிலையைப் பெறும் வாய்ப்பு அமைகிறது.

எனவே, அவ்விய நெஞ்சத்தான் ஆக்கம் அவனுடைய செயலாக்கம். அதன் வழியில் அமையும் பல ஆக்கங்கள். செவ்வியான் கேடு என்பது செயற்பாடின்மை. செயற்படாமையால் உயர்ந்த அறக்கோட்பாடுகளும் பயனற்றவை என்பதாகின்றன. இந்நிலையில் செயற்படும் செயலாக்கமுள்ள அவள் தந்தையின் அறத்துக்கு மாறுன செயற்பாட்டு நிலையையும், அவள் கணவனுக ஏற்க இருந்தவன் செயற்படாமலேயே இருப்பதால் அமையும் அறக் கொள்கையாளனின் செயலற்ற நிலையையும் இணைத்து எடுத்துக் காட்டுகிற போக்கில் திருமருகல் நிகழ்ச்சி அமைகிறது. எனவே, அப்பெண் கூறுவதாக ஞானசம்பந்தர் அமைக்கும் கருத்து, அவள் தந்தையைச் செயல்படாது நிறுத்த முயல்வதோ, அறவழியில் செலுத்த முயல்வதோ இயலாது. உயர்ந்த செம்மையாகிய அறத்தை நெஞ்சில் நிறுத்திய பிறகும் செயல்படாது இருக்கின்றனே இவனைச் செயல்படுத்த வேண்டும் என்று குறிப்பிடுகிறள். இயல்பாகவே செயற்படாதிருந்தவனை, பாம்பு கடித்து முழுமையாகச் செயல்படாத நிலையில் அமைத்து விடுவதுதான் உன்னை அடைக்கலம் என்று சொன்னவள் பெறும் பயனு என்பதும், அவன் நீண்ட நாள் காத்திருந்தும் அவளே உடன்பட்டுத் தன்னை அழைக்க வந்திருந்தும், இவைகளுக்கெல்லாம் மேலாகத் தனிமை துணை செய்துங்கூட, இரவு முழுவதும் அவன் தொடாமலேயே இருந்தான் என்பதனால் அவன் செயலற்றவன் என்பதும் எடுத்துக் காட்டினு ளாயிற்று. .

தீமையானது செயல் வல்லவர்களிடத்தில் இருப்பதால் ஆக்கம் பெறுகிறது; நன்மையானது செயலே இல்லாதவர்களிடத்தில் இருப்பதால் மெல்ல மெல்ல 'இல்லை' என்பதை உறுதியாக்கிக் கொண்டு வருகிறது. செய்ய வேண்டிய பணி, தீமையை ஏற்றவர் களைச் செயற்படுத்த வேண்டும். அதுவே அப்பெண் மேற்கொண்ட பணியின் அடிப்படை.

தோல்வியைப் பெற்ருள் என்பது உண்மை. மருகற்பதி இறைவனை உன்னை நோக்கிக் கூறுகிறள். ஏன்? தோல்வியினுல் கலங்காது செயலாற்றும் தன்மையுடையது வாழை. அதனைத் தலமரமாகக் கொண்டவன் நீ. ஆகையினுல், வாழையானது குலை போட்டதும் அழிவை அடையும். கொடையினுல் வாழ்வது வரலாறு; ஆனுல், தாய் வாழையானது குலையீன்றதும் வெட்டப் பெற்றதை அறிந்தும் அதன் சேய் வாழையானது தனது செயலை மாற்றுவதில்லை. மழை பொழியும் மேகம் கொடுப்பதற்காகவே வருகிறது. மழை கொடுத்த பின் மேகமே இல்லை. குலை கொடுத்த பின் வாழையே இல்லை. ஆனுல், மற்றவை தாமே தம்மை அழித்துவிடுகின்றன. ஆனுல், வாழை குலை போட்டபின், அதனை வெட்டி விடுகிறர்கள். வெட்டி விடுவார்கள் என்று தெரிந்தும் குலை போடாமல் இருப்பதில்லை. அது வாழையின் வள்ளல் தன்மை. வாழ்வில் தோல்வி பெற்றதே வாழை. ஆனுல், வள்ளல் தன்மை காரணமாக அழிவு பெற முடியாத 'மரபு' என்பதற்கு எடுத்துக் காட்டாக "வாழையடி வாழையென வந்த

மரபு" என அதனை இலக்கியமாக எடுத்துக் காட்டப் பெறும் வாழ்வும் புகழும் அமைவது. அதே வாழை தான் பாம்பு தங்கும் இடம். வாழையிடம் பாம்பிருந்து வாழையின் பயனை ஏற்றுக் கொள்ள வருபவர்களையும் வந்து ஏற்றுக் கொள்ள இயலாதவாறு தடை செய்வது. அதற்காகவும் வாழை கவலை கொள்வதில்லை. அறச்செயலை ஆற்றும் முறை இன்னது என்பதை உணர்த்தும் ஒரே இலக்கியம், வாழை. அதனை இடமாகக் கொண்டவன் மருகற் பெருமான்.

திருப்பாச்சிலாச் சிராமத்து முயலக நோய் செயல்பாட்டினைத் தடுத்து நிறுத்திச் செயற்பட முடியாமற் செய்வது. அங்கே செயற்பட வேண்டும் என்ற உணர்வு இருக்கிறது. செயல்பட முடியாது அடக்கும் பிடிப்பு இருந்தும் செயல் படத் துடிப்பது அங்கே உண்டு. இங்கே, செயற்படுத்துதற்குரிய அறமும், அறவழிச் சிந்தனையும் உண்டு. செயல்பட இயலாத நிலையில் அமைந்த நிலையே செட்டிப் பெண்ணின் கணவன் நிலை. இவன் செயல்படுவதற்கு வேண்டிய உணர்ச்சியை வலிவடையச் செய்து, அந்நிலையிலேயே செயல் வலிமை உண்டாகச் செய்ய வேண்டும்.

பாம்பு கடித்து இறந்தவன் நிலையைத் திருஞானசம்பந்தர் "மரியார் பிரியா மருகற்பெருமான்" என்று குறிப்பிடுகிறார். இறந்தார். இறவாதார் என்ற சொற்களை அவற்றின் அமைப்புகளை எண்ணிய நிலையில் நீக்கிவிட்டு அரிய ஆட்சியாக 'மரியார்' என்பதனை இணைக்கிறார். செட்டிப்பெண் கணவன் செத்தவன் அல்லன். 'மரியான்' இறவாதவன்; இருப்பவன். செயற்பாட்டை முழுமையாக இழந்தான் ஆதலின் இருந்தும் இறந்தான் ஆகக் கருதப் பெறுகிறான். அவன் 'மரியாதவனே' என்கிறார்.

அறத்தையே எல்லாமாகக் கொண்டு, தன்னை அறத்துக்கு அடிமையாக்கி வாழ்கின்ற அறநெஞ்சினன். அறத்தைப் பற்றிய அவன் தீவினையாகிய பாம்பினால் அழியமாட்டான். செயல் புரியாதிருக்கிறான். ஆனாலும் இது அருளில் அடிமையாகி நின்றவர்கள் நிலையைப் போன்றதும் அன்று. ஏனெனில், அது தாம் என்ற ஒன்றை இறக்கச் செய்து, அருளின் செயலை வெளிப்படுத்துவார்கள். மேலும், இது முயலக நோய் போன்றநிலையும் அன்று. செயல்புரிய நிற்கும் உணர்ச்சியைக் கட்டுப்படுத்திய நிலை "உள்ளம் உடைமை உடைமை" என்ற நிலையில் உள்ளவன் இவன். செயற்பட வேண்டும் என்ற உணர்ச்சியே குன்றிவிட்ட நிலை.

திருமருகல் நிகழ்ச்சியில் இறந்தவனை எழுப்புதல் என்பது மரியாமல் இருப்பவனைச் செயலாக்கம் பெறச் செய்வதே. இவ் வருட் செயல் நிகழும் போக்கினைச் சுவாமிகள் தெளிந்துரைக்கும் திறம் வியப்புக்குரியது.

திருச்செங்காட்டங்குடிப் பெருமானின் பதிநிலையாய் விளங்குவதே திருமருகல். இவ்விரு தலங்களும் அவ்வாறு இணைந்துள்ளன.

திருநீலகண்டம் நேர் நின்று தொழிற்படுவது திருச்செங்காட்டங்குடி, அதுவே பதியாய் நின்று அருளுவது திருமருகலில். எனவே, இரு தலங்களையும் இணைய நிறுத்தி வழிபாடு செய்தல் வேண்டும்.

அறத்தைச் செயற்பாட்டு நிலையில் வலிமையுடையதாக ஆக்கும் பணியானது திருமருகலில். அதனால்தான் அறத்துக்கு வலிமை தரும் நிலையை விளக்கும் போக்கில் அப்பெருமானே "மைந்த" என்றே விளிக்கிறார். இறைவனை 'மைந்த என்னும் விளி அமைத்துப் பாடுதல், மைந்தன் திருச்செங்காட்டங்குடி விரும்பி யிருப்பதன் காரணம் என்ன? என்று வினவும் போக்கில், வலிமை யைக் கொடுக்க வேண்டும் என்பதே ஞானசம்பந்தர் வேண்டு கோள்.

அறம் உயர்ந்தது; அவன் சடையாற் காட்டும் ஒழுக்கமுடைய வன் என்ற உயர் ஞானம் இருக்கிறது. அது செயல்படவில்லை. செயல்படுத்தும் வலிமை மட்டுமே இங்கு வேண்டப்படுவது. திருச் செங்காட்டங்குடியில் ஞானத்தை உயரவொட்டாமல் அறியாமை வந்து மறைத்துவிட்டது; மூயலக நோயில் ஞானம், செயல் புரியத் துடிப்பு ஆகியவை உண்டு. செயல் துடிப்பை அடக்கிய நிலையே பாம்பு கடித்தநிலை.

'சடையார் சீலத்தார்' என்ற தொடரில் அமைந்த ஐவகை ஒழுக்கம் உடையவன் நீ என்று நினையும் உயர் ஞானத்தால் உனக்கு அடிமையாகி நின்றுள். நின்றவள் யார்? நெறியார் குழலி, நெறிப்பட நின்ற கூந்தலுடையவள். இவள் நின்ற நிலை உயர் ஞான நிலை. இவனை — மரியாதவனைச் செயல்பட வைக்கவில்லையானால் செயலையே—கொடையையே மூலமாகக் கொண்ட வாழையை வாழ் விடமாகக் கொண்டதன் பயன் என்ன? உயிர்கள் திருத்தொண்டு நெறிக்கு ஆளாதல் வேண்டும் என்ற திருச்செங்காட்டங்குடித் தத்துவத்தை விரும்பி, இவ்வூரில்—பதியில் தொண்டுள்ளத்தைத் தொண்டுநெறியாக வலிமைதந்து செயற்படுத்த வேண்டிய மைந்தனல்லவா? செய்க என வேண்டுகின்றார்.

ஐவகைக்காமத்தை நீக்கி, அருள்நிலையில் பிரிவுபெறும் ஐவகைக் கொள்கைகளில், உயர் ஞானத்தால் விடாப் பற்றுக் கொண்டு நின்றுள். இவளுடைய ஐந்து உயர் ஞானக் கொள்கைகளையும் ஒவ்வொன்றாக வருத்தி, இறுதியில் இவனை அழிக்காமல் இவள் கொள்கைகளை இவளிடமிருந்து நீக்கிவிட்டாயே! இதுவோ மைந்தன் செயல், என்று கேட்டு, மருகற் பெருமானே, வயஞானம் வல்லார் இவர்கள், உயர்ஞானம் உணர்ந்து உன்னடியை நினைக் கிறார்கள். ஆகையால், நான் இவ்வழியில் இயங்குகிறேன்; பரிந் துரை கூறுகிறேன் என்று வேண்டுகிறார்.

நெறியல்லன செய்தவர் உலகில் நிற்கிறார்கள். உயர் ஞானக் கொள்கைகளைக் கற்பாக்கிச் செயலில் நின்றவளைச் செயற்பட

முடியாதவாறு செய்து விட்டாயே! அவளுக்கு வலிமையைக் கொடுத்து வாழவை, என்பதே இப்பதிகத் திருக்கடைக் காப்பினுள் பெறப் பெறும் செய்தி. செட்டிப் பெண்ணின் செயல் திருவருள் ஞானத்தால் நின்று பார்த்தால்தான் அவள் அருமை புலப்படும் என்றார். மணமகளுக அமைந்தவன் அறம் வாழ் நெஞ்சினன்; மரியாதவன். செயற்படாமையால் செத்தவனுகி விட்டான். எனவே, கொள்கை நெஞ்சின் நெறி நின்ற பெண்ணுக்கு, அவளிடமிருந்த கொள்கையைக் கொண்டுவந்து அமைக்க வேண்டும் என்பதே அவர் வேண்டுவது. நெறியார் குழலி நிறையை—அவளிடமிருந்து பிரித்த நிறையை இணைப்பது உன் வேலை. அதைச் செய் என்று தான் கேட்கிறார். அதை அமைப்பது என்பது அப்பெண்ணின் மாமன் எழுவதைத் தான் அடிப்படையாகக் கொண்டு நிற்கிறது. எனவே, அவள் துன்பத்தை எடுத்து விளக்கும் முறையில் அமைக்கிறார். செட்டி மகனை முன்னிட்டுக் கொண்டு பரிந்துரை அமைவதற்கு ஏற்ப அவனிடம் அமைந்த எந்த ஒரு செயலும் இல்லையாதலின், செட்டி மகள் மூலமாகவே இவ்வேண்டுதல் நிலையை அமைக்க வேண்டிய அமைதி இயல்பாகவே அமைந்துவிட்டது. எனவே, இப்பதிகம் விடந் தீர்க்கப் பாடிய பதிகம் அன்று தான். ஆனுல், வணிகப் பெண் மேற்கொண்ட கொள்கை என்ற நிறையை அவளிடம் நின்று சிறக்குமாறு செய் என்று வேண்டும் பதிகமாக அமைக்க வேண்டுவதே. அறம், மறம் என்ற இரண்டின் தோல்வி, வெற்றி என்ற இரண்டையும் எடுத்துக் காட்டி, அறத்தைச் செயற் படுத்தும் ஆற்றல் இல்லாமையால் அறம் செத்ததாக இருக்கிறது. எனவே, செயற்படுத்தும் ஆற்றலை அற நெஞ்சினர்க்கு வலிமையாக வழங்குதலும், அறத்தைச் செயற்படுத்தும் நிலையில் செயலாக்குகிற வர்கள் அக் கொள்கை உயர்ந்தது என்ற கருத்தை வலிமைப் படுத்தும் வகையில் செயற்படுத்துகிறவர்களுக்குச் செயல் வலிமை யைக் கொடுத்தலும், என்ன தடை நேரினும், வெட்டி அழிக்கவே பெற்ருலும் அறச் செயலை நான் மட்டுமன்று, என் மரபே தொடர்ந்து செய்யும் என்ற தத்துவத்தைக் கொண்ட வாழையைத் தல மரமாகக் கொண்ட நீ அதன் கோட்பாட்டை நினைத்துச் செயற்படுதலும் வேண்டும் என்று கேட்கும் நிலையில் பதிகத்தை அருளியுள்ளார் எனக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு மருகற்பதியும், செங்காட்டங் குடியைக் காமுற்று நிற்கும் மைந்தன் நிலையும், பதியாந் தன்மையும் திருநீலகண்டமாந் தன்மையும் இணைய நிறுத்தி இயற்படச் சிந்தித்த பெருமையும், இன்ன காரணத்தினுல் யான் இச் செயலில் ஈடுபடுகிறேன் என்று ரைத்த விளக்கமும் திருமருகல், திருச் செங்காட்டங் குடிப் பதிகங் களினுல் அறியலாகும்.

பரந்து நின்ற உலகமெங்கணும் புகழ் விளக்கும் உயர் பெருஞ் செயல் இங்கே நடைபெற இருக்கிறது என்பதையும் செயலாற்று தலில் வாழை மரம் திருமருகலுக்குத் தல மரமாக நின்றது போலவே, சிறுத்தொண்டர் அடியவர் தொண்டுக்குத் தம்மை ஆளாக்கி

நின்ருர் என்பதையும், அவர் மேற்கொள்ளும் செயலறம் எத்துணை ஆற்றல் வாய்ந்தது என்பதைக் காட்டும் திருவருள் நிகழ்வு அமைய இருக்கிறது என்பதையும் ஞானசம்பந்தப் பெருமான் திருவருளால் உணர்ந்து, அதை மந்தணமாக வெளிப்படுத்தும் நீலியில் செட்டிப் பெண் துயர் தீர்வும், சிறுத் தொண்டர் செயல் விளக்கமும் அமையு மாறு செயல்பட்டார் என்று தெளிய உணர்தல் வேண்டும். திருத் தொண்டர் வழிபாடு என்னும் மரபு வாழவும் வளரவும் அந்நெறிக்குத் தன்னே வாழையாக அமைத்துத் தொண்டாற்றியவரே சிறுத் தொண்டர். பதிகம் பாடி முடித்த பின் செட்டிமகன் உயிர் பெற் றெழுந்தான். திருத் தொண்டர் குழாம் ஆர்ப்பு எடுப்ப, அங்கையினே உச்சி மேற்குவித்துத் திருவடிகளில் வீழ்ந்த நங்கையை—அவளே விரும்பிய நம்பியை, இவ்வுலகில் விரும்பிய வாழ்க்கையைப் பேணி வர்ழும் வண்ணம் திருமணம் செய்து வைத்து, அதன் மூலம் பெரு வாழ்வு எனப்பெறும் திருத் தொண்டு நெறி வாழ்வுக்கு அவர்களே உரிமையாக்கினர் திருஞானசம்பந்தர்.

முடிப்புரை

திருவடிப் பேறு எய்தும் திருத்தொண்டு நெறி நில்லாதார்க்குக் கொள்கையில் மயக்கம் மேலிடுகின்ற காலத்தில், அவன் அங்கே இல்லே என்பது கருத்தன்று. அவர்களின் ஞானத்தில் நிற்கிருன். ஒரு முறை சிரபுரம் என்ருல் வெளிப்பட்டு வழங்குவான். சிரபுரம் என்பது சடையைக் குறித்தது.

உலக இன்பங்களே விரும்பினும், அதனினும் உயர்ந்த சுவர்க்க இன்பம் வேண்டினும் அவைகளே அளிக்கும் உலகைத் தன் உடம் பாக அமைத்த விஷ்ணுவின் உடம்பைத் தான் தரித்தவன். ஆகை யால் எவ்வுலக இன்பமும் இவன் தொடர்வினலேயே தான் நிகழும். ஆகையால் இவனே சிரபுரம்.

ஐம்புலச் சேட்டைகளால் அறிவும் உணர்ச்சியும் மோதுகின்ற காலத்தில் இடை நின்று நெருப்புத் தூணெனத் தோன்றி, அற வழியை, அறத்தின் பெருமையை உணர்த்தும் சத்தியமாய் நிற்பதால் அவன் உயர் ஞானம். அதனுல் உயர் ஞானமே சிரபுரம்.

'சடையாய்' என்ற சொல்லே ஒரு முறை உயர் ஞானத்துடன் சொன்னுல், சரண் நீயே எனத் தம்மை அடிமையாக்கினுல் அதுவே உயர் ஞானம். அதுவே சிரபுரம்.

மேலே குறிப்பிட்ட நான்கு நீலைகளில் விளக்கம் தருமாறு அமைந்த கொள்கையுடையது சிரபுரம் என எடுத்துக் காட்டும் நீலையில் அமைந்த தொடரே — செருக்கு வாய்ப்புடையான் சிரபுரம் என்னில் — என்ற தலைப்பு.

திருஞானசம்பந்தப் பெருமான் தொடங்கிய மூன்றும் திருக் கோயில் வழிபாட்டுச் செலவில் அமைந்த வரலாற்றுப் பகுதிகளில்

சிரபுரத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவைகள் திருவருள் வளர்ச்சியின் இரண்டாம் படிநிலை விளக்கங்கள். தொண்டு நெறியிலிருந்து திருத் தொண்டு நெறி வளர்தற்குத் தடையாயிருப் பவைகளை நீக்குவது ஒருபுறம் இருப்பினும், தொண்டு நெறி வளர் வதற்கு ஆக்கம் அமைக்கும் பணியே சிறந்தது; அறக் கொள்கை களைச் செயற்பட வைப்பதே அது. எனவே, ஆணவத்தை அழிப்பதோ அதன் செயலைக் குறைப்பதோ செய்ய வேண்டுவதன்று; தொண்டு நெறிக்குரிய கொள்கைகள் இருந்தும் செயற்படுத்தாமையே குறை. செயற்பாட்டினை விளக்குவதே இப்பகுதி வரலாற்று நுட்பம்.

இத்தலைப்பின் தொகைப் பொருள்

திருஞானசம்பந்தரின் வரலாற்றைப் பத்துப் படிநிலைகளில் அமைத்துக் காணும் நிலையில் இப்பகுதியில் அமைந்த வரலாறு ஏழாம் படிநிலையைச் சார்ந்தது. 'சிரபுரம்' என்ற பெயரோடு இணைந்தது.

ஏழாம் படிநிலைப் பகுதியாயினும் முதல் ஐந்து படிநிலைகள் அமைந்த வரலாறு ஒருவகை; பின் ஐந்து படிநிலை வளர்ச்சி வேறு வகை. அவ்வகையில் இது இரண்டாம் வகை வளர்ச்சியில் இரண் டாம் பகுதியை அடிப்படையாகக் கொண்டது.

திருவாவடுதுறையில் பொன் பெறுதல் முதலாகத் திருமருகல் நிகழ்ச்சி வரை அமைந்த வரலாற்றுப் பெருமையுடையது.

சமயப் பொதுமை என்பதற்குச் சைவம் கொள்ளும் விளக்கம் என்ன என்பதை உணர்தல் வேண்டும். மூலப் பொருள் ஒன்றே; அதன் இணைப்பினுள்தான் எல்லாச் சமயக் கடவுளர்களும் பயன் தருகிறார்கள். அவ்வாறே ஒரே சமயத்தில் பல கோயில் அமையும் போது, அங்கங்கே பிறந்தவர்கள் அந்த அந்த ஊர்த் திருக் கோயிலிற் குடியுரிமை பெறுகிறார்கள். திருவருளும் அவ்வக் கோயிலின் மூலமாகத்தான் அவரவர்களுக்கும் பயன் தரும் என்ப தும், திருவருள் மக்கள் நிலையில் தொழிற்படாது என எண்ணுதல் கூடாது. இதே உடம்பில் திருவருள் விளக்கம் அமையும். அப் போது உயிர் தன்னைத் திருவருளாம் இறையடியில் இருக்கச் செய்து விடுகிறது. அதன் மூலமாகத் தொழிற்படும்.

திருவாவடுதுறையிற் பொன் பெறுதல் என்பதைத் திருவருள் எவ்வாறு அமைத்துக் கொடுக்கிறது என்பதையும் திருவாவடு துறைப் பதிகத்தில் ஈவது ஒன்று எமக்கு இல்லையேல் என்பதும் விலை யுடை அருந்தமிழ் என்பதும் எத்தகைய பொருளை உணர்த்த வந்தன என்பதும் விளக்கப் பெற்றன. திருவருளில் நிற்பவர்களே திருத்தொண்டு நெறியில் நிற்பவர்கள். அவர்கள் செயலைத் திருவருளே மேற்கொள்ளுகிறது என்பதும் குறிப்பிட்டுக் கூறப் பெற்றது.

திருவருள் நெறியில் நின்றவர்கள்—நீத்தார் எனப் பெறுபவர் களே. ஆனல் அவர்கள் தாம் இன்பந் துய்ப்பதையே கருத்திற் கொள்ளாமல், இவ்வுலகம் நன்னெறிப்பட வளமைகளே வழங்கி வாழ வைக்கும் பணி மேற்கொண்டவர்களே என்பதும் விளக்கப் பெற்றது.

காலத்தையும் இடத்தையும் கடந்து நின்ற திருவருட் பரம் பொருளைக் காலம் இடம் ஆகியவற்றில் கட்டுப்படச் செய்து, அப் பரம் பொருளுக்குக் காலம், இடம் ஆகியவற்றில் நித்தியத் தன்மை வழங்கிய நிலையே திருக்கோயிலமைத்தல் என்ற கோச்செங்கணுன் செயல் என்பது வைகன்மாடக்கோயில் பதிகச் சிறப்பாம் என்ப தும், பரம்பொருள் வாழ்ந்து காட்டியநிலை துறவுடன் இயைபுடைய தன்று; பெண்ணுடன் இயைபுடையது, ஆயினும் பெண்ணுடன் போகங் கொண்டார் பொலிவது வேறு; பெண்ணுடன் இணைந்து நின்று அழகு விளங்க அமைவது வேறு என்று எடுத்துக் காட்டி அழகுபெற அம்மையுடன் அணைந்து இணைந்த நிலையே பரம்பொருள் வாழ்ந்து காட்டிய நெறி என்பது திருநல்லம் பதிகச் சிறப்பாம் என் பதும் விளக்கப் பெற்றன.

தாவில் சராசரங்களெல்லாம் சிவம்பெருக்கும் பிள்ளையாரின் திருவருளைச் சொற்களிலும் இசைக் கருவிகளிலும் வெளிப்படுத்த இயலும் எனக் காட்டும் முகத்தால் அவைகளை வலிவடையச் செய்வது திருவருளனுபவமே என்பதும், அவ்வருளனுபவத்தைத் திருநீலகண்ட யாழ்ப்பாணருக்கு அனுபவமாக்கினர் என்பதும், இவ் வகையில் தொண்டாற்றும் திருவருட் சாதனமே 'தாளம்' என்ற குறிப்பும் யாழ்மூரி நிகழ்ச்சியால் விளக்கப் பெற்றன.

திருநள்ளாற்றுப் பதிகம் பச்சைப்பதிகமாதற்குக் காரணம் என்ன என்பதும் திருநீலநக்கரின் இல்லத்தே அருளாளராகிய நீல கண்ட யாழ்ப்பாணர் அருளில் துயிலும் நிலை பெறுதலின் குறிப்பு இது என்பதும் விளக்கம் பெற்றன.

இப்பகுதியில் இறுதி நிகழ்ச்சியே திருமருகல் நிகழ்ச்சி. இடை யிடையே வினைக்கொள்கை, ஆணவ அழுக்கு, தீவினையை அழித் தல் கொள்கையன்று, நல்வினையை ஆக்கலே கொள்கை என்பதும், இறைவனின் திருச்சடையானது ஐவகை ஒழுக்கம் உடையது என்பதும்' ஐவகை ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டதே அருளினுல் வளரும் அறநெறி எனக் கொண்டு, கடவுளை நீக்கிய அறநெறிக் கொள்கையாளர்களும் திருவருளின் நின்ற அறநெறிக் கொள்கையாளர்களும் வயஞானம் வல்லார் என்றும் உயர்ஞானம் உணர்ந்தார் என்றும் திருமருகல் பதிகத்தில் பேசப் பெறுகிறர்கள் என்பதும் விளக்கப் பெற்றன.

திருவருளின் நெறிநின்று, அந்நெறியின் முதற் குருவாய் விளங்கி யும் மக்களை நெறிப்படுத்தியும் வரும் திருஞானசம்பந்தர் அருளியல் நிகழ்வுகள் திருத்தொண்டு நெறியில் நிற்கும் அருளாளர்கள் மூலமாக

நடைபெற்றுலும் அறிவியலுக்கு ஏற்பவே செயற்படுகின்றன என் பதே திருஞானசம்பந்தர் திருமருகற் பதிகம் மூலமாக வெளிப் படுத்தும் உண்மை என்பதும் விளக்கப் பெற்றன.

உயர்ந்த குறிக்கோளை உயர்ந்த நெறியால்தான் அடைய முடியும்; எந்த வழியையும் மூலமாகக் கொண்டு உயர் குறிக்கோளை அடையலாம் என்பது பொருந்தாது என்பதைத் திருமருகலில் செட்டிப் பெண் வரலாற்றின் மூலமாக விளக்கிக் காட்டினர் என்பதும் விளக்கப் பெற்றன.

திருவருளின் வழியில் நிற்கும் திருத்தொண்டு நெறியினரின் ஆற்றலை உணர்ந்து கொள்வதற்குத் தமிழ் இலக்கண நெறியில் உயிர்மெய் எழுத்தை அமைத்துக் கொள்ளலாம் என்பதும் யாழ்முரி யில் ஒரே வரியை மூன்று முறை ஒலிப்பதன் பொருளைத் தொல் காப்பியப் பிறப்பியல் நூற்பாவில் வரும் 'உறழ்ச்சி வாரம்' என்ற ஒலியெழுப்பு முறையுடன் இணைத்துக் காணலாம் என்பதும் விளக்கப் பெற்றன.

சென்ற தலைப்பிலும் இத் தலைப்பிலும் வினைக் கொள்கை, ஆணவம் பற்றிய விளக்கம், அறம் மறம் பற்றித் தொண்டாற்ற வேண்டிய முறை ஆகியவைகளும் விளக்கப் பெற்றன.

4. பொன்னடி மாதவர் சேர் புறவத்தவன்

முன்னுரை

சிகாழிப் பதியின் பன்னிரண்டு பெயர்களுள் எட்டாவது பெயராக நின்றது 'புறவம்'. 'புறவம்' என்பதன் பொருளைச் சிந்தித் தலே ஒருவகையில் முதற்பணியாக அமைத்துக் கொள்ளலாம். திரு ஞானசம்பந்தரின் வரலாற்று வளர்ச்சிப் படிநிலையிலும் இப்பகுதியில் வரும் நிகழ்வுகள் எட்டாவது பகுதியாக அமைவனவே. ஆயினும், முதற்பகுதிப் படிநிலைகள் ஐந்து என்பதை நீக்கினால், அவ்வைந்தினை ஒட்டி வளர்ந்து வரும் வளர்ச்சியில் இதனை மூன்றும் படியாகக் கொள்ளலாம். முதற்படிநிலைகளில் அமைந்த வரலாற்றுப் பகுதியில் பிரமபுரம், வேணுபுரம், புகலி என்ற மூன்றும் முறையே நின்றவைகள்.

பிரம்புரம் பிரமாபுரம் எனப் பெருகியநிலை. அதுதான் இயல்பாக இருந்தவன் திருவருள் வேடங்காட்டி நந்துதேவனுக அமைந்தான். அவ்வினைப்பே ஐந்தும் ஆறும் என நின்றது என்பவைகளைத் திருவியலூர், திருநந்துதேவன் குடி, திருவையாறு ஆகியவைகளிற் காண முடிந்தது.

அடுத்துள்ள வேணுபுரம் என்பதே பெருமான் திருவைந்தெழுத் தைத் திருத்தாளத்தில் ஏற்றுப் பெற்ற ஒலியுணர் நிலை. தண்ணீர் முத்தாதல் நெறி; அதுவே புனித நிலை. அதுவே மக்களின் உடலில் சிவமணம் பரவுதலாக அமைந்தது. சிவமணம் எனப்பெறும் திருவருள் ஒளியை ஏற்று வெளிப்படுத்தும் நிலை. அதனை மூலமாகக் கொண்டதே ஆவடுதுறை முதலாக யாழ்மூரி வரையில் அமைந்தஒலி யும் அவ்வாறே செயலாக்கம் புரிய வைத்த திருவருள் நிலையும் எனக் கொள்ளுதல் வேண்டும்.

இனிவரும் மூன்றும் பகுதியானது முதல் ஐந்து படிகளில் உள்ள புகலியோடு தொடர்புடையது எனக் கொள்ளல் வேண்டும்.

புறவம் பற்றிய கருத்து

ஏகபாதத் திருப்பதிகத்தினுள் திருஞானசம்பந்தர் புறவம் என்ற தலைப்பில் நான்கு செய்திகளைத் தெரிவித்தருளுகின்றார்.

காளியும் பூதகணங்களும் கூத்தியற்றுகின்ற காலத்தில் அவர்தம் கூத்துகள் பொலிவு பெறுமாறு, அழகு பெறுமாறு தாமும் திருக்கூத்தி

யற்றுகின்ருன். அத்தகைய காலங்களில் சுடுகாட்டைத் தமக்கு இடமாகக் கொண்டிருக்கின்ருன்.

தூய்மையான வழியில் தம்மை இணைத்துக் கொள்ள எண்ணிய இருடிகள் திரண்டு ஒன்று சேர்ந்து காட்டில் தவம் செய்கின்ற காலத்தில் தானும் தனியே இருந்து தவம் செய்யும் தவத்தினன்.

அழகிற் சிறந்தவர்களாய் ஆபரணங்களேயணிந்த முனிபத்தினிகள் பிச்சையிட வந்தபோது அவர்களுக்குத் தன்னுடைய நிர்வாணத்தை அளிக்கிருன்.

பொன்னுற் செய்த பாடகம் முதலியவைகளே அணிந்த கன்னியர்கள் விளையாடுகின்ற புறவம் என்னும் பதியில் வாழ்கின்ற சிவனுக அமைந்துள்ளான்.

மேலே கூறப் பெற்ற செய்திகளுக்கு அப்பால், திருஞான சம்பந்தர் திருப்புறவம் என்ற தலத்துப் பதிகங்கள் மூன்று அருளிச் செய்துள்ளார். பொதுவாகப் புறவம் என்ற பெயரோடு இணைத்துச் சொல்லப் பெறும் சிபி என்ற மன்னனின் வரலாற்றைத் திருஞான சம்பந்தர் எங்கேயும் குறிப்பிடவில்லே. திருப்புறவம் என்ற பெயரும் அப்பெயரால் அமையும் வரலாற்று, தத்துவ நுட்பங்களும் இப் பகுதியில் திருஞானசம்பந்தரின் வரலாற்று நிகழ்வுடன் இணைத்துக் காட்டப் பெறும்.

திருப்புகலூர்

திருச்செங்காட்டங்குடியிலிருந்து திருத்தல வழிபாட்டைத் தொடங்குகிருர் திருஞானசம்பந்தர். முருகநாயனர் நாள்தோறும் மலர்த் தொண்டாற்றிய சிறப்புடையது திருப்புகலூர். பின்னர் அப்பரடிகளுக்கு முத்தித் தலமாக அமைந்த பெருமையுடையதும் இத்தலமே.

திருப்புகலூர் இம்மண்ணுலகத்தே உள்ள உயிர்களெல்லாம் புகல் என்று கூறி அடையத் தக்கதாகலின் புகலூர் எனப் பெற்றது. அதுமட்டுமேயன்றி, இம்மண்ணுலகத்தில் வாழ் அடியவர்கள் எல்லாம் தம்முடைய ஆண்டவனுக்குத் தம்மைக் குடியுரிமையில் இணைவதும் குடிமைக்குரிய தொண்டுகளே வரை யறுப்பதும் இங்கேதான்.

ஊர் என நிற்பதும், அது உயர்ந்து பதி என அமைவதும் எவ்வாறு என்பதைத் திருஞானசம்பந்தர் இத்திருப்புகலூர்ப் பதிகத்தில் அருளுகின்ருர். இறைவன் புகழேத்துதல் வணங்குதல் போன்றவைகளால் பொய்யிலாத மனம் பெறுகின்ருர்கள் அடியவர்கள். அவர்களிடத்தில் மெய் நின்ற பெருமானுக இறைவன் அமைகிருன். பொய்யிலா மனம் என்ற செம்மையினுல், அவர்கள் தளராது நிற்கின்ற நிலையினுல் ஊரும் வளம் பெறுகிறது; ஊரினுல் அடியவர்களின் செம்மையும்

வளர்ந்துயர்கிறது. இவ்விரண்டாலும் தொண்டு நெறியை வளர்க்கும் பதிநிலை அமைகிறது. இச் செய்திகளை

"மண்ணிலாவும் அடியார் குடிமைத் தொழில் மல்கும் புகலூர்"

என்றும்,

"ஊரின் மல்கி வளர் செம்மையினுல் உயர்வெய்தும் புகலூர்"

என்றும் அமைந்த திருஞானசம்பந்தரின் அருளுரைகளால் அறியலாம்.

திருஞானசம்பந்தர் திருப்புகலூரில் வழிபாடு செய்து தங்கியிருக்கும்போது அப்பரடிகள் திருவாரூர்த் தல வழிபாடு செய்து முடித்துப் புகலூர் வழிபாட்டுக்கு எழுந்தருளுகிறார்கள். திருஞானசம்பந்தர் அடியவர்களோடு சென்று வரவேற்க, அப்பமூர்த்திகளும் திருப்புகலூரில் வழிபாடு செய்து தங்குகிறார்கள், அப்போது ஞானசம்பந்தர் திருவாரூர் வழிபாட்டுச் சிறப்பினைக் கேட்க, ஆதிரை நாளால் ஆரூர் எய்திய சிறப்பினை விரித்துரைக்க, ஞானசம்பந்தரும் திருவாரூருக்கு எழுந்தருள, அவர் மீண்டும் திருப்புகலூருக்கு வரும் வரையில் அப்பர் பெருமான் திருப்புகலூரிலேயே வழிபாடு செய்து கொண்டு தங்கியிருக்கிறார்கள்.

திருஞானசம்பந்தர் ஆரூர் வழிபாட்டை முடித்துக் கொண்டு திருப்புகலூருக்கு எழுந்தருளவே, பின்னர் இருவரும் இணைந்து சென்று பல திருப்பதிகளை வணங்க எண்ணிப் புறப்படுகின்றார்கள். சிறுத்தொண்டர் திருநீலநக்கர் போன்றோர் விடை பெற்றுத் தத்தம் பதிக்குச் செல்கின்றனர். அவ்வாறு சென்று கொண்டிருக்கும்போது திருநாவுக்கரசரைப் பிரிந்து வர ஒருப்படாத சம்பந்தர் பல்லக்கில் ஏறி வராமல் உடன் நடந்தே சென்று கொண்டிருக்கிறார். அப்போது அப்பர் பெருமான்,

"நாயனூர் உமக்களித்தருள் செய்த இந் நலங்கிளர் ஒளிமுத்தின்
தூய யானத்தின் மிசை எழுந்தருளுவீர்"

என்று கேட்டுக் கொள்கிறார். அப்போது, திருஞானசம்பந்தர், அதுவே அடிகள் கருத்தாலுல், அடியவர் குழாங்களோடும் நீர் செல்லும் இடங்களுக்கு உம்மைப் பின்தொடர்ந்து யானும் வந்து கொண்டிருப்பேன் என்றருளிச் செய்ய, அப்பரடிகளும் உடன்பட்டு முன் செல்லத் தொடங்கினர். இவ்வாறு திருக்கோயில் வழிபாடு தொடர்கிறது.

திருவீழிமிழலை

திரு அம்பர்மாகாளம், திருக்கடம்பூர் முதலிய பதிகளை வணங்கிக் கொண்டு திருவீழிமிழலை சேர்ந்தார்கள். வீழிச்செடி என்னும் ஒரு வகைச் செடி நிறைந்திருந்தமையின் வீழி எனப் பெற்றது. மிழலை என்பது மிழற்றுதல் என்பதை அடிப்படையாகக் கொண்டது. கிளி

முதலியவைகள் மக்கள் பேசுவதைக் கேட்டு அப்படியே ஒலித் தலுக்கு மிழற்றுதல் என்பது பெயர். மறையவர் வேதவொலி கேட்டு அவ்வூர்க் கிளிகளும் வேத மிழற்றும் ஆதலின் மிழலை எனப்பெற்றது. இனி, திருமால் நாளும் ஆயிரம் தாமரை மலர்களால் இறைவனை அர்ச்சித்துப் பூசிக்க, ஒருநாள் ஒன்று குறையவே, தன் கண்ணைத் தோண்டி மலராக அமைத்து அருச்சித்தார். அதனால், இறைவன் சக்கரம் அருளிய வரலாறும் உண்டு. விழியை மலராக அமைத்து வழிபட்டமையினால் விழி, வீழி என்று நீண்டு, வீழி மிழலை எனப் பெற்றது எனக் கூறுதலும் ஒருவகை.

திருவீழிமிழலைக்கு வந்ததும் முதலில் நடைபெறுவது திருக் கோயில் வழிபாடு. இங்கே ஞானசம்பந்தப் பெருமான் அமைத்த முதல் பதிகமாகச் சேக்கிழார் எடுத்துக் காட்டும் பதிகம்

"சடையார் புனல்உடையான் ஒருசரி கோவணம் உடையான்
படையார் மழுவுடையான் பலபூதப் படை யுடையான்
மடமான் விழியுமைமாதிடம் உடையான் எனை யுடையான்
விடையார் கொடி யுடையானிடம் வீழிம் மிழலையே"

என்ற தேவாரத்தை முதலாகக் கொண்டது. இப்பதிகத்து முதல் தேவாரத்தில் 'மழுவுடையான்' என்பது பின்வரும் நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டது. இனி, வீழிமிழலைப் பெருமான் திருமாலின் வழிபாட்டிற்கு உவந்து, விண்ணினின்றிழிந்த விமானத் தில் வீற்றிருந்தருளும் மணவாளநம்பி என்று போற்றப் பெறுபவர். திருவீழிமிழலையைப் பற்றித் திருஞானசம்பந்தர் பாடியருளிய பதிகங்கள் பதினொரு. மேலும், ஒரு பதிகம் உண்டு. திருப்புகலி யும் திருவீழிமிழலையும் இணைந்த நிலையிற் பாடிய பதிகம் ஒன்று.

திருவீழிமிழலைக்கு வந்தபின் அனைவருமாக இணைந்து செய்த வழிபாட்டுக்குப் பின், திருக்கோயிலின் மதிற்புறத்தமைந்த திருமடத் தில் திருநாவுக்கரசரும் அவருடன் வந்த அடியார்களும் தங்கினர். திருக்கோபுரத்தின் வடபாலமைந்த திருமடத்தில் திருஞானசம்பந்தர் தம் அடியவர்களுடன் தங்கினர். திருக்கோபுரத்தின் வடபாலமைந்த வேறொரு திருமடத்தில் திருநீலகண்ட யாழ்ப்பாணரும் மதங்க சூளாமணியாரும் தங்கினர்.

அடுத்து, திருவீழிமிழலையில் திருஞானசம்பந்தர் அருளிய பதினொரு பதிகங்களில், ஆறுபதிகங்களில் காழியோடும், இரண்டு பதிகங்களில் சிரபுரத்தோடும், ஒரு பதிகத்தில் வெங்குருவோடும், இரண்டு பதிகங்களில் புகலியோடும், இரண்டு பதிகங்களில் சண்பை யோடும், ஒரு பதிகம் தோணிபுரத்தோடும் தம்மை இணைத்துத் திருஞானசம்பந்தர் பாடியுள்ளமை தெளியலாம். இறுதி நின்ற திருப்பதிகமாக அமைவது "புள்ளித் தோலாடை" எனத் தொடங்கும் திருப்பதிகம். இத்திருப்பதிகத்தின் திருக்கடைக்காப்பு

" வேந்தர் வந்திறைஞ்ச வேதியர் வீழி
மிழலையுள் விண்ணிழி விமானத்து
ஏய்ந்ததன் தேவியோடுறைகின்ற
ஈசனே எம்பெருமானைத்

தோய்ந்தநீர்த் தோணிபுரத்துறை மறையோன்
தூமொழி ஞானசம்பந்தன்
வாய்ந்த பாமாலை வாய்நவில்வாரை
வானவர் வழிபடுவாரே''

என்பது.

இனி, திருவீழி மிழலையுள் இரண்டு அருளியல் நிகழ்வுகள் நடை பெறுகின்றன. ஒன்று: காழிப்பெருமான் தம்வடிவை மிழலைக் கோயி லில் காட்டியது. இரண்டு: வாசி தீரக் காசு பெற்ற அருளிப்பாடு. இவ்விரண்டனுள் காழிப் பெருமான் தம்முருவைக் காட்டியருளிய நிகழ்ச்சியை முன்னுரிமைத்தாக அமைத்துக் காட்டுகின்றார் சேக் கிழார். அவரமைத்த வழிப்படியே அருள்நிகழ்வுகளை அமைத்துக் கொள்ளலாம்.

மிழலையிற் கண்ட காழிப்பதியான் காட்சி

திருஞானசம்பந்தர் திருவீழிமிழலையில் தங்கியிருக்கும் போது அவரைக் காண விரும்பிய சீகாழி மக்கள் திருவீழி மிழலைக்கு வந்து ஞானசம்பந்தரைக் கண்டு வழிபட்டார்கள். பின்னர், தம்மோடு சீகாழிக்கு எழுந்தருள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள். அப்போது, இன்று கழித்து, நாளை வீழிமிழலையிறைவர் அருள் பெற்றுப் புறப்படுவோம் என்று கூறியருளினார் சம்பந்தர். இங்கே நாம் நினைவிற் கொள்ள வேண்டிய தொன்று.

திருஞானசம்பந்தர் திருத்தலவழிபாட்டை மேற்கொள்வதற் குரிய காரணம் இந்நூலின் முதற்பகுதியில் 140-150 பக்கங்களில் விரிவாக எடுத்துக் காட்டப் பெற்றுள்ளது. காழியில் இருக்கும் பெருமானையே பிறபதிகளிலும் சென்று கண்டு வணங்குதல் என்பதே குறிக்கோள். அருளாய் நின்ற முதற்பொருள் ஒன்றே. அனைத்துயிர்களும் அம்முதற்பொருளின் அடிமைகளே. எனினும், அருள்வெளிப்பாட்டு நிலையானது அவ்வப்பதிக்கண் அமைந்த அடி யவர்களின் தொண்டு நிலை, துய்ப்புநிலை போன்ற அடிப்படைகளை நோக்க வேறுபடும். காழிப் பெருமானையே பிறபதிகளில் வழிபட் டாலும், அங்கங்கே உள்ள அடியவர்கள் எவ்வாறு அவனை வழி பட்டுத் துய்த்தார்கள் என்பதும் அப் பெருமான் அவர்களுக்கு எவ் வாறு துய்ப்புப் பொருளாக அமைந்தான் என்பதும் தலந்தோறும் வேறுபடுவன. ஆகையால், அங்கங்கே உள்ள அடியவர்களோடு இணைந்து சென்று அவ்வத் தலத்துப் பெருமானை வழிபட வேண்டும். திருவருளானது பொதுமையானதேயாயினும், அதனை அங்கங்கே உள்ள அடியவர்கள் எவ்வாறு செயற்படுத்தினார்கள், அருளின்பத் துய்ப்பை எவ்வாறு அனுபவித்தார்கள் என்பதை அங்கங்கே சென்று தான் காணவேண்டும் என்ற விளக்கத்துடன் திருக்கோயில் வழி பாட்டு யாத்திரை தொடங்கப் பெறுகிறது. ஆயினும், ஒன்றை மறந்து விடலாகாது. அவரவர் பிறந்தபதியில்தான் அவரவர்க்குக் குடியுரிமை உண்டு. அவரவரின் அருள்நலம் அவ்வவ்வூர்ப் பெருமானை அடிப் படையாகக் கொண்டுதான் வழங்கப் பெறும் என்பதைப் பல்லாற்று

லும் வலியுறுத்தி, அதனைக் கொள்கையாக அமைத்தவர் ஞானசம் பந்தர். இவ்வகையில், சேக்கிழார் பெருமான் நுட்பமாக ஒரு செய் தியை விடாது அமைத்தருளி வருகின்றார்கள்.

சீகாழிக்குப் பன்னிரண்டு பெயர்கள் உண்டு. ஆயினும், ஞான சம்பந்தர் முதன்முதல் பார்த்த உருவம் சீகாழிக் கோயிலில் விமானத்தில் தோணியில் இருந்த அம்மையப்பர் திருவுருவம். எனவே, அக்கோலமே என்றும் அவருள்ளத்தில் நின்று அருள்செய் யுங்கோலம். அம்மையப்பராகத் தோணியில் அமர்ந்த கோலமே.

திருமுலைப்பாலருந்திய அன்றைக்கு மறுநாள் திருக்கோலக்காவுக் குச் செல்ல முற்படும் போது, திருத்தோணி நம்பர் திருக்கோயிலைச் சென்று வணங்கிச் செல்கின்றார் என்று அமைத்துக் காட்டினார் சேக் கிழார் பெருந்தகை. அவ்வாறே, முதல் தலயாத்திரை தொடங்கும் போது – திருநனிபள்ளித் தலயாத்திரை தொடங்கும்போது;

"……திங்கட்
கொழுந்தணியுஞ் சடையாரை எங்கள் பதியினிற்
கும்பிட்டருள அங்கே
எழுந்தருள வேண்டும் "என இசைந்தருளித்
தோணி வீற் றிருந்தார் பாதம்
தொழுந்தகைமை யாலிறைஞ்சி அருள் பெற்றுப்
பிறபதியும் தொழ முன் செல்வார்"

என்று குறிப்பிட்டுக் கூறியருளினார். அவ்வாறே இரண்டாம் சுற்று யாத்திரைக்குத் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளப் புகும் திருஞானசம் பந்தர்,

"வெள்ளிமால் வரைஎன்னத் திருத்தோணி வீற்றிருந்த
புள்ளிமான் உரியாரைத் தொழுதருளாற் புறப்பட்டார்"

என்று அமைத்துக் காட்டுவது சேக்கிழார் வாக்கு.

அவ்வாறே, மூன்றாஞ் சுற்றுத் தலயாத்திரை தொடங்கும் போதும் முதலில் தந்தையாரிடமும் மற்றவர்களிடமும் தம் கருத்தை வெளி யிடுவாரானார்.

"……அருந்தமிழ் நாடு எத்தினுள்ளும்
திங்கள் சடைஅண்ணலார்தம் திருப்பதியாலையுங் கும்பிட்டு
எங்கும் தமிழ்மாலை பாடி ஏத்தி இங்கு எய்துவன்"

என்று கூறவே, தந்தையாரும் பிறரும் தத்தம் கருத்தினைக் கூறியபின்

"ஆண்டகை யாரும் இசைந்து அங்கு அம்பொன் திருத்தோணி மேவும்
நீண்ட சடையார் அடிக்கீழ்ப் பணிவுற்று நீடருள் பெற்றே"

புறப்படுவாராயினர். யார் ஒருவருக்கு எந்த ஒருவகை அருள்நிலைத் தோற்றம் முற்பட நின்று அருள் வெளிப்படக் காரணமாக

இருந்ததோ அதுவே, அவர்தம் வாழ்நாள் முடிவுவரை அருள் வெளிப் படுதற்கு உரிய மூர்த்தமாக அமையும் என்ற கருத்தை உடன் கொண்டே, ஞானசம்பந்தர் முதன் முதலில் நோக்கி அழுத நிலையில் காட்சிப்பட நின்று அருளிய மூர்த்தம் திருத்தோணியில் வீற்றிருந்த அம்மையப்பர் திருமூர்த்தமே. அதுவே, ஞானசம்பந்தர் பரலாற்றுக்கு எடுத்துக் கொள்ளத்தகும் மூர்த்தம் என்பது சேக்கிழார் கருத்தாக அமைகிறது.

மிழலையிற் கண்ட கனவு

காழியிலிருந்து வந்த அந்தணர்கள் தம்முடன் வருமாறு கேட்டுக் கொள்ள, நாளை மிழலையார் அருள் பெற்றுப் புறப்படலாம் என்று கூறி, ஏனைக் கடன்கள் ஆற்றி, இரவில் நித்திரை கொள்ளும் போது, அவர்தம் கனவில்,

"தோணியில் நாம் அங்கிருந்த வண்ணம்
தூமறை வீழி மிழலை தன்னுள்
சேணுயர் விண்ணின் றிழிந்த இந்தச்
சீர்கொள் விமானத்துக் காட்டுகின்றோம்
பேணும் படியால் அறிதி"

என்று அருள் செய்யப் பெற்றது. துயிலுணர்ந்து எழுந்த ஞான சம்பந்தர் மறுநாட் காலை விரைந்து திருக்கோயில் புக்கு, உச்சிமேல் அங்கை கூப்பி

"வெறியுற்ற கொன்றையினர் மகிழ்ந்த
விண்ணிழி கோயிற் சென்று புக்கு
மறியுற்ற கையரைத் தோணிமேல் முன்
வணங்கும்படி அங்குக் கண்டு வாழ்ந்து
குறியிற் பெருகுந் திருப்பதிகம்
குலவிய கொள்கையிற் பாடுகின்றார்."

இவ்வாறு தோணிபுரத்துத் தோற்றம் அமைத்தருளியது ஏன்? என்ற வினவுக்கு விடையாக, காழிநகர் எனப்பெறும் பிரமபுர நகர்ப் பெருமான் தலங்கள் தோறும் கொண்ட கோலமும் வகுத்து நின்ற அருள் வாழ்வும் கண்டு வணங்க வேண்டும் என்ற தம் குறிக்கோளை, அக்குறிக்கோளில் யான் கொண்டிருக்கும் தணியாத காதலைப் பெருமான் அறிந்தவராதலின், யான் அக்குறிக்கோளைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் என்னும் கருத்தின் வெளிப்பாடாகவே, இவ்வகை இங்கு எமக்கு இவ்வருளிப்பாட்டினை நிகழ்த்தியது என்று தாம் கண்ட காட்சியின் பயனை அனைவருக்கும் கூறி, "நீங்கள் சிரபுர மாநகர் செல்லுங்கள்" என்று கூறி, காழி மறையவரை ஞானசம் பந்தர் வழியனுப்பி வைத்தார்.

வீழியிற் கண்ட காழிக் காட்சிப் பதிகச் செம்பொருள்

திருவீழிமிழலையில் ஞானசம்பந்தப் பெருமான் தாம் கண்ட காழிக் காட்சியை விளக்கும் முறையில் அமைத்த திருப்பதிகம்

"மைம்மரு பூங்குழல் கற்றை துற்ற
வாணுதல் மான்விழி மங்கையோடும்
பொய்ம்மொழியா மறையோர்க ளேத்தப்
புகலி நிலாவிய புண்ணியனே
எம் இறையே இமையாத முக்கண் ஈச
என் நேச இது என் கொல் சொல்லாய்
மெய்ம் மொழி நான் மறை யோர் மிழலை
விண்ணிழி கோயில் விரும்பியதே"

என்பதை முதலாகத் கொண்டது. இப்பதிகம் முழுவதிலும் "புகலி நிலாவிய புண்ணியனே" என்பதை இரண்டாம் அடியின் இறுதியில் விளியாக நிறுத்தி, 'என் கொல் சொல்லாய்' என்பதை விளுவாக மூன்றும் அடியின் இறுதியாக்கி, 'விண்ணிழி கோயில் விரும்பியதே' என்பதை நான்காம் அடியின் இறுதியாக்கி அமைத்துள்ளமை உணர்ந்து தெளிய வேண்டிய ஒன்று.

இனி, இப்பதிகத்து ஒன்பதாந் தேவாரம் அமைக்கும் குறிப்பு ஒன்றையும் காணுதல் வேண்டும். இரண்டாவது அடியின் இறுதி யாக நின்றது புகலிநிலாவிய புண்ணியனே என்பது. மூன்றுவது அடியானது தொடங்கி முடியும் நிலை

"எறி மழுவோடு இளமான் கையின்றி இருந்தபிரான்
இது என் கொல் சொல்லாய்"

என அமைகிறது. வெட்டுதற்குப் பயன்படும் மழுவையும் இளமை யாகிய மானினையும் தாங்கியிராத கையோடு வீற்றிருந்த பெருமான் என்பது அம்மூன்றும் அடியின் முதற்பகுதியின் பொருள். திருத் தோணியப்பர் திருக்கோலம் மழுப்படையும் மானும் கைகளில் இல்லாத அமைப்புடையது. ஆதலின், தோணிபுரத் திருக்கோலம் மழுவையும் மானையும் கொண்டுள்ள வீழி மிழலைத் தோற்றத்துக்கு மாறுன தோற்றமே.

திருஞானசம்பந்தர் தாம் அமைத்துக் கொள்ளும் விளக்கங் களையும் தெய்வச் சேக்கிழார்தம் தொண்டின் பெருமையையும் உளங்கொள அறிதற்கு உற்ற இடம் இது ஒன்று. திருஞானசம் பந்தர் வரலாற்றில் அமையும் நிகழ்வுகளை எவ்வாறு காணவேண்டும் என்ற செந்நெறியைத் திருவருள் துணை நின்று வகுத்தளித்த பெருமை தெய்வச் சேக்கிழாருக்கு உண்டு. திருஞானசம்பந்தரோடு தொடர் புடைய நிகழ்வுகளை ஆராய முற்படும் போதும், சொல்ல முற்படும் போதும் தெய்வச் சேக்கிழார் மேற்கொள்ளும் முறையானது இக் காலத்தே வரலாறு, தத்துவம், சமயம், இலக்கியம், அருள் வெளிப் பாடு, அரசியல், அறம் என்பவை பற்றி நூல்எழுதுவோருக்கு அமைந்த கலங்கரை விளக்கம் என அமையும் பெருமை உடையது. வீழியிற்காழி என்பது ஒரு கட்டளைக்கல். அதை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு திறத்தவர் மேற்கொள்ளும் பல்வேறு செயல் களால் அவரவர் தம் தனிமைப் பண்பினை நாம் உணரலாம்.

வரலாறு அமைப்பதில் வல்ல சேக்கிழார்

"மைம்மரு பூங்குழல்" என்று தொடங்கும் பதிகம் ஒன்றே இந் நிகழ்ச்சியை வரையறை செய்வது. இந்நிகழ்ச்சிக்குப் பிறகு திருவீழி மிழலைக் கோயில் கருவறையின் பின்னே இக்கோலம் ஓவியப் படுத்தப் பெற்றிருக்கலாம். அது திருஞானசம்பந்தரோடு இணைந்த வரலாற்றுப் பெருமையுடையது மிழலை என்றும், திருக்கோயில் என்றுமே வரலாற்றுக்கு அப்பாற்பட்டதன்று, அங்கேயும் பல வகை வரலாறுகள் நிகழ்ந்துள்ளன என்பதை விளக்கி, மக்களுக்கு வழிபாட்டின் பெருமையை உணரச் செய்ய வேண்டும் என்றும் அமைக்கப் பெற்ற செயல் முறை. நிகழ்வுகளுக்கு வரலாற்று முறையிலான உயிர்ப்பினை வழங்குகின்ற முறை. ஒருவன் வாழ்வில் நடைபெறும் ஒரு நிகழ்ச்சி என்பது பலரை அல்லது பல கூறுகளை இணைத்த ஒன்றாகவே அமையும். அந்நிகழ்ச்சியில் வரலாற்றுக் கூறு இருந்தால், அந்த வரலாற்றுக் கூறு என்ற சிறுபகுதிக்கு உரிய தலைமகன் யார் என்று கண்டு, அவர்தம் வரலாறு கூறுமிடத்தில் அந் நிகழ்வை அமைத்தல் என்பதே வரலாறு அமைக்கும் முறை. நிகழ்ச்சிக்குக் காரணமாக இருந்தவர் ஒருவர், நிகழ்ச்சியை நடத் தியவர் ஒருவர், இவ்விருவரை அடிப்படையாகக் கொண்டு அருளி யல் நிகழ்வு அமைகிறது என்ற நிலையில் வரலாற்று முறையில் முதன்மை யாருக்கு என்பதை அறிந்து, அவர் வரலாறு அமைக்கும் போது அவரால் நடை பெற்ற வரலாறு என்பதாகக் கூறும் பகுதியில் அமைத்துக் கொள்ளுதல் சேக்கிழார் அமைத்த முறை. இவ்வகையில் திருஞானசம்பந்தர் புராணத்தில் அவர் சொல்வன எல்லாம் திரு ஞானசம்பந்தர் வரலாற்றுத் தலைமகனாக நின்று நடத்திய நிகழ்வுகளே. அவற்றில் தொடர்பு கொண்ட ஏனைய கூறுகள், யார் யாரை வர லாற்று நாயகர்களாகக் கொண்டவை எனப்பிரித்து அவ்வவர் வரலாற்றில் அமைப்பார். அவ்வாறு இணைந்தவர்களைப் பற்றி வரலாறு கூறும் வாய்ப்புத் தமக்கு இல்லையானால், அவர்தம் வரலாற் றினைக் கவிக் கூற்றாக அமைத்து, இந்த நிகழ்வுக்கு மூலமானவரை யான் வணங்குகிறேன் என்று படிப்பவருக்கு அவரையும் வரலாற்று நாயகராக இடம் பெறச் செய்து விடுவார். ஒரு சான்று. திருநாவ லூரர் திருமணம் தடைபெற்றது. நம்பியாரூரர் ஆட்கொள்ளப் பெற்றார். அந்நிகழ்வில் நம்பியாரூரர் மட்டுமா ஈடுபட்டவர்! சடங்கவி சிவாசாரியாருடைய மகளும் இணைந்தவள். அவள் வெறும் மணப் பெண்ணாக மட்டும் அந்நிகழ்வில் நிற்கவில்லை. மணப் பெண்ணின் முன்னிலையானது நம்பியாரூரரைச் சினங்கொள்ள வைப் பதற்கு ஒரு முக்கியக் காரணம். எனவே, வரலாற்றுப் பெருமை அவளுக்கும் உண்டு. ஆனால், அவள் வரலாற்றைத் தனியே பாடும் நிலை பெரியபுராணத்தில் இல்லை. எனவே, கவிக் கூற்றாக, அவளை வரலாற்று நாயகியாக நிறுத்திவிடுகிறார்.

".....புத்தூர்வரு சிவவேதியன் மகளும்
உயர் நாவலர் தனிநாதனை ஒழியாது உணர்வழியில்
பெயராது உயர் சிவலோகமும் எளிதாம் வகை பெற்றுள்."

ஆரூரர் பக்கத்தே அமர்ந்து அவரை உள்ளத்தளவில் செயற்படுத்திய வரலாற்று முறையால், அவள் கிரியைத் தொண்டில் நின்றவளாய் சாமீபப் பேறு பெற்றாள். அவர் மணமகளாக நின்ற நிலையல்லவா அவரை இவ்வாறு சினங்கொள்ளச் செய்தது; அதனால் அவர் நின்ற நிலை - கோலமானது வாழ்நாள் முழுவதும் நம்பியாரூரர் கொள்ளும் கோலமாகத் திகழும் வரலாறு பெற்றது. அதனால், சிலஇடர்ப் பாடுகள் நம்பியாரூரரின் பிற்கால வாழ்வில் நடைபெறுகின்றன.

எனவே, திருஞானசம்பந்தரை உள்ளிட்டு நடைபெற்ற நிகழ்வுகளில் அவர் முன்னின்று நடத்திய வரலாறுகள் அவர் புராணத்தில் நேர்நிலையில் இடம் பெறுவன. அவைகளை ஒட்டிய வேறுசில கூறுகள் அவ்வந்நிகழ்வில் வரலாற்றுப் பெருமைபட நின்றவர்களின் வரலாறு கூறும் இடங்களில் அவர் வரலாற்று நாயகராக நிற்க ஞானசம்பந்தர் நிகழ்வு அங்கே நிகழ்வுறும். அருளியல் நிகழ்வுகள் வரலாற்றுப் பெருமையுடையன என்றால் அவை யாருடைய நிகழ்வில் வரலாற்றுப் பெருமை பெறும் இயல்புடைன என்று கண்டு, அவர் வரலாற்றில் அருளியல் நிகழ்வுகள் வரலாறாக அமைத்துக் கூறப் பெறும். யாருடைய வரலாற்றிலும் இணைக்க முடியாத நிகழ்வுகள் ஆயினும் அவை வரலாறுகள் எனின், சேக்கிழாரே தன்னை ஈடுபடுத்தி, அதனைத்தான் வணங்குகிறேன் என்று கூறி அவ்வருளியல் நிகழ்வுக்கு, வணங்கப் பெறுதற்குரிய வரலாற்றுப் பெருமையுடையது எனக் கூறி வரலாறாக நிறுத்தி விடுவார். இதைப் பன்முகமாக விரிக்கலாம். அது சேக்கிழார் புராணமாக விரியும்; மற்றொன்று விரித்தலாம் குற்றம் வரும்.

திருவீழிமிழலையில் காழிக் காட்சி அமைந்தது என்பதற்கு ஒரே ஒரு பதிகம்தான் சான்றாக நிற்கிறது. இவ்வாறே மதுரையிலும் ஒரு நிகழ்வு. அங்கேயும் ஒரு பதிகம். அதுவும் காழியை நினைந்து பாடிய பதிகம். அதுவும் புகலிப்பதிகமே. அது மதுரையில் பாடப் பெற்றது என்ற அளவில் மட்டுமே வரலாற்றுத் தன்மையுடையதாக அமைகிறது. ஆனால், திருவீழிமிழலையில் பாடப் பெற்ற இப்பதிகம் வரலாற்றில் ஒரு திருப்புமுனையை உண்டாக்கிய பதிகம். எனவே, இப்பதிகத்தின் அடிப்படைக்கு ஒரு வரலாற்று உருவை அமைக்க வேண்டிய சூழ்நிலை சேக்கிழாருக்கு உண்டாகிறது. இனி, இக்காட்சிக்குத் தலைமகன் யார்? திருவீழிமிழலைப் பெருமானே காழிக் கோலத்தைக் காட்டியிருக்கலாம். இவ்வாறு அமைவது திருமருகல் நிகழ்ச்சி. அங்கே, மருகல் மைந்தனே கணபதியீச்சுரங் காமுறவு என்ன? என்று சிறுத்தொண்டர் அழைக்க வர, மருகற் பெருமான் கணபதியீச்சுரக் கோலங்காட்ட, அங்கேயும் பதிகம் அமைகிறது. ஆனால், மருகற் பெருமானே தலைவனாக நிற்க அவ்வரலாற்றை அமைக்கிறார். பதிகம் முடிந்தபின் திருச்செங்காட்டங்குடிக்குப் போகிறார். அதே மாதிரி நிகழ்வு இங்கேயும் உண்டு. ஆனால், காழிக்குப் போகவில்லை. தம் யாத்திரைப் பணி தொடர்கிறது. இடையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியானது ஒருவகையான திருப்பு முனையைக் கொண்டது. வரலாற்றுத் திருப்புமுனையே வரலாற்றுத்

தலைமகனை அமைக்கிறது. வரலாற்றுத் தலைமகனுக நின்ற நிலையில் இருவரைத் திருஞானசம்பந்தரே அமைக்கிறார். எனினும், ஒருவரை மட்டுமே அதற்குரிமையுடையவராகச் சேக்கிழார் அமைக்கிறார். திருஞானசம்பந்தரால் பெரிதும் பாராட்டப் பெற்ற மற்றவருக்கு வரலாற்றுத் தலைமை தாங்கும் வாய்ப்பு இல்லை என்று ஆய்ந்து தெளிந்து, திருஞானசம்பந்தரின் பரிந்துரையைக் கூட ஏற்றுக் கொள்ளாதவராகிறார் சேக்கிழார். பொதுமையில் அமையும் செயல் நிகழ்வுகளுக்கு வரலாற்று உருவம், உயிர்ப்பு ஆகியவைகள் கொடுக்க எண்ணுபவர்களுக்குச் சேக்கிழார் அமைத்துக் காட்டிய இலக்கணக் கோடு என இதனை உணரவேண்டும்.

பதிகம் பாடும் இடமும் முறையும்

திருமருகலில் மருகற் பெருமானே கணபதீச்சுரப் பெருமான் கோலத்தைக் காட்டுகிறான். எனவே, திருமருகல் திருக்கோயில் கருவறையில் உள்ள சிவலிங்கத் திருமேனியில் அல்லது எழுந் தருளிப்பாடு மூர்த்தியில் இத்தோற்றம் நிகழ்ந்திருக்கும். திருஞான சம்பந்தர் வரலாற்றை ஊன்றிப் பார்த்தால், கருவறைத் திருமேனி வழிபாட்டை முடித்துக் கொண்டுவந்து, எழுந்தருளுந் திருமேனி யிருக்கும் இடத்தில் -- அப்பதிக்குரிய அடையாளம் அமைந்த மூர்த்தம் அதுவே யாதலின் இந்த இடத்தில் — அமர்ந்து பாடுவதை வழக்கமாகக் கொண்டவர் ஞானசம்பந்தர் எனத் தெரிய வருகிறது. திருவீழிமிழலைக்கு வந்ததும் திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் ஆகிய இருவரும் இணைந்து நின்றபோது திருஞானசம்பந்தரே பதிகம் பாடுகிறார். இந்நிலையில், முன்பேயே செய்து கொண்ட ஏற்பாட்டின் வண்ணம் அப்பரடிகள் முன்பேயே திருவீழிமிழலைக்கு வந்து வழி பாடு செய்தவர். அப்போது அவர் தம் அனுபவத்தைப் பதிகமாக அமைத்துப் பாடிவிட்டார் எனக் கொள்ள வேண்டும். அடுத்து, திருஞானசம்பந்தர் வரும்போது அவரை வரவேற்று, அவருடன் இணைந்து வருகிறார். இங்கே வரலாறு திருஞானசம்பந்தரிடம் நிற்கிறது. அப்பரடிகள் துணைநிற்கிறார் அவ்வளவே. பின்னர் இருவர் அருளிய பதிகங்களும் அவரவர் அனுபவநிலைகளை அடிப் படையாகக் கொண்டு ஆய்வு செய்யப் பெறுகின்றன. இவ்வகை யில் அப்பரடிகள் பதிகமும் ஞானசம்பந்தர் பதிகமும் திருப்புகலூரில் அடியவர்கள் குழாத்தில், திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் முன்னிலையிலேயே ஆய்வு முறையில் அனுபவநிலை உணரப் பெற்ற செய்தியை நாம் அறியலாம். இத்தகைய அருளியலனுபவத்தில் இயல்பாக அமையும் திருப்பதிகங்களின் அடிப்படையில் தத்துவக் கொள்கைகள், அற இயல் கோட்பாடுகள் தெளியப் பெறுகின்றன. அவைகளைத் திருக்கோயில் திருமேனிகளின் முன்நின்று பாட வேண்டும் என்ற நியதி இல்லை, சில பதிகங்கள் திருமடங்களில் தங்கியிருக்கின்ற காலத்தும் பாடப் பெற்றுள்ளன. ஆயினும் அவை அத்தலத்து இறைவனை முன்னிலையாக அமைத்துப் பாடப் பெற்ற வைகளே. இந்நிலையிலும் திருவீழிமிழலைப் பதிகங்கள் அமை கின்றன. அத்தகைய பதிகங்களில் கொள்கைகள் விளக்கப்பெறு

கின்றன. இதனுலேயே இருவரும் வழிபாட்டுக்கு இணைந்து செல்லும் போதும், ஒருவர் முன்னுக மற்றவர் பின்னுகச் செல்லும் முறை ஞானசம்பந்தராலேயே அமைக்கப் பெறுகிறது. இருவரும் பல நாட்கள் தங்கியிருக்கின்ற காலத்து, தனித்தனியே ஒரு நாளைக்கு ஒரு முறை — அதுவும் முதல் முறை சென்று வழிபாடாற்றுவதைத் தமக்குக் கடனுக அமைத்துக் கொள்ளுகிறார்கள். அப்போதுதான் தாம் பெறும் அனுபவத்தை யொட்டித் திருப்பதிகம் இயல்பாக அமையும் நிலைமை உண்டாகும். முதலில் வழிபாடாற்றியவர் இரண்டாவது வழிபாட்டை அமைப்பவருடன் கலந்து கொள்ளுதல் வேண்டும். ஏனெனில், அவர் முன்னிலையும் கூட, சில அனுபவங் களைப் பெருமான் அமைப்பதற்குக் காரணமாக அமையும். சிறுத் தொண்டர் வழிபட்ட தலத்தைத் திருஞானசம்பந்தர் வழிபடச் செல்லும் போது, சிறுத்தொண்டரை முன்னிட்டுக் கொண்டு சென்று வழிபாடு செய்வதாக அமைக்கிறார். எனவே, சிறுத்தொண்டர் முன்னின்று நடத்தித் தருபவர் என்ற வரலாற்று நிலை பெறுகிறார். திருஞானசம்பந்தர் வரலாற்றின் நேர்நிலைத் தலைவர் ஆகிறார். அவ் வாறே, நளன் வழிபாட்டை முன்னிட்டுக் கொண்டு ஞானசம்பந்தர் வழிபாடும், அனுபவமும் திருநள்ளாற்றில் அமைகின்றன. எனவே, திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் போன்றவர்கள் இணைந்திருக்கும் காலத்தில் முதன்மை வழிபாடு தனித்தனி நிலையில் அமைவதன் காரணம் அனுபவநிலை அமைவதற்கும் அவ்வடிப்படையில் பதிகம் அமைவதற்கும் உரிய சூழ்நிலை உண்டாக வேண்டும் என்பதே. இவ்வாறு மரபினை அமைப்பதற்குக் காரணம் மன வேறுபாடோ, கொள்கை வேறுபாடோ அன்று. திருப்பதிகம் அமைவது அருளிய னுபவத்தின் அடிப்படையிலேயே. அது தடையின்றி நிகழ்வதற்கு அவர் வழிபாட்டில் வரலாற்றுத் தலைமை பெறவேண்டும். வழிபாடு வரலாற்றில் துணை நின்று நடத்துதல், முன்னின்று நடத்துதல் என்பன வேறு. வழிபாட்டுத் தலைமை வேறு. ஆனல், திருநீலகண்ட யாழ்ப்பாணர் திருநாவுக்கரசர் அருளிய திருப்பதிகங்களை யாழில் இட்டு இசைத்துப் பாடியிருக்கலாம். பாடியதாக வரலாறு அமைய வில்லை. இவ்வாருன அடிப்படைக் கூறுகளை முன்னிட்டுக் கொண்டு நிகழ்வுகளை நாம் உணர்தல் வேண்டும்.

கோலம் காட்டப் பெறுவதன் கொள்கை

திருஞானசம்பந்தருக்கு வீழியிற் காழிக் காட்சி அமைந்தது என்பதை எடுத்துக் காட்டும் பதிகம் இணைப்பதிகம் என அமைந்தது. அதனுள் 'புகலியும் திருவீழிமிழலையும்' இணைந்துள்ளன எனக் காட்டி, தல முறைத் தேவாரப் பதிப்பில் புகலியை அடுத்த நிலையிலேயே அப்பதிகத்தை அமைத்துப் பதிப்பித்துள்ளார்கள். அப் பதிகத்தில், இந்நிகழ்வை நடத்திய வரலாற்றுத் தலைவர் புகலி நிலாவிய புண்ணியனுரே. இப்பதிகத்தின் பதினெரு தேவாரங்களிலும் புகலிநிலாவிய புண்ணியனே என்று விளித்துத்தான், மிழலை விண் ணிழிவிமானம் விரும்பியது ஏன்? என்று கேட்கிறார். இனி, இப்பதி கத்து ஒன்பதாம் தேவாரத்தில் மட்டும் "எறிமழுவோடு இளமான்

கையின்றி இருந்த பிரான் இது என் கொல்? எனக் கேட்கிறார். மழு வும் மானும் கையில் இல்லாமல் அமைந்த கோலம், சீகாழிப் பன்னிரு பெயர்களுக்குரிய பதிகங்களில், எந்த ஒரு பதிக்குரிய கோலமாக அமைத்திருக்கலாம்? இவ்வாய்வினைமுழுமையாகச் செய்தார் சேக் கிழார். திருத்தோணிபுரப்பதிகந்தவிர ஏனைப் பதிகங்கள் எல்லாவற் றிலும் மழுவேந்திய குறிப்பு அமைந்துள்ளது. இந்நிலைப்பதிகத்தின் பதி னெரு தேவாரங்களிலும் புகலி நிலாவிய புண்ணியனே என வெளிப் படையாக அழைத்திருப்பதைச் சேக்கிழார் புறக்கணித்தார் என்று சொல்ல முடியாது. ஒன்பதாம் தேவாரத்தில் குறித்த ஒரு அடை யாளத்தை வைத்தே இந்நிகழ்ச்சிக்கு வரலாற்று உருக்கொடுக்கிறார் சேக்கிழார்.

மேலும் ஒரு முக்கியமான செய்தி. திருமருகற் பெருமான் கணபதீச்சுரப் பெருமான் வடிவத்தைக் காட்டுகிறார். இத்தகைய காட்சியமைப்பானது திருவீழிமிழலையில் இல்லை. அப்படியிருப்பின், மிழலைப் பெருமானே, காழிக் கோலம் காட்டியது ஏன்? எனப் பதிகம் அமைத்திருப்பார். மிழலைப் பெருமான் திருவுருவத் திருமேனி யிலேயே காழிப் பெருமான் காட்சி அமைகிறது. மிழலையில் உள்ள இறைவனைப் பார்க்கிறார். அவர் மறியுற்றகையர். அவரையே, மறியும் மழுவும் இல்லாத கையராக, முன்னே தோணிபுரத்தில் பேணி வணங்கும் உருவ அமைப்பிற் காணுகின்றார். இதனைக் குறியிற் பெருகுந் திருப்பதிகம் என்றார் சேக்கிழார். இந்நிகழ்ச்சியானது பிற இடங்களில் தம்முருவங் காட்டியது போன்றதன்று; தனித்தன்மை வாய்ந்தது என்பதை எண்ணுகிறார் சேக்கிழார். இக்காட்சிக்குப்பின் திருஞானசம்பந்தர் தம் பயணத்திட்டத்தை எவ்வாறு அமைக்கிறார் என்பதையும் ஆராய்கிறார். காழிப்பெருமான் தம்திருவுருவைக் காட்சிப்படுத்துவதற்குக் காரணம் என்ன? என்பதைக் கண்டறியும் பணியே பெரும்பணியாக அமைகிறது சேக்கிழாருக்கு. ஒருவேளை, திருஞானசம்பந்தர் காழியிலிருந்து வந்து நாட்கள் நீண்டமையின் காழிப் பெருமானைக் காணும் விருப்பு உண்டாகியிருக்கலாம். அதனால் அவருக்கு அக்காட்சியை அமைத்திருக்கலாம். அதனு லேயே, மிழலைப் பெருமான் திருவுருவத் திருமேனியிலேயே தம்மைத் தோற்றுவித்திருக்கிறார். தலயாத்திரைக் குறிக்கோளும் அதுவே. காழிப் பெருமானைப் பிறபதிகளிலும் கண்டு வணங்க வேண்டும் என்பதே. அதுமட்டுமல்லாமல், விண்ணிழி விமானத்தோடும் தொடர்புபடுத்தி, தம் காட்சியை அமைக்கிறார். விண்ணிழி விமானத் தொடர்பினால் சீகாழி விமானத்தோடு இணைந்திருக்கும் தோணியப்பர் அம்மை திருவுருவமே சேக்கிழாருக்கு நினைவு வருகிறது. தோணியப்பரையும் அம்மையுமே குருவெனக் கொண் டவர் ஞானசம்பந்தராதலின், யாத்திரை தொடங்கும் போதும் முடிக் கும் போதும் தோணிப் பெருமானையே சென்று பணியும் முறையை மரபு வழியில் உணர்ந்து அமைத்து வரும் சேக்கிழார் இக் காட்சியும் யாத்திரையைப் பற்றியதே என எண்ணுகிறார். அதை உறுதிப் படுத்துவதாக அமைந்தது மழுவும் மானும் இல்லாமல் தோற்றிய திரு

வுருவே. இம்மூடிவை மேற்கொண்டபின் சேக்கிழார் வரலாற்றை உருவாக்குகிறார்.

திருஞானசம்பந்தருக்கு இயல்பாகவே காழிக்குப் போக வேண்டும் என்ற நினைவு உண்டாகியிருக்குமா? அப்படியிருப்பின், பதிகத்தில் கோலங்காட்டியதன் காரணம் ஏன்? என வினவியிருக்க மாட்டார். எனவே, சீகாழிப் பெருமான் இங்கே வந்து காட்சியருளுவதற்குரிய காரணம் ஏதாவது இருக்க வேண்டுமே என்பது தான். முடிவாக, சேக்கிழார் அமைப்பது, காழியிலிருந்து மறையவர்கள் சிலர் வந்ததாக, சீகாழிக்கு வருகை தரவேண்டும் என்று வேண்டியதாக அமைக்கிறார். சிறுத்தொண்டர் வந்து அழைக்க, உடனே திருக்கோயிலுக்குச் சென்று விடைபெறுதற்கு நின்றார். மருகற் பெருமான் காட்சி கொடுக்கிறார். பதிகம் பாடியபின் சிறுத்தொண்டருடன் திருச்செங்காட்டங்குடிக்குப் போய்விடுகிறார். சேக்கிழார் இங்கே கால அவகாசம் அளிக்கிறார். அவர் வரலாற்றை அமைப்பதற்கு ஓர் இரவும் கனவும் தேவைப்படுகின்றன. ஏன்? மிழலையில் தன்னைத் தோற்றியது தோணியிருந்த அம்மையப்பர் திருக் கோலமே என்பதை அக்கனவின் மூலம், காழிப் பெருமானே வந்து,

> "தோணியில் நாம் அங்கிருந்த வண்ணம்
> தூமறை வீழி மிழலை தன்னுள்
> சேணுயர் விண்ணின்றிழிந்த இந்தச் சீர்கொள்
> விமானத்துக் காட்டுகின்றோம்
> பேணும் படியரல் அறிதி"

என்று சொல்லிச் செல்வதாக, வரலாற்றுத் துணைநிகழ்வுகளை அமைக்கிறார். மீண்டும் அதனை உறுதிப்படுத்தும் வகையில்,

> "மைம்மரு பூங்குழல் என்றெடுத்து மாறில்
> பெருந்திருத்தோணி தன்மேல்
> கொம்மை முலையினுள் கூட நீடும்
> கோலங் குலாவு மிழலை தன்னில்
> செம்மை தரு விண்ணிழிந்த கோயில்
> திகழ்ந்தபடி இது என் கொல்? என்று
> மெய்ம்மை விளங்கும் திருப்பதிகம்
> பாடி மகிழ்ந்தனர் வேதவாயர்"

என்று, தோணிபுரக் கோலமே அது என்றும் அதுவே மெய்ம்மை விளங்கும் பதிகம் என்றும் சிறப்பிக்கிறார்.

இவ்வாறு தெய்வச் சேக்கிழார் அமைத்துக் கொடுத்த வரலாற்றுப் பாதையின் வழியிலேயே சென்று, திருஞானசம்பந்தர் வீழியிற் காழிக் காட்சியைக் கண்ட திருவருள் நிகழ்வை உணர முடிந்தது. வரலாறாக அமைதற்குரிய அடிப்படைக்கரு அமையப் பெறுத நிகழ்வுகளைச் சேக்கிழார் மெய்மை நிகழ்வுகளாக ஏற்றுக் கொண்டாலும் அவைகளை முற்ற முடிந்த அளவில் வரலாறென அமைத்துக் காட்ட

இயலாமை நேர்ந்து விடுகிறது. வரலாறு என அமைக்க முடியாத அருளியல் நிகழ்வுகளைச் சேக்கிழார் பெருந்தகை முற்றுக நீக்கிவிட வில்லை. வரலாற்றுக்கும் மேலாக அருளியல் உணர்வுடன் தலீலப்படு வார்க்கு அவ்வுணர்வுக்கும் இடம் தரும் வகையில், அவ்வருளியல் உணர்வுடன் சென்று தெளிந்து கொள்ளக் கூடிய வழியையும் வாய்ப்பையும் நுட்பமாக அங்கங்கே அமைத்துச் செல்பவர் சேக்கிழார். அவ்வகையில் அவரை நன்றியுடன் வணங்கி, அவர் வகுத்த அருளியற் பார்வையின் மூலமே சென்று அருளியல் நிகழ்வு களை உளங் கொள வேண்டும்.

குரு மூர்த்தமே கோலங் காட்டும்

திருஞானசம்பந்தர் சைவசமயக் கொள்கைகள், சில நடைமுறை விதிகள் ஆகியவைகளைத் தாம்அமைத்தும் நடந்து காட்டியும் தொண்டாற்றிய அருட்குரு ஆவர். சைவனுகப் பிறந்த ஒருவன் தான் பிறந்த ஊரில் உள்ள திருக்கோயிலின் குடியுரிமையுடையவனுகப் பதிவுசெய்து கொள்ளல் வேண்டும். அவ்வூர்த் திருவருள் மூலம் எனப்பெறும் திருக்கோயில் மூலமாகவே அவனுக்கு அருளியல் மூலமாகப் பெற வேண்டிய பேறுகளை அவன் எய்த முடியும். இக் கொள்கை ஞானசம்பந்தர் காலத்தில் தோற்றுவிக்கப் பெற்று, சேக் கிழார் காலத்துக்குள் மரபு வழிக் கொள்கையாக அமையும்நிலை உண்டாகி விட்டது. அவ்வடிப் படையில் திருஞானசம்பந்தர் நேர்த் தொடர்பு கொள்ள வேண்டிய திருமூர்த்தம் அல்லது திருஞானசம் பந்தரைத் தொடர்ந்து நின்று பணிகளில் இயக்கியும் மாற்றியும் செயற்படுத்தும் நேர்முக மூர்த்தம் அவர் முதன்முதலாக அருள்பெறு வதற்கு அமைந்த மூர்த்தம் எதுவோ, அது அவருக்கெனக் குரு வென அமைந்த திருவருள் தொடர்பு மூர்த்தம். இவ்வகையில், சீகாழிக்குரிய பன்னிரண்டு தலப் பெயர்களில் எத்த ஒன்றினை முன் னிட்டுக் கொண்டு சொன்னலும், நாம் நினைவிற் கொள்ள வேண்டிய திருமூர்த்தம் — அம்மையப்பராய்த் தோணியில் இருந்த மூர்த்தமே. இத்தகைய கொள்கையை அமைத்துக் கொடுத்தவரே திருஞானசம் பந்தர். ஆகையால், திருஞானசம்பந்தர் வெளியூரில் இருக்கும் போது சீகாழிப் பெருமான் தொடர்பு ஞானசம்பந்தரிடம் அமையு மானுல் அத்தொடர்பை நிகழ்த்தியவன் காழிஇறைவன் எனப் பொதுவாக அமைத்துக் கொண்டாலும், தோணியப்பர் அம்மை திருமூர்த்தமே என்பதைச் சிறப்பான வகையில், அருளியல் வழியில் அமைத்துக் கொள்ள வேண்டும் என்பது சேக்கிழார் கொள்ளும் கொள்கை மதிப்பீட்டியலான விளக்கம். சேக்கிழார் கொள்ளும் இக் கொள்கையின் அடிப்படையின்மேல் விளைந்து நிற்கும் சிலஅரு ளியல் ஆய்வு விளக்கங்களையும் நாம் இணைத்துக் கொள்ளும்போது, அச்செயல் சேக்கிழார் செயலுக்கு மாறுபட்ட ஒன்றன்று. அதே கொள்கையை மேலும் சில ஆய்வியல் முறைகளின் மூலமாகத் தெளி வுறத் தெரிந்து இணைத்துக் கொள்கிறோம் என்பதே. அவ்வாறு நாம் கொள்ள வழிவகுப்பது சேக்கிழார் திருவாக்காகிய "எடுக்கும் மாக் கதை" என்ற தொடரே எனக் கொள்ளல் வேண்டும்.

தெய்வச்சேக்கிழார் கூறும் தோணியில்நாம் அங்கிருந்த வண்ணம் என்பதற்குரிய விளக்கத்தையும் அம்மையப்பராக இருந்த கோலத்தையும் தெளிவுபெற அறிந்து அமைத்துக் கொள்ளல் வேண்டும். சீகாழியில் தோணியப்பருக்கும் திருக்கோயில் விமானத்துக்கும் ஒருதொடர்பு உண்டு. ஊழிக் காலத்துப் பிரளயத்தால் உலகம் தண்ணீரால் மூழ்கியிருக்க, இறைவன் இறைவியோடு ஓம் என்பதைத் தோணியாக அமைத்துக் கொண்டு தங்கும் இடம் எங்கே என்று தேடி வருகிறான். அப்போது சீகாழித் திருக்கோயில் விமானம் ஊழிக்காலத்துப் பெருகிய தண்ணீரால் மூழ்கி மறையாது அதன் மேல் நின்று விளங்குவதாக இருந்தது. ஓம் என்னும் தோணியில் வந்தவர்களாகிய அம்மையும் அப்பனும், சீகாழித்திருக்கோயில் விமானத்தை இடமாகக் கொள்கிறார்கள்.

நிலவுலகில் கொள்கையால் உயர்ந்து, ஊழிக் காலத்திலும், எல்லாம் அழியினும் தான் அழியாது உயர்ந்து, நின்ற விமானத்தை விரும்பிய நீ இன்று விண்ணிலிருந்து இழிந்து வந்த விமானத்தை விரும்பியது ஏன்? விண்ணவர்கள் விமானம் அமைப்பது என்பது பக்தியால்ன்று; மயக்கத்தால். ''ஏரிசையும்'' என்று தொடங்கும் திரு வீழிமிழலைத் திருப்பதிகத்துப் பத்தாம் தேவாரத்தில்,

> ''பண்ணமரும் மென்மொழியார் பாலகரைப்
> பாராட்டும் ஓசை கேட்டு
> விண்ணவர்கள் வியப்பெய்தி விமானத்தொடும்
> இழிந்த மிழலையாமே''.

என்று கூறுவதால், விமானம் விண்ணிலிருந்து மண்ணில் வரக் காரணம் மயக்கவுணர்வே எனக் கொள்ளலாம். வந்த விமானத்தை மீண்டும் எடுத்துப் போகத் தெரியாதாகையால் இங்கே விட்டு விட்டுப் போய் விடுகின்றார்கள். அதனாலேயே அதனை ''மேனின்றிழி'' கோயில் என அமைத்திருக்கின்றார். நிலவுலகத்து மிழலையிலுள்ளார் அமைத்த கோயில், கீதம் முதலியன விண்ணுலகம் சென்று பணி யாற்றும் தன்மையன என்றும் கூறியுள்ளார். மேலும், திருமால் சக்கரம் பெறுதற்காக — பயன்கருதித் தாமரை மலரால் பூசைசெய்ய, ஒரு நாள் ஒன்று குறைய, அவன் தன் கண்ணை இடந்து, அதனை ஒரு மலராக அமைத்து வழிபட்டான். கண்ணை இடந்து இறைவனுக்குக் கொடுத்ததில் திருமாலும் கண்ணப்பரும் ஒன்றே. கண்ணப்பன் ஒப்பதோர் அன்பு இல்லை என்று போற்றப் பட்டவன் ஒருவன். இங்கே, திருமாலின் விழியைத் தான் தாங்கும் விமானமாகக் கொண்டான் என்ற கருத்தை, ''ஏரிசையும்'' என்று தொடங்கும் திரு வீழிமிழலைத் திருப்பதிகத்து எட்டாம் தேவாரத்தில்,

> ''தருப்பமிகு சலந்தரன் தன் உடல் தடிந்த
> சக்கரத்தை வேண்டியீண்டு
> விருப்பமொடு மால்வழிபாடு செய்ய விழி
> விமானஞ் சேர் மிழலையாமே''

என அமைக்கிருர். இங்கே 'விழிவிமானம்' என்ற ஆட்சியை ஞான சம்பந்தர் அமைத்ததன் கருத்தினை உன்னியோர்க. எனவே, சீகாழி விமானமும், அதையொட்டிய தோணியும் அதில் அமைந்த அம்மை யப்பர் மூர்த்தமும் வேறுவகை. உயர்வற உயர்ந்தது அது; மிழலையில் உள்ள விமானம் இழிவற இழிந்தது. சீகாழி விமானத்தை இடமாகக் கொண்ட நீ இந்த விமானத்தை விரும்பியது என் கொல் சொல்லாய்? என்று கேட்பதன் மூலம் அவன் விருப்புக்குரிய காரணம் என்ன என்பதை அறிய முற்படுவது ஒருநிலை. அவன் செயல் எதுவாக இருப்பினும் நம்மால் அறியும் நிலைக்கு ஒத்தது அன்று என்று நிறுத்தி நம்மால் அறிய முடியாததே அவன் பெருமை என்று அமைத்துவிடு வது இன்னொரு நிலை. இவ்வகையில் பெருமையையே எண்ணி எண்ணி நம்மை யெல்லாம் அவன் கருணைக்கு ஆளாக ஆக்குவது தெய்வச் சேக்கிழாரின் தொண்டு. அதனை அடிப்படையாகக் கொண்டு, முதலில் ஆட்கொண்ட மூர்த்தமே எந்தத் தலத்து எந்த மூர்த்தத்தைச் சென்று வழிபட்டாலும் பலன் தருவதாக அமையும் என்று கூறி, உலக மக்களை அவ்வவர்தம் பிறந்த இடத்து அமைந்த திருக்கோயிலில் தம்மை உரிமைக் குடியினராக அமைத்துத் தொண்டு நெறி பேணுதலே முதன்மையாக ஒவ்வொருவரும் மேற் கொள்ள வேண்டிய கடமையாகும், என்ற திருஞானசம்பந்தரின் கருத்தை— கொள்கையை வலிமையாக்கும் தொண்டு சேக்கிழார் திருவாக்கு களாலேயே பக்திச்சுவையுடன் வெளிப்பட்டது, எனக்கொள்ளலாம்.

மணவாளன் அழகிய நம்பி

திருவீழிமிழலைப் பதிகங்கள் இயல்பாகவே மக்களுக்கு — சைவ சமயத்துக்கு விழிகளெனக் கொண்டாடும் வகையில் அமைந்து விட்ட பதிகங்கள். தம்முடைய கண்ணைக் கொடுத்து, சக்கரம் வேண்டுமெனக் கேட்ட செயல் ஒரு பக்கம்; தனித்திருக்கும் குடுமி யப்பருக்கு யான் என் கண்ணைக் கொடுத்து அவனுக்குப் பணி செய்தேன் என்று செய்த செயல் இன்னொருபக்கம். இறைவனுடைய இரு கண்கள் எனநின்று, உலகத் துயிர்களுக்கு எல்லாவகையாலும் பணியாற்றிய செயல் மூன்றுவதுபக்கம். தன்னலம் நோக்கியது ஒன்று. அன்பினுல் சிவனையே நோக்கிய செயல் சிவத் தொண்டு. உலகத்துயிர்களையேமுக்கியமெனக் கொண்டு, அவர்களை முன்னேற் றுவதே அனைத்தும் எனக் கொண்டு செய்த சமூகத் தொண்டு மூன்றுவது. இவ்வகையில் மூன்றுவது வகையில் நிற்கின்றன திரு ஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் திருவீழிமிழலையில் ஆற்றிய தொண்டுகள்.

இங்கே திருஞானசம்பந்தப் பெருமான் தம்மூருக்குத் திரும்பாமல் தாம் மேற்கொண்ட பணியைத் தொடர்ந்து செய்ய வேண்டும் என்ற கருத்தை ஈர்த்தது எதிலிருந்து? அதற்குத் திருஞானசம்பந்தர் அமைத்த முதற் குறிப்புத்தான் திருப்புகலியோடு இணைத்தது. இரண்டாவது மானும் மழுவும் கொள்ளாமை. மூன்றுவது சேர்க்கைப் பதிகத்து நான்காந் தேவாரத்தில் எடுத்துக் காட்டிய "ஏக பெருந்தகை யாய எம்மான்" என்ற குறிப்பே. நான்காவது புகலியில்

நின்ற பெருமானின் பெயர் 'மணவாளன்' என இரண்டு முறையும், மணாளன் என ஒரு முறையும் 'கண்ணுதலானும்' என்று தொடங்கும் திருப்பதிகத்து 4, 10, 3 ஆகிய தேவாரங்களில் அமைத்துக் காட்டியுள்ளார். வீழிமிழலைப் பெம்மான் பெயரும் மணவாளநம்பி. அழகன் என்ற பெயர் வீழியிறைவனுக்கு உண்டு; அவ்வாறே அப்பெயர் புகலியிறைவனுக்கும் உண்டு என முன் சொன்ன புகலித் திருப்பதிகத்து ஆருந் தேவாரத்தில் அமைத்துள்ளார்.

புகலியா தோணியா

சீகாழி விமானத்தே தோணியில் உள்ள 'அம்மையப்பர்' என்ற மூர்த்தம் அவரால் காணப் பெற்ற முதல் மூர்த்தமே. அவர் ஞானப் பாலருந்தியபின் தம்மையிது செய்தான் இவன் என்று காட்டியதும் அந்த மூர்த்தமே. அவ்வகையில் அவருக்கு அனுபவமாய் நின்ற மூர்த்தம் அதுவே. திருஞானசம்பந்தரின் தனிநிலை அக வாழ்வுக்கு, அருள்வழங்கும் மூர்த்தம் விமானத்தே தோணியில் அமர்ந்த அம்மையப்பர் திருக்கோலமே. அந்த உருவத்தைக் காட்டக் கண்டவர் சிவபாத விருதயர். காட்டியவர் திருஞானசம்பந்தர். எம்மை இது செய்த பிரான் இவன் என்று காட்டியது உண்மை. கண்டார் என்பதற்கு வரலாறு துணை செய்யவில்லை. ஆனால், அவர் உலகத்துயிர்களுக்காக அனுபவித்துத் துய்த்து வழங்கிய மூர்த்தத்தின் அமைப்பானது முதற் பதிகத்தில் விளக்கப் பெறுகிறது. அது பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மான், தோடுடைய செவியன், விடையேறி, தூவெண்மதி சூடி, திருநீறு பூசியவன், என் உள்ளம் கவர் கள்வன் என விரித்துரைக்கப்பெறும் மூர்த்தமே.

"எம்மை இது செய்த பிரான் இவனன்றே" என்று சுட்டிக் காட்டி அந்நிலையில் "தோடுடைய செவியன்" எனத் தொடங்கும் முதற் பதிகம் அருளுகின்றார். இம்முதற்பதிகமே ஞானசம்பந்தப் பெருமான் தமக்கு அருள் செய்த திருக்கோலத்தை விளக்கும் பதிகம். இப் பதிகம் அம்மையப்பராக நின்ற கோலத்தையே உமையொருபாகன் எனப் பெறும் அர்த்தநாரீசுர மூர்த்தமாக விளக்கம் செய்கிறது. தோணியேறி வந்தவரை "விடையேறி" என விளம்புகிறது. மேலும், இப்பதிகத்து ஆருந் தேவாரம்,

"மறைகலந்த ஒலி பாடலோடு ஆடலராகி மழுவேந்தி"

என்று அவன் மழுவேந்தியுள்ளமை கூறுகிறது. மேலும், இதுவே தம்மால் என்றும் பேணப் பெறும் திருவுருவம் என்பதையும் அப்பதிகத்து ஒன்பதாந் தேவாரம் "பேணுதல் செய் பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே" என்று கூறுகிறது. இனி, திருவீழிமிழலை நிகழ்ச்சியில் சேக்கிழார் கூறும் "பேணும்படியால் அறிதி" என்ற தொடருக்கு இயைபாக அமைந்த நிலையில் திருஞானசம்பந்தர் தாம் பேணும் நிலையில் அமைந்த வடிவம் இதுவே என்று குறிப்பிடுகின்றார்.

அடுத்து, என்னை இது செய்த பிரான் இவன் என்றும், என் உள்ளங் கவர்கள்வன் இவனன்றே என்றும் தாம் முதன்முதலிற்

கண்ட திருவுருவம் தம்மைத் தன்பால் இழுத்துக் கொண்ட கள்வனும் திருவுரு என்று கூறியது போலவே திருத்தோணிபுரம் பதியின் மேல் பாடப்பெறும் தனிப் பதிகங்கள் காமம் மிக்க கழிபடர் கிளவி என்னும் அகப் பொருள் துறை அமைப்பில் கிளி முதலியவைகளைத் தூதாக அனுப்பும் முறையில் அமைந்துள்ளன. திருத்தோணிபுரத்துத் தனிப்பதிகங்கள் மூன்று. திருத்தோணிபுரத்துப் பதிகங்களில் விளக்கப்பெறும் பெருமான் திருக்கோலம் மாதினை ஒருபாற் கொண்ட அர்த்தநாரீசுரபாகமே. பிரமபுரத்து முதற்பதிகத்தில் சொன்ன செய்திகளின் விரிவாகவே திருத்தோணிபுரத்துத் திருப்பதிகங்களை அமைத்துக்கொள்ளலாம். அவ்வகையில் திருத்தோணிபுரத்துப் பெம்மான் திருக்கோல விளக்கத்தில் மழுவேந்தியது கூறப்பெறவில்லையென்றும், பிரமபுரத்து முதற்பதிகமாகிய "தோடுடைய" என்ற பதிகத்தில் மழு ஏந்திய அமைப்பானது கூறப்பெற்றுள்ளது என்பது முன்னமே காட்டப் பெற்றுள்ளது. மேலும், தோணிபுரத்துப் பெருமான் விடையேறி.

இனி, திருஞானசம்பந்தர் ஞானப்பாலருந்துதற்கு முன்னரும் பின்னரும் சீகாழித் திருக்கோயில் விமானத்தருகில் அமைந்த தோணியப்பர் அம்மையின் திருவுருவானது இருவரும் தனித்தனியே, ஆனால் இணைந்து அமர்ந்த மூர்த்தமா அல்லது மாதொருபாதியன் என்ற அர்த்தநாரீசர மூர்த்தமா என்பதை அறிதற்கு வேறு சான்றில்லை. சேக்கிழார் திருவீழிமிழலையில் குறிப்பிடும்போது "தோணியில் நாம் அங்கிருந்த வண்ணம் என்றும் நீ பேணும்படியால் அமைந்த கோலம்" என்றும் குறிப்பிடுகின்றார். எனவே, திருஞானசம்பந்தருக்கு முதன்முதலாகக் காட்சிப்பட்ட திருவுருவம் மாதொருபாதியனும் கோலமே என்பது அவர்தம் திருவாக்குகளாக அமைந்த திருப்பதிகங்களினுல் அறியமுடிகிறது. ஆனால், ஞானப்பால் வேண்டிய நிலையில் பார்த்து அழுத வடிவம் தோணியில் இருந்த திருவுருவம். அது அம்மையப்பராகத் தனித்தனியே ஆனாலும் இணைந்து அமர்ந்த கோலம். தோணியில் இருந்த இந்தக் கோலம் மிழலையிற் காட்சிப்பட்டபோது, ஞானசம்பந்தர் குறிக்கும் வேறுபாடு மறியும் மழுவும் இல்லாமையே. அர்த்தநாரீச மூர்த்தமே தோணிக் கோலம் என்றுல் மறிமழுஇன்றியும் மாதொரு கூறனுகவும், இங்கே விண்ணிழி விமானம் விரும்பியது என்? என்று ஞானசம்பந்தர் அதையும் ஒரு வேறுபாடாகக் கூறியிருப்பார். இவ்வாறெல்லாம் எழும்சிக்கல்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கிறார் சேக்கிழார். தோணிபுரக் கோலம் என்பதும் ஞானசம்பந்தரால் நாளும் பேணப்பெறும் கோலம் என்பதும் உமையுடன் இணைய அமர்ந்து இருக்கும் அம்மையப்பர் கோலமே. அதுமானும்மழுவும் இல்லாத கோலமே. இவ்வாறுதோணிபுரக் கோலத்தை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பது சேக்கிழார் கருத்து.

அடுத்து, திருஞானசம்பந்தர் சுட்டிக் காட்டிய வேறெரு நிலையையும் இங்கே நாம் உளங்கொளல் வேண்டும்.

சீகாழியோடு தம்மைக் குடியுரிமை அமைக்கும் ஞானசம்பந்தர் தோணிபுரத்தை முதற்படியாக அமைக்காமல் பிரமபுரத்தை முதற் படியாக அமைக்கிறார். தோணிபுரம் நான்காம் இடத்தைப் பெறு கிறது. தாம் அமைத்துக் கொடுத்த இந்த வரிசை முறையை மாற்றாது வரிசைப்படிச் சொல்லவேண்டும் என்று ஆணையிடுகிறார். தமக்கு அருள் செய்த மூர்த்தம் தோணியப்பர் அம்மை மூர்த்தமே; அதுவே குருமூர்த்தம் என்றால் தோணிபுரத்தை முற்படவைத்து எண்ணியிருப்பார். தோணியப்பரும் அம்மையும் இணைந்த நிலையிற் கண்டதற்குமுன் அவருக்கு அமைந்த மூன்று காட்சிகள் உண்டு என நிறுத்தியிருப்பதனாலேயே அத் தோணிபுரக் காட்சி நாலாவதாக அமைந்தது. தாம் முன்னுள்ள வேறுசில நிலைகளையும் இணைப் பதனால் தம்மை அம்முதற்பதிகத் திருக்கடைக்காப்பினுள் "ஒரு நெறிய மனம் வைத்து உணர் ஞானசம்பந்தன்" என்று குறிப்பிட்டுக் காட்டியுள்ளார். இவ்வகையில் பிரமபுரம், வேணுபுரம், புகலி என்ற மூன்றிலும் அமைந்த திருவுருவம் பேணப்பெற்ற திருவுருவம். தோணி புரத்துத் திருவுருவம் காணப்பெற்ற திருவுருவம். ஞானப்பாலருந்தி யதும் முன்னே பேணப்பெற்ற வடிவமும் தோணியிலேயே இருப் பதாகக் காட்சிப் பெற்றது. எனவே, தோணியில் இருவகையான திருவுருவக் காட்சிகளும் இணைகின்றன; பேணப்பெற்ற வடிவமும் காணப்பெற்ற வடிவமும்.

சீகாழித் திருக்கோயில் விமானத்தின் பக்கத்தே தோணியில் காணப்பெற்ற முதல் உருவம் அம்மையப்பர் தனித்தனியே இருந்த கோலமே. இவ்வுருவத்தில் முன்னே பேணப்பெற்ற மூன்று உருவங் களும் காட்சிப்படுகின்றன. எனவே காணப் பெற்ற உருவத்திலேயே பேணப்பெற்ற மூன்று திருமேனிகளும் வந்து காட்சிப்பெற்று விட்டன. தோணிபுரத்திலேயும் காணுங்கோலம், பேணுங்கோலம் என்ற இருவகை உண்டு என்பதை நுட்பமாக உளங்கொள்ள வைத் தவர் சேக்கிழார் பெருந்தகையே.

இனி, 'மறக்கும் மனத்தீனே' என்று தொடங்கும் திருத்துருத்தித் தேவாரத்தில் "மையல் செய்து" என்று திருஞானசம்பந்தர் குறிப் பிட்டுக் காட்டிய ஒன்றே, அவர் பாடிய முதல் பதிகத்தில் "உள்ளம் கவர்கள்வன்" என்று விளக்கப் பெற்றது. அதுவே தோணிபுரத்துக் காணும் மூர்த்தத்துள் விரிவாகப் பேசப் பெறுகிறது. அதே கருத்தினை வீழிமிழலையில் அமைந்த காழிக் கோலத்தைக் கண்டவுடனேயே மிக நுட்பமாக இணைத்துக் காட்டுகிறார் திருஞானசம்பந்தர்.

திருஞானசம்பந்தர் புகலியையும் மிழலையையும் இணைத்துப் பாடி யருளிய இணைப்பதிகமே காட்சிப் பதிகம் எனப்பெறும். அப்பதி கத்து முதல் தேவாரத்திலேயே

> "எம் இறையே முக்கண் ஈசா, என் நேச
> இது என் கொல் சொல்லாய்"

எனப் பாடுகிறார். இதனுள் என் நேச! என்பது ஓர் அரிய ஆட்சி. தம்மையும் பெருமானையும் தனித்த நிலையில் இணைய வைக்குங்கால்,

அத்தகைய தனித்தன்மைசார் இன்ப அன்பில் எழும் சொல்லே என் நேச! என்பதாகும்.

எனவே, உலகவர் ஏற்கும் முதற்காட்சி, குருவின் கோலம் என்பவை திருஞானசம்பந்தர் வரலாற்றில், ஏற்பட்ட சிலமாற்றங் களால் சிக்கலே உண்டாக்கின. கண்ணுல் பார்த்த முதற்கோலம் அம்மையப்பராய்த் தோணியில் இருந்த கோலம். ஆனுல் ஒருமை ஞானத்தால் உணர் கோலங்களும் அக்காணும் திருக்கோலத்திலேயே காட்சிப்பட்டு விட்டன. பேணிக் காணுங் கோலத்துள் முதலாவது பிரமபுரக் காட்சி; காணுதல் மட்டுமே அமைந்த கோலம் திருத் தோணி வீற்றிருந்த அம்மையப்பராம் கோலம். இத்தகைய இரு நிலைகளில் அமைந்த நுட்பத்தைப்

"பேணும் படியால் அறிதி"

என்ற சேக்கிழார் வாக்கு விளக்கிக் காட்டியது. சேக்கிழார் தம் வாக்குக்கு மூலமாக அமைந்தது "ஒரு நெறியமனம் வைத்துணர் ஞானசம்பந்தன்" என்ற முதற்பதிகத் திருக்கடைக் காப்பு வரியே.

புகலியை மிழலையுட் புணர்த்திய நுட்பம்

பிரமபுரம், வேணுபுரம், புகலி என மூன்றுய் நின்ற நிலைகள் மூவகைகளிற் பெருமான் தம்மை மாற்றியமைத்துக் கொண்ட நிலைகள்.

திருப்பிரமபுரத் திருப்பதிகத்துள் ஒன்று "கறையணி வேலினர் போலும்" என்ற தொடக்க முடையது. பிரமபுரத்துப் பெருமான் அறச் செயல், மறச் செயல்; ஆண்மை, பெண்மை ஆகிய இருவகை நிலைகளில் உள்ள அனேத்துக்கும் அப்பாற்பட்டவன். கேடும் ஆக் கமும் கெட்ட திரு என்றாற் போல, இரண்டையும் கலந்த நிலையில் இல்லாமல் இரண்டையும் கடந்த நிலையில் இருப்பவன். இத்தகைய பொருளே எதிர்மறையில் எடுத்துக் கூறி உணர்த்துவதா உடன்பாட்டு முறையில் எடுத்துக் கூறி உணர்த்துவதா என ஒருவினவை அமைத் துக்கொண்டால் அவ்வாறு நின்ற ஒரு பொருளே உணர்த்தும் சொற்கள் மூன்றினைத் திருஞானசம்பந்தர் எடுத்துக் காட்டுகின்றார்.

1. அண்ணல் — பெண்ணுரு, ஆணுரு அல்லாதது. ஆயினும் இரண்டும் தன்னளவில் நின்று விளங்கவழி வகுப்பது.

2. பீடு — பீடு பெருகும் பிரமபுரம். பீடு நேர்ந்தது கொள்கையான்

3. பெருந்தகை — செயற்கரிய செய்ய முற்படலும், எளிய செய்யாமையும்.

இவ்வாறு தம்முள் மாறுகொண்ட இருநிலைகளுக்கு அப்பால் இரண்டையும் இணைக்கும் மூலப் பொருள் ஒன்று உண்டு என

எண்ணி அதனை அறிதல் ஒருவகை. இது அறிதற்குரியது; பெருமை யென எண்ணுதற்குரியது. ஆயினும் துய்த்து அனுபவிக்க இயலாதது.

அண்ணல் என, பெருந்தகை என நின்ற ஒருநிலையை அருள்நிலை எனக் கொள்ளும் அவ்வளவே பிரமபுரத்தில் நாம் அறியக் கூடியது. அருள் தன்மை என்பதைத் தாய்க்கும் தந்தைக்கும் இடைநின்ற ஒரு தனிப் பொருள் எனக் கொள்ளலாம்.

'கரமுனம்' என்று தொடங்கும் பிரமபுரப்பதிகத்தில் தாய், இடைப் பொருள், தந்தையாகும் என்று ஓதுவார்க்கு அருள் தன்மையே பிரம புரத்துத் தனமை என்பது கூறப்பெறுகிறது.

தாயும் தந்தையும்; அம்மையும் அப்பனும் என இரண்டாய் இணைந்து நின்ற நிலையே வெளிப்படத் தெரிவது. ஆனால், இரண்டாய் நின்றவற்றை இணைக்கவும் பிரிக்கவும் வல்ல ஒன்று இந்த இரண்டை யும் இணைத்துக் கொண்டிருக்கிறது, அதுவே அருள்நிலை.

அம்மையப்பர் என இரண்டாய் நின்ற நிலையே அறம் எனநின்ற நிலை. அறம் இருவகை. விதித்தன செய்தல்; விலக்கிய ஒழிதல். விதித்தவைகளைச் செய்தல் என்பது ஆற்றல் புரியும் அம்மைநிலை; சத்திநிலை விலக்கியவைகளைச் செய்யாதிருத்தலும் ஒருவகைச் செயல். அதுவே தந்தையென நின்ற நிலை. அம்மையையும் அப் பனையும் உள்நின்று இணைத்துச் செயற்படுவது. அம்மையப்பர் என மட்டுமே உணர்தல் அறநிலையுணர்வு. அம்மையப்பர் நிலைக்கு மூலமாக அமையும் இணைப்பாற்றலுடன் மூன்றுக நிறுத்தி யுணர்வது அறத்தையும், அதன் இருநிலைகளுக்கு இடைநின்ற மூலத்தையும் இணைத்து உணர்வது. அம்மையப்பர் என நின்றது தொன்மைக் கோலமே. இங்கே அருள் இடையில் மறைந்திருக்கும் ஒன்றுக அமைந்து நின்றது.

புண்ணியனும் புனிதம்

இனி, இம்மூன்றையும் மூன்றுக நிறுத்தி நோக்கும் நிலையும் தோன்றியது. இங்கே அம்மையப்பராக, சத்தி சிவமாக நிறுத்திக் காண்பது போலவே, இவ்விரண்டற்கும் இடையில் வேறு ஒன்றையும் நிறுத்திக் காணுதல் இரண்டற்கும் அப்பாற்பட்டு, இரண்டையும் இணைத்து வாழவைத்து, இரண்டும் அல்லாதது ஒன்று உண்டு என அதையும் இரண்டன் இடையில் நிறுத்துக் காண்பது. இதனைச் சோமாஸ்கந்த மூர்த்தம் என்பர். அம்மைக்கும் அப்பனுக்கும் இடை யில் நின்ற கந்துநிலை, மூலநிலை. இவ்வாறு நின்ற நிலையைப் 'புண்ணியன்' என்றார் திருஞானசம்பந்தர். புள் + நியமம் = புண்ணி யம் என்றுயிற்று. அதுவே, அவ்வாறு நின்றனைப் புண்ணியன் என நினைவூட்டினர். இரண்டு சிறைகளை எழுப்பும் உடல் போல இரு வகை அறநிலைகளை இடைநின்று செயற்படுத்தும்நிலை. இரண்டும் ஒக்கவே செயல்படும். இரு சிறகுகளும் ஒன்றுகவே செயல்படும். செயல்களால், அறத்தால் உயர்நிலையெய்துதல் உண்டு. ஆதலின் பறந்து உயர்ந்து செல்லும் புள்ளினை அதுஒத்தது. உலக வழக்கில்,

புண்ணியபாவம் என்று சொல்வதுண்டு. பாவத்துக்கு எதிர்ச் சொல்லாகப் புண்ணியத்தை அமைப்பதுண்டு. புண்ணியம் என்ற சொல்லுக்கு எதிர்ச்சொல்லாகப் பாவம் என்ற சொல்லோ கருத்தோ அமைய முடியாது. புண்ணியம் என்பதற்கு முரண்சொல் இல்லை. பாவம் தீவினை என்பவை புண்ணியத்துக்கு எதிர்நிலையில் நின்ற முரண் அல்ல என்பதையும் உணர்தல் வேண்டும்.

புள் நியமத்தையுடைய செயல் புண்ணியம் என்ற கருத்தைத் திருநாரையூர்த் திருத்தலத்துப் பதிகத்தில் திருஞானசம்பந்தர் விளக்கிக் காட்டுவது கொண்டு உணர்தல் வேண்டும்.

"தீயுற வாய ஆக்கை யதுபற்றி வாழும் வினைசெற்ற
உற்ற உலகின்
தாயுறு தன்மையான தலைவன் தன் நாமம்"

என்றும்,

"தனம் வரும் நன்மையாகும் தகுதிக் குழந்து
வருந்திக் குழன்ற உட்லின்
இனம் வளர் ஐவர் செய்யும் வினையங்கள் செற்று
நினைவொன்று சிந்தை பெருகும்"

என்றும், அறச்செயல்களை, அவற்றின் விளைவுகளை எடுத்துக் காட்டித் திருநாரையூர் சென்று தொழுமின்கள் என்றார். எனவே, நாரை என்ற புள்ளின் நியமம் — புண்ணியம் நிகழும் திருநாரையூர் அறவினைகளை வகுத்து நிற்கும் தலமாயிற்று என உணர்தல் வேண்டும். அத்திருப்பதிகம் முழுவதிலும் மனம், வாக்கு, காயம், உயிர் ஆகிய இவைகளின் செயலால் வருகின்ற குற்றங்களை விளக்கி, அதன் திருக்கடைக் காப்பினுள்

"எரியொரு வண்ணமாய உருவாணை எந்தை
பெருமானை உள்கி நைவார்
திரிபுரம் அன்று செற்ற சிவன் மேய
செல்வத் திருநாரையூர் கை தொழுவான்
பொருபுனல் சூழ்ந்த காழி மறை ஞானசம்
பந்தன் உரைமாலை பத்தும் மொழிவார்
திருவளர் செம்மையாகி அருள் பேறு மிக்கது
உளதென்பர் செம்மையினரே"

என்று, செம்மை, திருவளர் செம்மை, அருள்பேறு மிகுந்தநிலை என்று கூறப்பெறுபவைகளை இணைத்துக் காண வேண்டும். இதனுடன் அப்பரடிகளின்

"திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக்கரசன்தன் அடியார்க்கும் அடியேன்"

என்று அருளிய சுந்தரரின் அறிமுகவுரையையும் இணைத்துக் காண வேண்டும்.

எனவே, புண்ணியன் என்ற சொல்லாட்சி நல்வினை செய்பவன் அல்லது காரணமானவன் என்று பொருள் கொள்ள இடந்தராத

ஒன்று. அறத்தின் இருவகைச் செயற்பாடுகளை இடைநின்று இயக்கும் செம்மையனும் நீலி. இதனையே "அந்திநிருத்தன்" என்பது சமயவழிப் பட்ட சொல்லாட்சி. "இரவொடு பகலதாம்" எம்மான் என்பது அற நிலையே. அம்மையப்பனும் நிலையே. இரவு பகல் என்ற இரண்டும் இணைந்து ஒருநாள் ஆயினுற்போல, இருநிலைகளைக் கொண்டது அறம். ஒன்றன் இறுதியும் மற்றதன் முதலும் இணைகின்ற காலத்தில்தான், இரண்டையும் இணைக்கும் அடிப்படை ஆற்றலை உணர முடியும். ஒன்றன் இறுதியையும் மற்றதன் முதலையும் இணைப்பதே அந்தி என்னும் ஆற்றல். இங்கே, 'காரணன்' என்ற நிலை உணர்த்தப்பெறுகிறது. பகல்போகிறது, இரவு வருகிறது. பகல் போவது இரவு வருவதற்குக் காரணமன்று. ஆனால், இரண்டும் இணைந்து வருகிற நிலையை நாம் பார்க்கிறோம். இரண்டும் ஒன்றை ஒன்று பற்றிவிடாதது; இரண்டும்இணைந்தே இருக்கும் என இரண்டன் இணைப்பை அறிய வேண்டும் என வலியுறுத்துவது அறிவாராய்ச்சி நிலை. இந்த இரண்டும் தனித்தனி நிலையில் ஒன்று மற்றதைச் செயற்படுத்தும் ஆற்றலோ, செயற்படும் ஆற்றலோ இல்லாதவை. இவற்றை இணைத்துச் செயற்படுத்துவது வேறொன்று என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என வற்புறுத்துவது தமிழ்நெறி. பகலுக்கு முடிவையும் இரவுக்குத் தொடக்கத்தையும் அமைத்து இடைநிற்பது வேறு ஒன்று. அதுவே அந்தமாய் ஆதியாய ஒன்று. அந்தம் ஆதி என்பதே அந்தாதி எனநின்று, பின்மருவி அந்தி என்றுயிற்று. சந்தி, சங்கமம் என்பவை தமிழ் மரபன்று. பகலும் இரவும் சந்திக்கும் நேரம் என்பது காலம் பற்றிய அறிவின்மையின் வருவது. சங்கமம் என்பது இரண்டும் கலந்ததநிலை. ஆனால், இங்கே, இரண்டையும் இணைய வைக்கும், இணைத்துவைக்கும் மூன்றாவது ஒன்று சிறிதே வெளிப்பட நின்றதநிலை.

எனவே, அந்தம் ஆதியில் செய்யும் வணக்கம் காலத்தைவணங்கியதன்று; காலங் கடந்ததாய், காலத்தைச் செயற்படுத்தும் முதற் பொருளை வணங்கிய வணக்கமே. இதனை,

> "ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
> ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்
> ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப"

என்ற தொல்காப்பிய நூற்பாவினைக் கொண்டு தெளியலாம். இனி, நிலமில்லாத பாலையை, நானிலங்களின் இடையில் நிறுத்தி, நானிலங்களையும் செயற்படுத்துவது எனக் கொள்ளும் முறையில் குறிஞ்சி பாலை; முல்லை பாலை; மருதப் பாலை; நெய்தல் பாலை என நிலங்களும் ஒழுக்கங்களும் அமைகின்றன. அவ்வாறே மாயோன், சேயோன், வேந்தன், வருணன் என்ற நான்கும் தெய்வங்களெனக் கொள்ளின் அவற்றின் இடையிடையே நிற்கும் ஒன்றுதான் ஒன்றி உயர்ந்த பாலாக, ஆணையாக நிற்பது, என்று கொள்வது அறிவியல் அளவை முறை.

இரவு, பகல் என்பவை கொண்டு அறியப் பெறுவது வேறொன்று. இயல், இசை என்ற இரு திறங்களை மூலமாகக் கொண்டு அறியப்

பெறுவது வேறென்று. அம்மையப்பராக நின்ற நிலை கொண்டு அறியப் பெற வேண்டியது வேறென்று. இங்கேயெல்லாம் இரண்டை வைத்து, இரண்டின் அடிப்படையில் இடைநின்ற ஒன்றை அறியும் முறை அமைக்கப் பெற்றது. இதுவே நடுவுணர்தல் எனவும் நடுநிற்றல் எனவும், இடைநிற்றல் எனவும், இடையன் எனவும் அமைக்கப் பெற்றன. நடுநிற்றல் என்பது இரண்டைச் செயற்படுத்தும் மூலமாகிய ஒன்றில் நிற்றல் — அருளில் நிற்றல். இரண்டனுள் எந்த ஒன்றில் நின்றாலும் ஒரு சார்புடையதே. இரண்டன் நடுநிற்றல் என்பது பலவாறாக இன்று பேசப் பெறுகிறது. இரண்டையும் செயற்படுத்தும் இரண்டற்கும் மூலமான ஒன்றில் நிற்றல். நடுநிற்றல் கொள்கை மேலைநாட்டில் அரிஸ்டாட்டிலாலும், இந்திய நாட்டில் புத்தராலும் அமைக்கப்பெற்றது. நீதி, அறம் என்பன இரண்டு நிலைகளில் எந்த ஒன்றையும் மிகுதியாகச் செய்யாமல், எந்த ஒன்றிலும் அதன் எல்லையில் நின்று செய்தல். இது இக்காலத்தே மிதமாகச் செய்தல் எனப்பெறும். வேண்டுதல் வேண்டாமை இன்மை, விருப்பு வெறுப்பு இன்மை என்பவைகளை யெல்லாம் இருவினை யொப்பு என்ற பெயரால் விளக்கும் போது இரண்டையும் ஒப்பச் செய்யற் படுத்துவதாய், இரண்டும் இல்லாததாய், இரண்டற்கும் மூலமாய் அமைந்த வேறு ஒன்றைச் சார்ந்து நிற்றல் என்பதே தமிழ்வழக்கு. மறைநெறியில் நடுவை, இடையை அறிவினுல் இருப்பதாக உணரத் தான் முடியும் என்பது திருஞானசம்பந்தர் கருத்து. இதனை,

> "சொன்னய முடையவர் சுருதிகள் கருதிய தொழிலினர்
> பின்னையர் நடுவுணர் பெருமையர் திருவடி பேணிட"

என்றார், புறவநகர்த் தேவாரத்தில். வேதத்தின் இருபகுதிகள் கருமகாண்டம், ஞானகாண்டம் எனப்பெறும். சொல்நயம் பேணுபவர்கள் சுருதியினுல் வன்பறை செய்யப் பெற்ற கன்மாக்களை வழுவாது செய்பவர்கள். பின்னையர் ஞான காண்டத்தை முக்கியமாகக் கொள்பவர். பின்னுள்ளவர்களே இரண்டு காண்டங்களுக்கும் நடுநின்ற மூலப் பொருளை அறிந்து கொள்ளும் நிலையுடையவர் என்றார்.

இதனை அடுத்தநிலையானது மூன்றுவதாகிய அது வெளிப்பட ஏனைய இரண்டும் அதில் தங்கிய நிலை, வளரும்நிலை. வாழும்நிலை. அதாவது நடுநின்ற அருள் வெளிப்பட, அறத்தின் இருபகுதிகளும் அதில் தங்கியிருத்தல். இதனைத் திருஞானசம்பந்தர் "செந்தமிழ் பரப்புறுநிலை" என்றார்.

> "செந்தமிழ் பரப்புறு திருப்புகலி தன்மேல்
> அந்தம் முதலாகி நடுவாய பெருமானைப்
> பந்தன் உரை செந்தமிழ்கள் பத்துமிசை கூர
> வந்த வணம் ஏத்துவர் வான முடையாரே"

என்ற திருப்புகலித்தலத்து, முன்னிய கலிப்பொருளும் என்ற தொடக்கத்தையுடைய பதிகத்திருக்கடைக் காப்பினுள், நடுவானது வெளிப்பட்டு நிற்க, அதனுள் அந்தமும் முதலும் இணைய நின்று செயற்

படுத்துதல் என்று குறிப்பிட்டார். இங்கேயும் இதனைத் தெளிவுறத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

அந்தம், முதலாகி, நடுவாதல் என்பதை முறையே அழித்தல், படைத்தல், காத்தல் எனக் கொண்டு படைத்தல், காத்தல், அழித்தல் என மூன்றாய் நின்றதுதான் இந்நிலை என்றும், காத்தலே அருள் வெளிப்பட்டநிலை என்றும் கொள்ளக் கூடாது. முத்தொழிலில் ஒரு பொருள் படைக்கப்பெற்றபின் அழியப் பெறுவதற்குமுன் வரை உள்ள காலஅளவையில் அதனைக் காத்து நிற்கும் நிலையே செந்தமிழ் என்று விளக்கம் அமைக்கலாகாது. அப்படியானால் படைப்புக்கும் அழிப்புக்கும் மூலமானது காத்தல் என்பதாக அமையும். இவ்வாறு பொருள் செய்யலாகாது என்பதை விளக்க எழுந்த கொள்கை விளக்கமே அயனும் மாலும் தமக்குள் போர் புரிந்தமை. முடிவு என்ன? அயன் தொழிலாகிய படைத்தலுக்கும் மாலின் தொழிலாகிய காத்தலுக்கும் மூலமாகிய வேறு ஒன்று உண்டு. அதனை இவ்விரண்டானும் அறிய முடியாது. ஆனால், அந்த ஒன்றில் இவை இரண்டும் இருப்பவைகளே.

இயல், இசை எனநின்ற தமிழில் உள்நின்ற அருளாற்றலே இரண்டையும் இணைக்கும் கூத்துத்திறம். அது தனித்து நிற்பதில்லை. அது அனுபவப் பெறும் ஒன்று. இன்ப அனுபவத் துய்ப்பில், அத் துய்ப்பின் வெளிப்பாடாக இயல், இசை வெளிப்படும். இவ் விரண்டே தமிழன்று; இவ்விரண்டன் மூலமாக உள்நின்ற ஒன்றன் அனுபவத்தில், அனுபவிக்கப்பெற்றஅது இயல் இசை என்ற இரண்டாக வெளிப்படும். அதனாலேயே,

> "நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும்
> ஞானசம்பந்தனே"

என்று பாராட்டினார் சுந்தரர் பெருமான். இயலும், இசையும் மூலமாக நிற்க அனுபவிக்கப் பெறுவது வேறு ஒன்று என நினைறு, அவ் வனுபவத்தில் வெளிப்படும் தமிழ் இயலாகவும் இசையாகவும் வெளிப்படும்.

நடுவாக நின்றது வெளிப்படும் போது நட்டம்-கூத்து நிகழும். அதுதான் மழுவாடு நட்டம். அது மானிக்கத் தூணாக, வயிரத் தூணாக, தழற்கொத்தாக நிற்கும். அதுதான் தாணு. கலங்காது தன் னளவில் தனித்து நிற்பது. அம்மையப்பர் என்ற இருநிலை அமைப்புக் குரிய மூலத் தோற்றம். மாணிக்கத் தூணாக நின்ற மூல முழுமுதல் நிலையானது தன்னளவில் மிகவும் தூய்தாம்நிலை; சார்ந்து நிற்கும் பொருளையும் தூய்மையாக்கி விடும். அதுவே தழலுரு நிலை. எரி யாடும் நிலை என்பர். அதுவே அந்திநிருத்தம் எனப்பெறும். தழ லுருவே ஆடிக் கொண்டிருப்பதாகவே அமைவது. அது இயல்பாய நிலையே. அம்மையப்பர், விதித்தன செய்தல், விலக்கிய ஒழிதல், இரவு பகல், கர்மகாண்டம் ஞானகாண்டம், ஒன்றே வேறே என்றிரு பால் என இரண்டிரண்டாய் நிற்பவை அந்த ஒரு மூலத் தழலுருவில்

சார்ந்துநிற்பலை. அப்போது,அம்மையப்பர் போன்றநிலைகள் தழலுரு வில் புகலிடம் பெற்றன. பின்னர் அம்மையப்பர் வெளிப்பட நின்ற காலத்தில் மூலத்தழலுரு அம்மையப்பரிடத்தில் புகலிடம் பெற்றி ருந்தது. எனவே, இரண்டு நிலைகளும் 'புகலி' நிலைகளே. இவ்வாறு அமைந்த இணைப்புகளைத் திருமழபாடித் திருப்பதிகத்தில் குறிப்பிடு கின்றார், திருஞானசம்பந்தர்.

மழு ஆடிய இடம் மழுவாடி, மழபாடி ஆயிற்று. இங்கே ஏனைய இருநிலைகளை ஒடுக்கியிருக்கும் செயல் பேசப் பெறுகிறது. அவ்வள வில்

> "அந்தணர் வேள்வியும் அருமறைத் துழனியும்
> செந்தமிழ்க் கீதமும் சீரிஞல் வளர்தரப்
> பந்தணை மெல்விர லாளொடும் பயில்விடம்
> மந்தம் வந்துலவு சீர் மாமழ பாடியே"

என்று பதிகம் பாடிக் காட்டும் சம்பந்தர், அருள்நிலை தனித்து நின்ற நிலை, தழல் தொகுதி, தாணு, வயிரத்தூண் என அது தனித்து நின்ற நிலையை எடுத்துக் காட்டி, அது செயற்படும் ஆற்றினைப் பழுவூரில் அமைக்கின்றார். அங்கே,

> எண்ணும் ஓர் எழுத்தும் இசையின் கிளவி தேர்வார்
> கண்ணும் முதலாய கடவுட்கு இடம்

என்ற பழுவூர்ப் பதிகத்து நாலாந் தேவாரத்தில், எண்ணும் ஓர் எழுத்து என்பது இயலையும், இசையின் கிளவி என்பது இசையையும் குறித்தன. இங்கே, இறைவனை அறியப் பெறும் முறையும் அனுப விக்கப் பெறும் முறையும் பேசப் பெறுகின்றன.

மறை என்பது வெளிப்பட நின்ற இருபிரிவுகளுக்கு மூலமாக நின்ற ஒன்று; வெளிப்பட நின்ற இரண்டையும் கடந்தது ஆதலின் மறை எனப்பெற்றது. அதனை அறிதல் முறை ஒன்று. அதனை வெளிப் படுத்தித் துய்க்கும் முறை வேறு ஒன்று. நடுவினை உணர்ந்து அதனை அறிகின்றவர்கள் மறைவல்லார், மறையுணர்ந்தார் எனப் பெறுவர். அதனைத் துய்த்தவர்கள் தமிழ்வல்லார். அவர்கள் அந்தணர்கள். அந்தணர்கள் அப்பொருளைத் துய்த்தமையினுல் ஆணைமூலம் நிறை மொழி அருளுவார்கள். நிறைமொழிகளாம் மறைமொழிகளை வல்லவர்கள் மறைவல்லார்கள் எனப்பெறுவர்.

திருப்பழுவூர்த் திருப்பதிகத்தின் நாலாந் தேவாரத்தினுள்

> "மண்ணின் மிசை யாடி மலையாளர் தொழுதேத்த
> பண்ணினுல் ஒலி கொண்டு பயில்கின்ற பழுவூரே"

என்றும், ஐந்தாம் தேவாரத்தினுள்,

> "வேதமொழி சொல்லி மறையாளர் இறைவன் தன்
> பாதமவை ஏத்த நிகழ்கின்ற பழுவூரே"

என்றும், திருக்கடைக் காப்பினுள்,

"அந்தணர்களான மலையாளரவ ரேத்தும்
பந்த மலிகின்ற பழுவூரனே"

என்றும் குறிப்பிட்டருளுகின்றார்.

இங்கே இரண்டிடங்களில் வரும் 'மலையாளர்' என்பதற்கு மலை யாள நாட்டவர்கள் என்று உரை காணப் பெற்றது பொருந்தாது.

மலையாளர் எனப் பெறுபவர் ஆடிப்பாடி வணங்கும் தன்மை யுடையவர். முல்லை நிலத்தவர்கள் கண்ணனை நோக்கி ஆடுவது போல இவர்கள் மலைவாழ் மக்களென உருவமைத்துக் கொண்டு குறிஞ்சிப்பண் பாடி ஏத்துவர். பந்தம் விளையுமாறு ஆடுவர். மலையாளர் என்பார் மண்ணின் மிசை ஆடி, ஏத்தி, பண்ணினுல் பணி கின்றார். அந்தணர்களான மலையாளர் அவர் ஏத்தும் பந்தம் என்றும் கூறப்பட்டவை, பெருமானைத் துய்த்துத்துய்த்து, துய்ப்பு வலிமை யால் ஏத்தி, பின் அதே துய்ப்பு அவர்களைப் பண் இசைப்பவர்களாக ஆக்குகின்றது. அதனுல், அந்தணர்களானார்கள். அந்தணர்கள் என்போர் இறைவனைத் துய்த்தவர்கள்(மலையானது-துய்ப்புக்கு-இன்ப ஆக்கத்திற்கு அடையாளம்). மலையாளர் என்போர் குறிஞ்சியாய் நின்று துய்த்துக் குறிஞ்சிப்பண் மிழற்றுகின்றார்கள். ஆனுல், மறை யாளர் அப்பெருமானை அறிபவர்கள் ஆகையால் வேதமொழி சொல்லி மறையாளர் இறைவனை, அவன் பாதத்தினை ஏத்துகிறார்கள் எனப் பிரிவுபடுத்திக் காட்டினர்.

எனவே, 'தழல்' என நின்ற நிலையில், வயிரத்தூணாக நின்ற நிலை யில், அயனும் அரியும், அம்மையப்பனும் ஆகிய அனைத்து நிலை களும் அதனைப் புகலிடமாகக் கொண்டன. அம்மையப்பர் திரு வுருவம் புகலிக்கு வரும்போது அது திருவருள் நிலை எனப்பெறும் மூல நிலையை விளக்கிக் கொண்டு தமிழென வந்து புகுந்தது. அதனுல் சீகாழிக்குப் புகலி என்ற பெயர் வந்தது. எனவே, புகலிக்கு வந்த போது, அருளும் வெளிப்பட நிற்க, ஏனைய இரண்டும் அதனுடன் இணைந்து நிற்க வந்த கோலம் என்பதை உணர்த்தவே "ஈச என் நேச" என்ற அருள்நிலைச் சொல்லை அமைத்துக் காட்டினர் எனக் கொள்க. "நேச" என்பதன் நுட்பம் திருநெய்த் தானத் திருப்பதிகத் தில் விளக்கப் பெறும் செய்தியாகும். ஈண்டு விரிப்பிற் பெருகும்.

இனி, அம்மையப்பர் திருக்கோலம் இரண்டு அமைப்புகளில் பேசப் பெறுகின்றன. ஒன்று தோணியில் இருந்த கோலம். இரண் டாவது புகலிக் கோலம். ஓம் எனும் பிரணவம் தோணியாக, ஐந்தெழுத்தின் நிலைசார் அம்மையும் அப்பனும் வந்து, சீகாழியில் தோணிபுரத்து அப்பனும் அம்மையுமாக அமைகிறார்கள். பிரண வத்துக்கு இடையில் இருந்த கோலம். பிரணவத்துக்கு நடுவண் இருந்தது என இறையின் நடுவணது உணர்வார் என்ற வகையில் ஞானசம்பந்தரால் அறிவதற்கு உரிய நிலைக்களமாக இருந்த அம்மை யப்பராம் வடிவம்; இது முதல்நிலை. பின்னர்,

உருகிட உவகை தந்து, என் உடலின் உள்ளால் பருகிடும் அமுதனே, பொருகடல் வண்ணனும் பூவுளானும் பெருகிடும் அரு ளென விளங்கும் ஒள்ளெரியாய், நீ உயர்ந்தாய், என்னை உன் ஒள்ளிய மலரடியின்கீழ் வெற்றியைத் தாங்கிக்கொள்ளுமாறு, இன்பத்தை நல்கி, என்னை வளர வைக்கின்ற புகலியானே, இப்புகலி யில் நிலன் ஆள்தொறும் இன்புற நிறைமதி பெற அருளியவனே, புகலிப் பொருள் சேர்தர நாள்தொறும் புவிமிசைப் பொலிந்தவனே, என்று சொல்லி, திருக்கடைக் காப்பினுள், ஆங்கு அமர்வு எய்திய ஆதியாக இசைவல்லவர் உண்மையின்பம் பெறுவர் எனக் குறிப் பிட்டு, தான் நுகர்ந்த தமிழ் மூலம், புகலிப் பெருமானைப்

"பெண்ணினின் நல்லாளொடும் வீற்றிருந்த பெருமானே"

என்று கூறியதோடன்றி,

"பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை யிருந்ததே"

என்றும்,

"போதையார் பொற்கிண்ணத் தடிசில் பொல்வாதெனத்
தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்"

என்றும் வெளிப்படுத்தி, இறைவியையும் இறைவனையும் திருவருளில் அமைத்துத் துய்த்த காரணத்தால்,

"சிற்றிடைப் பேரல்குல் திருந்திழை யவளொடும்
பெற்று என்னையாளுடைப் பெருந்தகை"

என்றும்,

"நிறைவளை முன்கையாள் நேரிழையவளொடும்
பிறைவளர் சடைமுடிப் பெருந்தகை"

என்றும்,

"பெருக்கு நீரவளொடும் பெருந்தகை"

என்றும்,

"பேரறத் தாளொடும் பெருந்தகை"

என்றும், கூறுவதன் வேறுபாடு தெரிந்துணர்ந்து கொள்க. திருஞான சம்பந்தப் பெருமான் அமுதென எனக்கு இனித்தவன் என அனுபவ நிலையிற் கூறியபின் அமைக்கும் கோலமே பெண்ணின் நல்லா ளொடும் பெருந்தகையிருந்தது என்ற கோலம்.

இதனைத் திருஞானசம்பந்தர் வேறேர் ஆற்றலும் புலப்படுத்து கிறார். பெண்ணுரு ஆணுரு அல்லாப் பிரமபுரத்து அண்ணல் நிலை. இது முதலாவது. "பெண் தான் மிக நின்றான்" என்று பெண்மையை மிகுவித்துத் தோன்றிய நிலை வேணுபுரம். புகலியில் ஆண்மை பெண்மை என்ற இரண்டின் மூலமாய நடுநின்ற பொருளைத் துய்த்த

நிலையில், பெண்மை பெருக்கு நீரவ்ளாக, ஆண்மை பெருந்தகையாக நின்றதைப் புகலியில் வேறுபடுத்திக் காட்டுகிறார். மிழலையில் இக் கோலத்தை விளக்கும் நிலையில் "ஏக பெருந்தகையாய பெம்மான்" என்று குறிப்பிடும் கருத்து, மூலமாக, ஏகமாக நின்ற அருளே வெளிப் பட்டு,பெண்மையையும் ஆண்மையையும் தன்னுடன் இணைத்து நிற் கிறது என்ற அருளனுபவ இன்ப மூர்த்தமே புகலி நிலாவும் புண்ணி யன் என்பதாயிற்று.

திருஞானசம்பந்தருக்குக் காணும் நிலையில் தோணியில் நின்ற அம்மையப்பரும், பேணும் நிலையில் தமிழெனநின்று அருளைத் துய்த்த நிலையில் புகலி நிலாவும் புண்ணியனுக, ஏக பெருந்தகையாக நின்ற அருளனுபவ இன்பப் பேற்றுக் கோலமாகிய பெருக்கு நீரவ ளொடும் பெருந்தகையும் பீடுடன் இருந்த கோலம் காட்சிப் பொரு ளாயிற்று எனக் கொள்க.

காழிக் காட்சியின் விளைவு

பெண்ணின் நல்லாளொடு பெருந்தகை இருந்தது என்பதாக அமைந்த மூர்த்தமே அருளின்பத் துய்ப்புக்குரியது. உருகிட உவகை தந்து உடலின் உள்ளால் பருகிடும் அமுதென நின்று அருளனுப வத்தை உண்டாக்குவது. அவ்வடிவமே அருளெனப் பெருகுவதும் ஒளியுடன் விளங்குவதும், எரியாய் உயர்வதும் ஆகிய நிலைகளையுடை யது. அருளனுபவத்தைத் துய்ப்புப் பொருளாக்கும் அவ்வடிவம் தமக்குப் புகலியில் காட்சிப்பொருளாகும் போது, உயர்ந்தார் பெருங் கோயிலுள் வெள்ளேற்றின்மேல் நிமிர்ந்து, பெருமை பெற ஒருங்கு உடன் இருந்த நிலையையும் உளங்கொள்கிறார்.

மேலே குறிப்பிடப் பெற்றவாறு தம்முடைய அருளனுபவ இன்பியற் காட்சிக்குரிய மூர்த்தம் அமைந்திருந்தது என்பதை "இயலிசை" எனத் தொடங்கும் நாலடி மேல் வைப்புத் திருப்பதிகத் துள் விளக்கிக் காட்டுகிறார். இது எத்தவத்தோர்க்கும் இலக்காய் நின்ற பெருமைக் கோலம். இக்கோலம் அமையும் முறையும் திருஞான சம்பந்தரால் விளக்கப் பெறுகிறது.

1. விதியாய் விளைவாய் விளைவின் பயனுய் நிற்பது என்பதன்றி அருளனுபவம் நிகழ்த்துவது
2. தன்னுல் உறைவாவது.
3. மண்ளனுய் நின்று புனிதம் வளர்ப்பது.
4. அழகினுல் இயலால் உறைவது.
5. நான் என்ற இடத்தில் தாம் என்பது உறைவதாகும் நா தான் உறையும் இடம்
6. மூன்று மதில்களை நெருப்பால் அழித்தபோதும், கடல்நஞ்சை ஏற்றபோதும் பிரமன் தலைகளில் ஒன்றை அறுத்தபோதும்

எந்த ஒன்றை அடிப்படையாகக் கொண்டு செய்தானோ அந்த அருளைப் பொலிய வைக்கும் இடம்.

7. புனலும் பூவும் சொரிந்து தொண்டர்கள் தோத்திரம் சொல்ல அதனால் இராவணன் வலியழித்த ஆண்மையை எடுத்துக் காட்டிப் பொலிவு பெற்ற இடம்.

இத்தகைய நிலையில் அருளனுபவமாக அதனைத் துய்த்து அமுதமென இன்புறும் நிலையில் காட்சிப்படும் மூர்த்தமே தாம் புகலியில் பெற்ற இன்பநிலை. தாம் சீகாழியிற்கண்டு இன்புற்ற அதே கோலத்தைப் பிற பதிகளிலும் கண்டு வணங்க வேண்டும் என்பது சுவாமிகளின் தலவழிபாடு பற்றிய கொள்கையாதலின், பதிகள் தோறும் திருஞானசம்பந்தர் அருளனுபவம் அளிக்கக் கூடிய மூர்த்தங்களைக் கண்டு, அத்தகைய அனுபவத்துய்ப்பு அமையும் நிலையில் பதிகம் பாட வேண்டும். அப்போதுதான் அப்பதிகங்கள் பல நூற்றாண்டுகள் கழித்த பிறகும் மக்கள் பாடும்போது அவர் பெற்ற அதே அனுபவத்தைத் தரவல்லதாகும். இத்தகைய கொள்கையுடன் பிற தலங்களுக்குச் செல்லும்போது அருளனுபவ மூர்த்த அனுபவம் அமைகிறது. சிலதலங்களில் அறிவியல் அனுபவத்துக்குரிய, தொண்டுநெறியில் மலர்ந்த மூர்த்தங்களே அனுபவப்பேற்றுக் குரியனவாகின்றன.

திருக்கோயில்களில் கருவறைத் திருமேனி இலிங்கத்திருமேனி. எழுந்தருளிப்பாட்டுத் திருமேனிகளில் திங்கள் சூடியிருத்தல் மான் மழுவேந்தியிருத்தல் ஆகியவை அமைக்கப்பெற்றிருக்கும். அவைகள் பெருமானின் வீரவரலாற்றைக் கூறுவதாகவும் அமையலாம்; வீரம் விளைவிப்பதற்கு மூலமான அருள்விளக்கம் அமைக்கும் மூர்த்தங்களாகவும் அமையலாம்.

திருக்கோயிலில் குடியுரிமையுடையவர்கள் தொண்டுநிலை பேணும்முறைசிறக்கும்போது, அதன் அடிப்படையில் திருத் தொண்டுநெறி மலரும். தொண்டுநிலை சிறவாதபோது அங்குள்ள திருமேனிகள் அருமையால் அறியக் கூடியனவாக, பெருமைபெறப் பேசுதற்குரியனவாக அமையும். அறிவியல் சார்ந்த விளக்கம் அமைதற்குரிய இடமாக அத்தலம் அமையுமேயன்றி, அருள்நிகு திருக் கோயில்களாக, அருளனுபவம் வழங்கப் பெறுபவைகளாக இரா. அங்கெல்லாம் திருஞானசம்பந்தர் திருப்பதிகம்பாடுங்கால் அமையும் அனுபவம் உயிரனுபவமாகிய அறிவியல் அனுபவமே. அத்தகைய பதிகளிலெல்லாம் திருஞானசம்பந்தர் சில நாட்கள் தங்கியிருந்து தொண்டர்களைக் கொண்டு தொண்டுநெறியை முதிரச் செய்ய வேண்டும். தாமும் திருநீலகண்டத்து மூலஒலியெனப்பெறும் பரநாத ஒலியின் துணைக்கொண்டு பலபதிகங்கள் பாடவேண்டும். அறிவியல் அனுபவத்துக்குரிய மூலமாயிருந்த திருக்கோவில்கள் அருளனுபவம் எனப்பெறும் திருத்தொண்டு நெறிக்குரிய பயன் விளைக்கும் அருள் நிலையங்களாக மாற்றப்பெற வேண்டும். அந்நிலையில்

அருள் மூர்த்தங்களாக அமைந்த திருமேனிகளின் முன்நின்று, அருளனுபவம் பெற்றுப் பாடினால்தான், அப்பதிகம் பின்வரும் மக்களுக்கு அருளனுபவம் கொடுத்து வாழ்விக்க வல்லதாகும். இத்தகைய அடிப்படையில் புகலிப்புண்ணியனுகத் தம் பதியில் தொழுத பிராணை அவ்வாறே பிறபதிகளிலும் சென்றுகும்பிடுதல் என்ற கொள்கையை வகுத்துக் கொண்டார் திருஞானசம்பந்தர். அறிவியல் அனுபவம் — உயிரனுபவம் என்பதைத் தொண்டுநெறிதரும் அனுபவமாக மலரவைக்கும் பதிகளிருப்பின் அங்கெல்லாம் அருளனுபவம் — திருத்தொண்டு நெறி அனுபவம் மலரவைக்கும் அருள்நிலையமாக அவைகளை மாற்றும் நிலையில் அங்குள்ள திருத்தொண்டர்களைக் கொண்டு பணியாற்ற வேண்டும். அருள்நிலையை மலரவைக்கும் திருநீலகண்ட ஒலிதவழும் பதிகங்கள் பல பாடுதல் வேண்டும். இவ்வாறு அத்திருத்தலம் அருள் நிலையமாக மாறும் வரையில் அங்கே தங்கித் தொண்டாற்றி, பின் அருளனுபவப் பேறு பெற்று, பதிகம்பாடி, பின்வரும் மரபில் உள்ளோருக்காக வழங்க வேண்டிய திருத்தொண்டை அவர் மேற்கொண்ட யாத்திரையின் உட்கோள். காழி மூர்த்தக் காட்சி கிடைத்ததும் காழிக்குச் சென்று அருளனுபவ மூர்த்தங்கண்டு வழிபடுதலேவிட, பிறபதிகளிலும் காழி மூர்த்தம் காணுமாறு, அருளனுபவப் பேற்றினை எய்துவிக்கும் அருள் மூர்த்தம் வளம்பெறும் வரையில் அங்கே நின்று தொண்டாற்றி, முடிவில், அத்தகைய அருளனுபவப்பேறு பெறுதலும் திருப்பதிகம் அருளலுமே தாம் செய்யவேண்டிய திருத்தொண்டு ஆதலின், திருத்தொண்டு நெறியின் குறிக்கோளை உணர்ந்து, காழிச் செலவைக் கைவிடலானர். இவ்வகையில் சராசரங்களில் எல்லாம் சிவம்பெருக்கும் திருத்தொண்டினை மேற்கொள்வாராயினர். இதன் பெருமையுணர்ந்த காரணத்தாலேயே நம்பியாண்டார் நம்பிகள்,

"ஆறதேறும் சடையான் அருள்மேவ
வீறதேறும் தமிழால் வழிகண்டவன்"

என்று குறிப்பிட்டுப் பாராட்டுவாராயினர்.

ஆய்வியல் நோக்கில் திருஞானசம்பந்தர்

சிவஞானந்தரும் ஞானப்பால் அருந்திய நிலையில் பதிகம் பாடும் வன்மைபெற்றமையால், செல்லும் இடங்களிலெல்லாம் பதிகம் பாடியும் வழிபாடு செய்தும் சென்றார் என்று வரலாற்றை அமைத்துக் கொள்ளும் பொதுநோக்கு நெறியில் திருஞானசம்பந்தரைக் காணுதல் ஆகாது.

திருஞானசம்பந்தர் எல்லாப் பொருள்களிலும் சிவம் பெருகவும் அருளியலனுபவம் மலரவும் திட்டமிட்டுத் திருத்தொண்டு நெறியை வளர்க்கும் பணிமேற்கொண்டு இயங்கியும் இயக்கியும் வாழ்ந்த அருள்நெறிச் செயற்பெருந்தகை. தம் காலத்துக்குப் பிறகும் உலகில் வாழும் மரபினர்க்கு அருளியலனுபவம் விளைவிப்பதற்குரிய வழிமுறைகளை ஆய்ந்து செயற்படுத்திச் சென்றவர். எந்த ஒரு செயலையும் குறிக்கோளுடன் அமைத்துச் செய்தவர்.

திருத்தலங்களுக்குச் சென்றதும் அங்கங்கே யார் யார் பூசித்துப் பேறு பெற்றார்கள் என்பதை அவ்வூர்ப் புராணவாயிலால் அறிவார். அவர்கள் பூசித்துப் பேறுபெற்றிருக்கலாம். அங்குள்ள வழிபாட்டுத் திருமூர்த்தம் தொண்டுநெறியால் மலர்ந்துள்ளதா? திருத்தொண்டு நெறியை—அருளனுபவநெறியை மலர்விக்கும் நிலையில் அதனைத் தொண்டுமூலம் (பூவும் புனலும் சொரிதலும் ஏத்தித்துதித்துப்பாடு தலும்) அருள் நிலையமாக வளர்த்தவர்கள் யாரும் இருந்திருக்கிறார் களா? என்று காண்பதே அவர்தம் முதற்பணி. சூரங்காடு துறையில் சென்று "வாலியார் வழிபடத் தானெனை ஆண்டவன்" என்று சூரங்கு தொண்டு செய்த வரலாற்றைப் புகழ்ந்து பேசிய திருஞானசம்பந்தர், தொண்டு நெறியை வளர்க்காத நிலையில் எவ்வளவு பேர் பூசித்துப் பேறு பெற்றிருந்தாலும் அவைகளைத் திருப்பதிகத்தில் அமைப்ப தில்லை. வாலியார் என்ற சூரங்கு ஒன்று, நாரை ஒன்று வழிபட, நான் இன்று ஆட்கொள்ளப்பெறும் பேறுபெறுகிறேன்; நாரையின் தொண்டுதான் திருநாரையூரைத் திருவருள் நிலையமாக மலர்வித்தது; குடத்தால் புனல் சொரிந்தும் மலர்தூவியும் தொண்டு நெறியில் நின்றவர்களால் தான்—தொண்டினுல்தான் திருக்கோயில் திருவருள் நிலையமாக மாறும்; திருவருளனுபவத்தை உயிர்களுக்கு வழங்கும். என்று கூறுகிறார். தொண்டு நெறியிற் குடங்களில் தண்ணீர் நிரப்பி எடுத்துச்சென்று அன்பால் அதனை அவனுக்குப் பொழிந்தால் திரு வருள் வலம்பெறும். அதற்குப்பதில் குடங்களில் தண்ணீர் நிரப்பி மந்திரத்தால் சிறப்பித்துக்கூறி; மந்திர நன்னீராக்கிக் கொண்டு போய்த் திருமுழுக்காட்டினுல், குடமுழுக்குப் பெருவிழா அமைய லாம், திருவருள் நிலையமாக மாறுது. மங்கையர்க்கரசியும் குலச்சிறை யும் ஆகிய இரண்டே தொண்டர்கள் தொண்டு செய்ததால், திருஞான சம்பந்தர் வந்து பணிவதற்கொத்த அருள் நிலையமாக வளர்ச்சி யுற்றது மதுரை.

நாடுமுழுவதும் சமண்சேர் துறையில் சென்றுவிட்டகாலத்தும் திருவருள் நிலையமாக இருந்த பண்பில் மதுரைத் திருக்கோயில் சோர்வு பெறுதிருந்தமைக்குக் காரணம் இருவர் செய்த தொண்டு நெறியே. திருவருள் நெறியை மலர்வித்தல் என்ற பணியில் மங்கையர்க்கரசியார் காலத்துக்கு முன்னே, அவர் காலத்திலோ குறைவு நேரவில்லை. திருவருளனுபவம் தரும் அருளனுபவ மலர்ச்சியை உயிர்களுக்கு எய்துவிக்கும் அருள் மூர்த்தமாகவே— அருள் நிலையமாகவே மதுரைத் திருக்கோயில் இருந்துவந்தது. காரணம் என்ன? இந்திரன் வழிபட்டதால் அன்று. மங்கையர்க்கரசி யும் குலச்சிறையும் தொண்டு செய்து வழிபட்டதாலேயே. திரு வருளில் தளர்ச்சி இல்லை என்பது எவ்வாறு தெரிகிறது?

"சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும்
இனிஎதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப் பெற்ற பேரிதனுல்
எற்றைக்குந் திருவருளுடையோம்"

என்ற சேக்கிழார் வாக்கினை உன்னுக.

புறவமும் மிழலையும்

காழிப்பதியில் புகலிநிலாவும் புண்ணியனைக் கண்டவாறே, அவனைப் பிறபதிகளிலும் கண்டு வணங்க வேண்டும் என்ற குறிக் கோளுடன் திருக்கோயில் வழிபாட்டுச் செலவை மேற்கொண்ட திரு ஞானசம்பந்தர் திருவீழிமிழலையிலேயே திருநாவுக்கரசருடன் பன் னாட்கள் தங்குகிறார்கள். சைவசித்தாந்த சாத்திர நுட்பங்கள் ததும்பி நிற்கும் பதிகங்கள் பலவற்றைத் திருவீழிமிழலையில்தான் அருளிச் செய்துள்ளார்கள்.

திருப்பதிக அமைப்பினுள் எட்டாவது பாட்டு இராவணனை அடர்த்தது. ஒன்பதாவது திருப்பாட்டு அயனும்மாலும் அறியா அழலாய் நின்றது. இறைதிருவடிக்கு உரிமையுடைமை தெரிந்தும் அடிமைஎன ஆக்காமைக்கு உரிய காரணமாக இந்நிலவுலகில் செயற் படுபவர்களைக் கடிந்து கூறுவது பத்தாவது திருப்பாட்டு. பதினொன்று வது திருக்கடைக் காப்பு என அமைவது. இவற்றுள் இராவணனை அடர்த்தது என்பது தொண்டின் பெருமையை உணர்த்துவது.

> 'தொழிலால் மிகு தொண்டர்கள் தோத்திரம் சொல்ல
> எழிலார் வரையால் அன்று அரக்கனைச் செற்ற
> கழலான்'

எனத் திருப்புகலித் திருப்பதிகத்துள் (விதியாய் என்று தொடங்கு வது) கூறுவதை நோக்குக. தொண்டுநெறியில் பூவும் புனலும் சொரிந்ததொண்டர்களின் செயலும்அவர்கள் பாடும் ஏத்தொலியுமே இராவணனை வென்றதன் காரணம் என்பதால், இராவணன இழிவு படுத்தும் முறையில் பதிகந்தோறும் எடுத்தாளவில்லை. இறைவன் இராவணனை அடர்த்தது அட்ட வீரட்டச் செயல்களுள் ஒன்றன்று. அவன் சொந்த ஆற்றலாலும் இராவணனை ஈடழிக்கவில்லை. திரு வடிப் பெருவிரலால் ஊன்றி அடர்த்தது. அத்திருவடியிற் சொரிந்த பூவும் புனலும் தந்த பெருமை என அவற்றின் புகழ் அமைத்துச் சிறப்பித்துக் காட்ட வந்தது.

ஒன்பதாவது திருப்பாட்டில் அயன், அரி இருவரின் இடையில் தோன்றும் திருவருட் பேருரு. அனலெரியாய்த் திருவருள் நிலை வெளிப்பட்டுத் தன்னை உலகில் நிலைநிறுத்திய அருட்செயல். இரு வேறுபட்ட பொருள்களின் இடையில் நின்ற அருள்நிலையை முதலில் வெளிப்படத் தோன்றுமாறு — வெளிப்பட்டு நிற்குமாறு செய்வதற் காகப் பாடப்பெறும் குறிக்கோளைக் கொண்டது. இதனைத் திருப் புறவத் திருப்பதிகங்களுள், 'எய்யாவென்றி' என்று தொடங்கும் பதி கத்து இரண்டாந்தேவாரத்தில்,

> ''மாதொரு பாலும் மாலொருபாலும் மகிழ்கின்ற
> நாதன்''

என்ற பகுதியில் குறிப்பிடுகின்றார். இதனை அர்த்தநாரி பாகம் எனவும் அரியர்த்த மூர்த்தம் எனவும் கொள்ளுவர். இருபத்தைந்து மாகேசுர

மூர்த்தங்களுள் இத்தகைய மூர்த்தம் இல்லை. அதுவே அருளுரு வெளிப்படும் நிலையில் அமைந்த கோலம் என்று முதன்முதற் கண்டு வெளியிட்ட பெருமை காரைக்காலம்மையாரையே சாரும்.

> "ஒருபால் உலகளந்த மாலவனும் மற்றை
> ஒருபால் உமையவளாம் என்றுரை — இருபாலும்
> நின்னுருவம் ஆகநிறம் தெரிய மாட்டேமால்
> நின்னுருவோ மின்னுருவோ நேர்த்து"

என்பது அற்புதத் திருவந்தாதி 41-ஆம் திருப்பாட்டு. இதனுள், சிவனின் இரண்டுபகுதிகளையும் இருவர் ஏற்றனர். அப்படியானால் அவன் எங்கே? இவ்விருவரும் தங்கி வாழ்வதற்கு மூலமாக நிற்கின்றான். ஒரு மின்னற் கோடு போல இடையில் இருப்பதுதான் அவன் திருவுருப்போலும் என்றார். அதே கோலத்தைத் திருஞான சம்பந்தர் திருப்புறவத் தேவாரத்தில் கூறியுள்ளார். இதுவே அருள் நிலை. அருள்நிலை என்பதைப் புறஅத்தவநிலை என்றார் திருஞானசம் பந்தர். அம்மையும் மாலும் இரு கூற்றைத் தம்மவாக் கொண்டு வாழ, அவர்களுக்கு வாழ்வும் அளித்து, அவர்களுக்குப் புறம்பாக நின்று அருளும் தவம் உடையவன். இதனையே "கேடும் ஆக்கமும் கெட்ட திரு" என்பதனுள் அமைத்துக் காணுக. திருவென நின்ற நிலையானது கேடு — ஆக்கம் என்ற இரண்டற்கும் அப்பாலாய், புறமாய் நின்றநிலை. அது முதலில் உள்ள முரண்நிலை எனப்பெறும் நிலைக்குப் புறமாக நின்றலும், இவைகளை இணைத்து நிற்கும் இடை நிலையே. இது முன்பும் 'அந்தி' என்ற சொல்லால் உணர்த்தப்பெற்றது. இரண்டையும் இணைத்து நின்றலும் இரண்டற்கும் புறமாய் நின்று செயலாற்றுகிறான்.

திருவருள் வெளிப்பட்டு நிற்பதற்குரியவாறு, திருத்தொண்டு நெறியைத் தொண்டு நெறியோடு இணையவைக்கும் நிலையில் பிரமனும் மாலும் மாறுபட்டு நிற்க எழும் பேரழலே திருவருள் நிலை எனக் காட்டும் வகையில் ஒன்பதாவது திருப்பாட்டு அமைவ தாயிற்று.

அடுத்து, சிவனைத் தலைவனாகக் கொள்ள வேண்டும் என்ற அறிவு நிலையிருந்தும் தம்மை இவன் அடியில் அடிமையாக ஆக்காமைக்குக் காரணம் ஒரு சிலர் வந்து கூறும் சில பொய்யுரைகளே. உண்மையை அடைந்து பெற வேண்டிய பேரானந்தப் பெருவாழ்வை அடைய முடியாமல் தடையை உண்டாக்குதலின் 'அவர் மொழி கேளேல்' என உலகவரை வேண்டும் முறையில் பத்தாம் திருப்பாட்டினை அமைப்பார்.

இவ்வாறு, தொட்ட இடமெல்லாம் கொள்கை மணக்கும் குறிப் புடனேயே அனைத்துச் செயல்களிலும் ஈடுபட்டுத் தம்மை ஒரு இயக்க வடிவமாகவே நிறுத்தித் திருத்தொண்டு செய்தவர் ஞானசம் பந்தர் என வரலாற்று முறையையுங்கூட, அருளால் பார்க்கும் விதியை மேற்கொள்ளல் வேண்டும்.

மிழலையிற் படிக்காசு

திருவீழிமிழலையில் திருஞானசம்பந்தர் காணக் காட்டிய திருக் கோல நிகழ்ச்சியைப் பதிகத்தின் விளக்க அடிப்படையில் அமைத் துக் கொள்ளுகிறோம். ஆனல், அது ஞானசம்பந்தப் பெருமான் வரலாற்றில் நிகழ்ந்த அருள் விளக்கச் செயலேயன்றி, மற்றவர்களே யும் உளப்படுத்திய பொதுநிலையில் நிகழ்ந்த அருளியற் செயலன்று. திருஞானசம்பந்தர் பதிகத்தின் அடிப்படையில் சேக்கிழார் அமைத்த செய்தியை உளங்கொண்ட வரலாறு. ஆனல், அது அப்பரடிகளுக் கும் தெரியக் கூடிய செய்தியாக அமைந்ததா? என்பதையும் சிந்திக்க வேண்டும்.

திருஞானசம்பந்தரோடு திருநாவுக்கரசரும் உடன் சென்று வழி பாட்டிற் கலந்திருந்தால், திருவுருவங் காட்டிய செயலை இன்னது என்று அறியாராஞர் என்று சொல்ல முடியாது. அன்றி, இன்னது என அறியவாராராயினும் ஏதோ ஒரு நிகழ்வு, புதுமை நடைபெறு கிறது என்ற அளவிலாவது உணர்தல் அப்பரடிகளுக்கு இயல்வதே என்பது கொள்ளக் கிடக்கிறது. ஆனல், இதனைக் குறித்த நிகழ்ச்சி யாக வரலாற்று விளக்கமாக யாராலும் யாண்டும் எதுவும் சுட்டப் பெறவில்லை. தனித்தனித் திருமடங்களில்தங்கியமை போன்றே,தனித் தனிப்படிகளிற் காசு வைத்தருளியமை போன்றே வழிபாடும் இரு வேறுசந்நிதிகளில் நடைபெற்றிருக்கலாம் என்றுகொள்ள இடந்தருமா எனில் இச்சிக்கலை இங்கே நாம் ஒருவகையில் தீர்த்து முடித்தல் வேண்டும்.

அறிவனுபவம் தரும் ஆற்றலுடன் மட்டுமே இணைந்து தொழிற் படும் திருக்கோயில் அருளனுபவத் துய்ப்பினை உயிர்களுக்கு வழங் கும் திருக்கோயிலாக வளர்ச்சியடைதல் வேண்டும். அதுவரை யிலும் இவ்விருவரின் பணியும் திருவீழிமிழலையில்தான். இந்நிலை யில் தொண்டு நெறியை மூற்றுகச் செய்துவளம் பெருக்கவேண்டும். அவ்வாறே திருவருள் பெருகி நிற்பான் வேண்டித் திருவருள் ஒலி கலந்த—குறிகலந்த இசையானது கூடி முழங்க வேண்டும். இவ்விரு வேறு வகையான உழைப்புகளில் திருநாவுக்கரசர் காலையில் முதலில் வந்து தொண்டு நெறியைத் தம்அடியவர்களுடன் செய்து முடித்து விடுவார். சமூகப் பணிகளையும் அவர் செய்வது தேவையான ஒன்று. இந்நிலையில் திருநாவுக்கரசர் அதிகாலையிலேயே வந்து தொண்டு நெறி பேணி வழிபாடு செய்துவிட்டுப் பிறகு சமூகப் பணிக்காக அவர் திருவீதிப் புறம்போந்து பணி செய்வார்.

திருஞானசம்பந்தர் அதிகாலையிலேயே வழிபாட்டுக்கு வர வேண்டிய அவசியம் இல்லை. தம்தந்தையார் சிவபாதவிருதயர் சீகாழிக் குளக்கரைக்குக் குளிக்கச் சென்ற காலத்து, தாமும் உடன் வர விரும்பியது, பின் சென்றது, அதன்பின் ஞானப்பாலருந்திய நிலை. ஞானப்பாலருந்திய நேரமே கடவுள் தம்மை அருளில் ஈடு படுத்திய நேரமாதலின், நாள்தோறும் செய்யும் காலைவழிபாடு அந்த

நேரத்தை அடிப்படையாகக் கொண்டு அமையும். இவ்வாறமைத் தல் சைவசமய மரபுமுறை. எனவே, திருநாவுக்கரசர் கைத்திருத் தொண்டு காரணமாக விரைந்து செல்வார். மேலும், அவர் முதலில் திருவதிகையில் திருவருள் பெற்ற நேரம் தமக்கையார் திருக்கோயில் தொண்டுக்குச் செல்லும் நேரம். மேலும், தெருவில் நடந்து செல் லும் போது தம்மை யார் என்று தெரிந்து கொள்ள இயலாத வகை யில் இருள் நிறைந்த காலை. அதனால், அப்பரடிகள் தாம் முதலில் அருள்பெற்ற காலத்தையே காலை வழிபாட்டுக்குரிய காலமாக அமைத்துக் கொள்ளுதல் அவருக் கொத்த மரபுநிலை. எனவே, மரபு முறைப்படி இருவரும் இணைந்து திருக்கோயில் வழிபாட்டுக்குச் செல்லுதல் இயலாததே என உள்ளத்தே அமைத்துக் கொள்ளல் வேண்டும்.

திருவருள் நிலை பெருகுமாறு அமைய வேண்டிய தொண்டு நெறியை வளர்க்கும் வகையில் இருவரும் இவ்வாறு செயல்பட்டா ராக, கால வேறுபட்டால் மழை இன்மையாக, அதனால் உணவின்மை எனப்பெறும் பஞ்சம் வந்தது. மெல்ல மெல்ல அது அனைவரையும் வாட்டத் தொடங்கிய போது, திருநீற்று நெறியாளரையும் தாக்கி அவர்க்கும் கவலை வருமோ எனக் கவன்றனர், இருபேர் அருட் பெருந்தகைகளும். அவர்தம் கனவில் தோன்றி,

> "உலகியல்பு நிகழ்ச்சியால் அணைந்த தீய
> உறுபசிநோய் உமை அடையாதெனினும் உம்பால்
> நிலவு சிவ நெறி சார்ந்தோர் தம்மை வாட்டம்
> நீக்குதற்கு நித்தம் ஓர் ஓர் காசு நீடும்
> இலகுமணிப் பீடத்துக் குணக்கும் மேற்கும்
> யாமளித்தோம் உமக்கு இந்தக் காலம் தீர்ந்தால்
> அலகில் புகழீர் தவிர்வதாகும்" என்றே அருள் புரிந்தார்

என்பது சேக்கிழார் (2467) வாக்கு. பஞ்சத்தால் வரும் துன்பம் உம் மைத்தாக்காது. உம்மோடு சிவநெறி சார்ந்தவர்கள் வாடுவார்கள்; வாட்டம் நீக்குதற்கு நாள்தோறும் நான் காசு வைக்கிறேன். கிழக் கேயும் மேற்கேயும் படிமேல் வைக்கிறேன் என்று கூறவே, அவ் வாறே சென்று கிழக்குப் பக்கத்தில் உள்ள காசினை ஞானசம்பந்தரும் மேற்குப்பக்க வாயிலில் உள்ள காசினைத் திருநாவுக்கரசரும் பெற்றுக் கொண்டு வந்து அடியவர்களிடம் கொடுக்க அவர்கள் சென்று, உணவுப் பொருள் பெற்றுவந்து உணவமைத்து அடியவர்களின் பசி தீர்த்துவந்தார்கள்.

> "நாதர் விரும்படியார்கள் நாளும் நாளும்
> நல் விருந்தாயுண்பதற்கு வருக" என்று
> தீதில் பறை நிகழ்வித்து"

அவ்வாறு வரும் அடியவர்களுக்கெல்லாம் கறி, நெய், பால், தயிர் என்று இவ்வாறு எல்லாம் இயைந்த இனிய நல்லுணவு அமைத்து அனைவர்க்கும் உணவுபடைத்து வந்தார்கள்.

இந்நிலையில் படிக்காசு பெறுதலும், பண்புபெறு நல்விருந்து அடியவர்க்குப் படைத்தலும் நடைபெற்றுவர, நாவுக்கரசர் திருமடத்தில் விருந்தமைத்தல் காலத்தோடு நடைபெறவும் திருஞானசம்பந்தர் திருமடத்தில் அமுது தயாரித்தலில் காலந்தாழ்ப்பதும் ஆயிற்று. காலத்தில் அமுது தயாரிக்க என்ன தடை என்று திருஞானசம்பந்தர் வினவ, திருநாவுக்கரசர் பெறுங்காசு வணிகர்களால் பேணி ஏற்றுக் கொள்ளப் பெறுகிறது. திருஞானசம்பந்தர் பெறுங்காசு மாற்றுக் குறைந்திருப்பதால் 'வாசிபட வேண்டும்' என்பார்கள். இதுவே காலதாமதத்திற்குக் காரணம் என்றார்கள்.

"திருஞானசம்பந்தர் அதனைக் கேட்டுச்
சிந்திப்பார் சிவபெருமான் நமக்குத் தந்த
ஒருகாசு வாசிபட மற்றக் காசு
நன்றுகி வாசிபடா தொழிவான் அந்தப்
பெருவாய்மைத் திருநாவுக்கரசர் தொண்டாற்
பெறுங்காசாம் ஆதலின் பெரியோன் தன்னை
வருநாள்கள் தருங்காசு வாசி தீரப் பாடுவன்
என்றெண்ணியது மனத்துட்கொண்டார்.

என்பது சேக்கிழார் வாக்கு. அடுத்தநாள் வாசிதீரவே காசு நல்குவீர் என்ற பதிகம் பாட, வாசியிலாக் காசுபெற்றார். வாசி தீரக் காசு பெற்றமையினால், அந்நாள் தொடங்கி நாட்கூறுதன்னில் அடியவர்க்கு அமுது செய்வித்தார்கள்.

அருமையுடையதும், விலைமதிப்பற்றதும், இறைவன் அளிக்க ஏற்பதாக அமைவதும் ஆகிய படிக்காசும் முன் சொன்னவாறு உணவுக்குரிய பொருள்களேயாக, இவ்வாறு அமுது தயாரிக்கும் செயல் அமையவே, தொண்டர்கள் எண்ணிக்கையில் அடங்காதவர்களாய் வந்தவர்களும் வருபவர்களும் மகிழ்ந்துண்ணவும் அமுது குறைவுபடாததாக அமைந்தது. இவ்வகையில் இறைவன் அருள்செய்யச் சண்பைநகர் வேந்தர் நாவுக்கரசர் இருவரும் பெரிய சோற்று மலையையே அமைத்து அனைவருக்கும் வழங்கினர்கள்.

காசுபெற்றமைக்குச் சான்றுகள்

சேக்கிழார் அமைத்துத் தந்த செவ்விய வழியிலேயே சென்று படிக்காசு நிகழ்ச்சியை அறியும் முறைமேலே அமைக்கப் பெற்றது. இச்செய்தியை வரலாறாக அமைத்துச் சேக்கிழார் பாடுவதற்கு மூலமாக இருந்தவைகள் யாவை என்று நினைக்கும்போது

"வாசி தீரவே காசு நல்குவீர்
மாசில் மிழலையீர் ஏசல் இல்லையே"

என்றுபாடிய திருஞானசம்பந்தர் பதிகமே இந்நிகழ்ச்சிக்குச் சான்றாகிறது.

அடுத்து, இந்நிகழ்ச்சியை உடனிருந்து கண்டுகளித்த அப் பரடிகள் தாம்பாடிய திருவாய்மூர்த் திருப்பதிகத்தில்

"பாடிப்பெற்ற பரிசில் பழங்காசு
வாட வாட்டந் தவிர்ப்பார் அவரைப்போல்"

என்று ஏழாந் தேவாரத்தில் கூறியருளியுள்ளார். இனி, உடனுறை காலத்தவர்களான திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் என்ற இருவர் காலத்திற்கும் அடுத்த காலத்தில் வருபவர் நம்பியாரூரர் எனப்பெறும் சுந்தரர் பெருமான். அவர் திருவீழிமிழலைக்கு வந்தபோது இச் செய்தியை அறிகிறார்.

"பரந்த பாரிடம் ஊரிடைப் பலிபற்றிப் பார்த்துணுஞ் சுற்றமாயினீர்
தெரிந்த நான்மறையோர்க்கு இடமாய திருமிழலை
இருந்துநீர் தமிழோடு இசைகேட்கும் இச்சையாற்காசு
நித்தல்நல்கினீர்
அருந்தண் வீழிகொண்டீர் அடியேற்கும் அருளுதிரே"

என்று படிக்காசு நிகழ்ச்சியைக் குறிப்பிட்டருளுகின்றார். இதனை நம்பியாண்டார் நம்பிகள், ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலையில்

"துங்கப் புரிசை தொகுமிழலை — அங்கதனில்
நித்தன் செழுங்காசு கொண்டு"

என்றும், திருவந்தாதியில் (41)

"பேசுந்தகையதன்றே இன்றும் அன்றும் தமிழ்விரகன்
தேசம் முழுதும் மழை மறந்து ஊண்கெடச் செந்தமற்கை
ஈசன் திருவருளால் எழில் வீழிமிழலையின் வாய்க்
காசில்மழை பொழிந்தான் என்று இஞ்ஞாலங் கவின்பெறவே"

என்றும், மீண்டும் அதே திருவந்தாதியில் (80)

"பாடிய செந்தமிழாற் பழங்காசு பரிசில் பெற்ற
நீடிய சீர்த் திருஞானசம்பந்தன் நிறைபுகழான்
நேடிய பூந் திருநாவுக்கரசோடு எழில்மிழலைக்
கூடிய கூட்டத்தினுள் உளதாய்த்து இக்குவலயமே"

என்றும் இச்செய்தியைப் பாராட்டிப் புகழ்வாராயினர்.

இருவர் வரலாற்றிலும் வாசியும் காசும்

இந்நிகழ்ச்சியைத் தெய்வச் சேக்கிழார் அப்பர் பெருமான் வர லாற்றில் எவ்வாறு அமைக்கின்றார் எனக் காணவும் வேண்டும்.

"திருவீழிமிழலை நாயகனார் கையில் மானும் மழுவும் உடன் காணக் கனவில் கோலத்தொடும் எழுந்தருளி,

"காலநிலைமையால் உங்கள் கருத்தில் வாட்டமுறீர் எனினும்
ஏல உம்மை வழிபடுவார்க்கு அளிக்க அளிக்கின்றேம்"

என்று கூறி, விண்ணிழி விமானத்தின் கிழக்கும் மேற்கும் உள்ள பீடத்தில் முறையே ஞானசம்பந்தர்க்கும் நாவுக்கரசர்க்கும் நாள் தோறும் காசுதனைப் படி வைத்தருள, அதனுல் அடியவர்களுடன் அமுது செய்து அங்கு இருவரும் இருந்தார்கள். இந்நிலையில், அருளாற்பெற்ற படிக்காசானது பலவகையாலும் பொருந்திய வளமைகள் பெருகி வளர, பரமன் அடியாராளுர்கள் எல்லாம் வந்து உண்ணுங்கள் என்று காலை மாலை இரண்டு வேளையும் பறைசாற்றிச் சோறிட்டார் திருநாவுக்கரசர்.

"ஈசர் மிழலை இறையவர்பால் இமையப்பாவை திருமுலைப்பால்
தேசம் உய்ய உண்டவர்தாம் திருமாமகளுர் ஆதலினுல்
காசு வாசியுடன் பெற்றுர் கைத்தொண்டாகும் படிமையினுல்
வாசி இல்லாக் காசு படிபெற்று வந்தார் வாகீசர்"

என அமைத்துள்ளார் சேக்கிழார்.

திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் திருவீழிமிழலையில் பஞ்சம் உண்டாய காலத்தில், இறைவன் இவ்விரு அடியவர்கள் மூலமும் படிக்காசு அளித்து, அவ்விரு அடியவர் தம்மை வழிபடு வோர்க்கும் உணவு அளிக்க வகை செய்கின்ருன். இவ்வளவில் இருவர்க்கும் பொதுவாக அமைகிறது இவ்வரலாறு. பிறகு, திருஞான சம்பந்தர் வரலாற்றில் மட்டும் சில நிகழ்வுகள் நடைபெறுகின்றன. அவை, ஞானசம்பந்தர் பாடிய "வாசிதீரவே காசு நல்குவீர்" என்ற பதிகம் வெளிப்படும் சூழ்நிலைகளே உண்டாக்கியவை. பின்னர் இதே காசு வரலாறு பொதுமையில் நிகழ்வுறுகின்றது.

அருளாளர் வரலாற்றை ஆய்தற்குரிய தகுதி

இவ்வரலாற்றை, அதனுடன் இணைந்த அருளியல் நிலையை, இறைவன் அருளை ஒட்டியும் வெட்டியும் நின்று ஆய்வுரை செய்பவர் களுக்கு அமைத்துக் கொடுக்கும் உள்ளுறையை, இடர் தோன்றவும் நீங்கவும் வேண்டி அமைந்த காரணங்களை, ஒட்டு மொத்தமாக இந் நிகழ்ச்சியால் நேர்ந்த பின்விளைவுகளை நாம் மனத்தகத்துக் கொண்டே இவ்வரலாற்றை அணுக வேண்டும். வரலாற்று நிகழ்வுக் காலத்துக்கும் இற்றைக்கும் உள்ள கால இடைவெளியில் இந் நிகழ்ச்சியை அணுகிய சான்ருேர்கள் எவ்வெவ்வாறு அணுகியிருக் கிருர்கள் என்பதையும் நாம் இங்கே அமைத்துக் காண வேண்டும். இனி, மக்களின் சிந்தனை என்பது தனித்தனி நிலையில் தனித்தனி மனிதனிடத்தில் அமைந்து செயல்பட்டாலும் காலமும் இடமும் கடந்த நிலையில் ஒருவகைப் பொதுமைத் தாக்கம் அமைகிறது என் பதை 'மனிதச் சிந்தனையின் வரலாறு' என்ற ஒருவகைப் புதியதுறை யின் மூலம் ஏழாம் நூற்ருண்டில் அமையும் சிந்தனை வளர்ச்சி, பின்னர்க் கால அளவு வளர்ச்சியில் மாறுபட்டுப் பெருகி வரும் சிந்தனை, இன்றைய நிலையில் நின்று சிந்தனையை அமைக்கும் உலகந் தழுவிய பொதுமை அமைப்பும் அப்பொதுமை அமைப்பின் தாக்க மும் ஆயவை இந்நிகழ்ச்சியைச் சிந்தித்த அனைவரிடமும் உள்நின்று

செயல் பட்டேயிருக்கும். இவ்வகையில் ஏடுகளில் காணும் சிந்தனை யாளர்கள் எழுத்துகள் தவிர, இந்நிகழ்ச்சியை நாளும் சந்தித்த, சந்திக்கின்ற அப்பகுதி மக்கள், அங்கே வருவோர் போவோர் நாள் தோறும் சொல்லிச் சொல்லி நிலைநாட்டிய கருத்துகள், வருவோர் எழுப்பும் வினுக்களுக்கு அவரவர் அறிவுக்குத்தக, அவரவர் ஏன்று கொண்டதற்குத் தக வளர்த்த கருத்துரைகள் மிகப் பெரும் வலிமை சான்றவை. ஏடுகளில் அமைத்தவர்களுடைய உரைகளையெல்லாம் மென்று, தின்று, அழித்துவிடுமளவுக்கு ஆற்றலுள்ளவை. ஏடு களுங்கூட, அவைகளை இணைத்தும் எழுத வேண்டிய கட்டாயத் தன்மையைப் பெற்றுவிடுகின்றன. இந்நிலையில் திருவீழிமிழலை நிகழ்ச்சியை இருபதாம் நூற்றாண்டில் சந்திக்கும் சூழலை இறையருள் உண்டாக்கியிருக்கிறது. நாம் இந்நூற்றாண்டில் சிந்திப்பதற்குத் துணையாக, கொள்கையாலும் செயற்பாட்டாலும் வலிமையுற்ற பல கொள்கைகளைத் திருவருள் மனிதச் சிந்தனை வரலாற்றின் மூலம் நமக்குத் தந்துள்ளது. கால அளவையில்—வளர்ச்சியில் நமக்குக் கிடைத்தவைகளைவிட இன்னும் பத்து நூற்றாண்டுக்குப் பின்னர் வரு பவர்களுக்கு இன்னும் அதிக வலிமையுள்ள கொள்கைகள் பல உருவாகித் துணை செய்யும். மாற்றங்களுக்கு உரிய இவைகளின் நடுவிலும் மாறுத ஓர் அமைப்பு, எல்லாத் துறையிலும் நின்று நிலவி வருகிறது. அவ்வகையில் சமயத் துறையில் பக்தி வெள்ளத்தைப் பார்முழுதும் பரவச் செய்த பதிகப் பெருவழி கண்டவர்களை, அவர்தம் தொகைநூல்களாம் திருமுறைகளை—காலத்தாலும் இடத் தாலும் வேறுபட்டவர்களேயாயினும் திருநெறி என்ற கொள்கை யாலும், தொண்டும் திருத்தொண்டும் இணைய நின்று செயற்படுத்திய செயற்பாட்டினாலும், இவ்விரண்டையும் இணைத்து நிறுத்தி, நம்மை இன்றும் அருளியல் ஆனந்தத் துய்ப்பினைப் பெறுமாறு தாம்பெற்ற இன்பத்தை நமக்கு வழங்கிய நிலையில் வீறதேறும் தமிழால் வழி யமைத்தமையின் பதிகப்பெருவழி என்ற அருட்கொடையாலும் இணைந்து, வேற்றுமைகளைக் கடந்து நின்றவர்களே. இங்கே குறிப் பிடப் பெறும் எல்லாரையும் எல்லாவற்றையும் இணைத்தவை என்ற வகையில் அவைகளே முறை, திருமுறை எனப்பெற்றன. அவை பன்னிரண்டாய் நின்றன. கொள்கைகளாக அடிப்படை உயிரோட் டங்களாக நின்றவை என்றும் மாரு. எந்த ஒரு துறையிலும் அத் தகைய அடிப்படைக் கொள்கைகள் உண்டு. அவ்வாறே சில அடிப்படையான—என்றும் மாறுத கொள்கைகளை விளக்குமாறு அமைக்க வேண்டும். அவைகள் என்றுமுள்ளவைகளேயாயினும் எடுத்து வரையறை செய்து சட்ட உருக் கொடுத்து நம்முன் வழங்கி யவர் திருஞானசம்பந்தர். அவைகளை விளக்கி எடுத்துக் காட்டு களுடன் இணைத்து வரையறை செய்து முடித்து நிறுத்தியவர் சேக்கிழார் பெருந்தகை. பின்வரும் அருளாளர்கள் நிலை என்ன? இங்கே காட்டப்பெறும் அடிப்படைகளிலேயே அவர்களும் அவை களில் அடங்குவர் என்பதே முறை. அவ்வகையில்

1. அனைத்துக்கும் மூலமானவன் பொது ஆட்டிற்கு வல்லன். ஒவ்வொரு பொருளிடத்தும் தங்கியும் உலகில் நின்றும்

இரண்டையும் இணைத்து ஆடுபவன். பொதுமையில் நிற்பவனே.

2. எந்த ஒரு பொருளும் படிமுறை வளர்ச்சியில் அப்பொதுமையில் நிற்பவனுல் உயர்வு பெறும். உயர்வுப்படியில் உயர்ந்தபடி என்பது எந்த ஒன்று அப்பொருளின் உள் நின்று அதனைப் படிப்படியாக உயர்த்தியதோ அப் பொருளுக்கு, வளர்ந்து நிற்கும் பொருள் அடிமையாய் நிற்றல்.

3. பொதுமையில் நிற்பவன் எந்த ஒரு பொருளையும் உயர்வற உயர்த்தும் இப்பணிக்கென நிகழ்த்தும் எந்த ஒரு செயலும் "இப்படியால் இது" என அனைவரும் காரண காரியத்தோடு உணரும் முறையில் அறிவாராய்ச்சி முறையில் இணைந்த ஒன்றுகவே இருத்தல்.

4. மேலே குறிப்பிடப் பெற்ற அடிப்படைகளைக் கொண்டு இத் துறை சார்ந்த நிகழ்வுகளுக்கு விளக்கம் காணும் வலிமை யின்றித் தத்தம் மனவிருப்பு வெறுப்புகளுக்கேற்ப அமைக் கும் விளக்கம் காலப் போக்கில் அழிந்தே போகும்.

இவைகளை எடுத்துவழங்கிய நிலையால் இவை ஒரு சமயத்துக்குரியவை யல்ல. சமயப் பொதுமையை அடிப்படையிற் கொண்டவை. அவ் வகையில் நாமும் நின்று துணிவுடன் எத்தகைய அருள் நிகழ்வுகளை யும் சிந்திக்கலாம். சிந்திக்கலாம் என்ற துணிவு பொதுமையாளன் நின்று நிகழ்த்திய நிகழ்வு என்பதால் அமைந்து நின்ற துப்புரவுத் துணிவு.

இங்கே நம்மைத் தாக்கும் குறை ஒன்றையும் நாம் ஏற்றல் வேண்டும். திருவருளியல்பு மிகப் பேராற்றலுடன் செயல்படுகிறது. சிந்தனையாலும் தொடமுடியாத ஒன்றை ஓரளவு சிந்தனையில் கொள்ளுமாறு அமைத்தாலும் எழுத்தின் மூலம் சிந்தனையில் உள் ளதை வெளிப்படுத்த முயலும்போது சிந்தனையில் ஏற்றவற்றையே செயலில் தருவது இயலாததாகிறது. இந்நிலையை உணர்ந்து ஒழுங்கு செய்த அருளாளரே திருஞானசம்பந்தர். அவர் அருளிய யாழ்முரியே அதற்குத்தான். வயப்படுத்துதல் இன்றி, வழிப்படுதல் என நாம் நின்றுல் வந்தவாறே இயம்பலாம், வெளிப்பட வந்து தன்னை நிறுத் தும் பணி அதனுடையது.

இந்நிலையில் "படிக்காசு நிகழ்வு" என்பதைச் சிந்திக்கலாம். திருவிழிமிழலையில் இருபெருந்தகைகளும் தங்கித் தொண்டாற்று கின்றார்கள். வையம் முழுவதும் வற்கடம் வருகிறது. உலகவர் வருத்தமே காரணமாக இறைவன் செயல்பட்டதாகத் திருநாவுக் கரசர் புராணத்தில் கூறிய சேக்கிழார், திருஞானசம்பந்த நாயனர் புராணத்தில் "கண்ணுதலார் திருநீற்றுச் சார்வினோர்க்கும் கவலை வருமோ" என்று கருத்திற் கொண்டார்கள் என அமைக்கிறார்.

அடுத்து, இறைவன் கனவில் தோன்றுகிறான். கையில் மழுவும் மானும் உடன் காணத் தோன்றுகிறான். தோன்றி அவன் கூறியவை: கால நிலைமையால் ஏற்பட்டது இது. ஆனால், உங்கள் கருத்தில் வாட்டம் உறுது. ஆயினும், உம்மை வழிபடுவார்க்காக நாம் அளிக்க இருக்கிறோம் என்றும், காசு நாள்தோறும் வைக்கின்றோம் என்றும், இந்தநிலை பஞ்சம் நீங்குகிறவரை நடக்கும் என்றும் கூறி மறை கிறான். இருவர் புராணத்திலும் செய்திகளில் மாறுபாடு இல்லை.

> திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் காலம் விளைக் கும் மாற்றங்களால் தாக்கப் பெறுதவர்கள்; காலங் கடந் தவர்கள்.

> வற்கடம் கால மாற்றத்தால் விளைந்தது. காலங்கடந்த உங்களிடம் காலத்தின் இயல்புடன் ஒத்து விருப்பும் வெறுப்பும் கொள்ளும் அடியவர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்காகவே நான் நாள்தோறும் காசு அமைக் கிறேன். எடுத்து உணவு அமைத்து அவர்தம் வாட்டம் நீக்குங்கள் என்பதே.

கனவில் ஆணைகேட்ட அருளாளர்கள் மனநிலை

இங்கே, சேக்கிழார் அமைக்கும் ஒரு நுட்பத்தை ஓர்தல் வேண்டும். திருநாவுக்கரசர் புராணத்தில் அவர்தான் வரலாற்று நாயகர். அவர் சென்று துயிலுகின்ற காலத்தில் என்ன நிகழ்வுடன் துயிலுவார். இன்றைக்கு அவன் பணியைச் செய்தற்குக் காலமும் இடமும் நம்மை ஆளாக்கிற்றே என்ற மகிழ்வு. பின்னர், தன்னை யும் தன் கருவிகரணங்களையும் சிவனடியில் சேர்த்துவிட்டதால் அவரும் அவர் கருவிகளும் கட்டையென அவனடியில் கிடப்பது என்பதே. உழவாரத்தைக் கையிலேயே வைத்துக்கொண்டிருப் பார். பணி செய்யும் போது என் விருப்பின்படியே பணி செய்கிறது. அதற்கென ஒரு விருப்பு இல்லை. பிறகு என் கையில் அடைக்கலம். செய்த பணிக்கென எந்த ஒன்றையும் எதிர்பார்ப்பதில்லை. இந்நிலையே எனக்கும். உழவாரத்தைப் போலவே யானும். இது என்னில் அடிமை யாதல் போல, யானும் இன்னொன்றில் அடிமை. இது அப்பரடிகள் கொள்கை. இங்கே கனவில் மானும் மழுவும் கொண்ட கோலத் துடன் தோன்றிக் கூறுகிறார். அப்பரடிகள் அந்த ஆணையை ஏற்பது என்பது ஆண்டவன் இடும் ஆணையை அடிமை ஏற்பது போல, இதுவரையில் நமக்கு ஆண்டவன் நாள்தோறும் உனக்கு நான் இடும் பணி இது என்று சொல்லவோ, செய்யவோ வாய்ப்பு இல்லை. இவைஇவை இறைவன் பணி என நாமே செய்து வந்தோம், நம்மையும் ஏற்றுக் கொண்டான். நாளை முதல் அவன் கொடுத்த பணி ஒன்று உண்டு அவ்வளவே. நம்மையும் நம் தொண்டையும் பெருமான் ஏற்றுக் கொண்டு, நமக்கும் ஒரு பணியைக் கொடுத் தானே என்ற மகிழ்வு ஒன்றுதான் அப்பரடிகளுக்கு. ஆனால், ஞான சம்பந்தருக்குத் தோற்றம் பெறும் வடிவம், திருநாவுக்கரசருக்குத்

தோற்றியதே போன்றிருப்பினும் வேறுபாடுண்டு. திருநெறி எனப் பெறும் திருத்தொண்டு நெறியில் நின்று திருவருட் கொள்கையை நிலைநாட்ட வந்தவர், திருஞானசம்பந்தர்.

"இதுவோ எமை ஆளும் ஆறு? ஈவது ஒன்று எமக்கு இல்லை யேல்; அதுவோ உமது இன்னருள்" என்று கேட்டவர். நாலாக் காலையில் இவ்வுலகத்துயிர்களுக்கு நான் ஏதாவது கொடுத்துத் தொண்டாற்ற வேண்டும். என்னை மட்டும் அருளில் நிற்கவைத்து, ஆனந்தம் அனுபவிக்கச் செய்தல் என்பதே அருளாயின், அதுவா உன் இன்னருள் வழங்கும் வழக்கம்! எமை ஆளும் ஆறு இதுவோ! என்பணி உன்பணியே; ஆயினும் என்னைமுற்றுக இழந்து நிற்றலோ, உன் திருவடியின்பம் துய்த்து நிற்றலோ அன்று, இவ்வுலகத்துப் பொருளில் சிவம் விளங்குதல் வேண்டும்; அது விளங்குவது திருநீற் றினால் என்ற கொள்கையுடையவர்.

திருஞானசம்பந்தரை வரலாற்று நாயகராக நிறுத்திய நிலையில் சேக்கிழார் அமைத்துக் கூறுவதையும் நாம் பார்த்தல் வேண்டும்.

திருஞானசம்பந்தர் இரவு துயிலச் செல்லுங்கால் என்ன நினை வோடு செல்லுவார் என்பதைச் சேக்கிழார் பெருமான் விளக்கும் இடம் இது. "வானுகி, நிலனுகி, அனலுமாகி, மாருதமாய், இருசுட ராய், நீருமாகி, ஊனுகி, உயிராகி, உணர்வுமாகி, உலகங்கள் அனைத்துமாய், உலகுக்கப்பால் ஆனை வடிவாகி நின்றார் செய்ய அடிபரவி .அன்றிரவு துயிலும்போது" என்பது சேக்கிழார் வாக்கு. உலகப் பொருள்களிலெல்லாம் நிறைந்து நின்ற பெருமான் திருவடி யைச் சிந்தித்துக் கொண்டே துயிலப் போனார். அவர் கனவில் காளுடு கங்காளர் மிழலை மூதூர் காதலித்தார் தோன்றினர். திருநீற் றைப் பூசிய முதன்மைக் கோலம் கங்காளன் கோலம்.

"கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை"

என்பது திருமூலர் திருமந்திரம். கங்காளன் திருவுருவும் மிழலை மூதூர் காதலித்த திருவுருவும் இணைந்த தோற்றம். மானும் மழுவும் ஏந்திய பதிப்பொருள் நிலையே, மிழலை மூதூர் காதலித்த திருவுருவநிலை. அதற்கு மேல், நீலகண்டப்பொருளும் கங்காளன் வடிவில் தோற்றம் பெறுகிறது. இரண்டும் வெளிப்பட அமைந்த திருவுருவம் காட்சிப் படுகிறது. கனவு நீங்கித் துயிலுணர்ந்தபின் திருநாவுக்கரசர் பெரு மானின் கனவு விளக்கமாக ஏதும் சேக்கிழார் அமைக்கவில்லை. ஆனால், திருஞானசம்பந்தர் "நம்பிரான் அருள் இருந்த வண்ணம்" என்றே கூறுகிறார். கனவுநீங்கியவுடன், தமக்கு உணர்த்தியருள நினைத்தார். அதில் ஒரு மாற்றம் தெரிகிறது. இருவரும் ஒன்றுபட் நின்று உணர்த்தாமல், திருநீறு பூசிய கங்காளன் தன் தோற்றத்தை மட்டுமேநல்க, மிழலை காதலித்த பதிப்பொருள் மட்டுமே பேசுகிறது. ஏன் இந்த இருமை நிலை? நம்பிரான் வீழிமிழலையான்; அருள் நிலையின் தோற்றம் கங்காளன். நம்பிரான் செயற்பட, அருளானது அதனைநெடு

தன்னை அடக்கி இருத்தல் மட்டுமே செய்கிறது என்ற குறிப்பில் "நம்பிரான் அருள் இருந்த வண்ணம் இனிக் காண்போம்" என எழுந்து புறப்பட்டுச் செயற்படுகிறார்.

நிகழ்ச்சிமுறையும் எழுந்த சிக்கலும்

"ஏல உம்மை வழிபடுவார்க்கு அளிக்க அளிக்கின்றேம்" என்பது ஆணை; இது நாவரசருக்கு. "உம்பால் நிலவு சிவநெறி சார்ந்தோர்தமை வாட்டம் நீக்குதற்கு" என்ற ஆணை ஞானசம்பந்தருக்கு. திருநாவுக்கரசர் எவ்வாறு சென்று பெற்றார், பதிகம் பாடினார் என்ற குறிப்பு இல்லை. ஆனால், திருஞானசம்பந்தர் திருக்கோயிலுக்குச் செல்கின்றார். நாவரசருடன் திருக்கோயிலை வலம் செய்யப் புகுந்த போது, படியின்மேற் காசு இருப்பது தெரியவே, அதனைக் கைமேற் கொண்டார். எழுந்தருளுந் திருமேனி முன் சென்று நின்று பதிகம் பாடுதற்கு முன் படிக்காசு கொடுக்கப் பெற்று விட்டது. காசு படிமேல் வைக்கப் பெற்றது என்று திருநாவுக்கரசர் வரலாற்றிலும், பீடிகைமேற் காசு கண்டார்; தொழுதெடுத்தார் என்று திருஞானசம்பந்தர் வரலாற்றிலும் அமைத்தார். இரண்டிடங்களிலும் படிமேல் வைத்த காசு ஆதலின் படிக்காசு என்றே பொருள் அமைக்கப் பெற்றுள்ளது சேக்கிழாரால். இது படிக்காசு என்பதன் அறிமுகப் பொருள்.

பாடியபிறகே பழங்காசு

இங்கே ஒன்றைக் கருத வேண்டும். பாடிப் பெற்ற பரிசில் பழங் காசு, வாடி வாட்டந் தவிர்ப்பார் அவர் போலும் என்பது நாவுக்கரசர் வாக்கு. இவ்வாறே சுந்தரரும், நம்பிகளும் கூறியிருப்பன முன்னே காட்டப் பெற்றுள்ளன. பின்னர் சேக்கிழாரே கூறுவது, படிமையினுல் வாசி இல்லாக் காசுபடி பெற்று வந்தார் என்று நாவுக்கரசர் புராணத்தும் கூறினர். திருநாவுக்கரசர் கூற்றில் அமைத்தால், மிக மிகப் பழைய காசு அது, இப்போது அளவை முறையில் கழஞ்சு முதலியவாறு எடை கணக்கிட்டுக் கூறக்கூடிய காசு அன்று ஆதலின் பரிசுக்கெனக் கொடுக்கப் பெறும் பழங்காசு. பரிசில் எனக் கொள்ள வேண்டிய பழங்காசு. பாடியபின் கொடுத்தாலும் அவரவர்களின் தகுதியை நோக்கிக் கொடுக்கப் பெற்றன வல்ல; அத்தகைய பழங்காசுகளைக் கொடுத்தான் அவ்வளவே; என்றெல்லாம் பொருள் செய்யக் கூடிய வகையில் அவர் குறிப்பு அமைகிறது. எவ்வாறுயினும் பாடிய பிறகே கொடுக்கப் பெறுகிறது.

நாளும் பதிகம் பாடிய பிறகு காசு கொடுத்தல் என்பதைச் சுந்தரர் அழுத்தமாகக் கூறுகிறார். சேக்கிழார் இந்நிகழ்ச்சியைத் தொடாமலேயே சென்று விடுகிறார். ஆயினும், மாற்றுக்குறைவு நிறைவு என்ற வேறுபாடு வந்து விட்டது என்பதற்கு ஒரு காரணம் சொல்ல வேண்டிய அவசியம் வருகிறது. அங்கே கைத்திருத்தொண்டு செய்வதையும், திருமகனுராக அடைவதையும் காரணமாக்குகின்றார்.

பாடியபிறகு காசு கொடுக்கப் பெறுகிறது என்பதைச் சேக்கிழார் உடன்படாமைக்குக் காரணம் பாடிய பிறகு காசு கொடுக்கப் பெற்றால், பாட்டுக்குள்ள விலையாக அளிப்பதாகத்தான் அந்தக் காசு கருதப்பெறும். பின்னர் மாற்றுக் குறைவு நேரும்போது பாட்டில் உயர்வு தாழ்வு என்பதைத் தவிர வேறு காரணம் எதையும் கூறமுடியாது; அவ்வாறு ஒரு மரபை உண்டாக்கக் கூடாது என நினைக்கிறார்.

தொண்டைத் தொழிலாக்கிய காசு

படிக்காசின் மாற்றுக் குறைவுக்கு ஒரு காரணம் எழுத வேண்டிய நிலையில் கைத்திருத் தொண்டு செய்வதும் பதிகம் பாடுவதும் என்ற இரண்டையும் செய்யும் திருநாவுக்காசர்; பதிகம் பாடுவதும் மகனுக இருப்பதும் என நின்ற திருஞானசம்பந்தர் என்ற நிலையில் காரணம் அமைக்கிறார். இந்தக் காரணத்தை யார் சொன்னது? இந்தக் காரணத்தை முடிவு செய்தவர் யார்? இதைச் சேக்கிழார் அமைக்கக் காரணம், வாசி தீரப் பாடிய பதிகம் இருக்கிறது, அதைப் பாடியது ஞானசம்பந்தர். ஆகையினால், மாற்றுக் குறைவுக்குள்ள காரணம் திருஞானசம்பந்தரையே சார்கிறது. மாற்றுக்குறைவுக்கு என்ன காரணத்தை எப்படி அமைப்பது என்பன விளக்கள். சேக்கிழார் கையாளும் புதிய உத்திமுறை ஒன்று. அவர் உள்ளத்தில் அடியவர்க்கோப் பற்றிய கருத்து எப்படி ஒரு உயர் நிலையில் இருந்தது என்பதை நம்மால் காண முடிகிறது. கைத் திருத் தொண்டு செய்வது மாற்றுக் குறையாது இருக்கக் காரணம். அப்படியானால் மாற்றுக் குறையக் காரணம் கைத்திருத்தொண்டு செய்யாமை. இருவர் செயலையும் அவ்வாறு கருதிவிட முடியாது. பின்னர் வேறுவழி! இறைவனின் திருமகனுராக இருப்பது. திருமகனுராக இருப்பது ஒரு குறையா? அதை உலகியலில் வைத்துப் பார்க்கிறார். அவர் அவ்வாறு ஆராய்வதற்கு உதவுவது அப்பரடிகள் திருவாக்கே. 'பரிசில் பழங்காசு' என்பதே. இறைவனிடம் உள்ள காசுகளில் வழக்கத்தில் செல்லுபடியாகத்தக்க — எல்லாராலும் பார்த்தவுடன் எடை, மாற்று முதலியவற்றை அறிவித்து முத்திரையிடப்பெற்ற காசுகள் இருந்தன. அவற்றோடு, பழங்காசுகளும் இருந்தன. அவற்றுள் உள்ள குறை ஏதும் இல்லை. பழங்காசு ஆதலின் கறைபடிந் திருந்தது. கறை நீண்டநாளாக இருந்தமையால் மாற்றினைக் குறைக்கவும் செய்துவிட்டது. பழங்காசைக் கொண்டு போய் எடை, மாற்று முதலியன கண்டறிய வேண்டும். இவ்விருவகைக் காசுகளில் எதை யாருக்குக் கொடுப்பது என எண்ணும் போது, அப்பரடிகள் தொண்டு செய்பவர், ஞானசம்பந்தர் நம் வீட்டுப் பிள்ளை. எனவே, கைத்தொண்டு செய்வாருக்குப் புதுக்காசையும், நம் பிள்ளைக்கு நம் வீட்டில் உள்ள பழங்காசினையும் கொடுத்துவிடலாம் என முடிவு செய்து இவ்வாறு கொடுத்தான் என்பதாக விளக்கம் அமைத்து, அதைத் திருஞானசம்பந்தர் வாக்காகவே கொள்ள வைத்தார். சில குடும்பங்களில் பிறந்து விட்டமையாலேயே சில உரிமைகளும், அக்குடும்பங்களில் (பிறவாமையால் — இல்லை) அக்குடும்பம் தவிர வேறு குடும்பத்தில் பிறந்தமையால் அந்த உரிமை இல்லாது

போதலும் நாம் இன்றறிவது போல அன்றும் சேக்கிழாரால் உடன் கொள்ளப் பெற்றன போலும்.

சேக்கிழார் வேறு காரணம் அமைக்க முற்பட்டிருப்பார். ஆனல், கைத் தொண்டு செய்வது என்பதை மதித்தும், தன் சூழந்தை கைத் தொண்டு செய்தல் இல்லே என்ற மரபுப் பெருமையும் மக்கள் வழக்கில் வரலாருக அமைந்து விட்டன. சேக்கிழார் காலத்திலேயே மக்கள் பேச்சுவழக்கில் இக்காரணம் உறுதியாகப் பற்றப் பெற்று விட்ட படியால், அவர் அதனே அழித்து மேலே செல்ல இயலவில்லே. சேக்கிழார் அங்கேயும் அதை ஏற்கக் காரணமாக இருந்தது கைத் திருத்தொண்டு செய்ததன் பெருமை. அதைவிட, குறைவுக்கு என வழங்கப் பெற்ற காரணம் ஞானசம்பந்தரால் அமைத்துக் கொண்டதும் அன்று, நீனைத்து நீக்கிக் கொள்ளக் கூடியதும் அன்று, என்ற அளவில் அவர் அவைகளே ஏற்கிறார். கைத்திருத் தொண்டின் பெருமையை உயர்த்துவதற்காக இறைவனே மேற்கொண்டு செய்த செயல் என்று இன்றும் பெருமைப்படுகிறவர்களும் உண்டு. கைத் திருத்தொண்டின் பெருமையை விளக்குவதற்காகவே, நம்மை இவ் வாறு ஒரு காரணமாக நிறுத்தி, இச்செயலேத் திருவருளானது நடத்து கிறது எனத் திருஞானசம்பந்தர் எண்ணியிருந்தால் வாசியில்லாக் காசு கொடு என்ற பதிகத்தை அவர் பாடியேயிருக்க மாட்டார். பதிகத்தின் அடிப்படையில் காசு கொடுப்பதைக் காரணமாக்க ஏலாத போது, கைத்தொண்டைக் காசுக்கு மையப்பொருளாக ஆக்கினுல், தொண்டுக்குக் காசு கொடுத்தால் அது தொண்டு ஆகாது, தொழில் என மாறிவிடும் அவ்வள்வே. இவ்வகையில் அப்பரடிகள்செய்தவை யெல்லாம் தொண்டு என எவ்வாறு அமையும்? படிக்காசு பெற்றமை யால்தொண்டு தொழிலாயிற்று. எனினும், இக்காலத்தே சிலர் மகிழ் வதற்குக் காரணம் — கைத் தொண்டின் பெருமை என எண்ணுவ தற்குக் காரணம் தொழிலுக்கும் தொண்டுக்கும் இடைநின்ற வேறு பாடு தெரியாமையே.

மேலும், கைத்திருத்தொண்டு என்பதற்கு ஞானசம்பந்தர் எந்த ஒரு தொடர்புமே இல்லாதவர் என்று கருதிவிட இயலுமா? "தொண் டின் நிலே தர வருவார்" என்றுதானே அவரைச் சேக்கிழார் அறிமுகப் படுத்தியிருக்கிறார். திருநீலகண்டப் பதிகத்தில் "கைவீனை செய்து எம்பிரான் கழல் போற்றுதும் நாமடியோம்" என ஆணேயிட்டுக் கூறிய ஞானசம்பந்தர் கைத்தொண்டு செய்தற்குப் புறமானவர் என எப்படிக் கருத முடியும்! அடுத்து, கைத்தொண்டுக்குப் பெருமை தரவே இச்செயல் அமைந்ததெனில், இந்நிகழ்ச்சியானது அமைந்த முறையை எண்ணிப்பார்த்தால், கைத்திருத்தொண்டின் பெருமையை உணர்ந்தவர் ஞானசம்பந்தர் ஒருவரே. அமுது அமைக்கக் கால தாமதம், அதற்குக் காரணம் காசு வாசிபட இருப்பது, இவை வீழி மக்களுக்குத் தெரிந்ததோ இல்லேயோ இரண்டு திருமடங்களில் உள்ள அடியவர்களுக்குத் தெரியும். ஆனல், கைத் தொண்டாகும் பான்மையினுல் வாகீசர் மாற்றுக் குறையாத காசுபெற்றார் என்பதை ஞானசம்பந்தர் மட்டுமே தமக்குள் சொல்லிக் கொள்கிறார். சேக்

கிழார் அதனைத் திருவருள் மேவ உணர்ந்து சொல்கிறார். கைத் தொண்டின் பெருமையை உணராதிருந்த ஞானசம்பந்தருக்கு இதனால் அப்பெருமை உணர்த்தப் பெற்றது என்ற அளவில் மட்டும் கொண்டு விடலாமா?

அடுத்தது, வாசியில்லாக் காசுபெற்ற வாகீசருக்கு இந்நிகழ்ச்சி யானது தெரிந்திருக்கும். தன்னுடைய காசு மாற்றுயர்ந்ததாக, ஞான சம்பந்தர் காசு மாற்றுக் குறைந்ததாக அமைந்திருப்பதைத் தெரிந் திருந்தும் திருநாவுக்கரசர் வாளா விருந்தாரா? திருஞானசம்பந்தருக்கு ஒரு குறையை உண்டாக்க நானல்லவோ காரணமாக இருந்தேன் என்று புலம்பி, புலம்பி அழுது, உயிரை மாய்த்துக் கொள்ள அல்லவா ஓடியிருப்பார். அதை விடுத்து, அவர் தம்முடைய வாக்கினாலேயே, பாடிப் பெற்ற பரிசில் பழங்காசு வாடி வாட்டம் தவிர்ப்பார் என்று எடுத்துப் பாடியிருப்பாரா? சாதாரண உலகியல் நாகரிகத்திலுங்கூட ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட இருவரில் ஒருவர் பரிசு பெறு கிறார். மற்றவர் பெறவில்லை. பெருதவர் பின்னே ஏதோ சிபாரிசு செய்து முன்னவரைப் போலவே பரிசு பெறுகிறார். இவர் என்னோடு கலந்து கொண்ட நிலையில் பரிசு பெறவில்லை. பின்னர் எப்படியோ பரிசு பெற்றார் என்று வென்றவரே தோற்றவரைப் பற்றிப் பேசுதல் நாகரிகம் என்று கருதப் பெறவில்லை.

சிவப்பிரகாச அடிகள் நோக்கில்

திருவீழிமிழலைப் படிக்காசு வரலாற்றைப் பின்வந்த அருளாளர் சிந்திக்கிறார். மாற்றுச் சரியாக இருப்பதற்கு அப்பரடிகள் கைத் தொண்டே காரணம் என்ற கருத்து உண்டாகிவிட்டதே. தொண்டு செய்தவர் என்ற பெயர் கூடத் தெரியக் கூடாத அளவில் தொண் டாற்றிய பெருமகனுர்க்கு, தொண்டின் பெருமையை அடிப்படை யாகக் கொண்டு, அதற்காகப் படிக்காசும் வழங்கப் பெற்று விட்டதே. பழங்காசை வாங்கிவிட்டதால் கைத்திருத் தொண்டு செய்தவர் அப்பரடிகள் என்ற பெயர் கெட்டுவிட்டது. தொண்டைத் தொழிலாக்கியவர் அப்பரடிகள் என்ற வசையல்லவா வந்து விட்டது எனக்கருதி, திருநாவுக்கரசர் செயலைக் கண்டிக்கும் வகையில்,

> "கொள்ளைக் கதிர்முத்தின் பந்தரும் சின்னமும் கொள்ளும் ஒரு
> பிள்ளைக்கு அதுதகும் நாவரசாய பெருந்தகை யோய்
> கள்ளைக் குவளையுமிழ் வீழியிற் படிக்கா சொன்று நீ
> வள்ளைக் குழையுமை பங்காளன் கையிலென் வாங்கினையே"

என்பது கி. பி. பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த கற்பனைக் களஞ் சியம் சிவப்பிரகாச அடிகள் நால்வர் நான்மணிமாலையில் அமைத்த செய்யுள். எனவே, கைத்தொண்டு என்பதைக் காரணமாக ஆக்கி னால் அப்பரடிகள் செய்த கைத்தொண்டுக்கு விளக்கம் 'தொழில்' என்பதாகவே முடியும்.

அடுத்து, "திருமாம்கனுர் ஆதலினால்" என்ற காரணம் உலகியல் நிலையில் ஞானப்பால் கொடுத்த அம்மையின் செயலை அடிப்படை

யாகக்கொண்டு மக்கள் மன்றத்தில் வளர்ந்துவிட்ட கதையின் ஆற்றல். இதை மாற்றமுடியாமல், இதை ஏற்றுக் கொண்டே சில அருளாளர்கள் நூல் இயற்றும் நிலையும் தோன்றிவிட்டது. தத்துவ நிலையில் அறியப் பெற வேண்டிய ஒன்றை உலகியலில் வைத்து விளக்கம் செய்ததால் வந்த விளைவு. திருமகனாராக நின்ருல் கிரியை மார்க்கம். அது அக ஒழுக்கம் பற்றியது. இங்கே புறத்தில் செய்யப் பெறும் தொண்டினை, ஞானசம்பந்தர் அகத்தே செய்கிறார். ஆகையால் அவரும் கைத்திருத்தொண்டு செய்பவரே. அவ்வகையிலும் அக் காரணம் முரண். எனவே, மக்கள் மனத்தில் வழங்கிய கதையின் அழுத்தத்தால் இவைகள் காரணமாக நின்றன என அறியலாம். ஆயினும் மாற்றுக் குறைவுக்கு இவை காரணம் ஆகா.

இனி, மாற்றுக் குறைவும் நிறைவும் என்ற கருத்தை வெளிப் படுத்தியது காலத்தில் அமுது அமைக்க முடியாமை ஒரு பக்கம் காலந்தவருது அமுது அமைக்க முடிந்தமை ஒரு பக்கம். காலத்தில் ஏன் அமுது அமைக்க இயலவில்லை என்ற கேள்வியைத் திருஞான சம்பந்தர் கேட்டபோது மாற்றுக் குறைவு காரணம் என்ற விடை வருகிறது. காலந்தவருது அமுதமைப்பதற்குக் கைத்தொண்டு காரணம் என்று கூட முதலில் வரலாறு அமைந்திருக்கும். அதுவும் ஒரு வகையில் உண்மை. படிக்காசு பெறச் சென்ற முதல் நாள் இருவரும் இணைந்து வழிபாட்டுக்குச் சென்றிருக்கலாம். ஆனல், மற்றை நாட்களில் அப்பரடிகள் வைகறையிலேயே திருக்கோயில் சென்று வழிபடும் கடப்பாடு உடையவர். அவரை ஆட்கொண்ட காலம் அது ஆதலின், அப்பொழுதே பதிகம் பாடியிருக்கலாம். படிக்காசு பெற்றிருக்கலாம். கொண்டுவந்து உரியவர்களிடம் கொடுத்து அமுதமைக்க ஆவனசெய்க என்று கூறிவிட்டு, அவர் உழவாரத் தொண்டு செய்யச் சென்றுவிடுவாராகலாம். கைத் தொண்டு முற்பகல் முடித்து இடைவேளை உணவுக்கு வரும் போது எல்லாம் தயாராக இருக்கும். ஞானசம்பந்தர் காலை 8-30 அல்லது 9-00 மணியளவில் வழிபாட்டுக்குப் போதல் வேண்டும். காரணம் அவரை ஆட்கொண்ட காலம் அது. அவ்வகையில் அவர் காசு பெறுவது காலை 9 to 10 என்ற கால அளவையில் தான் அமையும். அதன் பிறகு கொண்டு வந்து, காசினைக் கொடுத்து, உணவுப் பொருள் வாங்கிச் செய்தற்குக் காலதாமதம் ஆகலாம். இவ்வகையில், காலதாமதம் இன்மைக்குக் கைத்தொண்டுதான் காரணம் என்ற வழக்கானது இவ்வாறு, இவ்வடிப்படையில் கூடத் தோன்றியிருக்கலாம்.

இனி, ஞானசம்பந்தர்க்கும் மற்றையோர்க்கும் கைத்திருத் தொண்டின் பெருமையை உணர்த்த வேண்டும் என்ற நிலைமை பெருமானுக்கு அமைந்திருக்குமாயின் அதனைத் திருவாவடுதுறை யிலேயே அமைத்திருக்கலாம். யாகத்துக்குப் பொருள் வேண்டும் என்று சிவபாதவிருதயர் கேட்கவில்லை; தன்னுடைய பதிகத்துக்கு விலையாகத் தனக்குக் கொடு என்று கேட்கவில்லை. அம்பொன் ஆயிரம் கொடுத்தார். அங்கே கொடுத்தது எந்த அடிப்படையில்?

அங்கே அள்ள அள்ளக் குறையாத அருநிதியமாக இது வளமை மிகுக்கும் என்று சொல்லிக் கொடுத்தாரே! இப்பொன் முடிப்பு உமக் காகவே நித்தனர் வழங்கியது என்று பூதத்தின் மூலம் பறையறைந் தாற்போற் சொல்லி வைத்தாரே, அங்கே எந்த அடிப்படையை வைத்துக் கொடுக்கிறார்?

முத்துச்சிவிகை, முத்துக்குடை, சின்னம், முத்துப்பந்தர் இவை யெல்லாம் பெருமான் உமக்காகக் கொடுத்தவை என்று ஒவ் வொரு முறையும் சொல்லப்பெறுகிறதே அவைகளையெல்லாம் கொடுப்பதற்கு அமைந்த அடிப்படை என்ன?

இனி, இதன் பின்னர் வரும் நிகழ்ச்சியொன்று. "திருஇலம்பை யங் கோட்டூர்"த்தலத்தில் ஞானசம்பந்தர் ஓர் உண்மையை அமைக்கிறார். அவ்வூர்ப் பதிகம் முழுவதும் "எனதுரை தனதுரையாக, இருக்கை யாகப் பேணி என் எழில் கொள்வது இயல்பே" என்று அருளுகின்றார். "அடியின் கீழ் இருக்க" என்றார் காரைக்காலம்மை யார். இறைவனே ஆடவைத்து, உயிரானது அவன் அடியின்கீழ் இருந் தால் அவனழகினை உயிர் பெறும். இங்கே, எனதுரையைத் தனது உரையாக ஏற்று, என்னை நிறுத்தி, என்னை இருக்கையாக் கொண்டு, என் எழில் கொள்வது இயல்போ என அமைக்கும் நிலை என்பது தத்துவ நெறியில் எந்த ஒரு இடத்தில் ஞானசம்பந்தர் நிற்கிறார் என்பதை அவரருள் கொண்டுணர வேண்டும். எழில் கொள்ளும் நிலை பின்னே. எனதுரை தனதுரையாக்கினும். யான் பதிகத்துக்குப் பயன் சொன்னால், என் வார்த்தையைத் தன்வார்த்தையாக்கி அவன் செய்தான் என்பதன் கருத்தை ஓர்தல் வேண்டும். அத்தகு ஞான சம்பந்தர், அப்பதிகத்தில் இம்மையின் வீடு எளிது என்று அறை கூவினர். அத்தகு அருட்குருவாம் ஞானசம்பந்தர், அப்பரடிகளைப் பார்த்து, "போயது எங்கு நீர் அங்கு யான் பின்வரப் போவது" என அருள் செய்தாரெனில், அப்பரடிகளை ஞானசம்பந்தர் எவ்வாறு கருதினர் என்பதும் அவர் கருதிய அந்நிலையே இறைவனும் கருது வான் என்பதும் திண்ணமாக நாம் கொள்ள வேண்டியவை.

இனி, படிக்காசு நிகழ்ச்சியானது அப்பரடிகளுக்கு உயர்வுதந்தது என்பதாக வைத்து, இந்நிகழ்ச்சியை எடுத்துக்காட்டி, பின்வந்த சான் றோர்கள் அருளாளர்கள் யாரும் அவரைப் புகழ்ந்து பாடவில்லை. மாறாக, ஞானசம்பந்தரைப் பாராட்டிய சான்றுகளே காணப் பெறு கின்றன.

இவையெல்லாம் ஒருபுறம் நிற்க, ஆண்டாண்டுக் காலமாக அப் பரடிகள் கைத்திருத்தொண்டு செய்துவர அதனால் அமைந்த அத் தொண்டின் பெருமையினுக்கு, தொண்டு செய்யாமையால் வந்த குறை ஞானசம்பந்தர் பாடிய ஒரேயொரு பதிகத்தால் நீங்கிய தெனின்—இரு தட்டும் ஒப்பநிற்கத் துலையொத்தது எனின், இத்துலைக் கோல் தந்த நீதியின்படி, கைத்தொண்டின் நிலை பலமடங்காகத் தாழ்ந்து விட்டது என்றுதான் ஒப்புக் கொள்ள வேண்டி வரும். இந்த

ஒன்றையாவது அறிஞர் பெருமக்களும் அருளாளர்களும் நின்று சிந்தித்திருக்க வேண்டும். திருவருளின் வழி நின்று உணரும் சான்றோர்கள் இந்நிகழ்வைக் கேட்டதும், திருவருள் இவ்வாறு நிகழ்த்தியிருக்காது என்று துணிந்து "இப்படியால் இது" என்ற கொள்கையை வரையறுத்த அறம் தவழும் சைவத்தில், இது இருக்காது என்று கூறுமை ஏன் எனத் தெரியவில்லை.

அடுத்தது, இந்நிகழ்வில் அமைந்திருக்கும் ஒரு முரண்பாடு. படிக்காசு கொடுத்த பெருமான் இப்படித்தான் இதனைப் பயன்படுத்த வேண்டும் என்ற வரையறையையும் செய்துள்ளான்.

திருநாவுக்கரசரிடத்தில் "ஏல உம்மை வழிபடுவார்க்கு அளிக்க அளிக்கின்றேம்" என்பதும் திருஞானசம்பந்தரிடத்தில் "நிலவு சிவ நெறிசார்ந்தோர் தம்மை வாட்டம் நீக்குதற்கு யாமளித்தோம்" என்பதும் விதி. படிக்காசைப் பெற்ற பிறகு வருகிறது சிக்கல். திருநாவுக்கரசருக்கு அவரை வழிபடும் அடியவர்களாக யார் யார் தலயாத்திரையில் அவரைத் தொடர்ந்து சென்றார்கள் என்று சொல்ல இயலவில்லை. திங்களூருக்கு அவர் செல்லும் போது அவ்வூரில் யாருக்கும் அவரைத் தெரியாது. அவரைக் கேள்விப்பட்டவர்கள் உண்டு. "என்னை வணங்கக் கூடிய அளவுக்கு என்னை உங்கள் முன் புலப்படுத்திக் கொண்டு விட்டேனே, இறைவனை வணங்கும் உங்களை வழி தவற வைத்த பாவியானேனே" என்று அழுவாரேயன்றி, தம்மை வணங்கும் அடியவர்களை அவர் பெற்றிருக்கவில்லை. திருஞானசம்பந்தர் 'குரு' என்ற நிலையில் சிவிகையூர்ந்து சென்ற அருள் நெறித்தலைவர். அவருடன் சில அடியவர்கள் சேர்ந்து செல்லுதல் உண்டு. காசு பெற்றதும் செய்த செயல்,

"நாதர் விரும்படியார்கள் நாளும் நாளும் நல்விருந்தா
யுண்பதற்கு வருக"

என்று தீதில் பறை நிகழ்வித்து அதனைக் கேட்டு வந்த தொண்டர்களுக்கு அமுதளித்தார்கள். இது எவ்வாறு பொருந்தும்?

படிக்காசு இரண்டாய் நோக்கப்பெறல்

இனி, திருவிழிமிழலையிற் பஞ்சைப்போல எல்லாப் பொருள்களையும் வன்மையற்றதாக ஆக்கும் வற்கடம் வந்தது உண்மை. அதைத் தீர்க்க மிழலையிறைவன் எண்ணியதும் உண்மை. நாளும் படிக்காசு அருளியதும் உண்மை. நாளும் அவைகளைப் பதிகம் பாடியபிறகே பெறவேண்டும் என்பதும் உண்மை. பாடியபிறகுதான் இக்காசு கொடுக்கப் பெற்ற தென்பது அப்பரடிகள், நம்பியாரூரர் திருவாக்குகளால் அமைக்கப் பெற்றவை. சேக்கிழாரடிகள் இந்நிகழ்வை முற்றுகவே நீக்கி விடுகிறார். திருக்கோயிலில் அன்பர்கள் புனிதநெஞ்சினர் பாடுவது நடை பெறலாம். அவ்வாறே திருக் கோயிலில் உள்ள பெருமான் திருவருளை முன்னிட்டுச் செல்வங்களை — காசுகளை வழங்கலாம். எனவே, இரண்டும் நடைபெறலாம். ஆனால், 'பாடியதற்குக்

காசு, என்பதானுல் அது வணிகமுறை. அடியவர்கள் எப்போதும் திருப்பதிகம் பாடலாம் இறைவனும் எல்லேயில்லாது திருவருளின் வழியில் இன்னர் இனியார் என்பதின்றி வழங்கலாம். ஆனுல், இவைகள் வணிகமுறையில் நடைபெறுமானுல் திருவருள் திருமேனி எனப்பெறும் ஆண்டானுக்கும் அப்பதியிற் பிறந்து அடிமை செய்தான் எனப் பெறும் குடியுரிமையுடைய அடியானுக்கும் உள்ள மூல உறவு அற்றுப் போய்விடும். எனவே, வணிகமுறை என்பதை வலியுறுத்தும் இந்நிகழ்ச்சியைச் சேக்கிழார் தெரிந்தே நழுவவிட்டார் எனக் கொள்ளலாம். அதை அடிப்படையாகக் கொண்டே இருவர் கனவிலும் எழுந்தருளி இந்நிகழ்ச்சியைக் கூற முற்படும்போது நாள்தோறும் பதிகம் பாடவேண்டும் என்ற குறிப்பை இறைவன் குறிப்பிட்டதாகக் கூறவில்லே.

இனி, அப்பரடிகள் இச்செய்தியை எடுத்தாளும் தூழலுக்குரிய அடிப்படையையும் நாம் உளங் கொள்ள வேண்டும். கரத்தல் அல்லது மறைத்தல் என்பது இவன் செய்யும் மாண்புடைப்பணி. பாடச் சொன்னுன்; பாடப்பெற்றது: பாட்டுக்குப் பரிசில்; பரிசில் என நின்றது பழங்காசு; அந்தக் காசில் கோளாறு; பின்னர்க் கேட்ட பிறகு கோளாறு நீக்கம். எனக்கு வெளிப்பட நின்று, அடையாளங் காட்டி இருக்குமிடத்தைச் சொல்லி, வா என்று சொல்லி விட்டு வந்தான். நானும் ஒழியப் போந்திலேன், ஒக்கவே ஓடி வந்தேன். இவ் வாறெல்லாம் எடுத்துக் காட்டி வலியுறுத்தும் செயல் ஒன்றே. நாங்கள் என்னென்ன செயல்கள் செய்தாலும் அவற்றுக்கு நாங்கள் காரணம் அல்லர். ஆனுல் அளவிற்படாப் பெருமையுடையவனுகிய நீ அவற்றைத் தம்முடையனவாக அமைத்துக் கொள்ளும் நிலேமை உடையவன். எனவே நீ அளவில் பெருமையுடையவன். இப்படி நாங்களும் நீயும் இணேந்தே நின்று செயற்படும் இந்நிலேயில், எங்களேப் பிரிந்து சென்று தனித்து மறைந்து கொள்வது ஏன்? எங்களுடன் இணேந்து நின்று செயல்பட்டது, இப்போது ஒளிந்து கொண்டது என்ற இரண்டில் எது உண்மை எது பொய் என ஆய்ந்தால், உன்னுடையநிலே உனக்கும் எங்களுக்கும் மட்டுமே தெரிவது; எங்கள் செயல் எங்களுக்கும் மக்களுக்கும் தெரிவன. இப்போது வரச் சொன்னுய் வந்து நின்றேன் என்ற என் செயல் தான் 'பொய்' என மக்களால் அறியப் பெறும். இணேந்து நின்று செயற்படுத்திய நீ பிரிந்து நின்றுல் எங்கள் செயல் பொய்பட்டதாக அமையுமே! என அப்பரடிகள் கூறுவதை ஆய்தல் வேண்டும்.

கணுவற நின்ற கலப்பு — ஏழுதலங்கள்

அப்பரடிகளால் அருளப் பெற்ற கருத்தமைவுகளே மனத்திற் கொண்டு, வாசி தீரப் பாடியருளிய ஞானசம்பந்தர் பதிகத்தை நோக்குதல் வேண்டும். வாசிதீரப் பாடிய பதிகத்தில் பத்தாவது குறளில் "பிறிவது அரியதே" என்ற மொழிகளுடன் இணேத்துக் காணவேண்டும். திருஞானசம்பந்தருக்கு "இருக்கு மொழிப் பிள்ளே யார்" என்ற திருநாமம் ஒன்றும் உண்டு. "திரு இருக்குப் பிள்ளேயார்"

என்பதன் பொருள் திருஞானசம்பந்தர் முதற்பகுதியில் அமைக்கப் பெற்றுள்ளது. குறிஞ்சிப் பண்ணில் பாடப் பெறும் இருக்குக் குறள் ஏழு தலங்களில் பாடப் பெற்றுள்ளன.

பிரமபுரம், ஆரூர், மிழலை, முதுகுன்று, ஆலவாய், இடைமருது, அன்னியூர் என்ற ஏழு இடங்கள். இவைகளே ஏழுவகைத் தானங்கள். இயல்பாயமைந்த தலங்கள். (சப்தவிடங்கத் தலங்கள்) உலகில் ஏழு இடங்களென நின்றுற்போல உயிரிலும் பொருளிலும் இயல் பாகவே கலந்தவன் ஏழு வகைகளில் வெளிப்படுகின்றான். ஏழுவகை களில் உயிர்களுடனும் பொருள்களுடனும் கலந்த கலப்பை அவனே விளக்கப்படுத்திக் கொள்ளுகின்றான். எனவே, உயிராயினும், பொரு ளாயினும், ஏழு முறைகளில் தன்னை விளக்கப் படுத்திக் கொள்ளு கிறது. அவன் இவனுள் அல்லது இதனுள் வந்து கலந்த நிலை இயல்பா யது. அதாவது யாராலும் செயற்கை முறையில் கொண்டுவந்து கலக்க வைத்தநிலை இல்லை. அவனே வந்து, கணுவற நின்ற கலப்பு, இயல் பாக அவனே வந்து கலந்தமையின், கலப்பானது பிரிக்க இயலாதது, விடங்கம் — சுயம்பு என நின்ற நிலை. இது அவன் இருக்கைநிலை. இருக்கை என்பதே மறைமொழி. எனதுரை தனதுரையாக் கொண்டு, இலம்பையங் கோட்டூர் இருக்கையாக் கொண்டான் என அமைக்கும் போது, அவன் விளங்கித் தோன்றும் நிலையே அவ்வாறு விளக்கப் பெற்றது. இந்த ஏழு நிலைகளிலும் முறையே அறமூர்த்தி, நீல கண்டன், முப்புராரி, கங்காளன், தாணு, ஞானகாயன், அந்தணன் என அவள் வெளிப்படுகிறான். இவ்வாறான ஏழு நிலைகளில் அவன் விளக்கம் செய்விக்கப் பெறுகிறான். இவ்வாறு இருந்ததை உணர்த் துதல், உணர்ந்ததை அடையும் வழி, பயன், பேறு, வீடு ஆகிய இவையனைத்தையும் அவன் தான் அறிவான். அவன்தான் வெளிப் படுத்த வேண்டும். இவ்வளவையும் தன்னுள் அமைத்துக் கொண்ட வன் ஆதலின் மறையாளன், எனப்பட்டான். மறையை உணர்ந்து, அவன் இருப்பதைத் தெரிவித்த நிலையில் அமைந்த பதிகங்களே திருவிருக்குக்குறள் என்பன. ஏழுவகைகளில் ஞானசம்பந்தர் இறைவனையும் அவன் கலந்த சராசரங்களையும் விளக்க முறச் செய்கிறார். இந்நிலையில் திருவீழிமிழலை ஆறாவது தலமாக அவர்தம் வரலாற்று நிலையில் அமைகிறது. இவ்வகையில் "வாசி தீரவே" என்ற பதிகம் "ஏரிசையும்" எனத் தொடங்கும் திருவீழி மிழலைப் பதிகத்தின் ஆறாந் தேவாரக் கருத்தை இணைத்து உணர்ந் தாலேயே தெளிவுறுவதாகும். அத்தேவாரத்தை நோக்குக.

"அகனமர்ந்த அன்பினராய் அறுபகை செற்று
ஐம்புலனும் அடக்கி ஞானம்
புகலுடையோர் தம்முள்ளப் புண்டரிகத்து
உள்ளிருக்கும் புராணர் கோயில்"

என்பன அத்தேவாரத்தின் முன்னிரண்டு வரிகள். புராணர் என்பது பழமையானவர் என்ற பொருள் தருவது. அதே பொருளில் நாவுக்கரசரும் "பாடிப் பெற்ற பரிசில் பழங்காசு" என்று குறிப்

பிட்டார். அப்பாட்டின் பின் இரண்டடிகள் மணநிகழ்ச்சியை விவரிக்கின்றன. இங்கே அமைந்த கோலம் மணவாளக் கோலம் என்பது முன்னே விளக்கப் பெற்றது. ஏழு பகுதிகளில் இணைந்தால் முழுமை. ஆறுவது பகுதியும் சிவம்பெருகக் கலக்கும் நிலை. ஒரு கூறு மட்டுமே விஞ்சி நிற்கிறது. எனவே, ஒரு சிறு வேறுபாடுதான் நீங்க வேண்டும். மணம் புரிந்த நிலைக்கு அடுத்த நிலையே அந்தண்மை நிலை எனப் பெறும் திருவருள் நிலை. இதுதான் சிவமும் உயிரும் முழுமையாக ஒன்றெனநின்று ஒளிவீசும் முறை. ஏழாவது பகுதியும் இணைந்து விட்டால் ''தாவில் சராசரங்களெல்லாம் சிவம் பெருக்கும் பிள்ளையார்'' என நிறைவுறுகிறார் ஞானசம்பந்தர். அதை ஒட்டி அளிக்கப் பெறும் உணவு முறையே திருவீழிமிழலை உணவு முறை. இவைகளை அடிப்படையாகக் கொண்ட விளக்கங்களைக் காண்க.

(1) தொண்டு நெறி முற்றிய பின்னரே திருத்தொண்டு நெறி வெளிப்படும். அவ்வகையில் தொண்டு நெறியின் தலைமை திரு நாவுக்கரசருக்கு. திருத்தொண்டு நெறியின் விளக்கமாக அமை பவர் ஞானசம்பந்தர். தொண்டு நெறியின் பின்னே மலர்வது திருத்தொண்டு நெறி. திருநாவுக்கரசருக்குப் பின்னே தொடர்ந்து வருவேன் என்றார்.

(2) தொண்டு நெறியின் இணைப்பும் திருத் தொண்டு நெறி யின் இணைப்பும் உலகிற் கலந்த சிவம் விளங்குவதற்குத் தேவை. இது ஆரும் நிலையில் இணையும் விளக்கம். ஆதலினால், இரண்டுபடிகளில் தனித்தனியே காசுகள் வைக்கப்பெற்றன. இங்கே மலர வேண்டிய பகுதியானது அறமும் அறிவும் இணைந்த அருட்பகுதி. தொண்டுநெறி முன்னமே நிறைவு பெற்று விட்ட தாதலின் திருநாவுக்கரசருடைய பொறுப்பு உடனிருத்தல் என்பதே. அவரை, தொண்டுநெறியை முன்னிட்டுக் கொண்டு, அருள் ஞானப் பகுதியை விளக்கும் தொண்டே ஞானசம்பந்தர்க்குரியது. செயற் பட வேண்டியவர் ஞானசம்பந்தரே.

இனி, விழியை விமானமாகக் கொண்டார் என்பதனால் கண்ணைத் திறத்தல் என ஞானம் பெறவைத்த நிகழ்வு உள்ளுறை யாக்கப் பெறுகிறது. திருமாலின் விழியைத் திருவடிகளுக்குக் காணிக்கையாக்கிய நிலைவேறு, கண்ணப்பர் கண்கொடுத்தநிலைவேறு. இங்கே ஞானசம்பந்தர் அனைத்துப்பொருள்களுக்கும், உயிர்களுக் கும் சிவம் விளங்கும்-கண் பெறும் பேற்றை அளிக்கிறார். திருநாவுக் கரசருடன் இப்பணி நடைபெறுகிறது. அறியாமையால் மறைக்கப் பெற்றுள்ளவை ஞானவிளக்கம் பெற வேண்டும். அத்திருக்கண் திறக்கப் பெறுமையே பஞ்சம். நம்பியாண்டார் நம்பிகள்,

''பேசுந்தகையதன்றே அன்றும் இன்றும் தமிழ்விரகன்
தேசம் முழுதும் மழைமறந்து ஊண்கெடச் செந்தழற்கை
ஈசன் திருவருளால் எழில் வீழி மிழலையின் வாய்க்
காசில் மழைபொழிந்தான் என்றும் இஞ்ஞாலங்கவின் பெறவே''

என்றும்,

> "பாடிய செந்தமிழாற் பழங்காசு பரிசில் பெற்ற
> நீடிய சீர்த் திருஞானசம்பந்தன் நிறைபுகழான்
> நேடிய பூந்திருநாவுக்கரசோடு எழில்மிழலைக்
> கூடிய கூட்டத்தினுள் உளதாய்த்து இக்குவலயமே"

என்றும் கூறிய நுட்பத்தை ஓர்ந்துணர்க. இங்கே கூட்டம் சிறப்புப் பெறுகிறது. உலகில் சிவஞானம் எனப்பெறும் அருள் ஞானம் விளங்கக் காரணம் இருவரும் இணைந்து நின்று, படிக்காசு மூலம் நிகழ்த்திய தொண்டே.

மூர்த்தம் இரண்டு என நின்றதன் காரணம்

திருஞானசம்பந்தர் திருவருள் வழிநின்று அருள் வெளிப்பாடு அமையும் செயலொன்று நடைபெற இருக்கிறதாதலின், அவர் நிகழ்த்தும் அருள் வெளிப்பாட்டுச் செயல் காழியைக் கொண்டே நடைபெற வேண்டும் என்ற கொள்கைக் கேற்பவே, மிழலையில் காழிக் காட்சி அமைகிறது. புகலியில் நின்றதே அருளின் தனிநிலை. அந்நிலையே அனைத்து உயிரிலும், உயிரல் பொருளிலும் கலந்துநின்ற நிலை. அதனுற் புகலியைக் கொண்டார். அது பரப்புறு தமிழ்நிலை. அதுவே இறைவன் அருளனுபவமாக நின்று அனுபவமாகும் நிலை. தாழ்ந்ததை உயர்ந்ததாகக் கருதி, தானே வந்து கலந்தான் என்பதே அவன் அருள்நிலை. அவ்வாறு வந்து கலந்த நிலையை அருள்நிலை என்று குறிப்பிட வேண்டும் என்பதற்காகவே மழுவும் மானும் இன்றி நின்ற கோலம் எனப் பெற்றது. மழுவும் மானும் இன்றி நின்ற நிலை என்பதே அருள் மூர்த்தநிலை. மழுவும் மானும் எண்தோளும் முக்கண்ணும் கொண்டு தோற்றமளிக்கும் நிலைக்கும் இலிங்கத் திருமேனிக்கும் உள்ள வேறுபாடு என்ன? இடத்தோடும் காலத்தோடும் இணைந்து நிகழ்ச்சிகளிற் கலந்து கொண்ட கோலம் மழு மானுடன் தோன்றும் கோலம். இலிங்கத் திருமேனி அந்நிகழ்வுக்கு மூலமாக அமைந்த கோலம். அவ்வாறே பதிப்பொருளாக—ஒரு தலத்தின் பதிப் பொருளினுடைய எழுந்தருளும் மூர்த்தமாக நின்ற திருமேனி ஒன்று. அதனை உள்நின்று இயக்கும் திருநீலகண்டத் திருமேனி நேர்நிலைப் படும்போது, அது எல்லா நிகழ்வுகளுக்கும் மூலமானது; அடிப்படையானது. ஆயினும் தனக்கெனத் தனியொரு நிகழ்வை அடிப்படையாகக் கொண்ட அடையாளம் இல்லை. எனவே, குறிப்பிட்ட வரலாற்று நிகழ்வுடன் கூடிய அடையாளங்களுடன் தோற்றமுறுமல் அருளாகவே வந்து ஒவ்வொரு பொருளிலும் உயிரிலும் புகுந்த கோலமே புகலிக்கோலம் என்ற வகையில் அக்கோலம் அமைந்தது. திருவருள் வெளிப்பாட்டுநிலையானது தோற்றம் பெற்றதால் அத் தகைய நிகழ்வு அல்லது அவ்வருவை உள்ளிட்ட செயல் ஒன்று நடை பெறவுள்ளது என்பதை முன்கூட்டியே உணர்ந்தார் ஞானசம்பந்தர். முன்னமே உணர்த்தியமைக்குக் காரணம் அவருடைய பதிகநிகழ்வுகள் உயிர்கள் ஞானவிளக்கம் பெறுதற்குரிய வகையில் அருள் ஞானவிளக்கங்களோயுட் கொண்டவைகளாகவே அமைய வேண்டும்

ஆகையால். இனி, அருள் நிகழ்வுக்குமுன் மழுவும் மானும் உடைய தோற்றத்தில் ஞானசம்பந்தர் கங்காளன் மூர்த்தம் காணுகிறார்; திரு நீற்றுப்பெருமையை ஏற்று, உயிர்களின் பருப்பொருள் தன்மை யாகிய மறைப்பை நீக்கி ஞானவிளக்கம் அமைய நின்ற கோல மாதலின்.

அருளின் நிறையும் ஆற்றுப்படும் தன்மையும்

திருவருள்நிலை என்ற ஒன்றை அருளாளர்கள் பலரும் பேசியும் துய்த்தும் வந்திருக்கிறார்கள். ஆனால், அருளே நேர்நின்று காண்பதும் அருளே முன்னிட்டுக் கொண்டு செயல்படுவதும், அருளையே நேராக நிறுத்திச் செயல்பட வைப்பதும் உலகியலில் இன்று நிகழவைத்துக் காட்ட இயலுமா? இயலும் என்பதையும், எப்படி, யாரால் என்ற வினாக்களின் விடைகள் இன்னின்னவை என்பதையும் நேரே உணர்த்திய பெருமை ஞானசம்பந்தருக்கே உரியது. அதனாலேயே அவர் அருளரசின் முதற்குருவானார்.

"அருளே உலகை ஆள்விப்பது" என்று கூறியது காரைக்கா லம்மையார். ஆள்வது ஒன்று; ஆள்வதை ஆள்விப்பது வேறு. அது தான் அருள். ஆனால், அருளே நேர்நிறுத்தி, நேராகவே செயல் பட வைப்பதற்குத் திருத்தொண்டர்களால் மட்டுமே முடியும் என்றார். சிறுத்தொண்டருக்காக, அருள் நிலையான நீலகண்டமே வந்து நேர்நின்று செயல்படுகிறது திருச் செங்காட்டங் குடியில் என வெளிப்படையாக எடுத்துக் கூறினார். அருளே நேரே வெளிப்படச் செய்வதற்கு இருவகைச் செயல்கள் உண்டு. ஒன்று; உலக இயல்பின் நடைமுறைகளுக்கு மூலமாயமைந்தது அறம். அறத்தினை எதிர்த்து அறம் நிகழாதவாறு தடைசெய்யும் ஆற்றல் கொண்ட எந்த ஒன்றும் அல்லது எந்த ஒருவனும் நேர்நின்று அறத்தை அதன் நிலையில் இயங்க விடாமல் தடுத்தால் அப்போது அருளானது நேரே வெளிப்பட்டு அழிக்க வருகிறது. இவ்வாறு செயற்படுத்திய நிலையில் அட்ட வீரட்டச் செயல் அமைகிறது. இரண்டு: நற்காரியங்கள் செய்யும் போது உண்மையுணராமல், நற் செயல் செய்கிறோம் என்ற ஆணவத்தில் சில தவறுகள் நேரும். விளைவு நேர்ந்ததின் நற்செயல் செய்தவர்களால் அதனைத் தாங்க இயலாமற் போகும். அப்போது அத்தவறுகள் பேருருக் கொண்டு அழிக்க வரும். அப்போது அருள்தானே வெளிப்பட்டு ஏற்கிறது. அதுவே நீலகண்டம்.

இனி, இவ்வாறே வேறு இரண்டு செயல்கள் உள்ளன. அருள் நின்ற இடத்தை உணர்தல். அந்தம் ஆதி என முன்னே விளக்கப் பெற்றது. அந்நிலையில் தானும் தொடர்புகொள்ளுதல். அவர்கள் நடு நின்றார், நடுவு நிலையினர் ஆவர். அந்நெறி நின்றபின் நடுவு நிலைமைக் கும் புறம்பாக நடுவுநிலைமையால் காப்பாற்றப் பெற வேண்டியவை களுக்குத் தீமை விளைத்தல். மன்மதன் சிவன்மேல் அம்புஎய்தல் போன்றவை. நடுவுநிலையில் நின்றவர்களே நடுவு தவறும் போது வெளிப்பட்டு அழிக்கும் நிலை. இதுஒருவகை. அடுத்தது நல்ல வைகள் என நின்றவை தம்முள் தாமே எதிர்தல். இதுவே, மால்

அயன் முர்ணிய நிலை. ஆக, இவைகள் எல்லாம் எதிர்நிலைச் செயல்களின் மூலம் அருள்நிலையை நேர்நிறுத்துதலே. இவர்கள் எல்லாருமே அருளின் அழிப்பாற்றலைக் கண்டார்களேயன்றி அருளைத் துய்த்து ஆனந்தப் படவில்லை.

தனிமனிதன் உலக மனிதனுதல்

இவைகள் எல்லாவற்றுக்கும் மாறுக, காரைக்காலம்மையார் முதன்முதல் இவ்வழியில் ஆய்வு நிகழ்த்தி 'அடிமை' என நின்றுல் அருள்நிலையை நேர்நின்று சந்திக்கலாம் என்றார். ஆனால், வாழ்வில் அவர்களுக்குக் கணவனுல் நேர்ந்த நிலையில் நற்கணத்துள் ஒன்றுக நின்று அவனடியின்கீழ் நிற்றல் என்றனென்றே அருளில் நிற்றலாக அமைந்து விட்டது. அடிமை எனநிற்றல் என்ற மூலத்தைத் தொட்டதும் பதிகம் அருளியதும் ஆகிய இரண்டையும்தொட்டுக் காட்டிய முதன்மை அருளாளர் காரைக்காலம்மையாரே.

திருஞானசம்பந்தர் அம்மரபுக்கு வருகிறார். அவர் அருளின் அடிப்படை இருப்பு நிலையை ஆய்கிறார். இருமையின் ஒருமை என்ற தத்துவ மூலத்தைக் கண்டார். இரண்டன் நடுவில் என்பதன் பொருள் இரண்டும் தம்முள் மாறுகொண்டவை யாதலின் இரண்டையும் உள்நின்று இயக்கும் ஓர் உண்மையே அருள்நிலை என்று கண்டார். அது முன் நிற்கும் இருமையை வாழவைப்பது இருமைக்கு மூலமானது என்று கண்டார். இவ்வாறு கண்ட நிலை மற்றவர்களுக்கும் உண்டு. அவர்கள் ஒன்றைத் தாக்கினர்கள். அடுத்த ஒருபகுதி சினங்கொண்டது. இரண்டையும் அதனதன் தன்மையில் நிறுத்த அது வெளிப்பட்டது; தாக்கியபொருளை அழித்தது.பின் இரண்டையும் சரி நிற்கவைத்தபின்னர் எப்போதும் போல் நின்றது அது. இந்நிலையில் மார்க்கண்டன் வரலாறு பெரிய பிடிப்பை உண்டாக்குகின்றது. அடிமை என நின்றதால், இயல்பையும் தடுக்கிறான். இது ஒரு மாறுபாடு. அடிமை எனநின்ற மார்க்கண்டனுக்காக இயல்பான அறமுறைப்படிச் செயலாற்ற வந்தவனைத் தடுக்கிறான். அடுத்தது, திருநீலகண்ட வரலாறும் அங்கே பேசப்பெறும் நந்தியும். நந்தி என நின்றவர்களே அருளை நேர்நின்று ஏற்று, செயற்படவும் வைக்கிறார்கள். இந்நிலையில் தனி மனிதன் தன்னை நந்தி என்ற நிலையில், மார்க்கண்டன் என்ற நிலையில் உயர்த்திக் கொள்ளலாம். அது தனி மனித வளர்ச்சி; அவன் வளர்ச்சியின் மூலம் சமுதாய வளர்ச்சி. இது ஒரு தனிமனிதன் தன்னை உலக மனிதனுக ஆக்கும் நிலை.

தனித்தலம் தேசமாதல்

அடுத்து, ஒரு பொது இடத்தை உலகமாக ஆக்க முடியாதா? திருநாகேச்சுரப் பதிகத்தில் ஒரு கோயில் தேசமாகும் என்றார். தனி மனிதச் செயலைப் பொதுமையில் ஆற்றுதல் ஒருவகை. இரண்டாவது வளர்ந்தவன் ஒரு பொது இடத்தை அவ்வாறு ஆக்கி விடுவது. இந்த இரண்டு நிலைகளைக் காண்கிறார். முடிவில்,

அறமே மூலம். எனவே, விடையேறியை அமைக்க வேண்டும். விடையின் மேல் இருமை. இணைந்த இருமை. ஒன்றை ஒன்று அடிமைப் படுத்தமுயலும் மாலும் அயனும் போன்ற இருமை அன்று. ஒன்றுல் பயன்பெறுவது மற்றது என்பதுபோன்ற இருமையும் அன்று. திருமால் பெண்மையைப் போகமாக்கிய அத்தகைய இருமையும் அன்று. இணைந்து அழகுமிகுக்கும் இருமை. அவ்விருமையின் இடையில் நின்ற நிலையே அருண்மை. எனவே விடையின் மேல் அம்மையப்பர். இங்கே ஒருவகை விளக்கம் தருகிறது புகலியில் புண்ணியம்.

பூவும் புனலும் சொரிதல், துதிபாடி நிற்றல் என்ற இந்த இரண்டும் இருகூறுகளை வளர்க்கின்றன. முழுமையாக வளரும் நிலையில் இடைநின்ற அருளும் பெருகித் தெரிகிறது. ஆலில், ஒத்த அளவில் தான் பெருகுகிறது. நடுவில் நின்ற அருள் இருமையையுங் கடந்து வெளிப்பட்டுச் செயலாற்றியமையை மார்க்கண்டன் போன்றோர் வரலாறுகளிற் காண முடிந்தது. எனவே அதுமுற்றுக அடிமையாதல். பூவும் புனலும் சொரிதல், துதித்துப் புகழ் பாடுதல், முற்றுக அடிமையாதல் இவைகளைத்தான் இருமை என நிறுத்தி, தொண்டு நெறியில் அருள் வளர்ச்சியுண்டு என அமைத்தார். இனி, ஒருமையின் பெருமை என்பது இருமையுங் கடந்தார்பால் அமைகிறது. எனவே முற்றுக அடிமையானவர்களால் அருள்நிலை பெருகிற்கும். அப்போது முன் இரண்டாக இணைந்த நிலை என்னுகும். உள்நின்ற அருளே பெருகித் தன்செயலால் ஏனைய இரண்டையும் தன் வெளிப்பாடுகளாக நிறுத்தும். அருளே பின் நிலைச் சார்வாக நின்ற மூர்த்தம் அம்மையப்பர் மூர்த்தம். அருளே மிகுந்த போது அதன் வெளிப்பாடாக அமைவது பெண்ணில் நல்லாளொடு அல்லது பெருக்கு நீரவளொடு பெருந்தகை எனநின்ற நிலை. அருள் இடைநிற்க அம்மையப்பராய் நின்றநிலை வேறு. பெருக்கு நீரவளுடன் பெருந்தகை என நிற்றல்வேறு. முன்னது இருமையின் இடைநின்ற ஒருமை. பின்னது ஒருமையின் பெருமை. என் பதே தத்துவம். இதனைத் திருஎழுகூற்றிருக்கையில் ஞானசம்பந்தர் அமைத்தார். சேக்கிழார் "பெருமையால்" என்று தொடங்கும் அடியவர் பெருமைப்பாடலில் அமைத்தார்.

எனவே, திருக்கோயிலில் அம்மையப்பர் என்ற நிலையில் இடையில் அருள் தோற்றம் மறையநிற்பது முதல்நிலை. இதனை அம்மையப்பராம் பரப்பில் அருள் அடங்கி மறைந்து நின்றநிலை. பின்னது அருளே பெருக்குநீரவளொடும் பெருந்தகையாக நின்றநிலை. இதனைத் தமிழ் பரப்புறுநிலை என்றும், பிராட்டி பெருந்தகை என இரண்டாக நிற்பதே அருள் எனவும் சுட்டிக்காட்டி, அனுபவநிலையில் தமிழ் என்றும், நெறியால் திருநெறி என்றும், அதனை எய்துவிக்கும் வழியைத் திருநெறியத் தமிழ் என்றும் அமைத்துக் காட்டினர். இவ்வகையில் அவர் பதிகம் காலங்கடந்தும் தனிமனிதனைத் தேசமாக்கும். அவைகளே, திருக்கோயிலையும் தேயமாக்கும். இங்கெல்லாம் அருளாட்சியே இயங்கும், இயக்கும்.

வாசிபடாமை, படுதல், தீர்தல் — உள்ளுறை

அருளே உலகை ஆள்விப்பது என்ற நிலையை மாற்றி, அருளே உலகை ஆள்வது எனநிறுத்தி, அருளே எல்லாப் பக்கங்களிலும், உள்ளும் புறமும், விளங்க அதனுள் எந்த ஒரு பொருளும் நிற்கும் என்ற நிலையை விளக்குவதே முத்துச் சிவிகை. இந்நிலையை எய்துவதற்குத் தொண்டு நெறியே அடிப்படை. தொண்டு நெறிக்கு மூற்றுக ஓர் இலக்கியமாக நின்றவர் அப்பரடிகளே. அந்நெறியில் அவரைப்போல் முன்னும் இல்லை; பின்னும் இல்லை. அதனாலேயே அவரை முன்போகப் பணித்துப் பின் தொடர்கிறார். இந்நிலையில் படிக்காசு நிகழ்ச்சி அமைகிறது.

பதிகம் பாடுதல், பதிகம் பாடியபின் படிக்காசு அமைத்தல் என்ற வரலாற்று நிகழ்வினை உண்மையான நிகழ்வாக ஏற்கவேண்டும். பயன் வாசி படாக்காசு ஒன்று. வாசிபடும் காசு மற்றொன்று; ஆனால், ஞானசம்பந்தர் பணி வாசிதீரப் பதிகம் பாடுதல். தீர்தல் என்பது இருப்பதை நீக்குதல். வாசியைத் தீர்ப்பதற்குக் காசு கொடு என்று கேட்பதாயின், வாசிபடாக் காசு கொடு என்றுதான் கேட்க வேண்டும். படுதல், படாமை என்ற வழக்கினை நீக்கி, தீர்தல், என்ற வழக்கை அமைக்கிறார்.

இனி, படிக்காசு என்பதற்குப் படிமைக்காசு என்பதையே பொருளாகக் கொள்ள வேண்டும். இந்நிகழ்ச்சியைத் திருநாவுக்கரசரை வரலாற்று நாயகராக வைத்துக் கூறப்புகுந்த சேக்கிழார்,

> "ஈசர் மிழலை இறைவர் பால் இமையப்பாவை திருமுலைப்பால்
> தேசம் உய்ய உண்டவர்தாம் திருமாமகனார் ஆதலினால்
> காசு வாசியுடன் பெற்றார் கைத் தொண்டாகும் படிமையினால்
> வாசி இல்லாக் காசு படிபெற்று வந்தார் வாகீசர்"

என்றும், திருஞானசம்பந்தரை வரலாற்று நாயகராக வைத்துக் கூறப் புகுந்த சேக்கிழார்,

> "திருஞானசம்பந்தர் அதனைக் கேட்டுச் சிந்திப்பார் சிவ
> பெருமான் நமக்குத் தந்த
> ஒருகாசு வாசிபட மற்றக் காசு நன்றாகி வாசி
> படாதொழிவான் அந்தப்
> பெருவாய்மைத் திருநாவுக்கரசர் தொண்டாற் பெறுங்காசாம்
> ஆதலினாற் பெரியோன் தன்னை
> வருநாள்கள் தருங்காசு வாசி தீரப் பாடுவன் என்
> றெண்ணியது மனத்துட் கொண்டார்"

என்றும் அமைத்தருளியுள்ளார். திருநாவுக்கரசர் வரலாற்றில் சேக்கிழார் கவிக் கூற்றாக அமைக்கின்றார். திருஞானசம்பந்தர் வரலாற்றில் திருஞானசம்பந்தரே தம் உள்ளத்தில் எண்ணுவதாக அமைக்கின்றார்.

குழந்தைமையும் தாய்மையும்

திருநாவுக்கரசர் புராணத்தில் சேக்கிழார் இருவர் பெறுங்காசு களுக்கும் காரணம் சொல்கிறார்.

ஈசர் மிழலை இறைவர் இமையப்பாவை முலைப்பாலைத் தேசம் உய்வதற்காக உண்டார் ஆதலின் அவர் திருமாமகனார். ஆகை யினால் காசு வாசியுடன் பெற்றார். கைத்தொண்டாகும் படிமை யினால் வாசி இல்லாக் காசு பெற்றார்.

முதலில் திருமாமகனார் ஆனமைக்குக் காரணம் என்ன? திரு முலைப்பாலருந்தியமை காரணம். திருமுலைப்பாலானது இயல்பாகப் பெருகுவதே யாயினும் குழந்தையின் முகம் நோக்கிய ஈர்ப்பினால் பெருகுவது, குழந்தைக்காகவே பெருகுவது, குழந்தையாலன்றி வேறு எவராலும் பெற இயலாதது; தாயாலன்றி வேறு எவராலும் கொடுக்க இயலாதது; கொடுத்தல் பெறுதல் என்ற முறையும் நேர் நின்று பெறுதலே. தாயிடம் இருப்பினும் தாயே பயன்பெற இயலாது. கடவுளேயாயினும் தாயென நின்றுள்தான் குழந்தைகளுக்குக் கொடுக்க முடியும். அது குழந்தையின் உடலை வளர்ப்பது மட்டு மன்று; நோயை அழிப்பது; மருந்து என்பது போல வெவ்வேறு பெயர்களைக் கொள்ளாமல் உணவு எனநின்றே, மருந்து முதலிய மற்றவைகள் தரும் பயனையும் இணைத்துத் தரவல்லது. முலைப்பாலில் தாய் குழந்தை ஆகிய இருவருக்கும் ஒத்த உரிமையா; உயர்வு தாழ்வு உரிமையா எனில், குழந்தைக்கே உயர்வுரிமை கொடுக்கப் பெறு கிறது. தாயின் உடம்பில் பரவியிருக்கும் பல்வேறு ஆற்றல்களுக்கு உயிர்ப்புத்தன்மையை ஊட்டி, அவைகளுக்குச் செயல் வடிவம் கொடுத்து, பின்னர், அவைகளைக் கொடுக்கவும் வாங்கவும் ஆகியநிலை களுக்கு ஏற்படப் பாலாந்தன்மை பெறுகின்றது. எனவே, குழந்தை என ஒன்று நிற்றல் வேண்டும். தாயாதற்கு முன் தன்னைக் கொடுத் தாள்; தாயானபின் தன்னையே கொடுத்தாள். கொடுத்தலால் முழு மையையும், முழுமையான கொடையினால் முழுமையான இன்பத் தையும் பெறக் காரணமாக நின்றது குழந்தை. ஆனால், குழந் தைகள் வரலாற்றில் புதுமையை உண்டாக்கியவர் சம்பந்தர் குழந்தையாக நின்று பாலினை ஏற்றார். ஏற்ற அதனைத் தான் சுவைத் துத் தன்னை வளர்த்தலே குழந்தையின் இயல்பு. அவ்வாறே தன் னுடைய பல்வேறு வகையான ஆற்றலையும் முற்றுங்கக் கொடுக்க வல்ல நிலையே தாய்மையின் இயல்பு. இரண்டையும் ஒரே காலத்தில் ஒரே பொருள் செய்ய இயலாது. செய்தமைத்த குழந்தை ஞானசம் பந்தக் குழந்தை ஒன்றே. தான் காரணமாக நின்று முலைப்பாலைப் பெருகச் செய்து ஏற்றது; ஏற்ற அவ்வளவையும் தன்னுடைய தனி மையால் அதனை நேர் நின்று பெற்ற ஒரு குழந்தைக்கு மட்டுமே யன்று; பல குழந்தைகளும், வெவ்வேறு கால அளவைகளிலும் நின்று பாலைப் பருகி, பயன்பெறுமாறு வழங்கியது அக் குழந்தை. ஒரு தாய் ஒரு குழந்தைக்குக் கொடுக்க முடியும். ஞானசம்பந்தரே பல குழந்தைகளுக்கு, நேர் நின்று கொடுக்கும் முறையில் அன்று, பல்வேறு முறைகளிலும், பலவேறு காலங்களிலும்

பெறுமாறு வழங்கிய குழந்தை. ஒரு தாயின் ஒரு குழந்தை யாய் நின்று பெற்றதை, ஒரு தாயாய் நின்று, பல்வேறு கால, தேச இடைப்பட்ட குழந்தைகளுக்கெல்லாம், பல்வேறுபடிநிலை வளர்ச்சிப் பயன்களை, பல்வேறு படிநிலைகளில் கொடுத்த தாயே ஞானசம் பந்தர். அம்மையப்பனுக இறைவன் நின்ருன் எனில், இறைவனே அம்மையப்பனுக அமைத்து, முலைப்பால் பெருகவைத்து, தான் குழந் தையாய் நின்று பெற்றதைத் தாயாக நின்று கொடுத்து, எல்லா உயிர் களையும் தம்குழந்தை என அமைக்காமல், அவைகளையெல்லாம் அம்மையப்பனுக்கே குழந்தைகளாக ஆக்கி, உலகத்தவர்களையெல் லாம் பால் அளித்து, உணவளித்து ஊட்டும் உலகத்தாய் தந்தையர் களாக ஆக்கிய தன்மையுடைய ஒரே குழந்தை திருஞானசம்பந்தரே. தன் தாயை உலகத் தாயாக ஆக்கிய பெருமை போலவே, எவ்வுயிர் களையும் அவைகள் பெற்று வளர வேண்டிய வளங்களை யெல்லாம் தாம் கொடுத்தும், அவ்வுயிர்களை அம்மையப்பராம் தந்தை தாயர்க்கே நற்றுய் தந்த நற்பேற்றுக் குழந்தைகளாகவே ஆக்கிய தாயும் ஞானசம்பந்தர் ஒருவரே. ஏனைய உயிர்களை அவர் மாற்றுந் தாய்க் குழந்தைகளாக நிறுத்தவில்லை. தாய் என நின்று தம்மையே கொடுத்த நிலையானது தியாகமே. ஆனுல், கொடுத்தவள் 'தாய்' என்ற பெயரை ஏற்று, வைத்துக் கொண்டாள். தாய் என நின்ற பெயரை யும் தியாகம் செய்ய அவளால் இயலவில்லை. ஞானசம்பந்தர் கொடுத்தலால் தாயே, தாயென நின்ற அப்பெயரையும் தம்மிடம் வைத்துக் கொள்ளாமல் குழந்தையாகவே நின்ருர் எனின், அத் தகைய தியாகம் எந்த ஒரு தாய்க்கும் அமையவில்லை.

அனேத்து நற்பேறுகளும் இணைந்த ஒரு இணைப்புக்கு ஈசத்வம் என்று பெயர். ஈசத்வம் உடையவன் ஈசன். யார் எது வேண்டினும் கொடுக்கும் தன்மையே ஈசத்வம். கொடுக்க முடியும் என்ருல் கொடுக்க முடிந்தவன் எல்லாவற்றையும் உடையவன் என்பதே. அந் நிலை ஈசனைப் பாடிப் பதிகமாக்கினர். பின்னர், இப்பதிகத்தைப் படித் தவர் ஈசனுய் நிலவுவர் என்ருர்.

'ஏரிசையும்' என்றுதொடங்கும் திருவீழிமிழலைத் திருப்பதி கத்தின் திருக்கடைக் காப்பினுள் "சம்பந்தன் பரிந்துரைத்த பதிகம் ஏத்தி, இன்னிசையாற் பாட வல்லார் இரு நிலத்தில் ஈசன்எனும் இயல் பினரே" இது ஞானசம்பந்தர் திருவாக்கு. இத் திருவீழிமிழலைத் திருவாக்கை உளங்கொண்ட சேக்கிழார், ஈசர் மிழலை இறைவர்பால் இமையப் பாவை திருமுலைப்பால் தேசம் உய்ய உண்டவர் என நிறுத்தி, எவ்வாறு இந்தத் தேசம் உய்ந்தது என்ருல், ஈசனுகவே அனைவரும் நின்ருர்கள் ஆனமையால், தேசம் என்பது உயிரற்ற பொருளையும் உளங்கொண்டது, என்பதை நம்பியாண்டார் நம்பிகள் குறிப்பிட்டருளினர்கள்.

"உளதாய்த்து இக் குவலயமே"

என்பது அவர்தம் அருளுரை. 'உளதாய்த்து' என்பதற்கு இருப்பதா யிற்று என்பது பொருளன்று. உடையான் என்ற பொருளைத் தருவது.

உலகத்து நின்ற ஒவ்வொன்றும் ஈசனும் நீலிபெற்றது. ஈசனைப் பாடிய ஞானசம்பந்தர் உலகத்துயிர்களையும் உயிரால் பொருள் களையுய் ஈசனுக்கினர்.

உலகியலில் இன்று "சம்பந்தன் தன்னைப் பாடினன்" என்ற தொடர் ஒன்றற்குத் திருஞானசம்பந்தர் திருக்கடைக் காப்புகளில் தன்னைப் பெருமை பெறச் சொல்வதைத் தன்முன்னப்பு எனக் கொண்டு பொருள் கூறுவர். எல்லாத் திருக்கடைக் காப்புகளிலும் தம்மை உடைமைப் பொருளாகவே அமைத்துப் பாடியுள்ளார். காழியான், புகலியான் என்பவைகட்குக் காழியில் குடியுரிமை பெற்ற அடிமை என்பதே பொருள். இதன் நுட்பம் அமைய நம்பி யாண்டார் நம்பிகள் திருஞானசம்பந்தர் என்ற ஒரு பெயரால் இவ் வுலகில் நின்ற உத்தமன் என்றார். சம்பந்தம் — தொடர்புடையவன் என நிற்றலே. இதனை மேலும் விரித்துரைக்கும் வகையில்

> "வல்லார் பிறப்பறுப்பர் வண்மைநலம் கல்வி
> நல்லாதரவு இன்ப ஞானங்கள் — எல்லாம்
> திருஞானசம்பந்தன் சேவடியே என்னும்
> ஒரு ஞானசம் பந்தம் உற்று.

என்று அருளினர் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகள் தம் நால்வர் நான் மணி மாலையில். இதனை மெய்கண்டார் கூறும்

> "தம்மை உணர்ந்து தமையுடைய தன் உணர்வார்"

என்ற அவையடக்கத்தில் வரும் 'தன்' என்பதன் பொருளோடு இணைத்துக் காண வேண்டிய தொடரே, "சம்பந்தன் தன்னைப் பாடி னன்" என்பது.

குழந்தையென நின்று வாங்கியதைத் தாயென மாறி நின்று உலகுக்கு, உயிர்களுக்கு அது வழங்கி விட்டது. இதனை,

> "பூவான் மலிமணி நீர்ப் பொய்கைக் கரையின் இயற்
> பாவால் மொழி ஞானப் பாலுண்டு — நாவால்
> மறித்து எம் செவியமுதாய் வார்த்த பிரான் தண்டை
> வெறித்தண் கமலமே வீடு"

என, அவர் வாயில் ஏற்ற முலைப்பாலை, உள்ளே விழுங்காமல் நாவா லேயே மாற்றி எம் செவிக்கு அமுதமாகக் கொடுத்து விட்டான் என் பதால் அவன் துய்ப்புநிலை இல்லாத தூயோன். எமக்காம் முறை யில் மறித்து வழங்கியதில் தாய் என நின்றாலும், அவன் அப் பெயரையும் நீக்கிய தனிப்பெருந் தன்மையான் என விளக்கிய பெருமை நால்வர் நான்மணிமாலை அருளிய சிவப்பிரகாச அடி களையே சாரும்.

நாட்கூறும் திருவமுதும்

இனி, வாசிபடுதல் படாமை என்ற கருத்தைத் தோற்றுவிக்கும் காரணமாக நின்றது "நாட்கூறு திருவமுது செய்தல்" என்பதே. இது

சைவ சமயத்தின் உயிரோட்டமாக நின்ற பண்பாட்டுக் கூறு. நாட் கூறு என்பது, ஒரு பகற் போதினை இரண்டாகப் பிரித்தால் நடுநின்ற காலம். பகற்காலத்துக்கு அந்தமாக இரவின் ஆதியாக நின்றவன் அந்தம் ஆதி எனவும் அந்தி எனவும் அமையப் பெற்றான். அது அவனை உணர்ந்து வணங்கும் நிலைமையில் அவனை தலைவன் என அறிதல். நாட்கூறு என்பது நடுநாள் எனப் பெற்றது. பின் 'நடு' என நின்றது. அந்தம் ஆதி என நின்றவன் நடுவும் ஆனான். இதனை "அந்தம் ஆதி நடு ஆனான் காண்" என்பதனோடு இணைக்கக் கூடாது. அந்தம் நடு ஆதி ஆனான் என நிறுத்திக் காண வேண்டும். நடுநின்றது, முன்னே மறைந்து நின்றது; இப்போது வெளிப்பட்டு நிற்கிறது. இங்கே அப்பன் பலியேற்றுவர, அம்மையானவள் அவனுக்குப் பூசை செய்து உணவருத்துகிறாள். இத்தத்துவக் கருத்தைத் திருவையாற்றில் இறைவனைப் பூசிக்கும் சிவாசாரியாராக இறைவனே வந்து நின்று தானே தன்னைப் பூசித்துக் கொண்டான் எனக் கூறி "ஐயாறதனிற் சைவன் ஆகியும்" என்ற மணிவாசகத்துக்கு விளக்கம் கூறுவர்.

இடை நின்ற அருள் நண்பகலில் வெளிப்பட்டு அனைத்துயிர்களையும் தாமே நேர்நின்று உணவூட்டுகிறது. நள்ளிரவில் அவைகள் இவ்வாறு துய்த்தவைகளுக்கெல்லாம் உரிய ஞானத்தை நள்ளிருள் நட்டம் ஆடுவதன் மூலம் அதுவே வழங்குகிறது. அருள் வெளிப்பட்டு உணவூட்டும் காலத்தில் சைவர்கள் உணவு கொள்ள வேண்டும். அப்போதுதான் அருளானது நேர்நிலையில் நம்மோடு தொடர்பு கொண்டு உண்பிப்பானாக நிற்க, உண்பானாக அமைந்து நாம் ஆக்கம் பெறுங் காலம். நாட்கூற்றில் அமைவதே அமுதம்; அமுது — இறவாமையை நல்குவது. ஏனெனில், அருளே நேர்நின்று தொடர்பு கொள்வதால் அமுதாகின்றது. ஏனைக் காலங்களில் உண்பது 'சாதம்'. அது முன்னர் இறக்கவைத்துப் பின்னர்ப் பிறக்க வைப்பது. வெந்து பயன்படுவதற்காக வைக்கப் பெற்ற நீரும் சுவறிவிட நின்ற ஒன்று ஆதலின் சுவறப்பெற்றது சோறு என்றுயிற்று. சோர்வை உறுவிப்பது சோறுறு என நின்று, பின் 'சோறு' என மாறியிருக்கலாம். 'அமுது' எனலே சைவ வழக்கு. நாட்கூறு என்ற நேரத்தில் அமைந்தால் அது திருவருளே நேர்நின்று கொடுப்பதால், உலகியலில் காணப் பெறும் சோறூட்டினவர், சோறு போட்டவர், விருந்து புரந்தவர் என்பன போன்ற வேறுபாடுகள் இடம்பெறா. ஆகையினால், நாட்கூறு திருவமுது அமைத்தல் ஒருவகை முக்கிய நிகழ்வு. திருவீழிமிழலையில் நடைபெற்றது வேறுவகை. ஒன்று நாட்கூறு தொடங்குவதற்கு அந்தமாக நின்றது. இன்னொன்று நாட்கூறு முடிந்த நிலையில் ஆதியாக நின்றது. நடுவில் உள்ள அருள்நிலை அந்தியென நின்றது. திருநாவுக்கரசர் திருமடத்தில் திருவமுது பகல் பன்னிரண்டு மணிக்குள் முடிந்துவிட்டது. அது முற்பாடு. திருஞானசம்பந்தர் திருமடத்தில் திருவமுது பிற்பாடு என நின்றது. காரணம் பறையறைந்து அடியவர்களை வரச் செய்ததலின் கூட்டமாக வெளியிடங்களிலிருந்தும் வரும் போது, உணவைத் தயாரித்து வைத்தபின் காலந்தாழ்ப்பதைக் கூட்டம் ஏற்காது. மேலும்,

அவரவர்கள் பசிநிலையை நோக்கும்போது (வற்கடம் காரணமாக) விரைந்து அமுது அளிப்பதே கடன் என்ற முடிவுக்கும் வர வேண்டிய நிலைமை உணவை வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு உண்டு. அங்கே முன்னர்த் தொடங்கியது முடிவுக்கு வரும் நிலை; திருஞான சம்பந்தர் திருமடத்தில் தொடக்க நிலை. இது அந்தம் ஆதி என நின்ற தலைவர்களின் நிலை. அப்பரடிகள் தொண்டுநெறியின் முற்ற முடிந்த முதிர்ச்சி பெற்ற இறுதிநிலையில் நிற்கிறார். திருஞானசம்பந்தர் அருள் நெறியாம் திருத்தொண்டு நெறியின் இரண்டாம் படியில் நிற்கிறார். எனவே, முற்பாடும் பிற்பாடும் அமைகிறது. அப்பரடிகள் முன் செல்லப் பின்செல்கிறார் திருஞானசம்பந்தர்.

ஞானசம்பந்தரின் புதிய உத்தி முறை

ஆயினும் திருவமுது அமைக்க இந்தநிலை ஒவ்வாது. இரு நிலைகளும் தம்முள் தனித்தனி இயங்கினாலும், இரண்டையும் இணைத்த ஒருமையானது இயங்க முடியாமல் தடை உண்டாகிறது. அந்தத் தடை தேவை. அந்தத் தடை இல்லையானால் ''நடுநின்ற'' அந்த அருள், உள்ளே மறைய நின்ற ஒன்று வெளிப்பட்டு விடும். இது ஒரு புதிய உத்தி முறை. ஆண்மையும் பெண்மையும் நிற்க இடையில் நின்றது அருள். ஆண்மை முழுமையாகவும் பெண்மை முழுமையாகவும் செயற்படுவது இயற்கையேயன்றி முரண் அன்று. இரண்டும் முழுமையாகச் செயல்படும்போது இரண்டன் இணைப்பு என்பது போலியாக அமைகிறது. இருக்கிறது போலத் தோற்றுகிறது. ஆனால், மாலும் அயனும் தம்மளவில் முழுமையாக இயங்கினாலும் மோதல் வந்தது. ஆனால், ஞானசம்பந்தர் அமைப்பது இரண்டும் முழுமையாகச் செயல்பட்டால், மோதல் வராது. இணைப்பு எப்படியிருக்கும் போலியாக அமையுமா உண்மையாக அமையுமா? இரு நிலைமைகளில் முழுமை தோன்றினால், அந்தமுழுமைகள் தமக்குள் போர் தொடங்காமல் இருக்கலாம். அவ்வாறே, இணைந்து நின்று நன்மையை வளர்க்கவும் செய்யாது. ஆனால், இரண்டும் தம்மளவில் முழுமைபெறுதலைக் குற்றம் என்று சொல்ல முடியாது. ஆனால், குற்றத்தை எந்த ஒன்றன்மேல் அமைப்பது? எந்த ஒன்றன் மேலும் அமைக்க முடியாது. இப்படி ஒரு இடர்ப்பாடு அமையும் போது நடு நின்ற ஒன்று தானே வெளிப்பட்டுவந்துவிடும். ஆனால், அது முன்னே, இரண்டற்குள் மறைந்து நின்றது போல, இப்போது இரண்டையுந் தன்னுள் நிறுத்தி, தான் அவைகளிலேயே 'பெருமை' என்பது தோன்ற நிற்கும். இதுவே, ஞானசம்பந்தர் அமைத்த தனிப் பெருவழி. இக் கொள்கையைப் புகலிக் கொள்கையிலிருந்து உருவாக்கினார். இதனைப் 'புறவத்தவன்' என்ற பெயருடன் இணைக்கிறார்.

நாம் புறமே காணும் அம்மையப்பர், ஆண் பெண் என்பவைகளுக்கு அப்பால், இடையே, இவற்றுக்குப் புறமாக நின்றவன். இவ் விரண்டுக்கும் முற்றுகப் புறம் ஆனவன் அல்லன். இவ்விரண்டையும் மூலமாகக் கொண்டுதான் அவனை அனுமானித்துணர முடியும். எனவே, நேராகக் காணப்பெறும் நிலைகளை முதலில் ஏற்று, அந்நிலை

களுக்கு அப்பால் இணைந்து நின்று வாழ்வித்துக் கொண்டிருப்பவன். புறவத்தவனுகிய அவனை வெளிப்பட நிறுத்தி, முன்னுள்ள இரண்டையும் அந்த ஒன்றினுள் நிறுத்தி விட்டால், இரண்டையும் தன்னுள் இருத்தி வாழவைக்கும் சுற்றுக அவன் அமைகிறன். புற அமைப்பு, முன்னே அம்மையப்பரின் நடுவில் அருள்மறைய நின்றது. இப்போது அருளின் மத்தியில் அம்மையப்பர். ஆனல் அவ்வாறு அருள் தன்னள வில் தனித்து நில்லாது. இடையில் நின்ற அது அவ்விரண்டையும் தாமாக ஆக்கியது. அம்மையப்பர் இப்போது அருளம்மையப்பர். அப்படி அருளாக நின்ற அம்மையப்பராம் நிலையே "பெருக்கு நீரவ ளொடும் பெருந்தகை" என நின்ற நிலை. அம்மையப்பரின் நிலைகள் பெருமை என நின்ற பண்பில் ஒடுங்கி நிற்கின்றன, அவ்வளவே.

"அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர் என்றறிக"

என்பது முன்னர் நின்ற நிலையாகிய அருள் மறைய நின்ற நிலை; பின் னர் நின்ற நிலை, மறைந்தது வெளிப்பட அதனுள் அம்மையப்பர் நின்ற நிலை. இதுவே தமிழ் நின்ற நிலை. முத்தமிழ் என்பது மூன்றும் தனித்தனி நிற்றலன்று. ஒன்றில் ஏனை இரண்டு. இவ்விரண்டு நிலை களை மிகத் தெள்ளியதாக விளக்கிய தொடரே, ஞானசம்பந்தரின்

"இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்"

என்ற திருவழுகூற்றிருக்கைத் தொடர். ஒருமையின் பெரியரே சிவனடியார் எனப்பெறும் திருத்தொண்டர். திருநெறி என்பதே ஒருமையின் பெருமையினை உணர்த்தும் திருநெறி. அதுவே "திருநெறிய தமிழ்."

இதன் அருமையுணர்ந்த திருநாவுக்கரசர், திருப்பூந்துருத்தியில் தமக்கேயுரிய அரச நிலையில் நின்று நினைந்து நினைந்து உருகுகிறார். தொண்டு நெறியின் மேல் வளர்வது திருத்தொண்டு நெறி, தொண்டு நெறி கீழாக, திருத்தொண்டு நெறி அதன் மேல் நிற்கவேண்டும். அதுதான் முறை. ஆனல், அன்று என்னை ஆற்றுப்படுத்தியது, அடிகள் எங்கே செல்வது, யான் பின் தொடர்வது என மாற்றி, தொண்டு முன்னுக, திருத்தொண்டு பின்னுக அமைத்துத் தொண்டு நெறியைப் பெருமைப் படுத்தினரே என்ற அருமைச் செயலை உன்னி யுன்னி, தொண்டு நெறியானது தாங்க அதன்மேல் நிற்பது திருத் தொண்டு நெறி என்பதைச் செயலளவில், சம்பந்தப் பெருமானின் சிவிகையைத் தாங்குவதன் மூலம் வெளிப்படுத்தினர். "இவ்வாறு செய்தருளிற்று என்னும்" என்று பேசுவது திருத்தொண்டு நெறி. எவ்வாறு செயத்தகுவது' என்று பேசுவது தொண்டுநெறி. பின்னர்ப் பேசும் வாக்கரசர்,

"காழியினில் வந்த கவுணியர் தம் போரேற்றை
ஆழிமிசைக் கல்மிதப்பில் வந்தார்தம் அடிவணங்கி,

"வாழி திருத்தொண்டென்னும் வான்பயிர்தான் ஓங்குதற்குச்
சூழும் பெரு வேலியானீர்" எனத் தொழுதார்.

என்று கூறுவதன் கருத்தை உன்னுக.

முன்னே அம்மையப்பரின் இணைப்பில் நின்ற ஒன்று வாசி படாதது, வாசி என்பது வசிக்கும் பொருளுக்கு வாசி என்பது பெயர். இப்போது வாசிபட்டது அம்மையப்பராம் நிலையில் வெளிப்பட்டுத் தன்னைத் தோற்றிக் கொண்டு, அம்மையப்பரைத் தன்னுள் அமைத்துக் கொண்டது. இந்நிலையில் உள்ள வேறுபாடு உண்டு. முன்னுள்ள நிலையை நினைவுறுத்தும் நிலை. அது தீர்தல் வேண்டும், தீர்ந்தநிலை தான் 'தமிழ்'. ஒன்று தான் மூன்று. மூன்று என்ற கொள் கையைத் தமிழ் என்று சொல்லும் சொல் அழிக்காது. தமிழ் என்று சொன்னால் எந்த ஒரு பிரிவுக்கும் தனித்த பெயராக அமையாது. உயர்வு தாழ்வு அற்ற ஒருமையின் பெருமைநிலை. அதுவே தமிழ் நிலை. இதையே ஆய்த எழுத்தின் நிலை என்ப.

பூவும் புனலும் சொரிதல், ஏத்தித்துதித்தல் என்ற இருமையின் ஒருமையே தன்னை அடிமையாக்கும் தொண்டு நெறி. முன் சொன்ன இரண்டும் வசிப்பவை. இடம் தொண்டு நெறி. பின்னர் இருமை யின் ஒருமையாக நின்ற தொண்டு நெறியிலிருந்தே திருத்தொண்டு நெறி மலர்கிறது. ஒருமையின் பெருமையே அது. பூவும் புனலும் சொரிதலும் ஏத்தித்துதித்தலுமே அம்மையப்பர் என்ற இருமை. அத்தகைய இருமை அருள்நெறியாகிய திருத்தொண்டு நெறியில் வசிக்கின்றன. எனவே அவை வாசிகள். அவை வசிக்கும் இடம் திருத்தொண்டு. திருத்தொண்டு நெறியின் முதிர்வில் முன்னைய இரண்டும் உண்டு. வசிக்கும் இடம் வசிக்கும் பொருள் என்ற இரண்டற்கும் இதுவரை இருந்து வந்த 'வாசி' (வேறுபாடு) தீர்ந்து விட்டது. தீர்ந்துவிட்ட நிலையை நமக்கு அறிவிக்கும் பதிகமே "வாசி தீரவே காசு நல்குவீர்" என்ற பதிகம்,

இனி, உயிர், அதனை அழுத்தி நிற்கும் மலம் என்ற இரண்டும். அவற்றினுள் சிவமும் இருந்தது. மலம் இடமாக உயிரானது வாசி யாக, பின்னர் உயிரானது இடமாக, சிவம் வாசியாக நின்றநிலை கேவலநிலை.

மலமும், உயிரும் வெளிப்பட நிற்க, இவற்றை இடைநின்று தாங்கும் பொருளாக நின்ற நிலையும் உண்டு. அங்கேயும் சிவம் அல்லது அருள் வசிப்பதே. இந்நிலையில் பல மாற்றம். மாற்றத்தில் முக்கியமானது மலம் சத்தியாக அமைதல்.

மூன்றும் நிலையில் சிவம் விளங்க அதனுள் உயிரும் உடம்பும் அடிமை என நிற்றல். இங்கே சிவத்தின் செயல் உயிரில் பட்டு வெளிவந்து, பின்னர் உடம்பில் பட்டு வெளிவந்து விளங்கும். ஆனால், உயிரும் உடம்பும் அடிமை எனத் தம்மை நிறுத்தி விடுவ தால் அவை தம்மைச் சாக வைத்துவிட்டு, சிவம் வெளிப்பட நிற்கும் வழிகளாக மட்டும் அமைகின்றன. இந்நிலையே போதும் என்றனர் சிலர். ஆனால், சம்பந்தர் மூன்று நிலைகளும் முற்றுக வாழவேண்டும். சிவம் உயிரில் உடலில் பிரகாசிக்கட்டும். பெருமை மிளிரட்டும். உயிரும் உடம்பும் இணைந்து நிற்கட்டும். மும்மை அழியவேண்டும்.

முழுமையில், மும்மையின் முழுமையில் பெறும் இன்பம் ஒன்று உண்டு. நீங்க வேண்டுவது 'வாசி' வேறுபாடே. இதுவரை இருந்து வந்தது இல்லாமற் போகட்டும் என்பதே வாசிதீரப் பாடும் நிலை.

தொண்டுநெறியின் முதிர்வால் அருளானது செயற்படும்; ஆசையாலும் வசிப்பதாகும். ஆனால், வாசி என்று சொல்லுக்கு அது உரிமையுடையதாகாது. ஏனெனில், வசிப்பதற்குரிய இடம் இல்லாமையால் "வாசி" எனப்படாதாயிற்று. இதுவே, அப்பரடிகள் நிலை, திருத்தொண்டு நெறியில் அருள் வெளிப்பட்டு நின்று அம்மையப்பர் என நின்ற ஒன்றைப் பற்றி விளங்குகிறது. அருள் ஆட்சிப்படுகிறது. அம்மையப்பர் பெருமையுடன் விளங்குகிறார்கள். எனவே, வசிக்கும் இடம், வசிப்பது என்பன வாசிபட்டன. இதுவே, சம்பந்தர் வாசிதீரப் பதிகம் பாடும் முன்பு வரை இருந்து, பாடியபின் வாசி தீர்ந்தநிலை, தமிழ் நிலை.

உலகியலில், இப்பொருளை அமைக்க வேண்டிய முறை. நாட்கூறு அமுதினை நாவுக்கரசர் வந்து முடித்துநிற்கிறார். முடித்து வைப்பவர் அப்பரடிகள். தொடங்கி வைப்பவர் ஞானசம்பந்தர். நாட்கூறு அமுது அமையாமையால் இரண்டற்கும் குறையே. எனினும், வறுமை, பஞ்சம் காரணமாக, சற்றே விரைந்து தொழிற்படவேண்டிய நிலை இதில் யாரையும் தனித்த நிலையில் குற்றவாளியாக்க முடிய வில்லை. இது வாசிபடா நிலை.

வாசி என்பதன் பொருள்

நாட்கூறு அமுது தொடங்கப் பெறுகிறது. அனைவர்க்கும் ஒரு சேர அமைக்க இயலாமை. அதற்குக் காரணம் காசில் அமைந்த வாசி. இவற்றை மேலும் விளக்க வேண்டும்.

"வாசி" என்ற சொல்லாட்சியை முதலில் சிந்திக்க வேண்டும். திருஞானசம்பந்தருக்கு முன் இச் சொல்லாட்சி இருந்ததாக இதுவரை தெரியவில்லை. ஞானசம்பந்தர் கூறும் "வாசிதீர" என்பதில் 'வாசி' என்பது ஒருவகைக் குறைபாட்டை உணர்த்தும் சொல் எனத் தெரிகிறது. திருநாவுக்கரசர் வாக்கிலிருந்து அது ஒருவகை வாட்டம் எனத் தெரிகிறது. ஆனால், சேக்கிழார் சொல்லாட்சியிலேயே 'படுதல்' என்ற வினையுடன் தொடர்புபடும் நிலை தெரிய வருகிறது. சேக்கிழார் காட்டும் பொருளின் அடிப்படையிலேயே ஆய்வுகள் அமைந்துள்ளன. படுதல், படாமை என்ற இரண்டையுந் தாண்டி, 'தீர்தல்' என எடுத்தாளுகிறார் சம்பந்தர். இங்கே ஒரு முரண்பாடு.

அடுத்து, 'வாசி' என்பதற்கு வேறு ஆறு பொருள்கள் உள்ளன. வசித்தல்; வசிப்பவன் வாசி; அசையாது இருப்பதை ஒலியால் அசையவைப்பது வாசித்தல். 'வாசி'என்றால் படி என்ற பொருள்படும் ஏவல் வினை. வாசி குதிரை, யோக நூல்களில் பெரிதும் பயில்வது. திரு எனப்பெறும் உயர்பேரின்பப் பொருள் வ.சி. என நிற்கும். பரை எனப்பெறும் 'வ' ஆகாயமாக நிற்கும், அதனுள் 'சி' பரநாதமாக

நிற்கும். இவ்வாறு பராகாசம், பரநாதம் என்பதன் இடையில் உயிர் நிற்க வேண்டும். இதைக் குறிப்பதே "திருவாசி" எனப்பெறும். பண்பே பண்பை உடையவனைக் குறிக்க வரும்போது—அன்பு என்பது பண்பு, அன்பே முழுமையா அமைந்தானுக்கு 'அன்பு வாசி'. இதுவே சற்று வேறுபட்ட வகையில் பண்பின் வளர்ச்சி பெற்றவனுக்கும் வாசி என அமைத்தல். முன்னே ரோக வாசியாக இருந்த இவன் இப்போது சுகவாசியாக அமைந்தான் என வழங்கு வது. இனி மரூஉ வழக்கு—வாழ்வரசி என்பது 'வாசி' என நின்றது. வாசி என்பது வேறுபாடு என்னும் பொருளில் வழங்கப் பெறுகிறது. பட்டப் படிப்புக்கும் சான்றிதழ்ப் படிப்புக்கும் இடையே வாசி உண்டு. ஒன்றே பல கூறுகளில் இருப்பினும் வேறுபாடு உண்டு என அமைக்கும்போது 'வாசி' என்ற சொல் உபயோகப் படுகிறது.

மேலே கூறப்பெற்றவையெல்லாம் இலக்கியச் சொற்கள். இங்கே வரும் 'வாசி' என்பது சூழுஉக் குறிச்சொல். பொன் வெள்ளி வகைகள் அமைத்துக் கொண்ட கலீலச் சொல்லாகவே 'வாசி' என்பது பயன் படுத்தப் பெறுகிறது. சொல்லீப் பேசிச் செயற்படு நீலியில் பார்த்தால் குறை இருக்கிறது. சூறை என்பது தள்ளப் பெறக்கூடிய குறை அன்று. பொருளாதார ஏற்றத் தாழ்வில், உருவத் தால் பெறும் தகுதிக்குத் தரத்தால் அமையும் தகுதியானது குறை வுடையது. எனவே, தரத்தின் அடிப்படையில் பொருள் மதிப்பீடு அமையும். இத்தகைய உருவ மதிப்பீடே தரத்தின் மதிப்பையும் அமைப்பதாக இருக்கும். இது அந்த நீலியில் ஒவ்வாதது ஆகை யால், பொருள் மதிப்பீட்டைத் தரத்தின் அடிப்படையில் அமைக்க வேண்டும் என்பதாக அமைகிறது. அடுத்து, பொன்னுக்கும் பொற் காசுக்கும் அமையும் வேறுபாடு ஒன்றை மனத்தில் அமைத்துக் கொள்ளவேண்டும். இன்ன மாற்றுடைய இந்தப் பொன்னே இந்த வடிவமைத்து, இத்தகைய வடிவில் ஒரு குறிப்பிட்ட அரசன் காலத்து முத்திரையையும் பொறித்து அமைத்து விடுதல். வட்டம் முதலிய வடிவமைப்பாலும் அடையாளத்தாலும் அது இன்ன அளவு பொருள் மதிப்பீடுடையது என்பதும் வழக்கு முறை, மாற்று, தரம் முதலியனவும் ஏற்கெனவே முடிவு செய்யப் பெற்றவை. வடிவத்தால் ஒரு மனப்பதிவு உண்டு. மேலே உள்ள முத்திரை எடை பொருள் மதிப்பீடு முதலியன பண்ட மாற்று முறைக்கு உதவுவன. வீழி மிழலைக் காசுகள் வடிவத்தால் ஒப்புமையுடையன. அவ்வகையில் வடிவமைப்புக் காசு; படிவமைப்புக்காசு; படிமைக்காசு; படிக்காசு என அமைகின்றன. இனி, அவைகளின் மேல் பதிகச் சிறப்பினை ஒட்டிப் பொருள் மதிப்பீடு செய்யப் பெறவேண்டும்.

முதலில் நிற்பது திருநாவுக்கரசருடையது. எவ்வகையான எழுத்தும், குறியும் இல்லை. பொருள் மதிப்பீட்டுமுறை அமைக்கப் பெறவில்லை. வடிவமைப்பால் காசை ஒத்தது. அதன் தனித்தன்மை அங்கே பதிவு பெறவில்லை. அதன் மதிப்பீடு எவ்வாறு அமையும்? காசின் வடிவமைப்பில் அமைந்த பொன் பதிவுபெற்ற நீலைஉண்டு; மதிப்பீட்டு முறைப் பதிவு இல்லை. ஒரு வகையில் இயந்திரத்தில்

செலுத்தப் பெற்ற பொன் காசு என்ற வடிவமைப்பைப் பெற்று, ஆனால், முத்திரைபடும் இடத்துக்கு வரும்போது தவறுதலாக முத்திரை பெருமல் வெளிவந்து விட்ட காசு போலக் கொள்ளலாம். எனவே, மதிப்பீடு செய்தல் எளிது. பொன்னளவுக்கு மாற்றுப் பற்றிய சோதனையும் எடையும் அறிந்து இக்காலப் பொருள் மதிப்பை அமைக்க வேண்டும். ஆனால், திருநாவுக்கரசர் காசும் வழக்கத்தி லுள்ள காசைப் போன்றதன்று. எனினும், பொற்காசு அவ்வளவே. அதனைப் பார்த்ததும், பன்னெடுங் காலத்துக்கு முன் காசு இப்படித்தான் இருந்தது என அதன் அமைப்பைத் தெரிந்து கொள்ள லாம் அவ்வளவே.

இனி மதிப்பீடுமுறையானது பதிக அடிப்படையில் அமையும் இறைவன் பெருமை பேசப்பெறும். கைலையான் காளத்தியான் காளத்தியான் அவன் என் கண்ணுளான் எனப் பாடினால் அது இறைவன் பெருமை. அவனேதான் என் கண்ணில் தங்கினான் என்று சொல்லும்போது, அப்பரடிகள் தன் செயலாக அவனைக் கண்ணுள் நிறுத்தியதாக அமைப்பதில்லை. மக்களைப் பற்றிய அறிவுரை, இறைவன் பெருமைகள் பேசப் பெறும் நிலை என்பன காணப்பெறும். தன் பங்காகச் சொல்வன எல்லாம் நன்றி கூறும் நிலையின. முன்பே தனக்குச் செய்த நன்மைகளுக்கு நன்றி தெரிவிப்பன. மேலும், பதிகங்களில் காணப்பெறும் செயல்கள் எல்லாமே கூட்டுச் செயல்கள். மனத்தின் செயல் வேறு; தலையின் செயல் வேறு இவைகளையெல்லாம் சேர இணைத்து இயக்கும் மனிதனைக் காண இயலாது. மனிதனைக் கண்டாலும் அவன் நன்றியாக—நன்றிக் கடன் உடையவனுகத் தன்னை அமைத்துக் கொள்கிறான். இவ் வகையில் பதிகம் பாடியவனை — அவன் முயற்சியை—அவன் தன்னைத் தான் என்று நிலைநாட்டிச் செய்யப் பெற்ற செயலை அடிப் படையாகக் கொள்ள இயலவில்லை. எனினும் உயிரற்ற ஒரு கூட்டுப் பொருளில் தான் அவ்வளவு செயலும் இருக்கிறது. எனவே, இதன் பயனைப் பெறுதற்குரிய முகவரியாளன் பெயர் இல்லை. சொல்லப் பெற்றவை அனைத்தும் இறைவன் பெருமை; வழிகள் இறைவன் அருளியவை. செயல்கள் உறுப்புகளே மேற்கொண்டொழுகியவை. கூட்டுப் பொருளாக அமைத்த செயல் நன்றிக் கடனுக அமைக்கப் பெற்றுவிட்டது. இவ்வகையில் கூறப்பெறுவன எல்லாம் இறைவன் பெருமை; தன் செயல் நன்றிக் கடனுற்றல்; எஞ்சியவை உறுப்புகளே தனித்துச் செய்தவை. பெரும்பாலான பயன்கள் நன்றிக் கடனுகத் திருப்பப் பெற்றுவிட்டன. எஞ்சியவை உறுப்புகள் தனித்துச் செய்பவை. அப்பயன்களை உறுப்புகளுக்குத் தனியே கொடுக்க முடியாது. எனவே பயன் மதிப்பீடு அமைக்க முடியவில்லை. கொடுத்தவன் பெயரும் இல்லை. இலச்சினை அமைக்க வழியில்லை. எனவே, மதிப்பீடு என்பது வணிகன் அவ்வக் கால அமைப்பில் பொன்னை எடையிட்டுப் பொருளைக் கொடுப்பதென் பதே. 'வாசிபடாமை' என்பது பொருள் மதிப்பீட்டுத் தன்மையை எந்த வகையாலும் நிலைநாட்ட முடியாத வகையில் ஆற்றும் செயல். ஏனெனில், செய்பவன் தன்னை முற்றும் அடிமையாக்கிவிட்ட நிலை

யில் செய்வது. உள்நின்ற பரம்பொருள், உயிரின் வழியே செயற் படுகிறது, கருவிகள் பரம்பொருளளவிலேயே செயற்படுகின்றன. அப்பரடிகள் உழவாரத்தைக் கையில் வைத்திருப்பதுபோல, இறைவன் அப்பரடிகளைத் தாங்கியிருக்கிறான். அவனே தொழிற் படுத்திக் கொள்கிறான். தொழிற்படும் அளவில் அமைகிறார்: தொண்டின் முதிர்வுநிலை.

இனி, திருஞானசம்பந்தர் இறைவன் பெருமை, அருளனுபவம், அறம் கூறும் நிலை, செயற்படுத்தும் ஆற்றல் ஆகிய எல்லாவற்றை யும் திறம்பட அமைத்துள்ளார். அமைத்தவர் பெயரும் இருக்கிறது. எனவே, பொருள் மதிப்பீடு அமைக்க முடிகிறது. ஆனால், அதனை அவர் உலகத்தவர்களுக்கு இன்னின்ன செயல்களுக்காக இப்பதிகப் பயன் அமையப் பெறவேண்டும் என அவைகளெல்லாம் எழுதப் பெற்றுள்ளன. அவற்றுக்கெல்லாம் பொருள் மதிப்பீட்டில் எவ் வளவு கழித்துக் கொள்வது; கழித்து எடுத்துக் கொள்ளப் பெற்ற தொகையை யார் பொறுப்பில் வைத்திருப்பது என்பன போன்ற சிக்கல்கள். திருநாவுக்கரசருடையதில் எதையும் எழுதப்பெறாத நிலையில் பொன்னின் அளவுக்குப் பொருள் மதிப்பீடு செய்துவிடுதல் அவ்வளவே. திருஞானசம்பந்தருடையது முத்திரையுடையது. மறுக்க முடியாதது. மதிப்பீடு அளவு இல்லை. செயல் முறையில் பயன் இவ்வாறு அமையவேண்டும் என்பன குறிக்கப் பெற்றுள்ளன. எடைக்குரிய பொன்னைப் பழங்காசு ஆதலின் உறைத்துப் பார்க்க வேண்டும். மாற்று அறிந்தாலும் மேலே எழுதப் பெற்றவைகளை யெல்லாம் செயற்படுத்த எவ்வளவு தொகையாகும். அவை போக இப்போது எவ்வளவு கொடுப்பது என்பதே சிக்கல். அவர் பெயர் உண்டு. அவர் செய்த அறக்கட்டளை. அவருடைய உரிமை பிறருக்கு எழுதிவைக்கப் பெறுகிறது. ஆனால் செயற்படுத்திப் பயன் விளைவிக்க வேண்டும். பொன்னின் எடை, தரம் அளவுக்கு ஏற்பக் கூட, பொருள் மதிப்பிடு செய்து கொடுக்க முடியாத நிலை. வாசி படுதல் ஒரு செயலை ஏற்கும்போதே தேசமுய்ய வேண்டும் என உரிமை எழுதி வைத்து விட்டுச் செயல் செய்வார். தன்னை இன்னான் அடிமை என அமைப்பார். இந்நிலையில் அடிமை என நின்று செய்த செயல்கள் உள்ளனவேல், அவைகளுக்கு ஒரு ஆண்டான் என்ன கூலி கொடுப்பானை, அதைக் கொடுக்கலாம். இந்தக் காசு செல் லாது என்று சொல்ல முடியாது. பொருள் மதிப்பீடு செய்தற்கு வேண்டிய அடிப்படை உண்டு. செலவு போக மிகுதிதான். எனவே துய்ப்புப் பொருள்களால் கொடுத்து மதிப்பீடு செய்ய முடியாதது. துய்ப்பினால் பெறும் பயன்தான் பயன். இடை நின்ற வணிகர் அத் தகைய மதிப்பீட்டையும் செய்து பொருளாக மாற்ற முடியாது. அப் பொருள் தாய் மூலப்பால் போல் குழந்தையின் நேர்த்துய்ப்பாகத் தான் முடியும். மூலப்பால் செல்லாத ஒன்றன்று. விலைமதிப்பிறந்தது. பயன் மூலப்பால் போன்ற பயன். கொடுப்பது தாய் அல்லள். தாய்மை இருக்கிறது தாயைக் காணோம். குழந்தை இருக்கிறது குழந் தைமை இல்லை. குழந்தையானது தாய்மையின் விலைவை வழங்கி

யிருக்கிறது. பயன் இடையில் நின்ரேரால் மதிப்பீடு செய்ய இயலாதது. குழந்தையும் தன் பெயரை அடிமைப்பட்டியலில் இணைத்துக் காட்டியிருக்கிறது. மேலும், உரிமை என்பது அக்குழந்தையைப் பொறுத்த வரையில் உற்பத்தி செய்த உரிமையன்று; பயன்பட முடியாததைப் பயன்படுமாறு செய்து கொடுத்த நிலையில் வந்த உரிமையன்று. சம்பந்தன் என்ற உரிமையே. இவ்வகையில் வாசிபட்டது.

இனி, கேட்பது, வாசிதீரக் கேட்பது. உம்மை வணங்குவோர்களுக்கு மட்டும் என்றும், சிவநெறி சார்ந்தோர்க்கு மட்டும் என்றும் சொன்ன நிலை சுருக்கமானது. செயற்படுத்தியவர்கள் செயல் பெருக்கமானது. திருநாவுக்கரசரிடம், ஏல உம்மை வணங்குவார்க்கு உணவு அமைப்பதற்கு என்று கூறப் பெற்றது. அப்பரடிகளுக்கு அப்படி ஒருவர் இல்லை. அவரை இயக்கும் பரம்பொருளே வணங்குவார் அனைவர்க்குமே அது பொருந்தும். எனவே, நாதன் அடியார்கள் அனைவரும் வரலாம் என்று பறை சாற்றி அழைக்கச் செய்தார். திருஞானசம்பந்தரிடத்தில் சிவநெறி சார்ந்தார் தமக்கு இவை அமையட்டும் என்பது ஆணை. எல்லா உயிர்ப்பொருள்களிலும், உயிரால் பொருள்களிலும் சிவமே சென்று தங்கியுள்ளது. சிவத்தை உயிர் சென்று சார்ந்ததோ, ஒரு மனிதன் தான் சென்று சார்ந்தான் என்பதோ இல்லை. அதுவே, எல்லாவற்றிலும் வந்து இணைந்தது. இவ் வகையில் யாருக்கும் தடையில்லை. திருநாவுக்கரசர் வெளிப்படுத்திய தாவது 'நாதன்' என்ற சொல்லமைப்பைக் கொண்டு ஒரு சிலர் வாரா தொழியலாம். எனவே, கட்டுப்பாடு ஓரளவு அமைகிறது. இங்கே அதுவும் அமையவில்லை. அனைவருக்கும் உணவு படைக்கக் கூடிய அளவுக்கு வழங்கப் பெறும் காசின் மதிப்பீட்டுப் பயன் அமையவில்லை. இங்கே குற்றம் எங்கே? திருஞானசம்பந்தரின் காசை இடமாகக் கொண்டு வாசி அமைகிறது வரையறை செய்து கொடுத்தநீ அவ்வரையறையில் குறைவு பெறும் பொன்னைக் கொடுத்தது கரவு. கரக்கை, அதைத் தவிர்மின். உயிர்களின் பசியைப் போக்க எண்ணிய நீ எங்களை இடமாக வைத்துக் கொடை மேற்கொண்டனை. உம் செயல் எம்மூலம் நடை பெறுகிறது என்பதே. ஒற்றுமை நிலையில் செயல்புரிய முற்பட்ட நீ இன்று வேறுபட நிற்பது முறையோ! வாசி படும் காசுமூலம் என்னை நிறுத்தி விட்டு, நீ உன்னைப் பிரித்து மறைத்துக் கொண்டனையே. இத்தகைய "பிரிவு அரியதே" என்றார்.

இனி, திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் முறையே தன்னைப்பாடினுன் சம்பந்தன் என்றும் என்னப்பன் என்னைப்பாடினுன் என்றும்" கொள்வதற்குச் சில சான்றுகளை அமைத்துக் காட்டுவார்கள். அத்தகைய வழக்குரைகளுக்குக் கூறப்பெறும் விளக்கங்கள்பொருந்துவனவாக வில்லை.

அடுத்து, 'வாசி' என்பது எவ்வாறு அமைந்தது என்பதை விளக்கும் நிலையில் திருஞானசம்பந்தர் கூறுவதை அமைய நோக்கினால் இவ்வுண்மை விளங்கும். வாசி தீரப் பாடிய பின்னர்,

"அருவிலையிற் பெறுங் காசும் அவையேயாகி
அமுது செய்த தொண்டர் அளவிறந்து பொங்கி

வருமவர்கள் எல்லார்க்கும் வந்தாருக்கும்
மகிழ்ந்துண்ண இன்னடிசில் மாளாதாக
திருமுடிமேல் திங்களொடு கங்கை தூடுஞ்
சிவபெருமான் அருள் செய்யச் சிறப்பின் மிக்க
பெருமைதரு சண்பைநகர் வேந்தர் நாவுக்கரசர்
இவர் பெருஞ் சோற்றுப் பிறங்கல் ஈந்தார்"

என்பது சேக்கிழார் திருவாக்கு. வாசி தீர்ந்த பின் கிடைக்கப் பெற்ற காசானது பெரிய சோற்று மலையையே நாள்தோறும் உண்டாக்கிக் கொடுத்தல் என்பது போல வந்தார்க்கும் வருபவர்களுக்கும் வழங்கியும் மகிழ்வுறவந்த பலரும் உண்டபிறகுங்கூட, இன்னடிசில் மாளாது பெருகிற்று என்று கூறியதை உன்னுக.

"ஈன்ற குழவி முகங்கண் டிரங்கித்
தீம்பால் சுரப்போள் தன் நகில் போல
நெஞ்சுவழிப் படூஉம் விஞ்சைப் பாத்திரம்"

என்று சாத்தனார் அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரத்தைக் குறிப்பிடுவார். அருள்நிலையில் வெளிப்படுங்காசு அள்ள அள்ளக் குறையாத நிலையில் வளம் பெற்று விளங்குவதாயிற்று என்பதாம்.

அருளாளர்கள் வரலாற்றில் ஆகாதனவற்றை இணைத்தல்

திருஞானசம்பந்தர் திருவாவடு துறையிலும் பொன் பெற்றார், திருவீழிமிழலையிலும் பொன் பெற்றார். இரண்டிடங்களிலும் திருஞான சம்பந்தர் கேட்டுப் பெறவில்லை. கேளாமலே கொடுத்தாலும் ஆவடுதுறையில் கொடுக்கப் பெற்ற பொன் அள்ள அள்ளக் குறையாது தொலையா நிதியம் என விளங்கும் என்றே கூறப் பெற்றது. சிவபாத இருதயருக்காகக் கொடுக்கப் பெற்றபோது, பாடுவதற்காக எப்படிப் பொன் தரமுடியும்; கைத்தொண்டு செய்தால் தரலாம் என்று அங்கேயே கூறியிருக்கலாம். ஆனால், திருவீழிமிழலையிலோ பஞ்சம் காரணமாக அடியவர்களுக்காகக் கொடுக்கப் பெற்றது. இங்கே கைத்தொண்டாகும் பான்மையினால் காசு வாசிபடுகிறது என்று கூறுவது பெருத்தமுறுவதாக அமையவில்லை.

பஞ்சம் வந்துவிட்டது; எத்துணை இன்னல் வந்து தாக்கினாலும் தளராது தாங்கியும் கடந்தும் நிற்கும் அருளாளர்களாகிய இருவரையும் பஞ்சம் தாக்காது. ஆனால் அவர்தம் அடியவர்கள் உணவின்றி வாடுவார் என்றும், அவர்தம் துன்பம் தீர்ப்பதற்குக் கொடுக்கப் பெறுவது என்றும் காரணம் காட்டப் பெறுகிறது. பணித்தவாறே அருளாளர்கள் இருவரும் பணியாற்றுகிறார்கள். காசு வாசிபடும் நிலை உண்டாகிறது. வாசிபடுதல் என்ற ஓர் இழுக்கினை அமைப்பதற்குக் காரணமே ஞானசம்பந்தர் பாடிய பதிகம் தான். ஞானசம்பந்தர் வாசிதீரப் பாடியிருத்தலின் அவருடைய காசுதான் வாசிபட்டிருக்க வேண்டும். அத்தகைய அனுமானம் அத்துடன் நிற்கவில்லை. திருநாவுக்கரசர் காசு வாசிபடவில்லை. ஏன் வாசிபட

வில்லை? திருநாவுக்கரசர் அவ்வாறு பதிகம் பாடவில்லை. அதற்கு மேல் வாசிபடாமைக்குக் காரணம் கைத்தொண்டு செய்தல். பஞ்ச நிவாரணம் மேற்கொள்ளும் பதிப்பொருள் தம்முடைய அடியவர் களின் அடியவர்களுக்காக வழங்குகிறது. அடியவர்களின் மூல மாகக் கொடுக்கிறது அவ்வளவே. அவ்வகையில் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோர்களின் தகுதியை அடிப்படை யாகக் கொள்வது ஏன்? இச்செய்தி நூலறிவுக்கே இணையவாராதது.

அடுத்த நிலையில் அப்பரடிகளுக்குப் பெருமை சேர்ப்பதாக எண்ணி, அவருக்குக் கொடுத்த காசு வாசிபடவில்லை. சரி, அப் பரடிகள் படிக்காசினைப் பெற்ற காரணத்தாலேயே தொண்டராகும் நிலை இல்லாமற் போய் விட்டது என்பதை எண்ணிப் பாராமல் வரலாறு அமைக்கப் பெற்றுவிட்டது. ''வாசிதீரவே'' என்ற பதிகம் ஒன்று இருந்தமையால் இவ்வளவு சிக்கல். மேலும், தேவாரத்தில் கூட்டிக் காட்டப் பெற்ற 'வாசிதீர்தல்' என்பது வரலாற்றில் படுதல், படாமை என்ற சொற்களால் அமைக்கப் பெறுவதைச் சிந்திக்கும் நிலை இல்லாமற் போனதும் ஒரு காரணம். இவ்வரலாறு மேலும் ஒரு பெரும் பிழையை விளைவிக்கிறது. கைத்தொண்டு செய்யாமையால் வாசிபட்டது. இனி, வாசியை நீக்கும் பணிக்கு உரிய ஒரே ஒரு வழி யாகக் கைத் தொண்டை அமைக்க வேண்டும். கைத்தொண்டின் மையே குறை என்று குறிப்பிட்டபின், அக் குறையை ஒரு பதிகத் தால் நிறைவுசெய்து கொண்டாரென்றால், இவ்வரலாறு கைத் தொண்டின் பெருமையை உணர்த்த வந்தது என்பதை விட, ஆய் வறிவு முயற்சியில் வரலாற்றை விளக்கிக் கொண்டே வந்து, இறுதி யில் கைத்திருத் தொண்டுக்கே பழியைச் சுமத்தியதாக அமைந்து விட்டது கொடுமையிலும் கொடுமை.

படிக்காசு வரலாற்றின் நுட்பம்

ஆயினும், படிக்காசு வரலாற்றில் அமைந்துள்ள நுட்பத்தை உணர்தல் வேண்டும். இவ்வரலாற்றில் அமைந்த ஊன்றுகோற் சொற்கள் மூன்று. வாசிபடாமை; வாசிபடுதல்; வாசிதீர்தல் என்பன.

வாசிபடாமை என்பது தொண்டு நெறியின் முதிர்ந்தநிலை.

வாசிபடுதல் என்பது திருத்தொண்டு நெறியின் முடியநின்றநிலை.

வாசிதீர்தல் என்பது பதிப்பொருளானது முன்னின்று வழங்கும் நிலையில் ஒரு குறை இருக்கும். திருநீலகண்டம் முன் வந்து நின்றுல் அக்குறை நீங்கும்.

வாசிபடாமை என்ற பண்பை அப்பரடிகள் ஒருவரால்தான் நிலை நாட்ட முடியும். ஆண்டவன் இணையடியில் தம்மை அடிமை என நிறுத்தியபின், அவ்வாறு நிறுத்தியவர்கள் ஏதேனும் பணி செய்ய முற்படும் நிலை தோன்றினுல், தம்முடைய பெயர் எங்கேயும் பட்டு விடாதபடி, தம்முடைய முயற்சி எங்கேயும் படாதபடி, தம்மை இறையடிகளில் இறந்தாரென நிறுத்திவிடுதல். எந்த ஒரு செயலி

லும் அவர் பெயர் இணைக்கப் பெறுதலீலை உண்டாகும். இதுவே அடிமையென நின்று உணர்ந்த ஒருமையின் பெருமை. முகவரி எழுதப் பெறுமல் அனுப்பப் பெற்ற அஞ்சல் முடங்கல்.

வாசிபடுதல் திருத்தொண்டு நெறியின் சிறப்பு. விரைந்தோடி வருகின்ற வெள்ளத்தைத் தடுத்து நிறுத்தி, அதனைத் தம்வழியில் செல்லச் செய்து பல உயிர்களுக்குப் பயன்படுமாறு செய்யும் அணை போன்றது வாசிபடுதல். திருத்தொண்டு நெறியில் தொண்டு நெறி மலரும். தொண்டில் உயர்ந்து திருத்தொண்டில் நின்றவர்கள், அருளனுபவத்தில் நின்று, இன்பந் துய்த்துக் கொண்டிருப்பார்கள். திருத்தொண்டில் நின்று இவ்வாறு இன்பமே பொருளெனத் துய்த்துக் கொண்டிருத்தல்தான் பயன். ஆனால், திருத்தொண்டு நெறியில் வாசிபடுவார் சிலர் உளர். வாசி என்பது ஒருவகை வேறுபாடு. தன்னைத் தனித்து நிறுத்தி, தனக்குக் கிடைத்த திருமுகப்பாலை வெறுத்தால் யாருக்கும் பயன் இல்லை. ஏற்றால் ஏற்றவருக்கு மட்டுமே பயன். ஞானப்பாலை ஏற்றார், அதனைச் செவியமுதாக அனைவர்க்கும் கொடுத்தவர். இவ்வாறே, அவரைச் சென்றடையும் எல்லாப் பயன்களையும், வெறுத்துத் தள்ளாமல், ஏற்று, மக்கட் சமுதாயத்துக்குப் பயன்பெறும் வகையில் எவ்வாறு அமைத்துக் கொடுக்க வேண்டுமோ அவ்வாறு அமைத்துக் கொடுத்துத் தொண்டாற்றுதல்.

வாசிதீர்தல்: வாசிபடுதலை அமைக்க முடிந்தவர் யாரோ அவர் தான் வாசிதீர்தலை அமைக்க முடியும். தன்னுடைய பதியில் மட்டுமே இல்லாமல் பிறபதியும் பார்க்கச் செல்லுதல். சிலபதிகளில் நீலகண்டம் என்னும் அருள்நிலை நேர்நின்று பணியாற்றும். சில இடங்களில் பதிப்பொருள் நன்றாக மலர்ந்து நின்று பணியாற்றும். நீலகண்டம் நேர்நின்று பணியாற்றும் இடங்களுக்குச் சென்றால் அதன் பணியை இன்றும் வலிமையாக்கலாம். அவ்வாறு பணியேற்றமைக்கு அங்குள்ள தொண்டர்களே காரணம். பதிப்பொருள் மலர்ந்து நிற்கும் இடங்களில் தொண்டர்கள் இருக்கிறார்கள் என்பது பொருள். அங்கே திருத்தொண்டர்களை அதிகமாக்கித் திருத்தொண்டியற்றச் செய்ய வேண்டும். வீழிமிழலை போன்ற இடங்களில் நடைபெற்றது வணிகம்தான். வணிக நிலையில் பழகிவிட்டவர்களைத் தொண்டு நெறியில் ஈடுபடுத்த வேண்டும். இதற்காகப் பன்னிரு இருவரும் அடியார்களும் தங்கிப் பூவும் புனலும் சொரிந்து, துதித்து ஏத்திப்பாடி, தம்மையே அடிமையாக்கினால், அவ்வாறு பலரையும் அடிமையாக்கினால் தொண்டுநெறியிலிருந்து திருத்தொண்டு நெறிக்கு மலர வைக்க முடியும். வீழிமிழலையோ தொண்டு செய்தவர்களையும் தொழிலாளி என மதிப்பீடு செய்து விடும். வரதட்சிணை வேண்டாம் என்றால் அன்பளிப்பாகச் செய்து விடவேண்டும் என்ற கொள்கையைக் கொண்டது. பூசை செய்தது திருமால் பயன் கருதி. கண்ணை இடந்து அப்பியது ஏன்? சக்கரம் பெறுகைக்கு. சக்கரம் என்ற ஓர் அன்பளிப்பை அடிப்படையாகக் கொண்டு விமானம் வணிக நிலையில் கொடுக்கப் பெறுகிறது. அதை

யும் இடமாகக் கொண்டு தங்கியிருத்தல். முன் படிக்காசு கொடுக்க வந்தாலும் கரத்தல், மறைத்தல், அப்பரடிகள் கூறுவதுபோல, வாவென அழைத்தல், அழைக்கப் பெற்றவர் வந்து நின்றபோது கரந் திருத்தல்; மறைந்திருத்தல். கொடுக்கிறேன் என்று சொன்னதை முழுமையாகக் கொடுத்தல் இல்லை. அதிலும் கரத்தல். ஒன்றியிருந்து நற்பண்புகள் சமுதாயத் தொண்டு செய்து கொண்டிருக்கும்போதே மறைந்துவிடுதல். அத்தகைய மறைவினில் பல சிக்கல்கள் உண்டாய் விடுகின்றன; வாய்மூரார் செய்ததுபோல. வாய்மூரில் நின்று கொண்டு, மிழலையார் செய்ததுபோல வாவென்றதும் புகுந்து ஒளிப்பதும் ஏன்? மிழலையார் செய்தது என்ன? படிக்காசு தருகிறேன் என்று சொன்னது; மாற்றுக் குறைந்த காசைக் கொடுப்பது. இது ஒருவகைக் கரக்கிக. ஆண்டவனிடத்தில்—பதிப்பொருளில் சிற்சில சமயங்களில் அமைந்து விடுகின்ற கறைகொள்நிலை. அதுவே வாசி. அத்தகைய வாசியைத் தீர்த்தல் திருஞானசம்பந்தர் போன்ற அருளாளர்களால் மட்டுமே முடியும். எனவே, மிழலையினை வனின்—பதிப்பொருளின் கரக்கைச் செயலைத் தீரவே வேண்டும் என்று அருளொளி எழுப்பினர் ஞானசம்பந்தர். கரக்கை ஒழித்து வெளிப்பட்டபின் அளித்த காசு வற்றுத நிதியமாக வளம் பொழிந்தது என்பதைச் சேக்கிழாரின் 2474 ஆம் பாட்டிலை அறியலாம்.

அமுதமைக்கக் கால தாமதம் முதலாகக் காசில்பட்ட வாசிக் குற்றம் ஈறுக உள்ளவை முன்பின் முரணுனவை. அவைகளை எடுத்தியம்பும் நான்கு செய்யுட்கள் (2470 முதல் 2473) வரை சேக்கிழார் வாக்காகா; ஏனெனில், சேக்கிழார் திருவருளில் நின்று பாடுபவராக்லின்.

திருமறைக்காட்டு நிகழ்ச்சி

திருவீழிமிழலையிலிருந்து தலவழிபாடு தொடங்குகிறது. பலதலங்களை வணங்கிக் கொண்டு திருமறைக் காட்டினை அடைகிறார்கள். முன்பே இவர்கள் அமைத்த முறைமையினை உளங்கொள வேண்டும் அப்பரடிகள் முன்செல்ல, ஞானசம்பந்தர் அவரைத் தொடர்ந்து செல்லுதல். திருமறைக்காடு செல்லும்போது ஒரு மாற்றம் அமைகிறது. திருமறைக் காட்டிற்கு முன்னே சென்றவர் திருநாவுக்கரசரே, அங்கே வரவேற்பு. பிறகு அவர் திருக்கோயில் உள் சென்று வணங்கப்புகுமுன்பே, ஞானசம்பந்தர் வந்துவிட்டார் என்பதைப் பொற் காளத்தின் ஒலியின் மூலம் உணர்கிறார். எனவே, முன்னே உள் சென்று வழிபாடு முடித்து வந்து ஞானசம்பந்தரை வரவேற்க இயலாது. எனவே, அப்பரடிகள் அங்கேயே நின்றுவிடுகிறார். ஞானசம்பந்தருடன் சேர்ந்தே வழிபாட்டுக்குச் சென்றுவிடலாம் என்ற கருத்தில்.

திருஞானசம்பந்தரின் வருகையை முன்னிட்டுத் திருமறைக் காட்டுள்ளோர் மிக்க அன்புடன் வரவேற்க, அப்பரடிகளும் இணைய நின்று வரவேற்க, திருஞானசம்பந்தரும் அப்பரடிகளும் திருவீதி

வலம் வந்து திருக்கோயில் திருக்கோபுரத் திருமுன் சென்று நின்றார்கள். திருக்கோயில் திருக்கோபுரக் கதவம் திருக்காப்புச் செய்யப் பெற்றிருந்தது (பூட்டப் பெற்றிருந்தது). காரணம் என்ன என்று கேட்ட ஞானசம்பந்தருக்கு அங்குள்ளோர் மறைகள் இறைவனே வந்து வணங்கி அர்ச்சித்துச் செல்வது வழக்கம். அவைகள் வழிபாடு முடித்துச் செல்லும் போது திருக்காப்பிட்டுச் செல்லும். அது வழக்கமாக நடைபெறுவதே. ஆனால், நீண்டகாலமாக அவைகள் வரவில்லை. ஆகையால், திருக்காப்பு நீக்கப் பெறவுமில்லை. அவைகளேயன்றி, அம்மறைகளே ஒதும் அன்புடையவர்கள் வந்து அணைந்தும் நீக்கப்பெருமையால் திருக்காப்பு நீக்கப்பெறுமலே இருந்தது. அதனால், வழிபாட்டுக்கு வருகிறவர்கள் உள்ளே சென்று வணங்குவதற்காகப் பக்கத்தே ஒரு வழியை உண்டாக்கிக் கொண்டு சென்று பெருமானை வழிபட்டு வருவதை வழக்கமாகக் கொண்டார்கள்; இதுவே இங்கமைந்த நடைமுறை வழக்கம் என்றார்கள். இதைக் கேட்ட ஞானசம்பந்தருக்கு வியப்பு மேலிட்டது. உடனே, திருநாவுக்கரசரைப் பார்த்து, "அப்பரே! வேதவனத்து ஐயர் தமை, நேர்முகத்தில் உள்ள வாயிற் கதவைத் திறந்து அதன் வழியே சென்று எப்படியேனும் வணங்குதல் வேண்டும். தாங்களே இவ் வாயில் திருக்காப்பு நீங்குமாறு மெய்ப்பொருள் வண் தமிழ் பாடியருளுக" என்று கூறினார். விளங்கும் மொழிகளுக்கு அரசராகிய அப்பரடிகளும், "என்னை இவ்வாறு செய்க என நீர் அருளிச் செய்தீராகில் இது செய்வேன்" என்று கூறிப் பதிகம் பாடத்தொடங்கினார். அப்பதிகத்தின் முதல் தேவாரம்

"பண்ணின் நேர் மொழியாள் உமை பங்கரோ
மண்ணினார் வலஞ்செய் மறைக் காடரோ
கண்ணினுல் உமைக் காணக் கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள் செய்மினே"

என்பது. இந்நிலையிற் பத்துப் பாட்டுகளும் முடியவே, பதினொன்றும் தேவாரம் தொடங்குகின்றார். அப்பரடிகளின் பதிகங்கள் பெரும்பாலும் பத்துப் பாட்டுகளைக் கொண்டனவாகவே அமையும். ஆனால் சில பதிகங்களில் பதினொன்று இருக்கும். திருமறைக் காட்டில் கதவந் திறக்க எடுத்த பதிகம் பதினொரு தேவாரங்களைக் கொண்டது. பதினொன்றாவது பாட்டைத் தொடங்கி அமைப்பதற்குக் காரணம் திருக்கதவம் திறக்கப் பெறுமையே. பதினொன்றும் முடிந்தால், அது வரையும் கதவு திறக்கப் பெறுதிருந்தால் என்ன ஆவது? இந்நிலையில் பதினொன்றாவது தேவாரத்தில் "இரக்கம் ஒன்றிலீர்" என விளித்து,

"சரக்க இக்கதவம் திறந்து அருள் செய்மினே"

என வேண்டுகின்றார். பதிகம் முடியவும் கதவம் திறக்கவும் சரியாக இருந்தது. திறக்கப் பெற்றதும் இருவரும் நிலமிசை வீழ்ந்து வணங்கி, அந்நேர்முக வாயில் வழியே உள் சென்று மறைக்காட்டு மணாளனை வணங்கினார்கள்.

மீளும் போது, அப்பரடிகள் காழியாரைப் பார்த்து, "இத்திருக்கத வம் திறப்பும் அடைப்பும் எக்காலத்தும் அமையும் முறையில், திறந்த வாறு அடைக்கப் பாடியருளும்" என்று கேட்டுக் கொண்டார். உடனே ஞானசம்பந்தரும் "சதுரம்" என எடுத்துப் பதிகம் பாடத் தொடங்கியருளுகிறார். "எனக்கு உன் கதவம் திருக் காப்புக் கொள் ளும் கருத்தால், இது நன்கு இறை வைத்து அருள் செய்க" என்று அமைத்தருளினர். இம் முதல் தேவாரம் முடிந்தவுடனேயே திருக் கதவம் அடைத்துக் கொண்டது. ஆயினும், திருப்பதிகம் முடிக்க வேண்டும் என்ற கருத்தில் ஏனைய தேவாரங்களையும் அமைத்துப் பாடியருளிய பின், திருக்கடைக் காப்பும் அமைத்தார். திருக் கடைக் காப்பினுள்

"வாழி இம்மறைக் காடன்"

என்றும்,

இவனே வாய்ந்து அறிவித்த
ஏழின்னிசை மாலை யிரைந் திவைவல்லார் வாழி"

என்றும், மறைக்காட்டையும், அதனைத் தலமாகக் கொண்ட இறை வனையும் வாழ்த்துகின்றார். பின்னர், இப்பதிகம் வல்லாரைவாழ்த்து கின்றார். அடுத்து, மறைக்காட்டுடையானோடு இணைந்து நின்று அறிவித்து என்றும் கூறுகிறார். வாய்ந்து அறிவித்த இன்னிசை மாலை ஈரைந்து என்று கூறுகிறார்.

இப்பதிகத்தில் சில புதுமைகள் காணப் பெறுகின்றன. முதல் தேவாரத்தில் "உன் கதவம் திருக் காப்புக் கொள்ளும் கருத்தால், இது நன்கு இறை வைத்து எனக்கு அருள் செய்க" என்று அருளுவது புதுமை.

மறைக்கபாடம் நீக்கமும் அடைப்பும் நிற்கத் திறந்தவாறு அடைக்கப் பாடிய திருஞானசம்பந்தரின் திருப்பதிகத்தை "நடைத் தமிழ்ப் பதிகமாலை" என்று சிறப்பித்தருளுகின்றார் சேக்கிழார்.

இனி, இந்நிகழ்ச்சியைக் கணிப்பிட்டுக் கூறும் முறையில் உலக வர் வாயிலாகச் சேக்கிழார் பாராட்டுகின்றார்.

திருஞானசம்பந்தர் புராணத்தில் இந்நிகழ்ச்சியைப் பாராட்டும் சேக்கிழார் திருநாவுக்கரசர் புராணத்தில் பாராட்டு நிகழ்வுக் கவிகளை அமைக்கவில்லை, நான்கு கவிகள் (2492 முதல் 2495 வரை) இவ்வாறு அமைகின்றன. முதற் கவியில் கடல் தூர்ந்த இவ்வையம் கைத் தலங் குவித்துத் தாழ்ந்து வாழ்ந்தது என உலகின் மேல் வைத்துப் பாராட்டினர். "எதிர் வழக்கம் செய்த வரம்பிலாப் பெருமையோர்" என இருவரையும் இணைத்தே பாராட்டுகின்றார்.

இவ்விடத்தே குறிப்புரை எழுதிய திரு. வி. க. அவர்கள் "வேதங்கள் நேர்முகத்தில் நின்று ஆண்டவனைப் பூசித்துத் திருக் கதவை அடைத்தன. இப்பொழுது அவ்வடைப்பு நீங்கினமையால்

அவ்வேதங்களைப் போல உலகோரும் நேர்நின்று ஆண்டவனைப் போற்ற வைத்த பெருமையுடையார் என்க" என்று எழுதியுள்ளார்கள். (பக்கம் 692 கீழ்க் குறிப்பு)

அடுத்த திருப்பாட்டில் வேதங்கள் ஆனஎல்லாம் ஆகாயத்தே நின்று ஆரவாரித்துப் பெருமையின் முழங்கின. பஞ்சநாதம் பிறங்கி ஓங்கியது என்று சேக்கிழார் பாராட்டுகிறார். இவ்விடத்தே "தேவதுந்துபி ஐந்தும் மிக்கு முழங்கின" என்பது திரு. வி. க. குறிப்புரை.

மூன்றாவது நான்காவது திருப்பாட்டுகள் அனைவராலும் ஆழ்ந்து சிந்திப்பதற் குரியன. அவ்விரண்டும் இங்கே தரப் பெறுகின்றன.

"வேதங்கள் எண்ணில்கோடி மிடைந்து செய் பணியை மிக்க
ஏதங்கள் நம்பால் நீப்பார் இருவரும் செய்து வைத்தார்
நாதங்கொள் வடிவாய் நின்ற நதிபொதி சடையார் செய்ய
பாதங்கள் போற்று மேலோர் பெருமையார் பகருநீரார்"

"திருமறை நம்பர் தாம்முன்பு அருள்செய்த அதனைச் செப்பும்
ஒருமையில் நின்ற தொண்டர் தம்பிரானுர்பால் ஒக்க
வரும் அருட் செய்கை தானே வகுத்திட வல்லோர் என்றுல்
பெருமறையுடன் மெய்த் தொண்டர்க்கு இடையீடு
பெரிதாமன்றே"

என்பனவே அவ்விரு கவிகளும்.

இனி, முதல் பாட்டிற்குத் திரு. வி. க. அவர்கள் "வேதங்கள் எண்ணில் கோடி நெருங்கி அரிதில் செய்ய வல்ல பணியை இவ்விரு வரும் எளிதில் செய்தார் என்றபடி. ஏதங்கள் நம்பால் நீப்பார்-நம் மிடத்துள்ள (உயிர்களிடத்துள்ள) குறைபாடுகளை நீக்க வல்லவர்கள் (பிள்ளையாரும் அரசும்)" என விளக்கக் குறிப்பு எழுதியுள்ளார்கள்.

அடுத்து, "திருமறை நம்பர்" என்ற கவிக்குக் குறிப்புரை எழுத வந்த திரு. வி. க. அவர்கள்

"ஆண்டவன் அருளிய வேதத்துக்கும் இத்தொண்டர் அருளிய வேதத்துக்கும் வேற்றுமையின்மை குறிக்கப்பட்டது. இவ்வேற்றுமையால் ஆண்டவன் தன் அருட்செயல்களை இத் தொண்டரும் ஆற்றவல்லார் என்பது அறிவிக்கப்பட்டது. "எனதுரை தனதுரையாக நீறணிந்து ஏறுகந் தேறிய நிமலன்" — சம்பந்தர்; இலம்பையங் கோட்டூர். க. "ஆண்டவன் அருளிய வேதத்தையே அருளும் மெய்த் தொண்டராகிய பிள்ளையார்க்கும் எனக்கும் இடையீடு வேற்றுமை பெரிதாம்" என்று அப்பர் கருதினரென்க. காரணம் திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம்: 275 பார்க்க." என்று குறிப்புரை எழுதியுள்ளார்.

திரு. வி. க. அவர்கள் வகுத்த வண்ணம் திருநாவுக்கரசர் புராணம் 275 ஆவது கவியினையும் குறிப்பினையும் காணலாம்.

''அரிதில் திறக்கத் தாம்பாட அடைக்க அவர் பாடிய எளிமை கருதி நம்பர் திருவுள்ளம் அறியா தயர்ந்தேன்'' எனக் கவன்று. பெரிதும் அஞ்சித்திருமடத்தில் ஒருபால் அணைந்து பேழ்கணித்து மருவுமுணர்வில் துயில் கொண்டார் வாய்மை திறம்பா வாகீசர்''

''கதவைத் திறக்குமாறு பிள்ளையார் தம்மைக் கேட்டபோது தாம் இணங்காது அவரைத் திறக்குமாறு கேட்டிருத்தல் வேண்டும் என்பது ஆண்டவன் திருவருட் குறிப்பாயிருந்தமையால், தமக்குக் கதவு அரிதில் திறந்தது போலும் என்று எண்ணி, அதனுல் தாம் திருவருட் குறிப்புக்கு மாருக நடந்து கொண்டதாக உணர்ந்து அப்பர் கவன்ருர் என்க. இ:து அப்பர் மனேநிலே. இந்நிலே அவர்தம் பெருந் தகைமையைப் புலப்படுத்துவது. தொடக்கத்தில் இறைவன் கதவைத் திறப்பியாமைக்குக் காரணம் 'பயன் துய்ப்பான்...தாழ்க்க'' என்று மேலே (268) சொல்லப்பட்டிருத்தகியும் ஓர்க.'' என்பது அவர்தம் குறிப்புரை.

மேலே குறிப்பிடப் பெற்றவைகளே ஒட்டியே, பெரியபுராணம் முழுமைக்கும் விரிவுரையெழுதிய சிவக்கவிமணியவர்கள் தம் கருத்தை அமைத்துள்ளார்கள்

படிக்காசு பெற்றதும், வாசிதீரப் பாடிப் பெற்றதும் ஆகிய நிகழ்ச்சியைக் காட்டிலும் படிப்பவர்களுக்கும் செவிமடுப்பவர்களுக் கும் உணர்ச்சியை வல்லே எழுப்பக் கூடிய நிகழ்ச்சியே திருமறைக் காட்டுத் திருக்கதவ நிகழ்ச்சி.

திருவீழிமிழலையில் பெருமையுறுத்திப் பேசப் பெற்ற கைத் தொண்டுநெறிவல்ல நாவுக்கரசருக்கு மனம் வருந்துமளவுக்கு வர லாறு அமைந்து விடுகிறது மறைக்காட்டில். அவ்வாறே வீழிமிழலை யில் மனக்குறை பெற்ற ஞானசம்பந்தருக்கு இங்கே நிறைவு பெற்ற வரலாறு அமைந்து விடுகிறது என இரண்டையும் ஒப்பிட்டு நிறுத்தி மன நிறைவு கொள்வோர் ஒருவகை.

சேக்கிழார் கூற்றினே வெளிப்படையாகவே மறுக்கலாம் என்ற துணிவை உண்டாக்கியவர் பெரியபுராண ஆய்வுரை எழுதிய மறை. திருநாவுக்கரசர் அவர்கள். திருநாவுக்கரசர் பத்துப் பாட்டுகள் பாடுமளவும் கதவ திறவாமைக்குக் காரணம் 'பயன் துய்ப்பான் தெண்ணீர் அணிந்தார் திருக்காப்பு நீக்கத் தாழ்க்க' என்று சேக் கிழார் கூறிய காரணத்தை அவர் ஏற்கவில்லே. மகஞராகும் பான்மையினுல் என்ற காரணம் ஒன்றுண்டு. அதை எடுத்துக் கூறினுல், இங்கே குழந்தையின் மழலே என்ற வகையில் நாவரசரின் வாக்கிலும் சிறப்புடைத்தாகிவிடும். இவ்வகையில் சிவநெறிச் செம் மல், மறை. திருநாவுக்கரசு அவர்கள் அமைக்கும் காரணம் சேக் கிழார் குறிப்பிடாத ஒன்று. அப்படியே, திருக்கதவம் திறக்கப் பாடுக என்று ஞானசம்பந்தர் கூறியவுடன், மரபுமுறையை உடன்கொண்டு

தாங்களே பாட வேண்டும் என்று கூருமல், தமக்கு அத்தகைய ஆற்றல் உண்டு எனக் கருதிய ஒருசிறு ஆணவமே அப்பரடிகளிடம் அமைந்த குறை என்பது மறை. திருநாவுக்கரசு அவர்களின் கருத்து.

அப்பரடிகள் மனக்கவலை கொள்ளுதற்குரிய காரணம் "நம்பர் திருவுள்ளம் அறியாது அயர்ந்தேன்" என்பது நாவுக்கரசராலேயே கூற வைத்துவிட்ட காரணம். இங்கேயெல்லாம் குறை இல்லை, "சரக்க இக் கதவைத் திறப்பிமினே" என்று அப்பரடிகள் விரைவு படுத்தியதே குறை. "நம்பர் திருவுள்ளம் அறியாது அயர்ந்தேன்" என்ற சேக்கிழார் திருவாக்கினுக்குரிய விளக்கம் என்பது ஒருவகை.

இனி, பன்னிரு திருமுறை வரலாறு என்ற நிதியத்தை மக்களுள்ளங் கவினுறுமாறு அமைத்துத்தந்த திருமுறைச் செல்வர், க. வெள்ளை வாரணனர் அவர்கள் பொருத்தமுற ஒரு காரணத்தை அமைக்கின்றார்கள். கதவு திறக்க வேண்டும் என்ற வேண்டு கோட் பதிகம் இது. திருநாவுக்கரசரே இவ்வேண்டுகோளைத் தம்மனத்தில் ஆய்ந்து உணர்ந்து, இது தேவை என எண்ணி, அத்தகைய வேண்டு கோளை அமைக்கவில்லை. திருஞானசம்பந்தரே இதுபற்றி முழுமை யாகச் சிந்தித்தவர். அவர் சொல்லை வைத்து அப்பரடிகள் வேண்டு கிறார். திருஞானசம்பந்தர் இதுபற்றி முழுமையாகச் சிந்தித்து, தெளிவு பெற்று, மனத்தில் அதனைச் செப்பமுற அமைத்துக் கொண்டவராதலால் உறைப்பாகப் பாட முடிந்தது. ஒரே தேவா ரத்தில் கதவு அடைக்கப்பெற்றது. தாமே சிந்தித்து அமைத்துக் கொள்ளாதகாரணத்தால் உறைப்பாக அழுத்தமாக வேண்டுகோளை அமைக்க இயலவில்லை என்பதே. முடிவு என்ன? திருஞான சம்பந்தரே திறக்கப்பாடி இருக்க வேண்டும் என்பதே. மேலும்,

> "திறக்கப் பாடிய என்னினும் செந்தமிழ்
> உறைப்புப் பாடி அடைப்பித்தார் உந்நின்றார்"

என்பது அப்பரடிகளின் வாக்கே ஆதலின், தம்மைவிட, செந்தமிழ் உறைப்பு அமையப் பாடும் ஆற்றல் ஞானசம்பந்தருக்கு உண்டு என்பதை அப்பரடிகளே ஏற்றுக்கொள்கிறார். செந்தமிழ் உறைப்பு அமையப் பாடுதற்கு உரிய காரணம் இன்னது என்பதில் அழுத்தங் கொடுத்து, உரிய காரணம் அமைத்த பெருமை பேராசிரியர், க. வெ. அவர்களையே சாரும்.

யாங்கள் இருவரும் பாடுவது தமிழே என்று வாகீசர் வரையறை செய்து கூறிய பிறகுங்கூட, ஞானசம்பந்தர் மறைமொழி பாடும் ஆற்றலும் உரிமையும் உடையவராதலின், வேதம் அடைத்த கதவை, வேதம் வல்லாராகிய ஞானசம்பந்தரே திறக்கப்பாடுமாறு அமைத் திருக்க வேண்டும் என்று ஒரு குறையைச் சொன்னபிறகு, வேதமும் தமிழும் ஒன்றே என்ற கருத்து இந்நிகழ்ச்சியால் நிறைவு பெற்றது என்று விளக்கம் எழுதவும் செய்தார்கள். வேதம் தமிழ் என்ற வேறுபாட்டினை வெளிப்படையாகக் கூற ஒருப்படவில்லை

யென்றாலும், உள்ளத்தளவில் மகிழ்ச்சியோ, சிந்தனையோ கொள்வ தற்குக் காரணமாக இருந்தது சேக்கிழார்தம் திருப்பாட்டு ஒன்றே.

> "திருமறை நம்பர் தாம் முன்பு அருள் செய்த அதனைச் செப்பும் ஒருமையில் நின்ற தொண்டர் தம்பிரானர்பால் ஒக்கவரும் அருட் செய்கை தாமே வகுத்திட வல்லார் என்றால் பெருமறையுடன் மெய்த்தொண்டர்க்கு இடையீடு பெரிதாம் அன்றே"

இக்கவியின் உண்மைப் பொருள் திருஞானசம்பந்தர் முதற்பகுதியில் விரிவாக எழுதப் பெற்றுள்ளது. "பெருமறையுடன் மெய்த் தொண்டர்க்கு இடையீடு பெரிது" என்ற தொடருக்கு, ஞானசம்பந் தருக்கும் அப்பரடிகளாகிய தமக்கும் இடையீடு பெரியது என நினைத்துக் கவலை கொண்டதாகச் சிவக்கவிமணியவர்கள் விளக்கம் காட்டினார்கள்.

திருமறைக் காட்டு நிகழ்வின் நுட்பம்

திருஞானசம்பந்தரின் இயக்கமாகிய பதிகப்பெருவழி என்பது மூவர் இணைந்து செய்த கூட்டுச்செயல். இது முதற்பகுதியில் விளக்கப்பெற்றது. திருநீலகண்ட யாழ்ப்பாணரின் தொண்டு ஒரு வகை. ஞானசம்பந்தரோடு அப்பரடிகள் இணைந்து நின்று செயல் பட்ட நிகழ்வுகள் இரண்டே. வரலாற்று முறையில் மூன்று முறை சந்திப்பு இருவருக்கும் நடைபெற்றுள்ளன ஆயினும், ஞானசம்பந்த ரோடு இணைந்து சென்று பலபதிகளையும் வணங்கினார் திருநாவுக் கரசர் ஆயினும், ஞானசம்பந்தரின் இயக்கத்துக்கு இணைந்து தொண் டாற்றிய நிலை என்ற வரலாற்றுப் பின்னணியுடைய செயல்களாக அப்பரடிகள் நிகழ்த்தியவை இரண்டு. ஒன்று படிக்காசு. இரண்டாவது திருமறைக் காட்டுக் கதவு திறத்தல். எனவே, அப்பரடிகளை ஞானசம்பந்தருடன் இணைத்து நிறுத்திச் செயலாற்றி வரும் திருவருள், அப்பரடிகளால் இரண்டு செயல்களை நிகழ்த்த வைத்து, அவைகளைத் திருஞானசம்பந்தரின் இயக்கத்துக்கு ஆக்கச் செயலாக அமைத்து வரலாற்றை உண்டாக்கியது எனத் திருவருள் நெறியில் நின்று உணர்தல் வேண்டும். அதனால் தான், காரைக் காலம்மையார் அடிக்கடி வற்புறுத்திக் கூறும்,

> "நூலறிவு பேசி நுழைவு இலாதார் திரிக"

> "அருளாலே மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன்"

என்ற இரண்டு தொடர்களின் அடிப்படையில் சிந்திக்க வேண்டும்.

அப்பரடிகள் முன்னே செல்லுதல் வேண்டும், ஞானசம்பந்தர் தொடர்ந்து வருவார். யார் யார் எப்படி எப்படிப் பதிகம் பாடுதலை முறை அமைத்துக் கொண்டார்கள் என்பதும் வீழிமிழலையிற் காட்டப்பெற்றது. திருவீழிமிழலைக்கு அப்பரடிகள் முன்னே வருகிறார். ஆனால் வழிபாட்டைத் தொடங்குதற்கு முன்பாகவே ஞானசம்பந்தரின் ஊதுகொம்பு ஓசை கேட்கவே, அப்பரடிகளும்

வழிபாட்டுக்குப்போகாமலேயே நின்று,ஞானசம்பந்தரை வரவேற்று, பின்னர் இருவருமாகவே இணைந்து செல்கிறார்கள். திருமறைக் காட்டுக்குச் செல்லும் போதும் இருவரும் இணைந்தே செல்லும் வரலாற்றைத் திருவருள் அமைத்து விடுகிறது. முன்னே வந்து வழி பாடு செய்தலும், பதிகம் பாடுதலும் அப்பரடிகளுக்கு முன்னைய ஏற்பாட்டின்படி அமையும் பணி. மேலும், திருஞானசம்பந்தர் என்ன கூறுகிறாரோ அதனை அப்படியே செயற்படுத்துபவராக அமைவதே அப்பரடிகளின் பணி. இதனைக் காழிச் சந்திப்பிலிருந்தே தொடர்ந்து காணின் தெளிவாக அமையும். தம்மை யாண்டும் அடிமை என நிறுத்துதல் அப்பரடிகளின் வழக்கம் ஆதலின், திருஞானசம்பந்தர் கூறியவுடன் செயற்படுவதே அப்பரடிகளின் பணி, அதுவே வழக்கம். ஆகையால் மரபுபற்றித் தாங்களே கதவு திறக்கப்பாடுக என்று அப்பரடிகள் சொல்லியிருக்க வேண்டும்; அவ்வாறு சொல்லாமையோடு, தமக்கு அந்த ஆற்றல் உண்டு ஏன எண்ணியதில்லை ஒருவகை ஆணவம் என்ற மறை. திருநாவுக்கரசு அவர்களின் கருத்துப் பொருந்துவதன்று.

அடுத்து, வேதம் அடைத்த கதவை, வேதமே வந்து திறத்தல் வேண்டும், தமிழ் எவ்வாறு திறக்க இயலும் என்ற வினவே பொருந்தாது. வேதம் வழிபட்டு அடைத்துச் சென்றதாக வரலாறு இல்லை. சுவேதாரண்யம் வெண்காடு. மெய்க்கண்டாரை மகவாகப் பெறுதற்காகத் தாயும் தந்தையும் நோன்பிருந்த தலம். யசுர்வேதம் இருபிரிவினை உடையது. கிருஷ்ண (கருமை) யசுர் வேதம் என்றும் சுக்ல (வெண்மை) யசுர் வேதம் என்றும் அவை வழங்கப்பெறும், அவ்வகையில் இரண்டும் ஞானநிலைத் தலங்கள். திருவெண் காட்டில் பிரம வித்யா நாயகி. திருமறைக் காட்டில் அம்மையின் பெயர் யாழைப் பழித்த மொழியம்மை. ஞானம் பெறும் நிலை வெண்காட்டில் ஞான அனுபவம் எனப்பெறும் திருவருள் துய்ப்பு நிலை பெறுவது திருமறைக் காட்டில். ஞானநிலையில் நின்று ஞானப் பேறு அடைய, அடைவிக்கவேண்டுமாகில் ஞானசம்பந்தர் பாடவேண்டும். இங்கே தேவை நேர்நின்று கண்டு, அவனுக்குப் பூவும் புனலும் சொரிந்து ஏத்தித்துதித்து, திருவருள் நலங்கனியத் துய்க்க வேண்டும். அத் துய்ப்புக் குரிய தடையை மாற்ற வேண்டும். எனவே, தொண்டு நெறி முதிர்ந்து, திருத்தொண்டு நெறி மலர்தல் வேண்டும். அதை அமைக்கக் கூடிய நிலை அப்பரடிகளுக்கே உண்டு.

வேதம் வழிபடுதல் என்பதன் பொருள்

திரு. எம். எஸ். பிள்ளை என்ற பெயரால் அழைக்கப்பெற்றவராகிய, அமரர் கா. சு. பிள்ளை அவர்கள் 'திருஞானசம்பந்தர் சரித்திரம்' என்றொரு நூலினை ஆக்கித்தர, அதனைக் கழகம் வெளியிட்டுள்ளது. இவ்வாறு தொண்டு பற்றி இந்நூலின் முதற்பகுதியில் குறிப்பிடப்பெற்றுள்ளது. திருமறைக்காட்டு நிகழ்ச்சி பற்றிய அவர் தம் கருத்தினையும் இணைத்துச் சிந்தித்தல் நலம் தரும்.

"திருமறைக்காட்டிலே அருமறைகள் திருக்காப்பிட்ட கதவங்களைப் பிறர் திறக்க இயலாமை சுட்டப்பட்டது. அருமறைகள் தாமாகப் பூசனை புரிதல் இயலாததோர் காரியம். அதற்குப்பொருள் என்னையோ வெனின் அருமறைகளில் வல்லவர்கள் பூசனை புரிந்து, திருக்கோயிலின் வைகும் இறைவரது பேரொளியை நேரிற்றரிசுகுதல் பிறர்க்கு அரிதாதல் பற்றி, அத்திருக்கதவங்களை அடைத்திருத்தல் கூடும் என்பதே. பேரறிஞர் வணங்கத்தக்க திருவடிப் பேரொளி அதன் பெருமையறியாத பொதுமக்களால் பழக்கம்பற்றிப் போற்றப் படாமை நேர்முகத்து நிகழாமைப் பொருட்டுத் திருக்கதவங்களைப் பண்டை மறைவாணர் அடைத்து வைத்தனர் போலும்" என்று குறிப்பிடுகிறார்.

அடுத்து, பிள்ளையவர்கள் மேற்கொள்ளும் அளவையியற் செயற்பாட்டு முறையானது பல்லாற்றானும் பாராட்டப் பெறுவதற்குரிய நுட்பம் சான்ற ஒன்று. இந்நிகழ்ச்சியை விளக்க முற்பட்ட சான்றோர்களில் எந்த ஒருவரும் கையாளாத ஒருவகை அளவை முறை. பெரியபுராண விளக்கம் என்ற வரலாற்று வரிசையில் பிள்ளையவர்களுக்குத் தனித்த ஓர் இடம் உண்டு என்பதை நிலை நாட்டிய இடம் இது.

"அருமறைகள் யாவை என்று ஆயுங்கால், அவை இப்பொழுது கூறப் பெறும் வடமொழி வேதங்கள் அல்ல என்பது

"அருமறைகள் திருக்காப்புச் செய்து வைத்த
அக்கதவம் திறந்திட அம்மறைகள் ஓதும்
பெருகிய அன்புடை அடியார்"

என்ற சேக்கிழார் திருவாக்கினுல் வரும் "அம்மறைகள் ஓதும் பெருகிய அன்புடை என்ற சொற்றொடர் அக்கதவங்களைத் திருவருளினுல் திறந்தடைத்த செந்தமிழ்த் தொண்டர் இருவரையும் அடக்கி நிற்பதாலும், அவ்விரு பேரன்பரும் வடமொழி வேதத்தைப் பாராயணஞ் செய்திற்றிலர் ஆதலாலும் தெளியப்படும் என்க" என்று குறிப்பிடுகிறார்.

வேதம் அடைத்ததைத் தமிழ் திறந்தது என்றும் வேதம் வந்து செய்யவேண்டிய ஒன்றைத் தமிழே நின்று செய்தது என்பதால் வேதமும் தமிழும் ஒன்றே என்றும் இவ்வாறு வடமொழியையும் தமிழையும் இணைத்த நிலையில் எழும் சிந்தனைகளையெல்லாம் மற்றையோர் அமைத்துக் காட்ட, திரு. பிள்ளை அவர்கள் அடைத்தவர் யாரோ அவரால் தான் திறக்கமுடியும் என்ற அளவையியல் நெறியை முற்றுக ஏற்று, திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் திறக்கவும் அடைக்கவும் செய்துவிட்ட காரணத்தால் பூசனை செய்து பூட்டியது வேதம் என்ற தொடரில் வரும் வேதம் தமிழ் வேதமே என்ற முடிவு செய்தார். தமிழில் மறைமொழி எனப் பெறும் மந்திர மொழியினை இயற்றும் ஆற்றல் இருவருக்கும் உண்டு எனக் காட்டினர்.

அடுத்து, காலந் தாழ்த்தமைக்குக் காரணம் அப்பரடிகள் இறைவனோடு இணைந்திருந்த அத்துவிதக் கலப்பிலிருந்து சிறிது விலகி நின்று, இக்காரியம் நிகழுமோ நிகழாதோ என ஐயங் கொண்டது போன்ற ஒரு பிரிவு நிலை தோன்றிவிட்டதால் இறைவனும் ஒரு சிறு திருவிளையாடல் புரிந்தான் எனக் கொள்ளல் வேண்டும் என்று கூறுகிறார்.

"இரக்கம் ஒன்றிலீர் சரக்க இக்கதவம் திறப்பிம்மினே" என்று கூறிய நிலை தற்போதம் காரணமாக எழுந்த ஐயப்பாடு ஒழித்து அத்துவித உணர்ச்சியால் வரும் உறுதியைத் தலைப்பட்ட நிலையாம் எனக் கொள்க.

சேக்கிழார் வலியுறுத்த எண்ணும் கருத்து

(1) உலகவர் அருள்நலம் பெறுதல் வேண்டும் என்ற கொள்கையில் இருவரும் இணைந்து செயல்பட்டார்கள் என்ற கொள்கை.

(2) திருத் தொண்டின் பெருமை. மறைநம்பர் இறைவன்; மெய்த் தொண்டர் ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும், (ஞானசம்பந்தரை மட்டும் கொண்டாலும் சரியே) மறைநம்பனும் இறைவன் சொன்னதைச் செய்வார்கள். செய்ததைச் செய்வார்கள். இருவர் செயலும் ஒக்க நிலைபெறும். ஆனால், அருள் வழங்கும் நிலையில் தாமே வகுத்துச் செயலாற்றும் வல்லமையுடையவர்கள் திருத்தொண்டர்கள். இவ்வகையில் மறைநம்பனும் இறைவனுக்கும் மெய்த் தொண்டருக்கும் வேறுபாடு பெரியதே. இது (2495) சேக்கிழார் அமைத்த கவிக் கூற்றின் உட்கிடை. திருமணறக் காட்டு நிகழ்வின் முடிவில் சேக்கிழார் அடியவர், மெய்த்தொண்டரின் பெருமையை அளந்தறிந்து அமைக்க யாரால் முடியும் என்று பாராட்டுகின்றார்.

மறைக்கதவம் திறக்க முற்பட்ட செயலானது ஞானசம்பந்தர் தாமே எண்ணிச் செய்ததுதான். இந்த உலகமக்கள் பெருமானே நேர்நின்று அருளமுதமாகத் துய்க்க வேண்டும் என்றநிலையில் மக்களின் நன்மைக்காக, நாம் இப்படித்தான் செய்ய வேண்டும் என நினைக்கிறார். அப்பரடிகள் மூலமாகச் செயற்படுத்துகிறார். இது பின்னர் விளக்கப் பெறும்.

ஞானசம்பந்தர் நினைவும் அப்பரடிகளின் தொண்டும்

திருமறைக் காட்டுத் திருக்கதவம் திறக்கப் பெற்று, நேர்நின்று, கண்ணினுள் உனை நேர்நின்று கண்டு வணங்க வேண்டும் என்பதே வேண்டுகோள். நேர்வழியாகச் செல்லாமல், ஒரு புடை, ஓர் வாயில் அமைத்து உட்சென்றாலும் அதே மாதிரிப் பார்த்து வழிபடலாமே! மறைகளால் பூட்டப் பெற்ற கதவைத் திறந்து கொண்டு சென்றாலும் திறக்காமலேயே, வழிபடுதலில் எத்தகைய மாற்றமும் இல்லை. இப் போதும் பல திருக்கோபுரத் திருவாயிற் கதவு பூட்டப் பெற்றே இருப்பதைக் காணலாம்.

அடுத்து, சைவசமயத்தில் நேர்நின்று கும்பிடுதல் ஆகமங்களால் ஒத்துக் கொள்ளப் பெற்ற விதி முறை வழிபாடு தானு என்பதையும் எண்ணுதல் வேண்டும். நேர்நின்று கும்பிடுதல் மரபன்று. பலி பீடத்துக்கு அண்மையில் உள்ள கொடிக் கம்பத்தைக் கடந்த நிலையில் அமைந்த நந்தியே இறைவனை நேர்நின்று காண்பது. ஏனை யோர் அவ்வாறு கண்டு வணங்குதல் கூடாது என்பது விதி. ஆயினும், சேக்கிழார் இறைவன் காட்சி நல்கும் நிகழ்ச்சியை அமைக் கும் போதெல்லாம் நேர்க்காட்சி கொடுத்தல், நேர்நின்று கும்பிடுதல், நேர்நின்றார் என்ற அமைப்பையே விடாமல் சுட்டிக் காட்டி வரு கின்றமையையும் இங்கே நாம் சிந்திக்க வேண்டும். இதற்காகவே ஒரு வரலாறு அமைகின்றது. திருநாளைப் போவார் நாயனார்

"சீரேறும் இசைபாடித் திருத்தொண்டர் திருவாயில்
நேரே கும்பிட வேண்டும் என நினைந்தார்க்கு அது நேர்வார்
காரேறும் எயிற் புன்கூர்க் கண்ணுதலார் திருமுன்பு
போரேற்றை விலங்க அருள் புரிந்தருளிப் புலப்படுத்தார்"

என்பது வரலாறு அமைத்த சேக்கிழார் திருவாக்கு. இனி, இவ்வாறு முதன்மைத் திருக்கோபுரத் திருக்கதவு சாத்தப்பெற்றிருப்பினும் ஒரு முக்கிய நாளில் அக்கதவைத் திறந்து, எழுந்தருளிப் பாட்டு மூர்த்தி அவ்வழியில், வரும் நிகழ்வினை அமைப்பார்கள். அந்த நாளில் மக்கள் அவ்வழியே வரும் மூர்த்தியின் காட்சியை அமைத்து வழி படுதல் உண்டு.

திருமறைக் காட்டினில் அப்பரடிகளால் திருக்கதவம் திறக்கப் பெற்று இன்று சற்றெப்ப ஆயிரத்து முந்நூறு ஆண்டுகள் கழிந்தன. அரிதின் முயன்று திறக்கப் பெற்ற திருக்கதவ நிகழ்வு ஒரு சடங்கு எனவே இன்றும் கருதப் பெறுகிறது. அத்தகைய சடங்குங் கூட, திருமறைக் காட்டில் மட்டும்தான். கதவினைக் கடந்து செல்லாமல் திருவீதியில் நின்றேயுங் கூட, நேர்நின்று வணங்கலாம் என்பதைத் திருநாளைப் போவார் செய்துள்ளார்.

அடுத்து, நாம் இருவரும் நேரே செல்லுதல் வேண்டும்; இணைந்தே வணங்குதல் வேண்டும் என்றும் குறிப்பிடுகின்றார் ஞான சம்பந்தர். திருக்கதவம் திறக்கப் பெற்று, உள் சென்றதும் அவர்கள் பெற்ற அனுபவம் என்ன என்பதை இருவர் வரலாற்றிலும் சேக் கிழார் அமைத்துக் காட்டுகின்றார்.

"தாயினும் இனிய தங்கள் தம்பிரானரைக் கண்டார்"

அவர்கள் பெற்ற அனுபவம் அருளின்பத் துய்ப்பு அனுபவம். திருத் தொண்டு நெறியில் திருவருளால் சிவப் பேரின்பத் துய்ப்பு உண்டு. அத்தகைய இன்பத் துய்ப்பில் சிவஞானம் தொழிற்படும். அறியா மையின் அடிப்படையில் அமைந்த இன்பத் துய்ப்பு அன்று. திருத் தொண்டு நெறியால் இன்ப அனுபவமும் சிவஞான விளக்கமும்

உண்டு. எனவே, தொண்டு நெறியின் முதிர்ச்சியில், திருத்தொண்டு நெறிமலர, திருத்தொண்டு நெறியினுல்தான் இன்பத்தை அடைய, துய்க்க முடியும். அத்தகைய இன்பத் துய்ப்பினுள் சிவஞானம் வெளிப்பட்டு நின்று இன் பவிளக்க முறுத்தும்.

தமிழகத்து இரட்டைப் புலவர் போல, ஞானமும் வழிபாடும் இணைய நிற்றல் வேண்டும். ஞானமற்ற வழிபாடு குருட்டுத்தன்மை யானது. வழிபட்டுத் தொண்டுநெறி நில்லாமல் ஞானமே போதும் என நிற்றல் உள்ளீடற்ற விதைபோல; மூடத்தன்மை வாய்ந்தது. இரண்டும் இணைய நிற்றல் வேண்டும். தொண்டு நெறி சிறந்து, திருத்தொண்டாக அந்நெறி மலரவில்லையானுல், ஞானத்தால் அறிய லாம்; இன்பத்துய்ப்பு அமையாது. துய்ப்புக்குரிய தடைகளை நீக்க வேண்டியது செயற்பாட்டு முறை; ஞான விளக்கம் தருவது இன்பத் துய்ப்புக் காலத்தே செயற்பட வேண்டிய முறை.

முதலில் ஞானமும் தொண்டுநெறி எனப்பெறும் செயல்நிலையும் நேர்நிற்றல் வேண்டும். அங்கே என்ன தடை? ஆணவமலத் தடை அல்லது இதுவரை திரோதான சக்தியாகத் தொழிற்பட்ட ஒன்று அருட்சக்தியாக மாற்றம் பெறுதல் வேண்டும்.

அம்மையப்பர் கோலமாக உள்ள இருமைக்கு அப்பால், இருமையை வாழ்விப்பதாய், இருமையின் மூலம் தம்மை வெளிப் படுப்பதாய் உள்ள அருளாம் நிலையை உள்ளத்தே அமைக்கிறார் அப்பரடிகள்.

"பண்ணின் நேர் மொழியாள் உமை பங்கரோ"

அம்மையப்பர் கோலம் நேர் பெறுமாறு உள்நின்று விளங்கும் அருளை முதன்மைப் படுத்திப் பாடுகிறார் அப்பரடிகள்.

திருவீழிமிழலையில் "வாசிதீரக் காசுநல்குக" என்றதே சிவஞான விளக்கம். தாவில் சராசரங்களெல்லாம் சிவம் பெருகச் செய்தநிலை ஞானசம்பந்தருடையது. சிவம் பெருகிய காலத்து, நேர்நின்று தன்னை ஆளாக்கி, இன்புறுதற்கு அவைகள் முற்படும்போது, அவைகள் இன்பமடைய வொட்டாமல் தடைகள் சில நின்று தடுக் கின்றன. தடைநீக்கம் அப்பரடிகளின் திருத்தொண்டு நெறியால் அமைகிறது.

எனவே, தாவில் சராசரங்களிலெல்லாம் முன்னமே சென்று கலந் திருக்கும் சிவபரம்பொருளை வளரவைத்து, வெளிப்பட்டுப் பெருகி விளங்குமாறு செய்வது ஞானசம்பந்தர் தொண்டு. உயிர்ப்பொருள் உயிரல் பொருள் ஆகிய எல்லாவற்றிலும் சிவம் பெருகி நிற்கவும், அவைகள் அச்சிவபரம் பொருளை, பெருகி நிற்கும் சிவபரம் பொருளை அணைந்து துய்க்க இயலாதவைகளான இருந்தன. அவைகள் தம்மிடம் பெருகி விளங்கிநிற்கும் சிவபரம்பொருளைத் துய்க்க இயலாதவாறு அங்கே அமைந்துள்ள தடைகளை அகற்றுவது

திருநாவுக்கரசரின் பணி; அது திருமறைக் காட்டில் நடைபெறுகிறது. இதனைக் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகள் தம் நால்வர் நான்மணிமாலையில்,

"தாயிலியாகும் சிவபெருமான்தனைத் தான்எனும் ஓர்
கோயிலின் ஆர் அறிவாகிய நாமம்முன் கொண்டிருந்த
வாயிலின் ஆணவமாகும் கபாடமும் மன் கிறந்து
நோயிலியாகிய சொல்லிறை காட்டுவன் நோக்குதற்கே"

என்று விளக்கிக் காட்டியிருப்பதை இங்கே இணைத்து எண்ணுக.

மறைக்காடு என்பது உடல். உடலில் ஞானேந்திரியம் கன்மேந்திரியம்—அறிகருவி செயற்கருவி எனப்பத்து உள்ளன. பின்னர் உயிரானது தன்னுட் கலந்திருக்கும் சிவபரம்பொருளை அறியாதவாறு அமைந்த பாசத் தடைகள் உள்ளன. திருஞான சம்பந்தர் திருநாவுக்கரசர் காலத்துக்கு முன்னும் பல்வேறு நெறிகளில் இறைவனை அடைந்தவர்கள் உண்டு. அவர்கள் புறவழியில் சென்று, உடம்பைப் பூட்டி வைத்துவிட்டு, தூங்குவதுபோலப் பாசாங்கு செய்து, தூங்காமல் இருந்து, இருட்டில் அயலவன் மனைவியை அச்சத்துடன் துய்ப்பது போன்ற ஒருவகையில் துய்ப்பதையே முத்திநிலை இன்பம் என்று மயங்கி நின்றார்கள். ஞானசம்பந்தரும் அப்பரடிகளும் இணைய நின்று, முன்னே சென்ற அவர்களுக்கும், அவர்கள் காலத்தில் வாழ்ந்த சராசரங்கள் எல்லாவற்றுக்கும், பின்வரும் உயிர்களுக்கும் நேர்நின்று துய்க்கும் ஆசறுமுத்தியை, திரிமலமும் அகல உயிர் அருள்சேர் முத்தியை, திகழும் இன்ப அறிவு நேர்நின்ற நன்முத்தியை அருளுகின்றார்கள்.

"பண்ணினேர் மொழியாள்" என்ற முதல் தேவாரம் முதலாகத் தசகாரியம் இவ்வுடம்பிலேயே தொழிற்படுகிறது. பத்துப் படிநிலைகளில் இவ்வுடம்பு மாற்றம் பெறுகிறது.

உடல் மாற்றம் மூன்று. தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி என்பன.

உயிரின் தடைநீக்கம் மூன்று. ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி.

உடல் உயிரின் உடைமையாக, உயிரானது சிவத்தின் அடிமை என நிற்கிறது. அப்போது சிவம் உயிரிலும் உடலிலும் பரவிநிற்கிறது. சிவத்தின் துணைக்கொண்டு உயிரானது, உடம்பின் மூலமாகவே சிவம் வெளிப்படவும்; அருள் அனுபவப்படவும் இன்பம் துய்க்கிறது. தத்துவம், ஆன்மா, சிவம் ஆகியவைகளைத் தனித்தனியேயும், இணைத்தும் நிறுத்தி, அருளின்ப அனுபவத்துக்குத் துணையாகிய அருள் ஞானத்தையும் பெற்றுச் சிறக்கிறது.

இரண்டு வகைகளைக் கொண்ட அருள்நிகழ்வு ஒன்று. அது வீழியையும் வேதவனத்தையும் இடங்களாகக் கொண்டு நடத்தப்

பெறுகிறது. வீழியிற் செயற்பட்டவர் ஞானசம்பந்தர். வேதவனத் திற் செயற்பட்டவர் அப்பரடிகள். சிவத்தைப் பெருக வைத்தது சம்பந்தருடையது. தடைகளை நீக்கி அருளின்பத் துய்ப்பைப் பெற வைத்தது அப்பரடிகளுடையது. இவ்விரண்டையும் இணைத்துக் காணவேண்டும்

வீழிமிழலையும் வேதவனமும் புற அமைப்பில் இடங்களாயின. உடம்புடன் கூடிநின்ற அனைத்து உயிர்களிடத்திலும் இந்நிகழ்வு இரண்டையும் நடத்தி முடித்தார்கள். அவர்கள் காலத்துக்கு முன் முத்திபெற்றவர்களையும் உள்ளிட்டுக் கொண்டு, அவர்கள் காலத் தில் இருந்த அனைத்துச் சராசரங்களுக்கும் அவர்களே நடத்தி வைத் தார்கள். அக்கால அருளியற் பதிகங்கள் திருநீலகண்ட யாழ்ப் பாணரால் பாடப்பெற்று அமைத்துள்ளார்கள். ஆதலின், அவை களின் மூலமாக, இன்றும் இனிவரும் சராசரங்களும் அப்பேற்றை அம்மரபு வழியில் எளிதிற் பெறமுடியும்.

எனவே, ஞானசம்பந்தர் சைவ சமயத்தின் மறுமலர்ச்சி இயக்க மாகவே நின்றார்கள். அப்பரடிகளும், திருநீலகண்ட யாழ்ப்பாண ரும் இணைய நின்றார்கள். செந்தமிழின் பரப்புறுநிலையென நின்ற மூவரும், சென்ற, செல்லும், செல்ல இருக்கும் முக்கால அமைப்பில் நின்ற எல்லா உயிர்களுக்கும் முழுமையான திருவருள் நலமுறு திருப்பதிகப் பணி, திருநெறிய தமிழ்ப் பணியைச் செய்தருளினார்கள் எனக் கொள்ள வேண்டும்.

ஆய்த எழுத்து, இருபுள்ளிகள் சமமாக நிற்க, மேல் ஒரு புள்ளி நிற்றல் போல வீழிமிழலையும் வேதவனமும் சமநிலையில் நிற்க. சிவ ஞானமும் திருத்தொண்டும் தொழிற்பட்ட நிலை. இனி, இருவருக்கு மாக, இருமையையும் கடந்ததாக வாய்மூர் நிகழ்ச்சியானது மேல் நின்ற புள்ளி என நின்று இந்நிகழ்வை முடித்தருளுகின்றது.

வினவுக்கு விடை இல்லை

காலந் தாழ்த்தல், தாமாமை; அப்பரடிகளின் மனத்தொய்வு; நடைமுறைச் சிக்கல் ஆகியவை ஏன் அமைந்தன? இதற்குரிய விடை அமைய வேண்டும்.

அப்பரடிகளின் தொண்டு நெறியானது **"வாசிபடாமை"** என்ற தத்துவத்தை உட்கொண்டது. இது முன்பே படிக்காசுக் கொள்கை யில் விளக்கப் பெற்றுள்ளது. பணி என்பதை உட்கொண்டதும் அவருடைய ஒவ்வோர் உறுப்பும் தத்தம் நிலையிற் பணியாற்றி விடும். பணியாற்றிய அப்பரடிகள் வாசிபட மாட்டார். அவர் இறையடியில் தம்மை அடிமை என நிறுத்திய அவ்வளவே. இதனை வீழியிற் கண்டோம்.

திருமறைக் காட்டில் திருஞானசம்பந்தர் ஆணையிற் செயற்படு கிறார். உடல் உறுப்புகள் தொழில்மேற் கொள்கின்றன. அப்

பரடிகள் தம்மை அடிமையாக்க வேண்டும். இறையடியில் தாழ்ந்து அடிமைப்படுதல் வேண்டும். ஆனல், இவர் மேற்கொள்வது ஞான சம்பந்தர் அமைத்த பணி. "நாமார்க்குங் குடியல்லோம்" என்று ஆணை கூறிப் புறப்பட்ட நாம், ஞானசம்பந்தரின் ஆணைவழி நிற் கிறேமே, என்பதுதான் சிக்கல். திருவருளின் திருவடியில் தம்மை இணைத்து நிறுத்தி விடுவார். இன்னது வேண்டும் என்று குறிப்பிட மாட்டார். ஆனல், அருளின் வழி நின்று செயல்கள் நடைபெற்று விடும். எடுத்துக் காட்டாக, அப்பூதியடிகள் திருமகனுரைக் கோயில் முன்றிலில் கிடத்தி, "ஒன்று கொலாம்" என்று பதிகம் தொடங்கினர். பதிகத்தில் எந்த ஒரு இடத்திலும் தன்னுடைய வேண்டுகோளை அமைக்கவில்லை. செயல் நிறைவு பெறுகிறது. ஆனல், இங்கே, கதவு திறத்தல் என்ற ஒன்றுதான் வெளிப்படையாக அமைகிறதே யன்றி, மற்றைய எல்லாம் நடைபெற வேண்டும். எங்கே, திருமறைக் காட்டுக் கோயிலில் மட்டுமன்று: தாவில் சராசரங்களுக் கெல் லாம் திருக்கதவம் திறத்தல் என்பதில் எவ்வளவு பணிகள் இணைந் துள்ளன என்பதை அப்போது அங்கே அறிந்தவர் திருஞான சம்பந்தர் ஒருவரே. ஏனெனில், அவர் சிவஞான விளக்க நெறியைத் தாங்கி நிற்கிறார். வாய்மூர்க் காட்சிக்குப் பின்னர்த்தான் எல்லா விளக்கங்களும் அமைகின்றன.

"நம்பர் உள்ளம் அறியாது அயர்ந்தேன்" என்பதன் பொருள் திருஞானசம்பந்தரின் வழிநின்று ஒன்றை வேண்டியும் கேட்டும் செயல்படுவது பற்றி, முன்னமேயே இறை உள்ளம் அனுமதி வழங்குமா என்பது பற்றிச் சிந்திக்காமலேயே, அவர்தம் பணியில் நின்று விட்டேன். ஏனெனில், நாம் ஆர்க்கும் குடியல்லோம் என ஆணைதந்து அடிமை அமைத்தோமே, என்று வருந்துகிறார்.

செயல் முடியுமா முடியாதா என்பது பற்றிய ஐயம் அப்பரடி களுக்கு எப்போதும் இல்லை. திருக்கதவம் திறக்கப் பெற வேண்டும் என்று ஞானசம்பந்தர் என்னை, பெருமானே உம்மிடம் பதிகம் மூலம் கேட்டுச் செயல் படுத்த ஆணையிட்டார் என்று கேட்கிறேனே, அடி மையிற் பிழைத்தேன் என்பதே அயர்ச்சி. காரியம் முற்றுமா என்ப தில் எப்போதுமே அவருக்கு ஐயம் இல்லை என்பது,

"யாதே செய்தும் யாமலோம் நீயென்னில்
ஆதே யேயும் அளவில் பெருமையான்"

என்ற திருவாய்மூர்ப் பதிகத்து ஆருந் தேவாரத்தில், எத்தகைய அருளியல் நிகழ்வு நடந்தாலும், செய்தது யாங்களல்ல. நீயும், நாங்கள் கேட்ட அந்த அளவில் அதனுள் புகுந்து, அதனைச் செய் வித்து, எங்களையே பெருமைப்படுத்தும் அளவில் பெருமையன் என்று சுட்டிக் கூறுவதால் தெளியலாம். அடிமையிற் பிழைத்தேன் அதனுலேயே காலநீட்டிப்பு. பின்னர் வந்து வடிவம் காட்டின வுடனேயே "உஞ்சேன்" என்று உரக்கப் பேசுகிறார்.

மேலும், அப்பரடிகள் வேறெருன்றற்காகவும் வருந்துகிருர். உண்மையாகவே அடிமை செய்தும், நம்மிடம் பெருமான் கொஞ்சம் மறைக்கிருன். திருக்கதவத் திறப்பில் முழுமையாக நமக்கு எல்லாம் வெளிப்படையாகத் தெரியவில்லே. வந்து வடிவம் காட்டுகிருன்; மறைகிருன். நானே சோம்பேறியில்லே. தொடர்ந்து ஓடிவந்தேன். விடாப்பிடியாகப் பற்றி உழைக்கிறேன். இங்கேதான் வந்து புகுந் தான் வெளிப்படத் தோற்றிலன் என வருந்துகிருர். நமக்கு மட்டு மன்று, ஞானசம்பந்தருக்குங் கூட மறைத்திருக்கிருன், என்று நீலுவு கூருகிருர். ஆன்மஞான வளர்ச்சி முழுமையாக அமைந்துளது, தொண்டு நெறியும் முதிர்வு பெற்றுள்ளது. தடை இல்லே, சிவஞானப் பதிவு அமைதல் ஒன்றே தேவை. வாய்மூர்க் காட்சியின் மூலம், சிவஞானம் மேற்பட்டுத் திகழ்ந்து விளங்க முற்பட்டு விடுகிறது எனக் கொள்ள வேண்டும்.

எனவே, வேதவன வரலாறு வடமொழி தமிழ்மொழி முரண் பாட்டுப் போர் அன்று. நேர்நின்று காணுதல். மலமகல, தடைய கல, சிவஞானவிளக்கத்துடன் அருள் நலஞ்சார் பேரின்பத் துய்ப்பு அமைவதற்கேற்ற முறை எனக் கொள்ள வேண்டும்.

ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் இணைந்து நின்று ஆற்றிய இரு செயல்கள் ஒரே குறிக்கோளே அடிப்படையாகக் கொண்டவை. வீழிமிழலேச் செயலுக்குத் தலேவர் ஞானசம்பந்தர். வாசிதீரக் காசு பெறுதல். இது தாவில் சராசரங்களெல்லாம் சிவம் பெருகவைத்து, சிவஞானவிளக்கம் என்ற நிலேயில் நிற்றல். மறைக் காட்டுச் செய லுக்குத் தலேவர் அப்பரடிகள். சிவம் பெருகவே, அவ்வவ்வுயிரும் தம்மூடம்பும் தாமுமாக நின்று, தம்மிடை நின்று பெருகிய சிவத்தைத் தடையின்றித் துய்த்து இன்புறுதல். சிவஞானவிளக்கத்துடன் துய்த்து நிற்கும் முத்தி நிலே. ஞானமும் தொண்டும் இணேதல் வேண்டும். இன்பத்துய்ப்பும் ஞானவிளக்கத்துடன் அமைதல் வேண்டும். இதுவே நேர்நின்று கும்பிடும்நிலே.

வாய்மூருக்கு வா என்றதேன்?

'நாமார்க்குங் குடியல்லோம்' என்றெழுதிக் கொடுத்த ஆவணச் சீட்டு முறையினின்றும் பிறழ்ந்து விட்டோமோ, ஞானசம்பந்தர் சொன்னதை ஏற்று, இறைவனிடம் விண்ணப்பம் அமைத்தல் என்ற செயலால் 'அடிமை' என நின்ற தன்னுடைய நிலேக்கு இழுக்கு நேர்ந்ததோ என்பதே மனக்கவலேக்கு மூலமாக நின்ற காரணம். திருஞானசம்பந்தரை யார் எனக் காட்டி நிறுத்தவும், இதுவரை மேற் கொண்டு வந்த 'கரவு' முழுமையாகத் தீர்த்து வெளிப்பட நிறுத்திக் காட்டலுமே வாய்மூர் நிகழ்வின் அடிப்படை.

'கோலங் காட்டி, வாய்மூருக்கு வா' என அழைத்தது அப்பரடி களேயே. தொடர வருவோம் என்று முன்னே கூறிய நுட்பத்தை வெளிப்பட நிறுத்தி, ஞானசம்பந்தரும் செல்கிருர். தமக்குத் திருவுருக்

காட்டாது மறைந்து நிற்றல் போல, ஞானசம்பந்தர் முன்னர் இறை வன் மறைந்து நிற்க முடியாது என்பதையும் அப்பரடிகள் தெளிவாக உணர்கிறார். ஆணவத்தை முற்றுக நீக்கும் ஆற்றல் திருவருளுக்கே உண்டு. தொண்டு நெறியில் முதிர்ந்து, திருத்தொண்டு நெறியில் வெற்றி பெற்று நின்ற காலத்திலும், நேர்நின்று வெளிப்படக் கண்டு, காட்சிப்படும் பரம்பொருளனுபவத் துய்ப்பினைப் பெறுதற்கு உயிர்கள் முயலும் போது ஆணவம் சிறிதே மறைக்கும். அருள் நெறியின் முதற்குருவாக நின்ற ஞானசம்பந்தர் அவ்வாணவத் தடையை முற்றுக நீக்கி, அப்பரம் பொருளை நேர்நிறுத்திக் காட்டியும் காணுமாறும் செய்கிறார். இதனைச் சேக்கிழார்,

"அரசுங் காணக் காட்டுதலும்"

என்றருளினர். இவ்வகையில் ஞானசம்பந்தர் குருவென நின்றாதல் வேண்டும். அடிமையிற் பிழைத்தல் இல்லை என்பதும் இதுவரை சிறிதே நின்ற கரவு முற்றுக நீக்கப் பெற்றது என்பதும் வாய்மூர் நிகழ்வின் அடிப்படை

இத்தலைப்பின் தொகைப் பொருளை வரையறுக்கும் அக நிலை நுட்பம்

"பொன்னடி மாதவர் சேர் புறவத்தவன்" என்ற 'திருப்புறவம்' சீகாழிப் பெயர்கள் பன்னிரண்டனுள் எட்டாவது. பன்னிரண் டனுள் பத்தாவதே இறுதி. அது காழி. பின்னின்ற சொச்சைவயம், கழுமலம் என்னும் இரண்டும் முன்னுள்ள பத்துப் பிரிவுகளிலேயே அடங்கி விடுகின்றன.

உலகெல்லாம் அழியும் ஊழிக் காலத்தில் சீகாழியானது பன்னி ரண்டு முறை அழியாமல் நிலைநிறுத்திக் காட்டிய பெருமையுடையது. காலவேறுபாடுகளும் பிறசமயத் தாக்கங்களும் வந்து நெருக்கிய காலங்களில் பன்னிரண்டு முறை, பன்னிரண்டு கொள்கைகளை வளர்த்து, தன்னை நிலைநிறுத்திக் கொண்ட பெருமையுடையது சைவம். இவ்விரண்டையும் போலவே திருஞானசம்பந்தர் வரலாறும் பன்னிரு நிலைகளையுடையது. பின்னின்ற இருநிலைகள் முன்னுள்ள நிலைகளில் கலந்து விடுபவை ஆகையால் மொத்தப் படிநிலைகள் பத்து. அவற்றை இரண்டாகப் பகுத்து, முன்னுள்ள ஐந்தன் விளக்கம் முதற்பகுதி. பின்னுள்ள ஐந்தனுள் மூன்றாவது புறவப்பகுதி. ஒரு நெறிய மனம் வைத்துணர் நிலையில் எட்டாவது என நின்ற நிலை யுடைய புறவம் ஐந்தும் மூன்றும் எனப் பிரிந்து நின்று புகலியுடன் ஒத்த சிறப்புகளையும் கொண்டு விளங்குவதாக அமைந்தது.

புற அத்தவ நிலையுடையவன் புறவத்தவன் எனப் பெற்றான். இரு மாறுபட்ட நிலைகளின் இடைநிற்றல் இன்றி, அவற்றுக்குப் புறம் பாய் மேலே நிற்பதாகிய ஒன்று என்பதே பரம் பொருள் நிலை. அதுவே, தமக்குக் கீழுள்ள இருநிலைகளை வாழவைப்பதாய், அவற்றை இடமாகக் கொண்டு வெளிப்பட்டுத் தம்மைத் தோற்று

வித்துக் கொள்ளும் அருள்நிலை. இதுவே இருமையின் ஒருமையும்; ஒருமையின் பெருமையும் என்ற கொள்கையாக அமைத்துக் காட்டினர் சம்பந்தர்.

திரு எழு கூற்று இருக்கை என்ற தலைப்பில் இணைக்குறள் ஆசிரியம் என்ற பா அமைப்பில் ஞானசம்பந்தர் அருளிய பாட்டு ஒன்று உண்டு. ஒன்று முதல் ஏழு வரை உள்ள எண்களை அழகுபெற அமைத்தும் ஏழு கூறுகளில் இருக்கை கொண்டுள்ளது என்று கூறி அவற்றைச் சுட்டியும் விளக்குதல். எண்ணுல் ஏழ் என நிறுத்தி, எடுத்துக்காட்டுகள் எனப் பெறும் எழுத்தாலும் ஏழ் என நிறுத்தி, எண்ணும் எழுத்தும் என இரண்டு பகுதிகளென நின்றது ஒன்றே எனக்காட்டி — இருமையின் ஒருமை என இணைத்து, பின்னர் அந்த ஒருமையில் அமையும் பெருமை இது எனக் காட்டி முடித்தல்.

எண் என நிற்றல், எழுத்து என நிற்றல், இருமையின் ஒருமையாய் நிற்றல், ஒருமையின் பெருமையாய் நிற்றல் என அப்பொருள் நின்ற நிலைகள் நான்கு என விளக்குதல்.

ஆகிநிற்றல், அணிந்து நிற்றல், அழித்து நிற்றல், அருளி நிற்றல், தோன்ற நிற்றல், அறிய நிற்றல், அறிய இயலாதவன் என—அரியன் என நிற்றல் (வரிகள் 5; 12; 13, 16, 19; 24-38; 41; 45; 47 என்பவை அந்த ஏழுநிலைகளை விளக்கும்) என அமைத்து விளக்குதல்

மேலே குறிப்பிட்டவைகளைச் செந்தமிழ் என்றார். ஏழுதிணைகள், கைக்கிளை, களவு, கற்பு, பெருந்திணை என நால்வகை நிலைகள், ஐவகை உரிப்பொருள் ஐவகைக் கல்வி ஆயின. நடுவண் ஐந்திணை நடுவணது ஒழியப் படுதிரை வையம் பாத்திய பண்பு நான்கும் மறை முதல் நான்காயின. எதிர்நோக்கி நின்ற நிலையாம் கைக்கிளை; இடை நின்றறிந்த நிலை நடுவண் ஐந்திணை; இறந்ததன் பயனும் சிறந்தது பயிற்றும் நிலை என அமைந்த காலநிலை மூன்று. கிழவன் கிழத்தி, தலைவன் தலைவி என இவ்வாறு யாண்டும் இருமையின் நின்ற ஒருமை நிலை; அகம்-புறம் என இருமையின் நின்ற ஒருமை நிலை, ஒருமை நிலையே பொருள் நிலை. அகப்பொருள் எனவும் புறப்பொருள் எனவும் இணைந்த ஒருமை-பொருண்மை நிலை, பொருண்மை என்பது இருமையில் பெருமையானது தன்னை இணைத்துத் தோற்றுவிக்கும் நிலையே.

பொருண்மை நிலையை விளக்கும் வேறு ஒரு தொடர் "ஒன்றே வேறே என்றிரு பால்வயின் ஒன்றி உயர்ந்த பால்" என நிறுத்துவர். பொருள் ஒன்றே; முரண்பட நிற்கும் இரு பொருள்களுடன் ஒன்றி நிற்பதும் உயர்ந்து நிற்பதும் என்ற இருபண்புகளின் இணைப்பாய் நிற்பது; அதுவே 'பெருமை' என நிற்பது இத்தகைய மூன்றையும் இணைய நிறுத்திய நிலையில் நமக்குக் கிடைக்கும் மகா வாக்கியமே "ஏகம் ஏவ அத்விதீயம் பிரமம் என்பது. இதனைக் கூறும் ஞான சம்பந்தர் தம்மை 'மறுவிலா மறையோர்' கழுமல முதுபதிக் கவுணி

யன் என்று கூறினர். மறுவிலா மறை—மகாவாக்கியம்; பெரும்பெயர் மகாவாக்கியப் பொருளையே சிந்திக்கும், ஆராயும் கவுணியன் எனக் கூறினர். 'கட்டுரை' என்பது பெரும்பொருளைத் தம்முள் அடக்கிய மொழி என்பதாம். இங்கே கூறப்பெற்ற பொருள் விளக்கமே—செந்தமிழ் பரப்புறுநிலை என இணைத்துக் காட்டினர். இயலென இசையென இருமையாய் நின்ற ஒருமை. அவ்விரண்டனுள் இணைந்தும் உயர்ந்தும் நின்ற ஒன்றே கூத்து. இவ்வுலகத்தோர் அறிதற்கு அரியன் என விளக்கப் பெற்றவனே, தமிழென நிறுத்தித் துய்த்தவர்களுக்கு அறியப் பெறுபவனும் கட்டுரைக்கப் பெறுபவனும் ஆக நின்றான் என இணைத்தார்.

ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் என இருமையின் நின்ற ஒருமையே திருநெறிய தமிழாம் செம்மை. ஒருமையின் பெருமையே திரு—திருநின்ற செம்மை. அதுவே சைவப் பெருநெறி. மிழலையும் மறைக்காடும் நிகழ்வுக் களங்களாயின. ஒருமையின் பெருமையே வாய்மூர்க் காட்சி.

சீகாழியின் எட்டாவது பெயர் புறவம். இதனை ஐந்தும் மூன்றும் என நிறுத்திப் புகலியோடு இணைய வைத்து, புகலியும் மிழலையும் ஒன்று என நிறுத்தி விளக்கிய பெருமைக்குரிய வரலாறு ஞானசம்பந்தரிடத்தில் நிகழ்ந்தது. அடுத்து, 'புற அத்தவம்' என்ற பொருளில் உணர்த்தப் பெறும் தத்துவப் பொருளைத் திருமறைக்காட்டு நிகழ்ச்சியில் அமைத்துக் காட்டினர். வேதவனம் என்பது ஒருவகையில் திருக்கோயில் அமைந்த இடம் என்று கொண்டாலும், அங்கே உள்ள இறைவன் அறிவால் அறியப் பெறுபவன்; அனுபவநிலையால் துய்க்கப் பெறுபவன். அறிவால் பரம்பொருளை அறிதல் ஞானியர் நிலை. பொதுமக்களுக்கு அவ்வகையில் ஒருவகை வாய்ப்பு அமையப் பெறுதல் இல்லை. மேலும், அறிவால், ஞானத்தால் பரம் பொருளை அறிதல் என்பது முடிந்த நிலையாகிய உயர்நிலை என்று கொள்ள வேண்டியதில்லை. எனவே, ஞானிகளுக்கும்—ஞானத்தால் பரம்பொருளை அறிகிறவர்களுக்கும் குறை உண்டு. பொது மக்களுக்கோ அதுவும் கிட்டாத குறை. இருவருக்கும் இணைந்த நிலையில் பரம்பொருளைத் தொண்டு நெறியில் நேர்நின்று துய்த்துப் பேரானந்தம் பெறலாம் என எடுத்துக் காட்டி, தொண்டு நெறி சிறந்தது என்ற அளவுக்குரிய ஞானமே போதுமானது என எடுத்துக் காட்டி, ஞானிகளுக்குரிய தடையையும் பொதுமக்களுக்குரிய தடையையும் ஒரு சேரவைத்து, தொண்டு நெறியின் சிறப்பால், தடைகளாகிய கதவுகளைத் திறந்து பரம்பொருளை நேர்நின்று துய்த்து இன்பம் பெறமுடியும், இன்பம் பெறலாம் என்ற வழியினை வகுத்த பெருமை அப்பரடிகளை முன்னிட்டுக் கொண்டு இங்கே நடைபெற்றது.

ஞானசம்பந்தர் துணைநிற்க, நாவுக்கரசர் தொண்டுநெறியின் பெருமையை உணர்த்தும் வகையில் நேர்நின்று செயல்பட இவ்வாறு இருவரையும் இணைந்த நிலையில், இருவருக்கும் அப்பாற்பட்டு

நின்று, பரம்பொருளானது புற அத்தவஞக நின்று இருவரையும் இணைத்துச் செயற்படுத்தும் பகுதி இத்தலைப்புக்குரியது.

இனி, எட்டு என்பது தன்னுடன் இணையாகவோ. உயர்ந்தோ நிற்கும் பொருள் இல்லை என்றும், அதனெடு இணையும் நிலைவரின் இணையும் பொருள் மீளவும் மீளவும் கீழே சென்று கொண்டிருக்கும் என்றும் உணர்த்துவது. இதுவே வான்மை—தூய்மை. வாலி தன்னெடு போருக்கு வருபவனின் பாதி வலிமையைத் தான் ஏற்று விடுவான் என்று சொல்லுவதுண்டு. வான்மை—தூய்மை. உயர் தெய்வத் தன்மை. அதுவே மறைபொருளாக 'வாலி' என நின்றது. 'வாலறிவன்' என்பதை நோக்குக. அந்நிலையில் புறவம் எட்டு என நின்றது. இங்கே திருஞானசம்பந்தரையும் திருநாவுக் கரசரையும் இணைய நிறுத்தி, அவர்களை இணைந்து நின்று செயல்படு வதாக அமைத்து, அவர்களைக் கடந்து நின்று செயல்பட்டது திருவருள் என்றும் அது புற அத்தவநிலை என்றும் உணரவைத்த நிகழ்வுகளை உள்ளடக்கிய பகுதியே இத்தலைப்பு. மாறுபட்ட இரு பொருள்களை இணைத்து, அவற்றின் மேலே நின்று செயல்படும் அமைப்புடையதே திருவருள் என்பதை விளக்கும் நிகழ்வுகளைக் கொண்ட சிறப்புடையது இத்தலைப்பு.

5. தசமுக னெரிதர வூன்று சண்பையான்

முன்னுரை

சீகாழிக்குரிய பன்னிரண்டு பெயர்களில் 'சண்பை' என்பது ஒன்பதாவது பெயர். திருஞானசம்பந்தர் அருளிய ஏகபாதத் திருப் பதிகத்தினுள் சண்பை என்ற தலத்தின் சிறப்பாக இராவணனைக் காலால் அடர்த்த செய்தியை அருளுகின்றார்.

திருஞானசம்பந்தரின் மூன்றாம் சுற்றுத் தலயாத்திரையின் இறுதிப் பகுதியாயமைந்த நிகழ்வுகள் சீகாழியின் ஒன்பதாம் நிலைப் படியின் வரலாற்றுடன் தொடர்பு கொண்டு விளங்குவது. காழிஎன்ற பத்தாவது படியையே தாம் நின்ற படி எனவும் அதுவே இறுதிப்படி எனவும் அமைக்கிறார்.

எந்த ஒரு பொருளையும் வளர்ச்சி பெற்றுய்யுமாறு செய்வதே ஈசத்வம் என்னும் ஆற்றல். அவ்வாறு பெறும் வளர்ச்சிகளில் உயர்ந்த படிநிலை வளர்ச்சி என்பது "ஆளுடையான் அடியார்" என நிற்கும் நிலையே. "சிவனடியார்" நிலை. அவர்தம் பெருமையை விளக்கும் நிலையே சண்பை நகரின் நிலை.

திருமறைக் காட்டு நிகழ்வு முடிந்தபின் தெய்வச் சேக்கிழார் அருளிய குறிப்பு ஒன்று முன்பேயும் சிந்திக்கப் பெற்றது. திருமறை நம்பருடன் மெய்த் தொண்டர் ஒப்பநிற்பர். ஒருமையின் உணர்வி னுல் இறைவன் எண்ணியவை தம் எண்ணமாக, அவன் செயல் தம் செயலாக அமைப்பார். ஆனால், திருவருள் வழங்கும் முறையை மேற்கொள்ளும் போது தாமே வகுத்திட வல்லார் ஆதலின் திருமறை நம்பருக்கும் மெய்த்தொண்டருக்கும் இடையீடு பெரியது என்றார். அவ்வகையில் சிவனடியவர் பெருமை அல்லது ஆற்றல், சிவனடியர் என நிற்கும் முறை ஆகியவைகளை வரலாற்று நிகழ்வுகளில் வைத்து மதிப்பீடு செய்து விளக்கும் பணியே இப்பகுதியில் ஞானசம்பந்தர் மேற் கொள்ளும் பணி. வளர்ச்சிப் படியின் இறுதிக்கு முன்னுள்ள படிநிலை.

ஒன்பது என்பது இப்படியின் எண்ணளவைப் பெயர். ஒன்று பத்து என்ற இரண்டையும் இணைத்து நின்ற நிலை. பேசும் உலாவிற் பெரும்பை புலி என்றாற்போல, பேதைப் பருவத்து மனநிலையையும் மங்கைப் பருவத்து மனநிலையையும் தனித்தனியே விளக்கலாம்.

ஆனால் இரண்டன் இடைநிலையாகிய பெதும்பைப் பருவத்துப் பெண் ணின் மன நிலையை விளக்குதல் சிக்கலானது. 'பத்தின் தொன்மை நிலை; நூற்றின் தொன்மைநிலை; ஆயிரத்தின் தொன்மைநிலை, என்ற பொருள் தருபவைகளே தொன்பது, தொண்ணூறு, தொள்ளாயிரம் என்பவை. இங்கேயும் நிலைமொழி வருமொழி அமைத்து விதி கூறிப் புணர்த்துதல் சிக்கலுக்குரியதே. இத்தகைய இடர்ப்பாட்டுப் படி நிலையை விளக்கமுற அமைத்துக் காட்டுவதே இத்தலைப்பில் அமை யும் பணி. சண்பையான் என்பதைப் பிரமபுரத்துறை பெம்மான் என்பதுபோல உரை காணக் கூடாது. இடமும் இடத்தில் உறை பொருளும் என வேறுபட்டு நில்லாமல் ஒன்றென நின்ற நிலை. ஒன்றென நின்றலும் இருமை புலப்படவே செய்கிறது. இனி, சண்பை என்பது இடம்; சண்பையான் இடஉரிமையுடையவன். சண்பையான் அடியார் என்பார் சண்பை என்ற இடத்துக்குரி யானின் அடியவர்கள். சண்பையானது தான் தரவேண்டிய வளத் தைத்தர முடியாது பொய்த்துவிட்ட போது உரிமையென நின்றவன் தர வேண்டும், நிலமே பொய்த்துவிட்டபோது நிலத்துக்கு உரிமை யானவன் எப்படிக் கொடுக்க முடியும்! இங்கே கூறப் பெற்ற இரு வரும் தரமுடியாத நிலையில், நிலத்துக்குரியனின் அடியவர்கள் பொய் யாமல் தரும் ஆற்றல் உள்ளவர்களாக இருப்பார்கள். இறைவனால் கொடுக்க முடியாத போது இவர்களால் மட்டும் எப்படிக் கொடுக்க முடியும்! என்றெல்லாம் ஆய்வு நிகழ்த்துதல் கூடாது.

"விண்பொய் அதனுல் மழைவிழா தொழியினும்
விளைவுதான் மிகவுடை
மண்பொய் அதனுல் வளமிலா தொழியினும்
தமது வண்மை வழுவார்
உண்பகர ஆருலகின் ஊழி பல தோறும்
நிலையான பதி தான்
சண்பை நகர் ஈசனடி தாழும் அடியார்
தமது தன்மை யதுவே"

என்றும்,

"வட்டமதி தட்டு பொழில்உள் தமது
வாய்மை வழுவாத மொழியார்"

என்றும் முறையே 'எந்தமது' என்று தொடங்கும் சண்பை நகர்த் திருப்பதிகத்து 7, 4 ஆகிய தேவாரங்களில் ஞானசம்பந்தர் குறிப்பிட் டுள்ளவைகளைக் காணுதல் வேண்டும்.

திருஞானசம்பந்தர் தம் பதிகங்களின் எட்டாவது தேவாரத்தில் இராவணன் கயிலையைத் தூக்க முற்பட்ட போது, காற்பெருவிரலால் ஊன்றி அவனை ஈடழியச் செய்த செயலை விளக்குவதை மரபாகக் கொண்டார். பூவும் புனலும் சொரிந்து, ஏத்தித் துதித்துப் பாடி, அவனடிக் கீழ் அடிமையாக்கிய அடியவர்களின் செயல்களாலேயே அவருடைய திருவடிப் பெருவிரலுக்கு அத்தகைய வெற்றி அமைந் தது என்று கூறுவதே ஞானசம்பந்தர் கொள்கை.

அடுத்து, சண்பை நகர்ப் பெருமையைக் குறிப்பிட வரும்போது ஏகபாதத் திருப்பதிகத்தில் இராவணனை ஈடழித்த செயலை எடுத்துக் காட்டுகிறார். சண்பையுடன் இந்நிகழ்ச்சியை இணைப்பானேன்?

இராவணன் நாளும் சிவபூசை செய்துவரும் சிவபக்தனே. அவனை ஈடழித்ததை இங்கே குறிப்பிடும் நோக்கம் என்ன?

இறைவனும் பரம்பொருள் உயிர்ப் பொருள்களோடும் உலகப் பொருள்களோடும் தம்மை இணைத்துக் கொண்டது. இவ்வகையில் எல்லாப் பொருள்களுடனும் அவன் இணைய நின்றுளான் எனினும் அவன் நின்றுள்ள நிலையில் அமையும் உறவு பற்றியும் வரையறைப் படுத்தித் தெரிந்து கொள்ள வேண்டும்.

இறைவனுக்குப் பூவும் புனலும் சொரிந்து, ஏத்தித்துதித்து, தம்மை அடிமை என ஈடுபடுத்திய அடியவர்களிடத்தில் அவன் தங்கிய நிலை ஆண்டான் அடிமை நிலை. ஆண்டான் என நின்ற பரம் பொருள் விரிந்து பரந்து வெளிப்பட்டு நிற்க, அவனிடத்தில் தம்மை அடிமையாக்கி, இருத்தல் நிலை பெறுவார்கள். இங்கே, வடிவம் சிவ னடியவர்களுடையது. செயற்படுவது பரம் பொருளே. இன்னொரு வகை உண்டு. அடியவர்கள் தம்மை வெளிப்பட நிறுத்திச் செயற் படுவார்கள். இறைவன் அவர்களை இருக்கையாகக் கொள்வன்.

இவ்வாறே தலங்களுள்ளும் இறைவன் தங்கியிருக்கும் முறை பொதுமையிற் கூறப் பெற்றிருப்பினும், நுட்பமாக அமைந்துள்ள வேறுபாடுகளையும் உளங் கொள வேண்டும். புகலியில் நின்ற நிலை புள்நியம நிலை. புறவம் என்ற சீகாழியில் புற அத்தவனுய் நின்ற நிலை. தரும புரத்தில் பதியென நின்ற நிலை. அவ்வாறே இலம் பையங் கோட்டூரில் இருக்கையாக் கொண்டநிலை. இனி, மண்ணின் நல்ல வண்ணம் வாழலாம் என்று தொடங்கும் கழுமல வளநகர்ப் பதிகம் முழுவதிலும் "பெருந்தகை இருந்தது" என்ற ஆட்சிமுறையே ஞானசம்பந்தரால் குறிக்கப் பெறுகின்றது.

அடுத்து, காழியின் ஒன்பதாம் பெயராகிய சண்பையில் இறை வன் இருக்கிறான். சண்பைநகர் வாழ் அடியவரிடத்திலும் இறைவன் இருக்கிறான். ஆனல், வானும் மண்ணும் வளமை இழந்த போதும் ஈசனடி தாழும் அடியார் தம்முடைய வண்மையில் தவறார் என்று குறிப்பிடுகின்றார். எனவே, சிவனடியார் எனப்பெறுபவர் காலங் கடந்தவர்; திருவருளாற் பொலிபவர் எனக் கொள்ளவேண்டும். அவ்வாறே, திருக்கயிலை. திருக்கயிலையும் சிவனைத் தாங்கிக் கொண் டிருப்பது. உமையம்மையும் சிவனைத் தம்முள்ளத்திடத்தே வைத்து, அடிமை பேணி, திருவருட் பொலிவு பெற நிற்பவளே. இந்நிலையில் சிவபூசை மேற் கொண்ட இராவணன்; சிவபக்தன். திருக்கயிலையை எடுக்கிறான். சிவபரம் பொருளைத் தன்னகத்தே இருத்தி, அடிமை பேணி, சிவமாம் பெருவாழ்வென விளங்குபவள் உமை. இராவணன் சிவபூசைச் செல்வனயினும், சிவபரம் பொருளுக்கு அடிமை பேணி,

சிவமாம் பெருவாழ்வு சிவனடியர் என நிற்கும் உமையை நடுங்க வைத்ததே, இறைவன் சினங் கொள்ளக் காரணமாக அமைந்தது. போதியாரும் பிண்டியாரும் புகழல சொன்னலும் நீதியாகக் கொண் டங்கருளும் நிமலன் என்பதே இறைவன் நிலை. இறைவனே நேர் நிறுத்திச் செய்யப்படுங் குற்றங்களுக்கு அவன் தண்டனை கொடுப்ப தில்லை. ஆயினும், அவ்விறைவனுக்கு அடிமை பேணி, அவனே மிக்குப் பொலியும் வண்ணம் தம்மையே அவனுக்கு ஈந்து, அவன ருளே வெளிப்படநின்று விளங்குமாறு தம்மை ஈடுபடுத்திய சிவனடி யவர்களுக்கு யாரேனும் எவ்வகையாலேனும் குற்றம் இழைக்கின், அவர்கள் அவனுல் கொடுக்கப் பெறும் தண்டனையிலிருந்து தப்பிப் பிழைத்தல் இலர். சிவனடியவர்களுக்குச் செய்த குற்றத்துக்குரிய தண்டனையிலிருந்து விலக்களித்தல் இறைவனுலும் செய்யப் பெற இயலாத ஒன்று. இதுவே ஒன்பது என நின்ற சிவனடியவர் நிலை.

ஒன்றென நின்ற நிலை. பத்தென நின்ற நிலை. என்ற இரண்டுமே ஒன்றுடன் ஒன்று முரண் கொண்ட நிலை. இவ்விரு முரணுறு நிலை களையும் பொருந்தி, அவைகளை வாழவும் வைத்து, இரண்டற்கும் மேலாக, ஒன்றி உயர்ந்த நிலையே தொண்டு பது, தொன்பது, ஒன்பது என நின்ற நிலை. இது திருவருள் பொலிவு விளங்க நின்ற நிலை. இந் நிலையை விளக்குவதே சண்பை நகர் நிலை.

நடமாடும் மனித நிலை; படமாடும் கோயிற்பரமன் நிலை. இரண்டும் ஒன்றெடொன்றெவ்வா முரண் நிலை. இவ்விருநிலைகளையும் இணைத்து வாழவைத்தும், உயர்ந்து விளங்கியும் நின்ற நிலையே நடமாடுங் கோயில் நம்பர் நிலை. இதுவே சிவனடியார் நிலை. இதனையே திருஞானசம்பந்தர் "நல்லவண்ணம் வாழ்தல்" என்றார்.

> "துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும்
> இல்வாழ்வான் என்பான் துணை"

என்ற திருக்குறளில், துறந்தார் என்பது இறைநிலை. எல்லாப் பொருள் களையும் சார்ந்து நின்றுலும் சார்பைத் துறந்துநின்ற தனிநிலை. துவ்வாதார் என்று சொல்லப்பெறுபவர் கருவிகரணங்களே. என்றைக் கும் அவர்களுக்குத் துய்ப்பு நிலைஇல்லை. இறந்தார் எனப்பெறுபவர் தம் கருவி கரணங்களைச் சாகடித்தவர். இம்மூவரையும் இணைந்தும் உயர்ந்தும் நின்று வாழவைத்தல் என்பதே இல்வாழ்வான்— நடமாடும் கோயில் நம்பன் எனவாழும் நிலை.

உயர் ஞானத்தின் அடியில் மெல்ல மறைந்து இருக்கும் சிறுவீடு என்னும் அகங்காரத்தையும் அறிவினுள் அறிவாய்த் தோன்றி அழிக்கும்.

இனி, சண்பை என்பது ஒருவகைப் புல். துருவாசர் சாபம் காரணமாக உண்டாகிய இப்புற்காடு, ஆய்ப்பாடியில் உள்ள நந்த கோபன் மரபினர் அழியக் காரணமாயிற்று. அதனுல் துருவாசருக்கு உண்டாகிய பழியை நீக்க அவர் பூசித்துப் பழி நீங்கப் பெறுதற்குக்

காரணமாக இருந்த தலம் ஆதலின் சண்பை என்பது பெயர். ஆயினும், துருவாசர் வரலாற்றினைச் சம்பந்தர் யாண்டும் எடுத்து மொழியவில்லை. எளிய புல்லானது வலிய குலத்தையே அழித்தது.

எளிய தோற்றமும் வீரவாழ்வும் இணைந்த நிலையே தொண்டர் நிலை; அதுவே சண்பை நிலை.

"பங்கமேறு" எனத்தொடங்கும் திருச்சண்பைநகர்ப்பதிகத்தின் திருக்கடைக்காப்பினுள், "சமாதிசெய்யும் சண்பைநகர்" என்று குறிப்பிட்டுக் காட்டப்பெறும் பொருளை உணர்தல் வேண்டும்.

ஏத்தித்துதித்தல் எனப்பெறும் வந்தித்தலாம் நிலை; பூவும் புனலும் சொரிதல் எனப்பெறும் பூசைசெய்தல். இவ்விரண்டையும் இணைத்த காலம் பூசைக்காலம். அல்லாத காலம் பெருமை பேசும் காலம். இவ்விரண்டும் பூசைக்காலம் எனவும் மறைபேசும் காலம் எனவும் தனிநிற்பவை. இவ்விரண்டையும் இணைப்பதாய், செயற் படுத்துவதாய், இரண்டையும் கடந்ததாய், இந்த இரண்டன் மூலம் தன்னிருப்பை வெளிப்படுத்துவதாய் அமைந்த ஒன்று. அது ச, அந்தி யில்; ச ஆதியில் தன்னை இணைத்து நிறுத்தும் தன்மையது. அதுவே சண்பை. இதனைச் சந்திபோதிற் சமாதி செய்யும் சண்பை என்றார். அவ்விடத்தைத் தமதாகக் கொண்டவன் அந்திவண்ணன். அந்தி வண்ணன் என்பதன் உட்பொருள் முன்பேயும் விளக்கப் பெற்றது.

இனி, வானுலகத்தவரும் நிலவுலகத்தவரும் தத்தம் நிலைகளில் தனித்து நிற்க, அவர்தம் நடுவில் நிற்கும் நிலையை அந்தியமர் சந்தி என்றார். அந்நிலையில் மூலப்பொருளாக நிற்பவனே அழகன். இதனை 'எந்தமது' என்று தொடங்கும் சண்பைநகர்த் திருப்பதிகத்து முதல் தேவாரத்திலேயே குறிப்பிட்டுள்ளார்.

"எந்தமது சிந்தைபிரியாத பெருமானென
இறைஞ்சி இமையோர்
வந்துதுதி செய்யவரர் தூபமொடு
தீபமலி வாய்மையதனால்
அந்தியமர் சந்திபல அர்ச்சனைகள் செய்ய
அமர்கின்ற அழகன்
சந்தமலி குந்தளநன் மாதினெடு
மேவுபதி சண்பை நகரே."

என்பதே அத்தேவாரம்.

இருமாறுபட்டவைகளைத் தத்தம் நிலைகளில் வாழச்செய்து, இரண்டிலும் ஒன்றியதாய், ஆனால் உயர்ந்ததாய், நின்றநிலையே திருத்தொண்டர் நிலை; அது இரண்டன் நடுநிற்கும் சிவன்முத்த நிலை என்று மயங்கற்க. திருத்தொண்டர் நிலை என்பது தன்மை நிலை. தன் என்ற பகுதிப்பொருளின் விகுதி என இருத்தலாம் நிலை. ஆனால், தன்மைக்கும் படர்க்கைக்கும் இடைநின்ற முன்னிலை நிலையே சிவன் முத்த நிலை.

நாளுங் கோளும் நல்லவே

திருமறைக் காட்டில் இருவருந்தங்கியிருந்தபோது, பாண்டிமா தேவியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் அனுப்பிவைத்த பரிசனங்கள் வந்து, திருஞானசம்பந்தர்தம், திருமடம் சார்ந்து, அரசியார் அமைச்சர் ஆகியோர்களது வணக்கங்களைத் தெரிவித்து, சிவநெறிபரப்புதற்குப் பாண்டி நாட்டுக்கு எழுந்தருள வேண்டும் என்று திருஞானசம்பந்தரை வேண்டிக் கொண்டார்கள். பின்னர் ஞானசம்பந்தர் அப்பரடிகளைத் தனியே அழைத்துக்கொண்டு, திருமறைக்காட்டிறைவரை வணங்கி, பின்னர் மதுரை செல்ல வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்தார். அப்போது வாகீசர் அமணர்களால் தாம் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் ஞானசம்பந்தப் பெருமான் பாண்டிநாட்டுக்குச் செல்ல இருப்பதைத் தடை செய்யும் முறையில் ஒரு வரலாற்றைச் சேக்கிழார் அமைத்தருளுகின்றார். "வேயுறு தோளிபங்கன்" என்று தொடங்கும் பதிகம் இருப்பதால் இத்தகைய வரலாற்றை அமைக்கிறார் சேக்கிழார்.

இனி, கோளறு பதிகம் ஒருவகை நுட்பத்தைத் தன்னுள் அடக்கியது. நாள், கோள் ஆகிய எல்லாம் நடைமுறை விதிகளைப் போல நன்மை தருபவைகளே. எல்லாரையும் நன்மையில் நிலை நிறுத்துவதற்காகவே அமைக்கப் பெற்றவைகள் அவைகள். மேலும் அவைகள் அடியவர்களுக்கு இன்னும் மிக மிக நல்லவைகள். நன்மையை நிலைநாட்ட, நல்லவர்களுக்குத் துணை நிற்க அமைக்கப் பெற்றவைகள். அடியவர்கள் இறைவன் புகழ்பாடி, அறம் என்னும் நன்மையை இவ்வுலகில் நிலைநிறுத்த வேண்டிய பணியை மேற் கொள்பவர்களாதலின், அவர்களுக்குத் துணைநின்று, தீமைகளை அழிக்க வேண்டியவைகள். நாளும் கோளும் இயல்பாகவே குற்ற மற்றவை; குற்றமற்றவை மட்டுமல்ல; நல்லவை; நன்மைகள் பல வற்றுள்ளும் மேலான நல்லவை. அடியவர்களாயின் மிகமிக நல்லவை என அவைகளின் இயல்பு கூறும் பதிகம்.

கோளறு பதிகத் திருக்கடைக்காப்பினுள், ஞானசம்பந்தர் தம்மை "நான்முகன் ஆதியாய பிரமாபுரத்து மறை ஞான ஞான முனிவன்" என்று தம்மை அமைத்துக் கொள்கிறார். நான்முகன் ஆதியாய பிரமபுரம் வேறு; பெருநெறிய பிரமாபுரம் வேறு. அருநெறிய மறைவல்லமுனியே பிரமபுரத்து முனி; பின்னர், பெருநெறிய பிரமாபுர மேவிய பெம்மான் என நிற்கிறார். அருநெறிய மறைவல்ல முனி என்பவனிடத்துள்ள மறை என்பது ஒருவகைச் சட்டத்துறை சார்ந்த நூல். படைப்பு, பொருள் ஆயவற்றின் இயல்பு கூறும் செயல்முறைச் சட்டப் புத்தகம். அதில் நாள், கோள் இவைகளின் அமைப்பு என்ன? இவைகளின் பணிகள் என்ன? என்பவை வரையறை செய்யப் பெற்றுள்ளன. விதிகளடங்கிய நூல் தான் மறை. விதிகளைச் சொற்பொருள் நோக்கில் தெளிய உணர்வது ஒருவகை ஞானம். விதிகளின் மூலமாக விளங்கும் உணர்ச்சியைத் தெளிய உணர்வது ஒருவகை ஞானம். (Letter of the Law and spirit

of the Law) இவ்விரண்டையும் பெற்றவன் எனத் தம்மை எடுத்துக் கூறுவதன் நோக்கம், நாள், கோள் என்பவைகளின் தோற்றம், ஆற்றல், செயற்பாட்டு முறை பற்றிய எல்லா விதிகளையும் உணர்ந்த நிலையில், அவை தத்தம் இயல்பிலேயே நல்லவைகள் என்று எடுத்துச் சொல்வதே. இது நாள், கோள் ஆகியவைகளின் இயல்பு கூறி வெளிப்படுத்திய பதிகம்.

அடுத்து, இது ஒரு பதிகமாக அமைந்துள்ளது. இதனை ஒருவன் ஓதுகிறான். அவனுக்கு என்ன பயன்? இந்திய அரசியல் சட்ட நூலை ஒருவன் காலை மாலை ஓதிக் கொண்டேயிருக்கிறான்; அவனுக்கு என்ன பலன்? மெய்கண்டாரின் சிவஞானபோதம் ஒரு சாத்திர நூல். அதனையே தோத்திர நூலாகக் கொண்டு, காலை மாலை பக்தியுடன் ஓதுகிறான். அவனுக்குப் பயன் என்ன? அவனுக்குப் பயன் உண்டு. அவன் பக்தியோடு அதை ஓதுகிறான். அதற்குரிய பயனைக் கொடுக்கவே வேண்டும். எனவே, கோளறு பதிகம் போன்ற இயல்புப் பதிகங்களை—திருவெழுகூற்றிருக்கை, சக்கரமாற்று போன்ற பதிகங்களைப் பத்தியின் அடிப்படையில் அமைந்து ஓதும்போது, அவற்றிற்கும் பயன் உண்டு எனக்கூறி, அதனை உறுதிப்படுத்தும் பொருட்டே 'ஆணை நமது' என்று கூறி, அதன்மூலம் அப்பதிகத்தை நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழியாக்குகின்றார். அவ்வாறு செய்யும் செயலை வல்லமைச் செயல் என்று பாராட்டுகின்றார், நம்பியாண்டார் நம்பிகள்,

"முத்திப் பகவன் முதல்வன் திருவடியை
அத்திக்கும் பத்தர் எதிர் ஆணை நமது என்ன வல்லான்'

என்ற பாராட்டு ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை என்றநூலின் 45 ஆவது கண்ணியாக அமைகிறது. கோளறு பதிக அமைப்பை உணர்த்தும் அப்பதிகத் திருக்கடைக் காப்பு.

"தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெல் துன்னி
வளர் செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமாபுரத்து
மறை ஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொன் மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே."

என்பதே அது. பதிக அமைப்பினை உன்னும் போது, ஆலவாய் அரன் நிற்கவே, எனியேன் அலேன் என்று கூறினாற்போல இதுவும் மங்கையர்க்கரசியாரின் ஐயவுணர்வைப் போக்குதற்கெழுந்த பதிக மாகலாம். மேலும், இந்நிகழ்வுக்கு வரலாற்றுருக் கொடுக்கும் சேக்கிழார் திருவாக்காக அமையும் தொடர்கள் 'பிள்ளாய்' அந்த அமண் கையர் என்பதுவும், உறுகோள் தானும் தீய" என்பதுவும் வாகீசரின் வாய்மைக்கும் மெய்மைக்கும் இணைய வாராதவை.

சம்பந்தரை மதுரைச் சைவம் கண்டமுறை

திருஞானசம்பந்தர் பாண்டிய நாட்டுக்குச் சென்றபோது அங்கு அன்று இருந்த சைவர்கள் இருவரே. ஒருவர் சோழநாட்டு மன்னன் மணிமுடிச் சோழன் மகள் எனப் பிறந்ததகத்தாலும், பாண்டி மாதேவி எனப் புக்ககத்தாலும் உணரப்பெற்ற மங்கையர்க்கரசியார். இரண்டாமவர் மந்திரி குலச்சிறையார்.

மங்கையர்க்கரசி எனவும், வளவர்கோன்பாவை எனவும், வரிவளைக்கைமடமானி எனவும், பங்கயச் செல்வி எனவும், பாண்டிமாதேவி எனவும் ஐந்து தனிநிலைகளில் உணரப்பெறும் நிலை ஒருவகை. இங்கே குறிப்பிடப்பெறும் ஐந்துநிலைகளையும் சார்ந்து நின்ற காரணத்தால் அவள் உலகவர்களால் உணரப்பெற்ற நிலை. சாரப்பெற்ற நிலைகள் ஐந்து; சார்ந்து நின்றவள் பாண்டிமாதேவி. இனி, பாண்டிமாதேவியைச் சார்ந்ததால் ஆலவாய் ஆவதும் இது என்ற பெயரைப் பெறுகிறது திருக்கோயில். "மங்கையர்க்கரசி" என்று தொடங்கும் திருப்பதிகத்துத் திருக்கடைக்காப்பாகிய

"பன்னலம் புணரும் பாண்டிமாதேவி
குலச்சிறை எனுமிவர் பணியும்
அந்நலம் பெறுசீர் ஆலவா யீசன்
திருவடி ஆங்கவை போற்றிக்
கன்னலம் பெரிய காழியுள் ஞான
சம்பந்தன் செந்தமிழ் இவைகொண்டு
இன்னலம் பாட வல்லவர் இமையோர்
ஏத்தவீற் றிருப்பவர் இனிதே"

என்பதனுள் மங்கையர்க்கரசியாரின் ஐவகை நலங்களை முன்னிட்டுக் கொண்டு "பன்னலம் புணரும் பாண்டிமாதேவி" என்றார். மங்கையர்க்கரசியார் பணியும் நலம் பெறுசீர் ஆலவாய், ஆலவாய் ஈசன், ஆலவாய் ஈசன் திருவடி என்ற மூன்றையும் இணைந்தார். இங்கே மூன்றுகச் சொன்னமையின் உட்பொருள் என்ன என்றுணர்தல் வேண்டும்.

மங்கையர்க்கரசியாரே ஆலவாய் என்ற திருக்கோயிலைத் திருவலகிட்டும், திருமெழுக்கிட்டும் பணிசெய்து சிறப்புறுத்தியவர்கள். ஏனெனில், திருக்கோயில் தூய்மைத் தொண்டும் அவராலேயே செய்யப் பெற்றது. ஏனெனில், மதுரையில் இருக்கும் சைவர்களே இருவர்தாம்—மங்கையர்க்கரசியின் திருத்தொண்டே எப்பொருளையும் ஆக்கும் ஈசத்தன்மையை ஆலவாய்ப் பெருமானுக்கு அளித்தது. பூவும் புனலும் சொரிந்து ஏத்தித் துதித்து, தன்னை அடிமை என நிறுத்திய திருத்தொண்டு சிறந்ததாலேயே, திருவருள் நலங்களையும் மூர்த்தமாக அது அமைந்தது.

மங்கையர்க்கரசியார் சைவ உலகத் தனிநாயகி. தனியொருவன் தன்னைத் தேயமாக்குதல் போல, திருநாகேச்சுரம் என்ற தனித்தலம்

தேசமாக நின்று விளங்குதல் போல (முன்னே கூறப்பெற்றது), அம்மையார் தம்மை, தம் தொண்டை ஐந்தாக நிறுத்தி, அவ்வாறே ஆலவாய்ப் பெருமானே ஐந்தென நிறுத்தியும் ஆற்றிய தொண்டினுல் திருநள்ளாறு போன்ற நான்கு தலங்கள் ஆலவாயினுள் இணைந்து நின்றன. ஆலவாய் என்பது பாம்பானது தலையும் வாலும் இணைந்து நின்று அடையாளங் காட்டப் பெற அமைந்த இடம். எனவே, ஆணவமாகிய பாம்பு துணைசெய்ய, ஐவகையாகப் பிரிந்து நின்ற அனைத்தும் இங்கே இணைந்தன. எனவே, மாறுபட்ட அனைத்தையும் இணைந்தும் உயர்ந்தும் நிற்பது அருளே. எனவே, தொண்டுநெறி, திருத்தொண்டு நெறியாக மலர்ந்து நிற்கும் நிலையை மங்கையர்க்கரசியார் ஒருவரே செய்தார். குலச் சிறையும் அப்படியே. 1, 3, 5, 7, 9 ஆகிய ஐந்தில் மங்கையர்க்கரசியாரையும் 2, 4, 6, 8, 10 ஆகிய ஐந்தில் குலச்சிறையாரையும் பாராட்டி, பதினென்றும் பாட்டாகிய திருக்கடைக்காப்பினுள் இருவர் பணிகளையும் பாராட்டினர்.

எனவே, மங்கையர்க்கரசியார் திருத் தொண்டினுல் தம்மைத் தேசமாக்கியவர்; தம்மை உலகமென நிறுத்தியவர். அவரைப் பாராட்டும் அருஞ்செயல் ஒன்று உண்டு. உலகத் தாயாம் உமையம்மையோடு இணைத்து நிறுத்தி, பின்னர் உமையம்மையையும் விஞ்சிய பெருமை மங்கையர்க்கரசிக்கே உண்டு என விளக்கிய நிலையில் அப்பாராட்டினை வழங்குகின்றார் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகள்.

> "இலைபடர்ந்த பொய்கை இடத்தழுதல் கண்டு
> மூலசுரந்த அன்னையோ முன்னின் — நிலைவிளம்பக்
> கொங்கை சுரந்த அருட்கோமகளோ சம்பந்தா
> இங்குயர்ந்தாள் ஆர் சொல் எனக்கு,"

எனபது நால்வர் நான் மணி மாலை. இதனைத் திருக்களிற்றுப்படியார் என்ற சாத்திர நூல்.

> "சுரந்த திருமுலைக்கே, துய்ய சிவஞானம்
> சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்ல — சுரந்த
> தனமுடையாள் தென்பாண்டி மாதேவி செய்ய
> மனமுடையாள் அன்பிருந்த வாறு.

என்று பாராட்டியது. திருஞானசம்பந்தர் திருக்கோயில் வழி பாட்டுக்கு எழுந்தருளிய காலத்தில் முதன்முதல் காணும் காட்சி அமைகிறது. பின்னர், திருஞானசம்பந்தர் தங்கியிருந்த திருமடத்திற்குச் சென்று கண்டு தரிசிக்க இருவரும் (மங்கையர்க்கரசியாரும் குலச் சிறையாரும்) செல்கிறார்கள். அங்கே,

> "ஞானத்தின் திருவுருவை நான் மறையின் தனித்துணையை
> வானத்தின் மிசையன்றி மண்ணில் வளர் மதிக் கொழுந்தை
> தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர் தொடுக்கும்
> கானத்தின் எழு பிறப்பைக் கண் களிப்பக் கண்டார்கள்"

இக்காட்சியின் விளக்கம் முதற்பகுதியில் விரித்தெழுதப் பெற்றுள்ளது. இதனை இன்னும் தெளிவாகத் திருவருளைக் கண்டார்கள் எனக் கொள்ளலாம்.

"சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும்
இனி எதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந்தருளப் பெற்ற பேறினுல்
எற்றைக்குந் திருவருளுடையோம்"

என்ற (2562) சேக்கிழார் வாக்கில், இறப்பும் எதிர்வும் ஆயஇரு வேறு நிலைகளைநிறுத்தி, இவ்விரண்டையும் இணைத்ததாய், உயர்ந்ததாய் நின்ற ஒன்று என்று கண்டார்கள் என்றூர் சேக்கிழார், அது திருவருளாம் நிலையே யன்றி வேறன்று.

ஆவது இதுவேயாகில் செய்க

திருஞானசம்பந்தருடன் வந்த அடியவர்கள் திருமுறைப் பாராயணம் செய்தார்கள். பொருமையடைந்த சமணர்கள் பாண்டியனை அடைந்து, மதுரையிற் சைவவேதியர்கள் கூட்டமாக வந்தமையால், அவர்களைக் காண நேர்ந்தது; அதனுல் கண்டு முட்டு ஆயினேம்; உண்ணு நோன்பு மேற்கொண்டேம் என்றூர்கள். அரசனும், யான் நீங்கள் சொல்லக் கேட்டமையால் 'கேட்டு முட்டு' ஆயினேம் என்றன். பின்னர் ஞானசம்பந்தர் வந்த வரலாற்றைக் கூறினர். யாது செய்யலாம் என்றன் அரசன். ஞானசம்பந்தர் தங்கியிருக்கும் மடத்தில் மந்திரவித்தைகளினுல் தீப்பற்றும்படிச் செய்தால், அவன் நகரத்தை விட்டே ஓடிவிடுவான் என்றூர்கள். "ஆவது இதுவேயாகில் அதனைச் செய்யப் போமின்" என்று கூறினன் பாண்டியன். கோவலனைப் பற்றி அரசுப் பொற்கொல்லர் கூறியமை கேட்ட பாண்டியன் நெடுஞ்செழியன் கூற்றுக்கும், இங்கே சமணர்களிடம் கூறும் பாண்டியன் கூற்றுக்கும் வேறுபாடு அதிகம் இல்லை.

பாண்டியன் அனுமதியுடன் சென்ற சமணர்கள் தம்மந்திர வலிமையால் தீமூட்ட முயன்றார்கள். முடியாதாகவே தாமே மறைந்து நின்று தீமூட்டினர்கள். இச்செய்தி ஞானசம்பந்தருக்குத் தெரிவிக்கப் பெறுகிறது.

இது என் பொருட்டு அவர்களாற் செய்யப் பெற்றது. இதனுல் இறைவன் அடியவர்கள் துன்புற்றிருப்பார்களே! அரசன் முறை செய்யாமையால் இது நேர்ந்தது. "இது பையவே சென்று பாண்டியற்காகுக" என்று கூறி, ஆலவாயண்ணலின் மேல் ஒரு பதிகம் பாடினர். நம்பியாண்டார் நம்பிகளும் இந்நிகழ்ச்சியைப் பாராட்டிப் பாடியுள்ளார். சம்பந்தர் திருமடத்துக்கு அமணர் இட்ட தீயானது பாண்டியனை வெப்பு நோயாகச் சென்று பற்றியது.

பாண்டியனைப் பற்றிய வெப்புநோய் நீங்காமையின், குலச்சிறையாரும் ஞானசம்பந்தரை அழைக்கலாம் என்று கூறவே, அரசனும்

உடன்பட்டான். ஞானசம்பந்தரும் ஆலவாய் அரன் முன்னிற்கவே, திருநீற்றின் பெருமையை நீலே நாட்டி விடுவது என்ற குறிக் கோளுடன் எழுந்தருளுகிறார். சேக்கிழார் விதித்து அருளிய வழி முறையே வரலாறுகள் நடைபெறுகின்றன. வரலாறுகளை ஈண்டு எழுதாமல் அவை பற்றிய ஆய்வு மட்டுமே மேற்கொள்ளப் பெறு கின்றது. வெப்புநோய் தீர்ப்பதற்காகத் திருநீறு அருளிச் செய்யப் பெறுகிறது. திருநீற்றின் பெருமையை விளக்கும் வகையில் திரு நீற்றுப் பதிகம் இங்கே அருளிச் செய்யப் பெறுகிறது.

> ''ஆற்றல் அடல்விடையேறும் ஆலவாயான் திருநீற்றைப்
> போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன்
> தேற்றித் தென்னன் உடல் உற்ற தீப்பிணியாயின தீரச்
> சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே''

என்ற திருநீற்றுப் பதிகத்துத் திருக்கடைக் காப்பினுள். திருநீற்றைப் போற்றியும் தென்னன் உடலில் அமைந்த தீப்பிணி தீரச் சாற்றியும் அமைத்த பதிகம் என்பதைச் சிறப்பித்தார்.

தீயினும் நீரினும் பெற்ற தீர்ப்புகள்

சமணர்களின் விருப்பின்படியே தத்தம் சமய உண்மைகளே உண்மைகள் என்ற கருத்தை நீலேநாட்ட இருவரும் மூற்பட்டார்கள்.

மதுரையில் நடைபெற்ற வாதுகளில், நிகழ்த்தும் முறை, வெற்றி தோல்விகளை நிச்சயிக்கும் முறை, வெற்றி தோல்விகளின் அடிப் படையில் மேற் கொள்ளப் பெறும் நீதி நிலைநாட்டும் முறை போன்ற வைகளை யெல்லாம் சமணர்கள் கூறிய வரையறைகளையே மூலமாகக் கொண்டு முடிவு செய்யப் பெறுகின்றன.

பாண்டியனின் வெப்புநோய் தீர்க்கப் பெற்றது திருநீற்றுப் பெரு மையை உறுதிப்படுத்தும் முறையில் சைவம் பெற்ற வெற்றியே. அடுத்ததாக அமைவது இருதிறத்தினரும் தத்தம் கொள்கைகளை ஓலையில் எழுதி, நெருப்பிலிட வேண்டும். தீயினால் அழிக்கப் பெறுத கொள்கையே உயர் கொள்கை என்பது முடிவு. சமணர்கள் தோல் வித்தானத்தை எய்துதற்குரிய காரணம் அவர்தம் கொள்கையன்று; அவர்கள் மேற்கொள்ளும் செய்கையே. பேராற்றற் பரம் பொரு ளாய கடவுளை ஏற்கும் கருத்தில்லாதார் சமணர். ஆனால், தீயும் நீரும் தத்தம் ஆற்றலால் நம் கொள்கையை நிலைநாட்டும் வல்லமையுடை யவை எனக் கருதுவதும் அவ்வடிப்படையிற் செயற்படுவதும் சம ணர்தம் தோல்விக்குரிய காரணங்களாகின்றன. அவ்வாறே ஞான சம்பந்தருக்கு வெற்றியை அளிப்பது அவர் மேற்கொண்டு பணி யாற்றிவரும் திருத்தொண்டு நெறியே. மேலும், திருப்பதிகத்தின் ஆற்றலை, தமக்குப்பிறகும் தம்பதிகங்கள் தாம் அமைத்துக் கொடுத்த முறையில் அருள் நலத்தை உலகத்து உயிர்களுக்குத் தருமா தராதா என்ற ஐயத்தைத் தெளிய உணரும் முறையில் சோதித்துப் பார்க்கும் முறையிலேயே அமைந்து விடுகின்றன.

திருப்பதிகங்களைப் படிக்கும் போது — ஓதும் போது அங்கே கூறப் பெற்றிருக்கும் பலன்கள் கிடைக்கும் என நம்புவதும், அவைகளை அப்பதிகங்கள் கொடுக்கும் வல்லமையுடையன என்பதும் உண்மையே எனக் கொள்வோம். ஆயினும், அப்பதிகங்கள் அவ்வவற்றுக்குரிய பலன்களேயன்றி, ஓதுபவர்கள் அல்லது எடுத்து உபயோகிப்பவர்கள் எந்த ஒரு பயனைக் கருதி உபயோகிக்கிறார்களோ அந்த நற்பயனையும் உடன் கொடுக்கும் ஆற்றலுடையவை என்பதையும் இம்மதுரை வாதுகளின் மூலம் தெளியலாம் எனக் கொள்வர், எடுத்துக்காட்டாக,

"போகமார்த்த பூண்முலையாள்" எனத் தொடங்கும் நள்ளாற்றுப் பதிகம் வல்லவர்கள் உண்பு நீங்கி, வானவரோடு அவர்தம் உலகில் உறைவார் என்ற பயனைத் தரவல்லது. ஆனால், இப்போது அப்பதிகம் எரியிலிடப் பெறுகிறது. அதில் அது அழியாதிருக்க வேண்டும். எரியால் அழியாமையைப் பயனுகக் கருதி அப்பதிகத்தை உபயோகிக்கும் போது, அது அந்த ஒரு பயனையும் தரவல்லது என்பதாம். இவ்வாறு விளக்கம் கூறுவது மரபு. ஆனால், அவ்வாறு கூறினால் அது கொள்கை முரண். திருமுறைகள் அழியாதவை என்ற கருத்தானது உட்கொண்டுள்ள கொள்கையின் உயர்வாலன்று. திருமுறைகள் எல்லாவற்றுக்கும் அமைந்த பொதுத்தன்மை.

உலகந் தோன்றியழியும் போது வேதம் தோன்றியழியுமே, அவ்வாறுயின் வேதங்களுக்கு நித்தியத்தன்மை உண்டா? எழுத்தொலி அழியும் என்பதானால் திருவைந்தெழுத்து ஒலிக்கு நித்தியத்துவம் உண்டா? இத்தகைய வினுக்களுக்கு விளக்கமளிக்க வேண்டிய கடப்பாடு அவ்வச் சமயச் சான்றோர்களுக்கு உண்டு.

> "உற்ற குறியழியும் ஓதுங்காற் பாடைகளில்
> சற்றும் பொருள்தான் சலியாது"

என்பது திருவதிகை மனவாசகம் கடந்தார் திருவாக்கு. அதன் உட்பொருள் என்ன? மந்திர எழுத்துகள் போன்றவைகளை நாம் உச்சரிக்கும் போது தோன்றி அழிவது போலக் காணப் பெறும். ஆனால், அது எந்த இடத்தில் அமைக்கப் பெற்றுள்ளதோ, அந்த இடமானது எந்த ஒன்றாலும் அழிவுக்குள்ளாகாது. அவ்வாறே திருமுறைகள் தம்மையேன்றி, தம்மை ஏற்ற இடங்களையும் அழியாமல் வாழவைக்கும் ஆற்றலுடையவை என்பதை விளக்கிக் காட்டுவதும் இத்தகைய வாதங்களினுல் அடையக் கூடிய வேறும் ஒருபயன் எனக் கொள்ள வேண்டும். அதனுலேயே, சைவசமயக் கொள்கையானது தீயினுல் அழிக்கப் பெறுதது என்ற முடிவுக்கு அப்பாலாக, அப்பதிகம் 'பச்சைப் பதிகம்' என்று போற்றப் பெறுவதையும் உன்னியோர்க. "தளிரிள வளரெரி" என்ற பதிகத்தின் மூலமாகத் திருஞான சம்பந்தர் திருநள்ளாற்றுப் பதிகம் மட்டுமன்றி, அனைத்துத் திருமுறை கட்கும் நித்தியத்தன்மையை அளிக்கிறார் எனக் கொள்ள வேண்டும். திருமுறைகளை எந்த ஒருபொருளின் மேல் அமைத்தாலும், திருமுறை

கூத் தாங்குகின்ற அப்பொருளானது இருமையின் ஒருமை என நிற் கும். அதனுள்ளே இருக்கும் அப்பொருளுக்கு அப்பாலான திருவ ருளைச் சார்ந்திருக்கிறது. அந்தத் திருவருளில் பதிகங்களை அடைக் கலமாக்குகிறார். இக்கருத்து முன்னரே விளக்கப் பெற்றுள்ளது.

திருநீற்றுப் பெருமையைப் பதிகமாக அமைத்து ஏத்தியும், திரு நீற்றைத் தடவியும் பாண்டியனுடைய வெப்புநோய் தீர்க்கப் பெறு கிறது. இரண்டாவது நிலையில் அனல்வாதம். ஏடும் எழுத்தும் இணைந்த ஒன்று எரியில் போடப்பெறுகிறது. பதிகம் அழிந்து ஏடு இருப்பின் கட்சிவென்றது எனக் கருத இயலுமா? பதிகம் அழி யாமை; ஏடு எரியாமை; திருப்பதிகம் தரும் அனுபவம் இப்படிப் பட்டது என்று சான்று பகர்ந்த பதிகம் ஆனமையின் பச்சைப் பதிகம்.

காய்ந்த ஓலையில் எழுதப்பெற்ற திருப்பதிகம். அதன் உண்மைத் தன்மையை ஆராய முற்படும் நிலையில் எரியில் போடப்பெறுகிறது. எரியால் தாக்குண்ணப்பெறுது போட்டது போட்டவாறே இருக்கு மாகில் அதுவே வெற்றி. மேலும், இதனை நெருப்பு ஒன்றுமே செய்யவில்லையானல், நெருப்பை நாம் ஐயப்பட வேண்டும். நெருப் பினல் அனுபவப்படுத்தப் பெற்றது என்பதை எடுத்துக் காட்டிய ஏடு. சுண்ணும்புக் காளவாயில் இடப்பட்ட அப்பரடிகள் எத்தகைய அனுபவம் பெற்றார் என்பதை ஈசன் எந்தை இணையடி நீழல் போன்றது என்று அவர் வாய்மொழியே கூறுமாறுபோல திருப்பதி கத்தைத் தாங்கியிருந்த அந்தக் காய்ந்த ஓலை பெற்ற அருளனுபவத் தால் அது பச்சை ஓலையாக அமைந்தது. இதுவே அருளனுபவம். திருப்பதிகம் தாங்கிய எந்த இடமும், உயிர்ப்பொருளாக இருக்க வேண்டும் என்ற நியதி இல்லை; உயிரல் பொருளாகிய ஓலைநறுக்கும் நித்தியத்தன்மை பெறுதல் மட்டுமன்றி, அருளனுபவம் துய்த்து இன் புறும் என்பதை நிலைநாட்டிக் காட்டிய செயலாக அமைந்தது.

அவ்வகையில் சமணம் தோற்றது என்று கொள்ள இயலுமா? சமணர்களின் எழுநிலைப்படிமுறைகளை உளங்கொண்ட பொருட் கொள்கையை விரிவாக ஆய்தல் வேண்டும். புனல்வாதத்தில் "அத்திநாத்தி" என எழுதியிட்டதாக அமைப்பது வரலாறு. ஆனமை யின், அனல்வாதத்தில், 'அத்திநாத்தி' என்பதற்கு முன் உள்ள இரு நிலைகளில் ஏதேனும் ஒன்றை எழுதியிருக்க வேண்டும். ஏழு படி நிலைகளையும் அமைத்து, பின்னர் அவற்றின் இணைப்பில் அமையும் பொருளை நிறுத்தி, பன்மையின் இடை அமைந்த ஒருமை அல்லது மாற்றத்தின் இடையில் மாருமை என்ற அவர்தம் பொருட்கொள் கையை முழுமையாகவும், தனித்தும் தனிமையின் இணைப்பில் முழு மையாகவும் அமைத்து எழுதியிருப்பின் அவ்வோலை எரியாது நின்றி ருக்கும்.

தத்துவ உண்மையில் எங்கே சிக்கல் என ஆய்வது, குறையுண்டு என முடிவுறுத்துவது வேறு. தெரிந்த தத்துவ உண்மைகளைச்

செயற்படுத்தி நிறுவும் முறை தெரியாமையே அவர்கள் தோல்வி பெற்றமைக்குக் காரணம். அனல்வாதத்தில் தங்கள் குறையை உணர்ந்தார்கள். அதற்காக இன்னொரு வாய்ப்பினை வேண்டும் என்று கேட்கிறார்கள். அதில் அவர்கள் 'அத்தி நாத்தி' என எழுதினார்கள். அத்தி நாத்தி என எதிர் நிறுத்தாமல் அத்தியும் நாத்தியும் என இணைத்திருந்தால், எதிர்நிலைகள் இரண்டையும் இணைத்து நிறுத்திய பொருட் கொள்கையானது ஒரு நிலையில் அந்த ஓலையைக் காப்பாற்றியே இருக்கும். இரு மாறுநிலைகள் சேர்ந்திருக்கும்போது அழியும் என்பது ஒரு பொருட்கொள்கை. எரிப்பது, எரிக்கப் பெறுவது என்ற இருநிலைகளை இணைத்து, வெற்றியை எரியாதிருப்பது என்பதில் அமைப்பதனால், அவ்வமைப்பினை அவ்விரு நிலைகளுக்கும் மேற்பட நின்ற ஒன்றினால்தான் செய்ய இயலும்.

இனி, திருஞானசம்பந்தர், கொள்கையை நிறுவிக்காட்டும் முறையையும் நாம் காணுதல் வேண்டும். போட்டியின் வரைமுறைகளை அமைப்பது, வெற்றியை வரையறை செய்வது போன்றவைகளைத் தாம் எடுத்துக் கொள்ளவேயில்லை. எதையும் ஆக்கியும் அமைத்தும் கொடுக்க வல்ல பரம்பொருள் ஒன்று உண்டு என ஏற்கும் அடிப்படைக் கொள்கை.

அடுத்தது, நான்மாடக்கூடல் என்ற மதுரையில் நடைபெறுகிறது வாதம். நான்மாடக்கூடல், அதில் உள்ள கோயிலின் பெயர் ஆலவாய், தீயில் இடுதற்கென எடுத்த பதிகம் திருநள்ளாற்றுப் பதிகம். நான்கு, நான்கும் கூடிநிற்கும் நிலை. நகரின் எல்லைகாட்ட முற்பட்ட பாம்பு தன்னுடைய தலையையும் வாலையும் இணைத்து அடக்கிய நிலையில் பெருமான் தங்கியிருக்கிறான். எடுக்கப்பெற்ற பதிகம் நள்ளாற்றுப்பதிகம். தருப்பைக்காடு. வெண்காடும், மறைக்காடும் இருபுறம் நிற்க, இடை நின்ற நிலையே தருப்பைக்காடு. பெருமானே, இப்பதிகம் முழுவதும் "நம்பெருமான்" என்றே குறிப்பிட்டார். எனவே, கூடலும் ஆலவாயும் இணைய நடுநின்றநிலை. இங்கே, மாறுபட்டவைகளை இணைக்கும் மார்க்க சமரசம்—அருமையும் பெருமையும் இணைந்த பெருமான் நிலை. இதுவே பிரமாபுரத்துநெறி. அதனைத் திருவைந்தெழுத்து நிலையில் பார்க்கிறார். ஐந்து பகுதிபெற விரிந்து நில்லாமல் தலையும் வாலும் இணைந்து ஒருமையுற்று நிற்கிறது. எனவே, திருவைந்தெழுத்துக்குத் தனித்தனிப்பொருள்கூறுமல் நாமம் என்ற அளவிலேயே நிறுத்தி விடுகிறார். திருவைந்தெழுத்தை இறைவன் பெயர் என்ற அளவில் மட்டும் நிறுத்தியது, நாம ஒலியானது பொருளை உணர்த்துமேயாயினும் பொருளின் எல்லையைக் கடந்தது என்ற வகையில் அப்பதிக ஓலையை எரிப்பதும் தணிப்பதும் என்ற இரு மாறுபட்டவைகளை அழிக்காமல் வாழச்செய்யும் ஒருவகை ஒருமைநிலை. இங்கே, நான்மாடக்கூடல் என்ற நான்மறையும் ஐயறிவின் ஒருமையும் இணையவும் திருவைந்தெழுத்தாகிய அவ்வொலியானது நாமம் என நிற்கவும் அமைந்த ஊனநடனம்—வெள்ளியம்பலக் கூத்து நிகழ்த்தும் திருவருளிடம் ஒப்படைக்கப் பெறுகிறது. இதனைத்

தொண்டு நெறியின்—பூவும் புனலும் சொரிதலும் ஏத்தித்துதித்தலும் ஆய இரண்டன் இணைப்பில் அமைந்த வெற்றி என்று கொள்ளலாம்.

அடுத்து வருவது புனல்வாதம். இவ்வாதத்தில் இயல்பை எதிர்த்து நிற்க வேண்டும். தண்ணீரின் போக்கில் சென்று விடுவது இயற்கை. ஓடும் தண்ணீரில் நிற்றல் என்பது ஒருவகை வெற்றி. அதற்குமேல் எதிர்த்துச் செல்லுதல் வேண்டும். இந் நிகழ்ச்சிக்காக ஞானசம்பந்தர் அமைத்த பதிகம் மெய்ப்பதிகம் எனவும் முதற்பாசுரம் மட்டுமே எழுதி வைகையாற்றில் இடப்பெற்றதாதலின் திருப்பாசுரம் எனவும் இப்பதிகத்துக்குப் பெயர் அமைந்தது. முதற்பாசுரம் எழுதப்பெற்று ஆற்றில் விடப் பெற்ற பிறகு, பதிகமுற்றுவித்தலைச் செய்தற்காக ஏனையபதிஞெரு தேவாரங்கோப் பாடி அமைக்கிறார். ஏட்டில் எழுதப் பெற்ற திருப்பாசுரம் கீழே கொடுக்கப் பெற்றுள்ளது.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயது எல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே

என்ற இப்பாசுரத்தினுள் ஆறு வியங்கோள் வினைமுற்றுகள் வந்துள்ளன. இவை ஆறும் மூவகை இணைப்புகளையுடையன. வாழ்க வீழ்க; ஓங்குக ஆழ்க; சூழ்க தீர்க என்பன.

அந்தணர், வானவர், ஆனினம் என மூன்று படிநிலைமாற்றங்கள் வாழ்வதாகுக. இம் மூவகை நிலைகளிலும் தடை செய்த தடைகள். அவை கீழறுக்கும் செயலுடையவையாதலின் தண்புனல் என்றார். மூதன்முதலிற் செயற்பாட்டுத்திட்ட அமைப்புமுறை பேசப் பெற்றது.

அடுத்த நிலையில் கொள்கைநிலை. பிற கொள்கைகள் காலப் போக்கில் ஆக்கம் பெற்றிருந்தாலும், இடையிடையே தடைப்பட்டு நின்றன. ஞானசம்பந்தரின் கொள்கையானது தடைபடாது ஓங்கியும் உயர்ந்தும் நின்ற உயர்வுடையது.

மூன்றாவது, இக் கொள்கையானது பொதுமையை உள்ளீடாகக் கொண்டது. எனவே, சிறுமை அளவினதாய எல்லைகள், சாதி முதலிய வேறுபாடுகள் பொதுமையில் நின்ற கடவுள்; பொதுமையில் துயர்தீர்த்தல் என எல்லாவற்றையும் பொதுமை பெற அமைத்த கொள்கை.

எளிமையாகக் கடைப்பிடிக்க இயலும் நெறி. எளிமை; தடையின்றி உயர்ந்த உயர்நிலைக் கொள்கை; அருமை. இவ்விரண்டையும் இணைத்த பொதுமை. இம் மூன்றும் தனித்தும் இணைந்தும் நின்ற வகையில் திரு நெறிய தமிழ் எனலாயிற்று. இதனை நம்பியாண்டார் நம்பிகள்,

"ஆறது ஏறும் சடையான் அருள் மேவ
வீறது ஏறும் தமிழால் வழி கண்டவன்"

என்று சிறப்பித்தார். தீமையானது பன்னிரண்டு முறை கடலெனப் பெருகி அழித்தபோதும், அழியாது உயர்ந்துநின்று, பரம்பொருளைத் தன்னுள் அகப்படுத்திய பெருமை உடையது என்றார். இங்கே ஞானசம்பந்தர் நுட்பமாகச் சொல்லும் கருத்து ஒன்று உண்டு.

எல்லாச் சமயங்களும் எம்பெருமான் அமைத்தவைகளே. அவ் வவர் படிமுறை வளர்ச்சிக்கேற்ப அவை அவைகளைப் பின்பற்றி வந்தனர். எனவே, சமயங்களை அழிக்கும் நோக்கத்தில் இவ் வாதப் போரைச் சைவம் ஏற்கவில்லை. முன்னமேயே பன்னிரண்டுமுறை வந்து தாக்கிய ஊழிக்காலத்தில் அழியாது நின்ற பொதுமையும் உயர்வும் கொண்ட கொள்கைகள் இவை. கொள்கைகளில் வந்து புகுந்தவன் இறைவன். இறைவனிற் புகுந்து நிற்பவை இக் கொள்கைகள் அல்ல. எனவே, சமணத்தை அழிப்பது இவ்வாதங் களின் குறிக்கோளன்று. இது பொதுமைநெறி. பொதுமையாளன், பொதுமை என்பவைகளை மூலமாகக் கொண்டது இச்சமயம். மக்க ளின் துயர் நீங்கி, அவர்கள் இன்புற்றுப் பொலிய வேண்டும் என்பதே பயன். இக் கருத்தை ஞானசம்பந்தர் கொண்டிருந்தார் என்பதை மங்கையர்க்கரசியாரை முன்னிலைப் படுத்திச் சொல்லும் பதிகத்தில்,

"அத்தகுபொருள் உண்டு இல்லையும் என்று நின்றவர்க்கு அச்சமா
ஒத்து ஒவ்வாமை மொழிந்து வாதில் அழிந்து எழுந்த கவிப்பெயர்"

என்றும்,

"பொங்கு நூல் வழியன்றியே புலவோர்களைப் பழிக்கும் பொலா
அங்கதர்"

என்றும் கூறுமாற்றுன் உணரலாம்.

சமணமும் தம் கொள்கையைப் பொதுமை என்று சொல்கிறது. பலருடைய கொள்கைகளை வேண்டும் என்பதாலோ அச்சம் என்ப தாலோ இணைத்துக் கொண்டால் அது பொதுமையாகாது. அனைத் துயிர்களுக்கும் பொதுமையின் நன்மை செய்தல் என்பது போன்ற பொதுமைகள் இருந்தால்தான் பொதுமையாகும் என்று கூறுகிறார். உபதேசமே இல்லாத தலைவனை ஏற்பதும், நூற்சான்று காட்டாம லேயே வாதம் செய்வதும் பிறரைக் குறை கூறுவதும் ஆகிய தீமைகள் ஒழிக்கப் பெறவேண்டும் என்பதே இவ்வாதங்களின் உட்பொருள் என்றார்.

வாதங்களின் இறுதிக்காட்சி

புனல் வாதத்தை வேண்டும் என்று சமணர்கள் வற்புறுத்த முய லும் போது, இரண்டுமுறை உண்மையை நிலைநாட்டியாயிற்று, இனி யும் தேவையில்லை, என்பதே குலச்சிறையார் முடிவு. இல்லை; இல்லை இன்னொரு போட்டி அமைய வேண்டும் என்பது சமணருடையது.

இனியும் போட்டி அமைப்பதாக இருந்தால் அப்போட்டியின் பயன் என்ன என்பதை உறுதிப்படுத்திவிட வேண்டும். எனவே, தோற்றால் என்ன செய்வது? உடனே, சமணர்கள் "இவ்வாதில் தோல்வியுற்றோமானால் எங்களை இவ்வேந்தனே கழுவேற்றும் கடமையுடையான்" என்றார்கள். உடனே, மன்னன் நீவிர் நும் கொள்கையினை மறந்து செற்றத்தால் வாய் சோர்ந்து பேசிவிட் டீர்கள் என்று கூறியதை நினைக்க வேண்டும்.

சமய உண்மைகள், தத்துவக் கொள்கைகள் நம்மை நெறிப் படுத்துவதற்குரியவை. ஆய்ந்து ஏற்றுக் கொள்வதும் அடியொற்றிச் செயற்படுவதும் வேண்டும். ஒருமுறை ஆய்ந்து சரி என்று கண் டோம். மேலும் ஆராயும்போது, நாம் இதுவரை ஏற்ற கொள்கை தவறானது எனக் காணில், சரியான கொள்கையை ஏற்க வேண்டும் அவ்வளவே. வாழ்ந்து சிறப்பதற்காகக் கொள்கைகளை மேற் கொள்ளுகிறோமேயன்றி, சாவதற்காகவன்று. இதையே பாண்டியன் மங்கையர்க்கரசியாரிடம் "திருஞானசம்பந்தர் அருளால் இந்நோய் அகலுமேல் அறிவேன், யானுற்ற பிணியைத் தீர்த்து வென்றவர் பக்கமே சார்தற்குரியேன்' என்று கூறியமையைக் காண வேண்டும்

ஞானசம்பந்தர் மேற்கொண்ட அறக்கொள்கை

'வேந்தனும் ஓங்குக' என்றமையின் அரசனின் கூன் நிமிர்ந்தது. இது மங்கையர்க்கரசியாரின் திருத்தொண்டினை உள்ளிடாகக் கொண்டது என்று கருதுவோரும் உண்டு. பாண்டியனின் நோய்மைப் பண்பை நினைக்கிறார். தான் சமணம் சார்ந்தபோது, தன்னையுடன் கொண்டு பலரும் சமணம் சார்ந்தபோது, அதனால் அவன் சைவ சமயத்தையோ, தெய்வத் திருநீலயங்களையோ குறைப்படுத்த வில்லை. மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் சிவவழிபாடு மேற்கொள்வதைத் தடை செய்யவில்லை. மேலும், சைவ அடியார் ஒருவர் உலக மகாகுரு என்ற நிலையில் சிவிகையூர்ந்து வருவதைத் தடை செய்யவில்லை. பின்னரும் கூட, தனது நோய் தீர்க்கப் பெற்ற ஒரு காரணத்துக்காக அவன் சைவம் பெரிது என்று ஒப்பவில்லை. வாதஞ்செய்து நிலைநாட்ட வேண்டும் என்பதையே வலியுறுத்தினான். தானே உண்மையைப் புரிந்து கொள்ள இயலாமையானும், பொய்யை மெய்போல அமைத்துச் சொன்னமையைக் காது கொடுத்துக் கேட்டும் நம்பியும் செயல்பட்டமையானும் குறைப்பட்டு விட் டான். அறிவால் அறிந்து முடிவு செய்தலில் கூன்பட்டு விட்டான் என்பதே குறை. ஞானசம்பந்தர் குருவென நின்றுராதலின்; உண்மையை உணர்த்தினார். குருவெனவே எண்ணிக் கேட்டானு தலின் கூன் நீங்கியது. இப்போது வேந்தன் ஆனான் எனவே, அவன் வேந்தனுதலின் அவன் செயல்

'கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட்டதனொடு நேர்'

என்பதே.

கழுவேற்றுதல் அல்லது காரணமாதல்

வாதுசெய்தல் முடிந்தபின்னர், வெற்றியின் அடிப்படையில் மன்னன் மந்திரியாரை நோக்கிக் "கொல்நுனைக் கழுவில் ஏற முறை செய்க" என்று கூறினன் அப்போது ஞானசம்பந்தர் "மிகையிலா வேந்தன் செய்கை விலக்கிடாதிருந்த வேலே" என்ற சேக்கிழார் வாக்கின்படி, கழுவேற்றுதற்கு முறை செய்க என்று சொன்னபோது தடுக்கவில்லே. தடுத்திருக்கலாம். தோற்றது உண்மை. அவர்கள் உயிர் காப்பாற்றப் பெற்றிருக்கலாம். அதை ஞானசம்பந்தர் செய்யாதது குறை என்பது ஒரு கருத்து. அவர் கழுவேற்றுக என்றும் சொல்லவில்லே; வேண்டாம் என்றும் சொல்லவில்லே. போட்டியில் வெற்றி பெற்று, உண்மையை நிலைநாட்டல் என்பது மட்டுமே அவர் கொள்கை. மற்றது அரச நீதி. அதில் அவர் தலேயிடவில்லே அவ்வளவே என்பது மற்றைப் பகுதியினர் விளக்கம். இதில் வரும் சிக்கலேக் காலவளர்ச்சியோடு இணைத்துக்கண்டவர்கள் சமணர்களேக் கழுவேற்றியதற்கு வரலாற்றுச் சான்று இல்லே என்று கூறியுள்ளனர். இதனே அரசநீதியின் அடிப்படையில் வைத்தே பலரும் விளக்கம் எழுதியுள்ளார்கள். சமணரைக் கழுவேற்றியது ஞானசம்பந்தர் செய்த குற்றமே என்று முடிவு செய்தவர்களும் உண்டு. இதனேக் கற்பனேக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகள்,

> கொள்ளே கொள்ள விடுதவிக் கூற்றைப் பிடர்பிடித்துத்
> தள்ளும் திருஞான சம்பந்தா—வெள்ளமிடும்
> ஏடேறப் பால்குறைந்ததென் றமுவரே கழுவின்
> காடேறப் புக்க அருகர்.

என்ற நால்வர் நான்மணிமாலேச் செய்யுள் மூலம் அணுகும்முறை வியப்பானது.

திருஞானசம்பந்தர் இன்னுர் இனியார் எனக் கருதாது முத்தியையும் வழங்குபவர்; இயமனுல் வந்துகொண்டு போவதற்குரிய விதி முறை இருந்த போதிலும் இயமனேக் கடிந்து அனுப்பிவிட்டு, அவனுல், சிறைப்படுத்தப் படவேண்டியவர்களுக்கு விடுதலே வழங்கிய பெருந்தகையே. ஆனுல், அரசன் கூறுவதைத் தடுத்து, மன்னித்து அவர்களுக்கு விடுதலை வழங்க வேண்டும் என நினேக்கும்போது, சமணர்களில் ஒருவர்கூட அங்கே காணப்பெறவில்லேயே! ஆற்றில்விட்ட ஏடு ஏறுகிறது என்று தெரிந்தவுடனேயே ஆட்கள் ஒவ்வொருவராகக் காணப்பெறவேயில்லே. கழுவின் காட்டுக்குப் போய்க் கொண்டிருந்த சில சமணர்கள் அழுதார்களாம் எதற்கு? சொன்ன சொற்படி வாதில்தான் வெல்லவில்லே; வாய்மொழியைக் கூடக் காப்பாற்றவில்லேயே; இப்படிக் காணுமல் போய்விட்டார்களே என்று அழுதார்கள் என்றார். மன்னிப்பதுதான் அவர் குறிக்கோள். இரண்டு வழிகளிலும் கெட்டுப் போனுர்கள் என்பது சிவப்பிரகாசர் வாக்கு. தோற்றவர்கள் நின்று தோல்வியை ஏற்றிருந்தால் மன்னிப்பைப் பெற்றிருக்கலாம்; சென்று கழுவேறியிருந்தாலாவது அறவழிப்படி வாழ்ந்தார்கள் என்ற நற்பெயரையாவது

பெற்றிருக்கலாம்; இரண்டாலும் பெறும் பாக்கியத்தை இழந்தார்கள் என்பது சிவப்பிரகாசர் கருத்து. அறிஞர்கள் பற்பலவாறு எடுத்துச் சொல்லும் விளக்கங்களையெல்லாம் ஏற்றுக் கொள்ளலாகாது என்ற ஒரு தடையைச் செம்மையாக அமைத்துவிட்டார் சேக்கிழார்.

அரசன் முறைசெய்க என்றதும் ஞானசம்பந்தர் தடுத்திருக்க வேண்டும். தடை செய்யாதிருந்தார் என்றும் தடை செய்யாதிருந்தமைக்குக் காரணம் உண்டு என்றும் கூறுகிறார் சேக்கிழார்.

"புகலியில் வந்த ஞானப் புங்கவர் அதனைக் கேட்டும்
இகலிலர் எனினும் சைவர் இருந்து வாழ்மடத்தில் தீங்கு
தகவிலாச் சமணர் செய்த தன்மையால் சாலும் என்றே
மிகையிலா வேந்தன் செய்கை விலக்கிடா திருந்த வேலை"

என்பது சேக்கிழார் வாக்கு.

திருஞானசம்பந்தர் நினைப்பதாகச் சேக்கிழார் அறிமுகப்படுத்தும் காரணம் வேறு. வாதத்தில் வெற்றி தோல்விபற்றிக் கவலையில்லை. தனக்கும் அவர்கள்மேல் சினம் இல்லை. ஆனால், சைவர்கள் தங்கிய திருமடத்துக்குத் தீயைவைத்த கொடுமைக்கு இது தக்கதே என்று கருதி, மன்னன் ஆணையைத் தடை செய்யாதிருந்தார் என்பது ஞானசம்பந்தர் மூலம் சேக்கிழார் அமைக்கும் காரணம்.

திருமடத்துக்குத் தீவைத்தது உண்மை. ஆனால், அது தெரிந்ததும், திருஞானசம்பந்தர் ஆராய்கிறார். என் பொருட்டுச் செய்ததே இது. இது இவ்வாறு அமைதற்கு முதற்காரணம் பாண்டியனே, ஆகையால், இத்தீயானதுபையவே சென்று பாண்டியற்காகவே என்று அமைத்தார். அதன்படியே சென்று வெப்பு நோயாக அமைந்தது. எனவே, சைவர் தங்கிய மடத்துக்குத் தீவைத்த குற்றம், அதற்குரியவர், தண்டனை ஆகிய எல்லாம் முடிந்து விட்டன. மீண்டும் அதையே கொண்டு வருவதற்கு வாய்ப்பில்லை.

இந்நிகழ்ச்சியில் தீர்ப்பு வழங்க வேண்டியவர் ஒருவரே. அவர் அங்கில்லை. அரசன் கூறிய ஆணை அவர்கள் காதில் விழுந்திருக்காது. விழுந்திருந்தால் ஒருவேளை அவர்கள் தடுத்திருக்கலாம். மன்னிக்கக் கூடியவர்கள் அங்கில்லை. மற்றவர்களுக்கு மன்னிக்கும் உரிமை இல்லை. அவ்வளவே. இதுவே, திருஞானசம்பந்தரின் தீர்ப்பு.

திருஞானசம்பந்தர் இறைவனையன்றி மக்களினத்தைச் சார்ந்த ஒருவரை முன்னிலைப்படுத்தி, விளித்துப் பாடிய திருப்பதிகம் ஒரேயொரு பதிகம்தான். அது மங்கையர்க்கரசியாரை விளித்துப் பாடியது. பெற்றதாயைவிட, உலகத்தாயாக உற்ற தாயைவிட ஞானசம்பந்தர்க்குஉரிமைத் தாயாக நின்றவள் மங்கையர்க்கரசி. குழந்தை, பாலுக்கு அழுதது என்று சொல்லக் கேட்ட அளவில் பால் சுரந்த

அன்னை. சைவத்தை ஏற்றமைக்காக அவள் பட்ட அல்லல்கள் கணக்கிலடங்கா.

அரசமாதேவியாக இருந்தும் அன்பு வாழ்க்கை இல்லை. நாள் தோறும் கண்டுமுட்டு; கேட்டுமுட்டு. திருநீறுபூசிக் கொண்டு சென்று தன் கணவனைப் பார்க்க முடியாது, கண்டு முட்டு. அன்று முழுவதும் அவன் உண்ணுநோன்பு. அரசி என்றும் பாராமல் இச் சமணர்கள் அம்மையாருக்கு இழைத்த அல்லல் கொஞ்சமன்று, தங்களுக்குச் செய்த கொடுமை எனக்கு வெற்றியை அளிக்கும் கவலற்க என்று கூறுகிறார்.

"தங்களுக்கும் அச்சாக்கியர்க்கும் தரிப்பொணு நற்சேவடி
எங்கள் நாயகன் ஏத்து ஒழிந்திடுக்கே மடுத்து ஒரு பொய்த்தவம்
பொங்கு நூல் வழியன்றியே புலவோர்களைப் பழிக்கும் பொலா
அங்கதர்க்கு எளியேனலேன் திரு ஆலவாய் அரன் நிற்கவே"

என்ற பதிகத்தில் "தங்களுக்கும்" என்ற சொல்லாட்சியின் தன் மையை ஓர்க. திருக்கோயிலுக்குச் சென்று இறைவனை ஏத்தி வணங்க முடியாமைக்கு உரிய கொடுமைகள்; பொய்யானவைகளைச் சொல்லியே கணவனோடு அமைந்த அன்பு வாழ்வை அழித்தது; என நின்றவை. இறைவனுக்குச் செய்த குற்றம் யாராலும் மன்னிக் கப் பெறலாம் இறைவன் அடியவர்களுக்கு இழைத்த குற்றத்துக்குக் கழுவாய் இல்லை. ஞானசம்பந்தர் வருதற்கு முன் நாள்தோறும் அம்மையார் அனுபவித்தவை எண்ண முடியா. ஒருத்தியாய் நின்றே உலகில் சைவத்தைத் தழைக்கவைக்கக் கூடிய மாண்புடைமை இருந்தும், நாள்தோறும் அவர்தம் நெஞ்சம் துணுக்குறு மளவுக்குக் கொடுமை செய்தவர்கள் ஆதலின் சிவனடியார்க்குச் செய்த குற்றம், அவர்கள் உள்ளம் கலங்கிக் கூறிய சொற்களின் பயனை அனுப விக்கத்தே தீர வேண்டும். யாராலும் மாற்ற இயலாது. இரண்டாவது,

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்பது அறம். பாண்டியன் இவர்களை வளர்த்தவன். அரசவாழ்வு அமைந்து வாழ வழி வகுத்தவன். அவனையே குற்றப்படுத்தி அனைத்துக் குற்றங்களையும் இழைத்தார்கள். மந்திரத்தால் தீமூட்டு வோம் என்றார்கள். ஆவது இதுவேயாகில் செய்யுங்கள் என்றான். அரசநீதி என நினைத்தான். மந்திரத்தாலன்றி நேராகவே தீக்கொளு வினர்கள். அவ்வாறு செய்ததனாலேயே, வெப்பு நோயால் துயர மடைய வேண்டி வந்தது. மன்னன் அனுபவித்த துன்பம்—வெப்பு நோய்க் கடுமை — சமணர்களே சொல்லும் ஊழ்க்கொள்கை வண்ணம் மாறாது வந்து அவர்களையே பற்றும். இடையில் யாராலும் தடுக்க இயலாது என்பதே, சிவனடியவர்களுக்குச் செய்த தீங்கும், செய்ந் நன்றி கொன்ற குற்றமும் ஆகிய இரண்டும் யாராலும் மன்னிக் கத்தக்கவையல்ல. அனுபவித்தே தீர்க்கப் பெற வேண்டியவை.

அவ்வகையில் அவர்கள் தண்டனை பெற்றார்கள். திருஞானசம்பந்தருக்கு இவ்வகையில் தலையிட்டுத் தடுக்கவோ, மன்னிப்பு அருளவோ உரிமையில்லை. மீறியே வலிந்து சென்று சொன்னலும், முடிவில் அவர் தோல்வியே பெறுவார். அடிப்படை அற இயலைக் கொன்றுவிட்டுத்தான் அருள் வாழும் என்பதற்கு இலக்கியம் இல்லை.

சமணர்கள் கழுவேறிய நிகழ்வை அருளாளர்கள் பலரும் தத்தம் நோக்க அடிப்படையில் நின்று விளக்கியுள்ளமை ஈண்டு நினைதற் குரியது.

உலகளாவிய பொதுமைத் தன்மையுடையது எம் சமயமே, எம் சமயமே எனப் பலரும் வாதம் எழுப்பியும் செயல்பட்டும் நின்றவைகளை ஒரு நெறிய மனம் வைத்துணர் ஞானசம்பந்தர் சைவசமயம் ஒன்றே பொதுமை தழுவிய உலகளாவிய சமயம் என்பதைத் 'திருப்பாசுரம்' என்பதன் மூலம் நிலைநாட்டினர் எனக் கொள்ளல் வேண்டும்.

இத் தலைப்பின் தொகுப்புரை

திருஞானசம்பந்தர் "விளக்க முற்பட்ட ஒன்பதாம் படியை உள்ளிட்ட வரலாற்றுப்பெருமையுடையது. 'ஒன்பது' என்ற நிலையை எட்டு என்பதற்கும் பத்து என்பதற்கும் இடைப்பட்ட நிலையாகக் கொள்ளற்க. எட்டும் பத்தும் என்ற இரண்டும் நிற்க, அவைகளை ஒட்டியதும் உயர்ந்ததும் ஆகிய ஒன்றே ஒன்பது என்ற நிலையில் சிவனடியார் பெருமையை உணர்த்த எழுந்த வரலாற்றுப் பெருமையுடையது.

மங்கையர்க்கரசியார் போன்ற தொண்டர்கள் இறைவன், அடியார் என்ற இருநிலைகளையும் கடந்த பெருமையுடன் இரண்டையும் வாழ வைத்து இடையில் உயர்ந்து நிற்கும் தனிப் பெருந்தன்மையுடையவர்கள். இவர்கள் திருவருளின் நேர்நிலை நிற்பவர்கள். இவர்கள் வெற்றிக்கென உலகமே இணைந்து தொண்டாற்றும்.

சண்பை என்பது அவ்வவர்களையும் அவ்வந் நெறியில் வாழ வைத்து, அனைத்தையும் இணைய வளர்க்கும் அருட்பெருந்தலைமையுடைய திருவருளே. அதனாலேயே

> "மண்ணில் நல்லவெண்ணம் வாழலாம் வைகலும்
> எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை
> கண்ணினல் லஃதுறும் கழுமல வளநகர்
> பெண்ணினல் லாளுடன் பெருந்தகை யிருந்ததே"

என்ற கழுமலக் காட்சியை மதுரையிலேயே அருளிச் செய்கின்றார். இப்பதிகம் தொடங்கி ஞானசம்பந்தப் பெருமான் இருமையின் ஒருமை என்பதற்கு இலக்கியமாகிய திருவுருவும் திருவருட் காட்சியும்

பெறுகிறார்கள். இக்காட்சியானது ஒன்றிநின்ற காட்சிக்கும் அழிய நின்ற காட்சிக்கும் இடைப்பட்ட காட்சியாகும்.

சண்பைக்கு முன் வரை எட்டுப்படிகளின் வளர்ச்சி. அதாவது ஒன்றிநின்ற காட்சி. காழிப்படியாகிய பத்தாவது படியில் கழிய நின்ற காட்சி. இவ்வொன்பதாம் படியில் கழிய நிற்பதையும் அணுக நிற்பதையும் இணைக்கும் வகையில் ஒருவகை மாற்றம் பெறுகிறார். திருஞானசம்பந்தர். அதுவே

"இருமையின் ஒருமை"

என்ற நிலை. இவ்வகையில் அது தனித்தலைமைத் தலைப்பாகிறது.

6. இருமையின் ஒருமை

முன்னுரை

மதுரையில் நடைபெற்ற அனல்வாதம், புனல்வாதம் ஆகிய நிகழ்வுகளுக்குப்பின், காழியிலிருந்து வந்த தந்தையார் எழுப்பிய நினைவின் அடிப்படையில் சுவாமிகளுக்கு ஒருவகை அருளனுபவம் அமைகிறது. அதனை இருமையில் ஒருமை என்னலாம்.

1. திருமறை நம்பர் முன்பு செய்த அதனைச் செய்யும் ஒருமையில் நின்ற நிலை.
2. ஒக்கவரும் அருட்செய்கை தாமே வகுத்திட வல்லராய் நின்ற நிலை.

மேலே கூறப்பெற்ற இருவகை நிலைகளையும் நிறுத்தி, அவைகளிலேயே அருள் வெளிப்பட நின்றநிலை. அம்மையப்பரில் அருளே மேம்பட்டுத் தோன்றும் நிலையாகிய பெருக்கு நீரவளொடும் பெருந்தகை என நின்றநிலை அனுபவமாக அமைகிறது. அதனால், திருஞான சம்பந்தர் மதுரையிலிருந்து புறப்பட்டுக் காழி செல்லும்வரை இடையில் நடைபெறும் நிகழ்வுகள், அருளியல் நிகழ்வுகளேயாயினும் அவை திருஞானசம்பந்தர் முன்னிலையிலேயே நடைபெறுகின்றன.

புணையென நிற்கும் திருவடியிணை

திருஞானசம்பந்தர் பாண்டிநாட்டுத் தலங்களையெல்லாம் வணங்கியபின் பாண்டியனிடம் விடைபெற்றுத் திருத்தல வழிபாட்டைத் தொடங்குகின்றார். பாண்டிய நாட்டின் எல்லை கடந்து பொன்னி வள நாட்டை அடைந்து சென்று கொண்டிருக்கும் போது எதிர்ப்பட்டது திருக்கொள்ளம்பூதூர். வழியில் முள்ளியாறு. வெள்ளப் பெருக்கினால் ஓடம் விடுபவர்கள் ஓடத்தைச் செலுத்த முடியாது என்பதால் கட்டி வைத்துவிட்டுச் சென்றுவிட்டார்கள். அடியவர்களுடன் சென்ற ஞானசம்பந்தர் ஓடத்தில் ஏறுகிறார். ஓடமானது திருஞானசம்பந்தரையும், சிவனடியார்களையும் கொண்டுபோய்க் கொள்ளம்பூதூர்க் கரையிற் சேர்த்தது என்பது தேவாரம்.

தன்னிச்சை கொண்டு செய்யப் பெறுமலேயே இயல்பிலேயே ஓடமும் ஏன், ஆறுங்கூட அதனை நோக்கியே செல்வதாக அமைந்தது. இறைவன் திருவடிகளே பிறவிப் பெருங்கடலின் தெப்பமாக அமைவன என்ற கருத்தை இலக்கியமாக்கும் வகையில் திருவருள் நேர்நின்று நடத்தியது. தனக்கு மட்டுமேயன்றி, தன்னைச் சார்ந்த அடியவர்களுக்கும் அத்திருவடியே தெப்பமாக அமைகிறது. எனவே

திருவருள் நெறி நிற்கின்ற காலத்தே பலரையும் நன்னெறியிற் சேர்ப் பதாக அமைவதைக் காணலாம். திருஞானசம்பந்தர் திருவருள் வெளிப்பாட்டினைச் செய்கிறார். ஆயினும் அவர் அதனை எண்ணிச் செய்யவில்லை. திருவருள் அவர் மூலமாகச் செயல்படுகிறது. இயல்பு நிலையையும் திருவருட் செயற்பாட்டு நிலையையும் இணைத்துக் காணும் நிலை பெறுகிறார்.

புத்தரை வாதில் வெல்லுதல்

திருக் கொள்ளம் பூதூரிலிருந்து திருநள்ளாறு சென்று அனல்வா தத்தின்போது திருநள்ளாற்றப்பன் உதவிய நெறி குறித்து விளங்க அறியும் பேறு பெற்றார்.

பின்னர்த் திருத்தெளிச்சேரியை வணங்கிப் போதிமங்கை அருகே வரும்போது புத்தர்கள் வந்து சின்னம் ஊதுவதைத் தடுத் தார்கள். உடனே திருமுறைகளை ஏட்டில் எழுதும் அடியவர், திரு ஞானசம்பந்தர் வாக்காகிய 'புத்தர் சமண்கழுக்கையர்' என்ற தேவாரத்தை ஒதி இடி இடித்து இவன் தலையில் விழுக எனக் கூறவே, அவ்வாறே செயல் நடைபெற்றது. அப்போது அனைவரை யும் இணைந்து அரன் நாமம் பாடுக என்று அருளுகிறார் சம்பந்தர். பிறகு வந்தசாரிபுத்தன் என்பானுடன் புத்தநந்தியின் தலையில் இடி விழுமாறு திருமுறை ஓதிய அன்பர் வாதம் நிகழ்த்தினர். அதில் சாரி புத்தன் தோற்றான். இவை யெல்லாம் திருஞானசம்பந்தர் திருமுன்பு நடைபெறும் அருளியல் நிகழ்வுகளாம்.

அப்பமூர்த்திகளுடன்

போதிமங்கையிலிருந்து பலதலங்களையும் வணங்கி வந்து கொண்டிருக்கும்போது அப்பரடிகள் எங்குற்றார் என வினவ, அவர் திருப்பூந்துருத்தியில் இருப்பது தெரியவந்தது. அவரைக் காணும் பெருவிருப்புடன் திருப்பூந்துருத்திக்கு வர, இதையறிந்த அப்பரடிகள் திருப்பூந்துருத்தி எல்லையிலேயே சென்று நின்று யாரும் அறியா வண் ணம் கூட்டத்தில் புகுந்து, ஞானசம்பந்தப் பெருமான் சிவிகையைத் தாங்கிக் கொண்டு வருவாரானார்கள். அப்பொழுது ஞானசம்பந்தர் திருவுள்ளத்தில் அரியதொரு அருளுணர்வு உண்டாகிறது. உடனே அப்பர்தாம் எங்குற்றார் இப்பொழுது? என்றார், ''உம் அடியேன் உம் அடிகள் தாங்கி வரும் பெருவாழ்வு வந்தெய்தப் பெற்று இங்குற் றேன்'' என்று கூறவே, விரைந்து இறங்கி, ''இவ்வாறு செய்தருள்வ தென்னை'' என்று கூறி வணங்கினர்.

''இருமையின் ஒருமை'' என்ற கொள்கையில் ஞானசம்பந்தர் நின்றார் என்ற கொள்கையை உலகவர் அறிந்தார்கள். இருவருக்கும் உள் அமைந்து இணைக்கும் உணர்வு ஒன்று இருந்து இயக்கும் முறையை இருவரும் அகவுணர்வின் அனுபவம் எழிற்பட அமை வதைக் கண்டார்கள்.

திருவருளானது நம்மில் இருந்து எவ்வாறு செயற்படுகிறது என்பதை நேர்நின்று உணரும் நிலையே இருமையின் ஒருமை என

7. காழியா னயன் உள்ளவா காண்பரே

ஒருமையின் பெருமை

திருஞானசம்பந்தர் தம்முடையது என அமைத்துக் காட்டும் தனித்தன்மை ஒன்றுண்டு. உலகியலமைப்பில் நின்று வாழும் இயல் பினர்க்கு மிகமிகத் தேவையான ஒன்றினை எடுத்துக் காட்டியும், வாழ்வியலால் விளக்கியும் அமைத்துள்ளார். அது என்ன? அளவு படுத்தி அமைத்தல் அல்லது வரையறை செய்து காட்டும் ஆற்றல்.

தான் மேற்கொள்ளும் எந்த ஒரு செயலுக்கும் இதுதான் வரை யறை என அமைத்துக் கூறிவிடுவார். தாம்பாடிய அவ்வளவு பதி கங்களையும் உள்ளடக்கிய நிலையில் யான் அமைத்த தத்துவக்கொள் கைகள்; பிரிப்பு முறைகள்; சைவசமய வளர்ச்சியில் அமைந்த படி களில் தம்முடைய பணியானது எந்த எண்ணுடைய படியில் அமை கிறது; தம்முடைய பிறப்புக்களிலும் தன் படிநிலை வளர்ச்சி எவ்வாறு அமைந்துள்ளது என வரையறை செய்து எடுத்து எழுதிக் காட்டி விடுவார். யாண்டும் அவர்தம் சொந்த வரலாறே அமைத்துள்ளார் என்று பிறழ உணர்ந்தவர்கள் பலர். ஞானசம்பந்தரை வெவ்வேறு வகைகளில் நோக்கிய காரணத்தால் திருஞானசம்பந்தர் வரலாற்றை உலகமறியச் செய்யவில்லை என்பது ஒருபுறமிருக்க, சைவ வரலாற் றையும் சைவசமயக் கொள்கை வரலாற்றையும் ஒழுங்குற அமைத் துக் கொள்ளாதவர்களாஞேம்.

மக்கள் வாழ்கின்ற ஊர் என்ற ஒன்றை எடுத்துக் கொண்டால் அந்த ஊரிலுள்ள கோயிலுக்கும் மக்களுக்கும் என்ன உறவு? ஒவ் வொரு ஊரிலும் கோயில் இருப்பது ஏன்? "கோயிலாவ தேதடா, குளங்களாவ தேதடா, கோயிலும் மனத்துளே, குளங்களும் மனத் துளே" என்று கூறி, கோயிலானது மக்கள் உடம்பின் ஒருவகை மாதிரிப் படிவம் என்றெல்லாம் விளக்கம் நடைபெற்றுக் கொண் டிருந்த காலத்தில் திருஞானசம்பந்தரின் வாழ்க்கை இவ்வுலகில் அமைகிறது.

மனிதன் தான் பிறந்த ஊரிற் கோயிலோடு இணைந்த குடியுரிமை பெறுகிருன். அவனுக்கு வரும் ஆக்கமெல்லாம் அவன் பிறந்து குடியுரிமை பெற்ற திருக்கோயில் மூலமாகத் தான் வரும் என்பதும், திருக்கோயிலின் வளர்ச்சியும் தனிமனிதன் வளர்ச்சியும் இணைந்தே அமைகின்றன என்றும் எடுத்துக் காட்டி, தனிமனிதனைத் திருக்

கோயில் தலைவனுடு இணைத்து, திருக்கோயில் தலைவனை முதலாகக் கொண்ட வாழ்க்கையே உண்மை வாழ்க்கை என்று சமய நெறிப் பட்ட வாழ்க்கையை வரையறை செய்தமைத்த பெருமை திருஞான சம்பந்தர்க்கே உண்டு. அவ்வகையில் அவர் மேற்கொண்ட பணிகள், திருப்பதிகங்கள் மூலம் வழங்கிய கொள்கைகள் ஆகிய எல்லாவற்றையும் தொகுத்து, ஒரு பிழிவாகக் கொடுத்தருளிய பதிகமே திரு எழுகூற்றிருக்கை.

உயிர் இவ்வுலகில் வாழ்கிறது என்ற ஒரேயொரு கொள்கையை எடுத்தாலும், உயிர் ஏழு பிரிவுகளில் நின்று வாழ்கிறது என்ற அடிப்படையில் இவ்வுலகில் எந்த ஒன்றும் தன்னை ஏழு பிரிவுகளில் பிரிய நிறுத்தித்தான் வாழவேண்டும் என்பதை வாழ்வியற் பொதுமை இலக்கணம் என வரையறுத்தார். இருப்பவைகள் எல்லாம் ஒன்றைச் சார்ந்தே இருக்கின்றன. இருப்பவைகளுடன் தம்மை ஒற்றுமைப் படுத்திக் காட்டியும், அதே சமயத்தில் அவற்றிலிருந்து வேறுபட்டு உயர்ந்தும் நின்ற பொருளே பொருள். அதுவே உளது. உளது ஒன்று; இருப்பவை பல. உள்ளதும் இருப்பதும் ஒன்றெனவே இணைந்த நிலையையே நாம் முதலில் அனுபவிக்கிறோம். ஆனால், ஒன்றி நின்ற ஒருமையானது தன்னளவில் உயர்வுடையது. மேலும், இணைந்த நிலையில் உயர்ந்ததைப் பெருமை பெற வைத்து வாழ்வதே வாழ்க்கை என்பதை "இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்" என அமைத்தார்.

பரம்பொருள் உளதாவது; உயிர் இருப்பது. உள்ளதும் இருப்பதும் இணைய நிற்றலே இருமையின் ஒருமை; அத்துவிதக் கலப்பு. இருமையின் ஒருமையை ஒருவன் ஏழு நிலைகளில் அனுபவம் பெற்று அறிகிறான். முடிவாக, இருவகை வாழ்வியல் முறைகளை நாம் உலகில் காண முடிகிறது. உள்ளதும் இருப்பதும் என்ற இரண்டனுள் உள்ளதைப் பெருமைபெற நிறுத்தி, இருப்பதை அதன் கீழே அல்லது அதனுடன் இணைய நிறுத்திய நிலையில் அமைந்த வாழ்க்கை ஒருவகை. இருப்பதைப் பெருமை பெற நிறுத்தி உள்ளதை அதனுடன் இணைய வைத்து வாழும்நிலை அமைந்த வாழ்க்கை இன்னொரு வகை. இத்தகைய இருவேறுபட்ட வாழ்க்கைநிலை உண்டு.

உயிர் என்ற இருக்கைப் பொருளை முற்படுத்தி அதனுள் உளது என்ற பொருளை இணைத்த வாழ்க்கை வாழ்பவர்கள் இவ்வுலகில் உளதாம் பொருளையோ அதன் இயல்புகளையோ காண இயலாதவர்கள். அதற்குமாறாக, உளது என்ற பொருளை முன் நிறுத்தி, இருப்பதாகிய தம்மை அதனுடன் இணைய நிறுத்திய வாழ்க்கை உடையவர்கள் இவ்வுலகை, தம்மை, உளது என்பதை, அதன் இயல்பை உள்ளவாறு காண்போராவர் என வாழ்வியல் தத்துவத்தை வகைபெற நிறுத்தி, வாழ்ந்து காட்டி அமைந்த பகுதியே திருஞான சம்பந்தரின் வாழ்வியல் வரலாற்றின் இறுதிக் கூறு என அமைகிறது. 'உளது' என்ற ஒன்றை அறிவியல் நிலையில் நிறுத்திக் காட்டிய பணி மதுரையில் அமைந்தது. பின்னர், அதே உண்மையை வாழ்வியல்

நிலையில் நிறுத்திக் காட்டுகிறார். அவ்வகையில் திருஞானசம்பந்தரின் தொண்டை நாட்டுத் திருத்தல வழிபாடு அமைகிறது.

காழியான்—திருமால்; அயன்—பிரமன், திருமாலும் பிரமனும் 'உளது' என்ற ஒன்றன் நிலையையோ பெருமையையோ அறிய முடிந்தவர்களா? இல்லை என்பது இத்தலப்பின் முதற்பொருள். இருவரும் தாம் பெரியர் தாம் பெரியர் என்ற போர் மூளும் போது இருவருக்கும் அயலாக உள்ள பொருள் தம்மை வெளிப்படுத்தியது. இவர்களிடத்தே ஒன்றியிருந்த பொருளாயினும் உயர்ந்த பொருளா தலின் அதனை அறிய இயலாதவரானார்கள் என்பதை உணர்த்தும் போக்கில் ஒருமையின் பெருமை என்ற தத்துவத்தை விளக்கினர்.

காழியானது பத்தாவது என நின்றபடி. எல்லாம் கழியநின்ற படியே பத்தாவதுபடி. எண்ணலளவையில் ஒன்று, பத்து என இரு நிலைகள் உண்டு. ஒன்று, இரண்டு என வளர்ந்து வந்த நிலையில் ஒருமையின் வளர்ச்சி தெரிகிறது. ஒருமையின் வளர்ச்சி நிலையானது ஒருமையே தன்னை வளர்த்துக் கொள்ளுகிறதா அல்லது ஒருமை வளர்வதற்கு மூலமாக ஏதும் இருக்கிறதா என ஒருவினா உண்டாகும். ஒருமையுடன் இணைந்து நின்று அதனை வளர்த்தது ஒன்று உண்டு என்பதை உணரும் இடம் 'ஒன்பது' என்றபடி, பத்தாவது படியில் ஒருமையை வளர்த்து வந்த அந்த மூலப்பொருளுக்குப் பெருமையை அளித்து, தன்னைச் சூனியமாக்கி அதனுள் மறைத்து விடுகிறது. இதுவே பத்து என்பதை 10 என எழுதுவதன் அடிப்படை. அவ் வாறு தன்னை, இருப்புடையதாகிய தன்னைக் கழிய வைத்து, தன்னுள் 'உளது' என நின்றதை நிறுத்திய நிலையே 'காழி' என்பதன் நிலை. அப்போது காழியான் என்பவன் உளது என நின்ற பொருள்; "நயன்" அவனுடைய அருள் தன்மை ஆகிய இவைகளை உள்ள வாறு காணும் பேறுபெறுவர். இதுவே இப்போது தாம் நின்றநிலை என் பதையும் தம்மால் 'உளது' என்னும் பொருள் எவ்வாறு பார்க்கவும் துய்க்கவும் பெறுகிறது என்பதையும் எடுத்துக் காட்டிய வரலாற்று நிகழ்வே தொண்டை நாட்டுத் தலயாத்திரை.

திருத்தலங்களில் 'உளது' என்பதைக் காணும்முறை

திருஞானசம்பந்தரின் தலயாத்திரை தொண்டை நாட்டை நோக் கியது. பலபதிகளிலும் உளது என்பதைக் காணும்காட்சியை அமைக் கிறார். திருவதிகையில் பூதம் பாட நின்று ஆடும்கோலம் காண்கிறார். திருவதிகை வீரட்டானத் தலம் எனப்பெறும். பொதுவாக நின்ற தலங்கள் பதிப்பொருள் தலங்கள். ஐம்முகமாகிய பதிப்பொருள் அமைவது. சில பதிகளில் நீலகண்டம் நேர்நிற்கும். வீரட்டானத் தலங்களில் அழித்தல் தொழில் நடைபெறும். அதன் சிறப்பினை அறியும் முறையில் பூதம்பாட நின்று ஆடும் கோலம் காண்கிறார். இங்கே உள்ளவா காணும் முறையை நாம் ஒருவாறு தெரிந்து கொள்ளலாம்.

திருவதிகைத் திருக்கோயிலுக்குச் செல்லும் ஒருவர் இக்கோயில் அக்காலத்தே பலரும் வந்து தங்குவதற்கும் கலைகள் பயில்வதற்கும் மூலகாரணமாக இருந்தது என்று கலையுணர்வு கொண்டு காணமுடியும். இதுதான் அப்பரடிகள் சைனத்திலிருந்து மீண்டு சைவம் வந்து சேர்ந்த வரலாற்று இடம் என்று காணமுடியும். இதுதான் இறைவன் முப்புராதிகளை எரித்த இடம் என்று காணமுடியும். இம் மூவகை முறைகளும் நமக்குத் தெரிந்த வரலாறுகளை அப்பதியுடன் இணைத்துக் கண்ட நிலை. திருஞானசம்பந்தர் தாம் சென்றபோது, அங்கே, இறைவன் பூதம்பாட நின்று ஆடுவதைப் பார்த்தார். இதுவே உளதாம் முறையிற் காணுதல். மற்றவர்களுக்கு இக்காட்சி அமைதல் இல்லை. ஏன் இந்த வேறுபாடு? திருஞானசம்பந்தர் பார்க்கிறார் என்ற நிலை எப்படி? திருஞானசம்பந்தரின் உள்ளே இருக்கும் 'உளது' என்பது பெருமைபெற நிற்க, அதனுள் ஞானசம்பந்தர் தம்மை ஒடுக்கிக் கொள்கிறார். 'உளது' என்பதே பார்க்க அதனுடன் இணைந்து நின்று பார்க்கிறவரே திருஞானசம்பந்தர். இருப்பது என் பதாம் சம்பந்தர் 'உளது' என்பதால் பார்க்கிறார். 'உளது ஆ காண் பார்' என்பதே திருவருட் காட்சி நிலை.

திரு அண்ணமலை செல்கிறார். திருவண்ணமலையானது தழலுருவ மாகவே காட்சி நல்குகிறது. அவ்வூர்த் திருக்கோயில் உள் சென்று அம்மையப்பராம் கோலங் காண்கிறார்.

"உண்ணமுலை உமையாளொடும் உட்னுகிய ஒருவன்"

என்று காண்கிறார். அம்மையப்பரின் திருவுருவில் விளங்கி நிற்பது தழலுருவாம் அண்ணமலையே. அம்மையப்பராம் மூர்த்தத்தில் இணைந்தும் வேறுபட்டும் உயர்ந்தும் நிற்கும் தழலுருவ மலைக் காட்சியைக் காண்கிறார். இதுவே காழியா னயன் உள்ளவா காணும் நிலை.

"காழியான் அயன்" என்று பிரித்து உரை காணுதல் வேறு. இங்கே காழியான் நயன் எனப் பிரித்தல் வேண்டும். "காழியான்" கழிய நின்ற பெருமான். எல்லாவற்றுடனும் இணைந்தும் இயைந்தும் நின்ற அது இவைகளையெல்லாம் கழிய நின்றநிலையே காழியான் நிலை. இவ்வகையில் கந்தழி பற்றிய ஞானசம்பந்தர் தம் கொள்கையை அறியலாம். எல்லாப் பொருளும் இருப்பதாக, அவைகளுக்குக் கந்து என நின்ற நிலை ஒன்று உண்டு. இதுவே இருமையின் ஒருமை. அத்வைதம் எனக் கலந்து நிற்றல். இரண்டாவது கழியநின்றநிலை— கந்து அழிய நின்ற நிலை. எனவே கந்து எனநிற்றலும் அழிய நிற்ற லும் என இருவகை நிலையில் அமைந்த ஒரு பொருள் உண்டு. அதுவே 'கந்தழி' என்று கருதுவதாகக் கொள்ளலாம்.

இனி, 'நயன்' என்ற சொல்லினுல் விளக்கப்பெறும் இறைமைப் பண்பு ஒன்று உண்டு. அதனை,

"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றுல் செல்வம்
நயனுடையான் கண்படின்"

என்ற திருக்குறளில் அமைந்த 'நயன் உடைமை'யை நோக்கித் தெளியலாம்.

காழியான் நயன் உள்ளவா காணும் காட்சி என ஞானசம்பந்த ரால் காணும் காட்சி வேறு; அப்பரடிகளுக்கு ஐயாற்றப்பன் காட்டிய கயிலைக் காட்சி வேறு.

ஆண் பனை பெண் பனையாக்கியது

தொண்டை நாட்டுத் திருவோத்தூரில் ஒரு சிறப்புநிகழ்ச்சி நடை பெறுகிறது. தலயாத்திரையின் சிறப்பைத் தொடங்கியவர் திருஞான சம்பந்தர். அவரே தம் பணியின் வளர்ச்சியைக் காண்கிறார். தல யாத்திரை செய்தல் பெருகத் தொடங்கியது. சிவனடியவர்கள் ஊர் தோறும் செல்லும்போது அவர்களுக்கு உணவமைப்பது, இடம் தந்து தங்க வைப்பது, அவர்களை உபசரிப்பது போன்ற சிக்கல்கள் தோன்றின. அவ்வகையில் சிவனடியவர்கள் வந்தால் தங்குவதற்கு இடம், உணவு ஏற்பாடு முதலியன அமைய வேண்டும் என்ற தேவை யும், அதை அமைக்கும் தொண்டும் ஏற்படலாயின. அவ்வகையில் திருவோத்தூர் அடியவர், ஞானசம்பந்தரை அணுகி, நான் சிவனடி யவர்களின் தொண்டுக்கெனப் பனைமரங்கள் அமைக்கிறேன். அவைகள் ஆண் பனைகளாய்க் காய்க்கவில்லையே என்றும், அதனால், இவ்வூரில் உள்ள சமணர்கள் என்னை இழித்துரைக்கிறார்கள் என்றும் கூறி நின்றார். இக்குறிப்பினை ஞானசம்பந்தர் இரண்டு வகைகளிற் காணுகின்றார்.

"சிவனடியவர்கள் யாதுங் குறைவிலர்"

என்ற கொள்கையால், அவர்களை முன்னிட்டு அர்ப்பணிக்கப் பெறு கின்றவைகளுங் கூட சிவனடியவராம் நிலை பெற்றுவிடுகிறது. ஒரு வகை "நீத்தார் நிலை" என்பதை உளங்கொள்கிறார். ஆனால், அந் நிலையை மற்றைச் சமயத்தவர்கள் இகழும்நிலை உருவாவதும் இயல்பு போலும் என எண்ணுகிறார். அவ்வகையில், அவர்தம் காட்சியில் ஆண்பனை குலையீனுகிறது. காரணம் சிவனடியார் மனம் புண்படா திருக்க வேண்டும் என்பதே. சிவனடியார் மனம் துன்புறுதல் நாட்டுக்கும் பிறருக்கும் தீமையாக முடியும் என்பதே அவர் குறிக் கோள். சிவனடியவர்கள் தேவையை இது நிறைவு செய்யும் என்பது குறிக்கோளன்று. ஏனெனில், சிவனடியவர்கள் யாதுங் குறைவிலர் என்பதே.

வேந்தன் அருள்

திருஞானசம்பந்தர் பலதலங்களையும் உள்ளவா காணும் முறை யில் உணர்ந்தும் வழிபட்டும் செல்பவர் பழையனூர் ஆலங்காட்டடி களைப் பாடும்போது ஒரு புதுமையைச் சுட்டுகிறார். முதலில் காரைக் காலம்மையார் தலையால் நடந்த பதி எனக் கருதி அதனைமிதியாது வேறு பக்கத்தே சென்று அன்றிரவு தங்கினர். அப்போது ஆலங் காட்டடிகள் எம்மைப்பாட மறந்தனையோ எனக் கனவில் கேட்க, எழுந்தவுடன் அந்த இரவிலேயே பதிகம் பாடுகிறார். இங்கே, இறைவன் வேந்தன் என நின்று உணர்த்த, அவனை முன்னிட்டுக்

கொண்டு உண்மை காணுதல் உண்டு என்கிறார். எனவே, ஒருமையின் பெருமை என்ற வகையில் நாம் அவனை முன்னிட வைத்துக் காணுதல் ஒருவகை. சில சமயங்களில் அப்பரம் பொருள் நமக்கு இதுதேவை என நினைத்தபோது, நம்மை உணர்த்தி, இது உனக்குத் தேவை என உணர்த்தி, பின்னர் நம்மைப் பார்க்கச் செய்து காட்டுவது ஒரு வகை. எனவே, நாம் விரும்பியதை மட்டுமேயன்றி, நமக்குத் தேவைகளையும் அவன் உணர்த்துகிறான் எனக் கொள்ள வேண்டும். இந்நிலையை வேந்தன் நிலை என்றார்.

எலும்பு பெண்ணாக்குதல்

மயிலாப்பூரில் நடைபெற்ற அருளியல் நிகழ்வு. இதுவே திருஞானசம்பந்தர் வரலாற்றில் நடைபெற்ற இறுதி அருளியல் நிகழ்வு.

முதலில் பூம்பாவையை அவள் தந்தை சிவநேசச் செட்டியார் திருஞானசம்பந்தருக்கே உடைமை என அமைத்து அடைக்கலப் பொருளாக்கி விடுகிறார். அந்நிலையில், அப்பெண் அரவு தீண்டி இறக்கவே, அவள் திருஞானசம்பந்தரின் அடைக்கலப்பொருள் ஆனமையின், அவளுடைய எலும்பை எடுத்துவைத்து, அவர் திரு மயிலை வந்தபோது அவருக்கே அடைக்கலப் பொருளாக்குகிறார். திருவொற்றியூரிலிருந்து திருமயிலைக்கு எழுந்தருளும் சம்பந்தர், திரு மயிலைத் திருக்கோயில் வந்தடைந்ததும், சிவநேசச் செட்டியாரை நோக்கி, எலும்புக் கூடத்தைக் கொண்டு வருமாறு சொல்லுகிறார். சிவநேசச் செட்டியார் வரலாற்றைச் சொல்லி, எலும்பைப் பெண்ணாக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதாக வரலாறு இல்லை. இங்கேயும் "சிவனடியவர்களுக்கு அடைக்கலமாக்கும் பொருள்" என்பது ஓர் அடிப்படையாகிறது.

இங்கே, திருப்பதிகம் எனப்பெறும் "திருநெறியதமிழ்" ஈசத்வம் உடையது என்பது நிலைநாட்டப் பெறுகிறது. திருமூலப்பாலருந்தியவுடன் அவர் பெற்ற அறிவு எப்பொருளும் ஆக்குவான் ஈசனே, அப்பொருள்தான் ஆளுடையான் அடியார்கள், என்ற இரண்டு கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

எப்பொருளையும் ஆக்கும் வல்லமை, எதுவாகவும் ஆக்கும் வல்லமை என்ற ஈசனும் தன்மையில் எலும்பு பெண்ணாக அன்று, சிவனடியாராக ஆக்கப் பெறுகிறது. சிவனடியார்கள் என்று பொலிவதே திருவருட் பொலிவு என்பதைப் பதிகம் உள்ளுறைப் பொருளாக நிறுத்தியது.

"மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிதூடும்
அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்
கண்ணினுள் அவர் நல்விழாப் பொலிவு கண்டார்தல்
உண்மையாம் எனில் உலகர்முன் வருக என உரைப்பார்"

என்ற சேக்கிழார் கவியின் நுட்பம் தெளிதல் வேண்டும். திருத்தலத்து இறைவனையும் சிவனடியவர்களையும் இணைக்கிறார். திருக்கோயிலில் உள்ள பெருமான் திருவிழாப் பொலிவு கொள்ள வேண்டும். அதே சமயத்தில் சிவனடியவர்களுக்கு உணவூட்டுதல் வேண்டும். அப்போது சிவனடியவர்களிடம் ஒருவகைப் பொலிவு உண்டாகும். அடியார்களின் பொலிவும் தலத்து இறைவன் நல் விழாப் பொலிவும் இருமருங்கு நிற்க இரண்டன் இடையில் தோன்றுவதே பரம்பொருளாம் ''திருநிலை''. இரண்டன் இணைப்பில் விளங்குவதே இரண்டிலும் உயர்ந்ததே அத் திருவருள் நிலை என்று எடுத்து நிறுத்தி அவ்வுண்மையின் அடிப்படையில் எலும்பைப் பெண்ணாகத் திருவருள் பொலியும் வடிவமாக வருமாறு ஆக்கினர் என்பதாம்.

எலும்பைப் பூம்பாவையாக்கிய வரலாற்றின் நுட்பம் திருஞான சம்பந்தர் முதற்பகுதியில் விரித்துரைக்கப் பெற்றது. அவ்வாறே புண்ணியப் பதினொருண்டு என்ற பகுதியும்.

இங்கே, நான்முகன் பூம்பாவையைப் படைத்தபோது கண்ட முறையும் திருஞானசம்பந்தர் மீண்டும் படைத்தபோது கண்ட முறையும் இணைத்து நிறுத்திச் சேக்கிழார் விளக்கிக் காட்டும் நயம் மிகமிகச் சிறந்த ஒன்று.

இவ்விடத்தே 'அழகு' என்பதன் தத்துவக் கொள்கையை ஆய்கிறார். படைத்தவனுலேயே அழகு பார்க்கப் பெறுவதும் உண்மையாக உணரப் பெறுவதும் ஆகும் என்பது ஒருநிலை. அடுத்து, படைத்தல் என்ற நிலையே அழகைப் பார்ப்பதற்கு உரிமையுடைய நிலை என்று சொல்ல முடியாது. அழகைப் பார்ப்பதற்கென்றே பிறக்கும் நிலையும் உண்டு. அழகின் முழுமை என்பது ஆயிர இதழ்த் தாமரையாக மலர்ந்த அக விளக்கம் அமைக்கும் திருவருளே கண்ணாகக் கொண்டு பார்க்கத் தகுந்தது. அவ்வாறு பார்க்கும்போது முழுமையையும் பிரிவுகளையும் இணைத்துப் பார்க்கமுடியும். நான்முகன் பார்க்கும்போது பிரிவுகளைப் பார்க்க முடியும். ஆனால் முழுமையைப் பார்க்கவோ, அதனையும் இணைத்த அனுபவம் பெறவோ இயலாது என்றார். எனவே, தோற்றியவன் அல்லது படைத்தவனே அழகைக்காணும் ஆற்றலுடையவன் எனினும், திருவருளில் நின்றால் முழுமையையும் இணைத்துப் பார்க்க முடியும் என்ற 'அழகு' பற்றிய தத்துவக் கொள்கையை உணர்த்தினர்.

திருக்கோயில் பெருமான் திருவிழாப் பொலிவும் சிவனடியார் திருவமுது செய்து பொலியும் பொலிவும் என்ற இரண்டும் இணைய வேண்டும். இரண்டும் திருவருட் பொலிவைக் காட்டிவிடும் தன்மையன என்ற குறிப்பை நிலைநிறுத்துதல் வேண்டும்.

முடிப்புரை

கழிய நிற்றலாற் காழி என்பது உட்பொருள். கழியநின்றவன் காழியான். அவனுடைய மூலமாய முதன்மைப்பண்பு நயனுடைமை.

மக்களாக நின்றவர்கள் சிவம், உயிர், உடல் என முத்திறப் பட்டு நிற்கும் நிலையுடையார். இங்கே கழிய நிற்றல் என்பது உட லானது தொண்டு நெறியால் தூய்மை பெற்று, உயிருக்கு அடிமை யாதல் வேண்டும். திருத்தொண்டு நெறியில் நின்ற உயிர் தானும் தன்னுடைய உடலும் ஆகிய இரண்டும் தத்தம் தனிநிலைகள் கழிந்து போக, சிவம் என்ற உளதாம் பொருளிடத்து அடங்கி நிற்றல். இதுவே கழிய நின்றநிலை. அப்போது சிவம் என்ற பரம்பொருள்— கந்தழிப்பொருள் பிரகாசிக்கும். அதன் ஒளியானது உயிர், உடல் ஆகியவைகளிற் பொலியும். அதுவே அருட்பொலிவு. சிவனடியா ராம் நிலை. இதுவே பரிணும வளர்ச்சியின் இறுதிநிலை. அந்நிலையில் ஒருவன் இவ்வுலகை, உளதாம் பொருளை உண்மையான நிலையிற் காண முடியும். கழிய நின்றவனையும் அவனுடைய அரும்பெறற் பண்பாம் 'நயன்' என்பதையும் காணலாம். இதுவே, ஞானசம்பந்தர் தம்முடைய பத்தாம் படிநிலையில் நின்று உணர்த்தியநிலை எனக் கொள்ள வேண்டும், உண்மைக் காட்சியையும் உளதாம் பொருளை நேருறக் காண்டலும், நயன் என்பதன் உண்மை நிலையையும் இங்கே காணும் பேறு பெறுகிறது.

8. செந்தமிழ் பரப்புறு நோக்கு

திருஞானசம்பந்தர் தம் வரலாறு முலமாக உலகவர்களுக்கு உணர்த்தும் தமிழ்ப்பண்பாடு ஒன்று அவர்தம் இறுதி வரலாறுக அமைகிறது. இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும் எனத் தம் கொள்கையை வரையறை செய்து கொண்டு, அவ்வாறே வாழ்வியல் நிகழ்வுகளை அமைத்துவரும் ஞானசம்பந்தர் திருமண நிகழ்வினைச் சந்திக்கிறார்.

திருமணக்காலத்தை ஒட்டி எழுந்த பேச்சுகள் திருமணம் செய்யப்பெறவேண்டிய முறைமை, திருமணக் காலத்தில் மேற் கொள்ள வேண்டிய கடமை ஆகியவை விரிவாகப் பேசப்பெறு கின்றன. சிவபாத விருதயரை உள்ளிட்ட சான்றோர்கள் இவைகளை முடிவு செய்கிறார்கள்.

காழியான் நயன் உள்ளவா காணும் நிலைபெற்று விளங்கும் ஞான சம்பந்தர் இந்நிகழ்ச்சியை எவ்வாறு நோக்குகிறார் என்பதையும் காண வேண்டும். முதலில் திருமணம் வேண்டாம் என்று கூறிய ஞானசம்பந்தர், பின்னர் உடன்படுகிறார்.

திருஞானசம்பந்தர் இங்கே கல்லூர்ப்பெருமணம், பல்லூர்ப் பெருமணம், சொல்லூர்ப்பெருமணம், நல்லூர்ப் பெருமணம் என்ற நால்வகை மணங்களைக் குறிப்பிடுகிறார். 'நல்லூர்' என்பது இன்று ஆச்சாள்புரம் என வழங்கும் பதியின் பெயர். அங்கே உள்ள திருக் கோயிலுக்குப் 'பெருமணம்' என்பது பெயர். கூடல் ஆலவாய் என்றாற்போல நல்லூர்ப் பெருமணம் என்ற தொடர்பு அமைகிறது. எனவே, நல்லூர்ப் பெருமணம் என்று திருஞானசம்பந்தர் திருவாக்கி னுல் சுட்டப்பெறுவது திருநல்லூர் என்ற தலத்தில் உள்ள திருக் கோயிலையே.

அடுத்து, 'கல்லூர்ப் பெருமணம் வேண்டா' என்பது அப்பதி கத்தின் முதல் வரி. திருத்துருத்திப் பதிகத்தில் அமைத்துள்ள ''துறக் குமா சொலப்படாய் துருத்தியாய்'' என்ற தொடரை நோக்குக. கல்லூர்ப் பெருமணம் என்பது கல்லாடையுடுத்தும் துறவு. துறவு இறைவன் வாழ்ந்து காட்டிய கொள்கையன்று என மறுக்கிறார். அடுத்தது, ''கழுமலப் பல்லூர்ப் பெருமணம்' 'என்பது. இறத்தலையும் பிறத்தலையும் அடிப்படையாகக் கொண்ட திருமணம். உலகியல் திருமணம். திருமணத்தில் ஈடுபட்டு, முறையே பயின்று பயின்று மேனிலை அடையலாம் என்ற கருத்து அனுபவநிலையில் ஒத்துவருவ தாக அமையவில்லை. திருமணம் செய்து இல்லறம் என்ற நிலையில்

நின்று கொண்டே உயர்நிலைப் பேறு பெறுதல் என்பது நடைமுறைச் சாத்தியம் இல்லை. இனி, பற்பலவாறு சொல்லப் பெறுகின்ற திருமண அமைப்புகள் தொண்டர்களுக்கு உரியன வல்ல. பிரமம், பிரசாபத்தியம் போன்ற மண அமைப்புகள், ஆசானுக நின்றவன் கிரியை முதலியன செய்தற்கெனத் துணைவியை ஏற்றல் போன்ற மண முறை. இந்நிலையில் "நல்லூர்ப் பெருமண முறை" அருளவேண்டும் என வேண்டுகிறார். அவரால் சுட்டப் பெறும் மூவகை மண முறைகள் குறைபாடுடையன என்று நீக்கி விடுகிறார். ஆயின் முடிவு என்ன?

மணக் கோலங் கொண்ட ஞானசம்பந்தர் ஒருபுறம். மணமகளாக வந்து அமர்ந்த பெண் ஒருபுறம். இடைநின்ற அக்கினியை நோக்குகிறார். இருமையின் இடைநின்ற ஒருமை என; இருமையின் ஒருமையென இறைவனை அதுநினைவூட்டியது. உடனே நல்லூர்ப் பெருமணக் கோயிலை நோக்கினர். நல்லூர்ப் பெருமான் எனப் பெறும் சிவலோக நாதருக்கும் நங்கையுமையம்மைக்கும் இடையே மேலே பேரருட் பெருஞ்சோதி தோன்றி நின்றது. திருக்கோயிலும் அம்மையப்பரும் அதனுள் ஒடுங்கி நிற்பது தெரிய வந்தது. இருமையின் ஒருமையும்; ஒருமையின் பெருமையும் என்று நின்ற திருவருள் நிலையாகிய பரம் பொருள் சோதி வடிவில் தோன்றுவதைக் கண்டார்.

தமிழ் மூன்று நிலைகளையுடையது. இயல் இசை இருபகுதிகளாக அமைய இடையே இவைகளை ஒட்டியும் உயர்ந்தும் நிற்பது கூத்துத் தமிழ் என்று கொண்டது ஞானசம்பந்தர் கொள்கை. இதனையே புகலிக்கு விளக்கமாக, செந்தமிழ் பரப்புறு நிலை என்று அமைத்துள்ளார். அவ்வகையில் அம்மையப்பராம் இருமையின் இடையில் ஆனல் உயர்ந்ததாய், பெருமையுடையதாய், இரண்டையும் தன்னுள் அடக்கியதாய், ஆய்தப் புள்ளி போல் அமைந்ததாய் நின்றது ஆகிய உளது என்பது "ஒன்றே வேறே என்றிரு பால்வயின் ஒன்றி உயர்ந்த பால்" என்றும் "கந்து எனவும் கந்தினை அழிப்பதாய் எனவும் பொருள்படும் கந்தழி என்று நின்றதே கடவுளின் திருநிலை" என்றும் உணரும் வகையில் அமைந்த அருட்சோதியானது, நல்லூர்ப் பெருமணத்தே தோன்றிய அருட்சோதி. நாம் அடையவேண்டிய திருமணம் இதுவே எனக் கொண்டு மணமகள் கையைப் பற்றியவாறே சென்று அதனுள் புகுதற்கு முற்பட்ட ஞானசம்பந்தர், என்னுடன் இந்நிலைக்கு வருவார் யாவராயினும் வருக என அழைத்தார். அவ்வாறு உடன் வந்த பெருங்கூட்டத்துடன் சென்று நல்லூர்ப் பெருமணத்து இடை உயர்ந்து தோன்றிய நம்பனுஞ் சோதியுட் புக்கார்.

இம்முறையே தமிழும் கைக்கிளை எனத் தனி நிறுத்தித் தோற்றம் பெற்று, பின் ஐந்திணை ஏன நின்று, இவ்விரண்டன் இடையில் 'பெருந்திணை' என நின்றது எனக் கொள்ள வேண்டும்.

திரு ஏழு கூற்று இருக்கையில் விரித்த எல்லாக் கொள்கைகளையும் தழுவி நின்ற நிலையே "தமிழ் பரப்பு நிலை" என்று விளக்கிக் காட்டியும் செயல் முறைப் படுத்திக் காட்டியும் நின்ற பெருமையில் நின்று தீர்த்தவராஞர் திருஞானசம்பந்தர்.

9. முடிப்புரை

"திருஞானசம்பந்தர் ஓர் ஆய்வு" என்ற தலைப்பில் அமையப் பெற்ற இருபகுதிகள் மூலமாகத் திருஞானசம்பந்தரின் வரலாற்று அமைப்பானது அவர் அமைத்துக் காட்டிய வழிமுறையில் நின்று ஆய்வு செய்யப் பெற்றது.

சீகாழியையும், சைவப் பெருநெறியின் வளர்ச்சியையும், தன்னை யும் பன்னிரண்டு என்ற எண்ணுல் வகுத்தமைத்துக் கொண்டார். இம்மூன்றும் ஒன்றேடொன்று இணைந்த கலப்புடன் திகழ்வன என்று காட்டினர். காழிப்பதியின் பெயர் நின்ற நிலையே ஏனையவற்றின் வளர்ச்சி நிலைகளுக்கும் பொருந்தும் என்றார்.

காழி என்ற பத்தாம் படியே வளர்ச்சியின் இறுதிப்படி என்றார். ஏனைய இரண்டு படிகள் முன்பேயே வந்து விட்டன என்றார்.

திரு எழு கூற்றிருக்கை என்ற பதிகத்தை ஓர் அடிப்படைக் கொள்கை விளக்கப் பதிகமாக்கி நிலைகள், வளர்ச்சிகள், மேற்கொள் ளப் பெற்ற முறைகள் ஆகியவைகளை விளக்கினர்.

ஒரு நெறிய மனம் வைத்துணர் நிலையில் பல்வேறுபடிநிலை வளர்ச்சிகளை இணைத்து, உலகச் சமய உட்கிடைகளை இணைத்து, பத்துப் படிநிலைகளாக அமைக்கிறார். அவைகளில் முன்னின்ற ஒரு சில படிகளிலேயே ஏனைய சமயங்கள் நின்றுவிடுகின்றன. பத்தாம் படி வரை வந்து நின்ற சைவசமயம் தமிழ்ப் பண்புடன், தம்முடன் தழுவி வளர்ந்த பெருமையுடையது என்றார்.

திருநெறிய தமிழ் நெறி எனப்பெறும் திருப்பதிகப் பெருவழியே யான் அமைத்துக் காட்டிய வழி எனக் காட்டினர். கொள்கைகள் எல்லாவற்றையும் இணைத்து நிறுத்திய மூலக் கொள்கையாக

"இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்"

என்பதை அமைத்தார்.

தனிமனிதனைத் தேசமாக்கவும் திருக்கோயிலைத் தேசமாக்கவும் முடியும் என்று காட்டி, இரண்டும் தம்மைத் தேசமாக உயர்த்தும் போது உலகப் பொதுமைச் சமயம் உண்டாகும் என அமைத்துக் காட்டினர்.

உலகியலில் இன்றைய விஞ்ஞானவியலார் ஒப்பும் உள்ளது சிறத்தல் எனப் பெறும் பரிணம வளர்ச்சிப் படி நிலையை ஏற்று, வளர்ச்சியை இடைநின்று நடத்தும் உயர்நிலை ஆற்றலையே 'ஈசத்வம்' என்றார். வளர்ச்சிப் படியின் இறுதிநிலையே "ஆளுடையார் அடியவர்கள்" எனக் காட்டினர். இவ்வுலகில் நடைபெறுவன எல்லாம் "இப்படியால் இது" என்று காரண காரிய அமைப்பில் விளக்கம் பெறுதற்கு உரியவைகளே என்பதைப் பொதுமைப்படுத்தினர்.

கடவுளைக் காணுதல் காட்டுதல் வேறு; கடந்த தனிநிலைப் பொருளைக் காணுதல் காட்டுதல் வேறு. இருமையைக் கடந்து, இருமையை ஒட்டி எழுந்த உயர்வாய் நின்ற திருவெனும் பரம் பொருளையும் கண்டு காட்டிய பெருமையுடைய சைவசமயத் தனி நாயகரே திருஞானசம்பந்தர்.

ஞானசம்பந்தரின் கொள்கைள் இன்னும் முழுமையாக ஆய்வு செய்யப் பெறவில்லை. வரலாற்றுடன் இணைந்த சில அடிப்படைக் கொள்கைகள் மட்டுமே இடம் பெற்றன. அப்பரடிகளும் இணைய நின்ற நிலை இக் கொள்கையில் விளக்கம் பெறவேண்டும். எனவே, அப்பரடிகள் ஆய்வின் இறுதிப் பகுதியில் திருஞானசம்பந்தரையும் அப்பரடிகளையும் இணைத்தும், அவ்வாறே தனித்தனி நிறுத்தியும் இவ் விருவர்தம் கொள்கைகள் ஆய்வு செய்யப் பெறும். அங்கேயும் இருமையின் ஒருமையே அடிப்படையாகும். திருநீலகண்ட யாழ்ப் பாணரையும் இணைத்த நிலையில் அப்பரடிகள் ஆய்வு இறுதியில் இவர்தம் கொள்கைகள் விளக்கம் பெறும்.

முற்றும்

எம்வெளியீடுகளில் இவருடையன:

1. வீரசைவம் (எம்.நீலயப் பொன்விழா வெளியீடு) (1977)

"டாக்டர் வை. இரத்தினசபாபதி அவர்கள் வீரசைவம் பற்றி மிக விரிவாகவும் தெளிவாகவும் முறையாகவும் செறிவாக வும் எழுதியுள்ள இந்நூல் 410 பக்கங்களையும் 6 இயல்களையும் கொண்டுள்ளது.

... வீரசைவம் தலைசிறந்த ஆராய்ச்சிநூல்.

... வீரசைவம் நூல் வெளியிட்டால் அந்நெறியும் அருந் தமிழும் பெரும்பேறு பெற்றுள்ளன."

—சென்னைப் பல்கலைக் கழகத் தமிழாய்வு
(தொகுதி 7, 1978)

2. திருமுறைத் தெளிவே சிவஞானபோதம் (1979)

பன்னிரு திருமுறைகளும் மெய்கண்டாரின் சிவஞான போதம் பன்னிரண்டு நூற்பாக்களும் இணைப்புற்றிருக்கும் நிலையை எடுத்துக்காட்டி விளக்கும் வகையில் எழுதப்பெற்ற முதல் ஆராய்ச்சி நூல். 14 தலைப்புக்களில் 206 பக்கங்களில் எழுதப்பெற்றுள்ள இது சைவசித்தாந்தத் தத்துவ ஆய்வுக்குரிய நூலாகத் திகழ்வது.

3. திருஞானசம்பந்தர் — ஓர் ஆய்வு — முதற்பகுதி (1981)

சைவசமயம் தழைத்தோங்கிச் சிறப்புறுமாறு அதனை வளர்த்த அருளாளர்கள் நால்வருள் முதல்நின்ற திருஞானசம் பந்தரின் வரலாற்றினையும் கொள்கையையும் விளக்கும் நிலையில் அமைக்கப் பெற்ற இருபகுதிகளுள் முதற்பகுதி இது. 228 பக் கங்களில் 9 தலைப்புகளில் எழுதப் பெற்ற இந்நூல் திருப்பதிகங் களின் வழிநின்று அருளாளர்களை ஆராய்பவர்களுக்கென ஆக்கப்பெற்ற புதியமுறையிலமைந்த ஆய்வுநூல்.

நூலாசிரியரைப் பற்றி

1929-ல் பிறந்த இவர் திருப்பாதிரிப்புலியூர், தவத்திரு ஞானி யாரடிகளின் மாணாக்கராவார். மயிலம், சிவஞான பாலய சுவாமிகள் அருள் வழியில் புலவர் கல்வியையும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பி. ஓ. எல்., எம்.ஏ. (தத்துவம்), டாக்டர் ஆகிய கல்வித் தகுதிகளையும் பெற்று, அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையிலும் தத்துவத் துறையிலும் விரிவுரை யாளராகவும், பூம்புகார்ப் பேரவைக் கல்லூரியில் இரண் டாண்டுகள் முதுகலைப் பேராசிரியராகவும் பணியாற்றிய இவர் இப்போது இந்நிறுவனத்தில் துணைப்பேராசிரியராகப் பணிபுரிந்து வருகிறார்.